# எழுநா

டிசெம்பர்
2025



இதழ் 41

# எழுநா

ISSN 3093-5210

இதழ் 41

**அட்டைப்படம் :**

அடக்குமுறை அடிமையுற்ற ஒரு நபரோ இனமோ தமது உரிமை மற்றும் கருத்தைச் சுதந்திரமாக வெளிப்படுத்தவோ, குரல் கொடுக்கவோ முடியாத நிலை.

ஓவியர்: செபமாலை டேவிட் சலமோன்


### இயக்குநர் சபை

**கணேசானந்தன் சசீவன்**
நிர்வாக இயக்குநர்

**தில்லைநாதன் கோபிநாத்**
வெளியீடு

**கனகலிங்கம் சுகுமார்**
வளத்திரட்டல்

### வெளியீட்டுக்குழு

**கணேசானந்தன் சசீவன்**
பதிப்பாளர்/ பிரதம ஆசிரியர்

**ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்**
உதவி ஆசிரியர் / நகல் திருத்தம் / நூல் தயாரிப்பு / தர நிர்ணயம்

**தர்ஷனா பிறேம்குமார்**
கற்கை வட்டம் / நிகழ்வுகள் / ஊடக ஒருங்கிணைப்பு

**மதுராங்கி குணசீதன்**
கலை பண்பாட்டு ஒருங்கிணைப்பு / ஆய்வு ஒருங்கிணைப்பு

**பியூலா பரமேஸ்வரன்**
வலைத்தளம் / பரவலாக்கம் / அச்சு ஒருங்கிணைப்பு / விநியோகம்

### தயாரிப்புக் குழு

**ஜீவமணி பாலன்**
நூல் வடிவமைப்பு /அட்டை வடிவமைப்பு

**ரவீந்திரன் கருப்பையா**
நூல் வடிவமைப்பு/அட்டை வடிவமைப்பு

**வேணி ஆனந்தா**
சஞ்சிகை வடிவமைப்பு

**கௌரிகாந்தன் சித்தாந்தன்**
மெய்ப்புப்பார்ப்பு

**நிரோஷா தியாகராசா**
மெய்ப்புப்பார்ப்பு

**கலாமணி பரணீதரன்**
அச்சு ஒருங்கிணைப்பு

### வளவாளர்கள்

**தில்லைநாதன் கோபிநாத்**
நூல் தயாரிப்பு / நூல் அச்சாக்கம்

**தங்கராஜா பிரபாகரன்**
ஊடக வீச்சு / மனிதவளத் தொடர்பு

**சிறிதரன் சோமிதரன்**
ஆவணப்படம்

**இ. பத்மநாப ஐயர்**
உசாத்துணை சேவை

**சுஜீவன் தர்மரட்ணம்**
நிகழ்வுகள் / கற்கை வட்டம்

**ஜனனி பாலசுந்தரம்**
வலைத்தளம் / பரவலாக்கம்

### ஆதரவளிப்போர்

**மானுடம் நிறுவனம்**
நூல் தயாரிப்பு / சஞ்சிகை விநியோகம் / உசாத்துணை சேவை

**ஆதிரை வெளியீடு**
ஆவணப்படம்

**நிகரி**
ஆவணப்படம்

**நாளை வெளியீடு**
ஆவணப்படம்

### கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

**நடராஜா முரளிதரன்**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

### கூட்டுறவு புத்தக மன்ற ஒருங்கிணைப்பாளர்கள்

**கனகலிங்கம் சுகுமார்**
ஐக்கிய இராச்சியம்

**கணேசானந்தன் சசீவன்**
ஐக்கிய இராச்சியம்

**இ. பத்மநாப ஐயர்**
ஐக்கிய இராச்சியம்

**சதீசன் தனபாலசுந்தரம்**
ஐக்கிய இராச்சியம்

**மாதவி சிவலீலன்**
ஐக்கிய இராச்சியம்

**சிவகுமார் பாலசுப்ரமணியம்**
ஐக்கிய இராச்சியம்

**எஸ்.கே.விக்னேஸ்வரன்**
கனடா

**இளங்கோ**
கனடா

**ரமணன் சந்திரசேகரமூர்த்தி**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

**தமிழ்நதி**
கனடா

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**
நோர்வே

**தில்லைநாதன் கோபிநாத்**
அவுஸ்திரேலியா

**அசோக் யோகன் கண்ணமுத்து**
பிரான்ஸ்

**கந்தையா ரமணிதரன்**
ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ராஜ்குமார் ரஜீவ்காந்த்**
கொழும்பு

### நிகழ்வு ஒருங்கிணைப்புப் பங்காளர்கள்

**சிறகுகள் அமையம்**
யாழ்ப்பாணம்

**சத்தியமனை நூலகம்**
யாழ்ப்பாணம்

**தமிழ்த் தேசிய கலை இலக்கிய பேரவை**
கிளிநொச்சி

**கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**
வவுனியா

**சந்திரோதயம் கலை இலக்கிய பெருமன்றம்**
மட்டக்களப்பு

**'கா' கலை இலக்கிய வட்டம்**
மட்டக்களப்பு

**திரைப்படக் கழகம்**
மட்டக்களப்பு

**ஏறாவூர் வாசிப்பு வட்டம்**
மட்டக்களப்பு

**தளம் கட்டமைப்பு**
திருகோணமலை

**முத்தமிழ்ச்சங்கம்**
திருகோணமலை

**நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்**
கண்டி

**கலை இலக்கிய வட்டம்**
பதுளை

**தியேட்டர் மேட்ஸ் பண்பாட்டு கழகம்**
நுவரெலியா

**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**
கொழும்பு

### விநியோகப் பங்காளர்கள்

**பனுவல் புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

**குயின்சி புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

**வெண்பா புத்தகசாலை** – யாழ்ப்பாணம்

**எங்கட புத்தகங்கள்** – யாழ்ப்பாணம்

**பாத்திமா புத்தக நிலையம்** – மட்டக்களப்பு

**மொழி புத்தகம் பதிப்பகம்** – வெள்ளவத்தை

### அச்சுப்பதித்து விநியோகிப்போர்

**நாளை வெளியீடு** – கனடா

### கலை பண்பாட்டு நடுவம் துறைசார் மதியுரைஞர் குழு

**நிலாந்தன் மகாதேவா**
இலக்கியம் – கவிதை

**பாக்கியநாதன் அகிலன்**
காண்பியக்கலை – கட்டடக்கலை

**ஜோசப் ஜோன்சன் ராஜ்குமார்**
ஆற்றுகைக்கலை – அரங்கக்கலை

**இலங்கரெட்ணம் சஜித்**
ஆற்றுகைக்கலை – நடனம்

**சபேஸ் சுகுணசபேசன்**
காண்பியக்கலை – புகைப்படக்கலை

### கொற்றம் ஆய்வு துறைசார் மதியுரைஞர் குழு

**ஶ்ரீவரதராஜன் பிரசாந்தன்**
மொழியும் இலக்கியமும்

**கந்தையா ரமணிதரன்**
நீரியலும் நீர்ப்பாசனமும்

**குமாரவடிவேல் குருபரன்**
சட்டமும் சட்ட முறைமையும்

**நடராஜா சிறீஸ்கந்தராஜா**
சூழலும் உயிர்ப் பல்வகைமையும்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**
சமயமும் இறையியலும்

**பால சிவகடாட்சம்**
சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்

**நாகமுத்து பிரதீபராஜா**
புவியியலும் திட்டமிடலும்

**பரமு புஸ்பரட்ணம்**
வரலாறும் தொல்லியலும்

**சனாதனன் தமோதரம்பிள்ளை**
கட்புல அரங்கேற்றக் கலைகள்

**சேரன் உருத்திரமூர்த்தி**
சமூகவியலும் மானிடவியலும்

**முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன்**
பொருளியலும் நிதியியலும்

**சபா ஜெயராசா**
கல்வியியலும் கற்றலும்

**மரியோ அருள்தாஸ்**
அரசியலும் மெய்யியலும்

**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**
கட்டடக்கலையும் வடிவமைப்பும்

**கந்தையா பகீரதன்**
விவசாயமும் மீன்பிடியும்

### வழிப்படுத்தும் குழு

**மீநிலங்கோ தெய்வேந்திரன்**

## உள்ளே...


வட இலங்கைப் பெருநிலத்தில் ஆதிமனிதக் குடியேற்றங்கள் — 03
- சிவ தியாகராஜா

மொழிசார் தேசியவாதத்தின் ஊற்றுகள் — 14
- கார்த்திகேசு இந்திரபாலா

பயங்கரவாதத் தடைச் சட்டமும் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டமும் — 20
- ஆங்கில மூலம்: சாலிய எதிரிசிங்க
தமிழில்: எஸ்.கே. விக்னேஸ்வரன்

அரசியலமைப்புவாதமும், பயங்கரவாதத் தடைச்சட்டமும், நிறைவேற்று அதிகாரத்துக்கான வாய்ப்பும் — 29
- ஆங்கில மூலம்: றொகான் எதிரிசிங்க
தமிழில்: எஸ்.கே. விக்னேஸ்வரன்

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வடமராட்சி — கட்டைவேலி — 34
- இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அரசியல் விஞ்ஞானக் கல்வி: ஆராய்ச்சியும், அறிவு உற்பத்தியும், நூல் வெளியீடும் — பகுதி 1,2 — 39
- ஆங்கில மூலம்: ஏ.எம். நவரட்ண பண்டார, ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

சடங்குகளின் அரசியல்: எதிர்காலத்தை இறந்தகாலத்தில் கட்டமைத்தல் — பகுதி 1,2 — 49
- மீநிலங்கோ தெய்வேந்திரன்

இலங்கை மலையகத் தமிழர்களின் அடையாளப் பிரச்சினைகளும் அரசியல் அடையாளத்துக்கான போராட்டங்களும் — 72
- பொன் பிரபாகரன்

1968 — 1983: ஆயுதப் போராட்டத்தை நோக்கி — பகுதி 2 — 80
- சி. அ. யோதிலிங்கம்

இலங்கையை ஆக்கிரமித்த இந்தியாவும் உலகப் பேரரசுகளும் — 89
- மு. திருநாவுக்கரசு

மலையக நாட்டார் இலக்கியம் வெளிப்படுத்தும் தொழிற்களமும் விடுதலை உணர்வும் — 98
- வேலாயுதம் இராமர்

நீர்வளப் பாதுகாப்பும் நிலவள மேம்பாடும்: உணவுத் தன்னிறைவின் அடித்தளங்கள் — 104
- சுப்ரமணியம் சிவகுமார்

மலையகத் தமிழர் பண்பாட்டுத் தேசியம்: கோட்பாடும் நடைமுறையும் ஒரு பரிசீலனை — பகுதி 1,2 — 114
- பொன் பிரபாகரன்

நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் மேம்பாடும் முகாமைத்துவமும்: யாழ்ப்பாணக் குடாநாடு, வன்னிப் பெருநிலப்பரப்பு, கிழக்குப் பிராந்தியம் — பகுதி 2 — 135
- சுப்ரமணியம் சிவகுமார்

# வட இலங்கைப் பெருநிலத்தில் ஆதிமனிதக் குடியேற்றங்கள்

யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால வரலாற்றுக்கான நேரடி எழுத்துப் பதிவுகள் குறைவாக இருந்தாலும், தொல்லியல் அகழாய்வுகள் இதன் பழங்காலக் குடியேற்றங்கள், பண்பாடு, மற்றும் சமூக – பொருளாதார வளர்ச்சி பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வெளிக்கொணருகின்றன. அதன் அடிப்படையில் கந்தரோடை, பண்டைய யாழ்ப்பாண நாகரிகத்தின் ஆதிகேந்திரமாக விளங்கிய ஒரு முக்கியப் பகுதி ஆகும். தொல்லியல் ஆய்வுகள், பொ.யு.மு. 500 ஆம் ஆண்டளவில் கந்தரோடை ஒரு நகரமாகி விட்டதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த இடத்தில் அடர்த்தியான மக்கள் குடியேற்றம் அன்றிலிருந்து இன்றுவரை, மத்திய காலத்தில் ஒரு சிறு இடைவெளியைத் தவிர, தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. நாணயவியல், தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் பொ.யு. எட்டாம் நூற்றாண்டு வரை கந்தரோடை பண்டைய யாழ்ப்பாணமான நாகநாட்டின் தலைநகரமாக விளங்கி வந்திருப்பதைக் காட்டி நிற்கின்றன. கந்தரோடையிலும், அதன் பெருங்கற் பண்பாட்டின் தாக்க விளைவுகளுக்கு உட்படுத்தப்பட்ட வடஇலங்கையின் ஆதி இரும்புக்கால மையங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் அறிக்கைகளைக் கொண்டு எழுதப்படும் ‘பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்’ என்னும் இக் கட்டுரைத் தொடர் வடஇலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களிலும், வரலாற்று உதய காலங்களிலும், வரலாற்றுக் காலங்களிலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல், ஆளுமை, பண்பாடு, பெருமுயற்சி, துணிவாண்மை என்பனவற்றின் பரந்த காட்சிப்பதிவாக விளங்கும்.

சிவ தியாகராஜா



கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள் பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (University of Ceylon) B.Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph.D. பட்டத்தையும் பெற்றவராவார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கிறார். Peoples and Cultures of Early Sri Lanka, Genetic Origins of the Tamils, Kantarodai Civilization of Ancient Jaffna 500 BCE800CE, The Tamils of Lanka – A Timeless Heritage, Archaeological Excavations at the Jaffna Fort, பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் ஆகியவை அவற்றுள் சிலவாகும்.

ஹோமோ இரக்டஸ் எனப்படும் ஆதி மனிதன் (பச்சை) ஆபிரிக்காவிலிருந்து ஆசியா வரை பெயர்ந்ததையும், நியண்டதல் எனப்படும் ஆதி ஐரோப்பியரின் (மஞ்சள்) பரவலையும், ஹோமோ சேப்பியன்ஸ் எனப்படும் நவீன மனிதனின் (சிவப்பு) அகில உலக இடப்பெயர்வையும் காட்டும் படம். ஆபிரிக்காவிலிருந்து இடம்பெயர்ந்து வந்த ஆதி மனித இனங்கள் வாழ்ந்த இடங்களில் வட இலங்கையின் வன்னிப் பகுதி முக்கியமானதொரு இடமாகும்.




## காலவரிசை (Chronology)

1. இந்திய - இலங்கை மண்ணில் ஆதி மனித இனங்கள்: இ.மு. 1800,000
2. வட இலங்கை வன்னிப் பகுதியில் பழைய கற்கால மக்கள்: இ.மு. 125,000
3. நவீன மனிதனின் தென்னாசிய வருகை: இ.மு. 70,00065,000
4. இலங்கை தென்னிந்தியாவிலிருந்து தனித்தீவாகப் பிரிதல்: இ.மு. 7,000
5. இரும்புக்கால ஆரம்பம்: இ.மு. 3,380

(இ.மு - இற்றைக்கு முற்பட்ட ஆண்டுகள்)

ஒரு குறிப்பு: இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் இன்றைய பெயர்களும், இந்நாடுகளின் நிலப்பகுதிகளுக்கு இக்காலத்தில் வழக்கிலிருக்கும் பெயர்களும் வரலாற்றுக் காலத்திலிருந்த மக்கள் இந்நிலங்களுக்குக் கொடுத்த பெயர்களேயாகும். வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் இந்நிலங்கள் வேறு பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கலாம். அவை பற்றிய ஆதாரபூர்வமான தகவல்கள் நமக்குத் தெரியாதாகையால் தற்காலப் பெயர்களைக் கொண்டே பூர்விகமான நிலப்பகுதிகளை நாம் குறிப்பிட வேண்டியுள்ளது.

## நிலவியல் நோக்குகள் (Geological Considerations)

நமது பூமியில் ஏற்படும் தட்பவெப்ப மாற்றங்களால் பூமி உருவான காலத்திலிருந்து இதுவரை நான்கு பனிக் கல்பகாலங்கள் (Ice Epochs) நடைபெற்றிருக்கின்றன. இறுதியான பிளிஸ்ரொசீன் (Pleistocene Ice Epoch) கல்பத்தில் மட்டும் 17 பனிப்படிவு யுகங்களும் (பனியுகங்களும்), 17 பனியிடைக் காலங்களும் இடம் பெற்றிருக்கின்றன. கடந்த 12,000 ஆண்டுகளாக நாம் 17 ஆவது பனியிடைக் காலத்தில் (Interglacial Period) வாழ்ந்துகொண்டிருக்கிறோம் (Peter Clark 2002).

பனிப்படிவு யுகங்களில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு பூமியின் மேற்பாகம் குளிர்ந்துபோய் வட, தென் பூகோளப் பகுதிகளில் பல மைல் உயரத்திற்கு பனி உறைந்து பனிமலைகளாக இருந்தன. பூமியின் மத்திய பகுதியை அண்டிய நாடுகளைத் தவிர மற்றைய கண்டங்களில் ஆறுகள் உறைந்து நிலங்களிலும் பனிக்கட்டி பாளம் பாளமாகப் படிந்திருந்தது. கடல் நீர் ஆவியாக மேலே போய் பின்னர் மழையாக வந்தபோது பெரும்பாலான நிலங்களில் இந்த மழை பனிக்கட்டிகளாக உறைந்து போயிருந்ததனால் கடல் மட்டம் இன்றிருப்பதைவிட 120 மீட்டர் முதல் 135 மீட்டர் வரை தாழ்வாக இருந்தது.

இற்றைக்கு முன் (இ.மு.) 115,000 ஆண்டு முதல் இ.மு. 12,000 ஆண்டு வரை நீடித்த கடைசிப் பனியுக காலத்தில் - கடல் மட்டம் இன்றிருப்பதை விட 120 முதல் 135 மீட்டர் வரை குறைவாக இருந்த காலப்பகுதியில் - இலங்கை இந்தியாவோடு இணைக்கப்பட்ட நிலப்பகுதியாக இருந்தது. இந்நிலத்தின் நீள - அகலப் பரிமாணங்களும் இன்றிருப்பதை விடப் பெரியதாகவே இருந்தன. இந்நிலம் ‘இந்திய - இலங்கை’ என்ற ஒரே நிலமாகும் (Peter Clark 2002, Rohling 1998).

## பனிப்படிவு யுகக் காலத்தில் காணப்பட்ட உலகம்:

பனிப்படிவு யுகத்தின்போது பூமியின் மத்திய பகுதியிலிருந்த நிலங்களில் மட்டுமே மனிதர்கள் வசிக்கக்கூடியதாக இருந்தது. வடக்குப் பகுதியிலிருந்த

நிலங்களும், தென் பகுதியிலிருந்த அன்டாட்டிக்கா கண்டமும், கடல்களும், பனிப்பாளங்களால் மூடப்பட்டிருந்தன. இவ்விடங்களில் பனிப்பாளங்கள் 2 கிலோமீட்டர் உயரத்திற்குப் படிந்திருந்தன. பிரித்தானியா முழுவதும் பனிப்பாளங்களின் கீழே அமிழ்ந்திருந்தது.

கடல் மட்டம் 135 மீட்டருக்குக் கீழே இருந்தமையால் கண்டங்களின் கரைகள் இன்றிருப்பதைவிட 200 - 300 கி.மீட்டர் வரை நீண்டிருந்தன. இலங்கை தென்னிந்தியாவின் நிலப்பகுதியாக இருந்தது. கிழக்காசிய நாடுகள் நிலத்தொடர்பால் ஒன்றாகிவிட்டிருந்தன.

இற்றைக்கு 25,000 - 19,000 ஆண்டுகளுக்கு முன்னர் கடைசிப் பனியுகம் உச்ச நிலையை அடைந்திருந்த சமயம் - கடல் மட்டம் இன்றிருப்பதை விட 135 மீட்டர் தாழ்வாக இருந்த காலப்பகுதியில் - உலகம் முழுவதிலுமுள்ள நாடுகளெல்லாம் இன்றிருப்பதைக் காட்டிலும் மிகவும் பெரியனவாக இருந்தன.

இந்தியக் கடலோரம் இந்தியத் தீபகற்பத்தைச் சுற்றிவர பல கி.மீ. தொலைவிற்கு அகன்றிருந்தது. குமரிமுனைக்குத் தெற்கே குமரிநாடு 200 கிலோ மீட்டர் வரை பரந்திருந்ததாகக் கணிப்பிட முடிகிறது.

இ.மு. 12,000 ஆண்டு முதலாக - கடைசிப் பனியுகம் முடிவிற்கு வந்த காலத்திலிருந்து உலகைச் சூழ்ந்திருந்த பனிப்படலங்கள் உருகி, கடல் மட்டம் சிறிது சிறிதாக மேலெழுந்த போது - இந்திய - இலங்கையின் கரையோர நிலப்பகுதிகள் சிறிது சிறிதாக கடலினுள் அமிழ்ந்து போயின.

குமரிநாடு சிறிது சிறிதாக கடலினுள் அமிழ ஆரம்பித்தது. குமரிநாட்டை முற்றாகக் கடல் கொள்ள இ.மு. 12,000 முதல் இ.மு. 7,000 வரை ஐயாயிரம் ஆண்டுகள் வரை எடுத்திருக்கிறது. அமிழ்ந்த நிலம் அழிந்தோ, கரைந்தோ போய்விடவில்லை. அந்த நிலம் குமரி முனையை அண்டி இந்து சமுத்திரத்தினடியில் இன்றும் கடல் - மேடாகக் (Sea Mount) கிடக்கிறது.

இ.மு. 7,000 காலப்பகுதியில் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த இலங்கை, இந்தியாவிலிருந்து தனித்தீவாகப் பிரிந்து போயிற்று (Deraniyagala, S.U. 1992). அடுத்த ஆயிரம் ஆண்டுகாலப் பகுதியில் - பனிப்படலங்கள் உருகி ஆறுகள் வழியாகப் பெருகி வரும் நீரினாலும், மழையினாலும் ஏற்படும் கடல் பெருக்கமும், கடல் நீர் ஆவியாகப் போவதால் ஏற்படும் கடல் மட்டக் குறுக்கமும் சமநிலை அடைந்த நேரத்தில் - கடல் மட்டம் சீர்நிலை அடைந்தது (Thiagarajah, S. 2011: 38-39).



*இற்றைக்கு 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்னிந்திய நிலப்பகுதி. இன்றையகால நிலவரை அதனுள் காட்டப்பட்டிருக்கிறது. குமரிமுனையின் கீழ் நீண்டுகொண்டிருப்பது அன்றைய குமரிநாடு. நன்றி: டர்ஹாம் பல்கலைக்கழகப் புவியியல் துறை.*

இலங்கை தென்னிந்தியாவிலிருந்து பிரிந்து வந்ததற்கான புவியியல் ஆதாரங்கள் பலவுள்ளன. தென்னிந்தியாவும் இலங்கையும் ஒரே கண்டத் தகட்டிலேயே (Tectonic plate) அமைந்திருக்கின்றன. தென்னிந்தியாவும் இலங்கையும் உலகின் மிகப் பழமையான கருங்கற்களைக் (Granite) கொண்டிருக்கின்றன. இவை தவிர சுண்ணாம்புக் கல், பேஸோல்ற், அகேற், சல்ஸிடோனி ஆகிய கற்கள் இலங்கைக்கும், தென்னிந்தியாவிற்கும் பொதுவானவை. இலங்கையின் மத்தியிலுள்ள பேதுருதாலகால மலையடுக்கு தென்னிந்தியாவின் மேற்குக் கரையோரமாக அமைந்திருக்கும் பொதிகை மலைத் தொடரின் (Western Ghats) தொடர்ச்சியாகக் கருதப்படுகிறது. தென்னிந்தியாவின் கிழக்குக் கரையோரமாக திருநெல்வேலி வரை தொடர்ந்திருக்கும் தேரி மணல் மேடுகளின் தொடர்ச்சியே இலங்கையின் வட - வடமேற்குப் பகுதிகளில் கடற்கரை ஓரமாக முல்லைத்தீவிலிருந்து குதிரைமலை வரை படர்ந்திருக்கும் இரணைமடு தேரித் தொடராகும்.

## ஹோமோ இரக்டஸ் மனிதர்களின் ஆசிய வருகை

ஹோமோ இரக்டஸ் என்றால் முதுகெலும்பு நிமிர்ந்த மனிதன் எனப் பொருள்படும். இற்றைக்கு இரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்ற - இன்றைய மனிதர்களின் மூதாதையர்களான (ஹோமினின் இனம்) இம்மனிதர்களின் எலும்புப்

படிவங்களும், அவர்கள் உபயோகித்த கல்லாயுதங்களும் ஆபிரிக்கா, இந்தியா, இந்தோனேசியா, சீனா ஆகிய நாடுகளில் அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன (Haviland, W.A. et al. 2007: 162).



வெகு சீராகச் செதுக்கப்பட்ட அச்சூலியன் கைக்கோடரி

இற்றைக்கு இரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஆபிரிக்காவில் தோற்றம் பெற்ற ஹோமோ இரக்டஸ் வகை மனிதர்கள் காலத்திற்குக் காலம் ஆபிரிக்காவை விட்டு வெளியேறி மேற்கே மத்திய தரைக்கடல் நாடுகள் வழியாகவும், கிழக்கே அரேபியா வழியாகவும் மேற்கு ஆசிய நாடுகளை (சுமேரியா, இலம் - இன்றைய ஈராக், இரான் நாடுகள்) அடைந்தார்கள். அங்கிருந்து கைபர் கணவாய், போலன் கணவாய் (Khyber Pass, Bolan Pass) வழியாக இந்தியாவை அடைந்து, பின்னர் அங்கிருந்து கிழக்காசிய நாடுகள் வழியாக சீனா வரை சென்றிருக்கிறார்கள். இவர்கள் ஆபிரிக்காவை விட்டு வெளியேறி, தலைமுறை தலைமுறையாக இடம்பெயர்ந்து சீனா சென்றடைய 10,000 முதல் 12,000 ஆண்டுகள் வரை ஆகியிருக்கும் எனக் கணிப்பிடப்படுகிறது.

ஹோமோ இரக்டஸ் மனிதர்களால் பரந்த அளவில் - இற்றைக்கு முன்னர் 1.76 மில்லியன் ஆண்டுக் காலத்திலிருந்து இம்மனிதர்கள் பரவியிருந்த இடங்களிலெல்லாம் - நீண்டகாலமாக உபயோகிக்கப்பட்ட பம்பர வடிவுடைய கல்லாயுதம் அச்சூலியன் கைக்கோடரி என அழைக்கப்படுகிறது. இவ்வகையான கல்லாயுதம் முதன்முறையாக பிரான்ஸ் நாட்டில் செயின்ற்அச்சூல் (SaintAcheul) என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டமையால் 'அச்சூலியன் கல்லாயுதம்' எனப் பெயர் பெற்றது.

### ஹோமோ சேப்பியன்ஸ் எனப்படும் நவீன மனிதனும் அவனது இலங்கை வருகையும்

உலகில் தோன்றிய மனித இனங்களில் அகில உலகமெல்லாம் பரவியிருக்கும் மனித இனம் ஹோமோ சேப்பியன்ஸ் (Homo sapiens sapiens) என அழைக்கப்படும் நவீன மனித இனமாகும். இலத்தின் மொழியில் 'ஹோமோ சேப்பியன்ஸ்' என்றால் 'அறிவுக் கூர்மையுடைய மனிதன்' எனப் பொருள்படும். இந்தப் பெயரை சுவீடன் நாட்டைச் சேர்ந்த உயிரினக் கற்கை அறிஞரான கார்ல் லின்னியஸ் (Biologist, Carl Linnaeus) 1735 ஆம் ஆண்டில், தனது 28 ஆவது வயதில் எழுதி வெளியிட்ட 'இயற்கை ஒழுங்கு முறை' என்ற நூலில் குறிப்பிட்டிருந்தார். மனித இனங்களுக்கு 'ஹோமோ' என்ற பெயரையும், தாவர இனங்களுக்கு அவர்களது குடும்ப இனப் பெயரையும் குழுப் பெயரையும் சேர்த்து இலத்தீன் மொழியில் பெயர் கொடுத்தவர் இவர். இவர் மிருக இனக் குடும்பங்களுக்கும், தாவர இனக் குடும்பங்களுக்கும் கொடுத்த பெயர்களே இன்றுவரை விலங்கின, தாவர இனக் கற்கைகளில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.



ஆரம்பகால 'ஹோமோ சேப்பியன்ஸ்' மனிதர்கள்

மானிடவியல் கற்கைநெறிகளின் படி (Human Anthropolo gy), இற்றைக்கு 300,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆபிரிக்காவில் வாழ்ந்த ஹோமோ ஹைடெல்பர்யென்ஸிஸ் (Homo Heidelbergensis) என்ற ஒருவகை ஆதி மனித இனத்திலிருந்து இற்றைக்கு 200,000 ஆண்டுகளுக்கு முன்னர் நவீன மனிதன் உருவானான் எனக் கருதப்பட்டது. ஆனால், 2017 ஆம் ஆண்டில் மொராக்கோ நாட்டில், ஜெபெல் ஈர்ஹூட் என்ற இடத்திலுள்ள ஒரு குகையில் கண்டெடுத்த கபாலம் இற்றைக்கு 300,000 ஆம் ஆண்டுக்குரிய ஹோமோ சேப்பியன்ஸ் சேப்பியன்ஸ் மனிதனுக்கு உரியதாகக் கணிக்கப்பட்டது. ஆனால், பெரும்பாலான ஆபிரிக்க ஹோமோ சேப்பியன்ஸ் சேப்பியன்ஸ் கபாலங்கள் இற்றைக்கு 200,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தைக் காட்டாமையால் இந்த ஒரு கணிப்பீட்டை மட்டும் கொண்டு அதைப் பொதுவாகக் கொள்வது கடினம் என்பது சில ஆய்வாளர்களின்

கருத்தாகும். இன்று பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் இ.மு. 300,000 ஆண்டை ஹோமோ சேப்பியன்ஸ் சேப்பியன்ஸ் மனிதர்களின் தோற்ற ஆண்டாகக் கொள்கிறார்கள்.

நவீன மனிதனுக்கு உயர்வான, சிக்கலான மூளை இருந்தமையால் அவனிடம் 'கருத்துநிலைச் சிந்தனை' (Power of Abstract Thinking) செய்யக்கூடிய ஆற்றல் இருந்தது. இதன் காரணமாக தரமான கருவிகளையும், பண்பாட்டையும், பேசும் மொழியையும் அவனால் உருவாக்க முடிந்தது. இம்மனிதனிடம் உயர்ந்த சமூகச் சமாளிப்புத் திறமை இருந்தபடியால் கூடிவாழும் மனப்பான்மையும், போட்டியிடும் மனப்பான்மையும் கொண்ட பலவகை மக்கள் கூடிவாழும் சிக்கலான சமுதாயத்தில் தனது வாழ்க்கையைச் சுலபமாகக் கொண்டு நடத்த முடிந்தது. தான் வாழ்ந்த சூழலை உணர்ந்து அதை மாற்றியமைக்கும் ஆற்றலும், வல்லமையும் கொண்டிருந்தபடியினால் மனித இனத்தின் வளர்ச்சியைப் பெருக்கி, மொழியியல், இலக்கியம், விஞ்ஞானம், பகுத்தறிவு, தத்துவம், சமயம், புராணம் ஆகிய கற்கைநெறிகளை அவனால் விருத்திசெய்ய முடிந்தது.

இற்றைக்கு 70,000 ஆண்டுகளுக்கு முன்னர் கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து ஆண்களும், பெண்களும் என குடும்பங்களாக வெளிவந்த ஒரு மக்கள் கூட்டம் செங்கடலின் முகத்துவாரத்தைக் கடந்து அரேபிய கண்டத்தில் கடற்கரை ஓரமாக வாழ்ந்தார்கள். பின்னர் அவர்களது வம்சாவழியினர் யெமென் - சவுதி அரேபியா - ஈரான் கடற்கரை வழியாக நடந்து, அப்பால் இந்து சமுத்திரக் கடற்கரையோரமாக நகர்ந்து தென்னிந்தியாவை அடைந்தார்கள். தொடர்ந்து ஒரே நிலமாக இருந்த தென்கிழக்கு ஆசியாவின் கரையோரமாக நடந்து இற்றைக்கு 60,000 ஆண்டுகளுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவை அடைந்திருக்கிறார்கள். அவர்கள் கடற்கரையோரமாக இடம்பெயர்ந்ததற்கான முக்கிய காரணங்கள் இரண்டு: ஒன்று, மக்கள் நடந்து முன்னேறுவதற்கு கடற்கரை மணல் தடைகளற்ற அன்றைய விரைவு - நெடுவழியாக (Express Highway) இருந்தது. இரண்டு, அருகிலிருக்கும் கடலிலிருந்து வேண்டிய நேரமெல்லாம் மீன்களை உணவுக்காகப் பெற்றுக்கொள்ள முடிந்தது (QuintanaMurci, L. 1999; Wells, S. 2002; Petraglia, M.D. 2003).

இக்கடற்கரை வழி இடப்பெயர்வால் இம்மனிதர்களின் சந்ததியினர் இ.மு. 68,000 - 65,000 ஆண்டளவில் தென்னிந்தியாவையும், அதன் தொடரான இலங்கையையும் அடைந்திருக்கிறார்கள். அன்றைய காலகட்டத்தில் தென்னிந்தியாவும் இலங்கையும் நிறைந்த பச்சிலைக் காடுகளையும், நெடுமர வனங்களையும், வன விலங்குகளையும் கொண்டிருந்தபடியால் மனிதக் குடியமர்விற்கும், உணவு பெறுவதற்கும் ஏற்ற இடமாக அமைந்திருந்தது. அதன் காரணமாக கணிசமான ஒரு தொகையினர் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் தங்கிவிட, மற்றைய புலப்பெயர் முன்னோடிகள் மேலே சென்றார்கள். இலங்கையின் கடற்கரையோரங்களில் கண்டெடுக்கப்பட்ட 65,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்லாயுதங்களும், தென்பாகத்திலுள்ள பாதாதொம்ப லேனா குகைகளில் கண்டெடுக்கப்பட்ட இந்த மக்களின் எலும்புகளும், இந்த மக்களின் நகர்வையும், அமர்வையும் உறுதிப்படுத்துகின்றன (Deraniyagala, S.U. 1992: 686; 2004).

## வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

பண்டைக்கால மக்கள் விட்டுச்சென்ற சான்றுகளின் அடிப்படையில் அக்கால மக்களது வாழ்க்கை முறை பற்றியும், அம்மக்களது பண்பாட்டைப் பற்றியும் எடுத்தியம்பும் இயல் தொல்லியலாகும். இச்சான்றுகளை அடிப்படையாகக் கொண்டே அம்மக்களது நாகரிக வளர்ச்சியைக் காட்டும் காலங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (Prehistoric Period), வரலாற்றுதய காலம் (Protohistoric Period), வரலாற்றுக் காலம் (Historical Period) எனத் தொல்லியலாளர்களால் பிரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

இவற்றுள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது எழுத்தாதாரங்கள் பயன்படுத்தப்படாத காலகட்டத்தைக் குறிப்பதாகும். இதனால், இக்காலகட்ட வரலாறு பெருமளவிற்கு தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் ஆராயப்பட வேண்டியுள்ளது. இதற்கு அக்கால மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள், மட்பாண்டங்கள், மண்படைகள், சிற்பங்கள், ஓவியங்கள், அன்றாடம் பயன்படுத்திய பாவனைப் பொருட்கள் என்பன பெரிதும் உதவுகின்றன. உலக நாடுகள் பலவற்றினதும் வரலாற்றுக்கு முற்பட்ட நாகரிக வரலாறு இவற்றின் துணைகொண்டே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை தொல்லியலாளர்கள் பண்டைய மக்கள் உபயோகித்த கல்லாயுதங்களின் தோற்ற காலத்தைக் கொண்டு கீழ்க்காணும் காலப்பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவை உருவாக்கப்பட்ட காலத்திற்கேற்ப அவற்றின் பருமன், தோற்றம், செயற்றிறன், அவற்றை ஆக்குவதில் கடைப்பிடிக்கப்பட்ட தொழில்நுட்பத் திறமை, அவற்றின் பயன்பாடு என்பன வேறுபட்டிருக்கும். மக்களின் பண்பாட்டு வளர்ச்சியோடு இக்கற்கருவிகளின் தொழில்நுட்பத் திறமை மேம்பட்டு வந்திருப்பது கண்கூடு.

1. பழைய கற்காலம் (*Palaeolithic or Old Stone Age*): இலங்கையில் இக்காலப்பகுதி இ.மு. 125,000 முதல் 33,000 ஆண்டுக்காலம் வரை நீடித்திருக்கிறது.

2. இடைக்கற்காலம் (*Mesolithic or Middle Stone Age*): பிற நாடுகளில் இடைக்கற்கால ஆரம்பம் இ.மு. 12,000 ஆக இருப்பினும் இலங்கையில் உள்ள இடைக்கற்காலக் கருவிகளின் ஆரம்பகாலம் இ.மு. 34,000 ஆக வெப்ப - ஒளியேற்றுவியல் (*Thermolumi nescence*) கணிப்பின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.

3. புதியகற்காலம் (*Neolithic*): இக்காலத்தில் வேட்டையாடி நாடோடிகளாக வாழ்ந்த மக்கள் ஓரிடத்தில் தங்கி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். கற்காலத்தைத் தொடர்ந்து, இ.மு. 3,380 ஆம் ஆண்டளவில் இலங்கையில் இரும்புக்காலம் ஆரம்பமாகியது (*Deraniyagala, S.U.* 2013: 51).

## ஆதிகாலக் குடியிருப்புகள்

### அ. பழைய கற்காலம்

இந்தியாவில் இ.மு. 1800,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனித இனங்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன (*Mishra, S.*1995: 11-16). நெடுங்காலமாக இலங்கையும் இந்தியாவும் நிலத்தொடர்பு கொண்டிருந்தமையால் இலங்கையிலும் இக்காலகட்டத்திற்குரிய மனித எச்சங்கள் வருங்காலத்தில் கண்டுபிடிக்கப்படலாம். இன்றைய தொல்லியல் ஆய்வுகளின்படி இ.மு. 125,000 ஆண்டுகளுக்கு முன்னரிருந்து இலங்கையில் மக்கள் வாழ்ந்திருந்தமைக்கான வலுவான ஆதாரங்கள் காணப்படுகின்றன (*Deraniya gala, S.U.* 1996: 277-285). இற்றைக்கு 125,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பழைய கற்காலத்தைச் சேர்ந்த மக்களாவர்.

ஹோமோ சேப்பியன்ஸ் எனப்படும் நவீன மனிதன் இலங்கையை வந்தடைந்த காலப்பகுதி கி.மு. 68,000 - 65,000 ஆகையால், இலங்கையில் வாழ்ந்த பழைய கற்கால மனிதர்களில் ஒரு பகுதியினர் ஹோமோ இரக்டஸ் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருப்பர். கி.மு. 50,000 ஆண்டுகாலப் பகுதியில் ஹோமோ இரக்டஸ் இனம் முற்றாக அழிந்து போயிற்று.

வட இலங்கையில் முல்லைத்தீவின் வட பகுதியிலிருந்து வடக்கு - வடமேற்காக பரந்தன், பூநகரி, மாந்தை, புத்தளம், குதிரைமலை வரை கடற்கரையோரமாகப் பரந்திருக்கும் தேரி - மேடு, இரணைமடு அமைப்பு (*Iranamadu Formation*) என அழைக்கப்படுகிறது. இந்த மேடுகள் - பரந்து கிடக்கும் சரளைக் கற்களுக்கு (*Gravel*) மேலுள்ள களிமண் கலந்த மணல் மேடுகள் - பல்லாயிரம் ஆண்டுக்கால சீதோஷ்ண தட்பவெப்பத்தில் சிவப்புநிறமாக மாற்றம் பெற்றிருக்கின்றன. இந்த இரணைமடு மணல் மேடுகளில் இற்றைக்கு 125,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் முதல் இடைக்கற்காலம் வரை பழைய கற்கால மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் - முக்கியமாக அவர்கள் உபயோகித்த கற்கருவிகள் காணப்படுகின்றன (*Deraniyagala, S.U.* 1992: 686-688).

இக்கால மக்கள் தமது ஆகாரத்திற்காக நாடோடிகளாக இடம்விட்டு இடஞ்சென்று வேட்டையாடியும், கடற்கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் மீன்பிடித்தும் வாழ்ந்தார்கள் என்பதால் இவர்கள் விட்டுச்சென்ற எச்சங்கள் ஆற்றங்கரைகளிலும் கடற்கரைகளிலும் காணப்படுகின்றன. இவர்கள் உபயோகித்த மற்றைய பாவனைப் பொருட்களும், உடுத்திய உடுப்புகளும், அவர்களின் எலும்புக்கூடுகளும் அழிவுற்றுப் போனபின் முக்கியமாக எஞ்சியிருப்பவை அவர்கள் விட்டுச்சென்ற கற்கருவிகளே.



*இலங்கையில் வடக்கு - வடமேற்காக முல்லைத்தீவிலிருந்து குதிரைமலை வரை தொடர்ந்து செல்லும் இரணைமடு தேரிமணற் தொடர். இலங்கையில் ஆதிமனிதர்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் இந்த செம்மணற் குன்றுகளினிடையே காணப்படுகின்றன. வரைபடம், நன்றி: Dr S.U. Deraniyagala.*

ஆதியில் வன்னிப்பகுதியில் வாழ்ந்த மக்கள் விட்டுச்சென்ற கல்லாயுதங்களும், கல்லுபகரணங்களும் கடற்கரையோரமாகக் காணப்படும் இரணைமடு தேரிமணற் குன்றுகளிடையே காணப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் இயற்கையாகக்

கிடைத்த கற்களை உபயோகித்த மனிதன் பின்னர் இந்நிலையிலிருந்து ஒருபடி முன்னேறித் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பலவாறு அவற்றைச் செப்பனிடத் தொடங்கினான். இவ்வாறு செய்யும்போது முழுக்கல்லையும் செப்பனிடுவதற்குப் பதிலாக தனது தேவைக்காகப் பயன்படுத்தும் முனையை மட்டுமே செப்பனிட்டான்.

இயற்கையாக ஆற்றோரங்களிலும் வேறிடங்களிலும் பாறையாகக் காணப்பட்ட 'குவாட்ஸ்' (*Quartz*) கற்களைக் கொண்டே இக்கருவிகள் பெரும்பாலும் உருவாக்கப்பட்டன. இப்பாறைகளை நெருப்பைக் கொண்டு சூடாக்கி பின்னர் அவற்றின் மேல் நீரை ஊற்றியோ அல்லது மற்றொரு பெருங்கல்லால் அடித்தோ பிளக்க வைத்து, பின்னர் அவற்றை உடைத்து வேண்டிய ஆயுதங்களை இவர்கள் செய்திருக்கிறார்கள் (*Allchin, B & Allchin, R. 1968: 96-99*). இவ்வாறு பாறையை உடைக்கும்போது வெடித்துச் சிதறும் செதில்கள் (*Flake Tools*) மிகவும் கூர்மையாக இருப்பதனால் சவரம் செய்வதற்கும் நுணுக்கமாக வெட்டுவதற்கும் உபயோகப்படுத்தப்பட்டன. முழுக்கற்களையும் சிறப்பாகச் செப்பனிட்டு கைக்கோடரிகள் (*Hand Axe*) தயாரிக்கப்பட்டன. தட்டைக் கற்களைக் கொண்டு பிளப்பிகள் உருவாக்கப்பட்டன. கைக்கோடரிகளும் பிளத்தற் கருவிகளும் மரங்களை வெட்டுவதற்கும், மிருகங்களைக் கொன்று இறைச்சியை வெட்டி எடுப்பதற்கும், நிலத்தில் விளையும் கிழங்கு வகைகளை அகழ்ந்து எடுப்பதற்கும் உபயோகிக்கப்பட்டன.




*இரணைமடு தேரி மணற்குன்றுகளினிடையே கண்டெடுக்கப்பட்ட பழையகற்காலக் கருவிகள், உபகரணங்கள். நன்றி: Dr S.U. Deraniyagala.*




*பழைய கற்காலக் கருவிகள்: 1, 2, 6: வெட்டுக் கருவிகள்; 3, 7: கைக்கோடரிகள்; 4, 8: பிளப்பிகள்; 5: வட்டத்தட்டு வெட்டி. நன்றி: Allchin B & Allchin R.*

பழையகற்கால மக்கள் 20 முதல் 40 பேரைக் கொண்ட குழுக் குடும்பமாக 50 சதுர மீட்டர் அளவான ஓரிடத்தில் தங்கி வேட்டையாடியும், உணவு சேகரித்தும் வாழ்ந்தார்கள் எனக் கணிக்கப்படுகிறது. இவர்களது பிரதான தொழிலாக வேட்டையாடுதல் அமைந்திருந்தாலும் தனது உணவிற்காக மிருகங்களின் இறைச்சியோடு மீன், கிழங்கு வகைகள், பழவகைகள் ஆகியவற்றையும் உட்கொண்டார்கள்.

ஓரிடத்தில் உணவு குறைந்ததும் கூட்டமாக வேறிடம் சென்று இவர்கள் தங்கினார்கள். வட இலங்கையின் உலர்ந்த வலயத்தில் (வன்னிப்பகுதி) ஒரு சதுர கிலோமீட்டருக்கு 0.8 மனிதர்கள் வரை வாழ்ந்தார்கள் எனக் கணக்கிடப்படுகிறது.

கடலிலிருந்து கிடைக்கும் கடலுணவுகளின் தாராளத்தால் இலங்கையின் வடக்கு - கிழக்குக் கடற்கரையோரங்களில் சதுர கிலோமீட்டருக்கு 1.5 பேர்கள் வரை வாழ்ந்தார்கள் (*Deraniyagala, S.U. 1996: 277-285*).

### உணவு

பழைய கற்கால மக்கள் தங்கள் உணவிற்காக கல்லாயுதங்களைக் கொண்டு மிருகங்களை வேட்டையாடியும், கிழங்குகள் பழங்கள், விதைகள் ஆகியவற்றைச் சேகரித்தும் உட்கொண்டார்கள். மற்றைய மிருகங்கள் கொன்றுபோட்ட விலங்குகளின் இறைச்சிகளையும் எலும்புகளையும் கூட உட்கொண்டிருக்கலாம். கடற்கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் வாழ்ந்தவர்கள் மீன்களையும் உணவாகக் கொண்டார்கள்.

### நெருப்பு

ஹோமோ இரக்டஸ் மக்கள் ஆபிரிக்காவிலிருந்து இடம்பெயர்ந்த நாட்களிலேயே நெருப்பின் உபயோகத்தைப் பற்றி அறிந்திருந்தார்கள். காய்ந்த குச்சிகளை ஒன்றோடு ஒன்று உரசி நெருப்பை உண்டாக்கும் கலையை அறிந்திருந்தார்கள். வேட்டையாடிய விலங்கினங்களை கற்கத்திகளால் வெட்டி கற்தட்டுகளில் போட்டும், மரக்குச்சிகளில் இணைத்தும் நெருப்பில் வாட்டி உட்கொண்டார்கள். இதன் காரணமாக பச்சை ஊனிலிருந்து உண்டாகக்கூடிய நோய்களிலிருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள். திறந்த வெளிகளில் வாழ்ந்தவர்கள் இரவு நேரங்களில் நெருப்பை எரித்து அதைச் சுற்றிவர உறங்கியதன் மூலம் கொடிய மிருகங்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொண்டார்கள்.

### வதிவிடங்கள்

இரணைமடு கடற்கரை தேரி மேடுகளைத் தவிர இம்மக்கள் திறந்த வெளிகளிலும், ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும், கடற்கரைகளிலும், மலைக்குகைகளிலும், பாறை ஒதுக்குகளிலும் வாழ்ந்து வந்திருப்பதை அவ்விடங்களில் காணப்படும் அவர்கள் உபயோகித்த கல்லாயுதங்களைக் கொண்டு அறிய முடிகிறது. தென்னிலங்கையில் உள்ள பாதாதொம்ப லேனா, பெலி லேனா குகைகளிலும் பல நூற்றாண்டுகளாக மக்கள் குடிகொண்டிருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

### ஆ. இடைக்கற்காலம்

பழைய கற்கால மக்களைப் போன்று இடைக்கற்கால மக்களினதும் பிரதான தொழில்களாக வேட்டையாடுதல், மீன்பிடித்தல், உணவு சேகரித்தல் போன்ற தொழில்களே அமைந்தன. ஆனால், பழைய கற்கால மனிதனைவிட இவனது வாழ்க்கை சற்று முன்னேற்றமடைந்து காணப்படுகிறது. ஆதியில் நாடோடியாகத் திரிந்த இம்மனிதன் ஓரளவு தொடர்ந்து ஓரிடத்தில் இருந்தது பற்றியும், தான் வாழ்ந்த சூழலை முன்னரைவிடக் கூர்மையாக அவதானித்து அதை மாற்ற முற்பட்டதையும் அண்மைக்கால ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன (Deraniyagala, S.U. 1992: 686-688).

இக்கால மனிதனால் காடுகள் அழிக்கப்பட்டதை, தாவரங்கள் விட்டுச் சென்ற மகரந்தப் பொடியின் (Pollen) படிவங்கள், எச்சங்கள் ஆகியவை எடுத்துக் காட்டியுள்ளன. இக்காலத்தில் காட்டு மரங்கள் விட்டுச் சென்ற மகரந்தப் பொடியின் எச்சங்கள் எண்ணிக்கையிற் குறைய, சிறு பற்றைகள், புல், பூண்டு ஆகியவை விட்டுச் சென்ற மகரந்தப் பொடியின் எச்சங்கள் மேலோங்கிக் காணப்படுவதை ஆதாரமாகக் கொண்டு இக்கால மனிதன் காட்டை அழித்துச் சூழலை வளப்படுத்த முற்பட்டான் என்ற முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்திருக்கிறார்கள் (Allchin B. & Allchin R. 1968: 96-99).

பழைய கற்காலத்தில் வாழ்ந்த பெரிய மிருகங்களின் இனங்கள் பெருமளவுக்கு அழிந்துபோக, காடுகளில் காணப்பட்ட மான், மரை, முயல் ஆகிய சிறிய மிருகங்களை வேட்டையாட இக்கால மனிதன் கற்றுக்கொண்டான். கூர்மையாக்கப்பட்ட சிறிய (குறுணி) நுண்கற்களை அம்புகளிலும் ஈட்டிகளிலும் முனையாகப் பொருத்தி அவற்றைக் கொண்டு வேட்டையாடியதை அறிய முடிகிறது. இப்பண்பாட்டு மக்கள் காட்டுப் புற்களாகத் தோன்றிய பயிர்களிலிருந்து தானியங்களை அறுக்கவும், உணவுப் பண்டங்களை சிறு துண்டுகளாக வெட்டவும் தட்டையான 'பிளேட்' போன்ற கல் அலகுகளைப் பயன்படுத்தினார்கள்.

இச்சிறிய கற்கள் நுண்கற்கள் அல்லது குறுணிக் கற்கள் (Microliths) என தொல்லியலாளர்களால் அழைக்கப்படுகின்றன. வட இலங்கையில் பல இடங்களில் காணப்படும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தொல்லியற் சான்றுகள் குறுணிக்கல் பண்பாட்டிற்குரியனவாகும். இதன் காரணமாக இலங்கையின் இடைக்கற்காலத்தை குறுணிக்கற் பண்பாட்டுக் காலம் எனவும் அழைப்பார்கள். இக்குறுணிக் கற்கள் வன்னியில் இரணைமடு தேரிமணற் குவியல்களிலிருந்தும், மாந்தை (மாதோட்டம்), குருத்தன்குளம், பனங்காமம், உருத்திரபுரம், பூநகரி (கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு) ஆகிய இடங்களிலிருந்தும் பெறப்பட்டிருக்கின்றன (புஷ்பரட்ணம், ப. 1993: 14).

ஆயுத முனைகளாக உபயோகப்படுத்தப்பட்ட இவ்வகை நுண்கற்கள் 1 - 2 செ.மீ. நீளமும், 0.5 செ.மீ அகலமும் கொண்டு சேட், சக்கிமுக்கி கற்களில் (Chert,

Flint) பல வகையான வடிவங்களில் செய்யப்பட்டிருக்கின்றன. நுண்கல் பிராண்டிகள் (Scrapers) 5 செ.மீ. நீளம் கொண்டவை. இந்த நுண்கற்கள் அம்பு நுனிகள், ஈட்டி முனைகள், கைவேலைக் கருவி முனைகள், பிராண்டிகள் மற்றும் பலவகையான கருவிகளின் முனைகளாக உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நுண்கற்கள் வெப்பேற்றுக் கதிரொளிவீச்சுக் காலக் கணிப்புகளின்படி இ.மு. 34,000 ஆண்டுகளுக்கு உரியனவாகக் கணிக்கப்பட்டிருக்கிறது (Deraniyagala, 1992b).

பூநகரிப் பிராந்தியத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குடியேற்றங்கள் நுண்கற்காலப் பண்பாட்டுடன் தோற்றம் பெற்றதற்கான சில ஆதாரங்கள் கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வின் போது கிடைத்துள்ளன. இவ்விடங்களில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய சிறிய குவாட்ஸ் (Quartz) கல்லாயுதங்களும், குவாட்ஸ் கற்களைக் கொண்டு கல்லாயுதங்கள் ஆக்கும் போது ஏற்படும் செதில்கள் (flakes) பலவும் கிடைத்துள்ளன. வெட்டுக்காட்டில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய மற்றொரு வகையான சேட் (Chert) கற்கள் சில கிடைத்திருக்கின்றன. இவ்விடத்திலிருந்து, குவாட்ஸ் கல்லாயுதங்களோடு, உலோகத்தாலான மீன் பிடிப்பதற்குரிய ஊசியும் (Metal Fishhook) (பிற்காலத்திற்குரியது), பிளேட் போன்ற தட்டையான ஆயுதமும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன (புஷ்பரட்ணம், ப. 1993:14).

## இடைக்கற்கால மக்களின் வாழ்வியல்

இலங்கையின் இடைக்கற்கால மக்கள் வேட்டையாடி, உணவு சேகரித்து வாழ்க்கை நடத்திய மக்கள். நுண்கற் பண்பாட்டைப் பேணிய இம்மக்களின் நாளாந்த வாழ்க்கையில் கற்கருவிகளே முக்கிய பங்கு வகித்தன. அவர்களது வாழ்வியலை அவர்கள் விட்டுச் சென்ற கற்கருவிகள் மூலமாகவும், மற்றைய தொல்லியல் சான்றுகள் மூலமாகவும் அநுமானிக்க முடிகிறது. கற்கருவிகளின் வடிவமைப்பையும், வகைகளையும், நுணுக்கப்பாட்டையும் கொண்டு அவற்றைத் தயாரித்த மக்களின் எண்ணங்களையும், அக்கருவிகளை உபயோகப்படுத்தும் நோக்கங்களையும் அறிய முடிகிறது.

இக்கற்கருவிகள் பெரும்பாலும் குவாட்ஸ் (Quartz), சேட் (Chert) ஆகிய கற்களிலிருந்தும், மிக அரிதாக யஸ்பர் (Jasper) கற்களிலிருந்தும் வடிவமைக்கப்பட்டிருந்தன (Deraniyagala, S.U. 1992: 266-70; 688-94; 2004:8). இடைக்கற்கால மக்களின் முக்கியமான தொழில்நுட்ப முன்னேற்றம் அவர்கள் வேட்டையாடுவதற்காகக் கண்டுபிடித்த அம்பும் வில்லுமாகும். அம்பு நுனிகளில் உபயோகித்த குறுக்குத்தலை அம்புநுனிகள் (Transverse Arrowheads) தனித்துவமானதொரு சீர்திருத்தக் கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது. இதைக் கொண்டு முன்னர் வேட்டையாட முடியாத பறவைகளையும் மிருகங்களையும் வேட்டையாட முடிந்தது. நுண்கற்கள் பொருத்தப்பட்ட பலவகையான பலசினைக் கருவிகள் (Compound Tools) உபயோகப்படுத்தப்பட்டன. பிறைவடிவான நுனி பொருத்தப்பட்ட ஈட்டிகள், முக்கோண நுண்கற்கள் வரிசையாகப் பொருத்தப்பட்ட வாட்கள், கத்தி வடிவில் ஆக்கப்பட்ட வளைந்த கற்கள் என்பன இவற்றில் அடங்கும்.



இரணைமடு தேரியில் கண்டெடுக்கப்பட்ட இடைக்கற்கால நுண்கல் ஆயுதங்கள். இவை இ.மு. 28,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகக் கணிக்கப்பட்டிருக்கின்றன. நன்றி: Dr S.U. Deraniyagala.



இலங்கையில் பாதாதொம்ப லேனா குகை. இதற்குள் இற்றைக்கு 34,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. நன்றி: Lankalibrary.com.



*கோல்கள் நட்டு மிருகத் தோல்களால் மூடப்பட்ட தற்காலிகக் கூடாரம்.*

நுண்கற்களை இயற்கையான மரப்பிசின் கொண்டு பிளந்த மரச் சட்டங்களினிடையில் பொருத்தி பலசினைக் கருவிகள், வாட்கள் என்பன உருவாக்கப்பட்டன. கற்கள் தவிர எலும்புகளும், கற்களைக் கொண்டு கூராகச் செதுக்கப்பட்ட மரத்தண்டுகளும் ஆயுதங்களாக உபயோகப்படுத்தப்பட்டன. இம் மரத்தண்டுகளைக் கொண்டு ஆற்றிலும், கடற்கரைகளிலும் மீன்களைக் குத்திப் பிடிக்க முடிந்தது.

இடைக்கற்கால மனிதர்கள் பெரும்பாலும் நாடோடிகளாகவும், சிலர் நிரந்தரமாக குகைகளிலும் வாழ்ந்தார்கள். திறந்த வெளிகளிலும், ஆற்றோரங்களிலும், கடற்கரைகளிலும், குகைகளிலும் இவர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இவர்களது ஆயுதங்கள் குகைகளில் கிடைத்தபோதிலும் குகைகளில் இவர்கள் நிரந்தரமாக வாழ்ந்ததற்கான பிற ஆதாரங்கள் காணப்படாதது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் குகைகளில் இவர்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் காணப்படுவதோடு இவர்களால் அமைக்கப்பட்ட கூடாரங்கள் பற்றிய சான்றுகளும் கிடைத்துள்ளன. இத்தகைய கூடாரங்கள் பெரிய மிருகங்களின் எலும்புகளையோ அல்லது மரத் தண்டுகளையோ கால்களாக நட்டு அவைகளின் தோலைக் கூரையாக மூடி அமைக்கப்பட்டவையாகும்.

இம்மக்கள் பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப நாடோடிகளாக இடத்திற்கு இடம் சென்று பலவகைப்பட்ட உணவுகளைச் சேகரித்துள்ளனர். தென்னிலங்கையில் பெலன்பண்டிபலஸா (*Bellanbandipa lassa*) என்ற குகையினுள் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் இம்மக்கள் பலவகைப்பட்ட தானியங்கன், கிழங்கு வகைகள், பழங்கள், காட்டு விலங்குகள், மீன் போன்ற கடல் உணவுகள் ஆகியவற்றை உட்கொண்டமை தெரியவந்துள்ளது. இம்மக்கள் இந்த உணவுகளைக் காய வைத்துச் சேமித்து வைக்கும் பழக்கத்தையும், நெருப்பின் பயன்பாட்டையும் அறிந்திருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது. அடுத்து பெலிலேனா குகையில் (*Beli Lena*) இற்றைக்கு 30,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட உப்புப் படிமங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இதிலிருந்து அக்காலத்தில் மலை நாட்டிற்கும், கடற்கரைகளுக்கும் இடையே வலைப்பின்னலான பண்டமாற்றுத் தொடர்புகள் இருந்ததை அறிய முடிகிறது (*Deraniyagala, S.U. 1992: 326*).

இடைக்கற்கால மக்களின் சந்ததியினரான பழங்குடி மக்கள் இன்றும் குகைகளில் வாழுவதை நாம் அவதானிக்க முடிகிறது. பாதுகாப்பிற்காக இக்குகைகளின் வாசல்களைத் தோல் கொண்டு மறைத்துவிடும் வழக்கமும் இவர்களினிடையே காணப்படுகிறது. இதனால் இடைக்கற்கால மனிதன் முந்தைய பழங்கற்கால மனிதரைப் போலல்லாது குகைகளில் நிரந்தரமாக வாழ்ந்தான் என ஊகிக்க இடமுண்டு. இக்காலத்தில் வேடர்கள் மத்தியில், தாம் ஆயுதங்களை உருவாக்கும் இடத்திலேயே (*Factory Sites*) தற்காலிகமாகக் குடில்களை அமைக்கும் வழக்கம் காணப்படுவது போன்றே, அக்காலத்திலும் இவ்வழக்கம் இருந்திருக்கலாம் (சிற்றம்பலம், சி.க. 1999:77).

இடைக்கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களே சில சமயங்களில் அவர்கள் ஆயுதங்களைத் தயாரித்த இடங்களாக இருந்தன; அதேபோல், சில வேளைகளில் அவர்கள் ஆயுதங்களைத் தயாரித்த இடங்களிலேயே வாழ்ந்ததையும் அறிய முடிகிறது. இம்மக்கள் நீர் நிலைகள், ஆயுதங்களை உருவாக்குவதற்கான கல்வகைகள் கிடைக்குமிடங்கள், வேட்டைக்குத் தேவையான மிருகங்கள் செறிந்து வாழும் இடங்கள் என்பவற்றை மையமாக வைத்தே தமது இருப்பிடங்களை அமைத்தார்கள் (*Allchin, B. & R. 1982; 1982*; சிற்றம்பலம், சி.க. 1999:77).

அமெரிக்காவின் கோணெல் பல்கலைக்கழக மானிடவியல் பேராசிரியரான கென்னெத் கென்னெடி நீண்ட ஆண்டுகளாக தென்னிந்திய, இலங்கையின் புராதன மக்களின் மானிடவியல் கற்கைநெறி ஆய்வுகளை மேற்கொண்டவர். அவர் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்த இடைக்கற்கால நுண்கற் பண்பாட்டைக் கடைப்பிடித்த மக்கள் ஒரே இன வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடுகிறார். தொல்லியலாளர்கள் இலங்கையில் நுண்கற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளுக்கும், தென்னிந்தியாவில் சமகாலத்து மக்களால் பயன்படுத்தப்பட்ட கருவிகளுக்கும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதைச்

சுட்டிக்காட்டியுள்ளார்கள். இலங்கையில் பயன்படுத்தப்பட்ட இருபக்க அலகுடைய நுண்கற் கல்லாயுதங்கள், தமிழகத்தில் பாம்பன் கடற்கரைக்கு அண்மையிலுள்ள தேரிக் கலாசாரத்துடன் ஒரே பிராந்தியம் எனக் கருதும் அளவிற்கு ஒற்றுமையைக் கொண்டுள்ளன (*Kennedy, K.A.R. 1990:34*).

இடைக்கற்கால மனிதன் நாயை தனது நண்பனாகப் பழக்கக் கற்றுக்கொண்டான். தவிர, மந்தை வளர்ப்பிலும் இக்கால மனிதன் ஈடுபட்டிருந்ததை இக்காலக் குடியிருப்புகளிற் காணப்படும் எலும்புக்கூடுகள் எடுத்துக்காட்டுகின்றன. இம்மிருகங்களில் ஆடு, எருது, பசு, செம்மறி ஆடு என்பன குறிப்பிடத்தக்கவை. இவ்வாறு மந்தை மேய்ப்பில் இக்கால மனிதன் அக்கறை காட்டியது அவனது நாகரிக வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மற்றைய நாடுகளில் இடைக்கற்காலத்தைத் தொடர்ந்து வந்த காலம் புதிய கற்காலம் எனப்படும். நாடோடிகளாக இடத்திற்கு இடம் பெயர்ந்து வேட்டையாடி, உணவு சேகரித்து வந்த மனிதன் நிரந்தரமாக ஓரிடத்தில் தங்கி விவசாயத்திலும், பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்ட காலம் இது. மனிதர்கள் கூட்டாக ஓரிடத்தில் நிரந்தரமாகத் தங்க, அங்கே முதல் கிராமங்கள் உருவாயின. இக்காலத்தில் செம்பு, ஈயம், வெண்கலம் (*Bronze*) போன்ற உலோகங்கள் அறிமுகமாயின. இதைத் தொடர்ந்து இரும்பு அறிமுகமான காலம் இரும்புக்காலம் எனப்பட்டது.

இலங்கையிலோ புதிய கற்காலம் தெளிவாக நிறுவப்படவில்லை. இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இங்கே இரும்பு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அறியத்தருகின்றன. இலங்கையின் இடைக்கற்காலம் இ.மு. 34,000 முதல் ஆதி இரும்புக்காலமான இ.மு. 3380 வரை நீடித்திருக்கிறது (*Deraniyagala, S.U. 1992: 695-70; 2013: 511*).

## உசாத்துணை நூல்கள், கட்டுரைகள்


1. *ABEYARATNE, M.* (1996): *Multidating Studies of Archaeologi cal Sites, Unpublished Ph.D. dissertation, Australian National University, Canberra.*
2. *ALLCHIN, BRIDGET & ALLCHIN, RAYMOND* (1968): *The Birth of Indian Civilization, Harmondsworth, London.*
3. *ALLCHIN, B. & ALLCHIN, R.* (1982): *The Rise of Civilization in India and Pakistan, Cambridge University Press, Cambridge.*
4. *CLARK, PETER U. & MIX, ALAN C.* (2002): *Ice Sheets and Sea Levels of the Last Glacial Maximum; Quaternary Science Reviews* 21 (13): 1-7.
5. *DERANIYAGALA, S.U.* (1992): *The Prehistory of Sri Lanka: An Ecological Perspective, Dept. of Archaeological Survey, Government of Sri Lanka, Colombo.*
6. *DERANIYAGALA, S.U.* (1992): *The Prehistory of Sri Lanka (as above)*: pp 686-688. *The gravel at Iranamadu Formation had given varying dates of* 125,000 *BCE (M. Abeyaratne* 1996: *as above), and* 80,000 *BCE (Oxford Archaeological Laboratory) from different sites.*
7. *DERANIYAGALA, S.U.* (1992b): *'The Prehistoric Chronology of Sri Lanka' in Memoirs of the Archaeological Department, Govt of Sri Lanka, No.* 8, *Addendum I.*

*DERANIYAGALA, S.U.* (1996): *Pre and Protohistoric Settlements in Sri Lanka, in The Prehistory of Asia and Oceania, Vol.* 5, *Section* 16., *pp* 277-285.

8. *DERANIYAGALA, S.U.* (2004): *Prehistoric basis for the rise of Civilization in Sri Lanka and Southern India, Second Vesak Commemoration Lecture, Madras.*
9. *DERANIYAGALA, S.U.* (2013): *'General Conclusions' in Mantai, City by the Sea by John Carswell, Siran Deraniyagala and Alan Graham, Linden Soft Verlag, Aiochwald, Germany.*
10. *GOONATILAKE, SUSANTHA* (1981): *The Formation of Sri Lankan Culture, Ancient Ceylon, No.* 4.
11. *KENNEDY, K.A.R.* (1975): *The Physical Anthropology of the Megalithic Builders of South India and Sri Lanka, Canberra.*

*KENNEDY, K.A.R.* (1990): *'Palaeodemography of Sri Lanka and Peninsular India: A Crossregional Survey', Perspectives in Archaeology: Leelananda Prematillake Festchrift* 1990; *Ed. Sudharsan Seneviratne et al. Peradeniya:* 29-37.

12. *MACDOUGAL, DOUG* (2004): *Frozen Earth: The Once and Future Story of the Ice Ages, University of California Press.*
13. *MISHRA, S.* (1995): *Chronology of the Indian Stone Age, Man and Environment* 20 (2): 11-16.

*PETRAGLIA, M. D.*(2003): *The Lower Palaeolithic of the Arabian Peninsula: Occupations, Adaptations and Dispersals, Journal of World Prehistory* 17: 141-179.

14. *QUINTANAMURCI, LUIS* (1999): *The mtDNA evidence for a Coastal Exodus from Africa, Nature Genetics* 23: 437-441.
15. *ROHLING, E.J. et al.* (1998): *"Magnitudes of Sealevel lowstands of the past* 500,000 *years"; Nature* 394, *pp* 162-165.
16. *THIAGARAJAH, SIVA* (2011): *Peoples and Cultures of Early Sri Lanka, Tamil Information Centre, London.*
17. *WELLS, SPENCER (repr.* 2003): *The Journey of Man, Random House Paperback Edition, New York.*
18. *WELLS, SPENCER* (2007): *Deep Ancestry, National Geographic, Washington DC.*
19. சிற்றம்பலம், சி.க. (1999): பண்டைய தமிழகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
20. புஷ்பரட்ணம், ப. (1993): பூநகரி தொல்பொருளாய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

# மொழிசார் தேசியவாதத்தின் ஊற்றுகள்

‘வேந்தர் இல்லா வையகம்: இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணம்‘ எனும் இத்தொடர் ‘ஒருவர் வாழ்க்கை ஊடாகத் தென்படும் காட்சிகள்‘ பற்றியதாகும். இத்தொடர் கட்டுரைகள் என் வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கேள்விப்பட்ட, வாசித்தறிந்த நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் பற்றியும் அவற்றால் என் மனதில் உருவாகிய கருத்துகள் பற்றியும் கூறுபவை. இவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. இவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை; 20 ஆம் நூற்றாண்டை மையமாகக் கொண்டவை. வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றுகளைக் கொடுத்துதவும் சுவடிகள் போன்று இத்தகைய நினைவுப் பதிவுகளும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இவை எழுதப்படுகின்றன.

கார்த்திகேசு இந்திரபாலா



பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் கல்வெட்டியலாளர், வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியவரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

அநகாரிக தர்மபால பௌத்த மக்களைத் தட்டி எழுப்பி, முன் நோக்கி வழிநடத்திச் செல்ல, பிற பண்பாட்டுப் புலங்களிலும் காலனியாட்சிக்குப் பணிந்து நடந்த சிங்கள மக்களிடையே விழிப்புணர்ச்சியைத் தூண்டுவதற்கு வேறு தலைவர்கள் செயற்பட்டனர்.

## மொழியின் புது வகிபாகம்

அந்நியர் ஆட்சிக்குள் அகப்பட்டிருந்த ஆசியச் சமூகங்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தத்தம் பண்பாட்டு அடையாளத்தை (Cultural Identity) பேணுவதற்குச் செயற்பட்டபோது, அந்த அடையாளத்தின் ஒரு முக்கிய சின்னமாக (Marker) தம் மொழியைக் கருதினர். இதன் விளைவாக இச்சமூகங்களில் மொழிசார் தேசியவாதத்தின் (Linguistic Nationalism) ஊற்றுகள் வெளிவரத் தொடங்கின.

இந்தியாவில் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில், அரசியல் தேசியவாதம் எழுச்சிபெற்றிருந்த வேளையிலேயே, மொழிசார் தேசியவாத ஊற்றுகளைக் காணலாம். அனைத்து இந்திய மக்களையும் அணைத்து அந்நியரை எதிர்க்கும் இயக்கத்தைத் தொடங்கியிருந்த இந்திய தேசியக் காங்கிரஸில் அசையாத நம்பிக்கைகொண்டு ஆவேசத்துடன் செயற்பட்ட மராட்டியராகிய பால கங்காதர திலகர் இந்திய மாகாணங்கள் மொழி அடிப்படையில் மீளமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருந்தார். பிறரும் இக்கருத்தைக் கொண்டிருந்தபடியால், 1917 இல் காங்கிரஸ் மொழிசார் மாநிலங்களை அமைப்பதை தன் கொள்கையாக வெளிப்படுத்தியது. பின்னர், 1924 இல், மகாத்மா காந்தியும் இதனை ஆதரித்தார். இதே காலத்தில், தெற்கில் சுப்பிரமணிய பாரதியார், 'தமிழ்த் திரு நாடு' பற்றிப் பாடி, மொழிசார் தேசியவாதத்துக்கு வலுவூட்டத் தொடங்கியதையும் கவனிக்காமல் இருக்க முடியாது.



ஜேம்ஸ் த அல்விஸ்

Image Source : openlibrary.org

இவ்வாறு தொடங்கிய போக்கு அதிக காலம் செல்லுமுன் மொழி, இனம், இடம் ஆகியவற்றை இணைத்து முடிச்சு இடுவதற்கு வழிவகுத்தது எனலாம். இலங்கையில் சிங்கள சமூகத்தில் மேலும் ஓர் அடையாளச் சின்னம் (Identity Marker) சேர்க்கப்பட்டது. உண்மையில் அது முதல்நிலைச் சின்னமாக உயர்த்தப்பட்டது - அதுதான் மதம்.

## இலங்கையில் மொழியும் இனமும்

முன்னர் கூறியதுபோல், 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி அளவில், கீழைத்தேசவியல் அறிஞர்கள் (Orientalists) ஆய்வுசெய்து வெளியிட்ட கருத்துகளும் தொல்லியல் ஆய்வுகள் வெளிப்படுத்தியவையும் பிராமிக் கல்வெட்டுகளின் வாசிப்புகளும் கல்விகற்ற இலங்கையர் மீது பெரும் செல்வாக்கைச் செலுத்தி, புதிய கற்பனைகளுக்கு இடமளித்து மிகுந்த உற்சாகத்தைத் தூண்டின.

சிங்கள மொழி வட இந்திய மொழிகளின் குடும்பத்தைச் சேர்ந்தது என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்ட பின் இலங்கை வரலாறு பற்றிய சிந்தனையில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. இச்சிந்தனையில் இரு முக்கிய கருத்துகள் மலர்ந்தன. ஒன்று, சிங்கள மொழி வட இந்திய மொழிகளைப் போல் ஓர் ஆரிய மொழி, இதைப் பேசுவோர் வட இந்தியரைப் போன்று ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்து (இது இன்று வரை நிலைத்துள்ளது). மற்றது, சிங்கள மொழி ஒரு தனியான வேறான தொல்கால மொழி, ஆரிய மொழிகளின் சொற்களைப் பின்னர் உள்வாங்கிய மொழி என்ற கருத்து (இது தற்போது கைவிடப்பட்டுள்ளது). இக்கருத்துகள் பரவத் தொடங்க, முன்னர் காணப்படாத மொழிப்பற்று அல்லது மொழி விசுவாசம் (Language Loyalty) வெளிப்பட்டது.

சிங்கள மொழி விசுவாசம் தொடர்பாக முதலில் முக்கியத்துவம் பெறுபவர் ஜேம்ஸ் த அல்விஸ் (James De Alwis, 1823 - 1878) என்பவர் ஆவார். இவர் ஸிதத் ஸங்கராவ ( ) என்ற 13 ஆம் நூற்றாண்டுச் சிங்கள இலக்கண நூலைப் பதிப்பித்து, ஒரு நீண்ட அறிமுகத்தை எழுதி (278 பக்கங்கள்), சிங்கள மொழியின் தொன்மை, தோற்றம், சிறப்பு ஆகியவை பற்றிப் பல கருத்துகளை வெளியிட்டார். சிங்களம் இலங்கையின் ஆதிவாசிகள் (Aborigines) பேசிய மொழி என்றும், ஆசியாவின் பழைய மொழிகளுள் ஒன்று எனவும் எடுத்துரைத்து மொழிசார் விழிப்புணர்ச்சியை எழுப்பினார்.

இதன் பின், ஏட்டு வடிவில் இருந்த பல பழைய சிங்கள (ஹெள) இலக்கியப் படைப்புகள், அமாவதுர (), புத்ஸரண () ஆகியவை உட்பட, அச்சிடப்பட்டன.

இவ்வாறு 19 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் மொழி விசுவாசம் கல்விகற்ற சிங்கள மக்களிடையே வளரத் தொடங்கியபோது, அநகாரிக மொழியையும் இனத்தையும் இணைத்து ஆரிய - சிங்கள அடையாளத்தை வற்புறுத்தினார்.

புதிய வழியில் மொழிசார் தேசியவாதம் முன்னேறிச் செல்ல, அதிலிருந்து விலகித் தூய சிங்கள இயக்கம் ஒன்று உருவாகியது. சம்ஸ்கிருதம், பாளி, தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றின் சொற்களைச் சிங்களத்தில் இருந்து களைந்து, பழைய ஹெள மொழியை மறுமலர்ச்சியடையச் செய்வதே இந்த இயக்கத்தின் நோக்கம். இதனை முன்னின்று வழிநடத்தியவர் முனிதாஸ குமாரத்துங்க ஆவார்.



**முனிதாஸ குமாரதுங்க**

**Image Source : en.wikipedia.org**

இத்தூய சிங்கள இயக்கம் தர்மபாலவின் ஆரிய - சிங்கள பௌத்தத்துக்குச் சவாலாகக் காணப்பட்டது. ஆரிய - சிங்கள அடையாளம் மொழியைப் பொறுத்துப் பாளிக்கும் சம்ஸ்கிருதத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்துக் கலப்புச் சிங்களத்தைப் (மிஸ்ர ஸிங்ஹள) பயன்படுத்தியது. தூய சிங்கள இயக்கம் வட இந்தியத் தொடர்பை விடுத்து, 'விஜயன் வருகைக்கு' முன்பிருந்தே இலங்கையில் இருந்தவர்கள் சிங்களவர் என்பதை வலியுறுத்த, ஆரிய - சிங்களக் கோட்பாடு, வட இந்தியாவில் இருந்து வந்து குடியேறிய ஆரியர்களே சிங்களவர் என்பதை முன்வைத்தது. இது மட்டுமல்லாது, தூய சிங்கள இயக்கம் பௌத்தத்தை விட்டு மொழிக்கு உயர்வு கொடுத்தது.

இதே காலமளவில் தமிழ்நாட்டிலும் மறைமலை அடிகள் முன்னின்று வழிநடத்திய தனித்தமிழ் இயக்கம் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. இதுவும் தூய சிங்கள இயக்கமும் 1910 இன் பின் எழுந்தவையாகையால் இவற்றைப் பின்னர் கவனிப்போம்.

## யாழ்ப்பாணத்தில் மொழியும் இனமும்

யாழ்ப்பாணத்தில் மொழி உணர்ச்சியின் (*Language Consciousness*) எழுச்சி வரலாறு தெற்கில் நடந்தவற்றில் இருந்து வேறுபட்டது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முதலில், யாழ்ப்பாணத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த அமெரிக்க மிஷனரிமாருடைய செயற்பாடுகள் தமிழ் மொழிக்குப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. மாறாக, இந்த அமெரிக்கர் தமிழைக் கற்றுத் தங்கள் மதப் பரப்பலுக்குப் பயன்படுத்தியது மட்டுமல்லாது, தமிழ் மொழியின் சிறப்பியல்புகளைக் கண்டு அவற்றைப் பற்றி எழுதினர். மேலும், ஒருவர் (*Dr. H.R. Hoisington*) இம்மொழியை நன்கு கற்றுப் பழந்தமிழ் நூல்கள் சிலவற்றை (சிவஞானபோதம், சிவப்பிரகாசம், தத்துவக்கட்டளை) ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்தார்.

அமெரிக்க மிஷன் அமைத்த வட்டுக்கோட்டை செமினரியில் (*Batticotta Seminary*) தமிழ் இலக்கியத்தை வளர்ப்பது (*'The Cultivation of Tamul Literature'*) தங்கள் குறிக்கோள்களுள் ஒன்றாக அந்த நிறுவனத்துக்கு வகுக்கப்பட்ட திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. "சம்ஸ்கிருதம், எபிரேயம், கிரேக்கம் ஆகியவற்றைப் போன்று தமிழ் மொழி (வேறு மொழிவழி வராத) மூல மொழியாகவும் செம்மையானதாகவும் உள்ளது" (*"The Tamul language like the Sanskrit, Hebrew, Greek & is an original and perfect language..."*) என இத்திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய நோக்குடன் வட்டுக்கோட்டை செமினரியில் தமிழுக்கு ஒரு பேராசிரியர் நியமிக்கப்பட்டு, நன்னூல், திருக்குறள், தத்துவக்கட்டளை போன்ற நூல்கள் பாடநூல்களாகப் பயன்படுத்தப்பட்டன. இங்கு கல்வி கற்ற ஒருவர் பின்னர் தமிழ்நாட்டில் ஏட்டு வடிவில் அழியும் நிலையில் இருந்த பழந்தமிழ் நூல்களைத் தேடிப்பெற்று உரையுடன் அச்சிட்டார். அவர்தான் சி.வை. தாமோதரம்பிள்ளை.

தமிழை நவீனமயப்படுத்த உதவும் வகையில் அமெரிக்க மிஷன் 1841 இல் உதயதாரகை என்ற செய்தித்தாளை வெளியிடத் தொடங்கியது. இதுவே தமிழில் வெளியாகிய முதலாவது செய்தித்தாள் என்ற சிறப்பைப் பெறுகின்றது. காலனித்துவம்

அறிமுகப்படுத்திய புதிய மேலைத்தேச அறிவைத் தமிழ்மூலம் பரப்புவது இச் செய்தித்தாளின் முக்கிய நோக்கம் என்பது முதலாவது இதழிலே கூறப்பட்டது:

*"எங்கள் தேசத்தவர்கள் பலவிதமான அறிவிலுந்தேறவேண்டுமென்ற*

*விருப்பத்தினால் இப்படிப்பட்ட பத்திரத்தைக் காலத்துக்குக் காலம்*

*அச்சடிப்பிக்கக் கையிட்டுக்கொண்டோம்."*
*(1841/ஜனவரி 7)*

ஆறுமுக நாவலர் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழ் உரைநடையை வளர்த்தும் தமிழில் சமய நூல்களை வெளியிட்டும் மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்தார்.

மொழியையும் மதத்தையும் இணைக்கும் போக்குத் தமிழ்நாட்டில் நீண்டகாலமாக இருந்துவந்துள்ளது. சைவ இலக்கியத்தில் இந்த இணைப்பை வெளிப்படையாகக் காணலாம். குமரகுருபரர் பாடிய மதுரைக்கலம்பகத்தில் வரும் ஒரு செய்யுள் இதனைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது:

*"தமரநீர்ப் புவனம் முழுதொருங்கீன்றாள்*

*தடாதகாதேவி என்றொரு பேர் தரிக்க வந்ததுவும்*

*தனிமுதல் ஒருநீ சவுந்தரமாறன் ஆனதுவும்*

*குமரவேள் வழுதி உக்கிரன் எனப் பேர் கொண்டதும்*

*தண்டமிழ் மதுரம் கூட்டுணவெழுந்த வேட்கையாலெனில் இக்*

*கொழிதமிழ்ப் பெருமை யாரறிவார்..."*

(சிவன் மதுரையில் சவுந்தரமாறனாகவும், பார்வதி தடாதகாதேவியாகவும் முருகன் உக்கிரவழுதியாகவும் பிறந்தது தமிழின் சுவையை நுகர்வதற்காகவே.)

இத்தகைய இணைப்பும் தமிழ்மொழியின் பெருமை பற்றி எடுத்துரைப்பதும் 19 ஆம் நூற்றாண்டு வரை தேசியவாதப் பண்புகளைக் கொண்டிருக்கவில்லை எனலாம்.

அதாவது, தமிழ் பேசியவர்கள் தங்கள் மொழி பிற மொழிகளைவிடச் சிறந்தது என்றோ ("யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" - பாரதி), மிகவும் தொன்மையானது என்றோ சொல்லிக்கொள்ளும் வழக்கு இல்லை. இவ்வாறான போக்கு 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தேசியவாதக் கருத்துகள் ஐரோப்பாவில் இருந்து பரவிய பின்பே தொடங்கியது.

இதே காலத்தில் இதே வகையான தமிழ் உணர்வு தமிழ்நாட்டிலும் எழுச்சி பெற்றிருந்தது. இதனை நோக்கும்போது ஒன்றைக் கவனிக்க முடிகின்றது. யாழ்ப்பாணத்து அறிஞர்களும் தமிழ்நாட்டு அறிஞர்களும் பகிர்ந்துகொண்ட அனுபவமாக (Shared Experience) இந்த எழுச்சி அமைந்தது. ஆறுமுக நாவலர் (அவருக்குப் பின் சிவசங்கர பண்டிதர், செந்திநாத ஐயர், கதிரவேல்பிள்ளை ஆகியோர்) யாழ்ப்பாணத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் பொதுவான ஒரு பணியில் ஈடுபட்டுத் தமிழ் உரைநடையை வளர்த்தார். சி.வை. தாமோதரம்பிள்ளையும் (அவரைப் போன்று கனகசபைப்பிள்ளை, சபாபதி நாவலர், கனகசுந்தரம்பிள்ளை ஆகியோர்) தமிழ்நாட்டு உ.வே. சாமிநாதையரும் ஒரு பொதுப் பணியில் செயலாற்றிப் பழந்தமிழ் நூல்களை அச்சிட்டனர். ஆனால் 20 ஆம் நூற்றாண்டில் இரண்டு இடங்களும் வேறுபட்ட திசைகளில் செல்வதைக் காண்போம்.

யாழ்ப்பாணத்தில் 19 ஆம் நூற்றாண்டு முடிவடைந்தபோது தமிழ் உணர்வு நன்கு வளர்ந்திருந்ததைக் குறிக்கும் நிகழ்வாக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் 1898 இல், பின்னர் பிரசித்தி பெறும் மதுரைத் தமிழ்ச் சங்கம் 1901 இல் அமைக்கப்படும் முன், நிறுவப்பட்டமை கவனிக்கத்தக்கது.

இத்தமிழ் உணர்வு 20 ஆம் நூற்றாண்டு உதயமாகியபோது தேசியவாதப் பண்புகளைப் பெறத் தொடங்குவதைக் காணலாம். இதற்கு ஒரு காரணம் திராவிட மொழிகள் பற்றிய ஆய்வு வெளிப்படுத்திவந்த சில கருத்துகள் எனலாம். இக் கருத்துகள் மொழியியல் பற்றியவையாக இருந்தபோதிலும், மொழியும் இனமும் சமன்படுத்தப்பட்டு, தமிழ் இனம் பற்றிய கருத்துகளாக மாறின. இதற்கு ஓர் எடுத்துக்காட்டைக் கொடுத்து, எவ்வாறு தமிழ் இன உணர்ச்சி வளரத்தொடங்கியது என்பதைக் காட்டலாம்.

பொன்னம்பலம் அருணாசலம் 1901 இல் நடைபெற்ற இலங்கை மக்கள் தொகையின் கணக்கெடுப்புக்கான அறிக்கையை (Report of the 1901 Ceylon Census of Popula tion) எழுதி வெளியிட்டபோது, அதில் தமிழ் இனம் பற்றி அவர் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது: "திராவிட இனம் ஆரியருக்கு முன்னரே இந்தியாவுக்கு வந்தது; அந்த இனம் பபிலோனியாவின் (இன்றைய ஈராக் நாட்டில்) தொன்மையான நாகரிகத்தை உருவாக்கியது; அந்த இனத்தின் வழித்தோன்றல்களுள் மொக்யர் (Magyars - ஹங்கேரி நாட்டு மக்கள்), ஒத்தொமன் துருக்கியர் (Ottoman Turks - துருக்கி நாட்டு மக்கள்) அடங்குவர்; இந்த இனத்தின் மூத்த, மிகுந்த செல்வாக்குள்ள பிரதிநிதிகள் தமிழர் ஆவர் ("The Tamils are the oldest and most influential representative of the race.")."

யாழ்ப்பாணத்தில் 19 ஆம் நூற்றாண்டு முடிவடைந்தபோது தமிழ் உணர்வு நன்கு வளர்ந்திருந்ததைக் குறிக்கும் நிகழ்வாக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் 1898 இல், பின்னர் பிரசித்தி பெறும் மதுரைத் தமிழ்ச் சங்கம் 1901 இல் அமைக்கப்படும் முன், நிறுவப்பட்டமை கவனிக்கத்தக்கது.


உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance.*

Thursday, April 21, 1842. [Vol. II. No. 8.

(Historical sketch of the Pandian kingdom)

Life of Mohammed.

*Mohammed gains some followers—Challenged to work a miracle—His Reply—The Koran the grand Miracle of his Religion.*

உதயதாரகை பத்திரிகையின் பக்கமொன்று

**Image Source : noolaham.net**

இதை ஒத்த கருத்து 1905 இல் வெளியிடப்பட்ட யாழ்ப்பாணம் பற்றிய ஒரு கைநூலிலும் தெரிவிக்கப்பட்டது (*A Handbook to the Jaffna Peninsula by S. Katiresu*). இதில், "திராவிட இனங்களுள் தமிழரே முன்னிலையில் நிற்பவர்கள்" என்ற கூற்றைக் காணலாம் ("*The Tamils are the foremost of the Dravidian races*").

இத்தகைய இன உணர்வைத் தூண்டும் வகையில் 19 ஆம் நூற்றாண்டில் வேறும் சில காரணிகள் செயற்பட்டன. அவற்றுள் முக்கியமான இரண்டை இங்கு குறிப்பிடலாம்.

ஐரோப்பியப் பிரமுகர்கள் சிலர் தமிழர்களின் முயற்சி, கடின உழைப்பு, ஆங்கில அறிவு ஆகியவற்றைப் புகழ்ந்து எழுதியமை ஒரு காரணி எனலாம். இதற்குச் சான்று பகரும் வகையில் முன்னர் குறிப்பிடப்பட்ட, கதிரேசு எழுதிய, யாழ்ப்பாணம் பற்றிய கைநூலில் சில கூற்றுகள் அமைகின்றன. திராவிட மொழிகளின் வேறான பண்புகளை எடுத்துரைத்த கால்டுவெல், "இந்துக்களுள் மிகவும் கூடுதலான முன்னேற்ற முயற்சியும் விடாமுயற்சியும் உடைய இனம் தமிழர்கள்" ("*...the Tamilians...the most enterprising, and persevering race of Hindus...*") என்று எழுதியுள்ளார் (அவர் இந்துக்கள் என்று கூறும்போது பொதுப்பட இந்தியர்களைக் குறிப்பிடுகிறார் என நினைக்கிறேன்). இதனைக் கதிரேசு எடுத்துக்கூறியுள்ளார்.

கால்டுவெல் எழுதியது பொதுவாகத் தமிழர்களைப் பற்றியது. இலங்கையில் பணியாற்றிய சில ஆங்கிலேய அதிகாரிகள் குறிப்பாக இலங்கைத் தமிழர் பற்றி இதை ஒத்த கருத்தைத் தெரிவித்திருந்தனர். இமெர்ஸன் ரெனென்ற் (Emerson Tennent, 1809 - 1869) இலங்கையில் காலனித்துவச் செயலாளராக (Colonial Secretary) செயலாற்றிய காலத்தில் பெற்ற அனுபவங்களைப் பற்றி எழுதும்போது, யாழ்ப்பாணத் தமிழர்கள் வெளிப்படுத்திய கடின உழைப்புப் பற்றி எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராகப் பணியாற்றிய ஈவர்ஸ் (R.W. Ievers) என்ற ஆங்கிலேயரும் யாழ்ப்பாணத்தவரின் கடின உழைப்பையும் வீண்செலவு செய்யாத பண்பையும் போற்றியிருந்தார் ("*The Jaffnese are a singularly industrious and economical race*").

இவற்றை எல்லாம் மேற்கோள் காட்டி எழுதிய கதிரேசு, "வெளியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்றோர் யாழ்ப்பாணத் தமிழர்தம் விடாமுயற்சியையும் கடின உழைப்பையும் புகழ்ந்துரைத்துள்ளனர் ("*...even the most casual travellers have borne such glowing testimony to the perseverance and industry of the Jaffna Tamil*")" என்று அழுத்தியபின், "தமிழர் சிக்கனமாக நடப்பவர்கள், சட்டத்தை மதிப்பவர்கள், விஷயங்களை நன்கு மதிப்பிடும் திறன் படைத்தவர்கள், புத்திகூர்மை உடையவர்கள், கல்வி கற்றவர்கள், நன்றியுடையவர்கள் ("*The Tamils are besides a thrifty, law abiding, shrewd, intelligent, educated and grateful people*")" என்று கூறித் தன் உரையை முடித்துள்ளார்.

இத்தகைய மதிப்பீடு 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே ஆங்கிலக் கல்விகற்றோர் மத்தியில் இருந்தது என்பதில் ஐயமில்லை. இதனை மேலும்

வலியுறுத்தும் வகையில் இன உணர்வை வளர்த்த இன்னொரு காரணி 'தேசிய வாழ்க்கையில்' யாழ்ப்பாணத்தவர் ஈட்டிய சாதனைகள் எனலாம். ஆங்கிலப் பாடசாலைகளில், குறிப்பாக வட்டுக்கோட்டை செமினரியில், கல்வி கற்ற இளைஞர்கள் யாழ்ப்பாணத்துக்கு வெளியே சென்று, அரசாங்கப் பதவிகளைப் பெற்று, தம்மவர்க்குப் பெருமைதேடிக் கொடுத்தனர். இவர்கள் கொழும்புக்கு மட்டுமல்லாது, தென்னிந்தியா, மலாயா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கும் சென்று யாழ்ப்பாணம் சிறப்புப் பெற உதவினர்.

யாழ்ப்பாணத்தவரைப் பெருமைப்பட வைத்த பிற நிகழ்வுகளுள் குறிப்பிடத்தக்கவை பிற இலங்கை இனத்தவருக்கு முன் யாழ்ப்பாணத் தமிழர் ஈட்டிய சில சாதனைகள். இவை தமிழருக்குக் கிடைத்த பட்டங்கள் அல்லது பதவிகள் தொடர்பானவை. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் இவை இலங்கையர்க்கு இலகுவாகக் கிடைக்காதிருந்த நிலையில் முதல் முறையாக அவை தமிழருக்குக் கொடுக்கப்பட்டமை பெருமைப்படும் விஷயமாகியது. இன்றுகூட இது பற்றிப் பேசப்படுகின்றது.

முதலில் கல்வித் துறையில் வெற்றிகரமாக முன்னேறி ஈட்டிய சில சாதனைகளைப் பார்க்கலாம். மேலைத்தேச முறைப்படியான உயர்கல்வியை 19 ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டை செமினரியில் பெறமுடிந்தது. அதை ஒத்த கல்வி வசதி இலங்கையில் வேறிடங்களில் இருக்கவில்லை. சென்னையில் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் 1857 இல் தனது முதலாவது பரீட்சையைப் பட்டமளிப்புக்காக நடத்தியபோது அதில் இருவர் மட்டுமே சித்தியடைந்து சென்னைப் பல்கலைகழகத்தின் முதல் பட்டதாரிகள் என்ற சிறப்பைப் பெற்றனர். அந்த இருவரும் யாழ்ப்பாணத்தவர், வட்டுக்கோட்டை செமினரியில் படித்து முடித்துச் சென்னைக்குச் சென்று பல்கலைக்கழகத்தின் பரீட்சையை எழுதியவர்கள். ஒருவர் சி.வை. தாமோதரம்பிள்ளை, மற்றவர் கரொல் விசுவநாதபிள்ளை.

மானிப்பாயில் அமெரிக்க மிஷனரியாகிய வைத்தியர் சாமுவேல் கிறீன் தலைமையில் இயங்கிய மருத்துவ நிறுவனம் மேலைத்தேச முறையிலான நவீன மருத்துவப் பயிற்சியை 1848 இல் இருந்து வழங்கியது. இந்த நிறுவனம் கொழும்பில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் முன் தொடக்கப்பட்டது. இங்கு பயிற்சிபெற்று வைத்தியர்களான சிலர் அரசாங்க சேவையில் பதவிபெற்று யாழ்ப்பாணத்துக்கு வெளியே சென்று தொழில்புரிந்தனர். கிறீன் வைத்தியர் தொடக்கிய முதலாவது வகுப்பில் சேர்ந்து வைத்தியராகிய 'Joshua Danforth' என்பவர் (இவர் தன் பெயரைத் தமிழில் 'டன்வதர்' என எழுதினார்) ஒரு சிறந்த அறுவை சிகிச்சை வைத்தியராகவும் மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பவராகவும் விளங்கினார். இவருடைய திறமையைக் கண்டு மதிப்பளித்த கிறீன் வைத்தியர் இவருக்கு M.D. (Doctor of Medicine) பட்டம் பெறும் தகைமை இருப்பதாகப் பரிந்துரைத்து, வேண்டிய தகவல்களை நியூ யோர்க்கில் இருந்த மருத்துவக் கல்லூரியாகிய 'College of Physicians and Surgeons' (இது தற்போது Columbia University Post - Graduate School of Medicine) நிறுவனத்துக்கு அனுப்பிவைத்தார். அவர் அனுப்பிய தகவல்களை வைத்து அந்த நிறுவனம் 'Danforth' வைத்தியருக்கு M.D. வழங்கியது. M.D. பட்டத்தைப் பெற்ற முதலாவது இலங்கையர் இவர் எனலாம்.

இதற்குப் பின், 1901 இல் யாழ்ப்பாணத்தவராகிய 'Samuel Chelliah Paul' இங்கிலாந்தின் மருத்துவப் பட்டமாகிய F.R.C.S. (Fellow of the Royal College of Surgeons) விருதை எடுத்த முதலாவது இலங்கையராகச் சிறப்புப் பெற்றார்.

உயர் நிர்வாகப் பதவிகளைப் பொறுத்தமட்டில் இலங்கை சிவில் சேவை (Ceylon Civil Service) மிக மதிப்புவாய்ந்ததாக இருந்தது. இது 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் கையில் மட்டும் இருந்தபோது, 1875 இல் சிவில் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த முதலாவது இலங்கையராகப் பொன்னம்பலம் அருணாசலம் பிரபலம் அடைந்தார்.

இதே காலமளவில் (1878) அருணாசலத்தின் மாமனார் முத்து குமாரசுவாமி இன்னொரு 'முதல்' சாதனையை ஈட்டினார். இங்கிலாந்தின் மன்னரால்/ மகாராணியால் வழங்கப்படும் 'சேர்ப் பட்டம்' (Knighthood) இவருக்குக் கொடுக்கப்பட்டது. இப்பட்டத்தை முதலில் பெற்ற கிறிஸ்தவர்/ யூதர் அல்லாத பிரமுகர் இவர் என்ற கௌரவம் இவருக்குக் கிடைத்தது.

இத்தகைய சிறப்புகள் பிற இலங்கையருக்கு முன் யாழ்ப்பாணத்தவருக்குக் கிடைத்தமை எவ்வாறு யாழ்ப்பாண வரலாற்றின் போக்கினை விளங்கிக்கொள்ள உதவுகின்றது? இவற்றுக்கும் மொழிசார் தேசியவாதத்துக்கும் தொடர்பு உண்டா? பின் எழும் பிரச்சினை தொடக்கத்தில் யாழ்ப்பாணப் பிரச்சினை? ஆங்கிலம் கற்ற தமிழ் மத்திய வகுப்பினர் பிரச்சினை? தமிழர் பிரச்சினை? இப்படியான வினாக்கள் இக்கட்டத்தில் எழுகின்றன. இவற்றைப் பின்னர் நோக்கலாம்.

# பயங்கரவாதத் தடைச் சட்டமும் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டமும்

1978 ஆம் ஆண்டு அன்றைய ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஆட்சியாளர்களால் இயற்றப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு கடந்த நாலு தசாப்தங்களுக்கு மேலாக இருந்துவரும் 'பயங்கரவாதத் தடைச்சட்டம்: இல – 48/1979' தமிழ் வாசகர்களுக்கு ஒன்றும் புதுமையான ஒரு சட்டம் அல்ல. அது முதலில் ஒரு தற்காலிக தேவைக்கான சட்டமாகக் கொண்டுவரப்பட்டுப் பின்னர் நிரந்தரமான ஒரு சட்டமாக (1982) மாற்றப்பட்டது. பல்வேறு உலக நாடுகள் உட்பட உள்நாட்டு மக்களாலும் எதிர்க்கப்பட்டு வந்ததன் காரணமாக அவ்வப்போது சில திருத்தங்களுக்கான முயற்சிகள் நடந்தபோதும், அதற்குப் பதிலாக ஒரு திருத்தமாக 2022 இல் தயாரிக்கப்பட்ட 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' என்ற ஒரு 'சட்டவரைபு – 2023' வெளியிடப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, இன்னமும் பழைய பயங்கரவாதத் தடைச் சட்டமே அரசாங்கத்தால் பயன்படுத்தக்கூடிய வகையில் நடைமுறையில் உள்ளது. அதை ஓர் அரசாங்கம் தனது நடவடிக்கைகளுக்காகக் கைகளில் எடுக்கின்றதா, இல்லையா என்பதைப் பொறுத்தே அது அதிகமாகப் பேசப்படும் சூழல் உருவாகிறது. இப்போது அத்தகைய ஒரு நிலை நிலவவில்லை என்றாலும் கூட, இந்தச் சட்டம் பற்றிய, மக்களது ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்த அரசுக்கு அது வழங்குகின்ற அதிகாரங்கள் பற்றிய உரையாடல் அவசியமானது.

அந்த அடிப்படையில், இந்த 'இலங்கை: பயங்கரவாதத் தடைச்சட்டம் – ஒரு விமர்சனரீதியான மதிப்பீடு' என்றநூலிலுள்ள கட்டுரைகளை நமது 'எழுநா' வாசகர்களுக்காக அதே பெயரில் தொடராக இங்கு தமிழில் தருகிறோம். இந்த நூல், 'மனித உரிமைகளுக்கும் அதன் வளர்ச்சிக்குமான மையத்'தைச் (Centre for Human Rights and Development – CHRD) சேர்ந்த, பேராசிரியர் பேற்றன் பஸ்தியாம்பிள்ளை, றோகண எதிரிசிங்க, என். கந்தசாமி ஆகிய அதன் அமைப்பாளர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட, நாட்டின் முக்கிய ஆளுமைகளால் எழுதப்பட்ட சட்டம் பற்றிய விமர்சனபூர்வமான பத்து ஆக்கங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலாகும். எழுநா வாசகர்களுக்கு, நமது ஏனைய நூல்கள் போலவே இதுவும் இன்னொரு முக்கிய நூலாக அமையும் என்று நம்புகிறோம்.

***ஆங்கில மூலம்: சாலிய எதிரிசிங்க***

**எஸ்.கே. விக்னேஸ்வரன்**



எஸ்.கே. விக்னேஸ்வரன், எழுபதுகளின் பிற்கூறுகளில் சிறுகதை எழுத்தாளராக ஈழத்தின் எழுத்துத்துறைக்குள் அறிமுகமானவர். வடமராட்சியிலுள்ள அம்பன் கிராமத்தைச் சேர்ந்த இவர், சிறுகதைகள், கவிதைகள் எழுதுவதுடன் மட்டுமன்றி, இலக்கியம், அரசியல் சார்ந்த கட்டுரைகள் எழுதுவதிலும், ஆங்கிலத்தில் வரும் முக்கியமான எழுத்துகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதிலும் தொடர்ந்து ஈடுபாட்டுடன் இயங்கி வருபவர். தொண்ணூறுகளில் கொழும்பிலிருந்து வெளியான 'சரிநிகர்' வாரப்பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகவும், பின்னர் கனடாவில் வெளியான 'தீபம்' வாரப்பத்திரிகையின் ஆசிரியராகவும் செயற்பட்டு வந்தவர். சரிநிகரில் தொடராக வெளிவந்த அவரது மொழிபெயர்ப்பு நூலான 'குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே' என்ற பெற்றோருக்கான வழிகாட்டிநூல் இன்றுவரை பல பதிப்புகளைக் கண்டுள்ளது. இப்போது தாய்வீடு இதழில் அவரது 'பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே' என்ற இன்னொரு மொழிபெயர்ப்பு நூல் தொடராக வெளிவந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே சரிநிகரில் வெளிவந்து பாதியில் நின்றுபோன மொழிபெயர்ப்பு நூலான, 'தலைமறைவு வாழ்க்கை' என்ற, மறைந்த மதிப்புக்குரிய றெஜி சிறிவர்த்தன அவர்களது நூல், அண்மையில் வெளியாகியுள்ளது.

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் (MBA) பட்டம்பெற்ற இவர் இப்போது கனடாவில் வசித்து வருகிறார்

ஒரு முற்குறிப்பு: சென்ற இதழில் வந்த இந்தத் தொடர் தொடர்பான அறிமுகக் குறிப்பில் “இன்னமும் பழைய பயங்கரவாதத் தடைச் சட்டம் அரசாங்கத்தால் பயன்படுத்தக் கூடிய வகையில் நடைமுறையில் உள்ளது. அதை ஓர் அரசாங்கம் தனது நடவடிக்கைகளுக்காகக் கைகளில் எடுக்கின்றதா இல்லையா என்பதைப் பொறுத்தே அது அதிகமாகப் பேசப்படும் சூழல் உருவாகிறது.” என்று குறிப்பிட்டிருந்தோம். இப்போது அந்தச் சட்டத்தை இன்றைய ‘தேசிய மக்கள் சக்தி’ அரசாங்கமும் நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கும், அதன் மக்களது சுதந்திரத்துக்கு எதிரான மட்டுமீறிய போக்குக்கும், உள்நாட்டிலும் சர்வதேசிய ரீதியிலும் எழுந்த கண்டனங்களையும் எதிர்ப்புகளையும் அடுத்து, அதற்கு மாற்றாக ‘பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்’ (2023) என்று ஒரு சட்டப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் பிரதி வர்த்தமானியிலும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதிலும் சர்ச்சைக்குரிய பல விடயங்கள் இருந்ததால் அது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு இன்னமும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சட்டமாக நிறைவேற்றப்படாமல் நிலுவையில் இருக்கிறது. இந்த நிலையில் இன்று தோன்றியுள்ள போதை வஸ்துகள் தொடர்பான பிரச்சினைகளை ஒட்டி அதே ‘பயங்கரவாதத் தடைச் சட்டம்’ மீண்டும் நடைமுறையில் பயன்படுத்தப்படுவது தொடங்கியுள்ளது. போதைப் பொருள் தொடர்பான நடவடிக்கைகளில், அவற்றை எதிர்கொள்ளுவதற்குப் பொருத்தமானதாக உள்ள சட்டம் அதுவே என்ற நோக்குடன் மீண்டும் பயங்கரவாதச் சட்டத்தின் சில அம்சங்கள் நடைமுறையில் பாவிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்தத் தொடரில் வரும் கட்டுரைகள், இந்த மொழிபெயர்ப்பை எழுநாவில் ஆரம்பிக்க முடிவு செய்த காலத்தில் இருந்ததை விடவும், இப்போது அதிக முக்கியத்துவம் மிக்கவையாக அமையும் என்று நம்புகிறோம்.

இந்தத் தொடரின் இரண்டாவதாக வரும் இந்தக் கட்டுரை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் சட்ட ரீதியான தன்மைகளைப் பற்றிப் பேசுவதாக அமைகிறது. இக் கட்டுரையை, இந்தத் தொகுப்புக்காக எழுதிய ’சாலிய எதிரிசிங்க’ அவர்கள் ஒரு சட்டத்தரணியாகவும், மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளராகவும் இயங்கி வருபவர். மனித உரிமைகள், மனித உரிமைகளுடன் சம்பந்தப்பட்ட சட்டரீதியான சவால்கள் என்பவை தொடர்பாக பல ஆய்வறிக்கைகளையும் இவர் எழுதியுள்ளார்.

## 1. அறிமுகம்

பயங்கரவாதத் தடுப்புச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் (இலக்கம்: 48/1979 - PTA) போலவே, பொதுசன பாதுகாப்புக் கட்டளைச் சட்டமும் (இலக்கம்: 25/1947 - PSO), அதன் பெயரிலேயே வெளிப்படையாகத் தெரிவது போல, இலங்கையின் பொதுமக்களது பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்குகின்ற ஒரு சட்டமாகும். உண்மையில் இந்தப் பொதுசன பாதுகாப்புக் கட்டளைச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிட வெகு காலத்துக்கு முன்னர் சுதந்திரத்துக்கு முன்னான காலத்தில் கொண்டுவரப்பட்டிருந்த ஒரு சட்டமாகும். இந்தச் சிறிய கட்டுரை, (மேற்குறிப்பிட்ட) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் பற்றிச் சற்று விரிவாகவும், அதன் கீழ் கொண்டுவரப்பட்ட சட்ட நடைமுறைகள் தொடர்பான சரத்துகள் (Regulations) பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மீது எவ்வகையான தாக்கங்களைச் செலுத்தக் கூடியவையாக இருந்தன என்ற சந்தர்ப்பங்களையும் கவனத்திற் கொண்டு அதனை ஆய்வுக்குள்ளாக்குகிறது.

இங்கே பயங்கரவாதத் தடைச்சட்டம் பற்றிய ஓர் ஆய்வுக்கான முயற்சி செய்யப்படவில்லை. அந்தச் சட்டத்தின் பகுதிகள் தொடர்பாக இங்கே பேசப்படுவதெல்லாம், இந்தக் கட்டுரையிலுள்ள உள்ளடக்கங்களை ஒரு வாசகர் இலகுவாக உள்வாங்கிக் கொள்வதற்கான வசதியை வழங்குவதற்காக மட்டுமே. அது பற்றிய வேறு பல அம்சங்கள் இந்த நூலின் வேறு இடங்களில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒரு தற்காலிக தேவைக்கான சட்டமாக, மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே நடைமுறையில் இருக்கும் ஒரு சட்டமாகவே கொண்டுவரப்பட்டது. இருந்தபோதும், 1982[1] இல் இந்தத் ‘தற்காலிக’ என்ற சொல் பாராளுமன்றத்தால் நீக்கப்பட்டு அது நாட்டுக்கான ஒரு நிரந்தரச் சட்டமாக மாற்றப்பட்டது.

இந்தச் சட்டத்துக்கான நீண்ட தலைப்பு: “எந்தவொரு தனிநபரோ, தனிநபர்களைக் கொண்ட குழுவோ, இலங்கைக்குள்ளோ அல்லது இலங்கைக்கு வெளியேயோ மேற்கொள்ளும் பயங்கரவாதச் செயல்களையும், சட்டவிரோதச் செயல்களையும் தடுப்பதற்கான தற்காலிக ஏற்பாடாக அமையும் சட்டம்.” என்று கூறுகிறது. இருப்பினும், இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம், ‘பயங்கரவாதம்’ என்று அழைக்கப்படும் ஒரு குற்றத்தைத் தெளிவாக வரையறுத்திருக்கவில்லை. உண்மையில் அது, குறிப்பிட்ட சில நபர்களால் செய்யப்படும் கொலை அல்லது கொலை சம்பவிக்கக் கூடிய விதத்திலான செயலைச் செய்தல், பயங்கரவாத அச்சுறுத்தல்களை மேற்கொள்ளல், அரசாங்கச் சொத்துகளைக் கொள்ளையடித்தல், சட்டவிரோதமான துப்பாக்கிகளைச் சேகரித்தல் போன்ற வகையான குற்றங்களைச் செய்யும் செயல்களையே அது

'பயங்கரவாதம்' என்று கருதுகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விளக்கப் பிரிவு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள எந்தவொரு குற்றத்தையும் அது செய்யப்பட்டதாகக் குறிக்கும் போது அதைச் 'சட்டவிரோத நடவடிக்கை' என்றே வரையறை செய்கிறது.

'பயங்கரவாதத் தடைச் சட்டம்' சில குற்றங்களை வரையறை செய்வது போல 'பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம்' எத்தகைய குற்றங்களையும் வரையறை செய்யவில்லை. அது செய்வதெல்லாம், ஜனாதிபதிக்கு (பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பகுதி - 2 இன் விதிகளுக்கமைய) அவரசர காலச் சட்டத்தைச் சட்டபூர்வமாகப் பிரகடனப்படுத்தவும், அதன் பிறகு வேண்டிய விதிமுறைகளை உருவாக்கவும் வழிவிடுவது மட்டும் தான். அந்த விதிமுறைகளின் அடிப்படையில் குற்றங்கள் கண்டறியப்படுவதற்கும், தண்டனைகள் வழங்கப்படுவதற்குமான பரிந்துரைகள் வழங்கப்பட முடியுமான நிலை, அவசரகால விதிமுறைகள் ஜனாதிபதியால் இயற்றப்பட்டவுடன் அமலுக்கு வருகின்றன. கூடவே, இதன்மூலம் அரசியலமைப்பின் விதிகள் தவிர்ந்த வேறு எந்தச் சட்டத்தையும் மீறவோ, திருத்தவோ அல்லது இடைநிறுத்தவோ செய்யக்கூடிய அதிகாரம் அவரது (ஜனாதிபதியின்) கைகளுக்கு வருகிறது.

இது தவிர, பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பகுதி - 3 இல், பொது ஒழுங்கைப் பராமரிப்பதில் காவல் துறைக்கு உதவுவதற்காக, ஜனாதிபதிக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கவும், ஆயுதப்படைகளை அழைக்கவுமான விதிகள் உள்ளன. இவை தொடர்பான விடயங்கள் அனைத்தும் இந்த அத்தியாயத்தில் ஓரளவு விரிவாகக் கையாளப்பட்டுள்ளன.

2006 டிசம்பரில் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் [2] கீழ் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டத்தின் மூலமாகத்தான் முதன் முதலாக 'பயங்கரவாதம்' என்ற ஒரு குற்றமும், 'ஒரு குறிப்பிட்ட பயங்கரவாத நடவடிக்கை' என்ற குற்றமும் நடைமுறைக்கு வருகின்றன. பின்னால் வந்த இந்தக் 'குற்றம்', பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாகவே சேர்க்கப்பட்டுள்ளது. இது பற்றிப் பின்னர் பார்க்கலாம்.

இந்தக் கட்டுரையில், இதன் ஆசிரியரால் எழுதப்பட்ட பல்வேறு கட்டுரைகளிலிருந்து சுருக்கப்பட்ட, சுருக்கப்படாத பகுதிகளையும், 'அவசரகாலச் சட்டம்' என்ற தலைப்பிலான, இலங்கை: மனித உரிமைகளின் நிலை - 2006, இலங்கை: மனித உரிமைகளின் நிலை - 2007 ஆகிய (வெளியீடு: 'Law and Society Trust, 3, Kynsey Terrace, Colombo - 8) பிரசுரங்களிலும் காணலாம்.

## 2. அவசரகாலச் சட்டங்களின் நோக்கமும், கட்டுப்பாடும், சட்ட அடித்தளமும்

### 2.1. சட்ட விதிகளைச் செயற்படுத்தலும் அவற்றின் நோக்கமும்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டமும் [3] (PSO) அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள 76 [5],15 [6] ஆகிய பிரிவுகளும், அவசியமான அவசரகால விதிமுறைகளை உருவாக்குவதற்கான சட்ட ரீதியான அடிப்படையை அரசாங்கத்துக்கு வழங்குகின்றன.

முதலாவதாக, அவசரகால விதிமுறைகளை உருவாக்குவதற்கு முன்பாக ஜனாதிபதி ஒரு பிரகடனத்தை [7] - அதாவது பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டதின் பகுதி II இனைச் செயற்படுத்தப் போவதான பிரகடனத்தை - வர்த்தமானி மூலமாக பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். இந்தப் பகுதிதான் ஜனாதிபதிக்கு அவசரகால விதிமுறைகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை அளிக்கின்றது. இந்த அறிவிப்புச் செய்யப்பட்ட பின்னர் வரும் ஏதாவது ஒரு எதிர்காலத் தேதியில் இச்சட்டத்தின் பகுதி II இனை அவரால் செயற்படுத்த முடியும். ஆயினும், வழமையாக இந்தப் பிரகடனம் செய்யப்பட்ட அதே தேதியிலிருந்து பொதுசன பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் அந்தப் பகுதி நடைமுறைக்கு வருவது வழக்கமாக இருந்துவருகிறது.

இந்தப் பிரகடனத்தை அறிவிப்பது என்பது, பொதுவாக 'அவசரகாலச் சட்டப் பிரகடனம்' என்று அழைக்கப்படுகிறது.

அவசரகால விதிமுறைகள், ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட [8] தருணத்திலிருந்து நடைமுறைக்கு வருகின்றன. இந்த விதிமுறைகள், அரசியலமைப்பு விதிகள் [9] தவிர்ந்த அனைத்துச் சட்டங்களையும் மீறவோ, அல்லது அவற்றைத் திருத்தவோ வேண்டிய சட்டரீதியான அதிகாரங்களைக் கொண்டவையாக இருந்தன. இருப்பினும் அரசியலமைப்பு, அவசரகாலச் சட்டத்திற்கு அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள சில ஏற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும் செய்கிறது. அதாவது, சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில், அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள உத்தரவாதங்களான, அடிப்படை உரிமைகளாகக் கொள்ளப்படும் சிந்தனைக்கான சுதந்திரம், மத சுதந்திரம் [10], 'சித்திரவதை அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான கையாளுகைகள் [11] அல்லது தண்டனைகள் என்பவற்றிற்கான தடை, நியாயமான விசாரணைக்கான உரிமை [12], தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் [13] உத்தரவின் பேரிலன்றி மரண தண்டனை அல்லது சிறைத்தண்டனை மூலம்

தண்டனை வழங்குவதைத் தடை செய்தல், நிர்வாக அல்லது நிர்வாக அதிகாரத்தின் நடவடிக்கைகள் மூலம் அடிப்படை மனித உரிமை மீறப்படுவதற்கு எதிரான விசாரணைக்கும் தீர்வுக்குமான உரிமை [14] போன்றவை தவிர்ந்த பிற விடயங்களைக் கட்டுப்படுத்த அனுமதிக்கிறது.

## 2.2. பிரகடனத்தின் மீதான பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு

ஒரு பிரகடனத்தை வெளியிடுவதிலும் அதன் கீழ் அவசரகால விதிமுறைகளை உருவாக்குவதிலும், ஜனாதிபதி பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட சட்டமன்ற அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார். இதனால் பிரகடனம், அவசரகால விதிமுறைகளின் உள்ளடக்கம் ஆகிய இரண்டின் மீதும் பாராளுமன்றம் தனது கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் உள்ளன. ஜனாதிபதியால் செய்யப்பட்ட ஒரு பிரகடனம் பாராளுமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டும். தவிரவும் அந்தப் பிரகடனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள், பாராளுமன்றம் கூடாதபடி ஒத்திவைக்கப்பட்டிருந்தால், பிரகடனம் வெளியிடப்பட்ட பத்து நாட்களுக்குள் பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு ஜனாதிபதி கோரவேண்டும்.

இத்தகைய ஒரு பிரகடனம், பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பகுதி II இன் விதிகள் நடைமுறைக்கு வந்த 14 நாட்களுக்குள் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டால், ஒரு மாத காலத்திற்கு (ஒவ்வொரு முறையும்) மட்டும் செல்லுபடியாகும். அதன் பிறகு அது காலாவதியாகிவிடும். பிரகடனம் அவ்வாறு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படாவிட்டால், அது 14 நாட்களின் முடிவில் காலாவதியாகிவிடும் [15] அல்லது அது பாராளுமன்றத்தால் ரத்துச் செய்யப்பட்டதும் உடனடியாகக் காலாவதியாகும் [16].

அவசரகாலச் சட்டப் பிரகடனம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படாத போது அல்லது மீளப் பெறப்படும்போது, அந்தப் பிரகடனத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் போதான காலத்திய அவசரகாலச் சட்டவிதிகள் சட்ட ரீதியாகச் செல்லுபடியற்றவை ஆகிவிடுகின்றன. ஆயினும் அது தொடர்பாகச் செய்யப்பட்ட ஏதாவது நடவடிக்கைகள் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் [17]. தவிரவும் பாராளுமன்றம் அத்தகைய அவசரகால விதிகளை நீக்கவோ அல்லது திருத்தவோ முடியும் [18].

ஒரு பிரகடனம் நடைமுறைக்கு வந்த 14 நாட்களுக்குள் ரத்து செய்யப்பட்டாலோ அல்லது பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படாததால் பிரகடனம் காலாவதியானாலோ, அதைத் தொடர்ந்து முப்பது நாட்களுக்குள் பிறப்பிக்கப்பட்ட எந்தப் பிரகடனமும் அது பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படும் வரை நடைமுறைக்கு வராது [19]. இது, மேற்கொண்டு ஏதாவது பிரகடனங்களை வெளியிடுவதற்கான ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் மீது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடையை ஏற்படுத்துகிறது.

மேலும், அவசரகால விதியை நாடுவது (அவசரகால ஒழுங்குமுறை உருவாக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி கோருவது), பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதற்குரிய ஜனாதிபதியின் அதிகாரத்தில் கட்டுப்பாடுகளை விதிக்கிறது. இந்த விஷயம், 2005 இல் நடந்த ஒரு சம்பவம் தொடர்பாக 'அவசரகால ஆட்சியைக் கொண்டுவருதலும் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தின் மீதான கட்டுப்பாடுகளும்' என்ற துணைத் தலைப்பின் கீழ் நடந்த ஒரு நிகழ்வின் பின்னணியில், பின்னர் பரிசீலிக்கப்படும்.

## 2.3. வெளியொதுக்கும் (தவிர்க்கும்) சரத்துகள்

ஒரு பிரகடனத்தின் [20] அல்லது 'அவசரகால சட்ட ஒழுங்கு முறைகளின்' செல்லுபடியாகும் தன்மையை நீதிமன்றங்கள் ஆராய்வதைத் தவிர்க்கும் சரத்துகள் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தில் [21] இருக்கின்றன.

பிரகடனம் தொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ள (நீதிமன்றத் தலையீட்டை) வெளியொதுக்கும் அல்லது தவிர்க்கும் சரத்துகளின் (Ouster Clauses) செல்லுபடியாகும் தன்மை குறித்து உயர் நீதிமன்றத்திற்கு தீர்ப்பளிப்பதற்கான ஒரு வாய்ப்பும் இன்னும் கிடைக்கவில்லை. ஆனால் அவசரகால விதிமுறைகள் சம்பந்தமான வெளியொதுக்கும் சரத்துத் தொடர்பாக, அவசரகால விதிமுறைகளை ரத்துச் செய்யும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு இருப்பதாக அது தீர்ப்பளித்துள்ளது. அது மட்டுமல்லாமல், பல அவசரகால விதிமுறைகளை [22] அது ரத்துச் செய்தும் உள்ளது.

அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தத்திலும் பிரகடனம் தொடர்பான ஒரு வெளியொதுக்கும் சரத்து [23] இருக்கிறது. இருப்பினும், சில சூழ்நிலைகளில், மாகாணத்தில் தன் அதிகாரங்களை ஆளுநர் பயன்படுத்துவது தொடர்பான உத்தரவை ஜனாதிபதி வழங்குவதற்காகப் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தை பயன்படுத்தும் இடங்களிலும் இந்த 'வெளியொதுக்கல்' பொருந்தும் என்று தோன்றுகிறது.

மாகாண சபைகள் தொடர்பான வழக்கில் [24], மனுதாரர்கள் ஒரு குறிப்பிட்ட பிரகடனத்தை, பரந்த அளவிலான விடயப் பரப்புக்கு விசாலிப்பதன்

செல்லுபடியாகும் தன்மையை சவாலுக்கு உட்படுத்தினர். ஆயினும் உச்ச நீதிமன்றம் இந்தப் பிரச்சினையை மறுபரிசீலனை செய்வதற்கு மறுத்துவிட்டது. இதற்கான காரணமாக அது, வேறு பல காரணங்களுடன், இந்தக் குறிப்பிட்ட விடயத்தில் முழுமையான அல்லது ஏற்றுக் கொள்வதற்கேற்ற வாதத்திறமையை அவ்வாதங்கள் கொண்டிருக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியது.

### 3. 'அவசரகால ஆட்சி'யை நோக்கித் திரும்பலும், பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தின் மீதான கட்டுப்பாடுகளும்

உச்சநீதிமன்றத் தீர்ப்பு [25] அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம், முன்னர் கருதப்பட்டபடி 2006 இல் அல்ல, 2005 இலேயே முடிவடைகிறது என்பதாக அறிவித்ததைத் தொடர்ந்து, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 17, 2005 அன்று நடத்தப்பட்டது. ஐக்கிய மக்கள் முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் [2]6 திரு. மஹிந்த ராஜபக்ச அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று, இலங்கையின் புதிய நிர்வாக ஜனாதிபதியாக 19 நவம்பர் 2005 அன்று பதவியேற்றார்.

2005 ஆம் ஆண்டில், இரண்டு அவசரகால ஆட்சிக் காலங்கள் இருந்தன. அவசரகால ஆட்சியின் இரண்டாவது காலம் ஓகஸ்ட் 13, 2005 ஆம் தேதிய பிரகடனத்துடன் தொடங்கி, ஒவ்வொரு மாதமும் 13 ஆம் தேதி புதிய பிரகடனத்துடன் தொடர்ந்தது.

அதன்படி, நவம்பர் 13, 2005 இலும் ஜனாதிபதி குமாரதுங்கா பிரகடனத்தை மேற்கொண்டார். இந்தத் தேதியில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டு 22 நவம்பர் 2005 அன்று மீண்டும் கூடுவதாகத் திட்டமிடப்பட்டது. இந்தத் தேதி, பிரகடனம் செய்யப்பட்ட பத்து நாட்களுக்குள் இருந்தது. இருப்பினும், பிரகடனம் வெளியிடப்பட்ட 10 நாட்களுக்குள் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருந்தால், அரசியலமைப்பின் 155 (4) ஆவது பிரிவின்படி, பிரகடனம் வெளியிடப்பட்ட 10 நாட்களுக்குள் பாராளுமன்றத்தைக் கூட்டுவதை அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதி செயற்படுத்த வேண்டும்:

"அவ்வாறாக ஒரு (அவசரகாலப்) பிரகடனம் செய்யப்படும் போது, இந்தச் சட்டப் பிரிவின் பிற விதிகளுக்கு உட்பட்டு, அது பிறப்பிக்கப்பட்டதற்கான சந்தர்ப்பம் உடனடியாகப் பாராளுமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டும், அதன்படி - (ii) அத்தகைய பிரகடனம், அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் காலாவதியாகாத ஏதாவது ஒத்திவைப்பு அல்லது முடித்துவைப்பு மூலம் பிரிக்கப்பட்டால், பத்து நாட்களுக்குள் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான ஒரு பிரகடனம் வெளியிடப்படும்." (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது).

எனவே, அவசரகாலப் பிரகடனம் பிறப்பிக்கப்படும் போது, அரசியலமைப்பு விதிகள் அதில் தலையீடு செய்து, பிரகடனம் செய்யப்பட்ட 10 நாட்களுக்குள் பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டும் என்று கோருகின்றன என்பதை ஒருவரால் அறியமுடியும். இது, பாராளுமன்றத்தின் அரசியலமைப்பு ரீதியான கடமையான, ஒரு பிரகடனத்தினதும் அந்தப் பிரகடனத்தின் கீழ் செய்யப்பட்ட அவசரகால விதிமுறைகளின் உள்ளடக்கத்தினதும் மீதான தனது மேற்பார்வையையும் கட்டுப்பாட்டையும் பயன்படுத்துவதற்கான ஒரு ஏற்பாடாகும் [27].

இருப்பினும், மேலே குறிப்பிடப்பட்ட அரசியலமைப்பு வரம்புகள் இருந்தபோதிலும், ஜனாதிபதி ராஜபக்ச ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றம் [28] கூடவேண்டிய தேதியை 2005 நவம்பர் 21 நள்ளிரவு முதல் 2005 நவம்பர் 25 [29] வரை நீடித்து ஒத்திவைத்தார். இதன் மூலம் பாராளுமன்றம் மேற்குறித்த 10 நாட்களுக்குள் கூட்டப்பட வேண்டும் என்று ஏற்கனவே நவம்பர் 13, 2005 தேதியில் செய்யப்பட்டிருந்த பிரகடனத்திற்கு முரணாக, அது கூடுவதிலிருந்து தடுத்திருந்தார். இது தொடர்பாக, அவசரகாலப் பிரகடனம் பிறப்பிக்கப்பட்ட காலங்களில், நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு, அரசியலமைப்பு ஒரு வரம்பை விதிக்கிறது என்றும், 2005 நவம்பர் 21 முதல் 2005 நவம்பர் 25 வரை நாடாளுமன்றத்தை ஒத்திவைத்ததில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அரசியலமைப்பால் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீறிச் செயற்பட்டார் என்றும் வாதிக்கப்பட்டது.

முந்தைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தால் ஏற்கனவே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தை மாற்றியமைக்கும் நோக்கத்திற்காகவே இந்தப் பாராளுமன்ற ஒத்திவைப்பு நடவடிக்கை நடந்ததாகப் பரவலாக நம்பப்பட்டது. இப்படியான சூழ்நிலைமைகளில், பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்ற இரண்டாவது வரவுசெலவுத் திட்டத்தின் செல்லுபடியாகும் தன்மை குறித்த, பல சுவாரஷ்யமான கேள்விகள் எழுகின்றன. முக்கியமாக ஜனாதிபதி அரசியலமைப்பை வேண்டுமென்றே மீறினாரா என்பது குறித்தும் கேள்வி எழுப்பப்படுகிறது (ஆயினும், இந்தப் பிரச்சினைகளை இவ்விடத்தில் ஆராய்வது, இந்த ஆய்வறிக்கையின் எல்லைக்கு

அப்பாற்பட்டது என்பதால் தவிர்க்கப்படுகிறது).

13 நவம்பர் 2005 அன்று வெளியிடப்பட்ட பிரகடனத்தின் தன்மையைப் பொறுத்தவரை, அது நவம்பர் 25, 2005 [30] அன்று பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது என்பதாலும், அது பிரகடனத்திற்குப் பின்னான 14 நாட்களுக்குள் இருந்தது என்பதாலும், அது ஒரு மாத காலத்திற்குச் செல்லுபடியாகும் என்றுதான் சொல்ல வேண்டும்.

### 4. அவசரகால விதிமுறைகள்: பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் அவற்றின் தாக்கம்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இந்த நாட்டின் நிரந்தரச் சட்டமாகும். கூடவே, அதன் கீழ் உருவாக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான கைதுகள், தடுப்புக்காவல்கள், விசாரணைகள், தண்டனைகள் என்பவை தொடர்பாக, அது தன் சொந்த சட்ட ஆட்சியைக் கொண்டுள்ளது.

மறுபுறத்தில், பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிமுறைகள் நிரந்தரத் தன்மையைக் கொண்டவையல்ல. தவிரவும், அவற்றின் காலம் அவசரகாலச் சட்டம் நிலவும் காலத்திற்கு - குறிப்பாக, இந்த விதிமுறைகள் ஜனாதிபதியால் அல்லது பாராளுமன்றத்தால் ஏற்கனவே ரத்துச் செய்யப்பட்டிருந்தால் ஒழிய - (பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பகுதி II அமலில் உள்ள போது) மட்டுமே செல்லுபடியாகுபவை. முன்னர் குறிப்பிட்டது போல, பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட, அரசியலமைப்பின் விதிகளைத் தவிர்ந்த [31] வேறு எந்தச் சட்டத்தின் விதிகளும், மீறுதல், திருத்துதல் அல்லது இடை நிறுத்துதல் போன்ற சட்டபூர்வ நடவடிக்கைகளுக்கு உட்பட்டவை. ஆகவே, பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிமுறைகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிகளில், உருவாக்கப்பட்ட விதிமுறைகளைப் பொறுத்து தாக்கத்தை ஏற்படுத்தும் சட்டபூர்வ ஆற்றலைக் கொண்டுள்ளன. டிசம்பர் 2006 இல், ஜனாதிபதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு அவசரகாலச் சட்டவிதியை உருவாக்கினார். அந்த விடயம் கீழே கவனத்தில் எடுக்கப்படுகிறது.

டிசம்பர் 1, 2006 அன்று விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் [32] செயற்பாட்டாளர்களால் நடாத்தப்பட்ட பாதுகாப்புச் செயலாளர் மீதான படுகொலை முயற்சியைத் தொடர்ந்து, டிசம்பர் 6, 2006 அன்று ஜனாதிபதி அவசரகால (பயங்கரவாதத்துக்கும், குறிப்பிட்ட சில பயங்கரவாத நடவடிக்கைகளுக்குமான தடுப்பும் தடையும் சம்பந்தமான - Prevention and Prohibition) விதிமுறைகளை வெளியிட்டார். இந்த விதிமுறைகள் 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட விதிமுறைகள்' என்று பிரபலமாகக் குறிப்பிடப்பட்டன.

இந்த விதிமுறைகள் பல குற்றங்களை உருவாக்கியதுடன், அதன் விதிமுறை 6, நபர்கள் அல்லது நபர்களின் குழுக்கள் தனித்தனியாகவோ அல்லது பிற நபர்கள் மூலமாகவோ செய்யும் 'பயங்கரவாதம்', 'ஒரு குறிப்பிட்ட பயங்கரவாத நடவடிக்கை' அல்லது 'எந்தவொரு நபரோ, குழுவோ அல்லது நபர்களது கூட்டிலான குழுக்களால் செய்யப்பட்ட எந்தவொரு பயங்கரவாதச் செயல் அல்லது குறிப்பிட்ட ஒரு பயங்கரவாத நடவடிக்கையை முன்கொண்டு செல்லும் வேறு எந்த நடவடிக்கை' போன்றவற்றைத் தடைசெய்வதாக அமைந்தது.

ஒழுங்குமுறை 20 'பயங்கரவாதம்' மற்றும் 'குறிப்பிட்ட பயங்கரவாத நடவடிக்கை' என்ற சொற்களை விளக்கியது. மேலும் 'குறிப்பிட்ட பயங்கரவாத நடவடிக்கை' என்பதன் வரையறை 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு குற்றத்தை (சட்ட இல: 48/1979) உள்ளடக்கியது.

விதிமுறை 7, எந்தவொரு நபரும் கூட்டங்களில் பங்கேற்பதையோ, அல்லது ஒழுங்குமுறை 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களை மீறும் வகையில் செயற்படும் எந்தவொரு நபர் அல்லது நபர்களின் குழுக்களையோ, அல்லது அமைப்புகளில் சேருவதையோ அல்லது அடைக்கலம் கொடுப்பதையோ அல்லது ஊக்குவிப்பதையோ அல்லது ஆலோசனை வழங்குவதையோ தடைசெய்தது. இந்த ஒழுங்குமுறை, ஒழுங்குமுறை 6 இனை மீறிய நபர்களுக்கு சட்ட உரிமைகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதைக் கூடத் தடை செய்வதாகத் தெரிகிறது.

விதிமுறை 8, விதிமுறைகள் 6 மற்றும் 7 இனை மீறும் நபர்கள் அல்லது நபர்களின் குழுக்களுடன் எந்தவொரு பரிவர்த்தனையிலும் ஈடுபடுவதைத் தடை செய்தது. பரிவர்த்தனைகளில், நன்கொடை அளிப்பதோ விற்றல் வாங்குதல் செய்வதோ, நிதி பெறுதல் மற்றும் பொருள் ரீதியாகவோ அல்லது வேறுவிதமாகவோ கடன் வழங்குதல் ஆகியவையும் அடங்குகின்றன. இருப்பினும், இந்த விதிமுறைகளில் ஒரு விதிமுறை, தேசிய அல்லது சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள் உள்ளிட்ட நபர்கள், தகுதிவாய்ந்த அதிகாரியின் எழுத்துபூர்வ ஒப்புதலுடன் விதிமுறைகள் 6 அல்லது 7 இனை மீறும் நபர்களுடன் அங்கீகரிக்கப்பட்ட பரிவர்த்தனைகளில் ஈடுபட அனுமதித்தது. தகுதிவாய்ந்த அதிகாரியின் ஒப்புதல் இல்லாமல் விதிமுறைகள் 6 அல்லது 7 இனை மீறும் நபர்களுக்கு 'அவசர மருத்துவ சிகிச்சை அல்லது மருத்துவ உதவி' வழங்க அனுமதிக்கும் மற்றொரு

விதிமுறை இருந்தது. வெள்ளம் அல்லது பூகம்பங்கள் போன்ற அனைத்து அவசர மனிதாபிமான உதவிகளுக்கும் இதே போன்ற விதிவிலக்குத் தேவை என்று விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விதிமுறை 6 இனை மீறும் நபர்கள், குழுக்கள் அல்லது அமைப்புகளுக்கு, தேசிய பாதுகாப்புக்குத் தீங்கு விளைவிக்கும் அல்லது பாதகமான ஏதாவதொரு தகவலை வழங்குதல் என்பவற்றை விதிமுறை 9 தடை செய்தது. இது கருத்துச் சுதந்திரத்தின் மீது நியாயமற்ற கட்டுப்பாட்டை விதிக்கும் ஆபத்தைக் கொண்ட ஒரு விதியாகும். உதாரணமாக, ஊழலை அம்பலப்படுத்தும் ஊடக அறிக்கைகள், தரமற்ற அல்லது காலாவதியான இராணுவ உபகரணங்களை அதிக விலைகொடுத்து வாங்குதல் போன்ற விடயங்களைக் கேள்விக்குள்ளாக்கல் போன்ற செயற்பாடுகள் கூட இந்தத் தடைக்குள் வரலாம். எந்தவொரு நிகழ்விலும், இந்த விதிமுறை, கருத்துச் சுதந்திரத்தில், குறிப்பாக ஊடகச் செயற்பாட்டில் 'உறைய வைக்கும்' விளைவை ஏற்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருந்தது.

விதிமுறை 10, விதிமுறை 6 என்பவற்றை மீறுவதற்குக் குறைந்தபட்சம் பத்து முதல் இருபது ஆண்டுகளுக்கு உட்பட்ட சிறைத்தண்டனையும், விதிமுறைகள் 7, 9 ஆகியவற்றை மீறுவதற்கு குறைந்தபட்சம் ஐந்து முதல் பத்து ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத்தண்டனையும், விதிமுறை 8 இனை மீறுவதற்கு பத்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் விதிக்கப்படுவதாக அமைந்திருந்தது

இந்த விதிமுறைகளின் கீழ் சதி செய்தல், சதி முயற்சி செய்தல், அதற்கான திட்டங்களைத் தயாரித்தல், அதற்கு உதவி செய்தல், கூடவே அதற்கு உடந்தையாக இருத்தல் ஆகிய குற்றங்களுக்கு ஏழு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான குற்றங்களுக்கான தண்டனைகளாக, ஆயுள் தண்டனை (அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துகளையும் பறிமுதல் செய்தல்) முதல் ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத்தண்டனை வரை (மற்றும் அமைச்சர் வர்த்தமானியில் வெளியிட்டவுடன் நடைமுறைக்கு வரவிருக்கும் மற்றொரு குற்றத்திற்கு ஐந்து ஆண்டுகள் வரையான சிறைத்தண்டனை) நடைமுறையில் இருந்தது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சதி செய்தல், அதற்கு முயற்சி செய்தல், தயாரித்தல் மற்றும் உடந்தையாக இருத்தல் ஆகிய குற்றங்களுக்கு குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை



மகிந்த ராஜபக்ச

Image Source - theprint.in

விதிக்கப்பட்டது, இது இருபது ஆண்டுகள் வரை இருக்கலாம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான குற்றங்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் குற்றங்களாகக் கருதப்படும் போது வழங்கப்படும் தண்டனைகள் தொடர்பான வேறுபாடுகளை மேற்கண்ட விதிகளை ஆராயும்போது எளிதாகக் காண முடியும்.

ஏற்கனவே மேலே குறிப்பிட்டபடி, பயங்கரவாதத் தடைச் சட்டம், தனக்கேயுரிய அதிகாரத்தின் மூலம் உருவாக்கிக்கொண்ட (குற்றச் செயல்களுக்கான) எல்லைகளின் அடிப்படையிலான கைதுகள், தடுப்புக்காவல்கள், விசாரணைகள் அனைத்திலும் அதன் சொந்தச் சட்ட ஆட்சியே நிலவுகிறது.

மறுபுறத்தில், அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்படும் போது, அவசரகாலச் சட்டங்களின் அடிப்படையில் உருவாகும் குற்றங்கள் தொடர்பான கைது, தடுப்புக்காவல், விசாரணை என்பவற்றைச் செய்வதற்காக அவை சம்பந்தமான சட்டரீதியான அதிகாரத்தை வழங்கும் அவசரகாலச் சட்டங்களின் தொகுப்பு உருவாக்கப்படுவதும் நடைமுறையில் இருந்து வருகிறது. கடந்தகால அனுபவங்கள், அவசரகாலச் சட்டங்களின் விதிகள், கைதுகள், தடுப்புக் காவல்கள், விசாரணைகள் என்பவை தொடர்பான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகள் பாரிய அளவில் வேறுபட்டுள்ளன என்பதைக் காட்டுவதாக உள்ளன. மேலும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்கள், அவசரகாலச் சட்டத்தின் கீழ் வருகின்ற குற்றங்களாகக் கொண்டுவரப்படும் போது, ஒரு சுவாரசியமான சட்டரீதியான கேள்வி எழுகிறது. அதாவது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்கள், அவசரகாலச் சட்டம் செயற்படும் ஒரு காலகட்டத்தில், இடைநிறுத்தப்படுமா என்பதுதான் அந்தக் கேள்வி. இது அரசியலமைப்பும் சட்டபூர்வ விதிகளும் பின்வருமாறு வழங்கப்படுவதால் ஏற்படுகிறது:

அரசியலமைப்பின் பிரிவு 155 (1) கூறுகிறது: "அரசியலமைப்புத் தொடங்குவதற்கு உடனடியாக முன்னதாகத் திருத்தப்பட்டு நடைமுறையில் இருக்கும் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம், பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டமாகக் கருதப்படும்."

அரசியலமைப்பின் பிரிவு 155 (2) கூறுகிறது: "பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் அல்லது பொதுப் பாதுகாப்புத் தொடர்பான, தற்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் அவசரகாலச் சட்டங்களை உருவாக்கும் அதிகாரம், அரசியலமைப்பின் விதிகளைத் தவிர வேறு எந்தச் சட்ட விதிகளின் செயற்பாட்டையும் மீறுதல், திருத்துதல் அல்லது இடைநிறுத்துதல் ஆகியவற்றுக்கான, சட்டபூர்வ அதிகாரத்தைக் கொண்ட விதிமுறைகளை உருவாக்கும் அதிகாரத்தை உள்ளடக்கியதாகும்."

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 7 கூறுகிறது: "ஓர் அவசரகால ஒழுங்குமுறை, அல்லது அத்தகைய ஒழுங்குமுறையின்படி உருவாக்கப்பட்ட எந்தவொரு உத்தரவு, அல்லது விதி என்பவை, எந்தவொரு சட்டத்திலும் உள்ள முரண்பாடான எதையும் மீறி நடைமுறைக்கு வரும்; மேலும் அத்தகைய எந்தவொரு ஒழுங்குமுறை அல்லது அத்தகைய உத்தரவு அல்லது விதிக்கு முரணானதாக இருக்கக்கூடிய எந்தவொரு சட்டத்தின் விதியும், இந்தக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ், அதன் செயற்பாட்டில் அந்த விதி திருத்தப்பட்டிருந்தாலோ, மாற்றியமைக்கப்பட்டிருந்தாலோ, அல்லது இடைநிறுத்தப்பட்டிருந்தாலோ, அத்தகைய முரண்பாட்டின் அளவிற்கு, அந்த ஒழுங்குமுறை, உத்தரவு அல்லது விதி நடைமுறையில் இருக்கும் வரை எத்தகைய விளைவையும் ஏற்படுத்தாது."

டிசம்பர் 6, 2006 இன் பயங்கரவாத எதிர்ப்புத் தீர்மானம் நடைமுறையில் இருந்த காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றங்கள் இடைநிறுத்தப்பட்டதா என்ற கேள்விக்கான பதில், இந்தப் பார்வைகள் எவ்வாறு வியாக்கியானப் படுத்தப்படுகின்றன என்பதைப் பொறுத்ததுதான். துரதிர்ஷ்டவசமாக, இந்த சுவாரஷ்யமான விவாதம், இன்னொரு சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட வேண்டி இருக்கிறது.

### 5. பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் பகுதி III

முன்னர் விளக்கியது போல, பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் பிரிவு 5 இன் கீழ் அவசரகால ஒழுங்குமுறையை உருவாக்குவதற்கு, செல்லுபடியாகும் அவசரகாலப் பிரகடனம் இருப்பது ஒரு முன்நிபந்தனையாகும். இந்தப் பிரிவு பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் பகுதி II இல் உள்ளது. இருப்பினும், பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் பகுதி III ஆல் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள், செல்லுபடியாகும் தன்மையுள்ள ஓர் அவசரகாலப் பிரகடனத்தின் இருப்பைச் சார்ந்தவை அல்ல.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் பகுதி III இன் கீழ் ஜனாதிபதிக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன. அதாவது பொது ஒழுங்கைப் பராமரிக்கக் காவல்துறைக்கு உதவுவதற்காக ஆயுதப்படைகளை அழைப்பது (பிரிவு 12), எந்தப் பகுதியிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பது (பிரிவு 16), சமூகத்தின் வாழ்க்கைக்கு அவசியமான சேவைகளை அத்தியாவசியச் சேவைகளாக அறிவிப்பது (பிரிவு 17) என்பவை.

பிரிவுகள் 12, 16, 17 ஆகியவற்றின் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும் மற்றும் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குச் (ஒரே நேரத்தில்) செல்லுபடியாகும். இந்த உத்தரவுகளை ஜனாதிபதி எந்த நேரத்திலும் ரத்துச் செய்யவோ அல்லது மேலும் நீடிக்கவோ வேண்டிய உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம்.

இருப்பினும், இந்தப் பிரிவுகளின் (12, 16, 17) கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் பாராளுமன்றத்திற்குத் தெரிவிக்கப்படுவதுடன், அந்த உத்தரவு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 10 நாட்களுக்குள் கூடாதபடி பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருந்தால் அல்லது இடைநிறுத்தப்பட்டிருந்தால் பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டும்.

மேற்கூறிய பிரிவுகளின் கீழ் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு உத்தரவையும் ரத்துச் செய்ய அல்லது திருத்த பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 6. முடிவுரை

இந்தச் சிறிய அத்தியாயத்தின் நோக்கம், பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் செயற்பாடு மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மீது அது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் என்பவை குறித்து ஒரு சுருக்கமான கண்ணோட்டத்தை வழங்குவதாகும். இங்கு விவாதிக்கப்பட்ட விடயங்கள் இலங்கையில் நிலவும் 'பொதுப் பாதுகாப்பின் முக்கிய'த்தைப் பற்றிய பரந்த கண்ணோட்டத்தைப் பெறுவதற்கு, வாசகருக்கு உதவியாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

## அடிக்குறிப்புகள்

1. Act No.10 of 1982.
2. The emergency (Prevention and prohibition of Terrorism and specified Terrorist Activities) Regulations No. 07 of 2006.
3. Public Security Ordinance No. 25 of 1947.
4. Inter alia, empowers Parliament to confer on the President the power to make emergency regulations.
5. Keeps in force the Public Security Ordinance No. 25 of 1947 as amended, and provides inter alia, that the power to make emergency regulations under the Public Security Ordi nance shall include the power to make regulations having the legal effect of overriding, amending or suspending the operation of any law except the provisions of the Constitu tion.
6. The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka.
7. Section 2 of the Public Security Ordinance No. 25 of 1947.
8. Section 11 of the Public Security Ordinance No. 25 of 1947.
9. See Article 155 (2) of the Constitution.
10. Article 10 of the Constitution.
11. Article 11 of the Constitution.
12. Article 13 (3) of the Constitution.
13. Article 13 (4) of the Constitution.
14. Article 17 of the Constitution.
15. Article 155 (6) of the Constitution.
16. Article 155 (8) of the Constitution.
17. Section 4 of the Public Security Ordinance No. 25 of 1947.
18. Section 5 (3) of the Public Security Ordinance No. 25 of 1947.
19. Article 155 (7) of the Constitution.
20. Section 3 of the Public Security Ordinance No. 25 of 1947.
21. Section 8 of the Public Security Ordinance No. 25 of 1947.
22. Joseph Perera Alias Bruten Perera v. The Attorney – Gener al ([1992] 1 Sri L.R 199); Karunathilaka and another v. Dayananda Dissanayake, Commissioner of Elections and others ([1999] 1 Sri L.R. 157); Lilanthi De Silvav. Attorney – General and Others ([2000] 3 Sri L.R. 155); N.W.M Jayan tha Wijesekera and others v. Attorney – General and others, S.C. (Fr) Application Nos. 243/06, 244/06, 245/06. S.C. Minutes 16 October 2006.
23. Article 154J.
24. Karunathilaka and Another v. Dayananda Dissanayake, Commissioner of Elections and others [1999] 1 Sri L.R. 157.
25. Ven. Dr. Omalpe Sobhitha Thero Vs Dayananda Dishanay ake and Another, S.C. (FR) Application No. 278/ 2005, S.C. Minutes 26th August 2005.
26. United People's Freedom Alliance.
27. See "2.2 Parliamentary Control of Proclamation
28. The President's power to prorogue Parliament is provided in Article 70 (1) of the Constitution, which states: "The President may. from time to time, by Proclamation summon, prorogue and dissolve Parliament.
29. Hansard Volume 162 – No. 1 of 25 November 2005: Columns 48 – 165.
30. Article 155 (2) of the Constitution states; "The power to make emergency regulations under the Public Security Ordinance or the law for the time being in force relating to public security shall include the power to make regulations having the legal effect of over – riding, amending or suspending the operation of the provisions of any law except the provisions of the Constitution; Section 7 of the PSO states: "An emergency regulation or any order or rule made in pursuance of such a regulation shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any law; and any provision of a law which may be inconsistent with any such regulation or any such order or rule shall, whether that provision shall or shall not have been amended, modified or suspended in its inconsisten cy have no effect so long as such regulation, order or rule shall remain in force.
31. Liberation Tigers of Tamil Eelam.
32. Published in the Gazette Extraordinary No. 1474/5 of 6 December 2006.

# அரசியலமைப்புவாதமும், பயங்கரவாதத் தடைச்சட்டமும், நிறைவேற்று அதிகாரத்துக்கான வாய்ப்பும்

எஸ்.கே. விக்னேஸ்வரன்



*ஆங்கில மூலம்: றொகான் எதிரிசிங்க*

*இந்தக் கட்டுரையின் ஆசிரியர் றொகான் எதிரிசிங்க - LLB (Colombo), LLM (University of California - மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் என்ற அமைப்பின் இயக்குநர். கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப்பிரிவின் தலைவர். 1986 முதல் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டப்பீடத்தில் கற்பித்து வருகிறார். அவரது சிறப்புப் பிரிவு, அரசியலமைப்புச் சட்டம். அவர் 1995 இல் தென்னாபிரிக்காவின் விட்வாட்டர்ஸ்ராண்ட் பல்கலைக்கழகத்தின் சட்டப்பீடத்தில் கற்பித்தார். பின்னர், 2004/5 இல், ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் உலக மதங்களின் ஆய்வு மையத்தில் வருகை தரும் உறுப்பினராக இருந்தார். 1992 முதல் 1995 வரை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கொள்கை ஆராய்ச்சி, பகுப்பாய்வு மையத்தின் நிறுவுநர், இணை இயக்குநர் ஆகிய பொறுப்புகளில் இருந்த இவர், 1989 முதல் 1993 வரை 'தாராளவாத ஜனநாயகக் குழு'வின் நிறுவுநராகவும், அதன் பொதுச் செயலாளராகவும் பணியாற்றியவர். 1987 ஆம் ஆண்டு லிபரல் கட்சி தொடங்கப்பட்டதிலிருந்து 1993 ஆம் ஆண்டு கட்சியில் இருந்து விலகும் வரை அவர் அதன் துணைப் பொதுச் செயலாளராகவும் இருந்தார். 1995 ஆம் ஆண்டு, ஊடகச் சட்டச் சீர்திருத்தங்களை முன்மொழிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இரண்டு குழுக்களில் உறுப்பினராகவும் இவர் இருந்தார். இந்த நூலின் (இலங்கை: பயங்கரவாதத் தடைச்சட்டம் - ஒரு விமர்சனரீதியான மதிப்பீடு) மூன்றாவது கட்டுரை இது.*

இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புக் குறித்த பெரும்பாலான விமர்சனங்கள், இந்தச் சட்டத்தின் உள்ளடக்கங்கள், சர்வதேச மனித உரிமை விதிமுறைகளுடனான அதன் முரண்பாடுகள், அதன் செயற்படுத்தலில் மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்கள் என்பவை தொடர்பாக நியாயமான முறையில் கவனம் செலுத்துகின்றன.

இருப்பினும், இதுபோன்ற ஒரு கடுமையான சட்டம் நாட்டின் சட்டப் புத்தகங்களில் எவ்வாறு நுழைந்தது என்பதை ஆராய்வதும்கூட ஒரு முக்கியமான விடயம்தான். பெரும்பாலான ஜனநாயக அரசியலமைப்பு நாடுகளின் சட்டங்களில், நிர்வாகம் அல்லது நிறைவேற்றுக் குழு, அசாதாரணமான அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்டிருத்தல் அல்லது அத்தகைய அதிகாரங்களை வழங்குகின்ற கடுமையான சட்டங்களைக் கொண்டிருத்தல் போன்ற நிலமையைத் தணிப்பதை நோக்கமாகக் கொண்டு, ஆக்கபூர்வமான விமர்சனங்களையோ திருத்தங்களையோ பரிந்துரைப்பதற்காகவும், 'தேசிய பாதுகாப்பு நலன்களின் அடிப்படையில்' என்ற போர்வையில் சட்டத்தின் கொள்கைகள், மனித உரிமை தொடர்பான அடிப்படை விதிமுறைகள் என்பவை பெருமளவில் சமரசம் செய்யப்படவில்லை என்பதை உறுதி செய்வதற்காகவும் செயற்படும் நிறுவனங்களும் உள்ளன. அத்தகைய கண்காணிப்புச் செயற்பாட்டைச் செய்ய எதிர்பார்க்கப்படும் இரண்டு நிறுவனங்கள் தான் சட்டமன்றமும் நீதித்துறையுமாகும். (ஆயினும்) இத்தகைய ஒரு சட்டத்தின் மசோதா பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் போதிலும் சரி, அல்லது மசோதாவின் அரசியலமைப்புச் சட்டத்தை இலங்கை உச்ச நீதிமன்றம் பரிசீலிக்கின்ற போதிலும் சரி, இச்சட்டத்தின் மீதான விமர்சனங்களோ, அவற்றின் சட்டபூர்வத்தன்மை பற்றிய அல்லது சிவில் சமூகத்தால் எழுப்பப்பட்ட பல்வேறு கவலைகள் பற்றிய விவாதங்களோ அங்கே முன்வைக்கப்பட்டு உரையாடப்பட்டுள்ளனவா? (என்பது ஒரு முக்கியமான கேள்வி.)

(உண்மையில் இந்தப்) பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இயற்றப்பட்ட விதம், இலங்கையில் சட்டமியற்றல், கொள்கை வகுத்தல் ஆகியவற்றில் நிலவிய கடுமையான குறைபாடுகளை வெளிச்சமிட்டுக் காட்டுகின்ற ஒரு நிகழ்வாகும். தவிரவும், இது வழக்குகள் தொடர்பான ஒரு சிறந்த ஆய்வுக்குரிய நிகழ்வும்கூட என்பது மட்டுமன்றி, நாட்டில் ஜனநாயக நிறுவனங்கள் தொடர்ந்து சீரழிந்து வருவதையும் வெளிச்சமிட்டுக் காட்டுகின்ற ஒன்றும் கூட. நாட்டின் ஜனநாயக அமைப்புகள் தொடர்ந்து சீரழிந்து வருவதையும், காலனித்துவ காலத்திலிருந்தே நாட்டில் இருந்த பாராளுமன்ற ஜனநாயகத்தின் மோசமான மரபுகள், நீதித்துறையின் சுதந்திரம் என்பவற்றைக் கருத்தில் கொண்டும் நோக்குகையில், பாராளுமன்றத்தின் விவாதச் செயற்பாடு மிக முக்கியமான ஒன்றாகும். அது, அதன் கொள்கை, நோக்கம் ஆகியவற்றைச் சட்டபூர்வமாக்குவதால் வரும் நன்மை, தீமைகளை விவாதிக்கிறது; பகுப்பாய்வு செய்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்கள் இதன்போது தங்கள் கடமையான விவாதச் செயற்பாட்டினால் கவனத்தைக் குவித்துக் கேள்விகள் கேட்கவும், அவற்றின் சட்ட ஏற்பாடுகள், அவற்றின் பிரிவுகள் என்பவை தொடர்பாக வினாக்களை எழுப்பவும், (தேவையானவற்றை) வற்புறுத்தவும் முயற்சிக்கவும் வேண்டும் என்பதுடன் இத்தகைய வற்புறுத்தலை அனுமதிக்க பாராளுமன்றம் தயாராக இருக்கவும் வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு, குழு மட்டத்திலான உறுப்பினர்கள், முக்கியமாக

அவற்றில் பயன்படுத்தப்படும் மொழி, பயன்படுத்தப்படும் மொழியின் பொருத்தப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அந்த விதிகளை ஆராய்வார்கள். சட்டப் பிரிவுகள் பரந்ததாக இருக்க முடியுமா (குறிப்பாக இச்சட்டங்கள், பொதுமக்களது சுயாதீனத்தமையை [Civil Liberty] மீறக்கூடிய தன்மைகளைக் கொண்டுள்ளனவா, அல்லவா என்பவை முக்கியத்துவம் வாய்ந்தவை) என்பதை மதிப்பாய்வு செய்வார்கள். மேலும் இவை அனைத்திலும் சட்டத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கு வேண்டிய மாற்றுவழிகளைக் கருத்தில் கொள்வார்கள்.

அரசியலமைப்பு ஜனநாயக நாடுகளுள், இலங்கை மிகவும் வித்தியாசமானது. ஏனெனில் அதன் 1972, 1978 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட இரண்டு குடியரசு அரசியலமைப்புகளும் சட்டத்தை, நீதித்துறை மீளாய்வு செய்வதைத் தடை செய்தன. சட்டத்தை நீதித்துறை மீளாய்வு செய்வது என்பது, அரசியலமைப்பின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான ஒரு வழிமுறையாகும். பாராளுமன்றம் உச்சமட்ட சட்டத்தை உருவாக்கும் அதிகாரம் கொண்டது. ஆனால், அது அரசியலமைப்பிற்கு உட்பட்டு அதன் சட்டத்தை உருவாக்கும் செயற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஏனெனில் பாராளுமன்றமே கூட அரசியலமைப்புச் சட்டத்தினால் உருவாக்கம் பெற்ற ஒரு சபைதான். அரசியலமைப்பு தொடர்பான நீதித்துறையினது மீளாய்வானது, அல்லது பல ஐரோப்பிய அரசியலமைப்புவாதிகள் அதை விவரிக்க விரும்புவது போல, சட்டம் அரசியலமைப்புடன் (மக்களின் விருப்பத்திற்கு) இணக்கமாக இருப்பதை உறுதிசெய்யும் சட்டத்தை ஆய்வு செய்யும் இறுதிப் பொறுப்பானது, அவ்வாறு செய்வதற்கான சிறந்த ‘ஆயுதத்தை ஏந்திய’ அரசாங்கத்தின் கிளையான நீதித்துறைக்கு வழங்குகிறது. சோல்பரி அரசியலமைப்பின் கீழ், ‘லியனகே எதிர் மகாராணி, ‘இலஞ்ச ஒழிப்பு ஆணையாளர் எதிர் ரணசிங்க’ போன்ற இலங்கையின் பெரும்பாலான முக்கியமான வழக்குகளின் அரசியலமைப்பு சம்பந்தமான முடிவுகள், சட்டத்தின் அரசியலமைப்பு ரீதியான மீளாய்வுகளின் விளைவுகளாக அமைந்திருந்தன. பல ஆண்டுகளாக உலகம் முழுவதும் செய்யப்பட்டு வந்தது போலவே, எந்தவொரு அரசியலமைப்பு அடிப்படையிலான ஜனநாயகத்திலும் உள்ளடங்கியுள்ள அரசியலமைப்பிற்கு முரணான சட்டத்தை, செல்லாததாகவும் பயனற்றதாகவும் நீதிமன்றங்கள் அறிவிக்க முடியும் என்பதை இலங்கை நீதிமன்றங்கள் அங்கீகரித்தன.

இருப்பினும், 1972 ஆம் 1978 ஆம் ஆண்டுகளில், நாட்டின் இரண்டு ஆதிக்க அரசியல் குழுக்களினாலும் (1972 இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் [SLFP] அதனோடு இணைந்திருந்த மார்க்சிஸ்டுகளது நடவடிக்கைகளாலும், 1978 இல் ஐக்கிய தேசியக் கட்சியின் [UNP] நடவடிக்கைகளாலும்) கொண்டுவரப்பட்ட, இலங்கையர்கள் சொந்தமாகத் தமது அரசியலமைப்புகளைத் தாமே வடிவமைக்க முடிவு செய்து உருவாக்கப்பட்ட இரண்டு அரசியலமைப்புச் சட்டங்களும், அவற்றை நீதித்துறை மீளாய்வு செய்வதை வெளிப்படையாகவே தடை செய்தன. உண்மையில், அரசியலமைப்பியலில் எழக்கூடிய சட்டரீதியான சவால்களுக்கு ஒரு தீர்வைக் காண்பதற்காகவே, அரசியலமைப்பு வரைபுகள் சட்டமாக (பாராளுமன்றத்தால்) நிறைவேற்றப்படுவதற்கு முன்பாக நீதித்துறையின் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படுவதற்கு முன்பாக ஒரு சட்டவரைபை (அதன் சட்டபூர்வத்தன்மை குறித்துச்) சவால் செய்ய, அதுவும் மிகக் குறைந்த காலத்திற்குள்ளாகவே முடியுமாக இருந்தது. ஒரு மசோதா, தேசிய நலனுக்காக அவசரமானது என்று அமைச்சரவை அறிவித்தால், இந்த வரையறுக்கப்பட்ட கால அவகாசத்தைக் கூட மேலும் குறைப்பதற்கு முடியும்.

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் நீதித்துறையின் பங்கும்

இலங்கையின் இந்த இரண்டு சுயாதீன தன்னாட்சி அரசியலமைப்புச் சட்டங்களினதும் (நிறைவேற்றுகைக்குப்) பின்னால், ஆதிக்கத்தில் இருந்த கோட்பாடு என்னவென்றால், அது, ஆட்சியாளர்களுக்கிருந்த நிறைவேற்று அதிகார வசதிதான் என்று நான் வாதிட்டேன். நிர்வாகக் குழுவில் உறுப்பினர்களாக இருந்து அரசியலமைப்பை உருவாக்கியவர்கள், நாட்டின் உச்சச் சட்டம் அவர்களின் ‘ஆட்சித்’ திறனை எந்த வகையிலும் தடுக்கக்கூடாது என்பதை உறுதி செய்வதில் மிகவும் அக்கறை கொண்டிருந்தனர். இதற்காக, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசியலமைப்புக்கு முரணான சட்டத்தை இயற்ற உதவும் அரசியலமைப்பு விதிகளைச் சேர்த்தனர். அவற்றில் ஒன்று பாராளுமன்றத்தில் சிறப்புப் பெரும்பான்மையைப் பெற்றிருப்பது என்பதாக இருந்தது.

அந்த நேரத்தில் ஆட்சியில் இருந்த இரண்டு அரசாங்கங்களும் 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் பாவனையிலிருந்த ‘வெஸ்ட்மின்ஸ்டர்’ (Westminster)

பாணியின், எளிய பெரும்பான்மை, சிறுபான்மை என்ற முறைமையால் உருவாக்கப்பட்ட சிதைவுகளின் காரணமாக, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டன. இதனால், ஏற்கனவே இருந்ததைவிட இது இரண்டு மடங்கு வசதியான ஒன்றாக மாறியிருந்தது. முதலாவது, பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றவர்களால் தங்கள் சொந்த அரசியலமைப்புகளை வரைந்து (பாராளுமன்றத்தில்) ஏற்றுக்கொள்ள வைக்க முடியும் என்பது. இரண்டாவதாக, அரசியலமைப்புச் சட்ட அடிப்படையிலான பெரும்பான்மைவாதத்தின் பெயரால், அரசியலமைப்பினால் ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த அல்லது வரையறுக்கப்பட்டிருந்த, சரிபார்ப்புகள், சமநிலைப்படுத்தல்கள் என்பவற்றைத் தவிர்த்துவிட்டு, தம்மிடமுள்ள சிறப்புப் பெரும்பான்மையினரின் தேவைக்கேற்ற வகையிலான (வரைபின்) வடிவத்தில் எவ்வித மாற்றமுமின்றி அப்படியே சட்டமாக நிறைவேற்ற முடிந்தது.

இவை அனைத்தும் சேர்ந்து, 1978 அரசியலமைப்பின் கீழ் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இயற்றுவதற்கு உதவின. அரசியலமைப்பால் அனுமதிக்கப்பட்டபடி, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மை வாக்குகளுடன் இந்தச் சட்டத்தை இயற்ற விரும்புவதாக அரசாங்கம் அறிவித்தது. இதன் பொருள், முன்மொழியப்பட்ட சட்டத்தில் உள்ள உட்பிரிவுகள் அரசியலமைப்பிற்கு முரணாக இருந்தாலும், அவற்றை இயற்றலாம் என்பதே. எனவே, வரைவு நிகழும் கட்டத்தில் சட்டமா அதிபர் துறையினராலோ அல்லது சட்டமாக்கப்படுவதற்கு முன்பான மீளாவுக் கட்டத்தில் உச்ச நீதிமன்றத்தினாலோ அல்லது விவாதிக்கப்படும் கட்டத்தில் பாராளுமன்றத்தினாலோ, கவனமாக அரசியலமைப்பு ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதென்பது எத்தகைய பயனுமற்றதாக மாறியது.

அரசாங்கம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மை வாக்குகளுடன் சட்டத்தை இயற்றத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்திருந்ததால், சட்டத்தின் ஏதாவதொரு பிரிவு அரசியலமைப்பின் மிகவும் கடுமையாக வேரூன்றிய விதிகளை (இறையாண்மை, பௌத்தம் மற்றும் பிற 'அடிப்படை' அம்சங்களைக் கையாள்பவை) மீறுகின்றதா என்பதைக் கண்டறிவதற்காக மசோதாவை ஆய்வு செய்வதற்கு நீதிமன்றத்தை நாடியபோது, அது தனது நிலை 'வரையறுக்கப்பட்ட செயற்பாட்டைக் கொண்டுள்ளது' என்று அறிவித்தது. உண்மையில், அத்தகைய பிரிவுகள் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மை வாக்குகளுடன் மட்டுமல்லாமல், வாக்கெடுப்பில் மக்களின் ஒப்புதலுடனும் இயற்றப்பட வேண்டியவை. தனது ஒரு பக்க உத்தரவின் மூலமாக, இலங்கை உச்ச நீதிமன்றம், மசோதாவின் எந்தப் பிரிவுகளும் முரணாக இல்லை என்று அறிவித்தது. அரசியலமைப்பின், சிறப்பாக வேரூன்றிய விதிகளுடனும், மனித உரிமைகள் குறித்த அரசியலமைப்பு விதிகளின் அடிப்படையிலும், இந்த மசோதாவின் விதிகளை மறுபரிசீலனை செய்ய மறுத்து, அதன் மூலம் மசோதாவை சட்டமாக இயற்றுவதற்கான பச்சைக்கொடியை அரசாங்கத்திற்குக் காட்டியது.

## பயங்கரவாதத் தடுப்புச்சட்ட மசோதாவும் பாராளுமன்றத்தின் பங்கும்

இக்கடுமையான 'பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்' உச்ச நீதிமன்றத்தின் ஒற்றைப் பக்கத் தீர்ப்புக்குப் பின்னான இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஜூலை 19, 1979 அன்று ஒரே நாளில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, சட்டமாக்கப்பட்டது.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், பாராளுமன்றத்தை மதிப்பிழக்கச் செய்யும் செயல்முறையைத் தொடங்கியது. கிட்டத்தட்ட 50 ஆண்டுகளில் முதன்முறையாக சட்டவாக்கற் துறையினது நிர்வாக அதிகாரத்தின் முக்கிய இடத்தை மாற்றுகின்ற 'நிறைவேற்று ஜனாதிபதி' முறையை அறிமுகப்படுத்தியது. பாராளுமன்றத்தில் ஐந்தில் நான்கு பங்குப் பெரும்பான்மையை அது கொண்டிருந்ததாலும், அதன் பாராளுமன்றக் குழுவிலிருந்து ஏதேனும் எதிர்ப்பு இருந்தாலும் அதைக் கணக்கெடுக்காமலோ பொருட்படுத்தாமலோ இருந்ததாலும், பாராளுமன்ற விவாதமும் ஆலோசனைகளும் எத்தகைய பயனுமற்றவை என்பதைப் பாராளுமன்றம் உணரத் தொடங்கியது. அரசாங்கம், பாராளுமன்றத்திற்குப் புறம்பான நடைமுறைகளாக இருக்கும், ஆய்வுகள், விவாதங்கள், ஆலோசனைகள், கருத்து வேறுபாடுகள் என்பவற்றை விரைவுபடுத்தவோ அல்லது ஊக்கப்படுத்தவோ சட்டம் இயற்றும் செயல்முறைகளில் குறுக்கீடு செய்வதில் அல்லது தடுப்பதில் பங்காற்றுகின்ற 'பாராளுமன்ற நிலையியற் கட்டளை'களை இடைநிறுத்தம் செய்யும் நடைமுறைகளையும் ஆரம்பித்தது! இதன்பின், ஜூலை 19, 1979 அன்று, மதிய உணவிற்குப் பின்னராக, பாராளுமன்றம் பயங்கரவாதத் தடுப்புச்சட்ட மசோதாவை எடுத்துக்கொண்டது. பாராளுமன்ற விவகார

அமைச்சர் வின்சென்ட் பெரேரா எம்.பி., மசோதாவை அன்றே நிறைவேற்றும் வகையில் நிலையியற் கட்டளைகளை நிறுத்திவைக்க வேண்டும் என்று முன்மொழிந்தார். நீதி அமைச்சர் கே.டபிள்யூ. தேவநாயகம் எம்.பி., மசோதாவை அறிமுகப்படுத்தினார். மசோதாவின் இரண்டாவது வாசிப்பு அன்று மாலை 9.45 மணி வரை தொடர்ந்தது.

எதிர்க்கட்சியின் சார்பாக முக்கிய உரையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எம்.பி. மைத்திரிபால சேனநாயக்க நிகழ்த்தினார். தனது உரையில் அவர், மசோதாவின் சாராம்சம் குறித்து மட்டுமல்லாமல், மசோதாவை இயற்ற முயன்ற விதம் குறித்தும் சில முக்கியமான கவலைகளை எழுப்பியது குறிப்பிடத்தக்கது. அவர் கூறினார்:

"இந்த மசோதாவை இன்றிரவு நாடாளுமன்றத்தில் விரைவாக நிறைவேற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம், இந்த நாடாளுமன்றத்தில் யாருடைய பெயரில், யாருடைய அதிகாரத்தின் கீழ் சட்டங்கள் இயற்றப்படுகிறதோ, அந்த நாட்டு மக்கள் அதை முழுமையாகப் படித்துப் பார்ப்பதையும், அதன் உள்ளடக்கங்களை விரிவாகப் படிப்பதையும் தடுக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மக்களின் அடிப்படை உரிமைகளின் சில அம்சங்களைப் பறிக்க முயன்ற ஒவ்வொரு மசோதாவும், தேசிய நலனுக்காக அவசரமானது என்று விவரிக்கப்பட்டு, பெரும்பான்மையைப் பெறுவதற்கு உதவிய மக்களின் முதுகுக்குப் பின்னால், அரசாங்கத்திடமுள்ள அறுதிப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தில் அவசரமாக நிறைவேற்றப்பட்டிருப்பதால் இது ஆச்சரியம் தரும் ஒன்றல்ல.

இந்த மசோதாவைப் பொறுத்தவரை, எந்த அவசரத்தையும் நாம் காண முடியாது. வடக்கில் பயங்கரவாதச் செயல்களைக் கையாள்வதற்கான நோக்கத்திற்காக இது தேவைப்பட்டால், பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட அவசரநிலைக்கு கூடுதலாக, தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் சட்டம் இருக்கிறது. வேறும் பிற இதையொத்த அமைப்புகள் ஏற்கனவே உள்ளன. இவற்றின் கீழ் எந்தவொரு சூழ்நிலையையும் சமாளிக்க அரசாங்கத்திற்கு முழுமையான அதிகாரம் இருக்கிறது."

அமைச்சர் தேவநாயகம் தனது சுருக்க உரையை நிகழ்த்த 9.58 மணிக்கு எழுந்ததாக ஹன்சார்ட் பதிவு செய்கிறது. இதைத் தொடர்ந்து குழுநிலை (பாராளுமன்றம் மசோதாவை ஒவ்வொரு பிரிவும் ஆராயும் என்று எதிர்பார்க்கப்படுகிறது), அடுத்ததாக மசோதாவின் மூன்றாவது வாசிப்பு ஆகியவை நடைபெற்றன. மசோதா அதன் அனைத்து நிலைகளிலும் நிறைவேற்றப்பட்டது. பயங்கரவாதத் தடுப்பு மசோதாவுடன் எந்த தொடர்பும் இல்லாத, பொதுசனப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ், ஒரு தீர்மானமாக அங்கீகரிக்கப்பட்டு, பாராளுமன்றம் இரவு 10.25 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது!

## முடிவுரை

கடந்த முப்பது ஆண்டுகளில், இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் முக்கிய குறைபாடுகளில் ஒன்றாக, அரசாங்கத்தின் நிர்வாகக் கிளையின் அதிகாரக் குவிப்பை பல விமர்சகர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். அரசாங்கத்தின் மற்றைய இரண்டு கிளைகளான பாராளுமன்றம், நீதித்துறை என்பவற்றின் அதிகாரங்கள் குறைந்து வருவதால், இவ்வளவு வலுவூட்டப்பட்ட நிர்வாகக் கிளையின் ஆபத்தானது இன்னமும் மேலாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அரசாங்கத்தின் இந்த இரண்டு கிளைகளும் தாங்கள் அனுபவித்த வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக்கூட அதிகபட்சமாக வலியுறுத்த விரும்பாததால் நிலைமை மேலும் மோசமாகியுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. பயங்கரவாதத் தடுப்புச்சட்ட மசோதாவின் கதை என்பது, அது இயற்றப்பட்ட விதம், நீண்டகாலமாக நமது சட்டப் புத்தகங்களில் ஒரு சட்டமாக அது இருந்து வருவது, சாராம்சத்தின் அடிப்படையில் மிகவும் விமர்சனத்திற்கு உட்பட்ட அதன் தன்மை, அது அடுத்தடுத்த அரசாங்கங்களால் நியாயமான எதிர்ப்பைக்கூடக் குறிவைத்து நாட்டின் அனைத்துச் சமூகங்களின் உறுப்பினர்களினதும் மனித உரிமைகளை நசுக்கப் பயன்படுத்தப்பட்டமை, மிக எளிதாக அது ஒரு சட்டமாக இயற்றப்பட்ட விதம், இந்த அரசியலமைப்புவாதம், சட்டத்தின் ஆட்சி, இலங்கையில் சட்டம் உருவாக்கும் செயல்முறை என்பவை தொடர்பான அடிப்படையான பல கேள்விகளை எழுப்புகிறது. இலங்கை அடிப்படை அரசியலமைப்புச் சீர்திருத்தத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது, முந்தைய அரசியலமைப்பின் ஒரு பகுதியாக இருந்த, தற்போதைய அரசியலமைப்பின் கட்டமைப்பில் உள்ள இந்த அடிப்படைக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படுவது மிக அவசியமானது என்பது தெளிவு!

# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வடமராட்சி - கட்டைவேலி

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறை வாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.



இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.
தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.
தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.

லெயுசிக்காமின் வடமராட்சிப் பிரிவைக் காட்டும் நிலப்படத்தில் பருத்தித்துறைக் கோவிற்பற்றுத் தொடர்பாகக் காணப்படும் தகவல்களையும், அவற்றோடு தொடர்புடைய வரலாற்றுக் குறிப்புகளையும் சென்ற கட்டுரையில் பார்த்தோம். இந்தக் கட்டுரை கட்டைவேலிக் கோவிற்பற்றுத் தொடர்பாக லெயுசிக்காமின் நிலப்படம் தரும் தகவல்களை விளக்குகிறது.

கட்டைவேலிக் கோவிற்பற்றில் கரவெட்டி, அல்வாய், துன்னாலை, வல்லிபுரம் ஆகிய நான்கு துணைப்பிரிவுகள் இருப்பதை நிலப்படத்திலுள்ள விளக்கக் குறிப்பிலிருந்தும் நிலப்படத்திலிருந்தும் அறியமுடிகிறது (படம்1). பருத்தித்துறையைப் போலவே இக்கோவிற்பற்றுக்குப் பெயர் கொடுத்த கட்டைவேலிக் கிராமத்தின் பெயரிலும் துணைப்பிரிவு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.



லெயுசிக்காமின் வடமராட்சியைக் காட்டும் நிலப்படத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கட்டைவேலிக் கோவிற்பற்றுப் பகுதி

## எல்லைகள்

கட்டைவேலிக் கோவிற்பற்றின் வடக்கு எல்லையில் பாக்கு நீரிணையும்; கிழக்கில் பருத்தித்துறைக் கோவிற்பற்று, வங்காளக் குடாக் கடல் என்பனவும் உள்ளன. தெற்கில் தொண்டைமானாறு கடல்நீரேரியும் தென்மராட்சிப் பிரிவும்; மேற்கில் உடுப்பிட்டிக் கோவிற்பற்றும் எல்லைகளாக உள்ளன.

கட்டைவேலிக் கோவிற்பற்று, பருத்தித்துறைக் கோவிற்பற்றை அதன் மேற்குப் பக்கத்தையும் தெற்குப் பக்கத்தையும் சூழ்ந்து 'ட' வடிவத்தில் அமைந்துள்ளது. இக்கோவிற்பற்றுக்குள் மேற்கு எல்லையை அண்டி வடக்கில் அல்வாய்த் துணைப்பிரிவும் தெற்கே கரவெட்டித் துணைப் பிரிவும் உள்ளன. தெற்கு எல்லையோரமாக, கரவெட்டிக்குக் கிழக்கே துன்னாலையும் அதற்குக் கிழக்கில் வல்லிபுரம் துணைப்பிரிவும் காணப்படுகின்றன. நிலப்படத்தின்படி கட்டைவேலிக் கோவிற்பற்றின் துணைப் பிரிவுகளுள் அல்வாய், வல்லிபுரம் ஆகியவற்றுக்கு முறையே, பாக்கு நீரிணை, வங்காள விரிகுடா ஆகியவற்றை அண்டிய கடல் முகப்புகள் உள்ளன. கரவெட்டி, துன்னாலை ஆகிய துணைப் பிரிவுகள், அவற்றின் தெற்குப் பக்கத்தில் கடல் நீரேரி முகப்புகளைக் கொண்டுள்ளன (படம்2).



லெயுசிக்காமின் வடமராட்சியைக் காட்டும் நிலப்படத்தைத் தழுவி வரையப்பட்ட கட்டைவேலிக் கோவிற்பற்றின் படம்

ஒல்லாந்தர் காலத்துக் கட்டைவேலிக் கோவிற்பற்றுக்குள் அடங்கிய பகுதிகள் தற்காலத்தில் இரண்டு பிரதேசச் செயலர் பிரிவுகளுக்குள் அடங்குகின்றன. மேற்படி கோவிற்பற்றுக்குள் அடங்கிய வடக்குக் கரையோரப் பகுதிகளும் வல்லிபுரப் பகுதியும் பருத்தித்துறைப் பிரதேசச் செயலர் பிரிவுடன் சேர்ந்துள்ளன. எஞ்சியவை கரவெட்டிப் பிரதேசச் செயலர் பிரிவுக்குள் அடங்குகின்றன. அதேவேளை, உள்ளூராட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரை, அல்வாய்த்



துணைப்பிரிவின் சில பகுதிகளும், வல்லிபுரம் துணைப்பிரிவும் அடங்கலாக, பழைய கோவிற்பற்றின் ஒரு பகுதி பருத்தித்துறைப் பிரதேசசபை எல்லைக்குள்ளும் எஞ்சிய பகுதி வடமராட்சி தென்மேற்குப் பிரதேசசபை எல்லைக்குள்ளும் அடங்குகின்றன.

## வீதிகள்

லெயுசிக்காமின் நிலப்படத்தின்படி யாழ்ப்பாணத்திலிருந்து வல்லையூடாகப் பருத்தித்துறைக்குச் செல்லும் வீதி இந்தக் கோவிற்பற்றை ஊடறுத்துச் செல்கிறது. இது ஏறத்தாழ இன்றைய யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியின் தடத்திலேயே அமைந்துள்ளது. அதேவேளை வல்லையிலிருந்து சற்றுத் தொலைவில் மேற்படி யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியிலிருந்து பிரிந்து செல்லும் ஒரு வீதி கட்டைவேலிக் கோவிற்பற்றுக்குள்ளேயே மீண்டும் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியுடன் இணைகிறது. இது வல்லையிலிருந்து உடுப்பிட்டியூடாகச் செல்லும் இன்றைய வீதியுடன் பொருந்துகிறது. கரவெட்டித் துணைப் பிரிவுக்குள் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியிலிருந்து தொடங்கி தெற்கு நோக்கி நீரேரிக் கரைவரை செல்லும் ஒரு வீதியையும் நிலப்படம் காட்டுகிறது. துன்னாலைத் துணைப் பிரிவுக்குள் மேற்படி வீதியிலிருந்து தொடங்கி வடகிழக்குத் திசையில் சென்று பருத்தித்துறைக் கோவிற்பற்றுக்குள் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியுடன் இணையும் இன்னொரு வீதியும் நிலப்படத்தில் உள்ளது. கடைசியாகக் குறிப்பிட்ட இரண்டு வீதிகளில் முதலாவதன் வடக்குப் பகுதி தற்காலத்தில் நெல்லியடியிலிருந்து கலிகைச் சந்தி வரை செல்லும் வீதியுடன் பொருந்துவதாகத் தெரிகிறது. இதன் தெற்குப் பகுதியும், இரண்டாவதாகக் குறிப்பிட்ட வீதியும் ஏறத்தாழ இன்றைய புலோலி - சாவகச்சேரி வீதியின் தடத்தில் உள்ளன. புலோலி - சாவகச்சேரி வீதியைப் பிற்காலத்தில் நேராக மேம்படுத்தி அமைத்ததாற்போலும், நிலப்படத்தில் மேற்படி வீதிகள் சந்திக்கும் இடம் தற்கால நிலைமையுடன் சரியாகப் பொருந்தவில்லை. இவற்றைவிட, பருத்தித்துறைக் கோவிற்பற்றுக்குள் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் தொடங்கித் தெற்கு நோக்கிக் கடல்நீரேரி வரை செல்லும் இன்னொரு வீதியும் கட்டைவேலிக் கோவிற்பற்றுக்குள் துன்னாலை, வல்லிபுரம் ஆகிய துணைப்பிரிவுகளை ஊடறுத்துச் செல்வதை நிலப்படம் காட்டுகிறது. இது இன்றைய புலோலி - கொடிகாமம் வீதியின் ஒரு பகுதி.

தற்காலத்தில் இக்கோவிற்பற்றுப் பகுதியின் வடக்குக் கடற்கரையோரமாகச் செல்லும் யாழ்ப்பாணம் - புன்னாலை - பருத்தித்துறை வீதியைத் தவிர, யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களை இணைப்பனவும், இக்கோவிற்பற்றை ஊடறுத்துச் செல்வனவுமான வீதிகள் ஒல்லாந்தர் காலத்திலேயே இருந்துள்ளதை நிலப்படம் தெளிவாகக் காட்டுகிறது.

## கட்டடங்கள்

ஏனைய கோவிற்பற்றுகளுக்குள் இருப்பது போல ஒல்லாந்தரின் கிறித்தவத் தேவாலயத்தையும் அதோடிணைந்த தேவாலய இல்லத்தையும் நிலப்படத்தில் காணமுடிகிறது. அத்துடன், இந்தக் கோவிற்பற்றுக்குள் இரண்டு யானைப் பந்திகளும் ஓர் அம்பலமும் கரையோர மடம் ஒன்றும் உள்ளன. அம்பலமும் மடமும் வடமராட்சியைத் தனியாகக் காட்டும் லெயுசிக்காமின் தொகுப்பிலுள்ள நிலப்படத்தில் குறிக்கப்படவில்லை. ஆனால், அதே தொகுப்பிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதையும் காட்டும் நிலப்படத்தில் உள்ளன. வடமராட்சியைக் குறிப்பாகக் காட்ட, பெரிய அளவுத்திட்டத்துக்கு அமைய வரையப்பட்ட, முதலில் குறிப்பிட்ட நிலப்படத்தில் மேற்படி அம்சங்கள் குறிக்கப்படாததற்கான காரணம் தெரியவில்லை. பொதுவாகக் கூடுதல் விவரங்களைக் காட்டுவதற்காகவே பெரிய அளவுத்திட்ட நிலப்படங்கள் வரையப்படுவது வழக்கம். இங்கே குறைந்த அளவுத்திட்ட நிலப்படத்திலுள்ள அம்சங்கள் சிலவற்றைப் பெரிய அளவுத்திட்ட நிலப்படத்தில் காணமுடியவில்லை.

## தேவாலயமும் தேவாலய இல்லமும்

போல்டேயஸ் பாதிரியார் தனது நூலில் கட்டைவேலித் தேவாலயத்தைப் பற்றி விவரமான குறிப்புகளைத் தரவில்லை. ஆனாலும்,



தேவாலயமும் தேவாலய இல்லமும் நல்ல செங்கற்களால் கட்டடப்பட்டிருந்ததாகத் தகவல் தந்துள்ளார். அதேவேளை, இவற்றை அண்டி ஒரு கோடைகால இல்லம் இருந்ததாகவும் அதிலிருந்து சூழவுள்ள பகுதிகளின் அழகிய காட்சிகளைக் காணமுடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.[1] நூலிலுள்ள படத்தில் கட்டைவேலித் தேவாலயத்தினதும் இல்லத்தினதும் சுவர்கள் நிரந்தரமான கட்டடப் பொருட்களால் ஆனவைபோல் வரையப்பட்டிருந்தாலும், கூரைகள் ஓலையால் வேயப்பட்டவை போலவே உள்ளன.[2] படம் கோடைகால இல்லத்தைப் பெயர் குறித்துக் காட்டவில்லை. லெயுசிக்காமின் நிலப்படத்திலும் மேற்படி இல்லம் இல்லை.




**போல்டேயஸ் பாதிரியாரின் நூலில் உள்ள கட்டைவேலித் தேவாலயத்தினதும் தேவாலய இல்லத்தினதும் படம்**

நிலப்படத்தில் தேவாலயமும் இல்லமும் தற்காலத்தில் கலிகைச் சந்தி என அழைக்கப்படும் சந்தியை அண்டி அதன் தென்மேற்கு மூலைப் பகுதியில் குறிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியர் காலத்தில் மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்தவர்களே 1821 ஆம் ஆண்டில் தொடங்கிக் கட்டைவேலியில் கிறிஸ்தவ மதப்பணியாற்றினர்.[3] அக்காலத்தில் அவர்கள் கட்டைவேலியில் சிதிலமடைந்த நிலையில் இருந்த ஒல்லாந்தரின் தேவாலயக் கட்டடத்தையே பயன்படுத்தியதாகத் தெரிகிறது. பிற்காலத்தில், இந்தத் தேவாலயக் கட்டடத்தையும் அது இருந்த நிலத்தையும் அரசாங்கம் மெதடிஸ்த திருச்சபைக்கு வழங்கியது.[4] அத்தேவாலயக் கட்டடத்தில் அவர்கள் உடனடியாகத் திருத்த வேலைகள் எதையும் செய்ததாகத் தெரியவில்லை. 1870 ஆம் ஆண்டில் பழைய தேவாலயத்தை மெதடிஸ்த மிசன் நடத்திவந்த பாடசாலைக்குரிய சிற்றாலயமாக மாற்றி அமைத்தனர்.[5] அவர்களால் நிறுவப்பட்டு இன்றும் அப்பகுதியில் இயங்கும் தூய திரித்துவ மெதடிஸ்த தேவாலயமும், புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையும் நிலப்படத்தில், ஏறத்தாழத் தேவாலயத்தைக் குறித்துள்ள பகுதியிலேயே இருக்கின்றன.

## யானைப்பந்திகள்

கட்டைவேலிக் கோவிற்பற்றுக்குள் உள்ள இரண்டு யானைப் பந்திகளுள் ஒன்று அல்வாய்த் துணைப் பிரிவுக்குள் அதன் வடகிழக்கு மூலையை அண்டி அமைந்துள்ளது. மற்றது, கரவெட்டித் துணைப் பிரிவுக்குள் அப்பிரிவின் மேற்கு எல்லைக்கு அருகில் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதிக்கு அண்மையில் அமைந்துள்ளது. நிலப்படத்தில் இதன் அமைவிடத்தைப் பார்க்கும்போது இந்த யானைப்பந்தி கரணவாய்ப் பகுதியில் இருந்திருக்கக்கூடும். ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், இந்தப் பந்திகள் ஏற்றுமதிக்கான யானைகளையோ அரசாங்கத்தின் பிற தேவைகளுக்கான யானைகளையோ வைத்துப் பராமரிக்கும் இடங்கள் என்பதில் ஐயமில்லை.

போல்டேயசின் நூலில் உள்ள கட்டைவேலித் தேவாலயத்தைக் காட்டும் படத்தில் குடை பிடித்தபடி ஒருவர் யானையின் மேல் அமர்ந்திருப்பதையும், ஈட்டி அல்லது அங்குசத்தைத் தாங்கியபடி முன்னே இருவரும் பின்னால் ஒருவரும் நடந்து செல்வதையும், காணமுடிகிறது. இந்தக் காட்சியிலிருந்து யானைமீது செல்பவர் ஓர் அரசாங்க அதிகாரி என்பதையும் கூடச் செல்பவர்கள் வேலைக்காரர்களும் யானைப் பாகர்களும் என்பதையும் புரிந்துகொள்ளலாம். இது உண்மையான ஒரு நிகழ்வாக இருக்கத் தேவையில்லை. தேவாலயத்தைக் காட்டுவதற்காக வரையப்பட்ட இப்படத்தின் இடைவெளிகளை நிரப்புவதற்காக இக்காட்சியைச் சேர்த்திருக்கக்கூடும். ஆனாலும், அக்காலத்தில், அதிகாரிகள் தமது கண்காணிப்பு வேலைகளுக்கு

அல்லது போக்குவரத்துக்கு யானைகளைப் பயன்படுத்தியதை இப்படம் காட்டுவதாகக் கொள்ளமுடியும். இந்த யானைகளையும் நிலப்படம் காட்டும் யானைப் பந்திகளிலேயே வைத்துப் பராமரித்திருப்பர்.

## அம்பலம்

அம்பலம் என்பது பயணிகள் இளைப்பாறிச் செல்வதற்கான ஒரு சிறிய கட்டடம் என ஏற்கெனவே குறிப்பிட்டோம். கட்டைவேலிக் கோவிற்பற்றுக்குள் காணப்படும் அம்பலம், நிலப்படத்தில் உள்ளபடி யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் இன்றைய நெல்லியடிச் சந்திப் பகுதியில் இருந்ததாகத் தெரிகிறது. முக்கியமான நகரங்களை இணைக்கும் இந்த வீதியில் பயணம் செய்பவர்களின் தேவைக்காகவே இந்த அம்பலம் அமைக்கப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்விடத்தில் அம்பலம் அமைந்தது அவ்விடத்தின் முக்கியத்துவத்தையும் அதன் வளர்ச்சிக்கான உள்ளாற்றலையும் காட்டுகிறது எனலாம். இதனாலேயே அண்மைக் காலத்தில் இப்பகுதி ஒரு முக்கியமான நகரப் பகுதியாக வளர்ச்சியடைந்துள்ளது.

## மடம்

அல்வாய்த் துணைப்பிரிவின் வடக்குக் கடற்கரையோரத்தில் ஒரு மடம் உள்ளது. நிலப்படத்தில் மடம் எனப் பெயர் குறித்திராவிட்டாலும், குறியீட்டின் அடிப்படையில் இது ஒரு மடம் எனக் கொள்ளலாம். ஒரு சிறிய கட்டடத்தையும் அருகில் ஒரு மரத்தையும் கொண்ட குறியீட்டுக்கு அருகில் 'இன்பசிட்டி' எனப் பெயர் குறித்துள்ளனர். எனவே, இது இன்பசிட்டிக் கடற்கரை ஓரமாக அமைந்த ஒரு மடம் ஆகும். பெரும்பாலும் இது மீனவர்களின் பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்ட மடமாக இருக்கக்கூடும். தற்காலத்தில் ஒரு முக்கியமான மீன்பிடிக் கிராமமாக விளங்கும் இன்பசிட்டி, ஒல்லாந்தர் காலத்திலேயே குறிப்பிடத்தக்க ஒரு மீன்பிடித் துறையாக இருந்ததை இது காட்டுகிறது எனலாம்.

## குளங்கள்

கட்டைவேலிக் கோவிற்பற்றுக்குள் 26 குளங்களைக் குறித்துக் காட்டியுள்ளனர். இவற்றுள் சிதம்பரன் குளம், ஆலடிக் குளம், வேலன் குளம், சக்கோட்டைக் குளம், தாழ்வளைக் குளம், மருதடிக் குளம், நீர்வள்ளை, துறைக்கோனென் குளம், நீர்வள்ளைக் குளம், புதுக்குளம், மாயக்கைக் குளம் என்னும் பெயர் கொண்ட 11 குளங்கள் அல்வாய்த் துணைப்பிரிவுக்குள் உள்ளன. அத்துளுக் குளம், நோகோவில் குளம், உளில் குளம், ஆலங்கேணி, வெட்டுக்குளம், சண்டில் குளம், வேரக்கள்ளிக் குளம், சோனப்புக் கிராய், ஐயன் குளம் ஆகிய ஒன்பது குளங்கள் கரவெட்டித் துணைப்பிரிவுக்குள்ளும்; கொடிகட்டுக் குளம், மிங்குவில் குளம், நுணுவில் குளம் ஆகிய மூன்று குளங்களும் துரவு என்னும் பொதுப் பெயரால் குறிக்கப்படும் ஒரு நீர்நிலையும் துன்னாலைத் துணைப்பிரிவுக்குள்ளும் உள்ளன. மாக்கிராயன் குளம் எனப் பெயர் குறித்த ஒரு குளமும், குளம், துரவு எனப் பொதுப் பெயரால் குறிக்கப்பட்டுள்ள இரண்டு நீர்நிலைகளும் வல்லிபுரம் துணைப்பிரிவுக்குள் காணப்படுகின்றன.

ஒல்லாந்தர்காலக் கட்டைவேலிக் கோவிற்பற்றுக்குள் அடங்கிய பகுதிக்குள் தற்காலத்தில் 50க்கு மேற்பட்ட குளங்கள் காணப்படுகின்றன.6 இப்பகுதியிலிருந்த பெரும்பாலான குளங்களை நிலப்படம் குறித்துக் காட்டவில்லை என்றே தோன்றுகிறது. லெயுசிக்காமின் நிலப்படத்திலுள்ள குளங்களின் பெயர்களுடன் தற்காலப் பதிவுகளிலுள்ள குளப் பெயர்களை ஒப்பிடும்போது மாயக்கைக் குளம், அத்துலுக் குளம், சண்டில் குளம், வேரக்கழிக் குளம், ஐயன் குளம், நுணுவில் குளம், மாக்கிராயன் குளம், கொடிகட்டுக் குளம் ஆகிய பெயர்கள் ஒல்லாந்தர் காலத்திலிருந்து இன்றுவரை மாற்றமின்றித் தொடர்வதை அறியமுடிகின்றது.

### குறிப்புகள்

1. *Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos. 14 (July 1958April 1959), 332.*
2. *Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 357.*
3. மெதடிஸ்த திரு அவை இலங்கை, இருநூற்றாண்டு நிறைவு நினைவு மலர் 1814 - 2014 (இலங்கை: மெதடிஸ்த திரு அவை, 2014), 13.
4. *A History of the Methodist Church in Ceylon (Colombo: The Wesley Press), 99.*
5. *A History of the Methodist Church in Ceylon, 201.*
6. தகவல்: விவசாய அபிவிருத்தித் திணைக்களம்.

# இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அரசியல் விஞ்ஞானக் கல்வி: ஆராய்ச்சியும், அறிவு உற்பத்தியும், நூல் வெளியீடும்

**பகுதி - 1**

‘அரசறிவியல் கலைக்களஞ்சியம்’ (Encyclopedia Of Political Science) என்னும் தலைப்பில் அமையும் இத் தொடரில் அரசியல் கோட்பாடுகள் (Political Theories), அரசியல் விஞ்ஞான எண்ணக்கருக்கள் (Concepts) சமகால அரசியல் விவாதங்கள் என்பன குறித்த கட்டுரைகள் வெளியிடப்படவுள்ளன. பொதுவெளியில் (Public Sphere) நடைபெறும் அரசியல் விவாதங்களை ஆரோக்கியமுடையனவாக ஆக்குவதற்கு, அரசியல் கருத்தாக்கங்கள் குறித்த தெளிவான புரிதலை ஏற்படுத்துவதும், சமூகத்தின் பல மட்டங்களிற்கும் அரசியல் அறிவை எடுத்துச் செல்வதும் அவசியமான பணி என நாம் உணருகின்றோம். தமிழ் அரசியல் சூழலில் நிலவும் கோட்பாட்டு வறுமையை (Theoretical Poverty) நீக்குவதற்கு இக் கட்டுரைத் தொடர் உதவும் என்பது எமது நம்பிக்கை. தமிழ்ச் சமூகத்தில் அறிவியல் மூலதனம் (Intellectual Capital) ஒரு சிறு மேட்டிமைக் குழுவிடம் (Elite Group) குவிந்திருப்பதை நீக்கி, அறிவுச் செல்வத்தின் மறுபங்கீட்டின் மூலம் சமூக விடுதலை, ஜனநாயக மயப்படுத்தல், அடிமட்டத்தினர் அதிகாரத்தில் பங்கேற்றல் ஆகிய இலக்குகளை அடைதல் இத் தொடரின் நோக்கமாகும்.

ஆங்கில மூலம்: ஏ.எம். நவரட்ண பண்டார, ஜயதேவ உயன்கொட


கந்தையா சண்முகலிங்கம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது. ‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

சமூக விஞ்ஞானங்களில் ஒன்றான 'அரசியல் விஞ்ஞானம்' என்ற கல்வித்துறை 1921 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் 80 ஆண்டுகளுக்கு மேலாக, பல்கலைக்கழக நிலையில் ஒரு கற்கைத் துறையாக வளர்ச்சியுற்ற வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துக்கூறும் 'இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அரசியல் விஞ்ஞான கல்வியின் வரலாறு' என்ற தலைப்பிலான கட்டுரை 'எழுநா' செப்டெம்பர் இதழில் பிரசுரிக்கப்பட்டது. அக்கட்டுரை ஏ.எம். நவரட்ண பண்டார, ஜயதேவ உயன்கொட என்னும் இரு பேராசிரியர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 'Political Science and Public Policy: Cultivating the Critical Spirit' என்ற தலைப்பிலான ஆங்கிலக் கட்டுரையின் முதல் 5 பக்கங்களில் கூறப்பட்ட கருத்துகளைச் சுருக்கியும் தொகுத்தும் தருவதாக அமைந்தது. 22 பக்கங்கள் நீண்டதான அக்கட்டுரையின் எஞ்சிய 17 பக்கங்களில் கட்டுரையாசிரியர்கள் கூறியிருக்கும் கருத்துகளைச் சுருக்கியும் தொகுத்தும் வழங்குவதாக இம்மாதக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இம்மாதக் கட்டுரையின் உள்ளடக்கம் அரசியல் விஞ்ஞானம் என்னும் கல்வித்துறையில் பல்கலைக்கழக நிலையில் இடம்பெற்ற ஆராய்ச்சி, அறிவு உற்பத்தி (Knowledge Production), நூல் வெளியீடுகள் என்னும் விடயங்கள் குறித்துக் கவனக் குவிப்பைச் செலுத்துவதாக அமைகிறது. இதனால் இக்கட்டுரையின் தலைப்பை 'இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அரசியல் விஞ்ஞானக் கல்வி: ஆராய்ச்சியும், அறிவு உற்பத்தியும், நூல் வெளியீடும்' எனக் குறிப்பிட்டுள்ளோம்.

## கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு வெளியே அரசியல் விஞ்ஞானக் கல்வி கொழும்பு, சிறி ஜயவர்த்தனபுர, களனி, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களில் நீண்டகாலமாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடம் புதிதாக 1963 இல் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலம் முதல் அரசியல் விஞ்ஞானம் பொதுக் கலைப்பட்டத்திற்கு (B.A) ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத்தினைப் போன்று கொழும்பிலும் அப்பாடம் பொருளியல் துறையின் உபபிரிவாக இருந்து வந்தது. 1973 இல் கலைப்பீடத்தில் மறுசீரமைப்பு நிகழ்ந்த போது, வரலாறும் அரசியல் விஞ்ஞானமும் (The Department of History and Political Science) எனும் பெயரில் புதிய துறை செயற்படத் தொடங்கியது. அப்போது குமாரி ஜயவர்த்தன, லெய்டன் (Leitan) ஆகிய இரு பேராசிரியர்களும் அரசியல் விஞ்ஞானத்தைக் கற்பித்த முன்னோடிகளாக விளங்கினர். இவர்கள் இருவரும் அரசியல் விஞ்ஞானம் பொருளியல் துறையின் உபபிரிவாக இயங்கிய போது, 1969 இல் இணைந்து கொண்டவர்கள்; பொதுக் கலைப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இப்பாடத்தைக் கற்பித்து வந்தனர். பேராசிரியர் குமாரி ஜயவர்த்தன அவர்கள் 'லண்டன் ஸ்கூல் ஒவ் இக்கொனமிக்ஸ்' (LSE) இல் கல்வி கற்றுக் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். பின்னர் அவர் அப் பல்கலைக்கழகத்திலேயே கலாநிதிப் பட்டத்தையும் (Ph.d) பெற்றுக்கொண்டார். பேராசிரியர் லெய்டன் அவர்கள் கலைமாணிப் பட்டத்தை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட பின் ஐக்கிய இராச்சியத்திற்குச் சென்று 'லண்டன் ஸ்கூல் ஒவ் இக்கொனமிக்ஸ்' இல் கற்று கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வரலாறும் அரசியல் விஞ்ஞானமும் துறை, அரசியல் விஞ்ஞானப் பாடத்தைப் பொதுக் கலைப்பட்டத்திற்கான ஒரு பாடமாகவே தொடர்ந்து கற்பித்து வந்தது. 1989 ஆம் ஆண்டில் கலாநிதி ஜயதேவ உயன்கொட கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கொண்ட பின்னர், அங்கு அரசியல் விஞ்ஞானத்தில் சிறப்புப் பட்டப்படிப்பு (B.A - Hons) ஆரம்பிக்கப்பட்டது. புதிய அத்துறையின் விரிவுரையாளர்கள் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டது. அரசியல் விஞ்ஞானத்தைச் சிறப்பு பாடமாகக் கற்ற மாணவர்கள் வரலாறு, சர்வதேச உறவுகள் ஆகிய பாடங்களைக் கற்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

2001 ஆம் ஆண்டில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 'அரசியல் விஞ்ஞானமும் பொதுக் கொள்கையும்' எனும் தனித்துறை (The Department of Political Science and Public Policy) தாபிக்கப்பட்டது. 'பொதுக் கொள்கை' என்ற விடயம் சேர்க்கப்பட்டதன் பயனாக அரசியலோடு பொது நிருவாகவியல் (Public Administration) எனும் பாடமும் பாடவிதானத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டது. அரசியல் விஞ்ஞானமும் பொதுக் கொள்கையும் நான்கு ஆண்டுகள் சிறப்புப் பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்பட்ட பின், பாடவிதானம் விரிவாக்கம் பெற்றது. புதிய பாடங்களாக அரசியல் பொருளாதாரம் (Political Economy), பொதுக் கொள்ளை (Public Policy), உள்ளூராட்சி அரசாங்கம், பெண்களும் அரசியலும், அரசியல் சமூகக் கோட்பாடு (Political and Social Theory), முரண்பாடுகளின் தீர்வு (Conflict Resolution), சமூக ஆராய்ச்சியின் மெய்யியலும் முறையியலும் (Philosophy and Methodology of Social

Research), அரசியல் சமூகவியல் (Political Sociology), உலகின் பிராந்தியங்களின் அரசியல் (Politics of World Regions) ஆகிய புதிய பாடங்கள் பல மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன. சிறப்புப் பட்டப்படிப்பை மேற்கொண்ட மாணவர்களுக்கு கள ஆய்வு முறைகள் பயிற்றுவிக்கப்பட்டன. கள ஆய்வை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதிச் சமர்ப்பித்தல் வேண்டும் என்ற விதிமுறையும் பின்பற்றப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சிறப்புப்பட்ட வகுப்பில் மாணவர்களுக்கு அரசியல் விஞ்ஞானம் பல்சங்கம நோக்கில் (Multi-disciplinary Approach) அமைந்த கல்வியாக அமைந்தமை குறிப்பிடப்பட வேண்டிய மாற்றமாகும்.




Image Source - www.lawbookexchange.com

2007 ஆம் ஆண்டில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி (M.A) கலாநிதி (Ph.d) பின்பட்டப்படிப்பு நோர்வே நாட்டின் ஒஸ்லோ பல்கலைக்கழகத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஒஸ்லோ பல்கலைக்கழகத்தின் கூட்டு முயற்சியாக அமைந்த இந்தத் திட்டத்தின் கீழ், முதலாவது அணியைச் சேர்ந்தவர்களான மூவர் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றனர்.

தற்போது கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற முதுநிலை விரிவுரையாளர்கள் 4 பேரும், முதுகலைமாணிப் பட்டம் பெற்ற விரிவுரையாளர்கள 5 பேரும், முதுகலைப் பட்டம் பெற்ற உதவி விரிவுரையாளர்கள் 5 பேரும், முதுகலைப் பட்டம் பெற்ற உதவி விரிவுரையாளர் ஒருவரும் கடமையாற்றுகின்றனர்.

எழுநா செப்டம்பர் இதழ் கட்டுரையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத் துறையின் செயற்பாடுகள் பற்றி விரிவான குறிப்புகள் தரப்பட்டன. ஏறக்குறைய இவ்விரு பல்கலைக்கழகங்களின் மாதிரியில், அரசியல் விஞ்ஞானம் என்ற கல்வித்துறை இலங்கையின் பிற பல்கலைக்கழகங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளது. தென்கிழக்குப் பல்கலைக்கழகம் (ஒலுவில்), கிழக்குப் பல்கலைக்கழகம் (மட்டக்களப்பு), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியனவற்றில் அரசியல் விஞ்ஞானம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

## ஆய்வு வெளியீடுகள்

ஆய்வு வெளியீடுகள் மூலம் பல்கலைக்கழகங்களின் சமூக விஞ்ஞானிகள் அரசியல் விஞ்ஞானக் கல்விக்கு வழங்கிய பங்களிப்புப் பற்றி பேராசிரியர் நவரட்ண பண்டாரவும், ஜயதேவ உயன்கொடவும் தந்துள்ள விவரங்களை இத்தமிழ்க் கட்டுரையில் அடுத்துத் தரவுள்ளோம். இலங்கைப் பல்கலைக்கழகங்களில் 1942 முதல் இற்றைவரையான காலத்தில் கடமையாற்றிய பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் எழுதிய ஆய்வுகள், அவர்களால் வெளியிடப்பட்ட முக்கியமான நூல்கள் என்பன பற்றிய மதிப்பீடாக அமையும் இத்தகவல்கள் இளந்தலைமுறை ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக அமையும் எனக் கருதுகிறோம்.

## சேர் ஐவர் ஜெனிங்ஸ்

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தராகப் பணியாற்றிய சேர் ஐவர் ஜெனிங்ஸ் அரசியல் விஞ்ஞானம், அரசியல் யாப்புச் சட்டம் எனும் இரு விடயங்கள் சார்ந்தும் பல நூல்களை எழுதியுள்ளார். 'The Constitution of Ceylon' எனும் நூலை இவர் 1951 ஆம் ஆண்டில் வெளியிட்டார். இலங்கையின் சோல்பரி அரசியல் யாப்புப் பற்றிய முதலாவது புலமைசார் ஆய்வு என்ற சிறப்பை இந்நூல் பெறுகிறது. ஜெனிங்ஸ் அவர்கள் இலங்கையில் கடமையாற்றிய காலத்தில் பின்வரும் நூல்களையும் எழுதிப் பிரசுரித்தார்.

1. *The British Commonwealth of Nations* (1948)
2. *The British Constitution*

3. *Approaches to Self - Government*

4. *The Queen's Government*

5. *Party Politics* (1955)

இலங்கையில் கடமையாற்றிய காலத்தில் ஜெனிங்ஸ் அவர்கள் பருவ இதழ்களில் (*Journals*) எழுதி வெளியிட்ட ஆய்வுக்கட்டுரைகள் பின்வருமாறு.

1. *Ceylon General Elections* - 1947, *The University of Ceylon Review* 3 (*July* 1948) 133-195.

2. *Nationalism and Political Development in Ceylon. Ceylon Historical Journal iii,* (*July - October,* 1953).

3. *Additional Notes on General Elections: Ceylon Historical Journal* 11: 34 (*January. April* 1953).

## I.D.S. வீரவர்த்தன

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (பேராதனை) அரசியல் விஞ்ஞானம் பாடத்தை மாணவர்களுக்குக் கற்பித்த முதலாவது இலங்கையர் என்ற சிறப்பு கலாநிதி *I.D.S.* வீரவர்த்தன அவர்களுக்கே உரியது. அரசியல் விஞ்ஞானம் பொருளியல் துறையின் ஒரு பிரிவாக விளங்கிய காலத்தில் அரசியல் விஞ்ஞான விரிவுரையாளராக இவர் கடமையாற்றினார்.

*Government and Politics in Ceylon* (1941 - 46) எனும் இவரது நூல் 1951 இல் வெளியானது. இலங்கையின் அரசியல் பற்றி இலங்கையர் ஒருவரால் எழுதப்பட்ட முதலாவது நூல் என்னும் சிறப்பு இவரது இந்நூலுக்கு உள்ளது. இலண்டன் பல்கலைக்கழகத்திற்கு இவரால் சமர்ப்பிக்கப்பட்ட கலாநிதிப்பட்ட ஆய்வேடு பின்னர் இவரால் மேற்குறித்த நூலாகப் பிரசுரிக்கப்பட்டது. இந்நூல் 1962 இல் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. சேர் ஐவர் ஜெனிங்ஸ் 1947 பொதுத் தேர்தல் பற்றிய ஆய்வுக் கட்டுரையை எழுதினார் என மேலே குறிப்பிட்டோம். அவரைத் தொடர்ந்து 1952, 1956 ஆகிய இரு பொதுத் தேர்தல்கள் பற்றிய ஆய்வுகளை *I.D.S.* வீரவர்த்தன அவர்கள் எழுதினார். '*General Elections in Ceylon* 1952' எனும் இவரது ஆய்வுக் கட்டுரை '*The Ceylon Historical Journal* 11: 1+2 (*July - October* 1952)' இதழில் பிரசுரமானது. 1956 பொதுத் தேர்தல் பற்றிய இவரது ஆய்வு '*Ceylon General Election* - 1956' எனும் பெயரில் *M.D.* குணசேன பதிப்பக வெளியீடாக 1960 இல் வெளிவந்தது. அவரது ஏனைய இரு நூல்கள் பின்வருவன.

1. The Senate of Ceylon At Work (1955, Ceylon University Press)




Image Source - www.abebooks.com

2. Ceylon and Her Citizens (1956, Oxford University Press, Madras)

*I.D.S.* வீரவர்த்தன அவர்கள் இலங்கையின் பொருளியல், அரசியல் என்பன பற்றி சிங்கள மொழியில் பாட நூல்களை எழுதிய முன்னோடியுமாவார்.

## ஏ.ஜே. வில்சன்

இலங்கையின் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர்களில் உலக அளவில் புகழ்பெற்றவர்களில் ஒருவரான ஏ.ஜே. வில்சன் அவர்கள் 1952 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்து கொண்டார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1972 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். 1969 இல் இவர் அரசியல் விஞ்ஞானத்துறையின் முதலாவது பேராசிரியராக நியமனம் பெற்றார். 1972 இல் பேராதனையில் இருந்து பதவி விலகிய வில்சன் அவர்கள் அவ்வாண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரை கனடாவின் நியு பிரண்ஸ்விக் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் துறைப் பேராசிரியராகக் கடமையாற்றினார். 2000 ஆம் ஆண்டு அவர் காலமானார். அவர் எழுதிய பெறுமதிமிக்க ஆய்வு நூல்களில் சில பின்வருவன.

1. Politics in Sri Lanka: 1947 – 1973 (1974 MacMillan)

2. Electoral Politics in an Emerging State: The Ceylon General Election of May 1970 (1975, Cambridge University Press)

3. The Gaullist System in Asia: The Constitution of Sri Lanka 1978 (1980 MacMillan)

4. The States of South Asia: Problems of National Integration (Edited. 1982: Hurst)

5. The Breakup of Sri Lanka: The Sinhalese Tamil Conflict (1988. C. Hurst)

6. S.J.V. Chelvanayagam and The Crisis of Tamil Nationalism, 1947 – 1977: A Political Biography (1994, University of Hawaii Press)

7. The Post – Colonial States of South Asia: Democracy, Development and Identity (2001, Palgrave)

வில்சன் அவர்கள் இலங்கையின் அரசியல் பற்றிய ஆய்வுகளை எழுத் தொடங்கிய 1950களில் இலங்கை அரசியல் பற்றிய நூல்களை மேற்குலகத்தின் ஆய்வாளர்களே எழுதிக் கொண்டிருந்தனர். சேர் ஐவர் ஜெனிங்ஸ், ஹவ்வார்ட் றிஜின்ஸ் (Howard Wriggins) றொபர்ட் கெர்ணி (Robert Kerney), ஜேம்ஸ் யுப் (James Jupp) ஆகிய நான்கு புலமையாளர்கள் இலங்கையின் அரசியல் பற்றிய நூல்களை வெளியிட்டவர்களாக அறியப்பட்டிருந்தனர். றிஜின்ஸ் எழுதிய Dilemmas of a New Nation (1960, Princeton University Press) என்ற நூலும், Kearney எழுதிய The Politics of Ceylon (Sri Lanka ) (1973, Cornell University Press) என்ற நூலும் பிரபலம் பெற்ற நூல்களாக இருந்தன. றிஜின்ஸ் கொலம்பியப் பல்கலைக்கழகத்திலும், கெர்ணி நியுயோர்க் நகரின் 'Syracuse' பல்கலைக்கழகத்திலும் பேராசிரியர்களாகக் கடமையாற்றினர். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகவும் பின்னர் ஹவ்வார்ட் றிஜின்ஸ் கடமையாற்றினார். ஜெனிங்ஸ் இலங்கையில் அரசியல் யாப்பு சார்ந்த விடயங்களுக்கே ஆய்வுகளில் முக்கியத்துவம் அளித்தார். றிஜின்ஸ், கெர்ணி ஆகிய இருவரும் பின்காலனிய தேசம் (Post Colonial Nation) என்ற கட்டத்தை இலங்கை அடைந்த வேளையில், தேசத்தைக் கட்டி வளர்த்தல் (Nation - Building), இனங்களுக்கிடையே ஐக்கியத்தை உருவாக்கி நாட்டில் ஒற்றுமையை உருவாக்குவதில் எதிர்கொண்ட சவால்கள் போன்ற அரசியல் பிரச்சினைகள் குறித்து தமது ஆய்வுகளில் கவனம் செலுத்தி வந்தனர். கெர்ணியின் Communalism and Language in The Politics of Ceylon (1967, Durham: Duke University Press) என்ற நூல் இலங்கையின் அரசியலும் மொழியும், மொழி அடிப்படையிலான இனவாதமும் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதாக அமைந்தது. கெர்ணி அவர்கள் ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளை எழுதி பருவ இதழ்களில் வெளியிட்டார். இவ்வாய்வுகள் சிங்கள தேசியவாதம், தமிழ்த் தேசியவாதம், இலங்கையின் இனத்துவ முரண்பாடுகள், இலங்கையின் இடதுசாரி இயக்கம், இலங்கையின் கட்சிமுறையின் வளர்ச்சி போன்ற பல்வேறு விடயங்களைப் பற்றியனவாக அமைந்தன. ஜேம்ஸ் யுப் (James Jupp) அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர். இவர் இடதுசாரி அரசியல் சார்புடைய ஒருவராவார். இவர் எழுதிய Sri Lanka: A Third World Democracy (1978, Frank Cass) என்னும் நூல் இலங்கையில் சுதந்திரத்திற்குப் பிந்திய காலத்து அரசியல் வளர்ச்சிப் போக்குகள் பற்றி ஆராய்வதாகும். இந்நூல் அரசியல் நிறுவனங்கள் (Political Institutions), அரசியல் செயல்முறைகள், அரசியல் சமூகத்தில் உருவான முரண்பாடுகள் என்பன குறித்துக் கவனம் குவிப்பதாக அமைந்தது.

## ஷெல்டன் கொடிகார



ஷெல்டன் கொடிகார

Image Source - www.abebooks.com

1979 இல் பேராதனையில் அரசியல் விஞ்ஞானம் என்ற தனித்துறை உருவாக்கப்பட்ட போது ஷெல்டன் கொடிகார (Shelton Kodikara) அதன் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகள் (International Relations) தொடர்பான இளங்கலை, முதுகலைமாணிப் பட்ட வகுப்பு தொடங்கப்பட்ட போது அவற்றை நடத்துவதை பொறுப்பேற்க கொழும்புக்கு இடமாற்றம் பெற்றார். கொடிகார அவர்கள் சர்வதேச உறவுகள், இலங்கை - இந்திய உறவுகள், இலங்கையின் அயலுறவுக் கொள்கை ஆகியவற்றைக் கற்பிப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டார். பின்வருவன அவரது இத்துறைகள் சார் நூல்களாகும்.

1. Indo – Lanka Relations Since Independence (1965, Ceylon Institute of World Affairs)

2. Foreign Policy of Srilanka : A Third World Perspective (1982, Chanakya Publishers)

3. Dilemmas of Indo – Lanka Relations (1991, Bandaranaike Centre for International Studies)

## விஸ்வ வர்ணபால

இலங்கையின் அரசியல் தொடர்பாக வெவ்வேறு விடயங்கள் குறித்துக் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய ஆய்வு நூல்களை எழுதியவராகப் பேராசிரியர் விஸ்வ வர்ணபால (*Wiswa Warnapala*) விளங்குகிறார். இலங்கையின் பொது நிர்வாகம் பற்றிய '*Civil Administration in Ceylon: A study in Bureau cratic Adaptation*' (*Government Press*) என்னும் நூல் அவரது முதலாவது ஆக்கமாகும். லீட்ஸ் பல்கலைக்கழகத்திற்கு (*University of Leeds*) அவர் சமர்ப்பித்த கலாநிதிப்பட்ட ஆய்வேடு (1970) பின்னர் மேற்படி நூலாகப் பிரசுரிக்கப்பட்டது. அவரால் எழுதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட பிற நூல்கள் சில பின்வருமாறு.

1. The Srilanka Political Scene (1993, Navarang)
2. Ethnic Strife and Politics in Srilanka (2001)
3. Local Politics in Sri Lanka: An Analysis of the Local Government Election of May 1991 (1993, Windsor)
4. Welfare and Politics in Sri Lanka (1997 With David. E. Woodsworth, MacGill University)
5. Parliament and Public Accountability in Sri Lanka (2004, Godage Publishers)
6. Aspects of Politics and Higher Education in Sri Lanka : A Collection of Essays (2010, Godage Publishers)

## ரஞ்சித் அமரசிங்க



ரஞ்சித் அமரசிங்க
Image Source - www.colombotelegraph.com

1994 இல் விஸ்வ வர்ணபால அவர்கள் பிரதி அமைச்சராக நியமனம் பெற்றதும் பல்கலைக்கழகத்தில் இருந்து பதவி விலகிச் சென்றார். பேராதனையில் அவரின் இடத்திற்கு பேராசிரியர் ரஞ்சித் அமரசிங்க (*Ranjith Amarasinghe*) நியமிக்கப்பட்டார். ரஞ்சித் அமரசிங்க அவர்களின் முக்கியமான படைப்பான '*Revolutionary Idealism: A Study of Trotskyism in Sri Lanka*' இலங்கைச் சமூக விஞ்ஞானிகள் சங்கத்தால் வெளியிடப்பட்டது. லங்கா சமசமாஜக் கட்சியின் வரலாறு பற்றிய முக்கியமான முதலாவது ஆய்வு லெர்ஸ்கி (*George Tan Lersky*) என்னும் அமெரிக்கப் புலமையாளரால் 1968 இல் எழுதப்பட்டது.

'*Origins of Trotskyism in Ceylon: A Documentary History of the Lanka Sama Samaja Party*, 1935 - 1942 (1968, *Stanford University Press*)' என்ற லெர்ஸ்கியின் நூலிற்குப் பின்னர் வெளிவந்த ரஞ்சித் அமரசிங்கவின் நூலும் இலங்கையின் அரசியல் கட்சி ஒன்றின் வரலாற்றைப் பற்றியது என்ற வகையில் முக்கியமானது. ரஞ்சித் அமரசிங்க பருவ இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதினார். சில நூல்களின் அத்தியாயங்களாக அமைந்த அவரது ஆய்வுகள் சிலவும் உள்ளன. அவை பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

1. Legislative Functions of Provincial Councils: Statute Making and Capacity Issues (Y.R. Amarasinghe et. al. (Eds) Thirty Years of Devolution The Working Of The Provincial Councils In Srilanka, ICES Colombo, 2010)
2. The Working of The Provincial Councils: Centre Province Relations (Y.R. Amarasinghe et. al. Eds)
3. Asymmetrical Devolution: Experience in Power Sharing: The International Experience, (Y.R. Amarasinghe et. al. Eds) (ICES Colombo, 2011)

## அ. சிவராஜா

பேராசிரியர் அ. சிவராஜா பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றியவர். இவர் 2014 ஆம் ஆண்டு காலமானார். இலங்கைத் தமிழ்த் தேசியவாதம் குறித்து இவர் இரு நூல்களை எழுதியுள்ளார். அந்நூல்கள் பற்றிய விவரம் வருமாறு.

1. Politics of Tamil Nationalism in Sri Lanka (1996, South Asian Publishers)
2. The Federal Party of Srilanka: The Strategy of an Ethnic Minority Party in Government and Opposition 1949 – 2002 (2007, Kumaran Books)

பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் அவர்களின் மாணவரான அ. சிவராஜா அவர்கள் கனடாவின் நியு பிரண்ஸ்விக் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

## பகுதி - 2

### லக்சிறி பெர்ணான்டோ

பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் அவர்களின் மாணவராக கனடாவின் நியு பிரண்ஸ்விக் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பின்பட்டப் படிப்பை மேற்கொண்ட இன்னொருவர் பேராசிரியர் லக்சிறி பெர்ணான்டோ (*Laksiri Fernando*) ஆவார். அவர் வித்தியோதயப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்துறையில் விரிவுரையாளராக தனது கல்விப் பணியை ஆரம்பித்தார் (இப்பல்கலைக்கழகம் பின்னர் சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்றது). லக்சிறி பெர்ணான்டோ அவர்கள் 2002 ஆம் ஆண்டில் '*Human Rights, Politics and Sri Lanka*' என்ற நூலை வெளியிட்டார். அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகத்திற்கு பெர்ணாண்டோ சமர்ப்பித்த ஆய்வேடு மேற்குறிப்பிட்ட தலைப்புடைய நூலாக இலங்கை சமூக விஞ்ஞானிகள் சங்கத்தால் பிரசுரிக்கப்பட்டது.

### காமினி சமரநாயக்க

பேராசிரியர் காமினி சமரநாயக்க (*Gamini Samaranayake*) அரசியல் வன்முறையும் முரண்பாடுகளைத் தீர்வு செய்தலும் (*Political Violence and Conflict Resolution*) எனும் கற்கை நெறியைப் பயின்றவர். அத்துறையில் கலாநிதிப்பட்டம் (*Ph.d*) பெற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானம் பாடவிதானத்தில், 'அரசியல் வன்முறையும் முரண்பாடுகளைத் தீர்வு செய்தலும்' என்ற விடயத்தை உள்ளடக்குவதற்கும், அவ்விடயம் பற்றிக் கற்பிப்பதற்கும் இவர் உதவினார். அரசியல் சமூகக் கோட்பாடு, கிளர்ச்சி அரசியல் (*Radical Politics*) என்பன பற்றி இவர் நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். *Political Violence in Sri Lanka* 1971 - 1987 (2008, *Gayan Publishing*) என்பது இவரது நூல்களில் ஒன்றாகும். கட்டுரைத் தொகுப்பு நூல்களின் அத்தியாயங்களாக அமையும் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார்.

### கமலா லியனகே

பேராசிரியர் கமலா லியனகே (*Kamala Liyanage*) அவர்கள் 'பெண்களும் அரசியலும்' (*Women and Politics*) என்னும் விடயம் பற்றிய சிறப்புத் தேர்ச்சியுடையவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானப் பிரிவில் '*Gender Studies*' என்னும் விடயப் பொருளை அறிமுகம் செய்த முன்னோடியாக இவர் விளங்குகிறார். கட்டுரைத் தொகுப்பு நூல்களின் அத்தியாயங்கள் என்ற வகையிலும், குறுநூல்கள் என்ற வகையிலும் அமையும் பின்வரும் ஆய்வுகளை இவர் வெளியிட்டுள்ளார்.

1. Party Women: Their Role in Sri Lankan Politics (1996)
2. Women in Political Parties: The Sri Lankan Experience (1999)
3. Testing the Politics of Presence: Women Representation in Local Government in Sri Lanka (2028)
4. Women and Political Parties in Sri Lanka (2018)




Image Source - books.google.co.in

### A.M. நவரட்ண பண்டார

பேராசிரியர் நவரட்ண பண்டார 'பொது நிர்வாகமும் பொதுக் கொள்கையும்' (*Public Administration and Public Policy*) என்னும் பாடத்தை அரசியல் விஞ்ஞானத்துறைக் கல்வியில் அறிமுகம் செய்த முன்னோடியாவார். இப்பாடத்தை விட இலங்கையின் அரசாங்கம், இலங்கையின் அரசியல், மனித உரிமைகளும் பிரஜா அந்தஸ்தும், பொது முகாமைத்துவம் ஆகிய பாடங்களையும் கற்பித்து வந்துள்ளார். அவரது முக்கியமான ஆய்வுகள் பின்வருவன.

1. *Management of Ethnic Secessionist Conflict: The Big Neighbor Syndrome* (Dartmouth, Aldershot 1995). இந்நூல் யோர்க் பல்கலைக்கழகத்திற்கு இவர் சமர்ப்பித்த கலாநிதிப்பட்ட ஆய்வேட்டின் திருத்திய பதிப்பாகும்.

2. *National Movement during British Colonialism* (2007). சிங்களத்தில் எழுதப்பட்ட இந்நூல் இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்திற்காகச் சமர்ப்பித்த ஆய்வேட்டின் திருத்திய பதிப்பாகும்.

கட்டுரைத் தொகுப்புகளின் அத்தியாயங்களாக அமையும் இவரது ஆய்வுக் கட்டுரைகளில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. Local Government in Sri Lanka (Cooray and Abeyaratne (Eds)) Public Administration in South Asia. Taylor and Francis, 2013)
2. History and Context of Public Administration in Sri Lanka (Sabhrwal and Bermen (Eds)) Public Administration in South Asia. Taylor and Francis, 2013)
3. Politics of Devolving Power. C. Y. R. Amarasinghe et.al (Eds) Thirty Years Of Devolution: The Working of The Provincial Councils in Srilanka (ICS, Colombo, 2010)
4. State Building and Nation Building in India C. Y. R. Amaras inghe et.al. (Eds) Power Sharing International Experience ICS, Colombo, 2011
5. Nation Building or Nations Building a Critical Evaluation of The Theory and Practice of National Integration in Sri Lanka, 2006 (Amal Jeyawardene et.al)
6. Ethnic Relations and State Crafting in Post Independence Sri Lanka (Lakshman and Tisdell (Eds) Secrets of Develop ment of Sri Lanka Since Independence, The University of Queensland, 1999)

நவரட்ண பண்டார அவர்கள் பருவ இதழ்களிலும் ஆய்வுக் கட்டுரைகளைப் பிரசுரித்துள்ளார். *Journal of Church and State* (*Vol*, 57. *No*, 4. 2015) இதழில் அவர் *Nation, Constitutionalism and Buddhism* (2015) என்ற நூல் பற்றிய மதிப்புரையை எழுதியுள்ளார்.

## குமாரி ஜயவர்த்தன

ஆய்வு நூல்களை எழுதிப் பிரசுரிப்பதில் முன்னோடியாக விளங்கிய ஒருவரான குமாரி ஜயவர்த்தன இலங்கையில் *H.S.C* வகுப்புவரை




Image Source - www.amazon.in

(இன்றைய *A/L* பரீட்சைக்குச் சமமானது) கல்வி கற்ற பின்னர் இங்கிலாந்து சென்று மேற்படிப்பை மேற்கொண்டார். அவர் 'லண்டன் ஸ்கூல் ஒவ் இகொனமிக்ஸ்' இல் கலாநிதிப் பட்டத்திற்காகச் சமர்ப்பித்த ஆய்வேடு பின்னர் *'The Rise of the Labour Movement in Ceylon'* என்னும் நூலாக 1972 இல் *Duke University Press* பதிப்பாக வெளிவந்தது. இலங்கையின் தொழிலாளர் இயக்க வரலாறு பற்றிய சிறப்பு மிக்க நூல் என்ற தகுதியைப் பெற்ற இந்நூல் இன்று வரை இத்துறை பற்றிய முக்கியமான நூலாக மதிக்கப்பட்டு வருகிறது. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் துறையில் பணியாற்றிய குமாரி ஜயவர்த்தன அவர்கள் நெதர்லாந்தின் ஹேக் (*Hague*) நகரின் *'Institute of Social Studies'* நிறுவனத்திலும் கல்விப் பணியாற்றினார். பல்கலைக்கழகங்களின் கல்விப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் இலங்கையினது சமூக வரலாறு (*Social History*), தொழிலாளர் இயக்கங்களிலும், சமூக இயக்கங்களிலும் இலங்கைப் பெண்களின் வகிபாகம் ஆகிய விடயங்கள் குறித்துப் பல நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரது முக்கியமான நூல்களில் சில வருமாறு.

1. Feminism and Nationalism in the Third World (1986, Zed Press)
2. The White Women's Other Burden: Western Women in South Asia during British Rule (1995, Routledge)
3. Erasure of The Euro – Asian: Recovering Early Radicalism and Feminism in South Asia (2007, Social Scientists Association)
4. No Body to Some Bodies: The Rise of the Colonial Bourgeoi sie in Sri Lanka (2002, Zed and 2007 Social Scientist Association)
5. Perpetual Ferment: Popular Revolts in Sri Lanka during the 18th and 19th Centuries (2010, Social Scientist Association)
6. Class, Ethnicity, and Patriarchy in Sri Lankan Plantations:

Two Centuries of Power and Protest (2015 With Rachel Kurien, Orient Blackswan)

குமாரி ஜயவர்த்தன அவர்கள் மூன்றாம் உலக நாடுகளின் பெண்ணிய இயக்கங்கள் (*Feminist Movements*) பற்றிய ஆய்வுகளை எழுதிய முன்னோடியாகவும் மதிக்கப்படுகிறார்.

**ரெஸ்ஸி லெய்டன்**

பேராசிரியர் ரெஸ்ஸி லெய்டன் (*Tressie Leitan*) கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தை நீண்டகாலமாகக் கற்பித்து வந்தார். இலங்கையில் பொது நிர்வாகம், இலங்கையில் உள்ளூராட்சி முறையின் வளர்ச்சியும், வரலாறும் ஆகிய இரு விடயங்களின் ஆய்வில் லெய்டன் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். அவரது முதலாவது ஆய்வு நூலான '*Local Government and Decentralised Administration in Sri Lanka* (1979, Lake House)' ஒரு முன்னோடியான ஆய்வு நூலாகும். 'லண்டன் ஸ்கூல் ஒவ் இகொனமிக்ஸ்' இல் கலாநிதிப்பட்ட ஆய்வாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டை அவர் மேற்படி நூலாக வெளியிட்டார். லெய்டன் அவர்களின் ஏனைய ஆக்கங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. *The System of Provincial Councils in Sri Lanka: Centre - Province Relations* (1992)
2. *Political Integration through Decentralisation and Devolution of Power: The Sri Lankan Experience* (1999)
3. *Evolution of Local Government in Post Independent Sri Lanka.* (2015) (இக்கட்டுரை 2015 இல் வெளியிடப்பட்ட கட்டுரைத் தொகுப்பு நூலொன்றின் ஓர் அத்தியாயமாக விளங்குகிறது.)

**பேராசிரியர் ஜயதேவ உயன்கொட**

ஜயதேவ உயன்கொட அவர்கள் 1981 ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இணைந்து அரசியல் விஞ்ஞானத் துறையில் பணியாற்றத் தொடங்கினார். அவர் அரசியல் விஞ்ஞானம் தொடர்பான பல்வேறு விடயங்கள் பற்றிய நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். அவரது நூல்களில் சில வருமாறு.

1. *Reframing Democracy: Perspectives on The Cultures of Inclusion and Exclusion in Contemporary Sri Lanka* (Coordinator Author, 2011, Social Scientist Association)
2. *Liberal Peace in Question: Politics of State and Market Reforms in Sri Lanka* (Coordinator Author, 2011, Anthem Press)




Image Source - rasakatha.lk

3. *State Reforms in Sri Lanka: Issues Directions and Perspectives* (Editor Author, 2013, Social Scientist's Association)
4. *Social Research: Philosophical and Methodological Foundations* (2015, Social Scientists' Association)
5. *Local Government and Local Democracy in Sri Lanka: Institutional and Social Dimensions* (Editor - Author, 2015, Social Scientists' Association)
6. *Political Parties in Sri Lanka: Change and Continuity* (Co. Editor Author, 2018, New Delhi, Oxford University Press)

ஜயதேவ உயன்கொட அவர்கள் பருவ இதழ்களில் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். நூல்கள் பலவற்றின் அத்தியாயங்களாக அமையும் கட்டுரைகளையும் அவர் எழுதியுள்ளார். புதுடில்லி, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் வெளியிட்ட இலங்கையின் அரசியல் கட்சிகள் குறித்த மேற்படி நூல் மிக முக்கியம் வாய்ந்த ஆய்வு நூலாகும். '*Social Research: Philosophical and Methodological Foundations* (2016)' என்னும் அவரது நூல் 'சமூக ஆராய்ச்சி, அதன் மெய்யியல் - முறையியல் அடிப்படைகள்' என்னும் விடயப் பொருள் பற்றியது. இவ்விடயம் பற்றி

தென்னாசியாவில் முதன்முதலாக வெளியாகியுள்ள தரமான நூல் என்ற சிறப்புடைய இந்நூலுக்கு இலங்கை அரசின் விருது (*State Literary Award*) வழங்கப்பட்டது.

கட்டுரைத் தொகுப்பு நூல்களின் அத்தியாயங்களாக அமையும் அவரது ஆய்வுக் கட்டுரைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

1. The IndoLanka Agreement and The State in Sri Lanka (1989)
2. Indo – Bangaladesh Perspectives (1990)
3. The President and Parliament in Sri Lanka: Conflicts, Checks and Balances (1991)
4. Economic Change, The State and The Questions of Security in Sri Lanka (1992)
5. Youth Unrest and Politics in Sri Lanka (1993)
6. The State and The Process of Devolution in Sri Lanka (1995)
7. Militarisation, Violent State, Violent Society: Sri Lanka (1996)
8. Emerging Issues in South Asia's Insecurity (1997)
9. Sri Lanka: Political Violence and Ethnic Conflict (1998)
10. Postindependence Social Movements (Sri Lanka) (1999)
11. A State of Desire? Some Reflections of The Unreformability of Sri Lanka's Post Colonial State (2000)
12. Security's Insecurity: South Asia's States, Societies and Citizens in the Age of Globalisation (2001)
13. Sri Lanka's Conflict: Complexities in a Negotiated Settle ment (2002)
14. Social Conflict, Radical Resistance and Projects of State Power: The Case of Janatha Vimukthi Peramuna in Sri Lanka (2012)
15. Travails of Protracted Civil War in Sri Lanka (2011)
16. The Dynamics of Coalition Politics and Democracy in Sri Lanka (2012)
17. 17. The Puzzle of State Reform during the Civil War in Sri Lanka: Contexts, Barriers and Outcomes (2013)
18. Local Democracy and Citizenship in the Social Margins (2012)
19. Local Government in the Decentralisation, Devolution and Local Self -government Discourses in Sri Lanka (2015)
20. Left Parties in Permanent Decline (in Sri Lanka): Ideological and Strategic Shift and Survival Strategies (2018)

2018 ஆம் ஆண்டில் ஜயதேவ உயன்கொட அவர்கள் இரண்டு ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். இவை பருவ இதழ்களில் பிரசுரமாயின. விவரம் வருமாறு.

1. *Decolonial Thinking, Southern Theory and Search for Alternative Epistemologies in South Asia*. இக்கட்டுரை *Colombo Arts Journal of Social Sciences and Humanities* என்னும் பருவ இதழில் பிரசுரிக்கப்பட்டது.
2. *Modern Buddhism and Democracy: Diverse Encounters in India and Sri Lanka*. இக்கட்டுரை *Society and Culture in South Asia* என்னும் பருவ இதழில் பிரசுரமாயிற்று.

## தொகுப்புரை

பேராசிரியர் நவரட்ண பண்டார, ஜயதேவ உயன்கொட என்னும் இருவராலும் இணைந்து எழுதப்பட்ட கட்டுரையினைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட இக்கட்டுரை இலங்கையில் அரசியல் விஞ்ஞானக் கல்வியின் வளர்ச்சிப் போக்குகளை விவரித்துக் கூறுவதாகவும், அரசியல் விஞ்ஞானத் துறைப் பேராசிரியர்களாலும், புலமையாளர்களாலும் எழுதப்பட்ட ஆய்வுகளைக் கால ஒழுங்குப்படி நிரற்படுத்திக் கூறி அறிமுகம் செய்வதாகவும் அமைந்துள்ளது. இக்கட்டுரையை வாசிக்கும் போது தமிழ் ஆய்வு மாணவர்களுக்கு ஒருண்மை தெற்றெனப் புலப்படும். தமிழில் இலங்கையின் அரசியல் பற்றிய பன்முக நோக்கிலான ஆய்வு நூல்கள் போதியளவு இல்லை என்று கூறுவதை விட, முற்றாகவே இல்லை என்பதே உண்மை நிலை. ஆகையால் எந்தவொரு விடயம் பற்றியும் ஆய்வுக் கட்டுரையை எழுத விரும்பும் ஆய்வு மாணவர் குறித்த விடயம் பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஆய்வுகள் எவை? அவை யாரால் எழுதப்பட்டன? அவ்வாய்வுகளின் அறிவுப் பங்களிப்பு என்ன? என்பன பற்றித் தெரிந்து கொள்ளுதல் முதற்படியாகும். இவ்வினாக்களை மனதில் இருத்தி ஆய்வாளர் ஒருவர் தேடலில் இறங்கும் செயல்முறையை ஆங்கிலத்தில் '*Literature Survey*' என அழைப்பர். இதனைத் தமிழில் 'ஆய்வு நூல்களைத் தேடலும், அவற்றில் பொதிந்துள்ள கருத்துகளையும் ஆய்வு முடிவுகளையும் தொகுத்துக் கொள்ளுதலும், மதிப்பிடுதலும்' எனக் கூறலாம். '*Literature Survey*' ஒன்றிற்குப் பெரிதும் உதவக் கூடியதான இது போன்ற கட்டுரைகள் எவையும் நாம் அறிந்தவரை தமிழில் எழுதப்படவில்லை. இக்கட்டுரை ஆய்வு மாணவர்களுக்குப் பேருதவியாக அமையும் என்பது எமது நம்பிக்கை.

# சடங்குகளின் அரசியல்: எதிர்காலத்தை இறந்தகாலத்தில் கட்டமைத்தல்

**பகுதி 1**

இலங்கையின் சமகாலச் சூழலில் மூன்று விடயங்கள் தவிர்க்கவியலாமல் செல்வாக்குச் செலுத்துகின்றன. முதலாவது மூன்று தசாப்தகால யுத்தம்; இரண்டாவது போரின் முடிவின் பின்னரான இயங்கியல்; மூன்றாவது பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவுகளும். இவை மூன்றும் தன்னளவிலும், இலங்கைச் சமூகத்திலும் ஏற்படுத்தியுள்ள அதிர்வலைகள் அனைத்தும் கவனிக்கப்படவுமில்லை, கருத்தில் கொள்ளப்படவுமில்லை. சமகாலத்தைப் பொருள்கொள்ளல் என்பது வெறுமனே அன்றாடக் கதையாடல்களுக்குரியவற்றுடனோ அல்லது பொதுப்புத்தியில் எப்போதும் நிலைத்திருக்கும் விடயப்பரப்புகளுடனோ மட்டும் நின்றுவிடுவதல்ல. இலங்கைச் சமூகப் படிநிலையில் நலிந்தோரின் கதைகள் சொல்லப்பட வேண்டும்; அதுசார் வினாக்கள் எழுப்பப்பட வேண்டும். இலங்கையின் சமகாலம் குறித்த பெரும்பான்மையான எமது உரையாடல்கள் கவனம் குவிக்கத் தவறும் விடயங்களையும் அமைதியாகக் கடந்து செல்லும் களங்களையும் 'சமகாலத்தைப் பொருள்கொள்ளல்: கவனம்பெறா அசைவியக்கங்கள்' எனும் இத்தொடர் பேசமுனைகிறது.


**மீநிலங்கோ தெய்வேந்திரன்**



ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.

## தொடக்கக் குறிப்புகள்

போருக்குப் பிந்தைய இலங்கையின் வடக்குக் கிழக்கில் சடங்குகளின் அரசியலை இக்கட்டுரை ஆராய்கிறது. வன்முறைக்குப் பிறகு, மதக் கோட்பாட்டை விட அன்றாட மற்றும் நினைவுச் சடங்குகள் சமூக வாழ்க்கையின் மறுகட்டமைப்பை எவ்வாறு வடிவமைக்கின்றன என்பதை ஆராய்கிறது. 2009 மற்றும் 2025க்கு இடையில் நடத்தப்பட்ட நீண்டகால இனவியல் களப்பணியை மையமாகக் கொண்டு சடங்குகள் அரசியல் வெளிப்பாடுகளாகவும், தற்காலிக செயல்களாகவும் எவ்வாறு செயற்படுகின்றன என்பதில் கவனம் குவிக்கிறது. இச்சடங்குகள் போராலும் இடப்பெயர்ச்சியாலும் சிதைவுண்ட சமூகங்களைப் பிணைக்கின்றன. அதேநேரத்தில் அதிகாரம், நினைவகம் மற்றும் சொந்த உறவுகளை மறுகட்டமைக்கின்றன. வலுவான நிறுவன நல்லிணக்கம் இல்லாத நிலையில், சடங்குகள் கடந்த காலத்தைப் பற்றிப் பேசுவதற்கும் கூட்டு எதிர்காலத்தைக் கற்பனை செய்வதற்குமான வட்டாரத் தொழில்நுட்பங்களாகின்றன.

குடிமை நினைவுகூரல்கள், வீட்டுச் சடங்குகள் மற்றும் மீள்குடியேற்றப்பட்ட வடக்குக் கிழக்கில் சாதிய, வர்க்கப் படிநிலைகளை மறுசீரமைத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் இக்கட்டுரை, சமூகங்கள் சடங்கு நடைமுறைகளை எவ்வாறு தேர்ந்தெடுத்துப் புதுப்பிக்கின்றன, கண்டுபிடிக்கின்றன அல்லது இடைநிறுத்துகின்றன என்பதை ஆராய்கிறது. மோதல்களுக்குப் பிந்தைய சூழல்களில் அதிர்ச்சி மற்றும் அரசியல் மறுசீரமைப்பிற்கு இடையில் சடங்குச் செயல்முறைகள் எவ்வாறு மத்தியஸ்தம் செய்கின்றன என்பதை நிரூபிக்க ருவாண்டா, போஸ்னியா மற்றும் கம்போடியாவிலிருந்து ஒப்பீட்டு ஆய்வுகளை முன்வைக்கிறது. மதத்திற்கு அப்பால் நகர்ந்து, இது சடங்கை தற்காலிக பழுதுபார்க்கும் முறையாகக் கருதுகிறது. இது சமூகங்கள் எதிர்காலத்தை முன்னிறுத்தி, நினைவில் வைக்கப்படும் துன்பத்தின் வண்டலில் அதை அடித்தளமாக்குகிறது. போருக்குப் பிந்தைய சடங்குகள் ஒருபோதும் வெறும் கலாசார எச்சங்கள் அல்ல, மாறாக அதிகாரத்தை மீண்டும் பொறிக்கும், சொந்தமாகப் போட்டியிடும் மற்றும் முடிக்கப்படாத அமைதியின் நிழலில் சகிப்புத்தன்மையின் அரசியலைச் செயற்படுத்தும் செயல்கள் என்று இக்கட்டுரை வாதிடுகிறது.

போர் முடிந்து பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, முள்ளிவாய்க்காலில் ஈரப்பதமான மே மாதக் காலையில், ஒரு புளிய மரத்தின் கீழ் பெண்கள் குழு அமைதியாகக் கூடுகிறது. அவர்கள் மல்லிகைப் பூக்கள், பிளாஸ்டிக்கில் லேமினேட் செய்யப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வெள்ளைத் துணி மூட்டைகளைக் கொண்டு வந்துள்ளனர். சில இளைஞர்கள் தூரத்தில் நின்று, அருகிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நரைத்த தலைமுடியுடன் கூடிய ஒரு பெண், தரையில் சிறிய வட்ட மெழுகுவர்த்திகளை வைக்கிறாள். அவள் கிசுகிசுக்கிறாள், “இனி இதை நினைவுகூரல் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அது தேவையுமல்ல. நாங்கள் காரியத்தில் இறங்குகிறோம். இது எமக்கானது. கோயிலுக்குத் திருவிழாவுக்குப் போவது போன்றது.”

2009 இல் போர் முடிவடைந்ததிலிருந்து, இதுபோன்ற கூட்டங்கள் வடக்குக் கிழக்கில் பெருகிவிட்டன. சில வெளிப்படையான அரசியல் நோக்குடையவை. மற்றவை செய்பவர்களின் மனதுக்கு நெருக்கமானவை, உள்ளூரிலேயே தோற்றம் பெற்றவை. இறந்தவர்களுக்கான நினைவுச் சடங்குகள் முதல் வீடு திரும்பும் சடங்குகள் வரை (ஒரு வீடு இருந்த இடத்தில் ஒரு மரத்தை நடுதல், கிணற்றை மீண்டும் கட்டுதல் அல்லது பல வருட இடம்பெயர்வுக்குப் பிறகு அண்டை வீட்டாருக்கு தேநீர் வழங்குதல்). இந்தச் செயல்கள் அரிதாகவே மதச் செயல்களாக வடிவமைக்கப்படுகின்றன. அதற்குப் பதிலாக, அவை தொடர்ச்சி, பழுதுபார்ப்பு மற்றும் அமைதியான எதிர்ப்பைக் குறிக்கின்றன.

போருக்குப் பிந்தைய சமூகங்களின் தார்மீக மற்றும் அரசியல் மறுசீரமைப்பிற்கு சடங்குகள் - முறையானவையும் முறைப்படுத்தப்படாதவையும் - மையமாக உள்ளன என்பதை அங்கீகரிப்பதில் இருந்து இந்தக் கட்டுரை தொடங்குகிறது. இலங்கை அரசு முன்னெடுத்த நல்லிணக்க முயற்சிகள் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டு நீதி ஒத்திவைக்கப்பட்டுள்ள இலங்கையின் வடக்குக் கிழக்கில், சடங்குகளும் அதன் இயங்கியலும், சமூகங்களின் உயிர்வாழ்வின் அர்த்தத்தை வெளிப்படுத்தும் சில வழிகளில் ஒன்றாகும். சடங்குகள் பாதிப்புகளின் கொள்கலன்களாகவும், சமூக நினைவின் களஞ்சியங்களாகவும், எதிர்காலத்தைப் பற்றிய கூற்றுகளை முன்வைப்பதற்கான கருவிகளாகவும் செயற்படுகின்றன.

போருக்குப் பிந்தைய ஆண்டுகளில், நாட்டின் வடக்குக் கிழக்கில் இனவியல் களஆய்வை மேற்கொண்டேன். 2009க்கும் 2025க்கும் இடைப்பட்ட காலத்தில் இப்பகுதிகளுக்கு அவ்வப்போது திரும்பி வந்தேன். இந்த ஆராய்ச்சியில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் படிப்படியாக தங்கள் நிலங்களுக்குத் திரும்புதல், அரசின் கண்காணிப்பின் பெருக்கம் மற்றும் புதிய

அரசியல் ஏற்பாடுகளின் கீழ் பழைய படிநிலைகளை மீண்டும் நிலைநாட்டுதல் ஆகியவற்றைத் தொடர்ச்சியாக அவதானித்தேன். முக்கியமானது யாதெனில் இக்காலப்பகுதியில் இந்தச் செயல்முறைகளுக்கு மத்தியில், மக்களின் அன்றாட வாழ்க்கை சடங்கு ரீதியான செயல்கள் மூலம் பெருகிய முறையில் கட்டமைக்கப்பட்டது. வீடு திரும்பும் விழாக்கள், நினைவுக் கூட்டங்கள், பருவகால விவசாய ஆசீர்வாதங்கள், கிராமப்புறப் பள்ளிகளை மீண்டும் திறப்பது என்பன இவற்றில் சில. இந்த நடைமுறைகளை மதமாக அல்ல, மாறாக 'தம்மைத் தொடர்ந்து இயங்க வைக்கும்' செயல்களாக அவர்கள் வடிவமைத்தனர். வட்டுக்கோட்டையில் ஒரு மீனவர் 2018 இல் என்னிடம் கூறினார், "நாம் இழந்தவற்றுக்கு கோயில்கள் இல்லை, எனவே நாம் நம் சொந்த அடையாளங்களை உருவாக்குகிறோம்."

இந்தக் கட்டுரையை உயிர்ப்பிக்கும் மையக் கேள்வி சடங்குகள் என்றால் என்ன என்பதல்ல, போருக்குப் பிந்தைய அமைப்புகளில் அவை என்ன செய்கின்றன என்பதே. வன்முறைக்குப் பிறகு வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பும்போது மக்கள் ஏன் சடங்கு வடிவங்களுக்குத் திரும்புகிறார்கள்? இந்தக் குறியீட்டு இடங்களுக்கான அணுகலை வடிவமைப்பதில் சாதியும் வர்க்கமும் என்ன பங்கு வகிக்கின்றன? மேலும் இந்தச் செயல்கள் - பெரும்பாலும் நிலையற்றவை மற்றும் பதிவு செய்யப்படாதவை - எதிர்கால அரசியலை எவ்வாறு உருவாக்குகின்றன?

பின்வருவனவற்றில், இலங்கையில் போருக்குப் பிந்தைய சடங்குகள் வெறும் கலாசாரத் தொடர்ச்சிகள் அல்ல, அரசியல் வெளிப்பாடுகள் என்று நான் வாதிடுகிறேன். அவை தற்காலிக மறுசீரமைப்பின் முறைகள்: அவற்றின் மூலம், கடந்தகாலம் கடக்கப்படவில்லை, ஆனால் மீண்டும் குடியேற்றம் நிகழ்கின்றது, மக்கள் சிதைவை விட சகிப்புத்தன்மையில் அடித்தளமாக இருக்கும் எதிர்காலத்தை முன்னிறுத்த உதவுகிறது. இந்த வாதம் சடங்கு மற்றும் காலத்தின் பரந்த மானுடவியலில் இருந்து சடங்கை ஒரு செயல்திறன் மற்றும் நெறிமுறைக் களமாகக் கண்டறிய உதவுகிறது.

மதம் சந்தேகத்திற்கு இடமின்றி இந்த நடைமுறைகளில் பலவற்றில் ஊடுருவியுள்ள நிலையில், எனது கவனம் சடங்கை ஒரு சமூக வடிவமாக - தார்மீக, அரசியல் மற்றும் பொருளாதார உறவுகள் மறுசீரமைக்கப்படும் ஒரு வடிவிலான செயல்திறன் - காண்பதன் மீது உள்ளது. மதச்சார்பற்ற தன்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பது, சடங்குகளை அன்றாடத்தின் அரசியல் மொழியாகக் காண அனுமதிக்கிறது, கட்டமைப்பு வன்முறைக்கும் தார்மீகப் பழுதுக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்கிறது.

வடக்குக் கிழக்கு முழுவதும், போர் வாழ்க்கையை மட்டுமல்ல, அவற்றை ஒழுங்கமைத்த தற்காலிகத் தளங்களையும் உடைத்தது. இடப்பெயர்வு, இராணுவமயமாக்கல் மற்றும் கண்காணிப்பு ஆகியவை அன்றாட நேரத்தை இடைநிறுத்தி, ஒரு செயற்பாட்டாளர் 'நிரந்தரக் காத்திருப்பு' என்று அழைத்ததை உருவாக்கியது. இதுபோன்ற சூழல்களில், சடங்குகள் காலத்தை மீட்டெடுக்கும் இலக்கணத்தை வழங்குகின்றன. துக்கம், மறுகட்டமைப்பு அல்லது கொண்டாட்டம் மூலம், நிகழ்கால வாழ்க்கையைத் தாங்கக்கூடியதாக மாற்றுவதற்காக அவர்கள் கடந்தகாலத்தின் துண்டுகளை ஒன்றாக இணைக்கிறார்கள்.

இந்தக் கட்டுரை இலங்கையின் போருக்குப் பிந்தைய சடங்குகளை ஒரு பரந்த ஒப்பீட்டுச் சட்டகத்திற்குள் நிலைநிறுத்துகிறது. ருவாண்டாவில், வருடாந்திர குவிபுகா நினைவுகூரல்கள் (Kwibuka Commemorations) அரசு நிர்வகிக்கும் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் முன்னிறுத்தும் நிகழ்ச்சிகளாக மாறிவிட்டன (பார்க்க: BuckleyZistel, 2006). பொஸ்னியாவில், உள்ளூர் நினைவு நடைமுறைகள், பெரும்பாலும் சமரசம் என்று கூறினாலும், இன எல்லைகளை மீண்டும் உருவாக்குகின்றன (பார்க்க: Jansen, 2015). கம்போடியாவில், கெமர் ரூக்குப் பிறகு புத்த சடங்குகளின் மறுமலர்ச்சி தார்மீகப் பழுதுபார்ப்பின் மையமாக உள்ளது, ஆனால் வர்க்கம் மற்றும் அரசியல் படிநிலைகளின் இனப்பெருக்கத்திற்கும் மையமாக உள்ளது (பார்க்க: Ledgerwood, 1997). இலங்கையின் சடங்கு நிலப்பரப்பு இதேபோன்ற பதற்றங்களை வெளிப்படுத்துகிறது: சமூகங்களைத் தக்கவைக்கும் அதே செயல்கள் சமூக விலக்கையும் மறுபரிசீலனை செய்ய உதவுகிறது.

## தத்துவார்த்தப் பார்வையில்: மதத்திற்கு அப்பால் சடங்கும் பழுதுபார்க்கும் அரசியலும்

பாரம்பரிய மானுடவியல் நீண்டகாலமாக சடங்கை மதத்தின் குறியீட்டு இதயமாகக் கருதி வருகிறது (டர்கெய்ம், 1912; டர்னர், 1969). இருப்பினும், போருக்குப் பிந்தைய சூழல்களில், சடங்குகள் பெரும்பாலும் மதக் களத்தை மீறி, குடிமை, தார்மீக மற்றும் அரசியல் செயல்களாகச் செயற்படுகின்றன. கேத்தரின் பெல் (1992) குறிப்பிடுவது போல, சடங்கு என்பது நம்பிக்கையில் குறைவாகவும், சில செயல்களின் மூலோபாய வேறுபாட்டை அர்த்தமுள்ளதாகப் பற்றிக் கொள்வதில் அதிகமாகவும் மையங் கொண்டுள்ளது. இலங்கையின் வடக்குக் கிழக்கில், மக்கள் சடங்கு

நடைமுறைகளில் ஈடுபடுகிறார்கள் - காணாமல் போனவர்களுக்கு விளக்குகளை ஏற்றுதல், புனரமைப்புக்குப் பிறகு உணவைப் பகிர்ந்து கொள்வது, நினைவாக மரங்களை நடுதல். கோட்பாட்டைக் கடைப்பிடிப்பதால் அல்ல, மாறாக இந்தச் செயல்கள் சமூக எல்லைகளையும் தார்மீகப் புதுப்பித்தலையும் குறிப்பதால் இச்சடங்குகள் அவர்களுக்கு அவசியமாகின்றன.

இந்தச் சடங்குகள் நடைமுறைக்குரியவை: அவை நிச்சயமற்ற தன்மையை ஒழுங்கமைக்கின்றன, துக்கத்தை வளர்க்கின்றன, மேலும் ஒரு முகமை உணர்வை மீட்டெடுக்கின்றன. அவற்றின் சக்தி எல்லை மீறலில் அல்ல, மீண்டும் மீண்டும் செய்வதில் உள்ளது. கிளிநொச்சியில் உள்ள ஒரு பாடசாலை ஆசிரியர் கூறியது போல், "ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் ஒரே விழாவைச் செய்கிறோம், எதுவும் மாறாவிட்டாலும் கூட. இது நாங்கள் இன்னும் இங்கே இருக்கிறோம் என்பதை எமக்கு நினைவூட்டுகிறது." இந்த அர்த்தத்தில், சடங்கு என்பது பாரம்பரியத்தின் எச்சம் அல்ல, மாறாக நிலைத்தன்மையின் தொழில்நுட்பமாகும்.

கோனர்டன் (1989) வாதிடுவது போல, சடங்குகள் குறியீட்டுச் செயல்கள் மட்டுமல்ல, தற்காலிகச் சாதனங்களும் கூட. அவை சுழற்சித் தாளங்களை நேரியல் நேரத்தில் பொறிப்பதன் மூலம் தொடர்ச்சியின்மைகளைப் பிரிக்கின்றன. போருக்குப் பிந்தைய இலங்கையில், போரின் தற்காலிகத்தன்மை - இடைநிறுத்தம், நிச்சயமற்ற தன்மை, காத்திருப்பு - அன்றாட வாழ்க்கையில் ஊடுருவியுள்ள நிலையில், சடங்குகளை மீண்டும் மீண்டும் செய்வது சமூகங்கள் தொடர்ச்சியை அனுபவிக்க அனுமதிக்கிறது. டர்னரின் (1969) வரம்பு பற்றிய கருத்து ஒரு பயனுள்ள தொடக்கப் புள்ளியை வழங்குகிறது, ஆனால் மறுபயன்பாட்டைக் கோருகிறது. மோதலுக்குப் பிந்தைய சமூகங்களில், வரம்பு என்பது பிரிவினைக்கும் மறு ஒருங்கிணைப்புக்கும் இடையிலான ஒரு தற்காலிகக் கட்டம் அல்ல. அது ஒரு நீடித்த நிலையாக மாறுகிறது. இது, தாஸ் (2007) 'சாதாரண நிலைக்கு இறங்குதல்' (The Descent into the Ordinary) என்று அழைப்பதை ஒத்துள்ளது. அங்கு மீட்பு மெதுவாகவும் சீரற்றதாகவும் இருக்கும். சடங்குகளின் இந்த திறந்த - முடிவு தற்காலிகத்திற்கு சிறிய நங்கூரங்களை வழங்குகின்றன, இதனால் மக்கள் முடங்கிவிடாமல் நிச்சயமற்ற தன்மையில் வாழ முடியும்.

முல்லைத்தீவைச் சேர்ந்த ஒரு தமிழ் விதவை, தனது கணவரின் வருடாந்திர நினைவு தினத்தை ஒரு நிறைவு நிகழ்வாக அல்ல, மாறாக "அவரது காலத்தை உயிருடன் வைத்திருப்பது" என்று விவரித்தார். இத்தகைய செயல்கள், 'தற்காலிக பழுதுபார்ப்பு' என்று நான் அழைப்பதை விளக்குகின்றன - பேரழிவுக்குப் பிறகு வாழக்கூடிய கால உணர்வை மீண்டும் உருவாக்குதல். மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம், சடங்கு அதிர்ச்சிகரமான நேரத்தை சமூக நேரமாக மாற்றுகிறது, தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் தங்களை ஒரு தார்மீக மற்றும் வரலாற்று தொடர்ச்சிக்குள் நிலைநிறுத்த அனுமதிக்கிறது.

சடங்குகள் ஒருபோதும் நடுநிலையானவை அல்ல. அவை இரண்டும் சாதி, வர்க்கம் மற்றும் பாலினத்தின் படிநிலைகளைப் பிரதிபலிக்கின்றன, பெருக்குகின்றன. பியர் போர்டியூ (1977) குறிப்பிடுவது போல, குறியீட்டு நடைமுறைகள் பெரும்பாலும் சமூக வேறுபாடுகளை இயல்பாக்குகின்றன. வடக்குக் கிழக்கில், சடங்கிற்கான இடத்தை யார் அணுகுகிறார்கள் - யார் ஒழுங்கமைக்கிறார்கள், யார் பேசுகிறார்கள், யார் நினைவுகூரப்படுகிறார்கள் - என்பது முக்கியமானது. இங்கு பெரும்பாலும் நடைமுறையில் இருக்கும் சமூகப் படிநிலைகள் பின்பற்றப்படுகின்றன. உயர் சாதி மற்றும் பொருளாதார ரீதியாக நிலையான குடும்பங்கள் சமூக நினைவுகளில் அடிக்கடி ஆதிக்கம் செலுத்துகின்றன. அதே நேரத்தில் ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோர், முஸ்லிம்கள், திரும்பி வந்தவர்கள் உட்பட ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் விளிம்புக்குத் தள்ளப்படுகின்றன. ஆனால் சடங்குகள் எதிர்ப்புக் குரல்களுக்கான வாய்ப்புகளையும் வழங்குகின்றன. உதாரணமாக, 2016 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் நடந்த பெண்கள் நினைவேந்தலின் போது, பங்கேற்பாளர்கள் சாதியப்படிநிலையில் கீழ்நிலையில் உள்ள சமூகத்தைச் சேர்ந்த விதவைகளை முதல் விளக்குகளை ஏற்ற வைத்ததன் மூலம் சாதி விதிமுறைகளை மீறினர். இந்தச் செயல் குறியீட்டு ரீதியானதாகவும் அரசியல் ரீதியானதாகவும் இருந்தது. இது சடங்குச் சட்டகத்திற்குள் சமத்துவத்தை அமைதியாக வலியுறுத்தியது. ஒரு பங்கேற்பாளர் கூறியது போல், "நாம் அழும்போது நாம் அனைவரும் ஒன்றுதான்."

இந்த இயக்கவியல், நான் சடங்குமயமாக்கல் அரசியல் என்று அழைப்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது: சடங்குகள் தெரிவுநிலை, அங்கீகாரம் மற்றும் அதிகாரம் குறித்த பேச்சுவார்த்தைக்கான அரங்கங்களாக மாறும் செயல்முறை முக்கியமானதும் கவனிப்புக்குரியதுமாகும். போருக்குப் பிந்தைய சமூகங்களில், முறையான அரசியல் பங்கேற்பு குறைவாகவோ அல்லது கண்காணிக்கப்பட்டோ இருக்கும் இடங்களில், சடங்குகள் மாற்றாக உள்ளன.

சடங்கு பற்றிய அதிக புலமை, போருக்குப் பிந்தைய இலங்கையில் தொடர்ச்சியைப் பராமரிப்பதில் அதன் பங்கை வலியுறுத்தும் அதே வேளையில், சடங்குகளும் அந்த எதிர்பார்ப்பைச் செய்கின்றன. கடந்தகாலத்தின் தார்மீக எடையைப் பயன்படுத்தி அவை எதிர்காலத்தை முன்னிறுத்துகின்றன. ஒரு கிணற்றை மீண்டும் கட்டுவது, பள்ளித் திறப்பு விழாவை ஏற்பாடு செய்வது அல்லது புதிதாக மீள்குடியேற்றப்பட்ட பகுதியில் மகளின் திருமணத்தைக் கொண்டாடுவது போன்ற செயல்கள் அனைத்தும் குறியீட்டுச் சக்தியைக் கொண்டுள்ளன. “நாங்கள் திரும்பிவிட்டோம்” என்று அவர்கள் அறிவிக்கிறார்கள், அதேவேளை “நாங்கள் இருப்போம்” என்றும் கூறுகிறார்கள்.

இங்கே, சடங்கு என்பது பழமைவாதமானது மட்டுமல்ல, அமைப்புரீதியானது: இது ஒரு கூட்டு எதிர்காலத்திற்கான சாத்தியக்கூறுகளின் நிலைமைகளை உருவாக்குகிறது. மானுடவியலாளர் லாரா பியர் (2014) அத்தகைய நடைமுறைகளை ‘ஊக உழைப்பின் வடிவங்கள்’ (*Forms of Speculative Labour*) என்று விவரிக்கிறார். இவை தார்மீக மற்றும் உணர்ச்சிபூர்வமான முதலீடு மூலம் நிச்சயமற்ற எதிர்காலத்தை உருவாக்கும் செயல்கள். இதேபோல், இலங்கைச் சூழலில், சடங்குகள் இழப்பு மற்றும் மறுகட்டமைப்பு ஆகியவற்றின் உறுதியான உலகில் அபிலாஷைகளை நங்கூரமிடுகின்றன. மட்டக்களப்பில் உள்ள ஓர் உள்ளூர் அரசு சாரா ஊழியர் சுருக்கமாகக் கூறினார்: “நாளைக்காக நாம் திட்டமிட முடியாது, ஆனால் நாளையைச் சாத்தியமாக்கும் சடங்குகளை நாம் செய்ய முடியும்.”

ஒப்பீட்டளவில், இந்த இயக்கவியல் போருக்குப் பிந்தைய சூழல்களில் எதிரொலிக்கிறது. ருவாண்டாவில், அரசு வழங்கும் குவிபுகா விழாக்கள் ஒற்றுமையின் கதையை உருவாக்குகின்றன, இது ஒரே நேரத்தில் எதிர்ப்பை அமைதிப்படுத்துகிறது. பொஸ்னியாவில், ஸ்ரெப்ரெனிகாவில் ஆண்டுதோறும் நடைபெறும் நினைவுகூரல்கள் துக்கம் மற்றும் அரசியல் போட்டி ஆகிய இரண்டின் தளங்களாகச் செயற்படுகின்றன. கம்போடியாவில், கெமர் ரூஜுக்கு பிந்தைய புத்த சடங்குகளின் மறுமலர்ச்சி சமூகப் படிநிலைகளை மீண்டும் நிலைநிறுத்தி, தார்மீகப் பழுதுபார்ப்பை எளிதாக்கியுள்ளது. இலங்கையின் சடங்கு அரசியல் இந்தப் பதற்றங்களைப் பிரதிபலிக்கிறது: சடங்குகள் ஒரே நேரத்தில் குணப்படுத்துபவையாகவும்,

**சடங்கு என்பது பழமைவாதமானது மட்டுமல்ல, அமைப்புரீதியானது: இது ஒரு கூட்டு எதிர்காலத்திற்கான சாத்தியக்கூறுகளின் நிலைமைகளை உருவாக்குகிறது. மானுடவியலாளர் லாரா பியர் (2014) அத்தகைய நடைமுறைகளை ‘ஊக உழைப்பின் வடிவங்கள்’** (Forms of Speculative Labour) **என்று விவரிக்கிறார். இவை தார்மீக மற்றும் உணர்ச்சிபூர்வமான முதலீடு மூலம் நிச்சயமற்ற எதிர்காலத்தை உருவாக்கும் செயல்கள். இதேபோல், இலங்கைச் சூழலில், சடங்குகள் இழப்பு மற்றும் மறுகட்டமைப்பு ஆகியவற்றின் உறுதியான உலகில் அபிலாஷைகளை நங்கூரமிடுகின்றன.**

மேலாதிக்கமானவையாகவும் உள்ளன. அவை கண்காணிப்பு மற்றும் விலக்கலை உட்பொதிக்கும் அதே வேளையில் சமூக மறுகட்டமைப்பையும் செயற்படுத்துகின்றன. போருக்குப் பிந்தைய சமூகங்கள் வன்முறையின் நீண்ட நிழலில் எவ்வாறு நகர்கின்றன அல்லது சிக்கித் தவிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்வதற்கு இந்தத் தெளிவின்மையைப் புரிந்துகொள்வது மிக முக்கியம்.

இலங்கையின் போருக்குப் பிந்தைய நிலப்பரப்பில், சடங்கு என்பது கடந்த காலத்தை பிரதிநிதித்துவப்படுத்துவது பற்றியது அல்ல, மாறாக அதில் வசிப்பது பற்றியது. வன்முறையின் பின்விளைவுகள் விதிவிலக்கான நிகழ்வுகளில் அல்ல, மாறாக அன்றாட வாழ்க்கையில் நிகழ்கின்றன. சடங்குகள் - எவ்வளவு சிறியதாக இருந்தாலும் - சாதாரணமும் அரசியலும் சங்கமிக்கும் தளங்களாகின்றன. போருக்குப் பிந்தைய அரசியல் பாராளுமன்றங்கள் அல்லது சமாதான ஒப்பந்தங்களுடன் மட்டுப்படுத்தப்படவில்லை, மாறாக சமையலறைகள், கிணறுகள், பள்ளிகள் மற்றும் கல்லறைகளில் தினமும் இயற்றப்படுகிறது என்பதை அவை நமக்கு நினைவூட்டுகின்றன. இவ்வாறு சடங்குகள் உயிர்வாழ்வதற்கான ஓர் உள்ளூர் ஆவணக் காப்பகத்தை உருவாக்குகின்றன. சடங்குகள் எதிர்காலத்தை கடந்த காலத்தின் மொழியில் கட்டமைக்கும் ஒரு வழியாகும்.

*2010 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், போர் முடிந்து ஒரு வருடம் கழித்து, புதுக்குடியிருப்புக்கு வெளியே மீள்குடியேற்றப்பட்ட குக்கிராமங்களிற்குச் சென்றேன். காற்றில், எரிந்த பனைமரத்தினதும், ஈரமான மண்ணினதும் வாசனை வீசியது. சிலகாலம் முன்புவரை ‘உயர் பாதுகாப்பு வலயங்கள்’ என்று அறிவிக்கப்பட்ட இடத்திற்கு குடும்பங்கள் திரும்பிக்கொண்டிருந்தன. அவர்களின் முதற் செயல், கிட்டத்தட்ட விதிவிலக்கு இல்லாமல், அருகிலுள்ள கிணற்றில் இருந்து ஒரு பானைத் தண்ணீரையும், அரசாங்கத்தால் கட்டப்பட்ட புதிய சாலையிலிருந்து ஒரு கைப்பிடி மண்ணையும் எடுத்துக்கொண்டு, ஒரு காலத்தில் தங்கள் வீடுகள் இருந்த இடத்திற்கு நடந்து செல்வதாக இருந்தது. அவர்கள் தண்ணீரை ஊற்றி, வாசலில் மண்ணைச் சிதறடித்தனர், என்னால் புரிந்துகொள்ளவியலாத வார்த்தைகளை முணுமுணுத்தனர். இந்தச் செயலின் அர்த்தம் குறித்து ஒரு வயதான மனிதரிடம் நான் கேட்டபோது, அவர் பதிலளித்தார், “இது ஒரு பூஜை அல்ல, இது நாங்கள் திரும்பி வந்துள்ளோம் என்று நிலத்திற்குச் சொல்கிறோம்.” இந்தச் சொற்றொடர் வெவ்வேறு கிராமங்களில் மீண்டும் மீண்டும் கூறப்பட்டது - “நாங்கள் திரும்பி வந்துள்ளோம் என்று நிலத்திற்குச் சொல்வது.” இது ஒரு மதச் சடங்கு அல்ல, ஆனால் தார்மீக மற்றும் இடஞ்சார்ந்த உரிமையின் வெளிப்பாடு. இடம்பெயர்ந்த பல குடும்பங்களுக்கு, நிலத்திற்குத் திரும்புவது என்பது, அவர்கள் அடிக்கடி சொல்வது போல், “எங்கள் சொந்த நாட்டில் அகதிகளாக” பல வருடங்கள் வாழ்ந்த பிறகு, பிரதேசத்தை மட்டுமல்ல, கண்ணியத்தையும் மீட்டெடுப்பதாகும்.*

*திரும்பும் சடங்குகள் மெதுவான நடனக்கலையாக வெளிப்பட்டன: குப்பைகளை அகற்றுதல், ஒரு தற்காலிகக் குடிசை அமைத்தல், அடுப்பில் முதல் உணவைச் சமைத்தல். பல கிராமங்களில், முதல் கூட்டுச் சமையல் பெண்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்கள் ஒரு தற்காலிக ஓலைக் கூடாரத்தின் கீழ் கூடி, அரிசி மற்றும் பருப்பைச் சமைத்து, அண்டைக் குடும்பங்களை அதைப் பகிர்ந்துகொள்ள அழைப்பார்கள். ஒரு பெண் 2013 இல் என்னிடம் கூறினார், “அன்று யாரும் தனியாக உணரக்கூடாது என்பதற்காக நாங்கள் உணவைச் சமைத்து ஒன்றாகச் சாப்பிடுகிறோம். இது கோயில் வேலை அல்ல - கிராமம் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று சொல்வதற்கான எங்கள் வழி.”*

*அரசாங்க அதிகாரிகள் பெரும்பாலும் இந்தக் கூட்டங்களை அரசியலற்றதாகக் கருதினர், ஆனால் அவை தெளிவான அரசியல் அதிர்வுகளைக் கொண்டிருந்தன. சில இடங்களில், இராணுவ அதிகாரிகள் தூரத்திலிருந்து பார்த்தார்கள்; மற்றவற்றில், அரசு சாரா நிறுவனங்கள் சமையல் பொருட்களை விநியோகிக்க உதவின, கவனக்குறைவாக சமூகத்தால் வழிநடத்தப்படும் மீட்புச் சடங்கை முறைப்படுத்தின. இந்தத் ‘திரும்பும் சடங்குகள்’ பிரகடனத்தின் மூலம் அல்ல, நடைமுறை மூலம் சமூக உலகங்களை மறுசீரமைப்பதைக் குறிக்கின்றன. இந்தச் செயல்கள் தற்காலிகமானவை. ஆனால் கிராமங்கள் முழுவதும் அவை மீண்டும் மீண்டும் வருவது தார்மீக மீட்சியின் வடிவிலான ஒரு தாளத்தை உருவாக்கியது.*

*2015 ஆம் ஆண்டளவில், இறந்தவர்களின் நினைவுகூரல்கள் வடக்கு நிலப்பரப்பின் ஒரு சர்ச்சைக்குரிய அம்சமாக மாறியது. முள்ளிவாய்க்கால் போன்ற இடங்களில் பொது துக்கத்தை அனுசரிப்பதை அரசாங்கம் தடை செய்தது. குடும்பங்கள், நினைவுகூரும் மாற்று வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சிலர் விடியற்காலையில் கடற்கரைகள் அல்லது சந்திப்புகளுக்குச் சென்றனர். மற்றவர்கள் சமையல் அல்லது நடவு போன்ற அன்றாட நடைமுறைகளில் நினைவை இணைத்தனர்.*

*முல்லைத்தீவுக்கு அருகிலுள்ள ஒரு மீனவக் கிராமத்தில், ஆண்டுதோறும் மே 18 ஆம் தேதி தாய்மார்கள் குழுவாகக் கூடுவர். அவர்கள் வெள்ளை நிற ஆடைகளை அணிந்து, சிறிய மாலைகளைக் கொண்டுவந்து, “நாங்கள் நமக்காக உருவாக்கிய வார்த்தைகள்” என்று அவர்கள் விவரிக்கும் வசனங்களை ஓதினர். அங்கிருந்த ஒரு பெண், “சத்தமாக அழுவதற்கு எங்களுக்கு சுதந்திரம் இல்லை. எனவே நாங்கள் கடலுடன் அமைதியாக அழுகிறோம்” என்று கூறினார்.*

*துக்கத்தின் இந்த நுண்ணிய சடங்குகள் உயிர்வாழ்வு மற்றும் எதிர்ப்பின் செயல்கள் இரண்டும் ஆகும். நினைவுகளை மௌனமாக்க அரசு முயன்ற வேளையிலும், இறந்தவர்கள் உடனிருந்தனர் என்பதை அவை செயல்திறனுடன் வெளிப்படுத்தின. இருப்பினும் அவை சமூகத்திற்குள் உள்ளார்ந்த முறிவுகளையும் வெளிப்படுத்தின. கண்காணிப்புக்கு பயந்து சில குடும்பங்கள் பங்கேற்க மறுத்துவிட்டன. இன்னும் சிலர், “ஏற்பாட்டாளர்கள் துக்கத்தை அரசியல்மயமாக்குகிறார்கள்” என்று குற்றம் சாட்டினர்.*

*2017 ஆம் ஆண்டில், உள்ளூர் தமிழ்மொழிச் செய்தித்தாள் “எங்கள் இறந்தவர்களும் எங்கள் உரிமைகளும்” என்ற தலைப்பில் ஒரு தலையங்கத்தை வெளியிட்டது. இது பகிரங்கமாக நினைவுகூரும் உரிமையைப் பாதுகாத்தது. துக்கம் என்பது பிரிவினைவாதம் அல்ல, மாறாக “இழப்புடன்*

*சமாதானம் செய்வதற்கான மனிதத் தேவை" என்று அந்தக் கட்டுரை வாதிட்டது. அது பொஸ்னியா மற்றும் ருவாண்டாவின் இதேபோன்ற விவாதங்களை எதிரொலித்தது, அங்கு நினைவுகூரல் அரசியல் கட்டுப்பாட்டின் ஒரு நிலப்பரப்பாக மாறியிருந்தது.*

*பல பங்கேற்பாளர்களுக்கு, நினைவுகூரல் சடங்குகள் என்பது, முடிவுக்கு வருவதற்குப் பதிலாக முகமையை மீட்டெடுப்பதைப் பற்றியது. கிளிநொச்சியைச் சேர்ந்த ஓர் இளம் ஆசிரியர் இதை இவ்வாறு விவரித்தார்: "போர் எங்கள் பேசும் திறனைப் பறித்தது. இப்போது நாங்கள் இந்தச் சிறிய செயல்கள் மூலம் பேசுகிறோம்."*

*அதே நேரத்தில், கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் சமூகங்கள் தங்கள் சொந்த நினைவுச் சடங்குகளை வளர்த்துக் கொண்டன. அவை, பெரும்பாலும் நேரடிப் போரை விட இழப்பு மற்றும் இடப்பெயர்வை மையமாகக் கொண்டிருந்தன. காத்தான்குடியில், 1990கள் மற்றும் 2000களில் பலமுறை இடம்பெயர்ந்த குடும்பங்களை நினைவுகூரும் நிகழ்வில், 2018 இல் நான் கலந்து கொண்டேன். கூட்டம் மீண்டும் கட்டப்பட்ட மசூதியின் முற்றத்தில் நடந்தது. அமைப்பாளர்களால் அது 'சமூக புதுப்பித்தல்' என்று விவரிக்கப்பட்டது. அவர்கள் கவிதை வாசித்தனர், தேநீர் பரிமாறினர், போரின் போது ஒருவருக்கொருவர் உதவிய முஸ்லிம்களையும் தமிழர்களையும் கௌரவித்தனர்.*

*ஓர் உள்ளூர் ஆர்வலர் விளக்கினார், "நாங்கள் யாரை இழந்தோம் என்பதை மட்டுமல்ல, எங்களுடன் நின்றவர்களையும் நினைவில் கொள்ள விரும்பினோம்." இவ்வாறு இந்தச் சடங்கு, போர் தீவிரமடைந்த வகுப்புவாத துருவமுனைப்பை எதிர்த்து, சகவாழ்வின் மறுபரிசீலனையாக மாறியது. திருகோணமலையில், 1980களின் கலவரங்களின் போது தப்பி ஓடிய சிங்களவர்கள் இதேபோன்ற அடையாள திரும்பும் நிகழ்வுகளைச் செய்தனர். 2014 ஆம் ஆண்டில், சேருவிலவைச் சேர்ந்த சிங்களக் குடும்பங்களின் குழு ஒன்று 'கிராமச் சுத்திகரிப்பு' என்று அழைத்த ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்தது. அவர்கள் பழைய குடியிருப்பு வழியாக நடந்து, தண்ணீர் தெளித்து, பிரித் ஓதினார்கள். குழுவை வழிநடத்திய ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் ஒருவர் என்னிடம், "நாங்கள் இதை மதத்திற்காகச் செய்யவில்லை, மன அமைதிக்காகச் செய்கிறோம்" என்று கூறினார். இந்த விழா சடங்குத் தூய்மையையும் தார்மீகப் பழுதுபார்ப்பையும் இணைத்தது, ஆனால் இன ரீதியாகக் கலந்த பகுதியில் சிங்கள இருப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதையும் மறைமுகமாகக் குறித்தது.*

*இந்த நிகழ்வுகளில், நினைவுச் சடங்குகள் சிக்கலான அரசியல் செயல்களாக செயற்பட்டன: அவர்கள் துக்கம் அனுசரித்தனர், மீட்டெடுத்தனர், எல்லை நிர்ணயித்தனர். போருக்குப் பிந்தைய நினைவகம் அதிகாரபூர்வ நினைவுச் சின்னங்களை விட அன்றாடச் சடங்குகள் மூலம் எவ்வாறு மத்தியஸ்தம் செய்யப்படுகிறது என்பதை அவர்கள் வெளிப்படுத்தினர்.*

*நினைவுகள் பின்னோக்கிப் பார்க்கப்பட்டால், ஏனைய சடங்குகள் முன்னோக்கிப் பார்க்கப்பட்டன. வடக்குக் கிழக்கில் மீள்குடியேற்றப்பட்ட கிராமங்கள், அன்றாட மறுசீரமைப்புச் சடங்குகளால் நிரப்பப்பட்டது - பெரும்பாலும் பங்கேற்பாளர்களால் அங்கீகரிக்கப்படவில்லை. மீள்குடியேற்றப்பட்ட பகுதியில் ஒரு புதிய கிணறு தோண்டப்பட்டபோது, கிராமவாசிகள் பொதுவாக தண்ணீர் பூஜை என்று அழைக்கப்பட்ட - அதாவது 'நீர் காணிக்கை' - நிகழ்விற்காகக் கூடினர். முதல் நீர் ஓட்டத்திலிருந்து ஒரு களிமண் பானை நிரப்பப்பட்டு கிணற்றின் ஓரத்தில் ஊற்றப்பட்டது. பூக்கள் மிதந்தன, சில நாணயங்கள் அதில் போடப்பட்டன. இந்தச் செயல் நடைமுறைத்தன்மையை குறியீட்டுடன் இணைத்தது: இது கிணற்றை பொதுச் சொத்தாகப் புனிதப்படுத்தியது.*

*2015 ஆம் ஆண்டில், ஒட்டுசுட்டான் அருகே ஒரு கிணறு திறப்பு விழாவில், ஒரு விவசாயி, "கிணறு எங்கள் இதயம் போன்றது. அது நிரம்பும்போது, கிராமம் வாழ்கிறது" என்று கூறினார். மட்டக்களப்பில் மீள்குடியேறிய முஸ்லிம்களிடையே இதேபோன்ற நடைமுறைகள் உருவாகி வருவதை நான் பின்னர் அறிந்தேன். அவர்கள் பாசனக் கால்வாய்களைச் சுத்தம் செய்ய கூட்டு உழைப்பை ஒழுங்கமைத்தனர். அதைத் தொடர்ந்து பிரார்த்தனைகள் மற்றும் உணவுகள் பகிரப்பட்டன. இந்தச் செயல்கள் குடிமைப் பணிக்கும் சடங்கு வாழ்க்கைக்கும் இடையிலான எல்லையை மங்கச் செய்தன.*

*கல்வியும் சடங்கு ரீதியான மறுகட்டமைப்புக்கான இடமாக மாறியது. 2012 ஆம் ஆண்டு, வவுனியா மாவட்டத்தில் ஒரு சிறிய தொடக்கப்பள்ளியை மீண்டும் திறப்பதில் நான் கலந்து கொண்டேன். விழா, உரைகளுடன் அல்ல, குழந்தைகள் மரக்கன்றுகளை நட்டு வைத்ததன் மூலம் தொடங்கியது. தலைமை ஆசிரியர் விளக்கினார், "இந்த மரங்கள் அவற்றுடன் வளரும்." இதன் குறியீடு தெளிவாக இருந்தது: கல்வி என்பது வெறும் போதனை மட்டுமல்ல, மறுமலர்ச்சியும் ஆகும். இந்நிகழ்வில் பாடத்திட்டங்களிலிருந்து பெறப்பட்ட பாடல்களை*

அல்ல, ஆசிரியர்களால் எழுதப்பட்ட பாடல்களை மாணவர்கள் பாடினர் - 'வீட்டிற்கு வருவது', 'மீண்டும் கட்டுவது' மற்றும் 'புதிய நாள்' பற்றிய பாடல்கள். இந்த நிகழ்ச்சி, அரசின் வெற்றியை விட, கூட்டு உழைப்பு மற்றும் நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்ட எதிர்காலத்தின் ஒரு பார்வையைச் செயற்படுத்தியது.

போருக்குப் பிறகு திருமணங்களும் அதிக சமூக முக்கியத்துவம் பெற்றன. பல தம்பதிகள் இடப்பெயர்வு, கடன் அல்லது அதிர்ச்சி காரணமாக திருமணத்தை பல ஆண்டுகளாக ஒத்திவைத்தனர். சடங்குகள் மீண்டும் தொடங்கியபோது, அவர்கள் மகிழ்ச்சி மற்றும் பதற்றம் இரண்டாலும் மூழ்கினர். 2014 ஆம் ஆண்டு, முன்னாள் போராளிக்கும் பள்ளி ஆசிரியருக்கும் இடையேயான திருமணத்தில் கலந்து கொண்டேன். அந்த ஜோடி வேண்டுமென்றே பாதி இடிந்து விழுந்த சமூக மண்டபத்தில் நிகழ்வை நடத்தியது. நிகழ்வை யாழ்ப்பாண நகரத்திற்கு மாற்றுவதற்கான உறவினர்களின் சலுகைகளை

**போருக்குப் பிந்தைய இலங்கையில் சடங்குகள் சமூக உட்கட்டமைப்பின் ஒரு வடிவமாகச் செயற்படுகின்றன. இவை முறையான நிறுவனங்கள் தடுமாறும்போது துண்டு துண்டான சமூகங்களை ஒன்றாக வைத்திருக்கும் அர்த்தமுள்ள கட்டமைப்புகள்.**

மறுத்தது. மணமகள், "நாங்கள் இங்கிருந்து தொடங்க விரும்புகிறோம், இங்கே இருந்ததையும் இழந்ததையும் மறந்துவிடக்கூடாது" என்று கூறினார். அத்திருமணத்தில் இறந்தவர்களுக்காக ஒரு கணம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, பின்னர் வழக்கமான மாலைகள் மற்றும் ஆசீர்வாதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. சிரிப்பு, நடனம் மற்றும் இலேசான மீட்பு உணர்வும் இருந்தன - 'சாதாரண வாழ்க்கை ஆறாத துக்கத்துடன் இணைந்திருக்கலாம்' என்ற கூற்று இங்கே பொருந்தியது. ஒரு வயதான பெண் என்னிடம் கிசுகிசுத்தாள், "இது வெறுமனே ஒரு திருமணம் மட்டுமல்ல, அதைவிட மேலானது. இது எங்கள் குழந்தைகளுக்கு வாழ்க்கை மீண்டும் சாத்தியம் என்று சொல்கிறது."

கிணறுகள், பள்ளிகள், திருமணங்கள் என இந்தக் களங்களில் சடங்குகள் இயல்பான நிகழ்ச்சிகளாகச் செயற்பட்டன. அவை வலியை அழிக்கவில்லை, மாறாக அதைச் சமூகத் தொடர்ச்சியின் புதிய வடிவங்களில் ஒருங்கிணைத்தன. அவற்றின் முக்கியத்துவம் நம்பிக்கையை விட, மீண்டும் மீண்டும் நிகழ்தல் மற்றும் பங்கேற்பில் இருந்தது.

சுவாரஸ்யமாக, என்.ஜீ.ஓக்கள் மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் பெரும்பாலும் இந்தச் சடங்குச் சூழலியல்களின் ஒரு பகுதியாக மாறின. வடக்கில் பல 'சமூக மேம்பாட்டு நிகழ்வுகள்' மாலைகள், பதவியேற்புகள் மற்றும் ஆசீர்வாதங்களுடன் கூடிய 'புதுப்பித்தல் சடங்குகளை' ஒத்திருந்தன. இதில் என்.ஜீ.ஓக்கள் முதன்மையானவை. ஒரு என்.ஜீ.ஓ அதிகாரி என்னிடம் கூறினார், "நாங்கள் இதை ஒரு திட்ட ஒப்படைப்பு என்று அழைக்கிறோம், ஆனால் மக்கள் அதை ஒரு கொண்டாட்டமாக ஆக்குகிறார்கள்." அவ்வாறு செய்வதன் மூலம், சமூகங்கள் அதிகாரத்துவ விழாக்களைக் கையகப்படுத்தி, அவற்றிற்குத் தார்மீக மற்றும் உணர்ச்சிபூர்வமான அர்த்தத்தை அளித்தன. இதன் விளைவாக உதவி, நன்றியுணர்வு மற்றும் நம்பிக்கையின் மொழிகள் ஒன்றிணைந்த ஒரு கலப்பினச் சடங்கிற்கான இடம் கிடைத்தது.

சடங்குகள் பொருளியல் ரீதியாகவும் சூழலில் விரிவடைந்தன - இறந்தவர்களின் பெயர்களால் வரையப்பட்ட சுவர்கள், குறுக்கு வழியில் நடப்பட்ட மரங்கள் அல்லது இழந்த குடும்ப உறுப்பினர்களின் பெயரிடப்பட்ட கிணறுகள். இந்தச் செயல்கள் நினைவுச்சின்ன அர்த்தத்திலான நினைவுச்சின்னங்கள் அல்ல, மாறாக நினைவூட்டல் எச்சங்களாக உள்ளன. அன்றாட வாழ்க்கையின் துணியில் நினைவை நெய்யும் சிறிய, தொடர்ச்சியான சைகைகள்.

முல்லைத்தீவில், தங்கள் புதிய வீட்டின் நுழைவாயிலில் துருப்பிடித்த மிதிவண்டியை வைத்திருந்த ஒரு குடும்பத்தை நான் சந்தித்தேன். மகன் 2009 இல் காணாமல் போனான்; மிதிவண்டி அவனுடையது. ஒவ்வொரு ஆண்டும், அவர்கள் அதைச் சுத்தம் செய்து, சங்கிலியில் எண்ணெய் பூசி, கைப்பிடியில் ஒரு மாலையை வைத்தார்கள். அவனது அம்மா, "இந்தச் செயல் மதநம்பிக்கை சார்ந்ததல்ல. இது நினைவு" என்றார். இத்தகைய நடைமுறைகள் மூலம், சாதாரணமானவர்கள் புனிதமானார்கள் - இறையியல் அர்த்தத்தில் அல்ல, ஒரு தார்மீக அர்த்தத்தில். அன்றாட மறுகட்டமைப்பின் இந்த சடங்குகள், சமரசத்தின் வியத்தகு சைகைகள் மூலம் அல்ல, மாறாக சிறிய கவனிப்புச் செயல்களை மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம் எதிர்காலம் எவ்வாறு செயற்படுத்தப்படுகிறது என்பதை நிரூபித்தன.

மீள்குடியேற்றத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில், கிழக்கு மாகாணத்தில் - குறிப்பாக திருகோணமலை மற்றும் அம்பாறையைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் - சில

இடங்கள் சகவாழ்வின் ஆய்வகங்களாக மாறின. இவை பிரமாண்டமான நல்லிணக்கத் திட்டங்கள் அல்ல, மாறாக சாதாரண சந்திப்புகள், பெரும்பாலும் பகிரப்பட்ட உழைப்பு, திருவிழாக்கள் மற்றும் நினைவுகூரல்கள் மூலம் சடங்காகச் செய்யப்படுகின்றன. மிகவும் வெளிப்படையான நிகழ்வுகளில் ஒன்று கிண்ணியாவிற்கு அருகிலுள்ள தமிழ் - முஸ்லிம் - சிங்களக் கலப்புக் கிராமத்திலிருந்து வந்தது. அங்கு கிராம அபிவிருத்திச் சங்கம் என்று அழைக்கப்படும் ஒரு கூட்டு ஆண்டுதோறும் 'கிணறு தினத்தை' ஏற்பாடு செய்தது. ஒவ்வொரு ஆகஸ்ட் மாதமும், குடியிருப்பாளர்கள் தங்கள் நெல் வயல்களுக்கு உணவளிக்கும் பழைய நீர்ப்பாசனத் தொட்டியைச் சுத்தம் செய்து பழுதுபார்க்க ஒன்றுகூடினர். மூன்று பெரியவர்கள் - ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் ஒருவர் - தலைமையில் ஒரு குறுகிய விழாவுடன் பணி தொடங்கியது. அவர்கள் குளத்தின் மதகில் ஒரு பானை தண்ணீரை ஊற்றி அருகிலுள்ள மரத்தைச் சுற்றி ஒரு வெள்ளை நூலைக் கட்டினார்கள்.

2019 இல் நான் இந்த நிகழ்வில் கலந்து கொண்டேன். அடையாளமாக ஊற்றிய பிறகு, இளைஞர்களின் குழுக்கள் சேற்றில் இறங்கி, கூடைகளுடன் சேறு மற்றும் குப்பைகளை அள்ளினர். பெண்கள் அருகிலுள்ள ஒரு தற்காலிக சமையலறையில் இனிப்புப் பண்டம், தேநீர் மற்றும் பொங்கலைத் தயாரித்தனர். "இது மதத்தைப் பற்றியது அல்ல. தொட்டி நிரம்பும்போது, நாம் அனைவரும் பயனடைகிறோம்" என்று ஒரு சிங்களப் பங்கேற்பாளர் கூறினார்.

அன்றைய தினம் மதிய உணவின் போது, போருக்கு முன்பு சிங்கள பௌத்த நடைமுறையில் பொதுவாகக் காணப்படும் அறுவடைச் சடங்கான அலுத் சஹால் மங்கல்யவை ( ) தமிழ் அண்டை வீட்டாருடன் சேர்ந்து கொண்டாடியதாக ஒருவர் குறிப்பிட்டார். "நாங்கள் அதை இழந்துவிட்டோம்" என்று மூத்த தமிழ் விவசாயிகளில் ஒருவர் கூறினார், "ஆனால் இந்தச் சுத்தம் செய்தல் எங்கள் புதிய பண்டிகை" என்றார். போருக்குப் பிந்தைய சகவாழ்வு எவ்வாறு உத்தியோகபூர்வ நல்லிணக்கத் திட்டங்கள் மூலம் அல்லாமல் நடைமுறை, சடங்கு சார்ந்த ஒத்துழைப்பு மூலம் செயற்படுத்தப்பட்டது என்பதை இந்தத் தருணங்கள் விளக்குகின்றன. நிலம், நீர் மற்றும் உழைப்பைச் சுற்றியுள்ள பகிரப்பட்ட சடங்குகள் சர்ச்சைக்குரிய அரசியல் வகைகளைத் தூண்டாமல் பரஸ்பர சார்புநிலையை மீண்டும் நிறுவுவதற்கான வழிகளை வழங்கின. இருப்பினும், அத்தகைய முயற்சிகள் அனைத்தும் பதற்றம் இல்லாதவை அல்ல. 2021 ஆம் ஆண்டு அதே பகுதியில் நடந்த ஒரு நிகழ்வில், இளைய முஸ்லிம் பங்கேற்பாளர்கள், வருகை தந்த அரசாங்க அதிகாரி அறிமுகப்படுத்திய சிங்கள மொழி மந்திரங்களை எதிர்த்தனர். முஸ்லிம் இளைஞர்களுக்குத் தலைமையேற்றவர் பின்னர் என்னிடம் கூறினார், "அவர்கள் இது கலாசாரம் என்று கூறுகிறார்கள், ஆனால் அது ஆதிக்கம் செலுத்துவது போல் உள்ளது. எங்களுக்கு எங்கள் சொந்த வழிகள் உள்ளன." இதனால் இந்தச் சடங்குச் சகவாழ்வின் போட்டிப் பார்வைகள், நிகழ்த்தப்பட்ட ஒரு போட்டிக் கட்டமாக மாறியது. உள்ளூர்ப் பங்கேற்பாளர்களைப் பொறுத்தவரை, நுட்பமான பெரும்பான்மைவாத கட்டமைப்பை எதிர்கொண்டு பன்மைத்தன்மையைப் பேணுவது, அழிக்காமல் சேர்ப்பது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவது சவாலாக இருந்தது.

திருகோணமலை நகரத்தில் சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் போது இதேபோன்ற பதற்றங்கள் எழுந்தன. அங்கு உள்ளூர்ப் பள்ளிகள் கூட்டுக் கொடியேற்ற விழாக்களை ஏற்பாடு செய்யத் தொடங்கின. இந்த நிகழ்வு தேசிய ஒற்றுமையாக வடிவமைக்கப்பட்டது. ஆனால் தமிழ் ஆசிரியர்கள், பங்கேற்பது முற்றிலும் தன்னார்வமானது அல்ல என்று கிசுகிசுத்தனர். "நாங்கள் கலந்து கொள்ளவில்லை என்றால், கோட்டக்கல்வி அலுவலகம் எங்களைக் கேள்வி கேட்கும்" என்று ஓர் ஆசிரியர் கூறினார். இருப்பினும், அதே நேரத்தில், பல சமூகங்கள் அதிகாரபூர்வ விழாவில் உள்ளூர்த் தழுவல்களால் நிரப்பப்பட்டன - தேசிய கீதத்துடன் அமைதிக்கான தமிழ்ப் பாடல்களைப் பாடுவது, அல்லது அனைத்துச் சமூகங்களிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக மலர்களை வழங்குவது.

இந்தக் கலப்பின விழாக்கள், மானுடவியலாளர் சபா மஹ்மூத் (2005) "உருவகப்படுத்தப்பட்ட இணக்கத்தின் அரசியல்" (Politics of Embodied Accommodation) என்று அழைப்பதை நிரூபிக்கின்றன. பங்கேற்பு இணக்கமாகவும் நுட்பமான விமர்சனமாகவும் மாறுகிறது. இது பன்மை நினைவாற்றலை அமைதியாக வலியுறுத்துவதோடு இணைந்த அரசு அதிகாரத்தை அங்கீகரிக்கின்றது.

## போருக்குப் பிந்தைய சமூகங்களில் சடங்குகளின் முக்கியத்துவம்

போருக்குப் பிந்தைய இலங்கையில் சடங்குகள் சமூக உட்கட்டமைப்பின் ஒரு வடிவமாகச் செயற்படுகின்றன. இவை முறையான நிறுவனங்கள் தடுமாறும்போது துண்டு துண்டான சமூகங்களை ஒன்றாக வைத்திருக்கும் அர்த்தமுள்ள கட்டமைப்புகள். அவை நிர்வாகமும் நீதியும் நிச்சயமற்றதாக இருக்கும் தொடர்ச்சியை வழங்குகின்றன. போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து, பல கிராமங்களில் செயற்படும் உள்ளூராட்சிச்

சபைகள், பள்ளிக்கூடங்கள், சுகாதார மையங்கள் இருக்கவில்லை. இருப்பினும், அங்கு சடங்கு வடிவங்கள் எப்போதும் இருந்தன. வருடாந்திர நினைவுகூரல்கள், நடவு விழாக்கள், பாடசாலைத் திறப்புகள் என்பன தற்காலிக நிறுவனங்களாகச் செயற்பட்டன. இங்கு மக்கள் கூடினர், முடிவுகள் எடுக்கப்பட்டன, மேலும் ஒழுங்கு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களாகவும் இவை அமைந்தன. மட்டக்களப்பில் உள்ள ஒரு மகளிர் குழுத் தலைவர் கூறியது போல், "எங்களுக்கு இனி ஒரு சபை இல்லை, ஆனால் எங்கள் மாதாந்திரச் சடங்கிற்காக நாங்கள் சந்திக்கும் போது, எல்லாவற்றையும் விவாதிக்கிறோம் - கிணறு, கடன்கள், யாருடன் சண்டையிடுகிறார்கள் என்பது கூட."

சடங்குகள் இவ்வாறு நிர்வாக வெற்றிடத்தை நிரப்பின. அவை அதிகாரத்துவ நடைமுறையை விட குறியீட்டுப் பங்கேற்பின் மூலம் சமூக அதிகாரத்தை மீண்டும் கட்டமைத்தன. இந்த அர்த்தத்தில், அவை பெர்குசன் (1990) "அரசியல் எதிர்ப்பு இயந்திரம்" (*Antipolitics Machine*) என்று அழைத்ததை ஒத்திருக்கின்றன - ஆனால் அதற்கு நேர்மாறாக. வளர்ச்சி அரசியலற்றதாக மாறும் இடத்தில், சடங்கு அன்றாடத்தை மீண்டும் அரசியலாக்குகிறது, சமூக பழுதுபார்ப்பை ஒரு தார்மீகப் பொதுவாக மாற்றுகிறது.

போர் பிரிவினையை உருவாக்குகிறது, உடல் ரீதியாக மட்டுமல்ல, தற்காலிகமாகவும். மக்கள், நாட்கள் மற்றும் பருவங்களின் தாளத்தை இழக்கிறார்கள். சடங்கை மீண்டும் மீண்டும் செய்வது இந்தத் தாளங்களை மீண்டும் நிலைநிறுத்துகிறது. விளக்குகளை ஏற்றுதல், கிணறுகளைச் சுத்தம் செய்தல் அல்லது ஆண்டுதோறும் நினைவு கூர்தல் என்பது வெறும் பழக்கவழக்கங்கள் அல்ல, அவை உணர்ச்சியையும் நேரத்தையும் நிலைநிறுத்தும் உணர்ச்சிகரமான தொழில்நுட்பங்கள்.

நேர்காணல்களில், பல பங்கேற்பாளர்கள் மன அமைதியின் மொழியைப் பயன்படுத்தினர். முல்லைத்தீவில் உள்ள ஒரு தமிழ் விதவை, "நான் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விளக்கை ஏற்றும்போது, என் இதயம் இலகுவாகிறது" என்று கூறினார். காத்தான்குடியில் உள்ள ஒரு முஸ்லிம் மீனவர், வருடாந்திர படகு ஆசீர்வாத விழாக்களில் பங்கேற்பதை "பயத்தைக் கழுவுதல்" என்று விவரித்தார். இந்தச் செயல்கள், உணர்ச்சிகரமான பொருளாதாரங்கள் - வடிவமைக்கப்பட்ட செயல்கள் மூலம் துக்கத்தையும் நம்பிக்கையையும் பரப்புகின்றன.

மீண்டும் மீண்டும் செய்வது கற்பித்தல் சக்தியையும் கொண்டுள்ளது. குழந்தைகள் சடங்குப் பங்கேற்பு மூலம் உயிர்வாழ்வின் தார்மீக இலக்கணத்தைக் கற்றுக்கொள்கிறார்கள். 2020 நினைவு விழாவின் போது, ஒரு சிறுவன் தனது பாட்டிக்கு மெழுகுவர்த்திகளை ஏற்பாடு செய்ய உதவுவதை நான் கவனித்தேன். அவர் என்ன செய்கிறார் என்று நான் கேட்டபோது, அவர் வெறுமனே பதிலளித்தார், "நினைவில் கொள்ள உதவுதல்". இத்தகைய சிறிய சைகைகள் மூலம், சமூகம் தார்மீக அறிவைப் பரப்புகிறது: இழப்புடன் எப்படி வாழ்வது, மரியாதை காட்டுவது எப்படி, எப்படித் தொடர்வது. அதிகாரபூர்வ பாடத்திட்டங்கள் மோதல் வரலாறுகளை அழிக்கும் சூழல்களில், இந்த உருவகப்படுத்தப்பட்ட கற்பித்தல் முறைகள் சமூகக் கற்றலின் முக்கியமான காப்பகங்களாகின்றன.

இலங்கை அரசின் போருக்குப் பிந்தைய விவரிப்பு வெற்றி மற்றும் அபிவிருத்தியை வலியுறுத்துகிறது, தமிழ் மற்றும் முஸ்லிம் இழப்பு அனுபவங்களை ஓரங்கட்டுகிறது. எனவே துக்கம் மற்றும் அன்றாட நினைவுச் சடங்குகள், எதிர்நினைவுகளாகச் செயற்படுகின்றன. அவை மேலாதிக்க வரலாறுகளை எதிர்த்துப் போட்டியிடும் மாற்றுக் காப்பகங்கள் என்ற இடத்தை நோக்கி நகர்கின்றன. ஒரு மரத்தை நடுவது அல்லது காணாமல் போனவரின் பெயரைக் கிணற்றுக்கு வைப்பது போன்ற அரசியல் சாராத செயல்கள் கூட, நிலப்பரப்பில் கீழ்நிலை நினைவைப் பொறிக்கின்றன. அவை நுட்பமான தொடர்ச்சியின் மூலம் அழிக்கப்படுவதை அவர்கள் மறுக்கிறார்கள்.

ஒரு குறிப்பிடத்தக்க உதாரணம் 2018 இல் கிளிநொச்சியில் மீள்குடியேற்றப்பட்ட கிராமத்தில் நிகழ்ந்தது, அங்கு கிராமவாசிகள் சாலையோரத்தில் வேப்பமரங்களை நட்டு, ஒவ்வொரு மரத்திற்கும் ஒரு குடும்பத்தில் இழக்கப்பட்ட ஒருவரின் பெயரை வைத்தனர். அடையாளப் பலகையில் 'கல்லறைகள் இல்லாதவர்களுக்கு' என்று எழுதப்பட்டிருந்தது. உள்ளூர் அதிகாரிகள் அதை அகற்ற உத்தரவிட்டனர். கிராமவாசிகள் இரண்டு வாரங்களுக்குப் பிறகு அமைதியாக அதை மாற்றினர்.

இந்தச் செயல்கள் போருக்குப் பிந்தைய உலகளாவிய முறைகளை எதிரொலிக்கின்றன. பொஸ்னியாவில், அரசின் தடைகளை மீறி முறைசாரா சாலையோர நினைவுச்சின்னங்கள் பெருகிவிட்டன. ருவாண்டாவில், குடும்பங்கள் அதிகாரபூர்வ விழாக்களுக்கு இணையாக தனிப்பட்ட நினைவுப் பலிப்பீடங்களை பராமரிக்கின்றன. கம்போடியாவில், வீட்டு மூதாதையர் காணிக்கைகள் பெரும்பாலும் அரசு தலைமையிலான நீதி வழிமுறைகளுக்கு மாற்றாக உள்ளன. இந்தச் சூழல்களில், அரசியல் மறதிக்கு

மத்தியில், சடங்கு என்பது தார்மீக உண்மை நீடிக்கும் இடமாக மாறுகிறது.

போருக்குப் பிந்தைய சமூகங்களில் சடங்கின் மிக ஆழமான பங்கு, எதிர்காலத்தை நோக்கிய அதன் நோக்குநிலையாக இருக்கலாம். ஏக்கமாக இருப்பதற்குப் பதிலாக, இந்தச் செயல்களில் பலவும் சகிப்புத்தன்மையின் எல்லையை வெளிப்படுத்துகின்றன. முல்லைத்தீவில் உள்ள ஓர் இளம் தமிழ் ஆர்வலர் என்னிடம் கூறினார், “எங்கள் குழந்தைகள் வித்தியாசமாக கற்பனை செய்யக்கூடிய வகையில் நாங்கள் நினைவில் கொள்கிறோம்.” இந்தச் சடங்கு, வெறுமனே நினைவகத்தை மட்டும் உற்பத்தி செய்யவில்லை - அது எதிர்காலத்திற்காக அதை மீண்டும் உருவாக்குகிறது.

இதேபோல், அம்பாறையில் மீள்குடியேறிய சிங்களவர்களிடையே, ஒரு விவசாயி தனது வருடாந்திர பிரித் ஓதும் நிகழ்வை “வெற்றிக்காக அல்ல, நிலைத்தன்மைக்கான பிரார்த்தனை” என்று விளக்கினார். இங்கே சடங்கை மீண்டும் மீண்டும் செய்வது நிச்சயமற்ற தன்மையைக் கட்டுப்படுத்தும் ஒரு வழியாகிறது. இது பலவீனத்தைத் தாளமாகவும், பயத்தை தொடர்ச்சியாகவும் மாற்றுகிறது. விக்டர் டர்னர் (1982) கவனித்தபடி, சடங்கு பிரதிபலிப்பு மற்றும் உருவாக்கம் ஆகிய இரண்டும் கொண்டது. அது நினைவுகூரும் சமூக வடிவங்களையே உருவாக்குகிறது. இலங்கையின் போருக்குப் பிந்தைய நிலப்பரப்பில், சமரசம் இல்லாத நிலையிலும் கூட இந்த உருவாக்கத்தரம் ஒரு தார்மீக சமூகத்தை நிலைநிறுத்துகிறது.

## சடங்குகளின் விலக்கு அரசியல்

வடக்கு மற்றும் கிழக்கில் சாதி அரிதாகவே பொதுவில் பேசப்பட்டாலும், அது சடங்கு வாழ்க்கையின் தார்மீகக் கட்டமைப்பில் பொதிந்துள்ளது. யாழ்ப்பாணத்தின் மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களில், நினைவு மற்றும் சமூகச் சடங்குகளின் அமைப்பு பெரும்பாலும் சாதி - குறியீட்டு முறைகளைப் பின்பற்றுகிறது: யார் விருந்தளிப்பார்கள், யார் சமைப்பார்கள், யார் பேசுவார்கள், யார் முதலில் ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள். உதாரணமாக, வல்வெட்டித்துறையில் 2015 ஆம் ஆண்டு நடந்த கிராம நினைவு நிகழ்வின் போது, விளக்கு ஏற்றும் வரிசை ஒரு கணிக்கக்கூடிய வரிசையைப் பின்பற்றியது - முதலில் நில உரிமையாளர்கள், இரண்டாவது மீனவர்கள், கடைசியாக தொழிலாளர்கள். ஏன் என்று ஓர் அமைப்பாளரிடம் நான் கேட்டபோது, அவர் சங்கடமாகச் சிரித்தார்: “எப்போதும் அப்படித்தான். நாங்கள் புதிய பிரச்சினைகளை உருவாக்க விரும்பவில்லை.” ஆயினும், போருக்குப் பிந்தைய இடப்பெயர்வு இந்தப் படிநிலைகளைச் சீர்குலைத்தது. பல ‘உயர்சாதி’க் குடும்பங்கள் சொத்து மற்றும் அந்தஸ்தை இழந்தன, அதே நேரத்தில் சில ‘கீழ்சாதி’க் குழுக்கள், அரசு சாரா வேலைவாய்ப்பு அல்லது இடப்பெயர்வு நிவாரணப் பணம் மூலம், புதிய வடிவிலான இயக்கத்தைப் பெற்றன. சடங்கு நிகழும் இடங்கள், இந்த மாற்றங்கள் உரையாடப்பட்ட அரங்கங்களாக மாறின. முன்னர் குறிப்பிடப்பட்டபடி, 2018 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் உள்ள பெண்கள் கூட்டுறவுச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவேந்தல் நிகழ்வில், வரலாற்று ரீதியாக ஒதுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒரு விதவை முதல் விளக்கை ஏற்றினார். இந்த முடிவு திட்டமிட்டே எடுக்கப்பட்டது. ஏற்பாட்டாளர்களில் ஒருவர் விளக்கினார்: “போரில், மரணம் சாதியைத் தேர்ந்தெடுக்கவில்லை. நாம் ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?” இந்தச் செயல் முணுமுணுப்புகளுக்கு உள்ளானது, ஆனால் அமைதியான ஒப்புதலுடன் நடந்தேறியது. இத்தகைய மறுகட்டமைப்புகள் சடங்குப் பெருக்கம் மற்றும் மாற்றத்திற்கான தளமாக எவ்வாறு செயற்பட முடியும் என்பதை வெளிப்படுத்துகின்றன. படிநிலை மீண்டும் உறுதிப்படுத்தப்படும் அல்லது தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் ஒரு குறியீட்டு இடத்தை இது வழங்குகிறது.

வர்க்கமும், சடங்குப் பங்கேற்பை ஆழமான வழிகளில் வடிவமைக்கிறது. பணக்காரக் குடும்பங்கள் விரிவான நினைவுச் சின்னங்களை ஆதரிக்கலாம், உணவு விநியோகிக்கலாம், விருந்தினர்களுக்கு விருந்தளிக்கலாம். இவை குறியீட்டு மூலதனத்தை வழங்கும் செயல்கள். ஏழைக் குடும்பங்கள் தொழிலாளர்களாகவோ அல்லது பார்வையாளர்களாகவோ பங்கேற்கின்றன, அவர்களின் துக்கம் கூட்டு அநாமதேயத்தில் உறிஞ்சப்படுகிறது. மட்டக்களப்பில், 2023 இல் ஒரு பத்திரிகையாளர் என்னிடம் கூறினார், “துக்கத்திற்கும் ஒரு பட்ஜெட் உள்ளது.” நன்கு நிதியளிக்கப்பட்ட நகர்ப்புறச் நினைவுச் சின்னங்களுக்கும், சாதாரண கிராமப்புறக் கூட்டங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை அவர் குறிப்பிடுகிறார். அரசு சாரா நிறுவனங்களும் அரசியல் கட்சிகளும் பெரும்பாலும் நடுத்தர வர்க்க உயரடுக்கினர் மூலம் வளங்களைச் செலுத்துகின்றன, கவனக்குறைவாக தங்கள் அதிகாரத்தைப் பலப்படுத்துகின்றன.

புலம்பெயர்ந்தோர் குழுவால் நிதியளிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டின் ஒரு நினைவு நாளில் ஒரு வெளிப்படையான தருணம் நிகழ்ந்தது.

ஏற்பாட்டாளர்கள் மேடை அலங்காரங்கள் மற்றும் ஒலிபெருக்கிகளை இறக்குமதி செய்தனர். நிகழ்வு ஒரு 'நிகழ்ச்சி'யாகிவிட்டதாக உள்ளூர் கிராமவாசிகள் புகார் கூறினர். ஒரு விவசாயி கருத்துத் தெரிவித்தார்: "அவர்கள் துன்பத்தைப் பற்றிப் பேசுகிறார்கள், ஆனால் நாங்கள் இன்னும் அதை வாழ்கிறோம்." இங்கே, வர்க்க இயக்கவியல் அழகியல் தேர்வுகளுடன் பின்னிப்பிணைந்துள்ளது. ஜேம்ஸ் பெர்குசன் (1999) 'காட்சியின் அரசியல்' (The Politics of Display) என்று இதை அழைக்கிறார். சடங்குத் தெரிவுநிலை சட்டபூர்வமான தன்மையின் அடையாளமாக மாறுகிறது. நிகழ்வை அரங்கேற்றக்கூடியவர்கள் அதன் கதையைக் கட்டுப்படுத்துகிறார்கள்.

சமூகப் பங்கேற்பைப் பின்தொடர்வதில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பெரும்பாலும் சடங்கு இடங்களை மத்தியஸ்தம் செய்கின்றன. அவை 'நினைவு நிகழ்வுகள்', 'சமாதான தூதர்களுக்கான பயிற்சி' அல்லது 'வாழ்வாதார விழாக்களுக்கான' பொருட்களுக்கு நிதியுதவி அளிக்கின்றன. இந்தத் தலையீடுகள் சமூகங்களை மேம்படுத்தும் அதேவேளையில், சடங்கு அழகியலையும் மறுவடிவமைக்கின்றன - உரைகள், லோகோக்கள் மற்றும் நெருக்கமான செயல்களை கண்ணாடிகளாக மாற்றும் ஊடகக் கவனத்தை அறிமுகப்படுத்துகின்றன.

கிளிநொச்சியில் உள்ள ஓர் உள்ளூர் ஆர்வலர் குறிப்பிட்டார்: "அரசு சாரா நிறுவனங்கள் நன்கொடையாளர்களுக்காக எவ்வாறு பேசுவது என்பதை எங்களுக்குக் கற்றுக்கொடுத்தன. ஆனால் சிலநேரங்களில் நமக்காக எவ்வாறு பேசுவது என்பதை நாங்கள் மறந்து விடுகிறோம்." இந்தக் கருத்தானது, சியரா லியோனின் உண்மையைச் சொல்லும் சடங்குகளில் மானுடவியலாளர் ரோசாலிண்ட் ஷா (2007) அவர்களின் கவனித்ததைப் பிரதிபலிக்கிறது: உள்ளூர் தார்மீக வடிவங்களை நன்கொடையாளர் நட்பு நிகழ்ச்சிகளாக மொழிபெயர்ப்பது. இலங்கையில், இந்த மொழிபெயர்ப்பு பெரும்பாலும் வர்க்க மற்றும் மொழியியல் படிநிலைகளை மறுவடிவமைக்கிறது. ஆங்கிலம் பேசும் உயரடுக்குகள் சடங்குத் தரகர்களாக மாறுகிறார்கள், அதேநேரத்தில் வட்டாரக் குரல்கள் பின்வாங்குகின்றன.

ஆயினும்கூட, சமூகங்கள் இந்தத் திணிக்கப்பட்ட வடிவங்களை அடிக்கடி சிதைக்கின்றன. 2020 ஆம் ஆண்டு நன்கொடையாளர் நிதியுதவியுடன் கூடிய நினைவு தின நிகழ்வின் போது, தொடர்ச்சியான அதிகாரபூர்வ உரைகளுக்குப் பிறகு, வயதான பெண்கள் குழு ஒன்று இறந்தவர்களுக்கு பாரம்பரியமாகப் பயன்படுத்தப்படும் தாலாட்டுப் பாடலைப் பாடத் தொடங்கியது. அரசு சாரா ஊழியர்கள் குழப்பமடைந்து, தலையிடலாமா வேண்டாமா என்று தெரியாமல் இருந்தனர். பெண்களின் செயல் நிகழ்வின் தார்மீக மையத்தை மீட்டெடுத்தது, அதிகாரத்துவக் கதையாடலை விட உணர்ச்சிபூர்வமான நம்பகத்தன்மையை மீண்டும் வலியுறுத்தியது.

போருக்குப் பிந்தைய சடங்கு வாழ்க்கையின் உணர்ச்சி மற்றும் அமைப்பு ரீதியான உழைப்பை பெண்கள் தாங்குகிறார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் சமைக்கிறார்கள், சுத்தம் செய்கிறார்கள், ஒருங்கிணைக்கிறார்கள், நினைவில் கொள்கிறார்கள். அவர்களின் பணி பெரும்பாலும் அங்கீகரிக்கப்படவில்லை, ஆனால் அவசியமானது. கிளிநொச்சியில் ஒரு விதவை கூறியது போல், "ஆண்கள் அரசியல் பேசுகிறார்கள், ஆனால் நாங்கள் அர்த்தத்தை உருவாக்குகிறோம்." பெண்களின் சடங்கு உழைப்பு என்பது 'தினசரி வேலை' என்று அழைப்பதை உருவாக்குகிறது - கவனிப்பு, மீண்டும் மீண்டும் செய்தல் மற்றும் சகிப்புத்தன்மை மூலம் சமூக வாழ்க்கையை மெதுவாக மறுகட்டமைத்தல். முறையான நல்லிணக்கச் செயல்முறைகள் ஆணாதிக்கமாகவும் இராணுவமயமாக்கப்பட்டதாகவும் இருந்தாலும், சடங்குகளின் இந்தப் பெண்ணியக்களம் தார்மீக ஒழுங்கை நிலைநிறுத்துகிறது. இந்த உள்நாட்டு மற்றும் வகுப்புவாத இடங்களில்தான் எதிர்காலம் அமைதியாக ஒன்றுகூடுகிறது.

இந்த இனவியல் விளக்கப்படங்கள் மற்றும் பகுப்பாய்வுகள் மூலம், போருக்குப் பிந்தைய வடக்குக் கிழக்கில் உள்ள சடங்குகள் நவீனத்துவத்திற்கு முந்தைய கலாசாரத்தின் எச்சங்கள் அல்ல, மாறாக அதிர்ச்சிக்கும் மறுகட்டமைப்புக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்யும் தகவமைப்பு, அரசியல் ரீதியாக தீவிரமான நடைமுறைகள் என்பதை நாம் காண்கிறோம். அவை சொந்தம் என்பதை வெளிப்படுத்துகின்றன, விலக்கப்படுவதை எதிர்த்துப் போட்டியிடுகின்றன, மேலும் நிறுவன நீதி இல்லாத நிலையில் நினைவகத்தை உருவாக்குகின்றன. சடங்குகள் கடந்த காலத்தை மீண்டும் வசிப்பதன் மூலம் எதிர்காலத்தை உறுதியானதாக ஆக்குகின்றன. மூச்சுத் திணறலுக்குப் பிறகு சமூக அமைப்பு மீண்டும் சுவாசிக்கக் கற்றுக்கொள்ளும் இடங்கள் அவை. அவை, சகவாழ்வைப் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்துகின்றன, படிநிலைகளை மறுசீரமைக்கின்றன, உயிர்வாழ்வை உறுதி செய்கின்றன.

# பகுதி 2

## பகிரப்பட்ட வடிவங்கள்: தார்மீக உட்கட்டமைப்பாகச் சடங்கு

*முதல் வெளிச்சத்தில், குளம் அமைதியாக இருக்கிறது. பனைமரத் தண்டுகளில் மூடுபனி ஒட்டிக்கொண்டிருக்கிறது, காற்றில் புகை மற்றும் உப்பு வாசனை இலேசாக வீசுகிறது. பனியால் நனைந்த புடவைகளுடன் ஒரு சிறிய பெண்கள் குழு அமைதியாக நிற்கின்றது. அவர்கள் பூமாலைகளையும் ஒரு களிமண் விளக்கையும் ஏந்திச் செல்கிறார்கள். அவர்களில் ஒருவர் தனது மூச்சின் கீழ் முணுமுணுக்கிறார் - பாதி பாடல், பாதி புலம்பல். மற்றவர்கள் மெதுவாக இணைகிறார்கள், அவர்களின் குரல்கள் திரியின் முதல் மினுமினுப்புப் போல நடுங்குகின்றன. அருகிலுள்ள சாலையில் ஒரு சில பொலிசார் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் தலையிடவில்லை.*

*இது மீண்டும் மே 18 ஆம் தேதி. வடக்கு முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான பெண்களுக்கு, இந்த நாள் பல வருட வலியை ஒரே சைகையாக மாற்றுகிறது. போர் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக நடந்து முடிந்துவிட்டது. ஆனால் கடந்தகாலம் குளம் மீது மூடுபனி போல நீடிக்கிறது - தெரியக்கூடியது, கரைந்து, விடியற்காலையில் மீண்டும் திரும்புகிறது. மூத்த பெண் விளக்கை ஏற்றக் குனியும்போது, அவள் கை இலேசாக நடுங்குகிறது. "ஒவ்வொரு வருடமும்," அவள் என்னிடம் கிசுகிசுத்தாள், "இது கடைசி முறை என்று நாங்கள் உறுதியளிக்கிறோம். ஆனால் அடுத்த வருடம் வருகிறது, நாங்கள் இன்னும் இங்கே இருக்கிறோம்." இந்தச் செயல் - நீரின் ஓரத்தில் ஒரு விளக்கை ஏற்றுவது - அங்கீகரிக்கப்பட்ட சடங்கு அல்ல. இதற்கு எந்தக் கோவிலின் ஒப்புதலும் இல்லை, அரசாங்கத்தின் ஒப்புதலும் இல்லை. ஆனாலும் அது அமைதியாக, விடாப்பிடியாக நீடிக்கிறது. இது நினைவில் கொள்ளும் உரிமை, அந்த நினைவின் மூலமான எதிர்காலத்திற்கான உரிமை.*

போருக்குப் பிந்தைய நிலப்பரப்புகளில், இதேபோன்ற விடியல்கள் வெளிப்படுகின்றன: அமைதியானது, தெளிவற்றது, துக்கம் மற்றும் ஆட்சி இரண்டையும் உள்ளடக்கியது. ருவாண்டாவில், 1994 இனப்படுகொலையில் இருந்து தப்பியவர்கள் ஒவ்வொரு ஏப்ரல் மாதமும் குவிபுகாவிற்கு - "நினைவில் கொள்ள" கூடுகிறார்கள். தெருக்களில் ஒற்றுமையை அறிவிக்கும் பதாகைகள் வரிசையாக உள்ளன. அதே நேரத்தில் உள்ளூர்ச் சமூகங்கள் உரைகள், பாடல்கள் மற்றும் சாட்சியங்களால் நிரப்பப்பட்ட இரவு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. விழாக்கள் ஒரே நேரத்தில் நெருக்கமானவையாகவும் திட்டமிடப்பட்டவையாகவும் இருக்கின்றன. மானிடவியலாளர் பில் கிளார்க் (2010) இந்த அரசு நிர்வகிக்கும் சடங்குகள் எவ்வாறு நல்லிணக்கத்தின் கதையை வளர்க்கின்றன, ஆனால் எதிர்ப்பை அமைதிப்படுத்துகின்றன என்பதை விவரிக்கிறார். அங்கீகரிக்கப்பட்ட கட்டமைப்பிற்கு வெளியே பேசும் உயிர் பிழைத்தவர்கள், பிளவுபடுத்தும் நபர்கள் என்று முத்திரை குத்தப்படுவார்கள். சடங்கின் உணர்ச்சிச் சக்தி துல்லியமாக இந்தப் பதற்றத்தில் உள்ளது: துக்கப்படுவதற்கான உண்மையான தேவைக்கும் ஒற்றுமையைச் செய்வதற்கான அரசியல் கட்டாயத்திற்கும் இடையில்.

இலங்கையின் வடக்கில், 'போர் வெற்றி நாள்' குறித்த அரசின் வலியுறுத்தல் இந்த இயக்கவியலைப் பிரதிபலிக்கிறது. கொழும்பில் அதிகாரபூர்வ அணிவகுப்புகள் வெற்றியைக் கொண்டாடுகின்றன, அதே நேரத்தில் முல்லைத்தீவில் நினைவுகூருதல் அடக்கப்பட்டு, காவல் செய்யப்பட்டு, ஓரங்களுக்குத் தள்ளப்படுகிறது. இருப்பினும், மக்கள் விளக்குகளை ஏற்றுதல், பாடுதல், மரங்களை நடுதல் போன்ற சிறிய சடங்குகளில் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள். இவை எதிர்ச் சடங்குகள், துக்கத்தின் இணையான இறையாண்மைகள்.

கிளிநொச்சியில் ஒரு விதவை ஒருமுறை, "அவர்கள் அங்கு வெற்றியைக் கொண்டாடுகிறார்கள்; நாங்கள் இங்கே வெற்றியைப் பெறுகிறோம்" என்று கூறினார். அவரது சொற்றொடர் அதிகாரபூர்வ சடங்குக்கும் வட்டார வழக்கத்திற்கும் இடையிலான பிளவைப் படம்பிடிக்கிறது - வரலாற்றை மூட அரசு முயற்சிப்பதும், அதை முடிவுக்குக் கொண்டுவர மக்கள் மறுப்பதும் என எதிரெதிர் இயங்கியல்கள் அரங்கேறுகின்றன.

இங்கு பொஸ்னியா அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது முக்கியம். டேட்டன் ஒப்பந்தங்களுக்கு இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு, ஸ்ரெப்ரெனிகாவில் ஆண்டுதோறும் நடைபெறும் நினைவு நாள் ஓர் உலகளாவிய அடையாளமாகவும் உள்ளூர்க் காயமாகவும் மாறியுள்ளது. ஒவ்வொரு ஜூலை மாதமும், பச்சைத் துணியால் மூடப்பட்ட சவப்பெட்டிகள் நினைவுச்சின்னத்தின் வழியாக எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆயிரக்கணக்கானோர் பிரார்த்தனை செய்கிறார்கள். சர்வதேசப் பிரமுகர்கள்

*கற்றுக்கொண்ட பாடங்களைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் உயிர் பிழைத்தவர்களுக்கு, இச்சடங்கு அங்கீகாரத்தைப் போலவே இல்லாமையையும் பற்றியது.*

*இனவியலாளர் ஸ்டெஃப் ஜான்சன் (2015) இந்த விழாக்கள் 'சீரற்ற தற்காலிகத்தன்மையால்' குறிக்கப்படுகின்றன என்று குறிப்பிடுகிறார்: அதிகாரிகள் அவற்றை மூடுதலாக முன்வைக்கும்போது, உயிர் பிழைத்தவர்கள் அவற்றைத் தீர்மானமின்றி மீண்டும் மீண்டும் அனுபவிப்பார்கள். நீதி ஒரு பகுதியாக இருக்கும் ஒரு நிலப்பரப்பில், சடங்கு இழப்பை மீண்டும் மீண்டும் செய்கிறது.*

*முள்ளிவாய்க்காலைப் போலவே ஸ்ரெப்ரெனிகாவிலும், சடங்குப் பொருள் - சவப்பெட்டி, விளக்கு - ஒரு தற்காலிக இருப்பாக மாறுகிறது. இது கடந்தகால வன்முறையை நிலையற்ற நிகழ்காலத்துடன் இணைக்கிறது. மக்கள் நினைவில் கொள்வதற்காக மட்டுமல்ல, இழப்பின் தொடர்ச்சியில் வசிப்பதற்காகவும் கூடுகிறார்கள். இரண்டு சூழல்களிலும், சடங்கு இடம் ஒரு தார்மீக எல்லையாக மாறுகிறது. பங்கேற்பு என்பது கடமை மற்றும் ஆபத்து இரண்டும் ஆகும். பொஸ்னியாவில், ஸ்ரெப்ரெனிகா நினைவேந்தலில் கலந்துகொள்வது என்பது சமூகங்களைப் பிளவுபடுத்தும் பாதிக்கப்பட்டவர்களின் கதையை உறுதிப்படுத்துவதாகும். இலங்கையில், பொதுவில் விளக்கை ஏற்றுவது கண்காணிப்பு அல்லது கைதுக்கு அழைப்பு விடுக்கலாம். ஆனாலும், மக்கள் தொடர்கிறார்கள். 2021 ஆம் ஆண்டு ஒரு களப் பயணத்தின் போது ஒரு தமிழ் இளைஞர் கூறியது போல், "நாங்கள் நிறுத்தினால், நாங்கள் மறந்துவிட்டோம் என்று அவர்கள் கூறுவார்கள்."*

*கம்போடியாவில், கெமர் ரூஜ் மற்றும் வியட்நாமிய ஆக்கிரமிப்பின் கீழ் பல தசாப்தகால அமைதிக்குப் பிறகு, 1990களில் சடங்கு வாழ்க்கை மெதுவாக மீண்டும் வெளிப்பட்டது. சுத்திகரிப்புகளின் போது அழிக்கப்பட்ட புத்த துறவிகள், பகோடாக்களை மீண்டும் கட்டியெழுப்பவும், அர்ச்சனை விழாக்களை மீண்டும் உயிர்ப்பிக்கவும் திரும்பினர். ஆனால் ஜூடி லெட்ஜர்வுட் (1997) மற்றும் அலெக்சாண்டர் ஹின்டன் (2008) போன்ற அறிஞர்கள் கவனிக்கிறபடி, இந்த மறுமலர்ச்சி வெறுமனே மத ரீதியானது அல்ல. மனித உறவுகள் உடைந்த உலகில் தார்மீக ஒழுங்கை மீட்டெடுப்பதற்கான ஒரு முயற்சி இது.*

*கிராமப்புறக் கம்போடியாவில், பெயரிடப்படாத இறந்தவர்களுக்கு கிராமவாசிகள் கூட்டுத் தகுதிச் சடங்குகளை எவ்வாறு செய்யத் தொடங்கினர் என்பதை லெட்ஜர்வுட் விவரிக்கிறார். துறவிகளுக்கு உணவு வழங்குதல், தூபம் ஏற்றுதல் போன்ற இந்தச் செயல்கள் நீதி வழிமுறைகள் இல்லாத இடத்தில் தார்மீகத் தொடர்ச்சியை உருவாக்கின. சடங்கு மூலம், இறந்தவர்கள் உயிருள்ளவர்களின் தார்மீகப் பிரபஞ்சத்தில் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டனர்.*

*கம்போடிய வழக்கு இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுடன் வலுவாக எதிரொலிக்கிறது. இங்கும், இறந்தவர்கள் பெயரிடப்படவில்லை, அவர்களின் எச்சங்கள் சிதறிக்கிடக்கின்றன அல்லது காணாமலாகிவிட்டன. முறையான உண்மை ஆணையங்கள் மற்றும் இழப்பீட்டுச் செயல்முறைகள் முழுமையடையாமல் உள்ளன. அவர்கள் இல்லாதபோது, சமூகங்கள் தங்கள் சொந்த தார்மீகப் பரிகாரங்களைச் செய்கின்றன.*

*ஒரு தாய் ஒருமுறை என்னிடம் கூறினார், "நான் என் மகனுக்குத் தண்ணீர் ஊற்றும்போது, நான் அவனுக்கு உணவளிப்பது மட்டுமல்ல. எனது நேரத்தையும் அளிக்கின்றேன்." இந்தச் சொற்றொடர் எனக்கு ஆழமானதாகத் தோன்றியது: காணிக்கை செலுத்தும் செயல் ஒரு தற்காலிக வாழ்வாதாரமாக மாறி, நினைவையும் நேரத்தையும் உயிருடன் வைத்திருக்கிறது.*

*இந்தச் சூழல்களில் - ருவாண்டா, போஸ்னியா, கம்போடியா மற்றும் இலங்கை - சடங்கு பல ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய செயற்பாடுகளைச் செய்கிறது.*

1. *தார்மீக மறுசீரமைப்பாகச் சடங்கு: வெகுஜன வன்முறைக்குப் பிறகு, சமூகத்தின் தார்மீகக் கட்டமைப்புத் துண்டாடப்படுகிறது. நன்மைக்கும் தீமைக்கும், உறவினர்களுக்கும் அந்நியர்களுக்கும் இடையிலான சாதாரண வேறுபாடுகள் மங்கலாகின்றன. சடங்குச் செயல்கள் - எலும்புகளைக் கழுவுதல், விளக்குகளை ஏற்றுதல், பெயர்களைச் சொல்லுதல் - ஒரு தார்மீக இலக்கணத்தை மீண்டும் நிறுவுகின்றன. எதுவும் மிச்சப்படுத்தப்படாத உலகில் புனிதமாக இருக்க வேண்டியதை அவை பங்கேற்பாளர்களுக்கு நினைவூட்டுகின்றன.*
2. *அரசியல் மொழியாகச் சடங்கு: அரசுகள் மூடலை வலியுறுத்த சடங்கைப் பயன்படுத்துகின்றன. சமூகங்கள் அங்கீகாரத்தைக் கோர அதைப் பயன்படுத்துகின்றன. இந்தப் பதற்றம் சாதாரணத்திற்கும் விதிவிலக்கானதற்கும் இடையிலான நிறைந்த உறவைக் குறிக்கிறது.*

சடங்குகள் அந்த வாசலில் உள்ளன. அரசியல் கோரிக்கையின் எடையைச் சுமக்கும் அன்றாடச் செயல்களாகப் பரிணமிக்கின்றன.

3. தற்காலிக மத்தியஸ்தமாகச் சடங்கு: இந்தச் சமூகங்கள் ஒவ்வொன்றும் காலத்தோடு போராடுகின்றன. எதிர்காலம் உடையக்கூடியதாக உணரப்படுகிறது. கடந்தகாலம் பின்வாங்க மறுக்கிறது. சடங்கு இந்தத் தற்காலிக முட்டுக்கட்டையை மத்தியஸ்தம் செய்கிறது. இது பதப்படுத்தப்படாத அதிர்ச்சியை மீண்டும் மீண்டும் மாற்றுகிறது. தாங்க முடியாததை வாழ முடியாததாக ஆக்குகிறது.

4. சமூக உள்ளடக்கமாக அல்லது விலக்காகச் சடங்கு: சடங்குகள், குணமடையும் போது கூட, அவற்றுக்கு யார் சொந்தமானவர்கள் என்பதையும் வரையறுக்கின்றன. போஸ்னியாவில், செர்பிய சமூகங்கள் இணையான நினைவுச் சடங்குகளைச் செய்கின்றன. இலங்கையில், சாதி மற்றும் வர்க்கம் யார் விளக்கை ஏற்றுகிறார்கள் அல்லது முதலில் பேசுகிறார்கள் என்பதை வடிவமைக்கின்றன. இவ்வாறு சடங்கு ஒற்றுமையை உறுதியளிக்கும் அதேவேளையில் சமத்துவமின்மையை மீண்டும் உருவாக்குகிறது. இந்தச் செயற்பாடுகள் தனித்தனியானவை அல்ல, ஆனால் பின்னிப்பிணைந்தவை. அவை ஒன்றாக நான் சடங்கு என்று அழைப்பதை உருவாக்குகின்றன - முறையான அமைப்புகள் தடுமாறும்போது தார்மீக, உணர்ச்சி மற்றும் அரசியல் வாழ்க்கையின் எடையைச் சுமக்கும் ஒரு வாழ்க்கை அமைப்பு.

போருக்குப் பிந்தைய சமூகங்களில் ஒரு குறிப்பிடத்தக்க ஒற்றுமை என்னவென்றால், அவற்றின் சடங்குகளின் அழகியல் 'மினிமலிசம்' ஆகும். முள்ளிவாய்க்காலில், ஒரு விளக்கு, ஸ்ரெப்ரெனிகாவில், பச்சை நிறத்தில் மூடப்பட்ட சவப்பெட்டி, கம்போடியாவில், காற்றில் வழங்கப்படும் ஒரு கிண்ணம் அரிசி. இவை அரிதான, மீண்டும் மீண்டும் வரும் சைகைகள்; வடிவத்தில் கிட்டத்தட்ட துறவிக்கு ஒப்பானவை. ஆனால் அவற்றின் எளிமை ஏமாற்றும். மானிடவியலாளர் மைக்கேல் ஜாக்சன் (2013) 'இருத்தலியல் உந்தல்' (Existential Momentum) என்று அழைப்பதை உருவாக்குகின்றன - வாழ்க்கை மகத்தான மாற்றத்தின் மூலம் அல்ல, ஆனால் தொடர்ச்சியின் அமைதியான வலியுறுத்தலின் மூலம் முன்னோக்கி நகர்கிறது என்ற உணர்வை உருவாக்குகின்றன. இலங்கையின் போருக்குப் பிந்தைய நிலப்பரப்பில், அழகியல் கட்டுப்பாடு பாதுகாப்பாகவும் செயற்படுகிறது. அதிகப்படியான காட்சிப்படுத்தல் அரசின் ஆய்வை அழைக்கிறது. மிகக் குறைவானது மறதிக்கு ஆபத்தை விளைவிக்கிறது. சமூகங்கள் தெரிவுநிலைக்கும் கண்ணுக்குத் தெரியாததற்கும் இடையில் சமநிலையைக் கற்றுக்கொள்கின்றன. இது 'இரகசிய அழகியல்' என்று அழைக்கப்படுவதை உருவாக்குகிறது. செயலின் மிகச் சிறிய தன்மையே அதன் பலமாகிறது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓர் இளம் அமைப்பாளர் விளக்கினார்: "எங்களுக்கு ஒலிபெருக்கிகள் தேவையில்லை. ஒரு விளக்குப் போதும்." அமைதியான பழுதுபார்ப்பின் இந்த அழகியல் கம்போடிய 'தகுதி பிரசாதங்கள்' மற்றும் ருவாண்டன் 'வீட்டு விழிப்புணர்வு'களை எதிரொலிக்கிறது. அங்கு பொருள் காட்சி மூலம் அல்ல, சகிப்புத்தன்மை மூலம் குவிகிறது.

இலங்கை உட்பட போருக்குப் பிந்தைய நாடுகள் பெரும்பாலும் சடங்கு நேரத்தை அபிவிருத்தி நேரத்துடன் மாற்ற முயல்கின்றன - முன்னேற்றம், சாலைகள் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் எதிர்கால வேகம். உத்தியோகபூர்வ சொற்பொழிவில், நினைவகம் ஒரு தடையாகவும், சடங்கு ஏக்கமாகவும் பார்க்கப்படுகிறது. இருப்பினும், களத்தில், மக்கள் அபிவிருத்தித் திட்டங்களை சடங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளாகவே அனுபவிக்கிறார்கள்: ரிப்பன் வெட்டுதல், அடிக்கல் நாட்டுதல், மாலை அணிவித்தல்.

இந்த விழாக்கள் சடங்கின் தற்காலிகத் தர்க்கத்தைப் பிரதிபலிக்கின்றன. இவை கிட்டத்தட்ட தொடக்கங்களின் மறுநிகழ்வு. ஒவ்வொரு திட்டமும் 'புதிய சகாப்தத்தை' துவக்குகிறது, அதே வாக்குறுதிகள் மீண்டும் மீண்டும் வந்தாலும் கூட. வளர்ச்சி இவ்வாறு சடங்கு வடிவத்தை ஏற்றுக்கொள்கிறது, அதேநேரத்தில் அதன் தார்மீக ஆழத்தை வெறுமையாக்குகிறது. 2016 இல் களப்பணியின் போது, கிளிநொச்சியில் அரசு நிதியுதவி அளித்த வீட்டுவசதி திறப்பு விழாவில் நான் கலந்து கொண்டேன். நிகழ்வு பிரித் ஓதலுடன் தொடங்கியது. அதைத் தொடர்ந்து ரிப்பன் வெட்டுதல் மற்றும் நல்லிணக்கம் பற்றிய உரைகள் நடந்தன. ஓர் அரசு அதிகாரி, "இது ஒரு புதிய அத்தியாயத்தின் ஆரம்பம்" என்று அறிவித்தார். அன்று மாலையில், கிராமவாசிகள் அமைதியாக தங்கள் சொந்த விழாவை நடத்தினர். அதே வீடுகளை விளக்குகள் மற்றும் பாடலுடன் ஆசீர்வதித்தனர். ஒரு பங்கேற்பாளர், "அவர்கள் சுவர்களைக் கட்டுகிறார்கள்; நாங்கள் அர்த்தத்தைக்

கட்டுகிறோம்” என்று நகைச்சுவையுடன் குறிப்பிட்டார்.

இந்தச் சுருக்கம் போருக்குப் பிந்தைய மறுகட்டமைப்பின் முரண்பாட்டை உள்ளடக்கியது: தார்மீகப் பழுது அல்ல, பொருளின் மறுகட்டமைப்புப் பற்றியது. சடங்கு, அதன் அடிமட்ட வடிவத்தில், அதிகாரத்துவ முடுக்கத்திலிருந்து தார்மீகத் தற்காலிகத்தை மீட்டெடுக்கிறது.

எல்லாச் சடங்குகளும் கண்ணுக்குத் தெரிவதில்லை. மௌனம் பெரும்பாலும் ஒரு சடங்கு முறையாக மாறுகிறது. போஸ்னியாவில், உயிர் பிழைத்தவர்கள் பெயர்களை உரக்கப் பேச மறுக்கிறார்கள். ருவாண்டாவில், கூட்டு மௌனத்தின் தருணங்கள் அரசு விழாக்களாகக் கட்டமைக்கப்படுகின்றன. இலங்கையில், மௌனம் திணிக்கப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. 2023 ஆம் ஆண்டில், யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு நினைவு நிகழ்வில் நான் கலந்து கொண்டேன், அங்கு எந்த உரைகளும் வழங்கப்படாது என்று ஏற்பாட்டாளர்கள் முடிவு செய்தனர். அதற்குப் பதிலாக, அவர்கள் ஐந்து நிமிடங்கள் கடலை நோக்கி நின்றனர். ஒரு பங்கேற்பாளர் பின்னர் என்னிடம் கூறினார், “நாங்கள் வார்த்தைகளால் சோர்வடைந்துவிட்டோம். மௌனம் எங்கள் பிரார்த்தனை.”

இந்த மௌனம் பல அடுக்கு அர்த்தங்களைக் கொண்டிருந்தது: துக்கம், எதிர்ப்பை எதிர்ப்பது, சோர்வு. வன்முறைக்குப் பிறகு, பேச்சு ஒரு காயமாக இருக்கலாம் என்ற கருத்தை இது எனக்கு நினைவூட்டியது. சடங்கு மௌனம் சமூகங்கள் அந்த காயத்திற்குள் மூடுதலைக் கோராமல் வாழ அனுமதிக்கிறது. மௌனம் என்பது இல்லாமை அல்ல, வடிவம். இது கட்டமைப்பு எல்லைகளைப் பாதிக்கிறது, வரையறுக்கிறது மற்றும் இருப்பை அழைக்கிறது. இந்த வழியில், மௌனம் ஒரு வகையான இலக்கணமாக மாறுகிறது. இதன் மூலம் போருக்குப் பிந்தைய சமூகங்கள் இன்னும் சொல்ல முடியாததை வெளிப்படுத்துகின்றன. ஒப்பீட்டுப் பகுப்பாய்வு பகிரப்பட்ட வடிவங்களை வெளிப்படுத்துகிறது, ஆனால் உள்ளூர் ஊடுருவல்களையும் வெளிப்படுத்துகிறது. ருவாண்டாவில், சடங்கு மையப்படுத்தப்பட்டுள்ளது. போஸ்னியாவில், துண்டு துண்டாக்கப்பட்டுள்ளது. கம்போடியாவில், துறவியர் மையப்பாத்திரம் வகிக்கின்றனர். இலங்கையில், இவை பன்மைத்தன்மையும் போட்டித்தன்மையும் கொண்டவை. இலங்கையின் பன்முகத்தன்மை - தமிழ், முஸ்லிம், சிங்களம், இந்து, கிறிஸ்தவம், பௌத்தம் - சடங்கு அரசியலை குறிப்பாகச் சிக்கலாக்குகிறது. துக்கம் அல்லது நினைவுகூருதலுக்கு ஒற்றை மேலாதிக்க வடிவம் இல்லை. அதற்குப் பதிலாக, ஒன்றுடன் ஒன்று இணைந்த காலங்கள் உள்ளன: தேசிய வெற்றி அணிவகுப்புகள், தமிழர் நினைவு நாட்கள், முஸ்லிம் பிரார்த்தனைக் கூட்டங்கள், சிங்கள ஆசீர்வாதங்கள். இந்தப் பல சடங்கு நாட்காட்டிகள் சங்கடமாக இணைந்து வாழ்கின்றன, சில நேரங்களில் வெட்டுகின்றன, பெரும்பாலும் ஒன்றையொன்று புறக்கணிக்கின்றன. ஒரு தமிழ் ஆர்வலர் ஒருமுறை குறிப்பிட்டார், “ஒவ்வொரு சமூகத்திற்கும் அதன் சொந்த மே, அதன் சொந்தப் பேய்கள் உள்ளன.”

இந்தப் பன்முகத்தன்மை நல்லிணக்கத்தின் நேரியல் கதைகளைச் சவால் செய்கிறது. போருக்குப் பிந்தைய காலம் ஒரு காலம் அல்ல, மாறாக தற்காலிகத் துண்டுகளின் தொகுப்பு என்று இது அறிவுறுத்துகிறது. இந்தத் துண்டுகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக சடங்கு, அவற்றை உரையாடலில் வைத்திருக்கிறது. இந்த அர்த்தத்தில், இலங்கையை உலகளாவிய தெற்கில் போருக்குப் பிந்தைய நிலையின் அடையாளமாகக் காணலாம் - அங்கு ஒற்றுமைக்கான அரசுத் திட்டங்கள் சகிப்புத்தன்மையின் வடமொழித் தற்காலிகங்களுடன் மோதுகின்றன. சடங்கு என்பது இந்தத் தற்காலிக ஒழுங்குகளுக்கு இடையிலான இணைப்பு, முடிக்கப்படாத கடந்த காலத்தின் மூலம் எதிர்காலம் கற்பனை செய்யப்படும் இடம்.

## எதிர்காலத்தை உருவாக்கும் சடங்கு

2023 ஆம் ஆண்டில், வெள்ளை முள்ளிவாய்க்கால் அருகே மீள்குடியேற்றப்பட்ட ஒரு சமூகத்தை நான் பார்வையிட்டேன். அது வறண்ட காலத்தின் உச்சம், கிணறுகள் மீண்டும் சுருங்கத் தொடங்கின. குடும்பங்கள் தண்ணீருக்காக வரிசையில் நின்றன, சகிப்புத்தன்மையின் சோர்வான தாளத்துடன் நகர்ந்தன. நாங்கள் ஒரு வேப்ப மரத்தின் கீழ் அமர்ந்திருந்தபோது, ஓர் இளம் பெண், எட்டு ஆண்டுகளாக அதிகாரபூர்வ நிலப் பத்திரங்களுக்காகக் காத்திருப்பதாக என்னிடம் கூறினார். பின்னர், கிட்டத்தட்ட பின்னோக்கிச் சிந்திப்பதைப் போல, “ஒவ்வொரு ஆண்டும் காத்திருப்பைக் குறிக்க மரங்களை நடுகிறோம். அது நம்மைக் கல்லாக மாறாமல் தடுக்கிறது” என்று அவர் மேலும் கூறினார். அந்த வரி என்னுடன் நிலைத்திருந்தது: அது நம்மைக் கல்லாக மாறாமல் தடுக்கிறது.

ஆண்டுதோறும், அமைதியாக, அரசாங்க இருப்பு இல்லாமல் செய்யப்படும் நடவுச் சடங்கு வெறுமனே சூழலியல் பற்றியது அல்ல. இது காத்திருப்பைத் தற்காலிகமாக்குவதற்கும், அதிகாரத்துவ முடக்குதலை தார்மீக உழைப்பாக மாற்றுவதற்குமான ஒரு வழியாகும். மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம்,

இந்தச் செயல் காலத்தையே மீண்டும் மயக்கியது. இது போன்ற போருக்குப் பிந்தைய சடங்குகள் ஒரு வகையான தற்காலிக இரசவாதத்தைச் செய்கின்றன: அவை இடைநிறுத்தப்பட்ட நேரத்தை வாழ்ந்த காலமாக மாற்றுகின்றன. எதிர்காலம் நிச்சயமற்றதாக இருக்கும் இடங்களில், சடங்கு நிகழ்காலத்திற்கு ஒரு திசையை அளிக்கிறது. காத்திருப்பு அர்த்தமுள்ளதாகிறது, சகிப்புத்தன்மை ஒரு வகையான தன்னாட்சியாக மாறுகிறது.

அரசியல் மானிடவியலில், நம்பிக்கை பெரும்பாலும் ஓர் உணர்ச்சிபூர்வமான எச்சமாகக் கருதப்படுகிறது - அரசியல் தோல்வியடையும் போது எஞ்சியிருக்கும். ஆனால் போருக்குப் பிந்தைய வடக்கு மற்றும் கிழக்கில், நம்பிக்கை நடைமுறை மூலம் வளர்க்கப்படுகிறது. அது சடங்கு மூலம் ஒழுங்குபடுத்தப்படுகிறது. 2019 இல் களப்பணியின் போது, கிளிநொச்சியில் விதவைகளின் கூட்டுறவுக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். நுண்கடன் மற்றும் அறுவடை விளைச்சல்களைப் பற்றி விவாதித்த பிறகு, பெண்கள் ஒரு வட்டத்தில் கூடி, தாங்களாகவே எழுதிய ஒரு பாடலைப் பாடினர். அதன் பல்லவி மீண்டும் மீண்டும் வந்தது: “நாளை எங்கள் குரல்களைக் கேட்கும்.” பின்னர் நான் அதைப் பற்றிக் கேட்டபோது, ஓர் உறுப்பினர் விளக்கினார், “நாளை வருவதை மறந்துவிடாதபடி ஒவ்வொரு மாதமும் அதைப் பாடுகிறோம்.”

மீண்டும் மீண்டும் சொல்வது நம்பிக்கையை உணர்விலிருந்து பழக்கமாக மாற்றுகிறது. அது தெரியாததை வளர்க்கிறது. மானிடவியலாளர் ஹிரோகாசு மியாசாகி (2004) ஃபிஜிய வர்த்தகர்கள் பற்றிய தனது படைப்பில் வாதிடுவது போல, நம்பிக்கை என்பது அப்பாவியான எதிர்பார்ப்பு அல்ல, ஆனால் ஒரு முறை - இன்னும் வரவிருக்கும் நபர்களை நோக்கிய ஓர் ஒழுக்கமான நோக்குநிலை. இதேபோல், போருக்குப் பிந்தைய இலங்கையில், நடவு, சமையல் மற்றும் பாடுதல் போன்ற சடங்குகள் நம்பிக்கையான சகிப்புத்தன்மையின் நுட்பங்களாக உள்ளன. இங்கே நம்பிக்கை என்பது நம்பிக்கை அல்ல. அது விரக்திக்கு எதிராகத் திரும்பத் திரும்பச் சொல்வது.

நான் சென்ற கிட்டத்தட்ட ஒவ்வொரு சமூகத்திலும், குழந்தைகள் இந்தச் சடங்குகளில் அமைதியான பங்கை வகித்தனர். அவர்கள் விளக்குகளை ஏற்றினர், தண்ணீரை எடுத்துச் சென்றனர், கவிதைகளை வாசித்தனர். அவர்களின் பங்கேற்பு குறியீட்டு அலங்காரமாக இருக்கவில்லை - அது கற்பித்தல். 2017 ஆம் ஆண்டு ஒரு மாலை, முல்லைத்தீவில் நடந்த ஒரு சிறிய நினைவஞ்சலி நிகழ்வில், ஒரு பாட்டி தனது பேத்தியின் கையைப் பிடித்து வழிநடத்திச் சென்றதை நான் பார்த்தேன், அவள் ஒரு விளக்கை ஏற்றி வைத்தாள். பின்னர், குழந்தை, “நாம் ஏன் ஒவ்வொரு வருடமும் இதைச் செய்கிறோம்?” என்று கேட்டது, பாட்டி, “எதற்காக என்று உங்களுக்குத் தெரியும்” என்று எளிமையாகப் பதிலளித்தார்.

முறையான அறிவுறுத்தல் இல்லாமல் சடங்கு எவ்வாறு வரலாற்று உணர்வைக் கடத்துகிறது என்பதை அந்தப் பரிமாற்றம் படம்பிடிக்கிறது. பாடசாலைப் பாடப்புத்தகங்கள் போரை மறைக்கும் ஒரு நாட்டில், சடங்கு முறைசாரா பாடத்திட்டமாக மாறுகிறது. இது சித்தாந்தத்தை அல்ல, தொடர்ச்சியைக் கற்பிக்கிறது - உயிர்வாழ்வது ஒரு தார்மீக நடைமுறை என்ற கருத்தை. இந்த அர்த்தத்தில், அரசியல் இடிபாடுகளில் நீடிக்கும் வாழ்க்கையை சடங்கு நிலைநிறுத்துகிறது. சிறிய செயல்கள் மூலம், அடுத்த தலைமுறை கடந்தகாலம் சுமை மட்டுமல்ல, பரம்பரை என்பதையும்; நினைவு கூர்வது குடியுரிமைக்கான ஒரு முறையாகவும் இருக்கலாம் என்பதையும் கற்றுக்கொள்கிறது.

சடங்குகள் இன்னும் இல்லாத எதிர்காலத்தைக் கற்பனை செய்வதற்கான ஆய்வகங்களாகவும் செயற்படுகின்றன. அது நிஜமாக மாறுவதற்கு முன்பு, மக்கள் சொந்தமாக இருப்பதை ஒத்திகை பார்க்க அவை அனுமதிக்கின்றன. 2018 இல் திருகோணமலையில், தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர் குழுக்கள் இணைந்து ஒரு சமூக விளையாட்டு விழாவை ஏற்பாடு செய்தன. அது ஒரு சாதாரண நிகழ்வு, ஆனால் அவர்கள் அதை ஒரு கூட்டு விளக்கு ஏற்றுதலுடன் தொடங்கினர். ஒவ்வொரு குழுவும் தங்கள் சொந்த இசையை, தங்கள் சொந்த உணவைக் கொண்டு வந்தன. விழாவை ஏன் வலியுறுத்தினார்கள் என்று நான் கேட்டபோது, ஓர் அமைப்பாளர் கூறினார், “ஏனென்றால் நாங்கள் ஒன்றாகத் தொடங்க விரும்புகிறோம்.”

அந்தச் சொற்றொடர் - ஒன்றாகத் தொடங்குதல் - சடங்கின் எதிர்பார்ப்புத் தன்மையை உள்ளடக்கியது. இந்தச் செயல் வேறுபாட்டை அழிக்கவில்லை. அது சகவாழ்வை ஒரு விருப்பமாக அரங்கேற்றியது. நல்லிணக்கத்தின் முறையான அரசியல் பெரும்பாலும் மன்னிப்பு மற்றும் இழப்பீடு என்ற மொழியில் சிக்கிக் கொண்டிருப்பதால் இத்தகைய கற்பனை ஒத்திகைகள் முக்கியம். இதற்கு நேர்மாறாக, சடங்குகள் துணை மனநிலையில் - சாத்தியக்கூறு மனநிலையில் செயற்படுகின்றன. அவர்கள் கூறுகிறார்கள்: நாம் ஒன்றாக வாழலாம், அமைதி திரும்பலாம், நிலம் நம்மை மன்னிக்கட்டும். சடங்குகள் எதிர்காலத்தையும் உருவகப்படுத்துகின்றன. பயன்படுத்தப்படும்

பொருட்கள் - விளக்குகள், மரக்கன்றுகள், கிணறுகள், புகைப்படங்கள் - வெறும் சின்னங்கள் அல்ல; அவை எதிர்பார்ப்பின் தொழில்நுட்பங்கள்.

மன்னாரில் ஓர் இளம் கொத்தனார், தனது மறுகட்டமைக்கப்பட்ட வீட்டிற்கு அவர் வைத்த ஒவ்வொரு செங்கல்லிலும் தேதிகளைச் செதுக்கியதாகச் சொன்னார். "அதனால் பின்னர், நாங்கள் இங்கே இருந்தோம், நாங்கள் முயற்சித்தோம் என்று யாராவது அறிந்து கொள்வார்கள்" என்று அவர் கூறினார்.

இத்தகைய சைகைகள் நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் எதிர்காலங்களை உருவாக்கும் தார்மீக மற்றும் பொருள்சார் செயற்பாடுகளாகும். இந்த அர்த்தத்தில், போருக்குப் பிந்தைய சடங்கு என்பது பொருள் வாழ்க்கையிலிருந்து தப்பிப்பது அல்ல, மாறாக அதன் நீட்டிப்பு. மரங்களை நடுதல், தொட்டிகளைச் சுத்தம் செய்தல், நினைவுச்சின்னங்களைக் கட்டுதல் - அனைத்தும் பலவீனத்தைக் கட்டமைப்பாக மாற்றும் உழைப்பின் செயல்கள். அப்படியானால், எதிர்காலம் முன்னோக்கிய ஒரு பாய்ச்சலாகக் கற்பனை செய்யப்படவில்லை. சிறிய, மீண்டும் மீண்டும் சைகைகளின் குவிப்பாகக் கற்பனை செய்யப்படுகிறது - ஒவ்வொரு விளக்கும், ஒவ்வொரு செங்கல்லும், ஒவ்வொரு பிரார்த்தனையும் தொடர்ச்சியின் ஒரு சாரக்கட்டை கட்டமைத்தல்.




Image Source - www.amazon.co

சடங்கு, சமூகத்தின் கட்டமைப்பிற்கும் வரம்புக்குட்பட்ட தன்மைக்கு எதிரான கட்டமைப்பிற்கும் இடையில் மத்தியஸ்தம் செய்கிறது என்று மானிடவியலாளர் விக்டர் டர்னர் (1982) எழுதினார். போருக்குப் பிந்தைய இலங்கையில், அந்த மத்தியஸ்தம் காலத்திற்கும் நீண்டுள்ளது: நினைவாற்றலுக்கும் எதிர்பார்ப்புக்கும் இடையில், தாங்கிக் கொள்ளப்பட்டதற்கும் இன்னும் வரவிருப்பதற்கும் இடையில். ஒவ்வொரு சடங்கும் அதற்குள் இரட்டை இயக்கத்தைக் கொண்டுள்ளது. அது பின்னோக்கிப் பார்க்கிறது - இறந்தவர்களுக்கு, தொலைந்து போனவர்களுக்கு, அமைதியாகிவிட்டவர்களுக்கு - மற்றும் தொடர வேண்டிய உயிருள்ளவர்களுக்கு முன்னோக்கிப் பார்க்கிறது. அதன் தற்காலிகமானது நேரியல் அல்ல, ஆனால் வட்டமானது, நிகழ்காலத்தின் தொடர்ச்சியான உழைப்பின் மூலம் கடந்த காலத்தை எதிர்காலத்திற்குள் அடக்குகின்றது. முல்லைத்தீவில், ஒரு பெண் இதைச் சரியாகச் சுருக்கமாகக் கூறினார்: "நாம் மறந்துவிடுவதால் மீண்டும் கட்டியெழுப்புவதில்லை. இறக்காமல் நினைவில் கொள்ளக்கூடிய வகையில் மீண்டும் கட்டியெழுப்புகிறோம்."

## கணநாத் ஒபயசேகரவின் வழித்தடத்தில் வடக்குக் கிழக்கின் சடங்காதலை விளங்கிக்கொள்ளல்

2018 ஆம் ஆண்டில், புதுக்குடியிருப்புக்கு அருகிலுள்ள ஒரு சிறிய வீட்டில் மண் தரையில் அமர்ந்திருந்தேன். சுவர்கள் இன்னும் வர்ணம் பூசப்படாமல் இருந்தன, மல்லிகையுடன் கலந்த சுண்ணாம்புத் தூசியின் வாசனை வந்தது. ஒரு விதவை, ஒரு களிமண் விளக்கின் முன் குனிந்து அதை ஏற்றத் தொடங்கினார். அவளைச் சுற்றிப் புகைப்படங்கள் இருந்தன - 2009 இல் மறைந்துபோன ஆண்களின் 'லேமினேட்' செய்யப்பட்ட முகங்கள். அவள் ஒரு தீக்குச்சியை உரசினாள். சுடர் உயிர் பெற்றபோது, மூச்சின் கீழ் ஏதோ கிசுகிசுத்தாள். பின்னர், அவள் என்னிடம் சொன்னாள்: "நான் விளக்கை ஏற்றும்போது, என் எண்ணங்கள் சிறியதாகின்றன என்று உணர்கிறேன். உலகம் நான் சுவாசிக்கும் அளவுக்குச் சுருங்குவது போல."

"நான் சுவாசிக்கும் அளவுக்கு உலகம் சுருங்குகிறது" என்ற அந்தச் சொற்றொடர் - கணநாத் ஒபயசேகர 'பண்பாட்டின் பணி' (*Work of Culture*) என்று அழைத்ததை நினைவூட்டியது. விளக்கை ஏற்றும் செயல் ஒரு மதக் கடமையோ அல்லது அரசியல் அறிக்கையோ அல்ல. இது தனிப்பட்ட வேதனையை புரிந்துகொள்ளக்கூடிய பொதுச் சைகையாக மாற்றுவதாகும். தனிப்பட்ட துன்பம் 'செயற்படுத்தப்பட்டு', பகிரக்கூடிய, தாங்கக்கூடிய மற்றும் மீண்டும் குறிக்கக்கூடிய வடிவங்களாக மாற்றப்படும் குறியீட்டு மொழியை பண்பாடு வழங்குகிறது என்று ஒபயசேகர (1990) வாதிட்டார். அந்த நேரத்தில், விதவையின் விளக்கு அறிகுறியாகவும் அடையாளமாகவும் மாறியது: துக்கத்தின் நெருக்கமான தன்மை, சடங்கு நடைமுறையில் வடிகட்டப்பட்டு, மீண்டும் மீண்டும் வாழ்க்கையைத் தாங்கக்கூடியதாக மாற்றியது.

மெதுசாவின் கூந்தல் (*Medusa's Hair*) நூலில் ஒபயசேகர (1981) இலங்கையில் உள்ள ஓர் இந்துபௌத்த வழிபாட்டு முறையின் பெண் பக்தர்களின் வாழ்க்கையை விவரிக்கிறார்.
பரவசமான உடைமை மூலம், உள் மன வலிக்கும் அவர்களின் சமூக உலகின் எதிர்பார்ப்புகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தும் பெண்கள் பற்றி அவர் பேசுகிறார். சடங்கு "தனிப்பட்ட வலியை மீட்பின் பொது அடையாளங்களாக மொழிபெயர்க்கிறது" என்று அவர் எழுதுகிறார் (பக்.15). பக்தர்களின் தலைமுடி, வெட்டப்படாமல், சிக்கலாக இருப்பது, அவர்களின் பைத்தியக்காரத்தனத்தின் அடையாளமாகவும், அவர்களின் புனிதத்தின் ஊடகமாகவும் மாறுகிறது.

போருக்குப் பிந்தைய வடக்குக் கிழக்கில் இலங்கையில், இந்த மாற்றத்தின் ஒரு விசித்திரமான எதிரொலியைக் கண்டேன். விதவைகள், தாய்மார்கள் மற்றும் திரும்பி வந்தவர்கள் தங்கள் அன்றாடச் செயல்களை - அழிக்கப்பட்ட கிணற்றைச் சுத்தம் செய்தல், பகிர்ந்து கொண்ட உணவைச் சமைத்தல், ஒரு நினைவு மரத்தைப் பராமரித்தல் - சகிப்புத்தன்மையின் கூட்டு வெளிப்பாடுகளாக மாற்றினர். அவர்கள் கடவுள்களால் அல்ல, வரலாற்றால் ஆட்கொள்ளப்பட்டனர். அவர்களின் சடங்குகள் பரவசமானவை அல்ல, அமைதியானவை. அவர்களின் சைகைகள் காட்டுத்தனமானவை அல்ல, வேண்டுமென்றே நிகழ்த்தப்படுபவை. இருப்பினும், மெதுசாவின் கூந்தலில் வரும் பெண்களைப் போலவே, வலி வடிவம் கோரும் உலகில் அவர்கள் வாழ்ந்தனர்.

போருக்குப் பிந்தைய வடக்குக் கிழக்கின் சடங்கு நடவடிக்கைகள் அரசியல் அல்லது பண்பாட்டு நிகழ்ச்சிகள் மட்டுமல்ல - அவை உளவியல் பொருளாதாரங்கள் என்பதையும் ஒபயசேகரவின் ஆய்வுமுடிவுகள் நமக்குக் காட்டுகின்றன. அவற்றின் மூலம், துக்கம் சமாளிக்கக்கூடியதாகிறது. மௌனம் தொடர்பு கொள்ளக்கூடியதாகிறது. தாங்க முடியாதது வாழக்கூடியதாக மாற்றப்படுகிறது. ஒவ்வொரு மறுபரிசீலனையும் - விளக்கு ஏற்றுதல், வாசலைத் துடைத்தல், உணவு வழங்குதல் - ஓர் உட்காயத்தை வெளிப்புறமாக்குகிறது. அதை சமூக ரீதியாகவும், பகிரக்கூடியதாகவும் மாற்றுகின்றது. எனவே, ஓரளவிற்கு உயிர்வாழக்கூடியதாகவும் ஆக்குகிறது.

கிளிநொச்சியில் ஓர் இளம் தாய் ஒருமுறை கூறினார், "நான் துடைக்கும்போது, அவரை நினைவில் கொள்கிறேன். ஆனால் நான் முடிக்கும்போது, இலகுவாக உணர்கிறேன்." அந்தச் செயல், ஒபயசேகர "தனிப்பட்ட துன்பத்தை சமூக ரீதியாக வடிவமைக்கப்பட்ட வெளிப்பாடாக உருமாற்றுதல்" என்று அழைத்ததை ஒத்துள்ளது (பண்பாட்டின் பணி, ப.71). இந்தச் சடங்கு உயிரி மருத்துவ அர்த்தத்தில் குணமடையாது. இது அர்த்தத்தை மறுகட்டமைக்கிறது, சமூக ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சின்னங்கள் மூலம் உணர்ச்சி பரவ அனுமதிக்கிறது.

பண்பாட்டின் பணியில், ஒபயசேகர பிராய்டின் அறிகுறி உருவாக்கக் கோட்பாட்டை இனவியல் அவதானிப்பு மூலம் மறுபரிசீலனை செய்கிறார். மேற்கில், அதிர்ச்சி பெரும்பாலும் தனிப்பட்ட நோயியலாக மாறுகிறது, மற்ற பண்பாட்டுச் சூழல்களில் அது பொதுச் சடங்கில் மீண்டும் உள்வாங்கப்படுகிறது என்று வாதிடுகிறார். 'பண்பாட்டின் பணி' என்பது, "தனியார் மோதல்கள் பொதுச் சின்னங்களாகவும் கூட்டுப் பிரதிநிதித்துவங்களாகவும் மாற்றப்படும்" செயல்முறையாகும் (1990, பக்.57) என்று அவர் எழுதுகிறார். போருக்குப் பிந்தைய இலங்கை இந்தச் செயல்முறைக்கு ஒரு குறிப்பிடத்தக்க நிலப்பரப்பை வழங்குகிறது. இங்கே, போரின் அதிர்ச்சிகள் - இடப்பெயர்வு, இழப்பு, காணாமல் போதல் - மனரீதியாகச் செயலாக்கப்படவில்லை, அல்லது சட்டபூர்வமாகச் சரிசெய்யப்படவில்லை. அதற்குப் பதிலாக அவை சடங்கு மயமாக்கப்பட்டுள்ளன: உருவகப்படுத்தப்பட்ட நடைமுறை மூலம் ஆன்மாவிலிருந்து பொது மக்களுக்கு மாற்றப்படுகின்றன.

தமிழ்க் குடும்பங்கள் ஒவ்வொரு மே மாதமும் இறந்தவர்களை நினைவுகூர்வதற்காகக் கூடும் போது, கிழக்கில் முஸ்லிம்கள் இடப்பெயர்வுகளை நினைவுகூரும் வகையில் பகிரப்பட்ட உணவை ஏற்பாடு செய்யும் போது, சிங்களக் கிராமவாசிகள் தங்களது மீண்டும் கட்டப்பட்ட கிணறுகளை ஆசீர்வதிக்கும் போது - இந்தச் செயல்கள் ஒவ்வொன்றும் பண்பாட்டின் பணியைச் செயற்படுத்துகின்றன. அவர்கள் வன்முறையின் ஒருங்கிணைக்கப்படாத எச்சங்களை எடுத்து அதைக் குறியீட்டு நடவடிக்கையாக மாற்றுகிறார்கள். இந்த மாற்றம் தானாகவே நிகழாது. அதன் எடையின் கீழ் கரையாமல் வலியை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பண்பாட்டு மரபு இதற்குத் தேவை. மெதுசாவின் கூந்தலில், அந்த மரபு பக்தியாக உள்ளது. போருக்குப் பிந்தைய வடக்குக் கிழக்கில், இது கவனிப்பு, தொடர்ச்சி மற்றும் சகிப்புத்தன்மையின் மரபாக உள்ளது. முல்லைத்தீவில் உள்ள ஒரு தமிழ் ஆசிரியர் வருடாந்திர நினைவு நாளை "நமது இதயங்கள் ஒன்றாகச் சுவாசிக்கும் நாள்" என்று விவரித்தார். இத்தகைய சொற்றொடர், சடங்கு மூலம் உணர்ச்சிபூர்வமான வாழ்க்கை எவ்வாறு கூட்டமைக்கப்படுகிறது என்பதைக்

எடுத்துக்காட்டுகிறது. துன்பம் சுற்றும் வடிவத்தையும், மரபின் தொடர்ச்சியையும் இயங்கியலுக்கான தாளத்தையும் சடங்கு வழங்குகிறது. அது தனிப்பட்ட விரக்தியாக தேங்கி நிற்காது என்பதை உறுதி செய்கிறது.

ஒபயசேகரவின் படைப்புகள் போருக்குப் பிந்தைய சடங்குகளின் தார்மீகத் தெளிவின்மையை விளக்கவும் நமக்கு உதவுகின்றன. மெதுசாவின் கூந்தலில், உடைமை மற்றும் குணப்படுத்துதல் ஆகியவை எதிரெதிர் அல்ல, மாறாகப் பின்னிப்பிணைந்தவை என்று அவர் கவனித்தார். பைத்தியக்காரத்தனமே தார்மீக அதிகாரத்தின் ஊடகமாக மாறக்கூடும். இதேபோல், போருக்குப் பிந்தைய வடக்கு மற்றும் கிழக்கில், சடங்குகள் பெரும்பாலும் எதிர்ப்புக்கும் சமர்ப்பிப்புக்கும் இடையிலான கோட்டை, நினைவாற்றலுக்கும் மறதிக்கும் இடையிலான கோட்டை மழுங்கடிக்கின்றன.

2016 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நடந்த ஒரு நினைவேந்தலில், பெண்கள் இறந்தவர்களின் புகைப்படங்களை ஏந்திச் சென்று கோஷங்களுக்குப் பதிலாக தாலாட்டுப் பாடல்களைப் பாடினர். காவல்துறையினர் அதைப் பார்த்தார்கள், ஆனால் தலையிடவில்லை. நிகழ்ச்சி இணக்கமாகவும் எதிர்க்கும் விதமாகவும் இருந்தது: ஒரே நேரத்தில் அரசுக் கட்டுப்பாட்டிற்கு இணங்கவும் கவிழ்க்கவும் கூடிய ஒரு புலப்படும் துக்கச் செயலாக அது இருந்தது. ஒபயசேகர இதைக் குறியீட்டுத் தலைகீழ் நிகழ்வாக (Symbolic Inversion) விளக்குகிறார். துன்பம் புனிதப்படுத்தப்படுவதற்கும், மௌனம் பேச்சாக மாறுவதற்கும் இது வழியமைக்கிறது. இலங்கையின் தொன்மங்கள் பற்றிய தனது பகுப்பாய்வில், தலைகீழ்ச் சமூகங்கள் “சமூக முரண்பாடுகளை தார்மீக நாடகமாக மறுகுறியீடு செய்ய அனுமதிக்கிறது” என்று அவர் குறிப்பிட்டார் (1990, பக்.122). வடக்குக் கிழக்கில், துக்கச் சடங்குகள் அரசின் வெற்றிக்கும் தனிப்பட்ட துக்கத்திற்கும் இடையிலான முரண்பாட்டை சகிப்புத்தன்மையின் நெறிமுறைச் செயல்திறனாக மறுவடிவமைக்கின்றன.

இங்கே, விதவை அல்லது தாயின் தார்மீக அதிகாரம், மெதுசாவின் கூந்தலில் உள்ள பேய் பிடித்த பெண்களின் ‘தார்மீகக் கவர்ச்சியை’ப் பிரதிபலிக்கிறது: துன்பம் அவர்களுக்கு ஒரு முரண்பாடான சக்தியை வழங்கும் மூலமாகும். நிறுவன நீதி இல்லாத நிலையில், இந்தப் பெண்கள் நினைவின் பாதுகாவலர்களாகவும், உயிருள்ளவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் இடையில், அமைதிக்கும் பேச்சுக்கும் இடையில் மத்தியஸ்தர்களாகவும் மாறுகிறார்கள். முல்லைத்தீவில் ஒரு பெண் என்னிடம் கூறினார், “நாம் மறக்க வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் நாம்தான் காலத்தை வைத்திருப்பவர்கள்.” காலத்தை வைத்திருப்பது என்ற இந்தச் சொற்றொடர் சுமை மற்றும் சுயாதீனம் இரண்டையும் தூண்டுகிறது. இது ஒபயசேகர தனது வாழ்க்கை முழுவதும் எழுதிய சடங்கு என்ற விடயத்தின் பொருத்தமான விளக்கம்: காலத்தை வைத்திருப்பவர் சகிப்புத்தன்மையின் மூலம் அர்த்தத்தைச் சுமப்பவர்.

ஒபயசேகரவின் ‘பண்பாட்டின் பணி’ என்ற சொற்றொடர் உழைப்பை வலியுறுத்துகிறது. பண்பாடு வெறுமனே உணர்ச்சியை வெளிப்படுத்துவதில்லை, ஆனால் அதன் மீது செயற்படுகிறது, பகிரப்பட்ட வடிவத்தில் பாதிப்பை மறுவடிவமைக்கிறது என்ற கருத்தை அவர் வலியுறுத்தினார். போருக்குப் பிந்தைய வடக்குக் கிழக்கில், சடங்குகள் துல்லியமாக அத்தகைய உழைப்பை வழங்குகின்றன.

மெதுசாவின் கூந்தல் மற்றும் பண்பாட்டின் பணி ஆகிய இரண்டு நூலிலும், ஒபயசேகரே மானிடவியல் மற்றும் மனோவியல் பகுப்பாய்வு ஆகியவற்றின் சந்திப்பில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். சடங்குக் கற்பனை ஒரு கூட்டுச் சிகிச்சையாகச் செயற்படுகிறது. அது மூல உணர்ச்சியை வடிவ வெளிப்பாடாக மாற்றும் ஒரு வழிமுறையாகும் என்று அவர் வாதிட்டார். ஆனால் மேற்கத்திய சிகிச்சையைப் போலல்லாமல், சடங்குச் சிகிச்சை சுயத்தை சமூகமாக மீண்டும் பின்னுகிறது என்றார். போருக்குப் பிந்தைய இலங்கையில், இந்தக் கூட்டுச் சிகிச்சை வெளிப்பாட்டை விட மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம் செயற்படுகிறது. மன்னிப்பு இல்லை, ஒப்புதல் வாக்குமூலம் இல்லை. அதற்குப் பதிலாக, தொடர்ச்சியின் நிலையான துடிப்பு உள்ளது: அதே சைகைகள், அதே பாடல்கள், அதே முகங்கள், ஆண்டுதோறும் நிகழ்கின்றன.

காத்தான்குடியில் உள்ள ஒரு முஸ்லிம் சமூகத் தலைவர் விளக்கினார், “எங்கள் துக்கத்தை முடிக்க அல்ல, அதனுடன் வாழவே நாங்கள் விழாவைச் செய்கிறோம்.” சடங்கு மோதலைத் தீர்க்காது, ஆனால் அதை அகவயப்படுத்துகிறது என்ற ஒபயசேகரவின் கூற்றை அவரது வார்த்தைகள் நினைவுபடுத்துகின்றன. ஒபயசேகர இதை “சிந்திக்கக்கூடியது, தாங்கக்கூடியது மற்றும் தார்மீக ரீதியாகப் புரிந்துகொள்ளக்கூடியது” (1990, பக்.59) என்றார். அரசியல் ரீதியாகப் பயனற்றதாகத் தோன்றினாலும் சடங்குகள் ஏன் தொடர்கின்றன என்பதைப் புரிந்துகொள்வதற்கு இது மிகவும் முக்கியமானது. அவை மூடலின் தோல்விகள் அல்ல. அவை சிதைவின் மறுப்புகள். அவை பொருள் தொடர்ந்து பரவக்கூடிய சமூகத் துறையைப் பராமரிக்கின்றன.

அரசு வெளிப்படையான எதிர்ப்பை அடக்கும் இடத்தில், சடங்கு குறைகளையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த ஒரு குறியீட்டு மொழியை வழங்குகிறது. இறந்தவர்களுக்காக ஏற்றப்படும் விளக்கு, அழிக்கப்படுவதற்கு எதிராக ஏற்றப்படும் விளக்காகும். காணாமல் போனவரின் நினைவாக நடப்படும் மரம் அங்கீகாரத்திற்கான கோரிக்கையாகும். இந்த அர்த்தத்தில், போருக்குப் பிந்தைய சடங்குகள் ஒபயசேகர 'குழப்பத்தின் தார்மீக ஒழுங்குமுறை' (The Moral Ordering of Chaos) (1990, பக்.61) என்று அழைத்ததை நினைவூட்டுகின்றன. ஆனால் இங்குள்ள குழப்பம் தத்துவார்த்தம் அல்ல, அரசியல் சார்ந்தது. உயிர் பிழைத்தவர்களின் தார்மீகப் பணி, தோல்வியடைந்த நிறுவனங்கள் செய்யத் தவறிய பணிகளை ஈடுசெய்கிறது. இதன் விளைவாக, பாதிக்கப்பட்ட மக்கள் தாங்களே தங்கள் துயரத்தை நிர்வகித்து, புத்துயிர்ப்பை உருவாக்கும் மூலங்களாக மாற வேண்டிய நிலை ஏற்படுகிறது. தமிழ்த் தாய்மார்கள் போராட்டக் களத்தில் தங்கள் காணாமல் போன குழந்தைகளின் புகைப்படங்களை ஏந்தி அமைதியாக அமர்ந்திருக்கும்போது, அவர்கள் மெதுசாவின் கூந்தல் குறிக்கின்ற பக்தர்களை எதிரொலிக்கிறார்கள்: வலி சின்னங்களில் பேசும் உடல்கள், தார்மீக நிலப்பரப்பை மறுவடிவமைக்கின்றன. ஆனால் தெய்வீக வருகையில் உச்சத்தை அடைந்த பேய் பிடித்த பெண்களைப் போலல்லாமல், இந்தத் தாய்மார்கள் சகிப்புத்தன்மையில் உச்சத்தை காண்கிறார்கள் - உயிர்வாழ்வதே அர்த்தம் என்ற நெறிமுறை வலியுறுத்தல் இங்கு நிகழ்கிறது.

ஒபயசேகர ஆராய்ந்த சடங்குகள் சொல்லும் செய்தி யாதெனில்: உடைமை கொண்ட பக்தர்கள், பரவசக் குணப்படுத்துபவர்கள் எவ்வளவு தெளிவற்றவர்களாக இருந்தாலும், ஒத்திசைவைத் தக்கவைத்துக் கொண்ட தார்மீக உலகங்களுக்குள் செயற்பட்டனர். போருக்குப் பிந்தைய வடக்குக் கிழக்கு, இதற்கு நேர்மாறாக, ஒத்திசைவு சிதைந்த உலகங்களே உள்ளன.

பண்பாட்டின் பணியில், ஒபயசேகர, உள் மோதலுக்கும் பண்பாட்டு வடிவத்திற்கும் இடையில் சின்னங்கள் மத்தியஸ்தம் செய்கின்றன என்று வாதிட்டார். ஆனால் பண்பாட்டு வடிவம் நிலையற்றதாக இருக்கும்போது - சமூகங்கள் இடம்பெயர்ந்தால், சடங்குகள் தடை செய்யப்பட்டால், மொழிகள் அரசியல்மயமாக்கப்பட்டால் என்ன நடக்கும்? அத்தகைய அமைப்புகளில், 'பண்பாட்டின் பணி' வெறும் மொழிபெயர்ப்பாக இல்லாமல் கண்டுபிடிப்பாக மாறுகிறது. மக்கள் புதிய சின்னங்களை, சகிப்புத்தன்மையின் புதிய சொற்றொடர்களை உருவாக்க வேண்டும்.

குளக்கரையில் விடியற்காலையில் விளக்குகளை ஏற்றும் பெண்கள் ஒரு மரபுவழிச் சடங்கை மீண்டும் உயிர்ப்பிக்கவில்லை. அவர்கள் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். அவர்களின் நடைமுறைத் துக்கம், குடிமை எதிர்ப்பு மற்றும் தாய்வழிப் பராமரிப்பு ஆகியவற்றின் துண்டுகளை இணைக்கிறது. போருக்குப் பிந்தைய தருணத்தைக் குறிப்பது துல்லியமாக இந்தக் கலப்பினமே: எந்த ஒரு மதம் அல்லது மரபிற்கும் சொந்தமான சடங்குகள் அல்ல, ஆனால் உயிர்வாழ்வின் தார்மீகக் கற்பனைக்குச் சொந்தமானவை. இங்கே, ஒபயசேகரவின் கட்டமைப்பு அர்த்தத்தை உருவாக்குதல் பகுப்பாய்விலிருந்து மறு உருவாக்கத்தின் மானிடவியல் வரை விரிவடைகிறது. பண்பாட்டின் பணி மறுகட்டமைப்பின் பணியாக மாறுகிறது. சின்னங்களது மட்டுமல்ல, சமூக உலகத்தின் மறுகட்டமைப்பின் பணியாகவும் மாறுகிறது.

துன்பத்தை அர்த்தமாக மாற்றும் மனிதத் திறனைப் பார்ப்பதற்கான ஒரு வழியை ஒபயசேகர வழங்கினார். அவரது கட்டுரைகள் முந்தைய வன்முறையின் பின்னணியில் எழுதப்பட்டன, ஆனால் அவற்றின் எதிரொலி உள்நாட்டுப் போரின் நிழலில் ஆழமடைகிறது. போருக்குப் பிந்தைய இலங்கையின் வடக்குக் கிழக்கில் அவரது ஆய்வுகள் உயிருள்ள ஆய்வகங்களாக நிற்கின்றன. ஆனால் அவை அவற்றை புதிய நிலப்பரப்பிலும் விரிவுபடுத்துகின்றன. 'பண்பாட்டின் பணியில்' தனியார் மோதல் எவ்வாறு கூட்டு அடையாளமாகிறது என்று கேட்டால், போருக்குப் பிந்தைய கேள்வி, கூட்டுப் பேரழிவு எவ்வாறு அன்றாட வாழ்க்கையாகிறது என்பதுதான். மெதுசாவின் கூந்தல் பைத்தியக்காரத்தனத்தின் சடங்குமயமாக்கலை ஆராய்ந்தால், போருக்குப் பிந்தைய நிலப்பரப்பு சகிப்புத்தன்மையின் சடங்குமயமாக்கலைக் காட்டுகிறது - இடிபாடுகளில் மக்கள் தார்மீக ஒழுங்கை மீண்டும் கட்டியெழுப்பும் மெதுவான, மீண்டும் மீண்டும் வரும் வேலை.

முல்லைத்தீவில் உள்ள ஒரு மீனவர் ஒருமுறை என்னிடம் கூறினார், "ஒவ்வொரு ஆண்டும் கடல் ஒருவரை அழைத்துச் செல்கிறது. ஆனால் ஒவ்வொரு காலையிலும் நாம் இன்னும் கடலுக்குச் செல்கிறோம்." அந்த வாக்கியம் ஒபயசேகரவின் மானிடவியலுக்கான கல்வெட்டாகச் செயற்படக்கூடும்: இழப்பின் உறுதியின் மத்தியில் அர்த்தத்தின் நிலைத்தன்மை.

இந்தப் பாதையின் மூலம், வடக்குக் கிழக்கின் சடங்குகள் வெறுமனே கலாசார உயிர்வாழ்வுகள் அல்ல. அவை தார்மீக மீளுருவாக்கத்தின் சோதனைகள். சொல்ல முடியாததைத் தாளமாகவும், தாங்க

முடியாததைச் சைகையாகவும் அவை மொழிபெயர்க்கின்றன. மனித அடையாளப்படுத்தும் திறன் உயிர்வாழும் திறனும் கூட என்ற ஒபயசேகரவின் நுண்ணறிவின் உயிருள்ள தொடர்ச்சியாக அவை உள்ளன.

முள்ளிவாய்க்காலில் சூரியன் மீண்டும் உதிக்கும்போது, கரையோரமாக விளக்குகள் மினுமினுக்கின்றன. பெண்கள் அமைதியாக நிற்கிறார்கள், சுடர் காற்றில் நடுங்குகிறது. அவர்கள் நீதிக்காகவோ அல்லது பழிவாங்கலுக்காகவோ கோருவதில்லை. அர்த்தமே செயலைப் பொறுத்தது என்பதால் அவர்கள் விளக்கை ஏற்றுகிறார்கள். ஒபயசேகர, "சடங்கு உலகத்தை ஒத்திசைவின் சிறிய உருவங்களாக மீண்டும் உருவாக்குகிறது" என்று எழுதினார் (1990, பக்.63). இந்த விளக்குகள் துல்லியமாக அதையே பிரதிபலிக்கின்றன - உடைந்த உலகில் ஒத்திசைவின் சிறிய உருவங்கள். கடந்தகாலப் பொருட்களிலிருந்து எதிர்காலத்தை உருவாக்குவதற்கான நீடித்த மனித முயற்சியை அவை ஒரு கணம் ஒளிரச் செய்கின்றன.

## நிறைவுக் குறிப்புகள்

வடக்குக் கிழக்கில் பதினைந்து ஆண்டுகாலக் களப்பணியை நான் திரும்பிப் பார்க்கும்போது, என்னை மிகவும் தாக்குவது பிரமாண்டமான நினைவுகூரல்கள் அல்லது அரசியல்வாதிகளின் உரைகள் அல்ல, மாறாக சாதாரண மக்களின் அமைதியான விடாமுயற்சி. விடியற்காலையில் பெண்கள் வீட்டு வாசலைத் துடைப்பது, ஆண்கள் மீன்பிடிப்பதற்கு முன் வலைகளைச் சரிசெய்வது, குழந்தைகள் குறிக்கப்படாத கல்லறைகளில் பூக்களை வைப்பது.

இந்தச் சைகைகளில், அரசியல் சாதாரணமாகவும், சாதாரணமானவை அரசியலாகவும் மாறுகிறது. என்னுடன் உரையாடிய மக்கள் 'சமரசம்', 'நீதி' போன்ற வார்த்தைகளை அரிதாகவே பயன்படுத்தினர். ஆனால், தொடர்வது, சரிசெய்வது, இயங்குவது போன்ற வார்த்தைகளை அடிக்கடி தமது பதிலில் அவர்கள் பேசினார்கள். இருப்பினும் இந்தத் தொடர்ச்சியான செயல்கள் ஆழமான அரசியல் சார்ந்தவை - பார்த்தா சாட்டர்ஜி (2004) 'ஆளப்படுபவர்களின் அரசியல்' (The Politics of the Governed) என்று அழைப்பதை அவை உருவாக்குகின்றன, அங்கு சகிப்புத்தன்மையே ஒரு வகையான எதிர்ப்பாக மாறும். முறையான சமரசம் தடுமாறும்போது, மீண்டும் கட்டியெழுப்பும் பணி சடங்குகளின் உலகத்திற்கு மாறுகிறது என்பதை போருக்குப் பிந்தைய இலங்கை நமக்குக் கற்பிக்கிறது. மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம், மக்கள் சட்டபூர்வ உலகத்தின் இடிபாடுகளுக்குள் ஒரு நெறிமுறை உலகத்தை உருவாக்குகிறார்கள்.

இந்தக் கட்டுரை முழுவதும், போருக்குப் பிந்தைய சமூகங்களில் சடங்கு என்பது தார்மீகக் கட்டடக்கலையின் ஒரு வடிவம் என்று நான் வாதிட்டுள்ளேன். இது நிறுவனங்கள் சரிந்த இடத்தில் சமூக மற்றும் தற்காலிகக் கட்டமைப்புகளை உருவாக்குகிறது. இது மக்கள் சிக்கல்களின்றி துக்கத்தில் வாழவும், நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் செயற்படவும், மீட்பை விட சகிப்புத்தன்மையை அடிப்படையாகக் கொண்ட எதிர்காலத்தை கற்பனை செய்யவும் அனுமதிக்கிறது. இது உறுதியான கொள்கையால் அல்ல, மாறாக நினைவகம், சைகை மற்றும் திரும்பத் திரும்பச் செய்வதால் கட்டமைக்கப்பட்டுள்ளது. விடியற்காலையில் ஏற்றப்படும் விளக்குகளைப் போல, அதன் ஒளி மினுமினுக்கிறது ஆனால் அணைவதில்லை.

ஆயினும், இந்தக் கட்டமைப்புகள் சமமாக விநியோகிக்கப்படவில்லை. யார் கட்ட முடியும், யார் பேச முடியும், யாருடைய நினைவகம் அங்கீகரிக்கப்படுகிறது என்பதைச் சாதியும் வர்க்கமும் தொடர்ந்து தீர்மானிக்கின்றன. ஏழைகளின் சடங்குகள் பெரும்பாலும் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கின்றன. அவர்களின் விளக்குகள் புகைப்படம் எடுக்கப்படவில்லை, அவர்களின் பாடல்கள் கேட்கப்படுவதில்லை.

யாழ்ப்பாணத்தில் சாதிய ரீதியாக ஒதுக்கப்பட்ட சமூக ஆர்வலர் ஒருவர் ஒருமுறை என்னிடம் கூறினார், "அவர்கள் இறந்தவர்களை நினைவுகூருவது பற்றிப் பேசுகிறார்கள், ஆனால் நம்மை (உயிருள்ளவர்கள்) யார் நினைவில் கொள்கிறார்கள்?" அவரது கேள்வி, நினைவு அரசியலுக்குள் சமத்துவத்தின் முடிக்கப்படாத வேலையை வெளிப்படுத்துகிறது. சடங்கு எதிர்காலத்திற்கு ஒரு பாலமாகச் செயற்பட வேண்டுமென்றால், அது அதன் சொந்த வடிவத்தில் பொதிந்துள்ள படிநிலைகளையும் எதிர்கொள்ள வேண்டும். இந்தச் சவால் இலங்கைக்கு மட்டும் உரியதல்ல. போருக்குப் பிந்தைய சமூகங்களில், பழுதுபார்க்கும் உழைப்பு பெரும்பாலும் அரசால் குறைவாக அங்கீகரிக்கப்பட்டவர்களிடம் விழுகிறது. பெண்கள், 'கீழ்சாதி'த் தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புற ஏழைகள் நினைவுகூருதலின் உணர்ச்சி எடையைச் சுமக்கிறார்கள். அவர்களின் சடங்குகள் நாட்டின் தார்மீகப் பொருளாதாரத்தை நிலைநிறுத்துகின்றன. அவை அதன் முறையான கதைகளுக்குள் ஓரங்கட்டப்பட்டிருந்தாலும் கூட. நம்பகமான நிறுவனங்கள் இல்லாத நிலையில், சடங்கு மக்களின் ஆவணக் காப்பகமாக மாறுகிறது. இது

அதிகாரபூர்வ வரலாறுகள் எதை அழிக்கின்றன என்பதைப் பதிவு செய்கிறது. ஒவ்வொரு தொடர்ச்சியான செயலும் தார்மீக நிலப்பரப்பில் ஒரு கல்வெட்டு. ஒரு தாய் காணாமல் போன மகனுக்காக விளக்கேற்றும்போது, அவள் அவனை நினைவில் கொள்வது மட்டுமல்லாமல்; அவள் அவனது பெயரை காலப்போக்கில் எழுதுகிறாள். ஒரு புதிய கிணற்றை ஆசீர்வதிக்கச் சமூகங்கள் கூடும்போது, அவை உயிர்வாழ்வதற்கான தங்கள் கூட்டு விருப்பத்தை ஆவணப்படுத்துகின்றன. இந்தக் ஆவணக் காப்பகங்கள் கட்டடங்களில் சேமிக்கப்படவில்லை, ஆனால் உடல்கள், சைகைகள் மற்றும் பகிரப்பட்ட மௌனங்களில் சேமிக்கப்படுகின்றன. அவை உடையக்கூடியவை, ஆனால் அவை பாடல்கள், புகைப்படங்கள், புலம்பெயர்ந்தோர் வீடியோக்கள் மற்றும் கிசுகிசுக்கப்பட்ட கதைகள் மூலம் பயணிக்கின்றன. அவை கானர்டன் (1989) 'பழக்க நினைவகம்' (Habitmemory) என்று அழைத்ததை உருவாக்குகின்றன: நினைவகம் உரையில் அல்ல, தோரணை, தாளம் மற்றும் மறுநிகழ்வில் பொறிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் போருக்குப் பிந்தைய சடங்கு வாழ்க்கையை வரையறுக்கும் அழகியலை நான் சகிப்புத்தன்மை என்று பெயரிடுவேன். வெற்றி அல்ல, சமரசம் அல்ல, ஆனால் சகிப்புத்தன்மை தொடர்வதன் அழகு. சகிப்புத்தன்மைக்கு அதன் சொந்த அழகியல் உள்ளது: தினசரி மீண்டும் மீண்டும் நிகழும் மெதுவான நடன அமைப்பு, தூசி மற்றும் வெள்ளைத் துணியின் மந்தமான தட்டு, முழக்கங்களை விட முணுமுணுத்த பாடல்களின் ஒலி. இது பற்றாக்குறையில் உருவாக்கப்பட்ட ஒரு கலை வடிவம். இது விழிப்புணர்வால் வடிவமைக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் ஒரு களப் பயணத்தில், குண்டுவீச்சுக்குள்ளான தேவாலயத்தின் இடிபாடுகளை இன்னும் பராமரித்து வந்த ஒரு வயதான மனிதரை நான் சந்தித்தேன். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவர் தரையைத் துடைத்து, இரண்டு நாற்காலிகளை ஏற்பாடு செய்து, ஒரு மணி நேரம் தனியாக அமர்ந்து வந்தார். ஏன் என்று நான் கேட்டபோது, "நான் நிறுத்தினால், தேவாலயம் மீண்டும் இறந்துவிடும்" என்று பதிலளித்தார்.

அந்தச் செயல் - ஒரு காலியான தேவாலயத்தைத் துடைப்பது - சடங்கு மற்றும் தத்துவம் என்பவற்றைக் குறிக்கின்றது. இது இந்த அத்தியாயத்தின் மைய வாதத்தை உள்ளடக்கியுள்ளது: சடங்குகள் பாரம்பரியத்தின் நினைவுச்சின்னங்கள் அல்ல, ஆனால் அது நடக்க முடியாததாகத் தோன்றும் போது எவ்வாறு தொடர வேண்டும் என்பதற்கான வாழும் கோட்பாடுகள்.

கடந்த காலத்தில் எதிர்காலத்தை உருவாக்குவது என்பது ஏக்கத்தால் சிக்கிக் கொள்வதல்ல. எதிர்காலத்தின் பொருட்கள் ஏற்கனவே தாங்கப்பட்டவற்றில் பதிக்கப்பட்டுள்ளன என்பதை அங்கீகரிப்பதாகும். நினைவாக நடப்பட்ட ஒவ்வொரு விளக்கும், ஒவ்வொரு கிணறும், ஒவ்வொரு மரமும் தொடர்ச்சியின் விதையாக மாறும். போருக்குப் பிந்தைய இலங்கையின் சடங்குகள், கடந்த காலம் தப்பிப்பதற்கான ஒரு சுமை அல்ல, மாறாக வித்தியாசமாக வாழ்வதற்கான ஒரு வளம் என்பதை நமக்குக் கற்பிக்கின்றன. வரலாற்றை உடைப்பதன் மூலம் அல்ல, மாறாக அதில் கவனமாக மீண்டும் வசிப்பதன் மூலம் எதிர்காலம் வெளிப்படுகிறது. மட்டக்களப்பில் உள்ள ஒரு சமூகத் தலைவர் கூறியது போல், "நாம் பூஜ்ஜியத்திலிருந்து தொடங்க முடியாது. கடந்த காலமே நமது ஒரே கருவி."

இறுதியில், சடங்கின் அரசியல் என்பது விடாமுயற்சியின் அரசியல்; யார் காலத்தை வரையறுக்க வேண்டும் என்பது பற்றியது - போர் எப்போது உண்மையிலேயே முடிகிறது, எப்போது துக்கம் நிறுத்தப்பட வேண்டும், எப்போது அபிவிருத்தி தொடங்குகிறது என்பதை யார் தீர்மானிக்கிறார்கள்? அரசு ஒரு நாட்காட்டியை எழுதுகிறது. மக்கள் இன்னொன்றில் வாழ்கிறார்கள். இந்த நாட்காட்டிகள் மோதி ஒன்றுடன் ஒன்று சேரும் இடம் சடங்கு. நிகழ்காலம் பேச்சுவார்த்தை நடத்தப்படும் இடம், ஒரு நேரத்தில் ஒரு சைகை.

முள்ளிவாய்க்காலில் விடியற்காலையில் குளத்தின் அருகே ஒற்றை விளக்கை ஏற்றி நிற்கும் அந்தப் பெண்களைப் பற்றி நான் நினைக்கும் போது - விரக்தியால் அல்ல, ஒழுக்கத்தால் - உலகத்தை உருவாக்கும் ஒரு திட்டமிட்டுச் செய்யப்பட்ட செயலைக் காண்கிறேன். ஒவ்வொரு ஆண்டும், அவர்கள் இல்லாமைக்கும் சாத்தியத்திற்கும் இடையிலான அதே பலவீனமான பாலத்தை மீண்டும் கட்டமைக்கிறார்கள். அவர்களின் விடாமுயற்சியில் இந்த அத்தியாயத்தின் மையக் கேள்விக்கான பதில் உள்ளது: போருக்குப் பிந்தைய சமூகங்களில் சடங்குகள் ஏன் முக்கியம்? ஏனென்றால் அவர்கள் நீதி வருவதற்கு முன்பு வாழ்க்கையைத் தொடர அனுமதிக்கிறார்கள், ஏனென்றால் அவை காலத்தை வாழக்கூடியதாக ஆக்குகின்றன, மேலும் அவை உயிர்வாழ்வை ஒரு கூட்டுக் கலையாக மாற்றுகின்றன. எதிர்காலம், அவர்களின் கைகளில் வழங்கப்பட வேண்டிய வாக்குறுதி அல்ல, ஆனால் மீண்டும் மீண்டும் செய்யப்பட வேண்டிய ஒரு நடைமுறை - விளக்குக்கு விளக்கு, சைகைக்குச் சைகை, மூச்சிற்கு மூச்சு.

# இலங்கை மலையகத் தமிழர்களின் அடையாளப் பிரச்சினைகளும் அரசியல் அடையாளத்துக்கான போராட்டங்களும்

மலையகத் தமிழர்களின் புதிய வரலாற்றை இருபத்தோராம் நூற்றாண்டு அரசியல், பண்பாட்டுச் சூழலுக்கேற்ப எழுத வேண்டிய தேவை இன்றியமையாதது ஆகும். இவர்களின் 200 ஆண்டுகால வாழ்வு, இலங்கையின் பெருந்தோட்டங்களில் ஒரு வரலாற்று விபத்தாக நிகழ்ந்திருந்தாலும், இவர்களுக்கென்று ஒரு நெடிய பாரம்பரியம் உண்டு என்பதை மறுக்க முடியாது. இந்த நெடும்பயணத்தில், இவர்கள் நூற்றுக்கணக்கான வன்முறைகளுக்கும், குடியுரிமை பறிப்பு, நிலவுரிமை பறிப்பு உள்ளிட்ட பாகுபாடுகளுக்கும் ஆளாகினர். சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தங்களால் இவர்களில் சரிபாதிக்கும் மேற்பட்டவர்கள் நாடு கடத்தப்பட்டனர். எஞ்சியவர்கள் இலங்கையின் ஏனைய சமூகங்களால் அடிமைக் குடிகளாகவே பார்க்கப்பட்டனர். ஆயினும், இத்தகைய அவலங்களுக்கு மத்தியிலும், இந்த மக்கள் தமது தனித்துவமான மொழி, பண்பாடு, உற்பத்தி முறை, கூட்டு உளவியல் ஆகியவற்றைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வகையில், இந்நூற்றாண்டின் கண்ணோட்டத்தில், அவர்களது தனித்துவமான இருப்பை நிலைநிறுத்தும் முகமாக அவர்களுக்கான ஒரு புதிய அரசியல் – பண்பாட்டு அடையாளத்தை உருவாக்க வேண்டிய அவசியம் உணரப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு ‘மலையகத் தமிழர்களின் அரசியலும் பண்பாடும்’ எனும் இத்தொடர் எழுதப்படுகின்றது


**பொன் பிரபாகரன்**



பொன்.பிரபாகரன், யாழ். பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவப் பட்டம் பெற்றவர். பட்டப்பின் டிப்ளோமாவை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும், ஊடகவியலில் டிப்ளோமாப் பட்டத்தை கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். மேலும், கொழும்பு வணிகப் பள்ளியில் செயற்றிட்ட முகாமைத்துவப் பட்டத்தைப் பெற்றுள்ளார். அரசியல், பொருளாதாரம், பண்பாடு போன்ற தளங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். ‘காமன் கூத்து’(மலையக தமிழரின் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வு), ‘உப்பு ரொட்டி’ (கவிதைத் தொகுப்பு), ‘மலையகத் தமிழரின் சமூகவியலும் அரசியலும்’ என்பன இவரது நூல்களாகும்.

இலங்கையில் இன்று 'மலையகத் தமிழர்கள்' என அடையாளப்படுத்தப்படுகின்ற மக்கள், பதினெட்டாம் நூற்றாண்டில் தெற்காசியா முழுவதும் பரவியிருந்த மேலைத்தேயக் காலனித்துவத்தின் விளைவாகத் தோன்றியவர்கள் ஆவர். குறிப்பாக, பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியின் தவிர்க்க முடியாத ஒரு விளைவாக மலையகத்தில் குடியேற்றப்பட்டவர்கள்.

இம்மக்கள் தென்னிந்தியாவின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து இலங்கைக்கு வந்துள்ளனர். வரலாற்றுத் தகவல்களின்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து சுமார் 35% பேரும், சேலம் மாவட்டத்திலிருந்து 18% பேரும், தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து 10% பேரும், மதுரையிலிருந்து 8% பேரும், இராமநாதபுரத்திலிருந்து 7% பேரும், புதுக்கோட்டையிலிருந்து 7% பேரும், தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து 5% பேரும், திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து 3% பேரும், வட ஆற்காடு, கோயம்புத்தூர் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து 2% பேரும் தோட்டத்துறை சார்ந்து இங்கு வருகை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தோட்டத்துறை சாராத இந்தியர்களும் இலங்கைக்குப் புலம்பெயர்ந்துள்ளனர். இவர்களின் புலப்பெயர்வில் திருநெல்வேலி மாவட்டத்தின் பங்களிப்பு மிக அதிகமாக (40%) இருந்தது. தஞ்சாவூரிலிருந்து 15% பேரும், மலபார் பகுதியிலிருந்து 8% பேரும், மதுரையிலிருந்து 6% பேரும், திருவிதாங்கூரிலிருந்து 5% பேரும், சென்னையிலிருந்து 4% பேரும் புலம்பெயர்ந்துள்ளனர். மேலும், புதுக்கோட்டையிலிருந்து 1% பேரும் பிற மாவட்டங்களிலிருந்து 3% பேரும் இலங்கைக்குப் புலம்பெயர்ந்துள்ளனர்.

ஆரம்பகாலத்தில் இதற்காக ஆள் திரட்டுவதற்காகத் தனிப்பட்ட செல்வாக்குள்ள நபர்கள் பயன்படுத்தப்பட்டனர். அதனைத் தொடர்ந்து 'கங்காணி முறை' அறிமுகப்படுத்தப்பட்டது. கங்காணி முறையின் கீழ், பெரிய கங்காணிமார்கள் தமிழ்நாட்டின் தங்கள் சொந்தக் கிராமங்கள் மற்றும் அதன் அயல் கிராமங்களில் இருந்து பல்வேறு அடித்தள மக்களை, இலங்கையிலுள்ள கோப்பி, தேயிலை மற்றும் தென்னந் தோட்டங்களில் பணியாற்றுவதற்காகத் திரட்டி அழைத்து வந்தனர்.

இவர்கள் வந்த வழித்தடம் என்பது அக்காலப் பகுதியில் மிகவும் பயங்கரமானதாக இருந்திருக்கிறது. தமிழ்நாட்டில் அவர்கள் திரட்டப்பட்ட கிராமங்களில் இருந்து தூத்துக்குடி துறைமுகப் பகுதிக்கும் அல்லது இராமேஸ்வரம் மண்டபப் பகுதிக்கும் பெரும்பாலும் கால்நடையாகவே கூட்டி வரப்பட்டிருக்கிறார்கள். சுமார் 300 முதல் 400 கிலோமீட்டர் தூரத்திற்கு அவர்கள் கால்நடையாக நடக்க வைக்கப்பட்டு, அங்கு தங்கவைக்கப்பட்டனர். பின்னர், சிறு சிறு படகுகளில், சிறிய தொகையினராக, அவர்கள் இலங்கையின் துறைமுகங்களுக்கு, குறிப்பாக தலைமன்னார் துறைமுகத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள்.

பிற்காலத்தில், இவர்கள் கொழும்புத் துறைமுகத்திற்கும் அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு அழைத்துவரப்பட்ட மக்கள், அங்கு சிறிது காலம் தங்க வைக்கப்பட்ட பின்னர், அடர்ந்த வனப்பகுதிகளாக இருந்த இலங்கையின் வளர்ச்சி அடையாத, வீதிகளற்ற, நாகரிகமற்ற பகுதிகளின் ஊடாகக் கால்நடையாக நடத்திச் செல்லப்பட்டபோது, அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் வரலாற்றின் பெரும் துயரங்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

அவர்கள் தங்கள் பயணத்தின்போது பல சவால்களை எதிர்கொண்டனர். முதலாவதாக, அவர்கள் பெரும் காட்டாற்று வெள்ளங்களைக் கடக்க வேண்டியிருந்தது; இரண்டாவதாக, காட்டு விலங்குகளின் தாக்குதலுக்கு ஆளாக வேண்டியிருந்தது; மூன்றாவதாக, பசி, பட்டினி மற்றும் பஞ்சம் அவர்களை வாட்டி வதைத்தது. இதனால், அவர்கள் வழிநெடுகிலும் தங்கள் உறவினர்களை - கணவன், மனைவி, அன்னை, தந்தை, குழந்தை - எனப் பலரை இழக்க நேரிட்டது. இறந்தவர்களின் சடலங்களை, அவர்கள் நடந்து வந்த அந்த வழித்தடம் முழுவதும் கிடத்தியே வந்ததாக, மலையகத்தின் மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் பதிவு செய்கின்றார்.

"ஆழப்புதைந்த
தேயிலைச் செடியின்
அடி புதைந்த
அப்பனின் சிதைமேல்
ஏழை மகவும் ஏறி மிதித்து
இங்கவர் வாழ்வோ
எங்கவர் தருவர்"

இந்த அடையாளங்களைக் (இறந்தவர்களின் சடலங்களைக்) கொண்டுதான், அவர்களைப் பின் தொடர்ந்து வந்த ஏனைய மக்கள் தொகையினர் அந்தக் காட்டு வழித்தடங்களை அடையாளம் கண்டு நடந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த வரலாற்று நிகழ்வில் உள்ள துயரம் என்னவென்றால், இந்தத் துயரம் ஒன்றரை நூற்றாண்டுகள் தொடர்ந்தது என்பதே ஆகும். 1823




ஆம் ஆண்டு தொடங்கிய இந்த வரலாற்றுப் பெருந்துயரம், 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடையும் வரை நீடித்தது. இந்த ஒன்றரை நூற்றாண்டு கால வரலாற்றுத் துயரங்களுக்கு ஊடாக, இலங்கையில் குடியேறிய மக்கள் தொகையை விட, நான்கு அல்லது ஐந்து மடங்கான மக்கள் தொகை, காடுகளிலும், காட்டாற்று வெள்ளத்திலும், கொடிய நோய்களின் தாக்கத்திலும் அழிந்து போனதாகவே அவதானிக்க முடிகிறது.

ஏனென்றால், ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, மலையகப் பகுதிகளில் அவர்கள் பெருந்தோட்டங்களை உருவாக்கிய அடர்ந்த கானகப் பகுதிகளுக்கு வீதிகளோ, புகையிரதப் பாதைகளோ, முறையான பாதுகாப்பு வசதிகளோ, தங்குமிடங்களோ, வீட்டு வசதிகளோ ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, அவர்கள் அடர்ந்த கானகங்களிலேயே படுத்து உறங்கினார்கள்; ஒற்றையடிப் பாதைகளில் நடந்தார்கள்; பாம்புக்கடி மற்றும் விலங்குகளின் தாக்குதலால் மாண்டு மடிந்தார்கள்.

இலங்கையின் தேயிலை நூற்றாண்டு வரலாற்றை எழுதிய டி.எம். போரஸ்ட், தனது 'நூறு ஆண்டுகால இலங்கைத் தேயிலை' (A Hundred Years of Ceylon Tea) என்ற நூலில், 1850 ஆம் ஆண்டு தெல்தெனியாவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கைப் பற்றிப் பதிவு செய்கிறார். அந்த வெள்ளம் 500 அடி உயரத்திற்குப் பாய்ந்ததாகக் கூறுகின்றார். அத்தகைய சவால்மிக்க சூழ்நிலையில்தான், இந்தப் பனி படர்ந்த மலைச் சிகரங்களிலே, 1,000 அடி முதல் 6,000 அடி வரையான உயரங்களில், அவர்கள் செல்வம் கொழிக்கும் தேயிலை, இறப்பர், தென்னந் தோட்டங்களை மட்டுமின்றி, ஆரம்பகாலக் கோப்பித் தோட்டங்களையும் உருவாக்கியிருக்கிறார்கள்.

இந்தத் தோட்டங்களை உருவாக்குவதில், காலனித்துவவாதிகளான பிரித்தானியர்கள், ஸ்கொட்லாந்துக்காரர்கள், வேல்ஸ் நாட்டவர்கள் மற்றும் அவர்களது அரசில், ஆட்சியில், படைத்துறையில் பணியாற்றிய ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பலர் ஈடுபட்டனர். இவர்கள் அரசு அதிகாரிகளாகவும், இராணுவ அதிகாரிகளாகவும், நிர்வாக அதிகாரிகளாகவும் அல்லது செல்வாக்கு மிக்கவர்களாகவும் இருந்தனர். இவர்கள் இலங்கையின் மலைக்காடுகளை விலை கொடுத்து வாங்கி அங்கே தோட்டங்களை உருவாக்க, அந்தத் தோட்டங்களுக்குத் தேவையான, பெருமளவு உடல் உழைப்பை வழங்கக்கூடிய, மிகவும் அர்ப்பணிப்பு மிக்க, கடின உழைப்பாளிகளான தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் அவர்களுக்குக் கிடைத்தார்கள்.

ஆரம்ப காலத்தில், அவர்கள் ஆபிரிக்கத் தொழிலாளர்களையும், சீனத் தொழிலாளர்களையும், மலாய் தொழிலாளர்களையும் இந்தப் பணியில் ஈடுபடுத்துவதற்கு முயற்சித்தபோதும், அந்த முயற்சிகள் பெருமளவு வெற்றி அளிக்காததோடு, அதிக செலவையும் ஏற்படுத்தக்கூடியதாக இருந்தன. எனவே,

இலங்கைக்கு மிக அண்மையில் இருந்த தென்னிந்தியாவிலிருந்து, கடின உழைப்பாளிகளான விவசாயக் கூலித் தொழிலாளர்களை இலங்கையின் தோட்டங்களுக்குக் கூலித் தொழிலாளர்களாக அணி திரட்டுவதில் அவர்கள் வெற்றி பெற்றார்கள் என்றே சொல்ல வேண்டும்.

இவர்களைத் திரட்டுவதற்காக அவர்கள் கையாண்ட ஏராளமான உபாயங்கள் பற்றிப் பேசப்படுகிறது. பொய்களைப் பரப்பியுள்ளனர்; சமூகப் பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தியுள்ளனர்; கடன் பொறியைப் பயன்படுத்தியுள்ளனர்; கிராமங்களில் இருந்த அவர்களின் சுயதேவைப் பொருளாதாரத்தைத் திட்டமிட்டு அழித்துள்ளனர்; கிராமப்புற அதிகார வர்க்கத்தைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும், இந்திய நாட்டின் அடிமைத்தனம், அதன் தலைமையற்ற நிலை, மக்களை வழிநடத்தும் முறையான தேசியத் தலைவர்கள் அற்ற நிலை ஆகியவைகூட இந்த அணிதிரட்டலுக்குச் சாதகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

காலனித்துவவாதிகள் தமிழ் மக்கள் அல்லது இந்தியர்களை இலங்கைக்கு மட்டுமன்றி, 40க்கும் மேற்பட்ட ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் அடிமைக் கூலிகளாக (தொழிலாளர்களாக) கொண்டு சென்றுள்ளனர். ஆனால், உலக வரலாற்றின் அதிசயம் என்னவென்றால், இலங்கைக்குப் புலம்பெயர்ந்தவர்களைப் போலல்லாமல், ஏனைய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த இந்த மக்கள் தமது அடையாளங்களைத் தொலைத்திருக்கிறார்கள்.

இலங்கையின் மலையகத் தமிழர்கள், ஆண்டாண்டு காலமாகத் தொடர்ச்சியான அடக்குமுறைகளை எதிர்கொண்டு வந்துள்ளனர். இந்த அடக்குமுறைகளில் அந்நியக் காலனித்துவ அடக்குமுறை, சிங்கள பௌத்தப் பேரினவாத அடக்குமுறை, இலங்கையின் தேசிய இனக்குழுமங்களின் அடக்குமுறைகள், ஆக்கிரமிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள், திட்டமிடப்பட்ட இன வன்முறைகள், கட்டமைக்கப்பட்ட சனத்தொகைப் பேரழிவு, மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பு அழிப்பு ஆகியவை அடங்கும். குறிப்பாக, பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தோட்டங்கள் மூடப்பட்டதோடு, ‘அடிமைச் சாசனங்கள்’ என்று வர்ணிக்கக்கூடிய ஒப்பந்தங்கள் இவர்கள் மீது திணிக்கப்பட்டன. 1964 மற்றும் 1974 சிறிமாசாஸ்திரி ஒப்பந்தங்களினால், சுமார் 6.5 இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் தாயகம் திரும்புதல் என்ற பெயரில் கட்டாயமாகப் பிரிக்கப்பட்டுத் தமிழ்நாட்டுக்கு மீள அனுப்பப்பட்டனர். இந்த வெளியேற்றத்தின்போது, கணவன் - மனைவி, பெற்றோர் - குழந்தைகள் எனப் பலாத்காரமாகப் பிரிக்கப்பட்டனர். இந்த அரசியல் துயரங்களுடன், வறுமையால், பிணியால், போசாக்கின்மையால், குறைந்த கூலியால் மற்றும் தற்கொலைகளால் மக்கள் பெரும் அழிவைச் சந்தித்தனர். 1870 ஆம் ஆண்டு மட்டும், இரத்தினபுரி மாவட்டத்தில் ஒரே வருடத்தில் 70,000 தோட்டத் தொழிலாளர்கள் தெருத் தெருவாக இறந்து கிடந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தனைப் பெரும் இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் மத்தியில், மலையக மக்கள் தமது அடையாளங்களைத் தொலைக்காமல் வாழ்கின்றனர்.

வரலாற்றுப் பதிவுகளின்படி, அவர்கள் பெரும்பாலும் கொலரா மற்றும் மலேரியா போன்ற நோய்களால் இறந்தனர். இத்தகைய பேரவலங்களுக்கும் பெருந்துயரங்களுக்கும் மத்தியிலும் கூட, இன்று இவர்கள் இலங்கையின் குறிப்பிடத்தக்க அரசியல் பெறுமானமும் பொருளாதார ஊற்றுமூலமும் கொண்ட ஒரு துறையில், அச்சாணியாக இருக்கிறார்கள். அதாவது, இலங்கைக்குப் புதிய முகத்தையும், புதிய அடையாளத்தையும், புதிய பொருளாதாரத்தையும், புதிய கட்டுமானங்களையும் தருவதற்கான ஏற்றுமதி வருமானத்தை ஈட்டித்தரும் மிகப்பெரிய தொழிற்றுறையின் (பெருந்தோட்டத் துறையாக) அச்சாணியாக அவர்கள் திகழ்கிறார்கள்.

இன்று, எண்ணிக்கை அடிப்படையில் சுமார் 1.4 இலட்சம் நேரடித் தொழிலாளர்கள் மட்டுமே இருப்பதாகச் சொல்லப்பட்டாலும் கூட, அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த கிட்டத்தட்ட 1.6 மில்லியன் மக்கள் இன்னும் மலையகப் பெருந்தோட்டங்களில் 14 மாவட்டங்களில் செறிவாகவும் பரவலாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

மேலும், இலங்கையில் குடியேறிய இந்தியத் தொழிலாளர்களால்தான் இந்த நாட்டில் புதிய போக்குவரத்துப் பாதைகள் உருவாக்கப்பட்டன. பெருந்தோட்டத் துறையின் உபரி வருமானத்தின் மூலம்தான் தொடர்வண்டிப் பாதைகள் அமைக்கப்பட்டன, துறைமுகங்களும் கட்டப்பட்டன. வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்திய பகுதிகள் என அனைத்து இடங்களிலும் பரவிக் காணப்படும் வைத்தியசாலைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் பல, பெருந்தோட்ட மக்களின் வருகைக்காகவும் அவர்களின் நலன்களுக்காகவுமே உருவாக்கப்பட்டன. மேலும், இலங்கையின் மருத்துவச் சட்டங்கள், சுகாதாரச் சட்டங்கள், கல்விச் சட்டங்கள், வீதிப் போக்குவரத்துச் சட்டங்கள் என அனைத்துச் சட்டங்களும் ஆரம்ப காலத்தில் தோட்டத்துறையை மையப்படுத்தியே

பிரித்தானியரால் உருவாக்கப்பட்டன. ஆனால், சுதந்திர இலங்கையில் மலையகத் தமிழர்கள் அரை அடிமைகளாக, அடிமைக் குடிகளாக, அடிமைப் பாட்டாளிகளாக, அரசியல் அதிகாரமற்ற மக்களாக, காணி அதிகாரமற்ற மக்களாக, வெறுமனே பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் வாக்களிக்கும் இயந்திரங்களாக மாற்றப்பட்டனர். இவர்கள், இலங்கை வரலாற்றில் 1848 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டு வரையான ஒரு நூற்றாண்டு காலத்தில், நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் 98% வரை ஈட்டித் தந்தவர்கள் ஆவர். இலங்கையின் வருமானத்திற்கு இவ்வளவு பெரிய பங்களிப்பைச் செய்த இவர்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டிய நியாயபூர்வமான உரிமைகள், சலுகைகள், அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், அரசியல் அதிகாரப் பங்கீடுகள் என்பன இதுவரை வழங்கப்படவில்லை என்பதே மிகவும் துயர்மிக்க வரலாறாகக் காணப்படுகிறது.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தோட்டத்துறைக் கட்டமைப்புகளும் அடித்தளக் கட்டமைப்புகளும் மிகச் சிறப்பாகப் பேணப்பட்டு வந்ததாக அறிய முடிகிறது. ஆனால், சுதந்திர இலங்கையில், பெருந்தோட்டங்களைச் சூறையாடுவது, மூடுவது, பெருந்தோட்டக் காணிகளில் இருந்து தொழிலாளர்களை விரட்டி அடிப்பது, குறிப்பாக மலையகத் தமிழ்த் தொழிலாளர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவது ஆகியவற்றைத்தான் சிங்களப் பெரும்பான்மைத் தலைவர்கள் 'புரட்சி', 'போராட்டம்', 'நாட்டை முன்னேற்றுவதற்கான வழிமுறை' மற்றும் 'கிராமப்புற சமூகத்தின் வளர்ச்சி, வேலைவாய்ப்பு, பொருளாதார அபிவிருத்திக்கான சாத்தியம்' என்று கருதினர். அவர்களுக்கு ஆதரவளித்த சிறுபான்மைத் தேசிய இனத் தலைவர்கள் உட்பட இவர்களனைவரும், இந்தச் சமூகத்தை அழித்தொழிப்பதில் மிகப் பெரிய வரலாற்று, பண்பாட்டுப் பாத்திரத்தை வகித்திருக்கிறார்கள்.

இத்தனைக்கும் மத்தியில், போராட்டத்தையே வாழ்க்கையாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற இம்மக்கள் கூட்டத்திற்கு ஒரு பொது அடையாளத்தை, ஓர் இனத்துவப் பெயரை, ஓர் அரசியல் அடையாளத்தை அல்லது அரசியல் அதிகாரத்திற்கான முத்திரையை வழங்குவதில், கடந்த 200 ஆண்டுகளாகத் தடுமாற்றங்களை நாம் அவதானிக்க முடிகிறது.

இலங்கைக்குப் புலம்பெயரச் செய்யப்பட்ட ஆரம்பகாலத்தில், அவர்கள் 'மலபார் கூலிகள்', 'கூலிகள்', 'தமிழ்க் கூலிகள்', 'தோட்டக் கூலிகள்' மற்றும் 'கூலித் தமிழர்கள்' எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டார்கள். கூலித் தமிழைக் கற்பதற்கென்று பிரித்தானியர்களால் கை நூல்கள் தயாரிக்கப்பட்டன. அதன் பின்னர் வந்த சமூக ஆய்வாளர்களும், சமூகவியலாளர்களும் அவர்களைத் தங்கள் விருப்பப்படி 'இலங்கை வாழ் இந்தியர்கள்', 'சிலோன் இந்தியன்ஸ்', 'இந்தியப் புலம்பெயர்வாளர்கள்', 'இந்தியக் குடியேறிகள்', 'இந்தியக் குடியேற்றத் தொழிலாளர்கள்', 'தோட்டத் தொழிலாளர்கள்', 'பெருந்தோட்ட மக்கள்', 'பெருந்தோட்டத் தமிழர்கள்', 'இலங்கை வாழ் இந்திய மக்கள்' என்று பல்வேறுபட்ட அடையாளங்களைக் கொடுப்பதற்கு முயன்றுள்ளனர்.

மேலும், இவர்கள் காலத்திற்குக் காலம் 'கள்ளத்தோணிகள்', 'வடக்கத்தியான்', 'தோட்டக்காட்டான்கள்' போன்ற இழிவுப் பெயர்களால் அழைக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். பெரும்பான்மைச் சிங்கள பௌத்த ஆட்சியாளர்களின் ஒரு பகுதியினர் அவர்களைக் 'கள்ளத்தோணிகள்' என்றும், மற்றவர்கள் 'இலங்கையின் தோட்டக்காட்டான்கள்' என்றும் அடையாளப்படுத்த முயற்சி செய்தனர். அதேவேளையில், மேலாதிக்கச் சாதியினர் அவர்களை 'இழிசனர்' என வகைப்படுத்த முயன்றார்கள்.

ஒரு மக்கள் கூட்டம் ஒரு நாட்டில் குடியேறி 200 ஆண்டுகள் கடந்த பின்னரும் தமது சொந்த அடையாளத்தைத் தேடுவதில் தடுமாற்றங்களைக் கொண்டிருப்பதற்கு இத்தகைய அரசியல், பண்பாட்டுப் புலமைசார் வகையறாக்கள் வழிவகை செய்திருக்கிறார்கள்.

அண்மைக்காலத்தில், கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக, இந்த மக்களுக்கான ஒரு தேசிய இனத்துவ, அரசியல் - கலாசார அடையாளத்தைப் பெற்றுக்கொடுப்பதில் மலையகப் புலமையாளர்கள், புத்திஜீவிகள், அரசியல், தொழிற்சங்கச் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிந்தனையாளர்கள், குறிப்பாக இலக்கியப் படைப்பாளிகள், பெரும் பிரயத்தனங்களைச் செய்திருக்கிறார்கள். அதன் விளைவாக, அவர்கள் 'மலைகளின் மக்கள்', 'தேயிலை தேசத்தின் மக்கள்', 'மலையகத் தமிழர்கள்' எனப் பல அடையாளங்களைச் சூட்ட முயன்றிருக்கிறார்கள்.

1960களில், இலங்கையில் ஒருபுறம் மலையகத் தமிழர்களுக்கு எதிரான மிகக் கொடூரமான ஒடுக்குமுறைகள் தொடங்கப்பட்ட அதே காலப்பகுதியில், மலையக மக்களின் மத்தியில் பல்வேறு சமூக - கலாசார இயக்கங்கள் தோற்றம் பெற்றன. இந்த இயக்கங்கள், மலையக மக்களின் அரசியல் அதிகாரம் மற்றும் அடையாளம் பற்றிய

பிரச்சினைகளை முன்னிலைப்படுத்திக் குரல் கொடுத்து வந்தன. இருப்பினும், பிரதான மைய நீரோட்டத் தொழிற்சங்க அரசியல் இயக்கங்கள் அத்தகைய அக்கறையைக் காட்டாத நிலையில், இந்தச் செயற்பாடுகள் குறு இயக்கங்களாகவே முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக, 1940 முதல் 1950 வரையிலான காலகட்டத்தில் மலையகப் பகுதிகளில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வந்த ‘இலங்கை திராவிட இயக்கம்’, நாவலர் இளஞ்செழியன் தலைமையில் இயங்கி வந்தது. அந்த இயக்கம் பகுத்தறிவுச் சிந்தனைகளை, அரங்கு சார்ந்த சமூகச் செயற்பாடுகளை, மற்றும் கலாசாரச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் மிகத் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டது.

இந்த இயக்கத்தின் தலைவரான நாவலர் இளஞ்செழியன் அவர்கள், ரதல்ல மைதானத்தில் நடைபெற்ற ஒரு மே தினக் கூட்டத்தில் வைத்து, ‘மலையகத் தமிழர்கள்’ என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியதாக அறியப்படுகிறது. இருப்பினும், இலங்கையின் மலையகத் தமிழர்கள் மத்தியில் தோன்றிய ஆளும் வர்க்கங்கள் — குறிப்பாகத் தொழிற்சங்க, அரசியல் மற்றும் பொருளாதார அதிகார வர்க்கங்கள், வணிக சமூகம் மற்றும் தரகு முதலாளிகள் — இன்னும் தமது அடையாளத்தை இந்தியாவோடு தொடர்புபடுத்திப் பார்ப்பதற்கே முயன்று வருகிறார்கள்.

அவர்கள் சில வேளைகளில் மலையகத் தமிழர்களை, ‘இலங்கைத் தமிழர்கள்’ அல்லது ‘இந்தியத் தமிழர்கள்’ அல்லது ‘இலங்கை வாழ் இந்தியத் தமிழர்கள்’ எனக் கூறிக் கொள்ளலாம் என்று தற்போது கூட புலம்பிக் கொண்டிருக்கின்ற ஒரு போக்கைக் காண முடிகிறது. இந்தியா ஒரு பிரமாண்டமான நாடாகவும், நீண்ட நெடிய வரலாறும் பண்பாடும் கொண்ட தொன்மை மிக்க நாடாகவும் இருப்பதால், தங்கள் இன அடையாளத்தை இந்தியாவுடன் தொடர்புபடுத்திக் காட்டுவதன் மூலம், இந்தியாவிடமிருந்து மிகப்பெரிய பாதுகாப்பும், இந்தியர் என்ற வகையில் ஒரு கௌரவமும் கிடைக்கும் என்று இவர்கள் நம்புவதாகவும் தெரிகிறது.

ஆனால், வரலாற்று ரீதியாக இந்தியா இதுவரை மலையகத் தமிழர்கள் விடயத்தில் எதிர்மறையான பாத்திரத்தையே வகித்திருப்பதை நாம் காண முடிகிறது. உண்மையில், இந்தியப் பேரரசு பிராந்திய வல்லரசாக, சகல வலிமையும் அதிகாரமும் கொண்டிருந்தபோதும், மலையகத் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைகள், தாக்குதல்கள், அழித்தொழிப்புகள், ஆக்கிரமிப்புகள், மக்களின் அரசியல் அதிகாரப் பறிப்புகள் ஆகியவற்றைத் தடுத்து நிறுத்துவதிலோ, அல்லது இன்னமும் அரசியல் ரீதியாக நெருக்கடியான நிலையில் இருக்கும் அவர்களின் பொருளாதார, சமூக நிலையை முன்னேற்றுவதிலோ மிகப்பெரிய தாக்கம் எதனையும் செலுத்த முடியவில்லை என்ற அரசியல் வரலாற்று உண்மையை இவர்கள் உணரத் தவறுகிறார்கள்.

உண்மையில், மலையகத் தமிழர்கள் வரலாற்று, பண்பாட்டுத் தொடர்புகளையும், மொழி, கலாசாரம், நாகரிகம் போன்றவற்றில் காணப்படும் மிகத் தொன்மையான மரபுகளையும் தமக்கெனக் கொண்டிருப்பதற்கான சகல தகுதியையும் கொண்டிருக்கிறார்கள். தமிழருக்கென்று ஒரு நாகரிகம், தமிழ்நாட்டுக்கென்று ஒரு நீண்ட நெடிய வரலாறு, தமிழ் இனத்துக்கென்று ஒரு நீண்ட நெடிய பண்பாடு ஆகியவை இருக்குமானால், அவர்களுக்கென்றும் ஓர் அரசியல் அதிகாரக் கட்டமைப்பு இருக்க வேண்டும். மேலும், அவர்களின் அறிவியலும், தொழில்நுட்பமும், விஞ்ஞானமும் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அவை எல்லாவற்றிலும் மலையகத் தமிழர்களும் தவிர்க்க முடியாத ஒரு பாத்திரத்தைக் கொண்டிருப்பவர்களே.

ஆனால், 21 ஆம் நூற்றாண்டின் அரசியல் - வரலாற்றுச் சூழலமைவில், இலங்கையின் புவியியல் அமைவிடம், உலக அதிகாரச் சமநிலையில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களின் சூழலமைப்பு, இலங்கையின் உள்நாட்டுத் தேசிய இனங்களுக்கு இடையே நடைபெறுகின்ற அரசியல் அதிகாரப் போட்டிகள், தேச உருவாக்கப் போட்டிகள், தேசிய இனக் குழுக்களுக்கு இடையிலான அடையாள அரசியல் பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தி அரசியல் தேவைகள் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு, இலங்கையின் மலையகத் தமிழர்கள் தமக்கான இனத்துவ அடையாளத்தைத் தனித்துவமானதாக உருவாக்க வேண்டிய தேவை உள்ளது.

உலகின் அதிகாரச் சமநிலை மையம், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நகர்ந்து வரும் 21 ஆம் நூற்றாண்டில், இந்த நூற்றாண்டு கிழக்கின் நூற்றாண்டாகக் கருதப்படுகிறது. கிழக்குக்கும் மேற்குக்கும் இடையேயான கப்பல் பாதைகளிலே, மிகப்பெரிய வணிகப் பாதைகள், வணிக மையங்கள், உற்பத்தி மையங்கள், பொருளாதார மையங்கள், நிதி மையங்கள், இராணுவ மேலாண்மை மையங்கள், மற்றும் தொழில்நுட்ப மேலாண்மை மையங்களாகக் கீழ்த் திசை அரசுகள் (கிழக்கு அரசுகள்) தோற்றம் பெறத் தொடங்கியிருக்கின்றன. குறிப்பாக, அமெரிக்காவும் ஐரோப்பாவும் கொண்டிருந்த இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகால அதிகார

மையத்திலிருந்து, தெற்காசியா, மத்திய ஆசியா மற்றும் கிழக்காசியாவை மையமாகக் கொண்ட புதிய அதிகார மையங்கள் உலகம் முழுவதும் உருவாகி வருகின்றன.

உலகானது ஒரு துருவ அரசியல் அதிகார மையத்திலிருந்து பல் துருவ அரசியல் மையத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இன்றைய ரஷ்யா ஒரு மிகப்பெரிய இராணுவ, பொருளாதார, இராஜதந்திர மற்றும் அரசியல்ரீதியாகத் தவிர்க்க முடியாத அதிகார மையமாக மீண்டும் உருவாகியுள்ளது. சீனா, உலகின் உற்பத்தி மையமாகவும், ஏற்றுமதி மையமாகவும், வணிக மையமாகவும், மற்றும் இராணுவ மையமாகவும் வலுப்பெற்றுள்ளது. ஈரான் மற்றொரு தவிர்க்க முடியாத சக்தியாக மத்திய கிழக்கில் தோற்றம் பெற்றுள்ளது.



Image Source - www.historyofceylontea.com

எனவே, இந்தச் சூழலில் நாம் எமது தனித்துவமான அடையாளத்தை உருவாக்கத் தவறினால், இம்மக்கள் கூட்டம் காற்றோடு கரைந்து போவதற்கான ஒரு வரலாற்றுச் சூழ்நிலை ஏற்படும். இன்றும்கூட, இறுதியாக வெளிவந்த இலங்கையின் *15* ஆவது குடித்தொகைப் புள்ளிவிவரக் கணக்கெடுப்பிலே, மலையகத் தமிழர்களின் எண்ணிக்கை வெறும் *2.1%* தான் எனப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில், இலங்கை மலையகத் தமிழர்கள் *14* மாவட்டங்களில் வாழ்கிறார்கள்; உத்தியோகபூர்வமற்ற புள்ளிவிவரங்களின்படி, அவர்கள் *16* இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களாக இலங்கையில் வாழ்ந்து வரவேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் மலையகத் தமிழர்களும், மலையகப் பெருந்தோட்டங்களையும் அவற்றைச் சூழ்ந்த நகர/ கிராமப்புறங்களில் வாழும் மலையகத் தமிழர்களும் அறிந்தோ அறியாமலோ தம்மை 'இலங்கைத் தமிழர்கள்' என அடையாளப்படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள். மலையகப் பகுதிகளில் இத்தகைய ஒரு கலாசார ஆக்கிரமிப்பை அல்லது அரசியல் அடையாள அழிப்பை மேற்கொள்வதில் பல புலம்பெயர் அமைப்புகள், அரசு சார்பற்ற அமைப்புகள் (NGO), மதச்சார்பு அமைப்புகள், மத்தியதர வர்க்கப் புத்திஜீவிகள், அரசியல்தொழிற்சங்கச் செயற்பாட்டாளர்கள் மற்றும் சில பிரபல ஊடகங்கள் கூடச் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன.

இலங்கையிலுள்ள சில சக்திகள், மலையகத் தமிழர்கள் தமக்கென ஒரு தனித்துவமான அடையாளத்தைக் கொண்டிருக்கக்கூடாது, அரசியல் அதிகாரத்தைப் பெற்றுவிடக்கூடாது, அடிமைக் குடிகளாக இருக்கும் தமது வாழ்நிலையிலிருந்து விடுபட்டுவிடக்கூடாது, காணி மற்றும் வீட்டு உரிமையைப் பெற்றுவிடக்கூடாது என உள்ளூர எண்ணுகின்றன. இந்தச் சக்திகள், இம்மக்கள் தனித்துவமான அடையாளத்தைப் பெற்றுக்கொள்வதை, திட்டமிட்ட வகையில் மிகவும் அப்பட்டமாகத் தடுத்து வருகின்றன. அரசு அதிகார மையத்தில் இருக்கும் கீழ்நிலை, இடைநிலை அல்லது மேல்நிலை அதிகாரிகள் மற்றும் சில அரசியல்வாதிகள் கூட இந்த மக்களின் அடையாளத்தைச் சிதைப்பதில் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

இந்த வரலாற்றின் துயரம் என்னவென்றால், இலங்கையின் முதலாவது சனத்தொகைக் கணக்கெடுப்பில், நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய மக்கள் கூட்டமாக இருந்த இந்த 'குடியேற்றத் தொழிலாளர்கள்' (இன்றைய மலையகத் தமிழர்கள்), கடந்த *150* ஆண்டுகளில் தமது சனத்தொகையை (அதிகாரபூர்வமாக) வெறும் *2.1%* ஆகக் குறைத்துக் கொண்டுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில்தான், மலையகத் தமிழர்கள் தமது அடையாளத்தை மிக ஆழமாகவும், அழுத்தமாகவும் பதிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. கடந்த பல தசாப்தங்களாகப் பல்வேறு சமூக, கலாசார மற்றும் அரசியல் இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்கள், செயற்பாடுகள், மற்றும் அழுத்தங்களின் காரணமாக, இன்றைய இலங்கையின் புதிய அரசாக (அல்லது மாற்றுச் சமூக - கலாசாரப் பாரம்பரியம் கொண்ட அரசாக) தோற்றம் பெற்றுள்ள 'தேசிய மக்கள் சக்தி' கட்சி, இம்மக்களின் இனத்துவ அடையாளத்தை 'மலையகத் தமிழர்கள்' என ஏற்றுக்கொள்வதற்கு முன்வந்திருக்கிறது. எனினும், இந்த அடையாளச் சேர்ப்பு என்பது கடந்த காலத்தில்,

மலையகத்தின் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் - தொழிற்சங்கத் தலைமைகளின் அரைகுறை இணக்கப்பாட்டுடன், இலங்கைத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

ஆனால், இந்த அடையாளம் (மலையகத் தமிழர்) இன்னும் முழுமையாகத் தேசியமயப்படுத்தப்பட்ட அல்லது சமூகமயப்படுத்தப்பட்ட அடையாளமாக இல்லை என்பதை இந்தப் புள்ளிவிவரங்களின் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இருப்பினும், 200 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த நாட்டிலே வாழ்ந்து வருகின்ற மக்கள் கூட்டம், தங்களுடைய இனத்துவக் கட்டமைப்பு, அடையாளம், மொழி, பண்பாடு, பொருளாதாரச் செயற்பாட்டுப் பிரதேசங்கள், வாழ்வாதாரம் ஆகியவை சிதைக்கப்பட்ட பின்னரும்கூட, இந்த நாட்டின் அசைக்க முடியாத ஒரு மக்கள் கூட்டமாக எஞ்சியிருக்கிறார்கள் என்ற வரலாற்று உண்மையை ஏற்றுக்கொண்டு, இந்த மக்களின் அரசியல் அதிகாரத்தை உறுதி செய்வதற்கும், அரசியல்ரீதியான இனத்துவ அடையாளத்தை உறுதி செய்வதற்கும், அவர்களை 'மலையகத் தமிழர்கள்' என்ற தேசிய இனமாக அங்கீகரிப்பதற்கும் இலங்கைத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் இந்த நூற்றாண்டில் (21 ஆம் நூற்றாண்டு) உறுதியேற்க வேண்டும்.

இந்த நூற்றாண்டில், மலையகத் தமிழர்கள் உலகின் ஏனைய சிறுபான்மைத் தேசிய இனங்களைப் போலவே, அரசியல் அதிகாரத்துக்காகவும், வாழ்வாதார உரிமைகளுக்காகவும், சர்வதேசச் சட்டங்களாலும் நியாயத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகளுக்காகவும் போராடுவதற்கான சகல தகுதிகளையும், இயலுமைகளையும் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், தமது வாழ்வாதாரப் பிராந்தியம், தமது அரசியல் அதிகார மையம், தமது பொருளாதாரச் சுதந்திரம், கலாசாரத் தன்னாதிக்கம் ஆகியவற்றுக்காகப் போராடுகிறார்கள். இந்த வகையில், 21 ஆம் நூற்றாண்டில் இம்மக்கள் 'மலையகத் தமிழர்கள்' என்ற இனத்துவ அடையாளத்துடன், பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்களில் ஒரு தவிர்க்க முடியாத பகுதியாக மாறுவார்கள் என்றும்; அரசியல் அதிகார மையங்களிலும், சர்வதேச அமைப்புகளிலும், சர்வதேச சமூகங்களிலும் இம்மக்களின் உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பாக மிக ஆழமான கலந்துரையாடல்களும் போராட்டங்களும் நடைபெறும் என்றும் எதிர்பார்க்கலாம்.

## உசாத்துணை மூலங்கள்


1. Hariprasad Chottopadhyaya, 1979, Indians in Sri Lanka: A Historical Study.
2. Kondapi, C., 1951, Indians Overseas, 1838–1949.
3. Nadesan, S., 1993, A History of the Upcountry Tamil People in Sri Lanka.
4. Rachel Kurian and Kumari Jayawardena, 2018, Changing Identities of the Plantation Community in Ceylon: Challeng ing the Legacies of Slavery, National Politics, Class and Ethnic Discrimination (Research Paper).
5. Dr. M. S. Thangam, 2023, Origin and Position of Plantation Tamils in Sri Lanka.
6. Peeples, Patrick, 2001, The Plantation Tamils of Ceylon.
7. Kodikara, S. U., 1965, IndoCeylon Relations Since Indepen dence.
8. பி.ஏ. காதர், 2023, இலங்கை மலையக தமிழ் மக்களின் மறைக்கப்பட்ட பக்கங்கள்.
9. பி.ஏ. காதர், இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்.
10. சோ. சந்திரசேகரன், 2001, இலங்கை இந்திய வரலாறு.
11. மூ. கந்தையா, 2015, சிதைக்கப்பட்ட மலையக தமிழர்கள்.
12. நேரு – கொத்தலாவல ஒப்பந்தம், 1952.
13. சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம், 1964.
14. காணிச் சீர்திருத்தச் சட்டம், 1971.
15. முதலாவது குடியரசு யாப்பு, 1972.
16. இரண்டாவது குடியரசு யாப்பு, 1977.
17. அரச கரும மொழிகள் சட்டம், 1956.
18. சிறிமா – இந்திரா ஒப்பந்தம், 1974.
19. இலங்கை – இந்தியா ஒப்பந்தம், 1987.
20. குடியுரிமைச் சட்டம், 1948.
21. இந்திய – பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம், 1949.
22. தர்சி வித்தாச்சி, எமர்ஜென்சி 1956.
23. பொன். பிரபாகரன், 2015, புதிய அரசியலமைப்புக்கான ஆலோசனைகள் – புதிய பண்பாட்டு அமைப்பு.

# 1968 - 1983: ஆயுதப் போராட்டத்தை நோக்கி....

**பகுதி 2**

1833 முதல் 1921 வரை நீடித்த ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் முதலாவது காலகட்டத்தில், தமிழர்கள் அரசியல்ரீதியில் 'இலங்கையர்' என்றும், பண்பாட்டுரீதியில் 'தமிழர்' என்றும் அடையாளம் கொண்டிருந்தனர். 1921 ஆகஸ்ட் 15 அன்று சேர்.பொன். அருணாசலம் தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபையைத் தொடங்கியதுடன், இரண்டாவது காலகட்டம் ஆரம்பமானது. இது 1949 டிசம்பரில் தந்தை செல்வா அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கும் வரை நீடித்தது. 1949 முதல் 1968 வரை நீடித்த மூன்றாவது காலகட்டத்தில், வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என வரையறுக்கப்பட்டு, சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1968 இல் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்துடன் தொடங்கி, 2009 இல் ஆயுதப்போர் முடிவடையும் வரை நீடித்த நான்காவது காலகட்டத்தில், தனிநாட்டுக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. 'ஈழத்தமிழர் அரசியல் வரலாறு' எனும் இத்தொடர், இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த முக்கிய நகர்வுகளைத் தொகுத்து வழங்குகிறது; அதன்மூலம், இன்னும் முழுமை அடையாத ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றுக்கு ஓர் அடித்தளம் அமைக்க முயற்சிக்கின்றது

**சி. அ. யோதிலிங்கம்**



சி. அ. யோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார்.
'இலங்கையின் அரசியல் யாப்புகள்', 'இலங்கையின் இனகுழும அரசியல்', 'சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள்', 'இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்', 'இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு', 'அரசறிவியல் ஓர் அறிமுகம்', 'ஒப்பியல் அரசாங்கம்' போன்ற பல நூல்களை எழுதியுள்ள யோதிலிங்கம் பல ஆய்வுக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றார்.

## செல்வநாயகம் பதவி துறப்பும் இடைத்தேர்தலும்

புதிய அரசியல் திட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை நிரூபிப்பதற்காக செல்வநாயகம் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் (1973 இல்) துறந்தார். அரசாங்கத்திடம் தனது கொள்கையை முன்வைத்துப் போட்டியிடும்படி அழைப்பு விடுத்தார். அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி இடைத்தேர்தலைப் பிற்போட்டது. காசி ஆனந்தன் அரசுக்கு விசுவாசமாகச் சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்து தனது மொழிபெயர்ப்பாளர் பதவியை இராஜினாமாச் செய்தார். இதனால் காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன் என்போர் கைது செய்யப்பட்டனர். மே 22 இல் கைது செய்யப்பட்ட பலர் விடுதலை செய்யப்பட்ட போதும், மாணவர் பேரவையைச் சேர்ந்த 42 பேர் விடுதலை செய்யப்படவில்லை.

### பௌத்த சிங்களப் பாடசாலைகள் தொடர்பாகச் சட்டத்தை மீறுதல்

புத்தூர், அச்சுவேலி, அல்வாய், கரவெட்டியில் உருவாக்கப்பட்ட பௌத்த - சிங்களப் பாடசாலைகள், தமிழரசுக்கட்சியின் தொடர்ச்சியான எதிர்ப்பினால் தமிழ்ப் பாடசாலைகளாகவே இயங்கின. 1973 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் அரசு புத்தூர் பாடசாலைக்கு சிங்களத் தலைமை ஆசிரியரையும் உதவி ஆசிரியரையும் அனுப்பி பாலர் வகுப்பில் தமிழ்ப் பிள்ளைகளுக்கு சிங்களத்தில் கல்வி புகட்ட முயற்சித்தது. தமிழர் கூட்டணி அப்பகுதி மக்களின் ஒத்துழைப்போடு அப்பாடசாலையின் அருகில் சட்டத்தை மீறி 1973 ஏப்ரல் 6 ஆம் திகதி சட்ட மறுப்புப் பாடசாலையைத் திறந்தது.

அதன் பொறுப்பாளர்களாக செல்வநாயகம், மு. சிவசிதம்பரம், வி. தர்மலிங்கம், அ. அமிர்தலிங்கம், புத்தூர் ஆனந்தன் என்போர் நியமிக்கப்பட்டனர். கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கதிரவேலுப்பிள்ளை சட்டவிரோதப் பாடசாலை நிறுவப்பட்டதையும் அதன் பொறுப்பாளர்களது விவரங்களையும் கல்வி அமைச்சுக்கு அறிவித்தார். எனினும் அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சிங்களப் பாடசாலைகளில் இரண்டு பிள்ளைகள் இருக்க, ஏனைய பிள்ளைகள் அனைவரும் தமிழ்ப் பாடசாலையில் சேர்ந்தனர்.

### தமிழ் இளைஞர் பேரவையின் தோற்றம் (1973 ஜனவரி 28)

1972 இன் பிற்பகுதியில் 'தமிழ் மாணவர் பேரவை' முற்றாகவே தலைமறைவு இயக்கமாக மாறிய நிலையில் இருந்தது. தமிழர் கூட்டணியும் போராட்டத்தில் அக்கறை இல்லாமல் இருந்தது. பிரான்சிஸ், பத்மநாபா, வரதராஜப் பெருமாள், புஸ்பராஜா போன்ற இளைஞர்கள் தமிழர் கூட்டணியைத் தீவிரமாகப் போராடும்படி மகஜர் தயாரித்து அ. அமிர்தலிங்கத்திடம் ஒப்படைத்தனர்.

தமிழர் கூட்டணி மகஜரைப் பெற்றுக் கொண்டாலும், அதில் அக்கறையில்லாமல் இருந்த நிலையில் அரசியல் உணர்வு பெற்ற இளைஞர்கள் கட்சி அரசியலுக்கு அப்பால் விடுதலையை முன்னெடுக்கக்கூடிய வகையில் ஓர் இளைஞர் இயக்கத்தை உருவாக்க முயற்சி செய்தனர். இம்முயற்சிக்கான முதற்கூட்டம் யாழ் பிரதான வீதியில் உள்ள அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் காரியாலயத்தில் 1973 ஜனவரி 15 ஆம் திகதி நடைபெற்றது.

இம்முயற்சி போதியளவு வெற்றி அளிக்காமையினால், இன்னொரு கூட்டம் 1973 ஜனவரி 28 ஆம் திகதி நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் இளைஞர் பேரவை என்ற அமைப்பு தோற்றம் பெற்றது. தலைவராகவும் அமைப்பாளராகவும் சி. புஸ்பராஜா தெரிவு செய்யப்பட்டார். நிர்வாகக்குழு அங்கத்தவர்களாக பிரான்சிஸ், பத்மநாபா, இ. தவராசா, அ. வரதராஜப்பெருமாள், எம். போல்பிள்ளை என்போர் செயற்பட்டனர். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் அவர்கள் தமது விடுதலைக்குப் போராடுகின்றார்கள் என்ற கோசங்கள் எழுச்சி அடைந்தன. "தமிழன் தன்மானத்துடன் வாழ வேண்டுமாயின் தன்னைத்தானே ஆளுதல் வேண்டும்" என்ற குரல் ஓங்கி ஒலித்தது.

## தமிழ் இளைஞர் பேரவையின் போராட்டங்கள்

#### 1. குடியரசு தினத்தில் ஹர்த்தால்

தமிழ் இளைஞர் பேரவை தொடங்கியவுடன் இலங்கைக் குடியரசின் முதலாவது ஆண்டு நிறைவு தினமான 1973 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி வடக்கு - கிழக்கெங்கும் ஹர்த்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஹர்த்தால் பெரு வெற்றியைக் கொடுத்தது.

#### 2. மௌன ஊர்வலம்

இரண்டாவது போராட்டமாக மௌன ஊர்வலம் நடாத்தப்பட்டது. அரசுக்கு எதிராக வாய்களையும் கைகளையும் கறுப்புத்துணியால் கட்டி இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். 1973 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி இவ் ஊர்வலம் இடம்பெற்றது. மருதனார்மடம் சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் கோட்டை வரை ஊர்வலம் நடத்தப்பட்டது. பின்னர் கோட்டை மைதானத்தில் பொதுக்கூட்டம்

இடம்பெற்றது. தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில் சி. புஸ்பராஜா உரை நிகழ்த்தினார். யாழ் மாநகர மேஜர் அல்பிரட் துரையப்பா ஊர்வலத்தைக் குழப்ப முயற்சித்த போதும் அது தோல்வியடைந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், அ. குமரகுரு, வி. தர்மலிங்கம், மங்கையற்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் ஊர்வலத்தில் பங்கு கொண்டனர். அல்பிரட் துரையப்பாவின் முயற்சிகளைத் தோற்கடிப்பதற்காகவே ஊர்வலத்தில் கலந்து கொள்வதாக அமிர்தலிங்கம் கூறினார்.

**3. கறுப்புக் கொடிப் போராட்டம்**

1973 ஆம் ஆண்டு தை மாதம் 13 ஆம் திகதி தந்தை செல்வா தலைமையில் யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழு தமிழ்ப் பிரதேசங்களுக்கு வரும் அமைச்சர்கள் அனைவருக்கும் கறுப்புக் கொடி காட்டி அவர்களின் வருகையைப் பகிஷ்கரிப்பது எனத் தீர்மானித்தது. ஊர்காவற்றுறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா.பொ. இரத்தினம், இத்தீர்மானத்தைக் கொண்டு வந்தார். முதலாவது கறுப்புக் கொடிப் போராட்டத்தை ஊர்காவற்றுறை தொகுதியிலேயே மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

1973 ஆம் ஆண்டு தை மாதம் 15 ஆம் திகதி தபால் தந்தி அமைச்சர் செல்லையா குமாரசூரியர், வேலணை மகாவித்தியாலயத்திற்கு வருகை தந்தார். அவருக்கு எதிராக கறுப்புக் கொடிப் போராட்டம் நடாத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. கறுப்புக் கொடிப் போராட்டத்திற்காக யாழ் பிரதான வீதியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைச் செயலகத்தில் மக்கள் கூடினர். அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், அ. குமரகுரு, வி. தர்மலிங்கம், மங்கையற்கரசி அமிர்தலிங்கம், சேனாதிராஜா, தவராஜா, போல்பிள்ளை, பத்மநாபா, பிரான்சிஸ், வரதராஜப்பெருமாள், சரவணபவானந்தன், போன்றோரும் வருகை தந்தனர். வல்வெட்டித்துறையில் இருந்து இரண்டு தட்டு வானில் வந்தவர்களும் கலந்து கொண்டனர்.

போராட்டக்காரர்கள் அனைவரும் கோசங்கள் எழுப்பியடி வேலணைக்குச் சென்றனர். அங்கு பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டிருந்தது. குமாரசூரியர் வரும் பாதையை நெருங்க முடியாமல் பொலிசார் வளையம் அமைத்துப் பாதுகாப்புக் கொடுத்தனர். இளைஞர்கள் நிகழ்வு நடைபெற இருந்த வேலணை மகாவித்தியாலய மையத்திற்குள் நுழைந்து கறுப்புக்கொடி காட்ட முயற்சித்த போதும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் அதனைத் தடுத்தனர். இந்நிலையில் வேலணை மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்னால் இருந்த மைதானத்தில் ஒன்றுகூடி கறுப்புக் கொடி காட்டப்பட்டது. குமாரசூரியர் வந்த போது இருட்டாகி விட்டதால் வாகனங்கள் மூலம் வெளிச்சம் காட்டி கறுப்புக் கொடி காட்டப்பட்டது. எதிர்ப்புகள், கோசங்களும் எழுப்பப்பட்டன.

இரண்டாவது கறுப்புக் கொடிப் போராட்டம் அமைச்சர் குமாரசூரியர் மல்லாகத்திற்கு வந்தபோது இடம்பெற்றது. முதல் நாள் இரவு மல்லாகம் சந்தி எங்கும் அமைச்சருக்கு எதிரான சுலோகங்கள் இளைஞர்களால் எழுதப்பட்டன. அமைச்சர் பங்குபற்றவிருந்த நிகழ்ச்சிக்கான மண்டபமும் பெற்றோல் குண்டு வீச்சினால் தாக்கப்பட்டது. அடுத்த நாள் காலை 10 மணிக்கு அமைச்சர் வருகை தந்த போது எதிர்பார்த்ததை விடப் பெருந்திரளான மக்கள் கறுப்புக்கொடிப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

மல்லாகம் சந்திக்கு அருகே காங்கேசன்துறை வீதியில் இருந்த பழையகால வீட்டுடன் கூடிய வளவில் போராட்டக்காரர்கள் ஒன்று திரண்டு கறுப்புக் கொடியைக் காட்டினர். அமைச்சரின் வாகனம் வந்ததும் இளைஞர்கள் அமைச்சரின் வாகனத்திற்கு குறுக்கே நின்று கறுப்புக் கொடி காட்டினர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களும் அதில் இணைந்து கொண்டனர். பொலிசார் தடியடிப் பிரயோகம் நடாத்தி மீண்டும் பழைய வளவுக்குள் போராட்டக்காரர்களைத் தள்ளி விட்டனர். சி. புஸ்பராஜா மதில் மேல் ஏறி நின்று போராட்டத்தில் கலந்து கொண்ட மக்களுக்கு நன்றி கூறினார். இளைஞர்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்குமிடையே முரண்பாடு அதிகரித்தது. மூன்றாவது கறுப்புக் கொடிப் போராட்டம் கைதடிக்கு வருகை தந்த சுகாதார அமைச்சருக்கு காட்டப்பட்டது. அமைதியாக நிகழ்வு நடைபெற இருந்த இடத்திற்கு அருகில் இருந்த வளவில் நின்று காட்டினர். இதனால் பொலிசாருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்குமிடையே வாக்குவாதம் இடம்பெற்றது.

ஐம்பது வரையான இளைஞர்கள் சுகாதார அமைச்சர் நிகழ்வு முடிவடைந்து திரும்பும் போது கைதடி வைத்தியசாலைக்கருகில் அமைச்சரின் வாகனத்திற்குக் குறுக்கே சென்று கறுப்புக்கொடி காட்டினர். கறுப்புக்கொடி காட்டிய இளைஞர்களில் சி. புஸ்பராஜா, காங்கேசன்துறை கமலநாதன், பத்மநாபா, கிருபாகரன், காரைநகர் செல்வம், பூநகரி மரியதாஸ் ஆகியோரைக் கைது செய்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் அடைத்தனர். சாவகச்சேரி பாராளுமன்ற

உறுப்பினர் வி.என். நவரத்தினம் இளைஞர்களை சொந்தப் பிணையில் விடுவித்தார்.

இளைஞர்களுக்கு எதிராக பொலிசார், பொது இடத்தில் கலவரம் செய்தனர், குழப்பம் விளைவித்தனர் என்கின்ற குற்றங்களைச் சுமத்தி சாவகச்சேரி நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள். நீதிமன்றத்தில் சமூகமளித்த அனைத்துச் சட்டத்தரணிகளும் இளைஞர்களுக்காக வாதாட முன்வந்தனர். வி.என். நவரத்தினம், ஆலாலசுந்தரம், அம்பிகைபாகன், அ. குமரகுரு, தம்பிராசா ஆகியோர் இச்சட்டத்தரணிகளுக்குள் அடங்குவர். முதலாம் எதிரியாக சி. புஸ்பராஜாவும், இரண்டாம் எதிரியாக கமலநாதனும், பின்பு ஏனையவர்களும் வரிசையாக நின்றனர்.

நீதிபதி "குற்றவாளியா? சுற்றவாளியா?" எனக் கேட்ட போது இளைஞர்கள் சுற்றவாளி எனப் பதில் அளித்தனர். நீதிபதி யோகநாதன் எச்சரிக்கை செய்து அனைவரையும் விடுதலை செய்தார். இதன் பின்னர் 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் திகதி வீடமைப்பு அமைச்சர் பீற்றர் கெனமனுக்கு எதிராகவும், 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி நீதி அமைச்சர் என்.எம். பெரேராவுக்கு எதிராகவும் கறுப்புக் கொடிப் போராட்டம் இடம்பெற்றது. பரந்தனில் நிதி அமைச்சர் என்.எம். பெரேராவுக்கு எதிராக கறுப்புக் கொடிப் போராட்டம் மேற்கொள்ளப்பட்ட போது, அமிர்தலிங்கம் உட்படப் பலரும் பொலிசாரால் தாக்கப்பட்டதோடு ஐம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

## ஐம்பது நாட்கள் உண்ணாவிரதப் போராட்டம்

### 1. வடக்கில் போராட்டம்

தமிழ் மாணவர் பேரவையின் தலைமைக் குழுவில் இருந்த சத்தியசீலன் அமைப்பு வேலையின் பொருட்டு மட்டக்களப்பு சென்றபோது 1973 ஆம் ஆண்டு மாசி மாதம் 22 ஆம் திகதி இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து தமிழ் மாணவர் பேரவையைச் சேர்ந்த 42 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். முத்துக்குமாரசுவாமி, வண்ணை நித்தியானந்தன், மாவை சேனாதிராஜா, குருகுலசிங்கம், சபாலிங்கம் சூரியகுமாரன், அப்பு போன்றோரும் இதில் அடங்குவர்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் ரயில் கடவையுடன் சைக்கிள் கடை வைத்திருந்தவர் தான் அப்பு ஆவார். கடைக்குப் பின்னால் பழைய காலத்து பெரியதொரு வீடு இருந்தது. இச்சைக்கிள் கடையும், வயோதிபப் பெண்ணுக்கு சொந்தமான பழைய வீடும், தமிழ் மாணவர் பேரவையின் செயற்பாட்டு மையமாக இருந்தது. C.T.B. மணியத்தின் வீடு இன்னோர் மையமாக விளங்கியது. கைது செய்யப்பட்ட தமிழ் மாணவர் பேரவையைச் சேர்ந்த இளைஞர்கள் மிக மோசமாகச் சித்திரவதை செய்யப்பட்டனர்.

பஸ்தியாம்பிள்ளை, பேரம்பலம் செல்வநாயகம், பண்டா போன்ற இரகசியப் பொலிசார் சித்திரவதைகளில் ஈடுபட்டனர். வண்ணை நித்தியானந்தன் சிறையில் இருந்து கடிதம் மூலம் தங்களின் விடுதலைக்காகப் போராட்டம் நடாத்தும்படி தமிழ் இளைஞர் பேரவையை வேண்டினார். வரதராஜப் பெருமாள் ஓர் இடத்தில் இரண்டு நாட்கள் வீதம், 100 நாள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்தலாம் என்ற யோசனையை முன்வைத்தார். உண்ணாவிரதப் போராட்டம் பற்றி அமிர்தலிங்கத்திடம் தெரிவித்த போது ஒரு நாள் மட்டும் ஐம்பது இடங்களில் ஐம்பது நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்தலாம் என்ற யோசனையை முன்வைத்தார். இந்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு, தமிழர் விடுதலைக் கூட்டணி முழு ஒத்துழைப்புத் தருவதாகவும் அமிர்தலிங்கம் உறுதியளித்தார். இப்போராட்டம் யாழ்ப்பாணத்தில் தொடங்கி கிழக்கு மாகாணம், மலையகம் என்பவற்றிலும் நடாத்தப்பட்டு, யாழ்ப்பாணத்தில் முடிப்பதாகத் திட்டமிடப்பட்டது. பிரதான கோரிக்கையாக "சிறையில் உள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய் அல்லது நீதிமன்றத்திற்கு கொண்டுவா" என்பதை முன்வைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. துண்டுப்பிரசுரப் பிரசாரமும் மேற்கொள்ளப்பட்டது.

முதல்நாள் உண்ணாவிரதப் போராட்டம் 1973 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள், தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த இளைஞர்கள், சிறையில் இருந்த இளைஞர்களின் பெற்றோர், உறவினர்கள், பொது மக்கள் என ஆயிரக்கணக்கில் திரண்டனர். விடுதலைக் கீதங்களும் பாடப்பட்டன. தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்களும், தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர்களும் உரையாற்றினர். முதல் நாள் போராட்டத்தை அ. அமிர்தலிங்கம் பழரசம் கொடுத்து முடித்து வைத்தார். இரண்டாம் நாள் போராட்டம் குருநகர் வாசிகசாலை முன்றலில் நடாத்தப்பட்டது. குருநகரைச் சேர்ந்த ரஞ்சித் எட்வின் ராசா, இதயன் போன்றோர் ஏற்பாடுகளைச் செய்தனர்.

### 2. கிழக்கில் உண்ணாவிரதப் போராட்டம்

கிழக்கில், குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஒழுங்கு செய்வதற்காக புஸ்பராஜாவும், பிரான்சிசும் மட்டக்களப்புக்குப் பயணமாகினர். மட்டக்களப்பில் செனட்டர் மாணிக்கத்தின் மகளும் சாம்

தம்பிமுத்துவின் துணைவியாரான கலா தம்பிமுத்துவும் அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கினர். புஸ்பராஜாவும், பிரான்சிசும் தனது வீட்டில் தங்கி நின்று பணிகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளைச் செய்துகொடுத்தனர். கோட்டைக்கல்லாறு நடேசானந்தன் தானாகவே முன்வந்து முழுநேரமாகப் பணியாற்றினார்.

அமிர்தலிங்கமும், மங்கையற்கரசியும் மட்டக்களப்பு வந்து உண்ணாவிரதப் போராட்டங்களில் கலந்துகொண்டனர். புஸ்பராஜாவும், பிரான்சிசும் அறப்போர் வீரர் அரியநாயகம், தம்பிலுவில் சித்தாத்துரை ஐயா ஆகியோரிடம் சென்று ஆசீர்வாதம் பெற்று உண்ணாவிரதப் பணிகளை மேற்கொண்டனர். திருக்கோவில் தவராஜா, பாண்டிருப்பு வேல்முருகு மாஸ்டர், மட்டக்களப்பு சிவஜெயம் (காசி ஆனந்தனின் சகோதரர்) ஆகியோரும் பணிகளில் ஈடுபட்டனர். மட்டக்களப்பு மாநகரசபை முன்றல், செல்வநாயகபுரம், திருக்கோவில், பாண்டிருப்பு எனப் பல இடங்களில் உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றது.

### 3. மலையகத்தில் உண்ணாவிரதப் போரட்டம்

மட்டக்களப்பிற்கு பத்மநாபாவையும் சரவணபவானந்தனையும் அழைத்து அவர்களிடம் போராட்டப் பணிகளை ஒப்படைத்துவிட்டு புஸ்பராஜாவும் பிரான்சிசும் மலையகத்திற்குப் பயணமாகினர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செல்லச்சாமியைக் கொழும்பில் சந்தித்தனர். அவர் ஒத்துழைப்புத் தருவதாகக் கூறினார். யாழ்ப்பாணத்தை பூர்விகமாகக் கொண்ட பிராமணக் குடும்பம் இருவருக்கும் தங்குமிட வசதிகளைச் செய்து கொடுத்தது.

மலையகச் செயற்பாட்டாளரான கெங்கரத்தினம் மலையகத்தின் பல பகுதிகளுக்கும் இருவரையும் அழைத்துச் சென்று ஆர்வமுள்ள இளைஞர்களைச் சந்திக்க வைத்தார். அங்கு வடபகுதி இளைஞர்களும் ஒத்துழைப்புகளை வழங்கினர். தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் ஐயாத்துரை, சங்கத்தின் முக்கியஸ்தர் பெருமாள் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஜேசுதாசுடன் கலந்துரையாடினர். அவர் முழு ஒத்துழைப்புத் தருவதாகக் கூறியதோடு தனது மகளையும் உதவிக்கு அனுப்பினார். ஹற்றன் மாணிக்கப் பிள்ளையார் கோவில், தலவாக்கலை கதிரேசன் கோவில், நாவலப்பிட்டியில் ஒரு முன்றல், டிக்கோயாவில் ஒரு கோவில் என நான்கு இடங்களில் உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றது.

ஹற்றன் மாணிக்கப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். தலவாக்கலை கதிரேசன் கோவில் ஆலயத்தில் உண்ணாவிரதம் இடம்பெற்ற போது அங்கு வந்த தலவாக்கலைப் பொலிஸ் அதிகாரி ஒரு மணித்தியாலத்திற்குள் அனைவரும் கலைந்துவிட வேண்டும் என எச்சரிக்கை செய்தார். பிற்பகல் ஒரு மணிக்குப் பிறகு மீண்டும் வருகை தந்த பொலிஸ் அதிகாரி ஏன் இன்னமும் கலைந்துபோகவில்லை எனக் கேட்டார். பொலிசார் மிக மோசமாக புஸ்பராஜாவைத் தாக்கினர். புஸ்பராஜா முதலில் பொலிசாரிடம் அடிவாங்கியது இங்கு தான். பின்னர் பல தடவை சிறையில் சித்திரவதைக்குள்ளாகினார். இதனால் உண்ணாவிரப் போராட்டம் குழப்பமடைந்தது. கெஸ்கரத்தினம், கணகோபாலச்சாரியார், புஸ்பராஜா ஆகியோர் இணைந்து மஸ்கெலியா பாராளுமன்ற உறுப்பினர் M.D. சில்வாவிடம் நடந்தவற்றைக் கூறினர். அவர் பொலிஸ் அதிகாரியுடன் பேசியதோடு, தன்னிடம் முறையிட்டவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பிவைத்தார்.

### 4. இறுதிநாள் போராட்டம்

ஐம்பது நாள் உண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதிநாள் போராட்டம் மீண்டும் யாழ்ப்பாணம் முனியப்பர் கோவில் முன்னால் இடம்பெற்றது. இதில் ஏரும், வாளும் கொண்ட தமிழ் இளைஞர் பேரவையின் கொடியை அறிமுகப்படுத்துவதாக தீர்மானித்தனர். கொடியின் அரைப்பக்கம் மஞ்சளாகவும், அரைப்பக்கம் சிவப்பாகவும், ஏரும் வாளும் கொண்டதாகவும் அமைய வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. யாழ் பொலிஸ் அதிகாரி சந்திரசேகரா இக்கொடிக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த பலர் பின்வாங்கினர்.

பிரான்சிஸ், பத்மநாபா, வரதராஜப் பெருமாள் என்போர் கொடி ஏற்றுவதில் உறுதியாக நின்றனர். எனினும் இறுதியில் தமிழ் இளைஞர் பேரவைக்குள் பிளவு ஏற்படக்கூடாது என்பதற்காக அதைத் தவிர்த்தனர். உண்ணாவிரதப் போராட்டப் பந்தலை ரஞ்சித் எட்வின், கிறிஸ்ரியன் இதயன் ஆகியோர் திறம்பட அமைத்தனர்.

ஆயிரக்கணக்கில் மக்களும் போராட்டத்தில் பங்குபற்றினர். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் வருகை தந்தனர். பொலிசார் ஏராளமாகக் குவிக்கப்பட்டனர். பொலிஸ் அதிகாரி சந்திரசேகரா ஜீப்பில் கால் ஊன்றியபடி எல்லாவற்றையும் கவனித்தபடி நின்றார். ஏரும் வாளுமற்ற, தனிச் சிவப்பும் மஞ்சளும் கொண்ட தமிழ் இளைஞர் பேரவையின் கொடியை அமிர்தலிங்கம் ஏற்றிவைத்தார். இறுதியில் பழரசம் கொடுத்து உண்ணாவிரதப் போராட்டம் முடித்துவைக்கப்பட்டது.

*தமிழரசுக் கட்சியின் 12 ஆவது மாநில மாநாடு (1973, செப். 7,8,9 - மல்லாகம்)*

ஏனைய கட்சிகளுடன் தமிழர் கூட்டணியின் ஓர் அங்கமாக த.இ.க. செயற்படுவதை மாநாடு அங்கீகரித்தது. தோழமைக் கட்சிகளின் தலைவர்களும் உரையாற்றினர். தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை என்ற அடிப்படைத் தத்துவத்தின்படி தமது பாரம்பரியமான தாயகத்தில் இலங்கைத் தமிழ் தேசிய இனம் தன்னாட்சி காண்பதே தமிழருக்குள்ள ஒரே வழி எனத் தீர்மானிக்கப்பட்டது. தமிழ்த்தேசிய இனத்தின் நியாயபூர்வமான கோரிக்கைக்கு உலக நாடுகளின் அனுதாபத்தையும் ஆதரவினையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

### முத்திரைச் சட்ட மீறலும், உண்ணா நோன்பும்

ஒரு வருடமாக காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடாத்தத் தவறிய அரசின் செயலுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் 1973 ஒக்டோபர் 2 ஆம் திகதி மாவிட்டபுரத்தில் ஒரு நாள் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. அன்றைய தினம் நாட்டின் முத்திரைச் சட்டத்தினை மீறி, வெட்டிச் சிதைக்கப்பட்ட முத்திரைகளை ஒட்டி பிரதமருக்கு நூற்றுக்கணக்கான கடிதங்களை மக்கள் அனுப்பினர். ஆனால் அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.




Image Source - ta.wikipedia.org

### நான்காவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடும் தமிழர் படுகொலையும்

1974 தை முதல் வாரத்தில் நான்காவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அரசாங்கம் பல தடைகளைச் செய்ய முயன்றும், யாழ் மாநகர மேயர் அல்பிரட் துரையப்பா பல தடைகளைச் செய்ய முயன்றும், மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது. மாநாட்டு இறுதி நாளன்று 50,000க்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்த வீரசிங்க மண்டபம் முன்றலில் பொலிஸ் அதிபர் சந்திரசேகரா தலைமையில் மக்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது. மின்சாரம் தாக்கி 9 பேர் பலியாகினர். இதற்கு முன்னர் 7 ஆம் நாள் அலங்கார ஊர்திப் பவனியின் போது பொலிஸாரின் எதிர்ப்பை மீறி சிவகுமாரன் பண்டார வன்னியனாக அலங்கரித்து ஊர்வலமாக வந்தார். சிவகுமாரன் சபதமெடுத்து வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டார்.

### சிவகுமாரனின் வன்முறை நடவடிக்கைகள் அதிகரித்தல்

தமிழாராய்ச்சி மாநாட்டுக் கொலைகள் சிவகுமாரனையும் அவனது நண்பர்கள் சிலரையும் ஆயுத நடவடிக்கைகளை நோக்கி வெகுவாக ஊக்குவித்தன. பிரான்சிஸ், ஜீவராசா, மகேந்திரன் ஆகியோர் சிவகுமாரனின் நண்பர்களில் முக்கியமானவர்கள். துரோகிகளைப் பழிவாங்குதல் என்ற அடிப்படையில் முதலில் குறி வைக்கப்பட்டவர்கள் யாழ் மேயர் அல்பிரட் துரையப்பா, யாழ் பொலிஸ் அதிகாரி சந்திரசேகரா ஆகியோராவர். சந்திரசேகராவை கொலை செய்யும் முயற்சி நல்லூர் கைலாசப் பிள்ளையார் கோவிலடியில் வைத்தும், தெல்லிப்பளைச் சந்தியில் வைத்தும், இருமுறை முயற்சிக்கப்பட்டும் தோல்வியில் முடிந்தது. அல்பிரட் துரையப்பாவைக் கொலை செய்யும் முயற்சியும் பல தடவை முயன்றும் தோல்வியில் முடிவடைந்தது. சிவகுமாரன் படையினரால் பலமாகத் தேடப்பட்டார். 'அவரைப் பற்றிய தகவல் தருபவர்களுக்கு 10,000 ரூபா சன்மானம்' என அரசு அறிவித்தது.

சிறிதுகாலம் தமிழ்நாட்டில் தங்கியிருப்பது என முடிவு செய்து, கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளையிடம் 500,000 ரூபா பணத்தை சிவகுமாரன் கேட்டபோது அவர் மறுத்தார். சிவகுமாரன் குழுவினர் கோப்பாய் வங்கியைக் கொள்ளையிட முயற்சித்துத் தோல்வியடைந்தனர். சிவகுமாரன் கைது செய்யப்படும் போது சயனைட் அருந்தி 1974 ஜூலை 05 இல் மரணமடைந்தார். சிவகுமாரனின் மரணச்சடங்கில் 10,000க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். ஆயுதப் போராட்டத்தில் முதலாவதாக உயிர் துறந்த போராளியாக சிவகுமாரன் இருந்தார்.

### 'தமிழ்ப் புதிய புலிகள்' தோற்றம்

1974 இன் பிற்பகுதியில் தமிழ்ப் புதிய புலிகள் அமைப்பு தோற்றம் பெற்றது. செட்டி எனப்படும் தனபாலசிங்கம், பிரபாகரன் சிவராசா, ரமேஸ் இன்பம், கண்ணாடி பத்மநாதன், பற்குணராசா, கலாபதி, கிருபாகரன் ஆகியோர் அமைப்பின் முக்கிய நபர்களாக இருந்தனர். தெல்லிப்பளைக் கூட்டுறவுச் சங்கத்தில் 97,000 ரூபா கொள்ளை (1974), அல்பிரட் துரையப்பா கொலை



(1975 யூலை 27), புத்தூர் வங்கியில் ஏழு லட்சம் ரூபா கொள்ளை (1976 மார்ச் 5) போன்ற நடவடிக்கைகளை புதிய தமிழ்ப்புலிகள் இயக்கம் மேற்கொண்டது. ஆரம்பத்தில் தலைவராக இருந்த செட்டி, பின்னர் அரசுக்குத் தகவல் கொடுப்பவராக மாறியதும், பிரபாகரன் தலைமைப் பொறுப்பை ஏற்றார். கண்ணாடி பத்மநாதன் செட்டியால் கொலை செய்யப்பட்டார். பற்குணராசா (சரவணன்) ஈரோஸ் குழுவில் சேர்ந்ததால் பிரபாகரனால் கொலை செய்யப்பட்டார்.

### பிரதமரின் யாழ் வருகையும் எதிர்ப்புப் போராட்டமும்

1974 நவம்பரில் யாழ் பல்கலைக்கழக வளாகத்தைத் திறப்பதற்காக பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க முதன்முதலாக யாழப்பாணம் வந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணி, அவர் வரும் நாளை பூரண துக்க தினமாக அனுஷ்டித்தது. இதன் அடிப்படையில் குடாநாடு முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் இளைஞர்கள் சிறையில் வாடுவதை எதிர்த்து யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் கோவிலில் பெண்கள் உண்ணாவிரதம் இருந்தனர். தமிழ் இளைஞர் பேரவை அ. வரதராஜப் பெருமாள் தலைமையில் திருநெல்வேலி விவசாயப் பாடசாலையிலிருந்து கண்டன ஊர்வலம் நடாத்த முயற்சிக்கப்பட்டது. ஊர்வலம் தொடர்பாக அ. அமிர்தலிங்கத்திற்கும், அ. வரதராஜப் பெருமாளுக்கும் இடையில் வாய்த்தர்க்கமும் இடம்பெற்றது.

### காங்கேசன்துறை இடைத்தேர்தல் (1975)

செல்வநாயகம் தேர்தலில் அமோக வெற்றி பெற்றார். 1970 தேர்தலை விட 3 மடங்கு வாக்குகளைப் பெற்றார். தமிழ் மக்கள் தங்களது ஒன்றுபட்ட எதிர்ப்புணர்வை தேர்தலினூடாக வெளிப்படுத்தினர்.

### தமிழ் இளைஞர் பேரவை பிளவுபடுதல்

தமிழ் இளைஞர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து விலகி தனித்துவமான அமைப்பாக வளர்வதை தமிழர் கூட்டணியினர் விரும்பவில்லை. இதனால் எப்படியாவது அதனைத் தமது கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட இளைஞர் அமைப்பாக மாற்றுவதற்கு முயன்றனர். இம்முயற்சிக்கு அப்போதிருந்த இளைஞர் பேரவையின் தலைமை ஒத்துவராது போகவே, அதனைப் பிளவுபடுத்தி புதிய தலைமுறையை உருவாக்க முயற்சி செய்தனர். யோகேஸ்வரன் தமது இல்லத்தில் கூட்டம் நடத்தி, தமிழ் இளைஞர் பேரவைக்கு அடுத்த அணி உறுப்பினர்களையும் இணைத்து, 1975 ஜூலையில் புதிய தலைமையைத் தேர்வு செய்தார். இப்புதிய தலைமையின்படி காசி ஆனந்தன் இளைஞர் பேரவையின் தலைவராகவும் மாவை சேனாதிராஜா செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். சந்ததியார் இளைஞர் பேரவையின் அமைப்பாளராக்கப்பட்டார். இறைகுமாரன், உமைகுமாரன், உமாமகேஸ்வரன் என்போர் முக்கிய உறுப்பினராக்கப்பட்டனர். முன்னைய தலைமை தாங்கள் தான் உண்மையான இளைஞர் பேரவை என்பதை நிலைநிறுத்த முன்வரவில்லை. அவர்கள், எங்களுக்குப் பெயரல்ல முக்கியம், தமிழ் மக்களின் விடுதலை தான் முக்கியம் என்றும், கூட்டணியின் சூழ்ச்சிக்குப் பலியாகி இளைஞர்களுடன் மோத நாம் விரும்பவில்லை என்றும் கூறி இளைஞர் பேரவையை விட்டு வெளியேறினர். புதிய அமைப்பை உருவாக்க முயற்சி செய்தனர்.

### தமிழீழ விடுதலை இயக்கம் தோற்றம் பெறல் (1975 யூலை 14)

தமிழ் இளைஞர் பேரவையிலிருந்து பிரிந்து சென்ற முன்னைய தலைமையைச் சேர்ந்த தலைவர்கள் புதிய இளைஞர் அமைப்பை உருவாக்குவதற்காக, 1975 யூலை 14 ஆம் திகதியில் ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் ஒன்று கூடினர்.

'தமிழ் ஈழ விடுதலை இயக்கம்' என்ற பெயரில் புதிய அமைப்பை உருவாக்கினர். முத்துக்குமாரசுவாமி, தங்க மகேந்திரன், சந்திரமோகன், புஸ்பராஜா, வரதராஜப் பெருமாள், ஆகியோரைக் கொண்ட மத்திய குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. கோவை நந்தன், பிரான்சிஸ், மன்னார் கெமிலஸ், கென்ஸ் மோகன், அங்கயற்கண்ணி ஆகியோர் முக்கிய உறுப்பினர்களாக இருந்தனர். தமிழ் ஈழமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கான இறுதியான தீர்வு என கொள்கைப் பிரகடனம் ஒன்றையும் வெளியிட்டனர்.

1975 யூலை 27 ஆம் திகதி அல்பிரட் துரையப்பா கொலை செய்யப்பட்டதும், அரசாங்கம் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனைத்து இளைஞர்களையும் கைது செய்தது. தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 15

நாட்களுக்குள்ளேயே யாழ்ப்பாணத்தில் இருந்த மத்திய குழுவைச் சேர்ந்த புஸ்பராஜா, முத்துக்குமாரசுவாமி, வரதராஜப் பெருமாள் என்போர் கைது செய்யப்பட்டனர். தங்க மகேந்திரன் திருகோணமலையிலும் சந்திரமோகன் கொழும்பிலும் இருந்தமையினால் கைது செய்யப்படாமல் தப்பி இருந்தனர். அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் வந்து அமைப்பு வேலைகளில் மற்றவர்களையும் இணைத்து ஈடுபட்டனர்.

'எரிமலை' என்ற பெயரில் பத்திரிகை ஒன்றை வெளியிட்டு அதில் இலங்கை, தமிழ் ஈழம், சிறிலங்கா என்ற இரு நாடுகளாக உள்ளது என்பதைத் தெளிவுபடுத்தினர். சங்கானை அம்மாவினால் தலைமைச் செயலகம் திறந்து வைக்கப்பட்டது. செயலகம் செயற்படத் தொடங்கி சிறிது காலத்திலேயே செயலகத்தின் பெயர்ப்பலகைகள், தளபாடங்கள், என்பன தமிழர் கூட்டணியினரால் அடித்து நொருக்கப்பட்டது. மத்திய குழு உறுப்பினர்களான தர்மமகேந்திரன் சந்திரமோகன் என்போரும் தாக்குதலுக்கு உள்ளாகினர். அமைப்பின் அரசியல் ரீதியான செயற்பாட்டின் முக்கிய நபராக தொழிற்பட்ட பிரான்சிஸ் கைது செய்யப்பட்டார்.

அமைப்பு அரசியல் ரீதியான செயற்பாட்டைக் குறைத்து ஆயுத இயக்கத்தைக் கட்டி எழுப்ப முயற்சி செய்தது. அதன் ஒரு கட்டமாக 1976 மே மாதத்தில் புலோலி வங்கிக் கொள்ளையில் ஈடுபட்டது. அமைப்பு தேக்கத்திற்கு உள்ளாகியது. 1977 பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக அமைப்புகளுக்குள் முரண்பாடு தோன்றியது. ஒருசாரார் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரிக்க முற்பட, மறுசாரார் எதிர்த்தனர்.

தேர்தலில் முத்துக்குமாரசுவாமி, புஸ்பராஜா, கோப்பாய் நந்தன் ஆகியோர் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாகப் பிரசாரம் செய்ததை வரதராஜப்பெருமாள், பிரான்சிஸ் சந்திரமோகன் ஆகியோர் எதிர்த்தனர். தேர்தலின் பின்னர் அமைப்பு முற்றாகவே சிதைவடைந்தது. பின்னர் இப்பெயரை, குட்டிமணி குழுவினர், முத்துக்குமாரசுவாமி அனுமதியுடன் தாங்கள் பயன்படுத்தினர்.

### குட்டிமணி குழுவினர்

மாணவர் பேரவை வன்முறைச் செயல்களில் ஈடுபட்ட காலத்திலிருந்தே அதில் கடமையாற்றிய சிலர் ஓர் ஆயுதக்குழுவாகச் செயற்பட்டனர். குட்டிமணி, தங்கத்துரை, சிறீ. சபாரட்ணம், சின்னச் சோதி, பெரிய சோதி, ஒபரேஜ் தேவன் ஆகியோர் அதில் முக்கிய அங்கத்தவர்களாக இருந்தனர். ஆரம்பத்தில் பிரபாகரன் அக்குழுவினரோடு தொடர்புகளை வைத்துக் கொண்டாலும் பின்னர் அதனை முறித்துக்கொண்டு 'புதிய தமிழ்ப் புலிகள்' அமைப்பை உருவாக்கினார். 1976 இன் ஆரம்பத்தில் இருந்து தமது வன்முறை நடவடிக்கையை அதிகரித்தார். நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் அருளம்பலம் கொலை முயற்சி, சி. வினோதன் கொலை முயற்சி, அருளம்பலத்தின் செயலாளர் தங்கராசா கொலை, சி.ஐ.டி இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கெலை என்பவற்றை மேற்கொண்டார்.

### 'புதிய தமிழ்ப் புலிகள்' இயக்கம் 'தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்' எனப் பெயர் மாற்றம் பெறல்

1976 மே 5 ஆம் திகதி புதிய தமிழ்ப் புலிகள் அமைப்பு தனது பெயரை 'தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்' எனப் பெயர் மாற்றம் செய்தது. அமைப்புக்குப் பிரபாகரன், உமாமகேஸ்வரன் உட்பட ஐந்து பேரைக் கொண்ட மத்திய குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. உமாமகேஸ்வரன் அமைப்பின் பொதுச் செயலாளராகச் செயற்பட்டார்.

### தமிழர் கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாடும் தமிழ் ஈழக் கோரிக்கையும்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாடு 1976 மே 14 இல் வட்டுக்கோட்டை பண்ணாகத்தில் நடைபெற்றது. அம்மாநாட்டில் தமிழர் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் மாற்றம் பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் முப்பெரும் தலைவர்களாக எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜி.ஜி. பொன்னம்பலம், எஸ். தொண்டமான் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

அ. அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். தமிழ் ஈழத்தை அமைப்பது என்ற தீர்மானம் முதன்முதலாக நிறைவேற்றப்பட்டது. "ஒவ்வொரு நாட்டுக்குமுள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற சோசலிசத் தமிழ் ஈழம் அமைக்கப்படும்" என அத்தீர்மானம் கூறியது.

தமிழ் ஈழம் எனப்படுவது தற்போதைய வடக்கு - கிழக்கு மாகாணத்தையும் புத்தளம் மாவட்டத்தின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியதாக இருக்கும் எனவும் கூறப்பட்டது. தமிழ் ஈழப் பிரதேசத்தில் வாழும் அனைவரும் தமிழ் ஈழத்தின் பிரஜைகளாக அடங்குவர் எனவும், இலங்கையில் எப்பகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்களும், இலங்கை மூதாதையர்களைக் கொண்ட உலகில் எப்பகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்களும் ஈழத்தின்

பிரஜாவுரிமையைக் கோரினால் வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது. நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மலையக மக்களின் அரசியல் வேறானது எனக்கூறி தொண்டமான் தலைவர் பதவியிலிருந்து விலகினார்.

### ‘மனிதன்’ இயக்கம் தோற்றம் பெறல்

1975 இன் நடுப்பகுதியைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக மாணவர்களான அருட்திரு. ஜெயசீலன் அடிகள், ஜெயராஜா, விமலதாசன், முன்னர் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் இருந்த பால நடராஜ ஐயர், ஜெகநாதன் என்போரிடையே அரசியல், சமூக, பொருளாதார விடுதலையை மையப்படுத்திய அமைப்பின் அவசியம் உணரப்பட்டு, ‘மனிதன் இயக்கம்’ தோற்றம் பெற்றது. ‘மனிதன்’ என்ற பெயரில் மாதாந்தப் பத்திரிகை ஒன்றையும் நடாத்த முன்வந்தனர். அதில் தமிழ் ஈழத்தின் அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்கு முன்னுரிமை கொடுத்தனர்.

இவர்கள், தமிழ் ஈழ விடுதலை முன்னணி இயக்கம் முன்வைத்த அரசியலின் தொடர்ச்சியாகச் செயற்பட்டனர். ‘எரிமலை’ பத்திரிகை முன்வைத்த கருத்துகளின் தொடர்ச்சியையே ‘மனிதன்’ பத்திரிகையும் பேணியது. இலங்கைத்தீவு, சிறிலங்கா, தமிழ் ஈழம் என்ற இரு தேசங்களைக் கொண்டது என்ற கருத்து இதனூடாக வளர்ச்சி பெற்றது. பல்கலைக்கழக தமிழ் விழாவில் தமிழ் ஈழத்தின் பொருளாதாரத்தில் தமிழ் ஈழம் தன்னிறைவாக இருக்கலாம் என்பதை நிரூபித்தனர். பொருளாதாரப் பலத்தினை நில வளம், நீர் வளம், பனை வளம், கைத்தொழில் வளம், மனித வளம் எனப் பாகுபடுத்தி விளக்கம் கொடுத்தனர்.

தமிழ் ஈழத்தில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் சிறிலங்காவிலிருந்து வருமாயின் அதனைப் பகிஷ்கரிக்க வேண்டும் எனப் பிரசாரம் செய்தனர். தமிழர் விடுதலை இயக்கம் ஆரம்பித்த வகுப்பு வடிவப் பிரசாரத்தை தொடர்ந்து பேணினர்.

தமிழ் ஈழ விடுதலைக் கூட்டணியையும், பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளையும் தேசிய விடுதலைக் கண்ணோட்டத்திலிருந்து விமர்சித்தனர். தேர்தலுக்கு எதிரான கருத்துகளைத் தொடர்ச்சியாக முன்வைத்தனர். 1977 தேர்தலை தமிழர் விடுதலைக் கூட்டணி “தமிழ் ஈழத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பு” எனக் குறிப்பிட்ட போது, “நெருப்பணைக்க வாக்கெடுப்பா” எனப் பிரசாரம் செய்தனர். அகதிகள் குடியேற்றம், பின்தங்கிய மாவட்டங்களில் கல்விப்பணிகள் என்பவற்றை மேற்கொண்டனர். காலப்போக்கில் இதன் போக்கு ஒரு சீர்திருத்தப் போக்காக இருந்தமையால், இதில் இருந்த அரசியல் உணர்வு பெற்றவர்கள் ஈரோஸ் இயக்கத்திலும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியிலும் இணைந்து கொண்டனர். 1979 இல் மோர்ஜ் இயக்கத்துடன் இணைந்து தொழிற்பட்டனர். 1983 இல் இராணுவத்தினரால் சுடப்பட்டு விமலதாசன் மரணமடைந்ததுடன் ‘மனிதன்’ பத்திரிகை நின்றது. அத்தோடு அமைப்பும் செயலிழந்தது.

### ‘ஈழப்புரட்சி அமைப்பு’ தோற்றம் பெறல்

1975 இன் பிற்பகுதியில் ‘தமிழ் ஈழ விடுதலை (ஈரோஸ்) இயக்கம்’ சிதைந்து போன காலகட்டத்தில் அதில் இருந்த சிலரிடமும், வெளியே இருந்த சிலரிடமும் புதிய இயக்கம் பற்றிய சிந்தனை வலுப்பெற்றது. இலண்டனில் இருந்து வந்த இரட்ண சபாபதி (பெர்மிங்காம் பல்கலைக்கழகப் பட்டதாரி) இதில் முதன்மையானவராக இருந்தார். இவர் யாழ்ப்பாணத்தில் மேற்கூறிய இளைஞர்களைச் சந்தித்து மார்க்சிய வழிகாட்டலில் இயக்கத்தின் அவசியம் பற்றி எடுத்துரைத்தார்.

மலையகத்தையும் இணைத்த ஈழப்புரட்சி என்ற கருத்தாக்கத்தை முன்வைத்து அமைப்பை உருவாக்க முயற்சி செய்தார். ஒரு புரட்சிகரக் கட்சியை உருவாக்கும் வரை அதன் அமைப்பாளர்களாக இருப்போம் என்ற வகையிலே ‘ஈழப்புரட்சி அமைப்பாளர்கள்’ என்ற பெயர் இடப்பட்டது. ஏற்கனவே தமிழீழ விடுதலை இயக்கத்தில் செயற்பட்ட பிரான்சிஸ், பாலகுமார், பால நடராஜ ஐயர் ஆகியோர் இதில் இணைந்து கொண்டனர். மலையக மக்களே ஈழத்தின் புரட்சிகரமான வர்க்கம், அவர்களே புரட்சியின் தலைமைச் சக்தி என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. தமிழ் ஈழ விடுதலை இயக்கம் முன்வைத்த அரசியலின் தொடர்ச்சியாக ‘ஈரோஸ்’ இயக்கம் அமைந்தது. வவுனியா கண்ணாட்டியில் அருளரின் பண்ணையில் முகாம் அமைத்து அகதிகள் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு, பயிற்சி பெறப்பட்டது.

### வெளிநாட்டில் முதல் ஆயுதப் பயிற்சி

ஈரோஸ் இயக்கத்தின் ஸ்தாபகரான இரட்ண சபாபதியின் முயற்சியினால், பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் ஒன்றான ‘அல்பட்டா’வினால் இராணுவப் பயிற்சிக்கு உதவி கிடைத்தது. இதன்படி லெபனானில் பத்மநாபா, சுரேஸ் பிறேமச்சந்திரன், விச்சுவேஸ்வரன் என்போர் பயிற்சி பெற்றனர்.

(தொடரும்)

# இலங்கையை ஆக்கிரமித்த இந்தியாவும் உலகப் பேரரசுகளும்

இனப்படுகொலை என்பது ஏதோ ஒரு நாளில் நிகழ்ந்துவிடும் தன்னியல்பான நடவடிக்கை அல்ல. அது ஓர் ஒடுக்கும் சமூகம் இன்னொரு சமூகத்தின் மீது நீண்டகால அளவில் படிப்படியாகச் செயற்படுத்தும் பல்வேறு விதமான ஒடுக்குமுறைகளின் இறுதி விளைவு. எனவேதான் அதனைக் ‘கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை’ என அழைக்கிறோம். இனப்படுகொலை நடைபெறும் பல்லினங்களைக் கொண்ட ஒரு நாட்டில் அரசற்ற தேசிய இனங்கள் எல்லாம் விடுதலை அடையலாம் என்றில்லை. ஆனால் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு, வெற்றி பெறுவதற்கான கடினமான பாதையாவது உண்டு. ஈழத்தமிழர் சார்ந்து காணப்படும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை வடிவம் மிகவும் வலுவானது. ஈழத்தமிழர் சார்ந்த அகத்தேசிய நிலை, உள்நாட்டு நிலை, அண்டை நாட்டு நிலை, அயல் நாடுகள் மற்றும் உலக நாடுகள் சார்ந்த நிலை, புவியியல் – வரலாற்று நிலை என்பனவற்றால் அது வலுவாக இறுக்கிக் கட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் அதனை விருப்பு – வெறுப்பிற்கு அப்பால், துல்லியமாக அளவீடு செய்யும் எத்தனமாக ‘இலங்கையில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் தோற்றமும் இன்றைய நிலையும்: கோட்பாடு – நடைமுறை – வரலாற்றுப் போக்கு’ எனும் இக்கட்டுரைத் தொடர் அமைகிறது.

**மு. திருநாவுக்கரசு**



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர், ஈழத்தின் புகழ்மிக்க அரசியல் ஆய்வாளராக அறியப்பட்டவர். தேசியம், ஜனநாயகம், ஏகாதிபத்தியம் குறித்த விவாதங்களை இருபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ச்சியாக எழுப்பிவருபவர். இலங்கை இனப்பிரச்சினையின் தோற்றுவாய் குறித்தும், சிங்கள ராஜதந்திரம் குறித்தும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அரசியல், ராஜதந்திர நகர்வுகள் பற்றியும் ஆழமான ஆய்வுகளைச் செய்துள்ளவர். ஈழத்து அரசியலை நுணுகிய, விரிந்த தளத்தில் தமிழில் ஆய்வுகளை நடத்தும் போக்கினை நிர்ணயிப்பதில் மு. திருநாவுக்கரசுவின் பங்கு தலையாயது.

இலங்கை அரசியல் யாப்பு 19312016, இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள், பூகோளவாதம் புதிய தேசியவாதம் என்பன இவரது படைப்புகளாகும்.

உலகளாவிய அர்த்தத்தில் எங்கு பேரரசுகள் எழுகின்றனவோ அங்கெல்லாம் அவை ஓர் உயிரியைப் போல தாம் வாழும் அண்டைய பிரதேசத்துக்குள் தமது கால்களை அகட்டி நகர்ந்து பரவும். அது இந்தியப் பேரரசுக்கும் விதிவிலக்கானது அல்ல. கி.மு நான்காம் நூற்றாண்டில் முதலாவதாக இந்தியாவில் எழுந்த மௌரியப் பேரரசு அண்டை நாடுகளை நோக்கிப் பரந்து விரிவடையத் தொடங்கியது. மௌரியப் பேரரசு அசோகச் சக்கரவர்த்தியின் தலைமையில் பேரரச தத்துவமாய் கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய பௌத்த மதத்தைக் கையில் எடுத்தது. அதன்வழி பௌத்த மத வடிவில் பேரரசா் ஆதிக்கம் கி.மு 3 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்குப் பரவியது.

அதேவேளை, பேரரசுகளின் எழுச்சியையும் வளர்ச்சியையும் தாண்டி, பேரரசுகளை அண்டிய பகுதிகளில், தப்பிப் பிழைத்து வாழும் சிறிய அரசுகளும் உண்டு என்பதும் கவனிக்கத்தக்கது. இந்தவகையில், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளுக்கு எதிரான ஒரு திருப்புமுனையாக, கி.பி. 1648 ஆம் ஆண்டில் கையெழுத்தான வெஸ்ட்ஃபாலியா உடன்படிக்கை (The Treaty of Westphalia) அமைந்தது. இந்தச் சர்வதேச உடன்படிக்கை, ஒரு நாட்டின் இறையாண்மையை மற்றொரு நாடு மதிக்க வேண்டும் என்றும், அரசுகள் ஒன்றை ஒன்று ஆக்கிரமிக்காமல், சமாதானமாக வாழ வேண்டும் என்றும், நவீன அரசுகளுக்கிடையேயான உறவுகளுக்கான ஒரு முக்கிய அடிப்படை அரசியல் கோட்பாட்டை வகுத்தது. வரலாற்றில் இது அப்படியே நடைமுறைப்படுத்தப்பட்டது என்று சொல்வதற்கு இல்லை ஆயினும், பெரிய அரசுகளை அண்டி சிறிய அரசுகள் வாழும் வரலாற்று நடைமுறையும் உண்டு. இது பெரிய - சிறிய அரசுகளுக்கு இடையே உறவுகளைக் கையாளும் அரசியல் கலையில் தங்கி உள்ளது என்பதும் கண்கூடு. இப்பிரச்சினையைக் கட்டுரையின் இறுதியில் ஆராயலாம்.

### மகாவம்ச மனப்பாங்கு

கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பரவிய அசோகப் பேரரசு தேரவாத (Theravada) மகா சங்கத்தையும் தேரவாத பௌத்த அரசையும் இலங்கையில் ஸ்தாபித்தது. எப்படியோ அசோகப் பேரரசினது பேரரச ஆதிக்கத்திற்கு இலங்கை பணிந்தது. அரசும் மதமும் பேரரச ஆதிக்கத்தில் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்று வரலாற்றாளர்கள் கூறுவது சரியானதே. கி.மு 2 ஆம் நூற்றாண்டு அளவில் (கி.மு 150 - 100) இந்தியாவில் இன்னொரு பௌத்த பிரிவாக மகாயான பௌத்தம் (Mahayana Buddhism) எழுந்தது. அது தென்னிந்தியாவில் வலுவடைந்து, கி.பி 3 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மன்னன் மகாசேனன் (Mahasena 277 - 304 AD) காலத்தில் சோழ நாட்டைச் சேர்ந்த தமிழ் பௌத்த துறவியான சங்கமித்தர் தலைமையில் இலங்கைக்குள் நுழைந்தது. அம்மதப் பிரிவு மன்னன் மகாசேனனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரச மதமாய் உருப்பெறத் தொடங்கியது. அக்காலத்தில் இலங்கையில் தேரவாத பௌத்தம் தடை செய்யப்பட்டு அதன் மகாவிகாரையும் மகா சங்கத்தினரும் தாக்கப்பட்டனர்.

இதனால், தேரவாத பௌத்தப் பிரிவுக்கும் மகாயான பௌத்தப் பிரிவுக்கும் இடையே வன்முறை மற்றும் கடுமையான மோதல் ஏற்பட்டது. இறுதியாக, மன்னன் மகாசேனன் மீண்டும் தேரவாத பௌத்தத்தைத் தழுவியதும், மகாயானத்தின் தலைமை மதகுரு சங்கமித்தர் படுகொலை செய்யப்பட்டதும், இத்தகைய மதப் பூசல் முடிவுக்கு வந்தது.

இங்கு பௌத்தம், அரசு, அரசியற்கொலை (Assassina tion) - அதுவும் ஒரு தலைமை பௌத்த துறவி அரசியற்கொலை செய்யப்பட்டமை - என்பன ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்த ஒரு வரலாற்றுத் திரட்சியைக் காணலாம்.

கி.பி 433 ஆம் ஆண்டில் தென்னிந்தியாவிலிருந்து பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த அறுவர் அநுராதபுர இராச்சியத்தைக் கைப்பற்றி 26 ஆண்டுகள் ஆண்டனர். இக்காலத்தில் பாண்டியர்களால் தேடப்பட்டுவந்த தாதுசேனனை (Dhatusena) பௌத்த மகா விகாரையின் தலைமை மதகுருவும் தாதுசேனனின் மாமனும் ஆகிய மகாநாம தேரர் (Mahanama Thero) பௌத்த துறவியாக மாறுவேடமிட்டுப் பாதுகாத்து வந்தார். இறுதியாக பாண்டியர் ஆட்சியை தாதுசேனன் முடிவுக்குக் கொண்டுவந்து கி.பி 459 ஆம் ஆண்டு அநுராதபுரத்தின் மன்னனாய் முடிசூடிக் கொண்டார்.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியிற்தான் மேற்படி மகாநாம தேரரினால் கி.பி 5 ஆம் நூற்றாண்டளவில் பௌத்த - அரசியல் - வரலாற்றைக் கூறும் மகாவம்சம் என்ற நூல் முன்னைய பதிவுகளில் இருந்து திரட்டியும், தொகுத்தும், புனைந்தும் வரையப்பட்டது. அவ்வாறு அவர் எழுதியதற்கும் அப்பால் பிற்காலகட்ட வரலாற்றுச் சூழல்களில் அவ்வப்போது தேவைப்பட்ட இன, மத, அரச நோக்கங்களுக்குப் பொருத்தமாக மகாவம்சத்தில் விஷமத்தமான இடைச் செருகல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்நூலில் சொல்லப்படுபவை எவ்வளவு தூரம் சரி - பிழை, நல்லது - கெட்டது, உண்மை - பொய் என்பனவற்றிற்கு அப்பால் அது,



**அசோகப் பேரரசு காலத்தில் சங்கமித்தை இலங்கை வருதல் பற்றிய ஓவியம்**
Image Source - www.tamilmirror.lk

அரசியல்ரீதியாக சிங்கள பௌத்தர்களின் மனப்பாங்கையும் அரசியல் போக்கையும் வடிவமைக்கும் ஒரு கருத்தியலாய் நடைமுறை அரசியலில் முன்னெடுக்கப்படுகிறது.

இந்தியாவில் பேரரசு எழ அது இலங்கைக்குப் பரவியது. இந்தியாவில் தேரவாத பௌத்தம் எழ அது இலங்கைக்குப் பரவியது. இந்தியாவில் மகாயான பௌத்தம் எழ அது இலங்கைக்குள் நுழைந்து சவாலாய் எழுந்தது. இவ்வகையில், இந்தியா தொடர்பாக இலங்கையில் ஏற்படக்கூடிய அரசியல் மாற்றங்கள் வெறுமனே அவ்வப்போதைய காலகட்டங்களுக்குரிய வரலாற்றுத் துடிப்பு நிலையாக (Historical Trend) மட்டுமன்றி அதனையும் உள்ளடக்கிய நீண்டு நெடிய வரலாற்று வளர்ச்சிப் போக்குக்கு (Historical Process) உரியதாயும் அமையும் நிலையில் அது இலங்கையின் வரலாற்றியலாயும் (Historiography) வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது, வரலாற்றைப் பார்க்கும் பழக்கப்பட்ட ஒரு பக்கப் பார்வை இயலாய் இது அமைந்துள்ளது. இதனை 'மகாவம்ச மனப்பாங்கு' என்று அழைப்பர்.

### இனப்படுகொலை வாதம் - யூதர்களை முன்வைத்து ஒரு பார்வை

மனிதகுல வாழ்விலும் வரலாற்றிலும் ஐதீகங்கள் (Myths) நிறையவே உண்டு. வசீகரமான கற்பனை நிறைந்த இத்தகைய ஐதீகங்கள் வெறுமையில் இருந்து தோன்றுவதில்லை. அவை நிகழ்தகவுள்ள ஒரு வரலாற்றுப் பின்புலத்தில் இருந்து தோன்றுகின்றன. உதாரணமாக, யூதர்கள் பின்பற்றும் 'வாக்களிக்கப்பட்ட பூமி' (The Promised Land - இறைவனால் யூதர்களுக்கென்று வாக்களிக்கப்பட்ட பூமி) என்ற ஐதீகமானது அராபியர்கள், பாரசீகர்கள், ரோமர்கள் என்போரால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய புவியியல் அமைவிடத்தைக் கொண்டிருந்த பின்னணியில், அதன் அடிப்படையிலான அரசியல் வரலாற்றுப் போக்கும் காணப்பட்ட சூழலில், மேற்படி 'வாக்களிக்கப்பட்ட பூமி' என்ற ஐதீகக் கோட்பாடு தோன்றியது போலவே, இலங்கையிலும் சிங்கள பௌத்தர்கள் மத்தியில் 'தம்ம தீப' - பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கென புத்த பகவானால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீவு இலங்கை - என்ற ஐதீகம் இந்தியாவுடன் பின்னிப்பிணைந்துள்ள இலங்கையின் அமைவிடச் சூழலில் தோன்றியது.

யூதர்கள் மீதான ஹிட்லரின் யூத இனப்படுகொலை வாதமும் வெறுமையில் இருந்து உருவாகவில்லை. அதுவும் ஒரு வரலாற்றுச் சூழலில் இருந்து உருவானது. ஹிட்லர் தனது அபகீர்த்திமிக்க 'Mein Kampf' என்ற நூலில், 'Culture Founders (Creators), Culture Bearers (Carriers), Culture Destroyers' என மனித குலத்தை மூன்றாகப் பிரித்து, அதில் யூதர்களை 'Culture Destroyers' என வகைப்படுத்தி, மனிதகுல நாகரிகத்தின் அழிவுச்சக்தியாக விவரித்தார்.

கி.மு. முதலாம் நூற்றாண்டில், யூத பூமி ரோமப் பேரரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதைத் தொடர்ந்து யூதர்கள் பெட்டி படுக்கைகளுடன் (ஆயுதம் தாங்காது) அடைக்கலம் தேடி, ஐரோப்பாவின் பல பகுதிகளையும் நோக்கிப் புலம்பெயர்ந்து பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் குடியமரத் தொடங்கினர்.

நிலம் புலமின்றி, அரசியல் அதிகாரம் இன்றி, பெட்டி படுக்கைகளுடன் ஐரோப்பா எங்கும் பரந்து சிதறிய யூதர்கள் ஆங்காங்கே கல்வி, வியாபாரம், வர்த்தகம், பன்றிப் பண்ணைகளை அமைத்தல் போன்றன வாயிலாக தமது அயராத உழைப்பால் அங்கு வாழ்ந்து வந்த சுதேசிகளை விடவும் நன்னிலை அடைந்தனர். இதனால், ஹிட்லருக்கு முன்னைய நூற்றாண்டுகளிலேயே, யூதர்கள் மீது காழ்ப்புணர்வு கொண்டவர்கள், பல்வேறு நாடுகளிலும் யூதர்களைத்

தாக்குதல்களுக்கு உள்ளாக்கினர். ஆகையால், 'படுகொலை செய்யப்பட்டவர்கள்' என்ற வரலாற்றுப் பிம்பமும் யூதர்கள் மீது உருவானது.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியிற்தான் ஹிட்லரால் யூதர்கள் மீதான இனப்படுகொலை வாதத்தை கோட்பாட்டு ரீதியில் முன்வைத்து, யூத இன அழிப்பை அரசியல் இராணுவ ரீதியில் கட்டமைப்புச் செய்ய முடிந்தது. பூமியில் உள்ள எந்த ஒரு மனிதக் கூட்டமும் செய்திருக்காத அளவுக்கு யூதர்கள் விஞ்ஞான தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளின் வாயிலாகப் பரந்துபட்ட முழு உலகத்திற்கும் ஒட்டுமொத்த மனிதகுல நாகரிக வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றி உள்ளார்கள் என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் மீது ஐரோப்பியர்கள் காழ்ப்புணர்வு கொண்டார்கள் என்பதும் அந்தக் காழ்ப்புணர்வுகள் இனப்படுகொலையைக் கட்டமைக்க ஏதுக்களாக அமைந்தன என்பதும் கவனத்திற்குரியன.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், தத்துவம், அரசியல், புவியியல், வானியல், உளவியல், விவசாயம் ஆகிய தலையாய அனைத்துத் துறைகளிலும் இந்தச் சிறிய இனம் முன்னணிப் பாத்திரம் வைத்துள்ள உண்மையை ஏற்பதற்குப் பதிலாக, யூதர்கள் மீது இனப்படுகொலை வாதம் அரங்கேற்றப்பட்டது. அதேவேளை, கி.மு 1000 ஆம் ஆண்டுகளிலிருந்து பல்வேறு அரசுகளினாலும் பாதிப்புக்கு உள்ளாகிய வரலாற்றுப் பின்னணியில் இருந்து, "கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல், இரத்தத்திற்கு இரத்தம்" என்ற மதக் கோட்பாட்டை யூதர்கள் வடிவமைத்தனர் என்ற துர்ப்பாக்கியத்தையும் சரிவர எடைபோட வேண்டியது அவசியம்.

எந்த ஓர் இனப்படுகொலை வாதத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, அத்தகைய இனப்படுகொலை வாதங்களுக்கான தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய வரலாற்று விதிகளை விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் சரிவரப் புரிந்துகொள்ளாமல் அத்தகைய இனப்படுகொலை வாதங்களை வெற்றிகொள்ளவும் முடியாது என்ற உண்மையையும் புரிந்துகொள்ள வேண்டும். புனித போதனைகளும் தேனிலும் இனிய நல்மனங்களும் சோறு போடாது. இரத்தமும் தசையுமான யதார்த்தமும் அது சார்ந்த நடைமுறையுந்தான் எதற்கும் முத்தாய்ப்பானது.

'இனப்படுகொலைக்குப் பரிகாரம் பிரிந்து செல்லல் மட்டுமே' ('Genocide can be compensated only by secession') என்ற நியமத்தைத்தான் வரலாறு முன்வைத்துள்ளது. இதனைவிட வேறெந்தப் புனித போதனைகளும் அதற்குத் தீர்வாகாது. இலங்கையில் தொடரும் சிங்கள இனவாத அரசியலின் வரலாற்று அடித்தளம் பொய் - புளுகு - உருட்டு - பிரட்டு - திரிபு என்பனவற்றிற்கு அப்பால் வரலாற்றை அதன் இயல்பான வளர்ச்சிப் போக்குக்குள்ளால் அடையாளம் காணவும் கணிப்பீடு செய்யவும் வேண்டும். கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைவாதச் சித்தாந்தத்திற்கான அடிப்படை ஐதீகமாக விளங்கும் 'தம்மதீப' கோட்பாட்டை அதன் வரலாற்றுப் பின்புலத்தில் இருந்து அறிவியல் பூர்வமாகச் சரியாக எடைபோட வேண்டும்.

புவிச்சரித இயலின்படி சிறு பாக்குநீரிணையால் இந்தியாவிலிருந்து இலங்கை பிரிக்கப்பட முன்பு இலங்கை தென்னிந்தியாவின் ஒரு தொடர் நிலப்பரப்பாக விளங்கியது. இறுதிப் பனியுகத்தின் பிற்பகுதியில் இலங்கை கடலால் பிரிக்கப்பட்டு ஒரு தீவானது.

தென்னிந்தியாவில் மக்கள் பரம்பல் ஏற்பட்டபோது அதே தொடர் மக்கள் பரம்பல்தான் இலங்கையிலும் உருவானது. குறிப்பாக, தென் இந்தியாவில் காணப்பட்ட அதே பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் கூட்டங்களே கி.மு 1000 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே இலங்கையில் வாழ்ந்தனர். இதில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஈழத் தமிழ், சிங்களம் என்ற வேறுபாடுகள் அப்போது இல்லை. இவர்கள் அனைவரும் ஒரே பெருங்கடல் பண்பாட்டு மக்கள் கூட்டத்தினரே.

மேலும் குறிப்பாக, பௌத்தம் தோன்று முன்பும், அத்துடன் பின்னாளில் பௌத்தம் இலங்கைக்கு வரமுன்புமான கி.மு 5 ஆம் நூற்றாண்டளவில் இலங்கையின் வடக்கே கந்தரோடையைத் தலைநகராகக் கொண்டும், வடமத்தியில் அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டும், தெற்கே திஸ்ஸமகாராமவைத் தலைநகராகக் கொண்டும் அரசுகள் தோற்றம் பெற்றன. இதில் மூன்று அரசுகளும் ஒரே பெருங்கற் பண்பாட்டினத்தவர்கள் மத்தியிலேயே எழுந்தன.

அரசுகளுக்கு ஒரே ஒரு மொழிதான் விளங்கும்; அது அதிகாரம் எனும் மொழி. தாய் - பிள்ளை, தந்தை - மகன், அண்ணன் - தம்பி, தமிழன் - சிங்களவன், மலையாளம் - கன்னடம், அரபு - பாரசீகம் என்ற வேறுபாடுகளைக் கடந்து அதிகாரம் அரச வடிவில் பரவும். உலகில் தோன்றிய முதலாவது பேரரசு கி.மு 2334 ஆம் ஆண்டு உலகின் முதலாவது சக்கரவர்த்தியான சாகோன் (Sargon) தலைமையில் இன்றைய மத்திய ஈராக்கில் தோன்றிய அக்காட் (Akkad) பேரரசாகும். ஒரு சிறிய அக்காட் நகர அரசு நண்டு கால்களை அகட்டுவது போல அண்டை அயல் அரசுகளை ஆக்கிரமித்தவாறு துருக்கி, சிரியா உட்பட்ட

அகன்ற பெரும் பகுதிகளை உள்ளடக்கிய ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கியது. அதிகாரத்தின் அதியுயர் சின்னமான நிரந்தர இராணுவத்தை பூமியிலும் வரலாற்றிலும் முதன்முறையாக சாகோன் கட்டமைத்தார்.

அதிகாரத்திற்காகச் சண்டையிடுவது எந்தொதவொரு அரசினதும் இயல்பான இரத்த ஓட்டமாகும். சோழ - சேர - பாண்டியர்களும் அப்படித்தான் சண்டையிட்டார்கள். கோட்டை - சீதாவக்கை - றைகம இராச்சியங்களும் அவற்றின் அரசர்களான உடன்பிறந்த சகோதரர்களும் தம்மிடையே அப்படித்தான் அரச அதிகாரத்திற்காகச் சண்டையிட்டார்கள்.

அதிகாரம் பற்றிய இரத்தமும் தசையுமான ஒரு வரலாற்று உதாரணம் இங்கு கவனத்திற்குரியது. "அதிகாரமே எனது ஆசைநாயகி" (Power is my mistress) என்று கூறினார் நெப்போலியன் (Napoleon). அதே நெப்போலியன் இந்த பூமியில் தனக்கு அதிக அன்புக்குரியவளாகச் சொல்லியது ஜோசபின் (Josephine) எனும் தனது பேரன்புக்குரிய காதல் மனைவியைத்தான் (Napoleon said it over and over, again and again that the only woman he ever really loved was Josephine). ஆனால், அரசியல் அதிகாரத்தின் பொருட்டு ஆஸ்திரிய இளவரசியான 'Archduchess Marie - Louise' என்னும் பெண்ணை நெப்போலியன் மணக்கத் தீர்மானித்ததை ஜோசபின் ஆட்சேபித்த போது, "சிம்மாசனத்தில் அவளும் இதயாசனத்தில் நீயும்" என்று ஜோசபினிடம் நெப்போலியன் கூறிய பதில் வியப்பளிக்கக்கூடியதாய் அமைந்தது.

அரசியல் அதிகாரம் சார்ந்த இத்தகைய வரலாற்றுப் புரிதலின் பின்னணியிற்தான் இந்தியா - இலங்கை - ஈழத் தமிழர் - சிங்களவர் சார்ந்த புவிசார் - அரசியல் போக்கைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கி.மு 1000 ஆம் ஆண்டுக்கு முற்பட்டதான இறைவனால் 'வாக்களிக்கப்பட்ட நாடு' (The Promised Land) என்ற யூதக் கோட்பாடும், கி.பி 5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்த பகவானால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீவு - 'தம்மதீப' (Chosen Land) - என்ற கோட்பாடும் அடிப்படையில் ஒரே மாதிரியானவை. அதாவது, இவை இரண்டும் அவையவை சார்ந்த வகையில் ஒத்த புவியியல் அமைவிட நெருக்கடியில் இருந்து பிறந்தவை.

மேலே குறிப்பிடப்பட்டவாறு கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் பாண்டியர்களின் படையெடுப்பின் போது கால் நூற்றாண்டு காலம் அநுராதபுர அரசு கைப்பற்றப்பட்டிருந்த காலத்தில் வாழ்ந்தவர் மகா சங்கத்தின் தலைமை மதகுருவான மகாநாம தேரர். பாண்டியர்களிடமிருந்து அநுராதபுர அரசை மீட்டெடுத்த இவரது மருமகனான மன்னன் தாதுசேனனை தலைமறைவாகப் பேணிப் பாதுகாத்து அநுராதபுர இராச்சியத்தை மீட்க வழிகோலியவரும் இவர் என்ற வகையில், மகாநாம தேரரின் மனதிலும் சிந்தனையிலும் அக்கால அரசியல் சூழலின் தாக்கம் பெரிதும் உறைந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

மேலும், இதற்கு முன்னைய நூற்றாண்டில் சோழ நாட்டைச் சேர்ந்த மகாயான பௌத்த துறவியால் அநுராதபுர மன்னன் மகாசேனன் தேரவாதத்தில் இருந்து மகாயானத்துக்கு மதமாற்றப்பட்டு, தேரவாத பௌத்த மகா சங்கம் தடை செய்யப்பட்டு, தேரவாதம் இன்னலுக்கு உள்ளானமையையும் ஒன்று சேர்ந்த ஒரு வரலாற்றுப் பின்னணியில் மகாநாமரின் மனதில் இந்திய - தென்னிந்திய - தமிழின எதிர்ப்பு வாதம் குடிகொள்வது இயல்பானது. இக்காலகட்டப் புவியியல் - அரசியல் - வரலாற்றுச் சூழலில் மகாநாமரால் தொகுக்கப்பட்ட மகாவம்சம், தமக்கு எதிரான புவிசார் அரசியல் தாக்கத்திற்கு முகம் கொடுக்கக்கூடிய வகையிலான கருத்தை அவரது நோக்கு நிலையில் இருந்து இயல்பாகவே கொண்டிருக்க முடிகிறது.

அதனாற்தான் தீபவம்சம் எனும் நூலில் மிகச் சிறிதளவாக எழுதப்பட்டிருந்த, கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் முடியாதிக்கப் போட்டிக்காக நிகழ்ந்த எல்லாளன் - துட்டகாமினி யுத்தத்தை மகாவம்சத்தில் மகாநாம தேரர் ஒரு காப்பிய வடிவில், அதற்கு இந்திய எதிர்ப்பு - தமிழின அழிப்புப் பரிமாணம் கொடுத்து எழுதியிருக்க முடியும். அல்லது அதனை ஒட்டி இடைச் செருகல்களைச் செய்திருக்க முடியும்.

எல்லாளன் - துட்டகாமினி யுத்தத்தில், இலட்சக்கணக்கானோர் (தமிழர்) மடியும்படி நேரிட்டது தனக்குக் கவலை அளிப்பதாக மன்னன் துட்டகாமினி வருந்துவதாகவும் அப்போது பௌத்த துறவிகளின் குழு ஒன்று அவர் முன் தோன்றி அவரை ஆற்றுப்படுத்தப் பின்வருமாறு கூறுவதாகவும் ஓர் உரையாடல் வருகிறது.

"இந்தச் செய்கையின் காரணமாக நீ சொர்க்கத்துக்குப் போகும் பாதையில் எவ்விதத் தடையும் ஏற்படாது" என்பதுடன், "அவ்வாறு கொல்லப்பட்ட இலட்சக்கணக்கானோர் (தமிழர்) நமது மார்க்கத்தை நம்பாதவர்கள், தீய வாழ்வை மேற்கொண்டவர்கள், மிருகங்களை விடவும் உயர்வாக மதிக்கப்படக் கூடாதவர்கள்" எனவும் கூறுகின்றனர் (மகாவம்சம் - அத்தியாயம் 25 - பத்தி 110).

இது பிற்காலத்தில் மகாவம்சத்தில் சேர்க்கப்பட்ட ஓர் இடைச்செருகலாக இருக்கலாம் என்று சில வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். அது உண்மையோ - பொய்யோ, இடைச் செருகலோ - இல்லையோ என்பதற்கு அப்பால், சிங்கள - பௌத்தர்கள் தமது புனித வரலாற்று நூலாக மதிக்கும் மகாவம்சத்தில் இக்கூற்று நூற்றாண்டுகளையும் கடந்து இருப்பதானது, சிங்கள - பௌத்த மக்களின் மனங்களை வடிவமைக்கும் ஒரு கருத்தியலாகவும், இனப் பகைமைக்கு என்றும் தூபமிடவல்ல கருத்தியல் மண்டலத்தை அவ்வப்போதைய அரசியல், மதத் தேவைகளுக்காக உருவகிப்பதற்கேற்ற ஒரு பலம் பொருந்திய ஆயுதமாகவும் பார்க்கப்படுகின்றது.



**இரண்டாம் உலக யுத்த காலத்தில் யூதர்கள் இடம்பெயருதல்**

Image Source - www.annefrank.org

மேலும், கி.பி 10 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அநுராதபுர அரசு சோழப் பேரரசால் கைப்பற்றப்பட்ட நிலையில், சுமாராக 1500 ஆண்டு காலமாய் தலைநகராய்த் தொடர் வளர்ச்சி அடைந்துவந்த அநுராதபுர தலைநகரம் வேரோடு பிடுங்கப்பட்டு பொலநறுவையில் நாட்டப்பட்டது. அதன் பின்பு இன்றுவரை அத்தலைநகரம் அநுராதபுரம் திரும்பவில்லை.

மேலும், கி.பி 1214 ஆந்திராவில் இருந்து கலிங்கத்து மாகனால் (Magha of the Kalinga's) பொலநறுவை அரசு கைப்பற்றப்பட்டு 1255 ஆம் ஆண்டுவரை பௌத்த மத நிந்தனையுடன் கூடிய பயங்கர ஆட்சி நிகழ்ந்ததாக வரலாற்றில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. மாகனின் படையெடுப்பைத் தொடர்ந்து பொலநறுவையில் இருந்த சிங்கள இராசதானி இலங்கையின் மத்திய மலைப்பகுதி, தென்மேற்குப் பகுதி நோக்கி நகர்ந்து, கண்டி மற்றும் இன்றைய கொழும்புத் தலைநகரை நிலைக்களமாகக் கொண்டு ஸ்தாபிதம் அடைந்தது என்ற வரலாற்றுப் போக்கு சிங்கள மக்களின் மனங்களில் பசுமரத்தாணியாய் வேரூன்றி உள்ளது.

### இலங்கைத் தீவின் மீதான கடல்வழி அந்நியப் படையெடுப்புகள்

இலங்கைக்கு வடக்கே இருந்து, பாக்குநீரிணையைக் கடந்து இந்தியாவில் இருந்து தொடர்ந்து நிகழ்ந்து வந்த படையெடுப்புகள் போலவே, இந்துமாகடல் தழுவிய வகையில் கி.பி 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சீனா கடல்சார் பேரரசாக எழுச்சி பெற்றபோது, கி.பி 1412 ஆண்டு சீனக் கடற்படைத் தளபதி ஷென்ங் ஹே (Admiral Zheng He) தலைமையில் கொழும்பு இராச்சியம் படையெடுப்புக்கு உள்ளாகி மூன்று ஆண்டுகள் அவரது இராணுவப் பிடியின் கீழ் சின்னாபின்னமாகியது.

இதுதான் வரலாற்றில் முதல்முறையாக தெற்காசியக் கடல் வழியே இலங்கைக்கு வந்த முதலாவது படையெடுப்பாகும்.

இதைத் தொடர்ந்து கி.பி 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய பேரரசுகள் உலகளாவிய கடலாதிக்கத்தைப் பெறத் தொடங்கிய பின்னணியில் 1505 ஆண்டு போர்த்துக்கீசரும், 1602 ஆம் ஆண்டு டச்சுக்காரரும் (கைப்பற்றியது 1658 இல்), 1796 ஆம் ஆண்டு பிரித்தானியரும் கடல் வழியே இலங்கையில் கால் பதித்தனர்.

1796 ஆம் ஆண்டு பிரித்தானியர் கடல் வழியே இலங்கையில் கால் பதித்தபோது பிரான்சுச் சக்கரவர்த்தியான நெப்போலியன் கூறிய பின்வரும் கூற்று மிகவும் கவனத்திற்குரியது.

"திருகோணமலையை யார் தன் கையில் வைத்திருக்கிறாரோ அவர் இந்துமாகடலை ஆள்வார்" (He who controls Trincomalee controls the Indian Ocean - Napo leon in 1796).

மேலும், கடல்சார் ஆதிக்கம் பற்றி அமெரிக்கக் கடற்படைத் தளபதியான அல்பிரெட் டயர் மாகன் (Admiral Alfred Thayer Mahan) கூறிய இரண்டு கூற்றுகள் முக்கியமானவை.

"இந்து சமுத்திரத்தை யார் கட்டுப்படுத்துகிறாரோ அவர் ஆசியா மீது ஆதிக்கம் செலுத்துவார்" (Whoever controls the Indian Ocean will dominate Asia - 1897).

"கடலை ஆள்பவன் உலகை ஆள்வான்" (Whoever controls the seas, rules the world).

முதலில் இலங்கைக்கு வடக்கே இருந்த பாக்குநீரிணையைத் தாண்டி இந்தியாவில் இருந்து 15

ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இலங்கைக்கு ஏற்பட்ட சவால்களுக்கு அப்பால், 15 ஆம் நூற்றாண்டில் இருந்து கடல் சார்ந்த பேரரசுகளான சீனா, போர்த்துக்கல், டச்சு, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா போன்றவைகளால் கடல்சார் தென்புறத்திலிருந்து இலங்கைக்குச் சவால்கள் உருவாகின. இத்தகைய சவால்கள் அனைத்தும் இலங்கையின் அமைவிடம் சார்ந்தவை.

இலங்கைத் தீவுக்கு வடக்கிலிருந்து பாக்குநீரிணைக்கூடாக இந்திய ஆதிக்கமும், தெற்கே கண்டங்களையும் பெரும் கடல்களையும் கடந்த உலகப் பெரு வல்லரசுகளின் இந்துமாகடல் ஆதிக்கமும், கூடவே இதன்வழி உலகம் தழுவிய அரசியல் ஆதிக்கமும் இணைந்த பெரும் அரச ஆதிக்க வலைக்குள் இலங்கைத் தீவும் அதன் இனப்பிரச்சினையும் சிக்குண்டுள்ளன. இந்தவகையில், ஈழத் தமிழருக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையானது சிங்கள பௌத்த அரசுடனும் அதனுடன் தொடர்புள்ள பல்வேறு அரசுகளினது ஆதிக்கங்களுடனும் இணைந்த வகையில் படச்சட்டத்துக்குள் (Frame) கூட்டிக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்தவகையில், இலங்கையின் இனப் பிரச்சினையும் ஈழத் தமிழருக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையும் இலங்கைத் தீவின் எல்லைக்கு உட்பட்ட ஒன்றாக மட்டுமன்றி அது அண்டை நாடு, சீனா, மேற்குலக வல்லரசுகள், இந்நாடுகள் அனைத்தும் சார்ந்த கூட்டாளி நாடுகள் ஆகியவற்றின் நலன்கள் தழுவிய கூரிய கத்தி மாலையாய் ஈழத் தமிழரின் கழுத்தில் இறுக மாட்டப்பட்டுள்ளது. இவ்வாறு பலம் பொருந்திய பல்பரிமாணக் கத்தி மாலையாய் ஈழத் தமிழரின் கழுத்தில் மாட்டப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை மனம் போன போக்கில் எழுந்தமானமாகக் கையாளாது தெளிந்த அறிவுடனும் அதிக நிதானத்துடனும் கையாள வேண்டும்.

தெற்கே அம்பாந்தோட்டையிலும், தென்மேற்கே கொழும்பிலும் நூற்றாண்டு தழுவிய துறைமுக ஒப்பந்தங்களுக்கு ஊடாகச் சீனா இலங்கையில் கால் பதித்துள்ளது. இது இலங்கைக்குத் தெற்கே 'Diego Garcia' எனும் அமெரிக்காவின் மிகப்பெரும் இராணுவத் தலத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாய் அமைவதுடன், அது அமெரிக்காவின் இந்துமாகடல் ஆதிக்கத்துக்கும் சவாலாயும் அமைந்துவிடும். கூடவே இலங்கையில் சீனாவின் பிரசன்னமானது இந்தியாவின் பாதுகாப்புக்கும் இருப்பிற்கும் பெரும் சவாலாய் அமைந்துவிடும். இந்நிலையில், இந்திய - சீன - அமெரிக்க முக்கோண மையத்துக்குள் இலங்கையும் ஈழத் தமிழர் பிரச்சினையும் ஜீவ மரணப் போராட்டத்திற்குள் சிக்குண்டுவிடும். இதில் முதல் பலியாகக்கூடியது அரசற்ற அப்பாவி ஈழத் தமிழர்தான்.

இதனைத் தொடர் நவீன வரலாற்று வளர்ச்சிக்கூடாகத் தொடர்ந்து நோக்க வேண்டியது அவசியம்.

## இலங்கையைத் தனித்தீவு நாடாக்கிய பிரித்தானிய அரசின் உள்நோக்கம்

1796 ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பகுதிகளைப் பிரித்தானியர் கைப்பற்றிய போதிலும் அதனை இந்தியாவுடன் இணைக்காது 1802 ஆம் ஆண்டு வரை சென்னையில் இருந்து பரிபாலித்தனர். 1802 ஆம் ஆண்டு பிரான்சுடன் கையெழுத்தான ஏமியன்ஸ் உடன்படிக்கையை (The Treaty of Amiens) தொடர்ந்து இலங்கையைப் பிரித்தானியா தனது முடிக்குரிய குடியேற்ற நாடாகப் பிரகடனப்படுத்தியது.

இலங்கையை இந்தியாவுடன் இணைக்காது ஒரு தனித் தீவு நாடாகப் பேணவேண்டும் என்பது பிரித்தானியாவின் பிரதான கடல்சார் கொள்கையாகும். அதற்கு ஏற்ப கூடவே இலங்கையை ஓர் ஒற்றையாட்சி நாடாக வைத்திருக்க வேண்டும் என்பதிலும் அவர்கள் கவனமாய் இருந்தனர். 1802 ஆம் ஆண்டிலேயே ஒற்றை ஆட்சிக்குரிய அரசியல் நிர்வாகக் கட்டமைப்புகளை வகுத்துக்கொண்டனர்.

1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியத்தைப் பிரித்தானியர் கைப்பற்றிய போது கண்டிப் பிரதானிகளின் வற்புறுத்தலுக்கு அமைய எழுதப்பட்ட கண்டி உடன்படிக்கையில் சிங்கள பௌத்தம், அவர்களது பிரதேச சுயாதிபத்தியம் என்பவற்றை மதிப்பதாகப் பிரித்தானியர்கள் கூறியபோதிலும், 1818 ஆம் ஆண்டுக் கண்டிக் கலகத்தின் பின்பு அதனைக் கைநழுவவிட்டனர். 1833 ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட கோல்புறுக் - கமரன் (Colebrooke - Cameron) அரசியல் யாப்பு ஏற்பாட்டின் கீழ் கொழும்பை மையமாகக் கொண்ட தெளிவான ஒற்றையாட்சி நாடாக முழு இலங்கையும் ஒரு கோட்டின் கீழ் கட்டமைக்கப்பட்டது.

முழு இலங்கைத் தீவும் ஒரு குடையின் கீழ் ஆளப்பட வேண்டும் என்கின்ற கொள்கை கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே பல்வேறு ஆட்சியாளர்களிடமும் இருந்தாலும், 1815 ஆம் ஆண்டு பிரித்தானியரால் கண்டி இராச்சியம் கைப்பற்றப்படும் வரை ஆள்புல அர்த்தத்தில் அது நடைமுறையில் இருக்கவில்லை. 1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து, மேலும் 1818, 1833 என்ற இரு படிமுறைகளைத் தாண்டி ஒரு குடையின் கீழ், அதாவது

கோல்புறூக் - கமரன் அரசியல் யாப்போடு முழு அளவில், முழு இலங்கையும் கொழும்பை மையமாகக் கொண்ட ஒற்றை ஆட்சிமுறையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

பரந்த இந்துமாகடல் நலனோடும் இந்தியாவை ஆள்வதற்கான இராணுவ முகாமாக இலங்கைத் தீவைக் கையாள்வதற்கான நோக்கத்தோடும் ஒற்றை ஆட்சிமுறையின் கீழான ஒன்றுபட்ட இலங்கையையே ஐரோப்பியப் பேரரசுகளான போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரித்தானியாவோடு அமெரிக்கா, சீனா எனப் பல பேரரசுகளும் விரும்பின. அதேவேளை நவீன வரலாற்றில் ஈழத் தமிழருக்குத் தலைமை தாங்கிய பல தமிழ்த் தலைமைகளும் ஒற்றை ஆட்சிமுறையின் கீழான ஒன்றுபட்ட இலங்கை அரசையே விரும்பின.

## பிரித்தானிய இலங்கையில் பிரித்தானிய அரசின் சேவகர்களாக உருவான ஈழத்தமிழர் தலைமைகள்

நவீன இலங்கையில் ஈழத் தமிழருக்கான முதலாவது தலைமை இராமநாதன் குடும்பத்துடன் ஆரம்பமாகி 100 ஆண்டுகள் நீடித்தன. 1833 ஆம் ஆண்டு ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி ஈழத் தமிழருக்கான முதலாவது தலைவராகச் சட்ட நிரூபண சபைக்கான உத்தியோகப்பற்றற்ற உறுப்பினராய் பிரித்தானிய ஆட்சியால் நியமிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து முத்துக்குமாரசாமியின் வம்ச வழி வந்தவரான சேர் (Sir) பொன் இராமநாதன் அப்பதவியில் தொடர்ந்தார். 1930 ஆம் ஆண்டு இராமநாதன் காலமாகும் வரை சுமாராக ஒரு நூற்றாண்டு காலமாய் இராமநாதன் வம்சம் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கியது.

பிரித்தானிய எஜமான்களின் விசுவாசம் மிக்க அடிமைச் சேவகர்களாய் விசுவாசம் மிக்க அடிமைச் சேவகனுக்குக் குத்தக்கூடிய 'Sir' என்ற அடிமை முத்திரையை நெற்றியில் குத்தியவாறு இந்த வம்சம் தமிழ் மக்களுக்குத் தலைவனாகியது. இந்தியாவில் 'Sir' பட்டம் அடிமை முத்திரையாகக் கடும் விமர்சனத்திற்கு உட்பட்டும், பலரால் நிராகரிக்கப்பட்டும் வந்த காலகட்டத்தில் இராமநாதன் வம்சம் பெருமையாக இந்த அடிமை முத்திரையைத் தலைமேல் ஏற்றிக்கொண்டது.

இலங்கையில் ஆள்பதிகளாக இருந்த பிரவுன்றிக் (Brownrigg) என்பவரின் அந்தரங்கச் செயலாளராய் (Personal Officer) பதவி வகித்த குமாரசுவாமிப்பிள்ளை அவரைத் தொடர்ந்து ஆள்பதிகளான பக்கெட் (Paget), பான்ஸ் (Barnes) என்போருக்கும் மேற்படி விசுவாசம் மிக்க அதிகாரியாய்ப் பணியாற்றினார். குறிப்பாக, பிரித்தானியரால் கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்ட காலத்தில் (1815) ஆள்பதி பிரவுன்றிக் அவர்களுக்குப் பெரிதும் உறுதுணையாக நின்றதுடன், அவருக்கும் கண்டி இராச்சியப் பிரதானிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் முக்கிய பாத்திரம் வகித்தார்.

இத்தகைய எஜமானிய விசுவாசத்தோடு மூன்று ஆள்பதிகளுக்குக் கீழ்ச் சேவகராகப் பணியாற்றியதன் பின்னணியில், ஈழத் தமிழரையும் இலங்கைத் தீவையும் பிரித்தானியரிடம் விற்றுப் பிழைப்பதற்கான பரிசாய் பிரித்தானிய எஜமானால் ஈழத் தமிழரின் தலைவராக குமாரசுவாமி நியமிக்கப்பட்டார் என்ற வரலாற்று நடைமுறை உண்மை பெரிதும் கவனத்துக்குரியது.

இந்தவகையில், பிரித்தானியர்கள் விரும்பிய ஒன்றுபட்ட இலங்கை, ஒற்றை ஆட்சி முறை என்பனவற்றைத் தோளில் சுமந்தவராய் குமாரசுவாமிப்பிள்ளையும் கூடவே அவரின் வழிவந்த இராமநாதன் வம்சமும் நவீன வரலாற்றில் ஒரு நூற்றாண்டைக் காவிச் சென்றனர். இராமநாதன் வம்சம் ஒருபுறம் பிரித்தானிய எஜமான்களின் அப்பட்டமான சேவகர்களாகவும், கூடவே சிங்கள - பௌத்த கனவான்களின் தோழர்களாகவும் இருந்து, தமிழ் மக்களின் பெயரால் அரசியல் அதிகாரம் பெற்றனர். இராமநாதன் வம்சம் தமிழுக்கும் சைவத்துக்கும் பணியாற்றியவர்கள் என்று ஒரு பகுதியினர் குறிப்பிடுகின்றனர், ஆயினும் பசுவில் பால் கறக்க மாட்டுக்குப் புல்லுப் போடுவது போன்றதே அது.

இலங்கையில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை என்பது, ஒன்றுபட்ட இலங்கையில் ஒற்றை ஆட்சிமுறை என்ற அரசியல் கட்டமைப்புக்கு ஊடாகவே நவீன வரலாற்றில் பிரித்தானியரால் அவர்களது கடல்சார் காலனிய ஆதிக்க நலன்களின் பொருட்டுக் கட்டமைப்புச் செய்யப்பட்டது. அத்தகைய கட்டமைப்பை உருவாக்குவதில் ஈழத் தமிழரின் பெயரால் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேல் பெரும் பணியாற்றியவர்கள் இராமநாதன் வம்சத்தினர் என்பதையே வரலாற்றன்னை கண்ணீரும் செந்நீரும் சொரியப் பதிந்து வைத்துள்ளாள்.

பிரித்தானிய அரசு சிங்களர் பெரும்பான்மைக்குச் சாதகமாக டொனமூர் யாப்பை கொண்டுவந்த போது, தான் விசுவாசமாய் நம்பி இருந்த தனது வெள்ளை எஜமான்கள் தன்னைக் கைவிட்டதையும், தான் தோள்கொடுத்த சிங்களக் கனவான்கள் கால்களால் உதைத்துவிட்டதையும் எண்ணி நொந்து கொண்ட சேர் பொன். இராமநாதன், தமது வம்சத்தின் அரசியல் தோல்வியைத் தனது அந்திமக்காலத்தில் பின்வருமாறு குற்ற ஒப்புதல் வாக்குமூலமாய்ப் பதிவு செய்தார்.

"டொனமூர் வந்தால், தமிழர்கள் இனி இல்லை (Donoughmore means, Tamils no more)."

1956 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டுவரை தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கிய 'தந்தை செல்வா' என்ற மகுடம் தாங்கிய திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தனது அந்திமக்காலமான 1976 ஆம் ஆண்டு பின்வருமாறு அளித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தோடு மேற்படி இராமநாதனின் வாக்குமூலம் ஒப்பிடப்படக்கூடியது.

"இனி தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்."

தமது ஆயுட்கால அரசியற் தலைமைத்துவத் தோல்வியைக் கடவுளை முன்னிறுத்தி, கூடவே கடவுளின் தோள்களில் சுமத்திவிடும் ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலமே இதுவாகும்.

இந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்திற்கு இராமநாதனே வழிகாட்டியாய் அமைந்தார். பிற்காலத்தில் தமது பாரிய அரசியல் தோல்விகளுக்கெல்லாம் ஒப்புதல் வாக்குமூலமாய் "சிங்களத் தலைவர்கள் ஏமாற்றிவிட்டார்கள்" என்று திருவாளர்கள் ஆர். சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்ற தலைவர்கள் இதுவரை கூறியுள்ளமையும், மேற்படி கூறப்பட்ட அடிப்படையை ஒத்ததே. தமது இயலாமைகளையும் தோல்விகளையும் தவறுகளையும் குற்றங்களையும் பழியாக எதிரிகளின் தலைகளில் போட்டு அல்லது கடவுளின் தோள்களில் சுமத்தித் தம்மை அப்பாவிகளாக உருவகித்துத் தம்மை விடுதலை செய்துவிடுவது தமிழ்த் தலைவர்களுக்குக் கைவந்த கலையாகும்.

'கால் கல்லுடன் மோதிவிட்டது' என்ற தன்பக்க உண்மைக்குப் புறம்பாக 'காலில் கல்லடித்துவிட்டது' என்று கல்லில் மட்டும் பழிபோடுவது போல பொதுவாக தமிழ்த் தலைவர்கள் தமது பிழை, குற்றம், குறை, தவறு, தோல்வி, வீழ்ச்சி என்பனவற்றைப் பிறர்மீது மட்டுமே ஏற்றித் தமக்குத் தாமே வெள்ளை அடித்துத் தப்பித்துக்கொள்வார்கள். இது விடயத்தில் அப்பாவிக் கடவுளையும் முன்னிறுத்திக் குற்றத்தில் கடவுளுக்கும் பங்களித்துத் தம்மைத் தற்காத்துக் கொள்வார்கள்.

தோல்விக்குப் பொறுப்பேற்காத இத்தகைய வரலாற்று வளர்ச்சிப்போக்கும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்குச் சேவகம் செய்யவல்ல ஒன்றாகவே அமைந்தது. ஆதலால், தோல்விக்குப் பொறுப்பேற்காத தமிழ்த் தலைவர்களின் அரசியல் கலாசாரமும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் ஓர் அம்சம் என்ற பரிமாணத்தையே பெறுகிறது. இராமநாதன் வம்சம்



ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றுதல் பற்றிய ஓவியம்
Image Source - www.srilankaguardian.org

தமிழ் மக்களின் பெயரால் அரசியல் அதிகாரத்தைப் பெற்றபோதும், அவர்கள் தமது வெள்ளை எஜமான்களுக்கும் சிங்களக் கனவான்களுக்கும் செய்த சேவகம்தான் பெரிது என்று வரலாறு சொல்கிறது.

வரலாறு என்பது கிரேக்க மூலச் சொல்லான 'Historia' என்பதில் இருந்து Histories, History என உருவானது. வரலாறு என்றால் ஒரு கதை அல்ல, நடந்த சம்பவங்களைத் தொகுத்துச் செல்லும் ஒரு தொகுப்புமல்ல. அது நடைமுறை பற்றிய ஒரு விசாரணையின் பாலான தீர்ப்பு.

'Historia' என்ற கிரேக்க மூலச் சொல்லின் பொருள் 'Inquiry' - விசாரணை. இதன் வரைவிலக்கணம் பின்வருமாறு சொல்லப்படுகிறது: *"The Greek word historia originally meant inquiry, the act of seeking knowledge, as well as the knowledge that results from inquiry."*

"Historia என்ற கிரேக்க மூலப்பதத்தின் பொருள் விசாரணை. அதாவது அறிவைத் தேடும் செயல்; விசாரணையின் பெறுபேறாய்ப் பெறப்படும் அறிவு."

நவீன வரலாற்றில் 1930 ஆம் ஆண்டு வரையான இராமநாதன் வம்சத்தின் சுமாராக நூற்றாண்டுகால அரசியல் தலைமைத்துவத்தையும், அதன் பின்னான இற்றை வரையான சுமாராக நூற்றாண்டுகாலத் தமிழ் அரசியல் தலைமைத்துவத்தையும் காய்தல் உவத்தலின்றி, விருப்பு வெறுப்புகளைக் கடந்து, முற்றிலும் அறிவார்ந்த வகையில் விஞ்ஞானபூர்வமான வரலாற்றாய்வுக்கூடாக எடை போடுவதன் மூலமே கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் முழுமையான பரிமாணத்தையும் கற்றுணர்ந்து ஈழத் தமிழரின் எதிர்காலத்திற்கான பாதையையும் பயணத்தையும் வகுக்க முடியும்.

# மலையக நாட்டார் இலக்கியம் வெளிப்படுத்தும் தொழிற்களமும் விடுதலை உணர்வும்

கப்டன் ஹென்றி பேர்ட் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிச் செய்கையோடு மலையக மக்களின் வாய்மொழிப் பாடல் வரலாறு ஆரம்பிக்கின்றது. சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலாக ஆங்கிலேயரின் பூரண கட்டுப்பாட்டில், அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு, கடுமையான உழைப்புச் சுரண்டலுக்கு உட்பட்டு இம்மக்கள் வாழ்ந்தமையால், உலகில் உள்ள நாட்டுப்புறப் பாடல்களில் இருந்து இவர்களின் பாடல்கள் தனித்துவம் பெறுகின்றன. இத்தகைய இருள் சூழ்ந்த வாழ்வியலுக்குள் சிக்கிய மக்களின் வரலாறு, துன்பம், துயரம் ஆகியவற்றை இவர்களின் வாய்மொழிப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இன்று, மலையக மக்களின் 200 வருடகாலப் பண்பாட்டைத் தீர்மானிக்கும் முக்கிய கூறுகளாகவும் இவை திகழ்கின்றன. அந்தவகையில், மலையக மக்களின் வரலாற்றையும் வாழ்வியலையும் அவர்களது வாய்மொழிப் பாடல்கள் வழியாகப் புரிந்துகொள்ளும் நோக்குடன் எழுதப்படுவதாக, 'மலையக மக்களின் வாய்மொழிப் பாடல்கள் பேசும் வாழ்வியல்' எனும் இத்தொடர் அமைகின்றது


● வேலாயுதம் இராமர்



வேலாயுதம் இராமர், கொ.புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரில் ஆசிரியராக பணியாற்றி வருகின்றார். கவிஞர், நாடகம், திரைப்பட நடிகர், மலையக நாட்டார் இலக்கிய செயற்பாட்டாளர் என பல்துறைசார்ந்து செயற்படுவதோடு மலையக கூத்து தொடர்பாகவும் செயற்பட்டு வருகின்றார்.

மலையக மக்களின் வாழ்வியல் ஏனைய இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களிலிருந்து வேறுபட்ட ஒன்றாகும். தென்னிந்தியாவில் இருந்து காலனித்துவ ஆட்சியாளர்களால் அழைத்துவரப்பட்ட இம்மக்கள் முழுமையாக தமிழர்களாகவே இருந்தார்கள். இலங்கையில் பூர்விகமாக வாழும் தமிழர்களின் வாழ்வியல் முறையிலிருந்து இவர்கள் வேறுபட்டாலும், கலாசார ரீதியாகவும், மொழி ரீதியாகவும், மத ரீதியாகவும் ஒருமைப்பாடு உடையவர்களாக இருந்தார்கள். ஆனாலும், இவர்களின் வாழ்வியல், பொருளாதாரம், சமூகக் கட்டமைப்பு என்பன இவர்களை இலங்கைவாழ் மக்களிடமிருந்து தனித்துவமாக்கியது.

இவர்களின் வருகையானது பட்டுக் கம்பளத்தில் நடந்த நடை போன்றதாக இருக்கவில்லை; காடும் மேடும், கரடும் முரடும் நிறைந்த கானக வாழ்வில் நிகழ்ந்த வழித்தடங்களாக அது அமைந்தது. இவர்களின் வரலாறு ஜீவ-மரணப் போராட்டத்தில் சிதைந்து எழுந்து நிற்கும் வரலாறாகும். இந்த வரலாற்றுப் பாதையில் இவர்கள் இழந்த இழப்புகள், சிந்திய ரத்தம், வியர்வை, அவமானங்கள், அடக்குமுறைகள் — இவை அனைத்தும் வருணிக்க முடியாத வடுக்களாகும். இங்கு அவர்கள் கடுமையான உழைப்பினாலும் பெற்றுத்தந்த வருமானத்தினாலும் இந்நாட்டு மக்களின் தவிர்க்க முடியாத ஒரு பிரிவினராக மாறினார்கள்.

இவர்கள் நாட்டுக்கு வந்த காலம் முதல் எவ்வித தலைமைத்துவப் பின்னணியும் அற்ற உழைக்கும் கூட்டமாக இருந்ததால், வாழ்வின் பெரும் பகுதி உழைப்பதிலேயே முழுமையாக்கப்பட்டது. அதைத்தவிர அவர்களுக்கு தேவையான எந்தவித அடிப்படை வாழ்வியல் வசதிகளோ உரிமைகளோ வழங்க காலனித்துவ அரசோ, ஏன்? சுதந்திர அரசும் கூட முன்வரவில்லை.

இந்நிலையில், இம்மக்களின் உழைப்பின் கொடுமையையும் ஏற்பட்ட துயரங்களையும் வெளிப்படுத்தி நிற்கும் ஒரே ஆதாரமாக விளங்குவது நாட்டுப்புறப் பாடல்கள் ஆகும். இது இம்மக்களின் இருப்பையும் மண் சார்ந்த உணர்வையும் நில உரிமைச் சார்ந்த விருப்பையும் பேசுவதற்கு எமக்கு கிடைக்கின்ற சான்றுகளாக நிற்கின்றன.

அந்தவகையில், மலையக நாட்டார் இலக்கியம் இம்மக்கள் மனதிலிருந்த கோபங்களையும் ஆத்திரங்களையும் வெளிப்படுத்தும் வெடித்தெழுந்த உரிமைக் குரலாகவும், உழைப்பாளர் வர்க்கத்துக்கே உரிய மனக்குமுறலாகவும் வெளிப்பட்டு நிற்கிறது. மக்களின் இப்பாடல்களே இம்மக்களுக்குரிய இருப்பைப் பெறுவதற்கும், மண் சார்ந்த உணர்வை இன்றைய சமூகத்தினர் கட்டியெழுப்புவதற்கும், உரிமை சார்ந்து குரல் எழுப்புவதற்கும் எமக்குத் துணை நிற்கின்றன.

இதில் முக்கியமாக ஆரம்பகால நாட்டார் பாடல்களாக கோப்பிக்காலப் பாடல்கள் இருந்தன.

*"கோணக் கோண மலையேறி*
*கோப்பிப் பழம் பறிக்கையில*
*ஒரு பழம் தவறுச்சினு*
*ஒதச்சான் அய்யா சின்னத்துரை"*

கோப்பிக் காலத்திலேயே இவர்கள் அடிமைகள் போல நடத்தப்பட்டார்கள் என்பதற்கு இந்தப் பாடல் சான்றாக அமைகின்றது.

கோப்பிக்காலத்தில், பெரும்பாலும் தென்னிந்தியத் தமிழ் மக்கள் கோப்பி அறுவடைக்காக வந்துவிட்டு, அறுவடை முடிந்ததும் மீண்டும் தாயகம் திரும்புபவர்களாக இருந்தார்கள். இக்காலத்தில் இவர்கள் நிரந்தரக் குடியிருப்பாளர்களாக இருக்கவில்லை. ஆனாலும் இதற்கு முன்பதாகவே ஒரு கூட்டம், கறுவா உற்பத்திக்காக அழைத்துவரப்பட்டார்கள். அவர்கள் நீண்டகாலம் சிங்கள மக்கள் மத்தியில் இருந்து, சிங்களத் தேசிய இனத்திற்குள் மறைந்துபோன கூட்டமாகிவிட்டார்கள்.

கோப்பிக்கு ஏற்பட்ட நோய் காரணமாக கோப்பிச் செய்கை பெரும் வீழ்ச்சியடைந்ததால், காலனித்துவக்காரர்கள் இலாபம் பெறுவதற்காக கோப்பிக்குப் பதிலாக தேயிலையை இலங்கையில் அறிமுகப்படுத்தினர். தேயிலை அறிமுகமான பின்னர் தொழிலாளர்கள் இங்கு நிரந்தரமாகத் தங்கவைக்கப்பட்டனர். இதன் பின்னரே நிரந்தரமான இருப்பும் உழைப்பும் தேவைப்பட்டது. அந்த நேரத்தில் அழைத்துவரப்பட்ட இம்மக்களின் வாய்மொழிப் பாடல்கள்தான் அவர்களின் துயரம் மிகுந்த வருகையையும் வலியையும் எடுத்துக்காட்டும் ஆதாரங்களாக அமைந்தன.

"பானையில நெய் இருக்க
பழனி சம்பா சோறு இருக்க
எருமைத் தயிர் இருக்க
ஏண்டி வந்தோம் கண்டி சீம"
"கால் நடையா தானடந்து
காடுமல தான் கடந்து
முள் எலும்பு வழிகாட்ட
மூணாறு வந்து சேர்ந்தோம்"



Image Source - archive.roar.m

இம்மண்ணில் வந்து இம்மக்கள் மகிழ்வான வாழ்க்கை வாழவில்லை. அதற்குப் பதிலாக கொடுமையான வாழ்க்கையையே அனுபவித்தனர். அந்தத் துயரமும் துன்பமும் இம்மண்ணை நேசிக்கும் மனநிலையைப் பெறுவதற்குக் காரணமாக அமைந்தன. அதேவேளை, கல்விப்புலம் சார்ந்த புதிய பரம்பரையின் எழுச்சியும், மண் சார்ந்த போராட்டமும், அதன் விளைவாக ஏற்பட்ட இழப்புகளும் இம்மண்ணின் மீதான பற்றையும் பாசத்தையும் வலிமைப்படுத்தின. ஒடுக்குமுறைகளுக்கும், அடக்குமுறைகளுக்கும் உள்ளான சமூகமொன்றின் விடுதலை பெறுவதற்கான போராட்டமும், அந்தப் போராட்டத்தில் உயிர்நீத்தவர்களின் வரலாறும் மண்ணின் மீதான பற்றுதலை மேம்படுத்துவதற்கான வடிகாலாய் அமையும் என்பதை உலக நாடுகளின் வரலாறுகள் பதிவு செய்துள்ளன.

இத்தகைய வலிமை சார்ந்த எழுச்சிக்கும், போராட்டத்திற்கும் மக்களிடம் காணப்பட்ட நாட்டுப்புற இலக்கியங்களும் அவை அளித்த உற்சாகமும் அடிப்படையாக அமைந்தன. அவற்றில் இம்மக்கள் பட்ட துயரத்தின் வலிகள் புதைந்து கிடந்ததாலேயே இத்தகைய மாற்றமும் எழுச்சியும் வீறுகொண்டு எழுந்தன.

மக்களின் உழைப்பின் கடுமையை எடுத்துக்காட்டும் பாடல்களாகப் பின்வரும் பாடல்களைக் குறிப்பிடலாம்.

*“காலையில நேரம் பிடிச்சு*
*காடு தொங்க போய் முடிச்சு*
*கூட நிறைலையே*
*கூன பைய தோட்டத்துல”*
*“முன்னூறு ஆளுக்குள்ள*
*முள்ளு குத்தும் ஏ சாமி*
*முள்ளு ரெண்டும் மண்ணுக்குள்ள*
*முழிகள் ரெண்டும் ஏ மேல”*
*“எண்ணி எண்ணி குழி வெட்டி*
*இடுப்பு அடிச்சி நிக்கயில*
*வெட்டு வெட்டு என்கிறானே*
*வேலயத்த கங்காணி”*
*“பொழுது இறங்கிருச்சு*
*பூ மரமும் சாஞ்சிருச்சு*
*இன்னமும் இரங்கலையோ*
*எஜமானே உங்க மனம்”*

இவர்கள் பெரும்பாலும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை உழைக்க வேண்டியிருந்தது. இங்கு ஆண்கள் காலை ஆறு மணிக்கு முன்பதாகப் பிரட்டுக்களம் செல்ல வேண்டும். ‘

பிரட்டுக்களம்’ என்பது ஆண்கள் ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய வேலை எது என்பதை

கணக்கப்பிள்ளை தீர்மானித்து, அவர்கள் வேலைக்குச் செல்ல வேண்டிய களம் பற்றி அறிவிக்கும் இடமாகும். பிரட்டுக்குப் போகாவிட்டால் அந்த நபர் அன்றைய நாள் முழுவதும் பெண்களோடு கொழுந்தெடுக்கச் செல்ல வேண்டியிருக்கும். பிரட்டுக்குப் போனால் தான் ஏனைய வேலைகளுக்கு, அதாவது சில்லறை வேலைகளுக்கு, ஒதுக்கப்படுவார்கள். எனவே பிரட்டுக்களம் என்பது ஆண்களுக்கு மிகவும் முக்கியமான நாளாந்தச் செயற்பாடாகும். காலை ஆறு மணிக்கு முன்னர் போய் முதலில் நிற்பவர்களுக்கு சாதாரணமான வேலைகள் வழங்கப்படும். எனவே ஆண்கள் அனைவரும் காலை ஆறு மணிக்கு முன்பதாகப் பிரட்டுக்களம் செல்வது வழக்கமாக இருந்தது.

அதேபோல் பெண்கள் காலை 7:30 மணிக்கு அவர்கள் வேலைத்தலத்தில் நிற்க வேண்டும்; எனவே அவர்கள் காலை ஏழு மணிக்கே வேலைக்குச் சென்று ஆக வேண்டும்.

வெயிலோ மழையோ, எந்த நிலையிலும் அதனைத் தவிர்க்க முடியாது. அன்றைய நாளின் உழைப்பின் முடிவில்தான் அன்றைய நாளின் வருமானம் உறுதியாகும். இத்தகைய கஷ்டங்களின் போது, தன் சொந்த தேசத்தை விட்டுவந்து, தாய் மண் நினைவுகளில் மூழ்கி இருப்பதை இப்பாடல் தெளிவுபடுத்துகிறது.

"சீரான சீமை விட்டு
சீரழியக் காடு வந்தோம்
கூட தல மேல
குடி வாழ்க்கை கானகத்தில்"

ஒருபுறம் தேயிலை சார்ந்த வாழ்வியலும், இன்னொருபுறம் ரப்பர் தோட்டம் சார்ந்த வாழ்வியலும் இந்த மண்ணில் நிறைந்து கிடந்தன. அந்தவகையில், ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியலைக் காட்டும் இப்பாடல் குறிப்பிடத்தக்கதாகும்.

"ரப்பர் மரமானேன்
நாலு பக்க வாதுமானேன்
எரிக்க விறகுமானேன்
இங்கிலீஷ்காரனுக்கு
ஏறிப் போக காருமானேன்"

நாட்டில் புதிய பொருளாதாரப் பண்பாட்டை உருவாக்கிய ஆங்கிலேயர்கள், தேயிலை, ரப்பர், கோப்பி, கறுவா ஆகியவற்றின் மூலம் உலகளவில்



Image Source - archive.roar.media

சம்பாதித்த பணத்தை தங்களுடைய வாழ்வியலை செழுமைப்படுத்தவே பயன்படுத்தினர். எனவே, நாட்டின் முக்கிய பொருளாதார சக்தியாக பெருந்தோட்டத்துறை திகழ்ந்தது.

இலங்கை நாட்டுக்கு உலகம் தழுவிய ஒரு நாமத்தை உருவாக்கித் தந்தது 'சிலோன் டீ' என்ற சொல். இந்தத் தொழிலாளர்களின் கடுமையான உழைப்பே அதற்கு அடித்தளமாக அமைந்தது. குறிப்பாக, பெண்களின் உழைப்பினாலேயே உயர்நிலை அடைந்தது. ஆனால் பெண்களுடைய வாழ்க்கை, அவர்களுடைய தேவைகள் என்பன எந்த அளவிலும் ஏனைய சமூகத்துக்கு நிகராக மேம்படுத்தப்படவில்லை. அவர்கள் தொடர்ச்சியாக, உழைக்கும் இயந்திரமாகவே பயன்படுத்தப்பட்டனர். மார்க்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் உலகப் பெண்கள் தொடர்பாகக் குறிப்பிடுகையில்,

"தொழிற்சாலை முறையின் அடிப்படையில் அமைந்த முதலாளித்துவத்தின் வளர்ச்சி, மக்களின் வாழ்க்கையில், குறிப்பாக பெண்களின் வாழ்க்கையில் மிகவும் தீவிரமான மாற்றங்களைக் கொண்டு வந்தது. வர்க்க சமுதாயத்தின் வளர்ச்சியினால் உற்பத்தியில் இருந்து அகற்றப்பட்டிருந்த பெண்கள் மீண்டும் சமூக உற்பத்திக்குள் கொண்டுவரப்பட்டனர்" என்றனர்.

இந்தக் கருத்து பெரும்பாலும் மலையகப் பெண்களுக்கு மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. இங்கு பெண்கள் கடும் உழைப்பாளர்களாக மாற்றப்பட்டு இருந்தனர். அவர்களின் ஒவ்வொரு அசைவும் ஒடுக்குமுறைக்குள் உள்வாங்கப்பட்டிருந்தமை இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும். அத்தகைய

அடக்குமுறைகளில் இருந்து அவர்கள் விடுபட முடியாத அளவுக்கு உழைப்பும், இந்தியப் பண்பாட்டோடு கலந்திருந்த சாதி, சடங்கு முறைகளும் அவர்களை அடக்கி ஒடுக்கின. மேலும், அவர்கள் வேலைத்தலத்தில் பெற்ற அவமானங்களும் அதிகமானவை.

> "கூட நிறையவில்ல
> கொழுந்தெடுக்கச் சிந்தை இல்ல
> கங்காணி சொன்ன சொல்லு
> கண்ணீரைக் கொட்டுதடி"

கங்காணிமார்களின் அடக்குமுறையும், ஆபாசப்பேச்சும், அவமானப்படுத்தலும் பெண்களை மேலும் துன்பப்படுத்தின. அவர்கள் கங்காணியை எதிர்த்து எந்த வேலையையும் செய்ய முடியாது என்ற மனநிலையும் உருவாகியது. எதிர்த்தால், முறையான அல்லது வளமான வேலைத்தலத்தில், நிம்மதியாகக் கொழுந்தெடுப்பதற்கான நிரை (தேயிலை மரங்களின் வரிசை) பிடிக்க இடம் கொடுக்க மாட்டார்கள் என்ற பயமும் ஏற்பட்டது.

கொழுந்தெடுப்பதில் பல்வேறு நுட்ப முறைகள் உள்ளன: அரும்பைக் கிள்ளிவிடக் கூடாது, கரட்டு இலையை எடுக்கக்கூடாது, முத்தலை எடுக்கக்கூடாது, காது முடிச்சு போடக்கூடாது. கங்காணிமார் இவற்றைக் காரணங்காட்டி, பெண்களை பின்னால் இழுத்து மீண்டும் அவற்றைச் சரி செய்யும்படி சொல்வார்கள். இது சிறந்த தொழிலாளருக்கான அடையாளமாக இருக்காது. ஒவ்வொரு பெண்ணும் இதனை அவமானமாகவே கருதுவார். எனவே, பெண்கள் இந்தச் செயலை விரும்ப மாட்டார்கள். அதனால், கங்காணிமார்கள் தங்கள் வஞ்சத்தைக் காட்டுவதற்கு, மேற்குறிப்பிட்ட செயல்களில் பெண்களை ஈடுபடுத்தி அவர்களைப் பழிவாங்குவார்கள். இந்த அவமானச் செயலுக்கு உட்படாத வகையிலும், பெண்கள் தமது வேலையை முடிக்க வேண்டிய கட்டாய நிலை இருந்தது.

இங்கு அடக்குமுறை என்பது அதிகாரம் சார்ந்த ஒன்றாகும். அதேவேளை, வேலைத்தலத்தில் கங்காணிகளின் அடக்குமுறை அவமானப்படுத்தலோடும், அடிபணிதலோடும் இணைந்த ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டது. ஒரே இனம், ஒரே மொழி, ஒரே ஊர், ஒரே வாழ்விடம் என்ற போதும், அதிகார நிலையில் கங்காணிகள் துரைமார்களின் சேவகர்களாக மதிக்கப்பட்டதால், அவர்கள் துரைமார்களைவிடக் கொடுமையான அடக்குமுறையாளர்களாகத் திகழ்ந்தனர். 1946 ஆம் ஆண்டு இலங்கையில் கண்காணிமார்கள் சட்டம் ஒழிக்கப்பட்டது. இது, அவர்கள் பெருந்தோட்டத்துறையில் எவ்வளவு வலிமையோடு இருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது.

> "அடியும் பட்டோம்
> மிதியும் பட்டோம்
> அவமானச் சொல்லும் பட்டோம்
> முழி பிரட்டி கங்காணியின்
> மூங்கிலிலே அடியும் பட்டோம்"
> "தோட்டம் பெரலி இல்ல
> தொர மேல குத்தம் இல்ல
> கண்காணிமாராலே
> கணப்பிறலி ஆகுதய்யா"

என்ற பாடல்கள் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் கண்காணிமார்கள் எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது.

இதிலிருந்து விடுபட பல முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் அவை பல்வேறு வகையில் அடக்கப்பட்டன. இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் கோ. நடேசய்யரின் வருகையும், தொழிற்சங்க முயற்சியும் இம்மக்களை எழுச்சிப்படுத்தின. அவரின் மனைவி திருமதி மீனாட்சி அம்மாள் எழுச்சிமிக்க பாடல்களை எழுதி, இம்மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார். கால ஓட்டத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், தொழிலாளர் நலன் சார்ந்த சட்டங்கள் இவர்களின் வாழ்வியலில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின. அதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது டொனமூர் அரசியல் திட்டமாகும். இதன்மூலம் இம்மக்கள் வாக்குரிமை பெற்றதோடு, 100 ஆண்டுகளுக்கு பின்னர் அரசியல் நீரோட்டத்திலும் இணைந்தனர். வர்க்க குணமிக்க அரசியல் சிந்தனைக்குள் உள்வாங்கப்பட்ட இவர்களின் அரசியல் பிரவேசத்தையும், பாராளுமன்ற உறுப்புரிமையையும் எண்ணி அஞ்சிய பௌத்த சிங்களப் பேரினவாதமும், முதலாளித்துவ அரசியல் சிந்தனைகளும் இவர்களை

நாடற்றவர்களாக ஆக்கி குடியுரிமையைப் பறித்தன.

“மலையக மக்களின் தோட்டப்புற வாழ்வுடன் இணைக்கப்பட்ட அரை அடிமை நிலை, அதன் அடியாக தோன்றிய வர்க்க இனத்துவ அடக்குமுறைகள், கூடவே அம்மக்கள் தமக்காகச் செய்த தியாகங்கள் யாவும் அவர்கள் இந்த நாட்டின் தனித்துவமான இனம் என்ற உணர்வை ஏற்படுத்தியிருந்தன. அத்தகைய தேசியத்தின் அடியாக எழக்கூடிய எழுச்சிகள், மாற்றங்கள் என்பன ஒரு வகையில் நாட்டின் ஆதிக்க சக்திகளை கதிகலங்கவே செய்திருக்கின்றன” என்ற மு.சி. கந்தையாவின் கருத்து இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

இதன் பின்னர் இடம்பெற்ற துன்பங்கள் தனியாகப் பேசப்பட வேண்டும். அடுத்ததாக, இவர்களின் இருப்பிலும், இந்த நாட்டின் பிரஜைகளாக நிலை பெறுவதிலும் இப்பாடல்கள் எப்படித் தாக்கம் செலுத்தின என்பதைப் பார்க்கலாம். இப்பாடல்கள் கற்றுத்தந்த வரலாற்று இழப்புகளும், துயரங்களுமே அதற்கு உந்துசக்தியாக அமைந்தன.

“கூனி அடிச்ச மல
கோப்பிக் கண்ணு போட்ட மல
அண்ணன் தோத்த மல
அந்தோ தெரியுதடி”

இப்பாடல் இம்மண் சார்ந்த உரிமையை நிலைபெறச் செய்யும் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது. இது எமது பரம்பரையால் உருவாக்கப்பட்ட மண், பல்லாயிரம் தொழிலாளர்களின் உயிரை விதைத்திருக்கின்ற மண், இதன் உரிமையும் நிலைபேறும் எமக்கு உரித்தானது என்ற மனநிலை மக்களிடத்தில் ஏற்படத் தொடங்கியபோது தான், மலையக மக்கள் நாங்கள், மலையகம் எமது தேசம் என்ற கருத்தாடல்கள் முன்னோக்கி நகர்த்தப்பட்டன.

“ஊரான ஊர் இழந்தேன்
ஒத்தப் பன தோப்பிழந்தேன்
பேரான கண்டியில
பெத்த தாய நானிழந்தேன்”

என்ற பாடல் வரிகள், இம்மண்ணின் மீது இம்மக்கள் இருப்புக் கொண்டதற்கும், இதுவே என் தாய் மண் எனப் போற்றியதற்கும் ஆதாரமாக அமைகின்றன. தொழிற்சங்க வளர்ச்சி, இடதுசாரிகளின் எழுச்சி, புதிய கல்விப் பரம்பரைகள், அரசியல் மாற்றங்கள், தொடர்ச்சியாக ஏற்பட்ட இன அழிப்பு முறைகள் — யாவும் இம்மக்களின் எழுச்சிக்கும், இருப்புக்கும் உரம் இட்ட நிகழ்வுகளாகத் திகழ்கின்றன.

இலங்கையில் C.W.W. கன்னங்கராவினால் கொண்டுவரப்பட்ட இலவசக் கல்வித் திட்டத்திலும் மலையக மக்கள் புறக்கணிக்கப்பட்டனர். இவ்வாறு, கல்வி நிலையில் புறக்கணிக்கப்பட்ட மக்கள், பல்வேறு போராட்டங்களின் மூலம் கல்வித்துறையிலும் காலடி பதித்து முன்னோக்கி வருவதற்கு இந்த வாய்மொழிப் பாடல்களே உந்துசக்தியாக இருந்துவந்தன. ஜெர்மனி, இத்தாலி, ரஷ்யா போன்ற நாடுகளின் எழுச்சிக்கு நாட்டுப்புற இலக்கியங்கள் அடிப்படையாக அமைந்ததுபோல், மலையக மக்களின் இருப்புக்கும், பண்பாட்டு எழுச்சிக்கும் வாய்மொழிப் பாடல்கள் ஆதாரமாக அமைந்தன. அவற்றின் மூலம் மலையக கலாசாரமும் பண்பாடும் கட்டியெழுப்பப்பட்டன.

மலையக மக்களின் உழைப்பு சார்ந்த பல அம்சங்கள், கலாசார உருவாக்கத்தில் வலிமைபெற்று இருப்பதை உணரலாம். எனவே, ‘உழைப்பே மனிதக் கலாசாரத்தை சிருஷ்டிக்கிறது அல்லது உழைப்பை ஒட்டிய சூழ்நிலைக் காரணிகளே கலாசாரத்தைத் தீர்மானிக்கின்றன’ என்ற வாதம் உண்மையாகிறது. இதுவே மலையக மக்களின் இருப்புக்கும், உயிர்ப்புக்கும் அடிப்படையாகவும் அமைகிறது.

## சான்றாதாரங்கள்


1. சிவலிங்கம். மு., (2007) மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள், ரெக்னோ பிரின்ட்.
2. சாரல் நாடன்., (1993) மலையக வாய்மொழி இலக்கியம், சவுத் ஏசியன் புக்ஸ் - சென்னை.
3. வேலுப்பிள்ளை., மலைநாட்டு மக்கள் பாடல்கள், கலைஞன் பதிப்பகம் - சென்னை.
4. கந்தையா. மு.சி., (2022) சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள், பொன்னுலகம் புத்தக நிலையம் - திருப்பூர்.
5. கிரிஸ் ஹார்மோன்., (2014) மார்க்சிய இயங்கியல், விடியல் பதிப்பகம் - கோவை.
6. லெனின் மதிவானம்., (2014) சமூக இலக்கியத் தளங்களில் படைப்புகளும் செயற்பாட்டாளர்களும், மகிழ் பதிப்பகம் - கிளிநொச்சி.

# நீர்வளப் பாதுகாப்பும் நிலவள மேம்பாடும்: உணவுத் தன்னிறைவின் அடித்தளங்கள்

சுப்ரமணியம் சிவகுமார்



கலாநிதி. சுப்ரமணியம் சிவகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளங்கலைப் (BSc Eng.) பட்டமும், இந்தியத் தொழில்நுட்பக்கழகம் ரூர்க்கியில் (IIT Roorkee) நீர்வள மேம்பாட்டுத்துறையில் முதுகலைப் (MSc) பட்டமும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (PhD) பட்டமும் பெற்றவர். பின்னர் நோர்வேயின் உயிரியல்  அறிவியல் பல்கலைக்கழகத்திலும் (NMBU, s), வடகிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்திலும் (Bod) பிந்தைய முனைவர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும், நீர்ப்பாசனப் பொறியாளராகவும் 28 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பல்கலைக்கழகங்களில் மூத்த விரிவுரையாளராகச் செயற்பட்டார். விவசாய அமைச்சகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும், வடமாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் பணியாற்றினார். பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் விருந்தினர் விரிவுரைகளையும், முக்கிய உரைகளையும் (Keynote Speeches) நிகழ்த்தியுள்ள இவர், குறியீட்டு அறிவியல் இதழ்களில் 45க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு, இதுவரை 7 நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், 18 சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார்.

உலகில் உள்ள ஜீவராசிகளின் உயிர்வாழ்வுக்கு நீர் மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். உலகிலே மொத்தமாக 1400 மில்லியன் கனகிலோமீற்றர் நீர் உள்ளது. உலகச் சமநிலையில் இதன் அளவைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ முடியாது (ஆனால் இதன் இருப்பின் விகிதத்தையே மாற்ற முடியும்).




At global level, three fourth of the earth's surface is covered with water resources comprising 97.3% salt water and the balance 2.7% as fresh water. Of the latter, 77% occurs polar ice and glaciers, 22% groundwater, 0.3% in lakes and rivers and 0.7% in soil moisture and atmospheric vapor

பூமியில் உள்ள மொத்த நீரில், 97.4% ஆனது உப்பு நீராகும். எஞ்சிய 2.6% மட்டுமே நன்னீர் ஆகும். இந்த 2.6% நன்னீரில், சுமார் 2% ஆனது பனிக்கட்டியாகத் துருவங்களிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் உறைந்துள்ளது. மீதமுள்ள 0.6% நன்னீரின் மொத்த அளவு சுமார் 8.4 மில்லியன் கன கிலோமீட்டர்கள் ஆகும். இந்தப் பங்கீட்டிலும், 8 மில்லியன் கன கிலோமீட்டர்கள் நிலத்தடி நீராகவும், 0.4 மில்லியன் கன கிலோமீட்டர்கள் மனிதனால் உருவாக்கப்பட்ட குளங்கள், இயற்கை ஆறுகள், மற்றும் ஏரிகளிலும் உள்ளன. இருப்பினும், இந்த நீர் இருப்பும்கூடச் சமமாக எல்லா இடங்களிலும் பரவி இல்லை. இதன் காரணமாகவே இயற்கையின் படைப்பில் சில இடங்கள் நிரந்தரப் பாலைவனங்களாகவும், சில இடங்கள் நீர் வளம் மிகுந்த சோலைகளாகவும் காணப்படுகின்றன.

இலங்கையில் நீர்ப்பாவனையானது மனிதனால் உண்டாக்கப்பட்ட நீர்த்தேக்கங்களில் இருந்தும், இயற்கை ஆறுகளில் இருந்தும், நிலத்தடி நீரில் இருந்தும் பெறப்படுகின்றது. அண்மைய காலங்களில் இலங்கையில் உள்ள அநேகமாக எல்லா நீரூற்றுப் பிரதேசங்களும் நீர்த்தேக்கங்களாக மாற்றப்பட்டு விட்டதனால், வீட்டுப்பாவனை மற்றும் சனத்தொகைக்கேற்ப அதிகரித்து வரும் விவசாய நீர்த் தேவைகளுக்கு நிலத்தடி நீரைப் பாவிக்கும் தன்மை அதிகரித்து வருகின்றது.

நிலத்தடி நீரானது மூன்று வகையில் நிலத்தில் இருக்கின்றது.

1. மிக ஆழமான இரட்டை ஊடுபுகவிடா பாறைகளுக்கிடையில் உள்ள நீர்.
2. ஊடுபுகவிடா பாறையில் மேல் தொங்கியுள்ள நீர்.
3. மழை நீர் நிலத்தினுள் சென்று மண்ணில் உள்ள இடைவெளிகளில் தேங்கி இருக்கும் நீர்.

இம்மூன்றிலும் மூன்றாவது நீரானது ஒரு தற்காலிக இருப்பேயாகும். இரண்டாவது ஓரளவிற்கு நம்பகத்தன்மையுள்ள இருப்பாகும். இந்த நீர் நம்மால் அநேகமாகக் கிணறுகளில் ஊற்றின் மூலம் பெறப்படும் நீராகும். முதலாவது வகை நீரானது மிகவும் பாரிய நிலத்தடி நீர்த்தேக்கங்கள் போன்றதாகும். இந்நீரானது, ஆறுகளால் நிலத்தின் கீழ் தொடர்ச்சியாக மீள் செலுத்தப்படுவதால், அதிக நம்பகத்தன்மை கொண்டதாகும். இதுவே ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் மூலம் பெறப்படும் நீராகும்.

இவ்வாறாக இருப்பில் உள்ள நீரை முக்கியமாக இரண்டு வகைகளில் நாங்கள் நிலத்தில் இருந்து பெறுகின்றோம்.

1. வாளி மூலம் அள்ளுதல்.

2. பம்பிகள் மூலம் வெளியே எடுத்தல்.

இம்முறைகளில் வாளி மூலம் வெளியே எடுக்கும் நீரின் அளவானது மிகவும் குறைவாகவும், நீர் அள்ளும்போது நீர் ஊற்றிலிருந்து மீள் கிணற்றிற்குச் செலுத்தப்படும் நீரின் அளவிலும் குறைவாக இருப்பதால், இதனால் எந்த ஒரு பாதிப்பும் நிலத்தடி நீரிற்கு ஏற்படாது.

பம்பிகள் மூலம் நீர் எடுக்கும்போது இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன. ஒன்று கைப்பம்பிகள், மற்றது மின்சார அல்லது எரிபொருள் பம்பிகள். கைப்பம்பிகள் மூலம் நீரை வெளியே எடுக்கும்போது, அது வாளியின் மூலம் எடுப்பதைப் போல, நீர்ப்பீடத்திற்கு இடையில் மிகத் துல்லியமாகவும், நேர்த்தியாகவும் அமைவதால், நிலத்தடி நீரின் இருப்பில் ஒரு குறிப்பிட்ட தாக்கத்தையே ஏற்படுத்துகின்றது. ஆனால் மின்சார மற்றும் எரிபொருள் பம்பிகள் மூலம் நீர் எடுக்கும்போது நீர் பம்பும் விகிதமானது நீர் ஊறும் விகிதத்திலும் விட அதிகமாக இருப்பதால் நிலத்தடி நீர் மட்டம் படிப்படியாகக் குறைந்து செல்லும்.

இவ்வாறாக, நீரின் அதிகப்படியான பயன்பாடு நிலத்தடி நீரின் இருப்பில் தாக்கங்களை ஏற்படுத்துவதுடன், நிலத்தின் வலிமையையும் குறைக்கிறது. நீண்டகால நோக்கில் பார்க்கையில், இது அப்பகுதிகளில் உள்ள கட்டடங்களின் அத்திவாரங்கள் இறங்குதல் போன்ற

விளைவுகளுக்கும், சில சமயங்களில் மிகவும் நுண்ணியதான பூமி அதிர்வுகள் ஏற்படுவதற்கும் கூட இட்டுச்செல்லலாம்.

மேலும், மிதமிஞ்சிய நீர் பம்புதலால் நீரின் குணாதிசயத்தில் மாற்றம் ஏற்படும். நிலத்தடி நீரானது பொதுவாக நன்னீராக இருந்தபோதிலும், கடலை நோக்கிச் செல்லும்போது அதன் உவர்த்தன்மை சற்றுக் கூடிக்கொண்டே செல்லும். இத்தன்மையானது மாரி காலத்தில் குறைவாகவும், கோடை காலத்தில் சற்றுக் கூடியதாகவும், சாதாரண சூழ்நிலையில் சமநிலையிலும் இருக்கும். அதாவது நிலத்தடி நீரின் சமநிலையில் கடல் நோக்கிய ஒரு நாட்டம் எப்போதும் காணப்பட்டுக் கொண்டிருக்கும். மிகவும் வறண்ட கோடை காலங்களில் மிகச் சிறிய அளவில் எதிர்த் திசை ஓட்டம் இருக்கலாம்.

ஆனால் நீர்பரப்பும் விகிதம் அதிகரித்தால், நீர்மட்டம் தாமதமாக எதிர் ஓட்டத்தைத் தூண்டி நிலத்தடிச் சமநிலையைக் குழப்புகின்றது. இது நிலத்தடி நீரை உப்புநீராக மாற்றுவதனால் காலப்போக்கில் இப்பிரதேசம் உவர்நீர்ப் பிரதேசமாக மாறிவிடும். இவ்வாறான அபாயம் அநேகமாக குடாநாடுகள் மற்றும் கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட வாய்ப்புண்டு. அதாவது, கடற்கரைகளில் இருந்து 5 கிலோமீற்றருக்கு உட்பட்ட பிரதேசங்கள் கூட இவ்வாறான பாதிப்பிற்கு உட்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இருந்தாலும், சனத்தொகைப் பெருக்கத்திற்கேற்ப எமது உணவுத் தேவை அதிகரித்துக்கொண்டே செல்வதால், பொது விவசாயத் தேவைகளுக்கு நிலமேல் நீர் வளம் போதுமானதாக இல்லை. எனவே, நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகிறது. கோடைகாலங்களில் நிலத்தடி நீரைத் தொடர்ச்சியாகப் பாவிக்க வேண்டிய தேவை தவிர்க்க முடியாதிருப்பின், மழைக்காலங்களில் இயற்கையாகவே நிலத்தடி நீரின் இருப்புக்கு மழை நீரின் பங்களிப்பை அதிகரிக்கக்கூடிய மாற்று வழிகளைக் கையாள வேண்டும். அதாவது மழை நீரை இயலக்கூடியளவிற்கு தேக்கவைத்து நிலத்தில் ஊறவிடுதல், கடலுக்கு மழை நீர் செல்லாது தடுத்து நிலத்தில் ஊறவிடுதல் மற்றும் சில சிறிய குளங்களை நீர்ப்பாசனத் தேவைகளுக்கு அல்லாது நிலத்தில் ஊறவிடுவதற்காக மட்டும் பாவித்தல் ஆகிய முறைகளைக் கையாளலாம்.

பண வசதி படைத்த நாடுகளில் செயற்கை முறையில் மாரி காலங்களில் நீரை நிலத்தின் கீழ் பம்பிகள் மூலம் பாய்ச்சும், மீள்பாய்ச்சல் முறையும் பாவனையில் உண்டு.

## பாசனத்திற்கான நீர்

பாசனத்திற்கான மேற்பரப்பு நீர் ஒரு வரையறுக்கப்பட்ட வளமாக இருப்பதால், இணை ஆதாரமாக நிலத்தடி நீரின் பயன்பாடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனினும், மைய வளமாகக் கருதப்படும் நிலத்தடி நீரின் நிலைத்தன்மை மற்றும் உற்பத்தித் திறனான பயன்பாட்டை பாதிக்கக்கூடிய பாகுபாடான சுரண்டல்கள், அதன் சமச்சீரற்ற எடுத்துக்காட்டலால் உருவாகின்றன.

பாரம்பரியக் கமத்தொழில் பகுதிகளில், விசேடமாக உலர் வலயத்தில், ஏனைய துறைகளுடனான போட்டித் தன்மையான கிராக்கி, நீர்ப் பற்றாக்குறையை விளைவிக்கின்றது. வளப்பட்டியலுக்கு வழிவகையின்றி ஒழுங்குபடுத்தப்படாத சுரண்டலின் காரணமாக இரண்டாந்தர மூலமாக நிலநீரின் இணைப்பிலான உபயோகம் ஆரம்பநிலை மட்டங்களைப் படிப்படியாக அடைகின்றது. தற்போது நோக்கப்படுவது போல், நீரின் பகிரங்க சிறப்புத் தன்மையைக் கருத்தில் எடுக்கும்போது, மேற்பரப்பு நீரைப் பெறுவதற்கான அடைதல் தோன்றும் போது, பிரித்தெடுப்புக்கு பௌதீக ரீதியான இடர்பாடுகள் இல்லை எனத் தோன்றுகிறது.

உண்மையில், அது இந்தப் பொதுவான சிறப்பின் தன்னிச்சையான சுரண்டலை ஊக்கப்படுத்துகின்றது. ஆற்றுப் பாய்வுகள் உட்பட மேற்பரப்பு நீருடனான அதன் தொடர்புகளைக் கருத்தில் கொள்ளாமல் விடுவதால், நிலநீர் வளத்தின் தரம் குறைவது அதன் நிலைத்திருக்கும் தன்மைக்குப் பாதிப்பினை ஏற்படுத்தும் கடுமையான காரணியாக அமையக்கூடும். இது தொடர்பில் கமக்கிணறுகள் பாரிய அச்சுறுத்தலாகக் கருதப்படுகின்றது. நீர் வளம் கிடைக்கும் உலர் வலயங்களில் கூட, குறிப்பாகக் கரையோரப் பகுதிகளில், விடுதிகள் (ஹோட்டல்கள்) மற்றும் ஏனைய தொழில்களினால் மிகையான நீர் பிரித்தெடுத்தல் மேற்கொள்ளப்படுகிறது. இதன் தாக்கங்கள் நீரின் மாசுபடுத்தல் மற்றும் மேற்பரப்பு நீரின் தரத்தில் குறைபாடு போன்ற விடயங்களில் கண்கூடாகத் தெரிகின்றது.

நில நீரின் பரந்த வகைப்படுத்தல் பின்வரும் முறையில் சாத்தியமானதாகும்.

1. ஆழமற்ற காசித்து (Karstic) நீர்தாங்குப் படுக்கை - யாழ்ப்பாணக் குடாநாடு
2. கரையோர மண்களின் ஆழமற்ற நீர்தாங்குப் படுக்கை.

3. புத்தளத்தில் இருந்து முல்லைத்தீவு வரையில் நீடிக்கும் மயோசின் சுண்ணக்கல் வலயத்தின் ஆழ் கட்டுப்பட்ட நீர்தாங்குப் படுக்கை.

4. தென்மேற்கு இலங்கையில் செம்பூரான்கல் பிராந்திய நீர்தாங்குப் படுக்கை.

5. உலர் வலயத்தின் உருமாறிய கடும்பாறைப் பிராந்தியத்தில் ஆழமற்ற நிலநீர், நீர்வீழ்ச்சி, உள்நாட்டுப் பள்ளத்தாக்குகள்.

6. உலர்வலயத்தின் உருமாறிய அடித்தளப் பாறைகளின் இணைப்புகள், பிளவுகள், மற்றும் முறிவு வலயங்கள் ஆகியவற்றின் ஆழமான, பரவலான மற்றும் அங்கொன்றும் இங்கொன்றுமான நிலநீர்.

இவற்றுக்கு மேலதிகமாக, உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, நாடு முழுவதும் பரவலாக உள்ள ஆழமற்ற திறந்த கிணறுகள், உள்நாட்டுப் பள்ளத்தாக்குகளில் இருக்கும் நெல் வயல்களின் தாழ்ந்த மற்றும் நடுத்தர நிலப்பகுதிகள் (சமவெளிகள்) மற்றும் பாறைத்தொடர் அமைப்புகள் கொண்ட பள்ளத்தாக்கு நிலவுருக்கள் ஆகியவற்றின் ஊடாகப் பரவியுள்ள ஆழமற்ற நீர்ப்பீடத்திலிருந்து தமது நீர்வழங்கலைப் பெறுகின்றன. மேலும், மேட்டுநில நீர்ப்பீடத்திலிருந்து நீர்ப்பாசனம் வெளியேறும் உயரமான அமைவிடங்களில் ஊற்றுப்பாய்வு இடம்பெறுகிறது.

மலைநாடு முழுவதும் இடம்பெறும் வேறுபட்ட நீர்ப்பீடங்களின் வெளியேற்றமானது, அடியில் உள்ள பாறைப் படுக்கைகளின் மேற்பரப்பு இடவிளக்கவியலை ஊடறுக்கின்றன. படிகப்பாறை மற்றும் பளிங்குப்பட்டறைப் பாறை ஆகியவற்றில் உள்ள நீரூற்றுக்கள், பிளவுகளாலான உலர் வலயத்தை விட ஈரவலயத்தில் உயர்வான விளைச்சலைக் கொடுக்கின்றன. முறையான சிறந்த நீர்ச்சுழற்சி இதற்கு ஒரு முக்கியக் காரணமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஆழமற்ற காசித்து நீர்ப்பீடமே (Karstic Aquifer) நாட்டில் நன்கு மதிப்பாய்வு செய்யப்பட்டு, ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிலநீர் வளமாகும். ஈரமான மழைக்காலத்தின்போது, முழு நீர்தாங்குப் படுக்கைகளும் நன்னீரால் மீள் நிரப்பப்படுகின்றன. ஆனால், இந்த நீரில் 50% ஆனது, அடித்தள சுண்ணக்கல்லில் இடம்பெறும் காசித்து (Karstic) கடத்திகளின் விளைவாக, வறண்ட சிறுபோகத்தின்போது கடலுக்கு இழக்கப்படுகிறது. மீதமுள்ள 50%, தீவிரமான ஏற்று நீர்ப்பாசனத்திற்கும் உள்ளூர்த் தேவைகளுக்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. உள்நாட்டிலிருந்து கடலுக்கான நன்னீரின் பாய்ச்சல், காங்கேசன்துறை கரையோரத்தில் நேரடியாகவே அவதானிக்கப்பட்டது.

நாட்டின் பெரும்பாலான கரையோரப் பகுதிகளில் பொதுவாகக் காணப்படும் கூழாங்கற் குன்றுகள், மணல் தடைகள் மற்றும் உயர்த்தப்பட்ட கடற்கரைகள் ஆகியவற்றில் உள்ள திரண்டிருக்காத மணல் குறித்துச் சில ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. ஆயினும், இந்த நீர்தாங்குப் படுக்கைகளின் தன்மையையும், குணாதிசயத்தையும் பற்றிய சிறந்த புரிதல், 1960களில் மேற்கொள்ளப்பட்ட முந்தைய ஆய்வுகளிலிருந்தே பெறப்பட்டுள்ளது. நெருக்கமான உப்புநீர்ச் (உவர்நீர்) சூழலில், மெல்லிய படிவுகளிலிருந்து பெறக்கூடிய நன்னீரின் மட்டுப்படுத்தப்பட்ட அளவே இந்த ஆழமற்ற நீர்தாங்குப் படுக்கையின் முக்கிய அம்சமாகும்.

மேற்பரப்பு நிலநீரின் கூட்டுச்சார்பு குறித்து மிக நெருக்கமான பரிசீலனை செய்வதும், வளத்தின் நிலைமையைப் பட்டியலிடுவதும் அவசரமான தேவையாகத் தோன்றுகிறது. இந்த வளத்திற்கு சீர்படுத்த முடியாத சேதத்தை ஏற்படுத்தக்கூடிய ஆபத்து நிறைந்த துறைகளை இனங்காட்டுவதும் அத்தியாவசியமாகும்.

ஊக்கமளிப்புத் திட்டங்கள் மூலமான கமக்கிணறு அபிவிருத்தி (விவசாயக் கிணறுகள்) அல்லது கைத்தொழில் பயன்பாடுகள் போன்ற கட்டுப்படுத்த முடியாத விஸ்தரிப்பினால் பாரிய தாக்கங்கள் விளையக்கூடும். எனவே, நீர் வளங்கள் மீதான உள்ளூர்த் திட்டங்களை மிகக் கவனமாக அமுல்படுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால், முதலீடு இழக்கப்படுவது மட்டுமன்றி, எதிர்பார்க்கப்பட்ட மீள்நிரப்புதலில் கூடப் பாதிப்பு ஏற்படும். இதன் விளைவாக, மேற்பரப்பு நீர்வழங்கலிலும் எதிர்மறையான தாக்கங்கள் ஏற்படலாம். நீர்ப்பீடங்களின் குறைப்புக் காரணமாக பல பிரதேசங்கள் பாரதூரமாகப் பாதிப்படைந்துள்ளன. பொருளாதாரங்கள், இடர்பாடுகளின் அடிப்படையில் சமநிலைக் கட்டுப்பாட்டை மேற்கொள்கிற போதிலும், முதலீடு மற்றும் அதனுடன் தொடர்புடைய செலவுகளை நாடு இழக்கிறது; இதன் நன்மை - தீமைகளின் பாரத்தை, இறுதியில், விவசாயிகளே தாங்கிக்கொள்ள வேண்டிய நிலை உருவாகிறது.

இலங்கையைப் பொறுத்தளவில், நாட்டின் நீர் வளங்களின் உள்ளகப் பாகமாக நிலநீரின் பரிகரிப்புத் தேவை அவசியமானதாகும். நிலநீரின் சூழலியல் ரீதியில் நிலைத்திருக்கக்கூடிய முகாமைத்துவத்திற்கான சிறப்பியல்பின் பிரக்ஞை உடனடியாக ஆரம்பிக்கப்பட

வேண்டும். நீரின் உபயோகங்களிலும் செயன்முறைகளிலும் நிபந்தனைகளைக் கோரும்போது, அது நிலத்தளத்தின் சீர்கேட்டுக்கு இட்டுச்செல்லும் செயற்பாடுகளை மந்தநிலையை அடையச் செய்கிறது. விநியோகத் தளத்தின் மாசுபடுத்தல் அல்லது கலப்படம் சாத்தியமாகும் சூழலில், நீரின் பாதுகாப்பை உறுதிசெய்ய 'மூடப்பட்ட அமைப்புக்கள்' கோரப்படுகின்றன. அவ்வாறு செய்யாவிட்டால், சிறந்த தரமான குடிநீர் விநியோகம் போன்ற அடிப்படைச் சமூகத் தேவைகளுக்கு ஆதரவளிக்கும் முக்கியமான திட்டங்கள் கூடப் பாதிக்கப்படும். இதன் விளைவாக, மாற்று வழிகளுக்காக அதிகச் செலவுடைய தீர்வுகளை நாட வேண்டிய தேவை ஏற்படும். குறிப்பிட்ட உவர் நிலை மட்டங்களைக் கோரும் இறால் பண்ணைகள் உள்ள வடமேல் கரையோர வலயங்களில் இத்தகைய சூழ்நிலைகள் ஏற்கனவே தோன்றியுள்ளன. இது கட்டுப்பாடின்றி வெளியேற்றப்பட்டால், மென்மையான நீர்க் குழிவுகளுக்கு ஊறு விளைவிக்கும். இத்தகைய சூழ்நிலைகளில், பெரும் குடிநீர் மற்றும் வேளாண் பிரச்சினைகளின் அபாயங்களைப் புறக்கணிக்கும் நிலை காணப்படுவதால், நீரை வெளிச்செலுத்தாத மூடப்பட்ட அமைப்புகளின் அவசியம் வலியுறுத்தப்பட வேண்டும்.

நிலநீரை உபயோகிப்பதற்கான தெளிவான கொள்கை மற்றும் வழிகாட்டலுக்கான அவசியத்தை இது உச்சப்படுத்துகின்றது. அத்துடன், முறையான உரிமப்பத்திரங்களைப் பெறுதலையும் உறுதிப்படுத்துவதற்கான அத்தியாவசியமான கட்டுப்பாட்டுச் சட்டக் கட்டமைப்புகளும், நிறுவன ரீதியான ஒழுங்குகளும் தேவைப்படுகின்றன.

### மேற்பரப்பு நீரும் அதன் முகாமையும்

முழுச் சமுதாயத்திற்கும் மிகவும் முக்கியமானது நீர் என்பது யாவரும் அறிந்ததே. குடிப்பதற்கும் உடலைச் சுத்திகரிப்பதற்கும், விவசாயத்தை மேற்கொள்ளவும், மின்சார உற்பத்திக்கும், மகிழ்ச்சியான விளையாட்டு போன்ற எங்களது பல்வேறு செயற்பாடுகளிற்கும் நீரைப் பயன்படுத்துகின்றோம். இலங்கையில் நீரைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் பல காணப்படுகின்றன. நீரூற்றுகள், நதிகள், கிணறுகள், குளங்கள் என்பவற்றிலிருந்து நீரைப் பெற்றுக்கொள்கின்றோம். இவற்றுள் மேற்பரப்பு நீர் என்பதைப் பற்றி ஆராய்வோம்.

நீரானது கடலிலிருந்தும் நில மேற்பரப்பிலிருந்தும், ஆவியாகி மேலே கடத்தப்பட்டு பின்னர் ஆவியான நீர் ஒடுக்கப்பட்டு மீண்டும் கீழே நில மேற்பரப்பிற்கு விழுகின்றது. இந்நீரின் ஒரு பகுதி ஓடி ஆறுகள், குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களை அடைகின்றது; எஞ்சிய நீர் கடலை அடைகின்றது.




ஒரு பகுதி நிலத்திற்கூடாக உட்புகுந்து நிலத்திற்கு அடியில் சேருகின்றது. இப்பகுதி கிணற்று நீராகவோ, குழாய்க் கிணற்று நீராகவோ சென்றடைகின்றது. பிரதேசத்திற்குப் பிரதேசம் நீர் பெறப்படும் மார்க்கங்கள் மாறுபடுகின்றன. இவற்றை ஒரு பிரதேசத்தின் மண்ணின் வகை, மண்ணின் தன்மை மற்றும் தரைத்தோற்ற அமைப்பு போன்ற காரணிகள் நிர்ணயிக்கின்றன. நீராவியானது ஒடுங்கி மழையாக விழுந்து நிலப்பரப்பை அடைந்து நீர்த்தேக்கங்கள், குளங்கள் மற்றும் ஆறுகளில் சேர்க்கப்படும் நீரே மேற்பரப்பு நீராகும்.

ஆறுகள் உயர்ந்த மேற்பரப்பிலிருந்து தாழ்ந்த பகுதிகளுக்கூடாக நீரோடுகின்ற பாதை வழியே உருவாக்கப்படுகின்றன. இந்த ஆற்றின் பாதை இயற்கையாக தரைத்தோற்றத்திற்கேற்ப உருவாக்கப்படுகின்றது. இந்த ஆற்றுநீர் கடலுக்குச் சென்றடையாமல் அணைக்கட்டுகளைக் கட்டி நீர்த்தேக்கங்களுக்கு திசை திருப்புவதன் மூலம் நீர்

**இலங்கையில் நீர்ப்பாவனையானது மனிதனால் உண்டாக்கப்பட்ட நீர்த்தேக்கங்களில் இருந்தும், இயற்கை ஆறுகளில் இருந்தும், நிலத்தடி நீரில் இருந்தும் பெறப்படுகின்றது. அண்மைய காலங்களில் இலங்கையில் உள்ள அநேகமாக எல்லா நீரூற்றுப் பிரதேசங்களும் நீர்த்தேக்கங்களாக மாற்றப்பட்டு விட்டதனால், வீட்டுப்பாவனை மற்றும் சனத்தொகைக்கேற்ப அதிகரித்து வரும் விவசாய நீர்த் தேவைகளுக்கு நிலத்தடி நீரைப் பாவிக்கும் தன்மை அதிகரித்து வருகின்றது.**

சேகரிக்கப்படுகின்றது. மழைவீழ்ச்சியினால் வரும் நீர், நீரேந்தும் பிரதேசங்களை அடைந்து குளங்கள், வாவிகளில் சேர்க்கப்படுகின்றது. நீர் நிலத்திற்கூடாக உட்புகுந்து செல்லும் தன்மை குறைவாக இருப்பதற்குக் காரணம் மண்ணின் உட்புகவிடும் தன்மை குறைவாக இருப்பதேயாகும். களி மண்ணின் வீதம் கூடுதலாக உள்ள படுக்கைகள் நீர் உட்புகவிடும் தன்மை குறைந்தவையாகவும், மணல் மண் வீதம் கூடுதலாக உள்ள படுக்கைகள் நீர் உட்புகவிடும் தன்மை கூடுதலாக உள்ளவையாகவும் காணப்படுகின்றன.

பொதுவாக வவுனியா, மன்னார் மாவட்டங்கள் மழைவீழ்ச்சி குறைந்த வறண்ட பிரதேசங்களாகும். ஆதலால் ஆவியாதல் மிகக் கூடுதலாக உள்ளபோதிலும் இதன் மண்ணின் தன்மை நீரைத்தேக்கி குளங்களில் வைக்கக்கூடியதாக உள்ளது (மன்னார் மாவட்ட கடற்கரையை அண்டியுள்ள பிரதேசங்களைத் தவிர). மழைவீழ்ச்சி மூலம் கிடைக்கப்பெறும் நீர், நீரேந்தும் பிரதேசங்களை அடைந்து குளங்களில் சேரக்கூடியதாக உள்ளது. இதன்மூலம் மழைக்காலம் தவிர்ந்த மழை குறைவாகக் கிடைக்கப்பெறும் காலங்களிலும் பயிர்ச்செய்கை அதிகமானதாக இருக்கின்றது.

மேற்பரப்பு நீரானது அமுத்த வேறுபாடு காரணமாக நீர்த்தேக்கங்களிலிருந்து அணைக்கட்டின் ஊடாகக் கசிந்து வெளியேறி விரயமாகின்றது. அணைக்கட்டின் நடுப்பகுதியில் களிமண் சேர்த்து இறுக்குவதன் மூலம் கசிந்து செல்லும் நீரின் அளவைக் கட்டுப்படுத்த முடியும்.

நீர்ப்படுக்கைகளிலிருந்து நீர் வடிந்து செல்லுதலும் நீர் விரயமாகுவதற்கு ஏதுவாகின்றது. இதை குளப்படுக்கைகளில் மண்ணின் தன்மையே நிர்ணயிக்கின்றது. மரங்களின் இலைகள், சருகுகள் படுக்கைகளில் படிந்து நீர் உட்புகவிடும் அளவைக் குறைக்கின்றது. தேக்கி வைக்கும் நீரின் அளவைக் கூட்டுவதற்கு குளங்களை ஆழமாக்குவது பொருத்தமானதல்ல. இவ்வாறு செய்வதால் குளப்படுக்கையின் மேற்பரப்பு மண்ணின் ஒழுங்கமைப்புக் குலைக்கப்படும். மேலும் படிந்திருக்கும் இலைகள், சருகுகள் அகற்றப்படும். இச்செய்கையால் நீர் மேலும் உட்செல்லும் தன்மை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

மேலும் மேற்பரப்பு நீர் அசுத்தமாவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். அநேகமாக குளங்கள், வாவிகளில் பெறப்படும் நீர் இவ்வாறு மாசடைவது இலகு. மனிதர்கள், விலங்குகள் குளிப்பதாலும் தமது உடைமைகளைக் கழுவுவதற்குப் பாவிப்பதாலும் நீர் அசுத்தமடைகின்றது. மேலும் மரங்களின் இலைகள், சருகுகளினாலும், நீர் மேற்பரப்புகளில் ஒடிவந்து தேக்கப்படுவதனாலும் அதிலுள்ள கழிவுகள் நீருடன் சேர வாய்ப்புண்டு.

வடமாகாணத்தில் இன்று மேற்பரப்பு நீர் விவசாயத்திற்கே கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றது. பெரிய நீர்ப்பாசனக் குளங்களிலிருந்தும் சிறிய நீர்ப்பாசனக் குளங்களிலிருந்தும் வாய்க்கால்களின் மூலம் பயிர்ச்செய்கை நிலங்களுக்கு நீர் வழங்கப்படுகின்றது.

நெற்பயிர்ச்செய்கை பெரும்போகம், சிறுபோகம் என்று இரு பெரும் காலங்களில் செய்யப்படுகின்றது. இவற்றில் அநேகமான எல்லாவற்றிலும் நீர்த் தட்டுப்பாடு காணப்படுகின்றது. இவற்றிற்கான காரணங்கள்:

1. நீர்ப்பாசனக் குளம் அல்லது அணைக்கட்டிலிருந்து திறந்து விடப்படும் நீர் திறந்த வாய்க்கால்களின் மூலம் பயிர்ச்செய்கை நிலங்களுக்குச் சென்றடையும்போது ஏற்படும் நீர் இழப்புகள்.

2. நீர்ப்பாசனக் குளப்படுக்கையிலிருந்து நீர் உட்புகுதல், அணைக்கட்டின் ஊடாக பக்க வெடிப்பு ஏற்படல், நீர் ஆவியாதல்.

3. கிருமி நாசினி, உரம் பாவிப்பதற்கு மேலதிக நீரை உபயோகித்தல். இதனால் உண்டாகும் உப்புத்

தன்மையைப் போக்க மேலும் அதிகளவு நீரை உபயோகித்தல்.

4. பதிவேட்டிலுள்ள விஸ்தீரணத்திலும் பார்க்க அதிகளவு செய்கை பண்ணப்படல்.

5. நீரைச் சிக்கனமாகப் பாவிப்பது பற்றிய அறிவும் ஆர்வமும் குறைவாக இருத்தல்.

6. விவசாய உபகரணங்கள், விதைநெல் மற்றும் வங்கிக்கடன் என்பன விவசாயிகளுக்கு உரிய காலத்தில் கிடைக்காமை.

7. பழைய முறைப்படி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

இவ்வாறு மேற்பரப்பு நீரில் நீர் இழப்புகள் அதிகமாக ஏற்படும் சந்தர்ப்பங்களில், இயன்றளவு குறைந்த நீரைப் பயன்படுத்தி, அதிக நீரைச் சேமிக்க வேண்டும். இதன் மூலம், சிறுபோக வேளாண்மையைக் கூட்டி, 40 முதல் 60 வீதம் அளவில் வேளாண்மையைச் செய்வதற்கும், மொத்தக் கன அளவில் 35 இலிருந்து 40 வீதம் அளவிலான நீரை விவசாயம் அல்லாத தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் நீர் முகாமைத்துவ நடைமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

பயிர்ச்செய்கை தொடங்க முன்னரே இதனைப் பற்றிய திட்டமிடல் அவசியமாகின்றது. இவ்வாறு திட்டமிடும்போது கிடைக்கக்கூடிய வளங்கள், நீர்ப்பாசனத் திட்டங்களின் செயற்பாடுகள் பற்றிய சரியான தகவல்கள், விவசாயம் செய்கை பண்ணப்படும் காணியின் விஸ்தீரணம், கடந்தகால அனுபவங்கள் மற்றும் விவசாயிகளின் சமூக - பொருளாதார நிலைமைகள் ஆகியன கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். பயிர்செய் நிலத்தை இயலுமானவரை சமன்செய்து விவசாயம் செய்யப் பயன்படுத்துவதே நல்லது. நிலம் மேடும் பள்ளமுமாக இருந்தால், பள்ளப்பகுதி நிரம்பி மேட்டுப்பகுதியை அடைவதற்கு அதிகளவு நீர் விரயமாகும்.

அத்துடன் பெரும்போகச் செய்கையைத் திட்டமிட்டவாறு குறித்த நேரத்தில் ஆரம்பிப்பதன் மூலம், அக்காலத்தில் பெறப்படும் மழை நீரைப் பயன்படுத்தி, குளத்து நீரை விரயம் செய்யாமல் அடுத்த போகத்திற்குச் சேமிக்கலாம்.

மேலும் சிறுபோகத்தில் நெல் வாய்க்கால்களுக்கு அருகாமையில் உள்ள வயல்களில் தேங்கியிருக்கும் கசிவு நீரைப் பயன்படுத்தி சிறு தானியங்களை உற்பத்தி செய்வதன் மூலம் நீரை முகாமைத்துவம் செய்யலாம்.

ஒரு ஏக்கர் நெல்லுக்கு தேவையான நீரைக்கொண்டு 3 - 4 ஏக்கர் சிறுதானியங்களை உற்பத்தி செய்ய முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நீர்ப்பாசன முகாமைத்துவத்தில் மத்திய மற்றும் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களங்களும், கமத் தொழிற்சேவைத் திணைக்களங்களும் பங்காற்றுகின்றன.

இவற்றில் நீர்ப்பாசனத் திணைக்களம் கீழ்வரும் விடயங்களில் பெரும் பங்காற்றுகின்றது.

1. குளத்தில் உட்புகும், வழங்கும் மற்றும் இழக்கப்படும் நீரின் அளவை சரியாக மதிப்பிடல்.

2. பிரதான கிளை விவசாய வாய்க்கால்களைப் பராமரித்தல்.

3. விவசாயிகளுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்குதல்.

4. நீர்த் தேவையை சரியாக மதிப்பிட்டு வழங்குதல்.

5. இயலுமானவரை சுழற்சி முறை நீர் விநியோகத்தை நடைமுறைக்குக் கொண்டுவரல்.

இவை எல்லாவற்றிலும் நீர் முகாமைத்துவத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதில் பெரும் பங்களிப்பு விவசாயிகளைச் சேர்ந்தது என்பது வெளிப்படை.

### வட மாகாணத்தில் நீர் முகாமைத்துவம்

வட மாகாணத்தில் 23 ஆற்றுப்படுக்கைகள் உள்ளன. அவற்றில் ஒன்றிரண்டை தவிர ஏனைய படுக்கைகளில் கிடைக்கும் நீர்வளம் முற்றுமுழுதாகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்தப் படுக்கைகளின் கீழ் 11 பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் சுமார் 80,000 ஏக்கரும், 60 நடுத்தரத் திட்டங்களின் கீழ் 25,000 ஏக்கரும் செய்கை பண்ணப்படுகின்றது. இதைவிட சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணியில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றில் அநேகமாக எல்லாத் திட்டங்களிலும் தற்போது நீர்த்தட்டுப்பாடு எதிர்நோக்கப்படுகின்றது.

இவ்வாறு நீர்த்தட்டுப்பாடு எதிர்நோக்கப்பட்டு குறைந்தளவே பயிர் செய்யப்படும் திட்டங்களாக வவுனிக்குளம், பாவற்குளம், கட்டுக்கரைக்குளம், முத்து ஐயன்கட்டு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். நீர்த்தட்டுப்பாடு ஏற்படுவதற்கான காரணிகள் பின்வருவன.

1. படுக்கையின் விளைவில் ஏற்பட்டுவரும்

கீழ்நோக்கிய மாற்றம்.

2. நீர்ப்பாசன சாதனங்களின் செயற்பாட்டின் திறமை படிப்படியாகக் குறைந்து கொண்டே செல்லல்.

3. பருவத்தே பயிர் செய்யாமையும், மழை நீரை அதிகளவு பயன்படுத்தாமையும்.

4. நிலத்தை மட்டப்படுத்தி நீரைத் தேக்கி வைக்கத் தவறுதல்.

5. கிருமி நாசினி உரம் பாவிப்பதற்கு மேலதிக நீரை உபயோகித்தல். இதனால் உண்டாகும் உப்புத்தன்மையைப் போக்குவதற்கு மேலதிக நீரைப் பாவித்தல்.

6. பதிவேட்டில் உள்ள விஸ்தீரணத்திலும் பார்க்க அதிக விஸ்தீரணம் செய்கை பண்ணப்படுதல்.

7. நீரைச் சிக்கனமாகப் பாவிப்பது பற்றிய அறிவும் ஆர்வமும் விவசாயிகளிடமும் கீழ்மட்ட அலுவலகர்களிடமும் இல்லாமை.

8. விவசாய உபகரணங்கள், நெல், வங்கிக் கடன் முதலியன விவசாயிகளுக்கு தேவைப்படும் போது கிடைக்காமை.

9. விவசாயிகள் பழைய முறையிலேயே விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

10. மண்ணின் நீர்புகவிடும் தன்மை.

வவுனியா மாவட்டத்திலே உள்ள பாவற்குளத்தில் பெரும்போகத்திற்கு ஏக்கருக்கு 11 அடி நீர் தேவைப்பட்டது. மன்னார் மாவட்டத்தின் கட்டுக்கரைக் குளத்தில் 1987, 1988 ஆம் ஆண்டுகளில் ஏக்கருக்கு 5 முதல் 6 அடி நீர் வரை காலபோகத்தில் தேவைப்பட்டது. இதே திட்டத்தில் 1984, 1985 ஆம் வருடங்களில் 3 - 4 அடி நீர் போதுமானதாக இருந்தது. அதே வேளையில் கிளிநொச்சியில் உள்ள இரணைமடு திட்டத்தில் காலபோகத்திற்கு 5 அடி நீரும், சிறுபோகத்திற்கு 7 - 8 அடி நீரும் தேவைப்பட்டது. இவ்வாறு திட்டத்திற்குத் திட்டம் பாவிக்கப்படும் நீரின் அளவு வேறுபடுவது மேற்கூறிய ஒன்றின் அல்லது பல காரணிகளின் விளைவாகும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீர்ப்பாவனை, காலபோகத்திற்கு 2 - 3 அடியும், சிறுபோகத்திற்கு 3 - 4 அடியும் ஆகும். காலபோகத்தில் இயன்றளவு குறைந்தளவு நீரைப் பாவித்து அதிகம் சேமித்து அதன் மூலம் கூடிய விஸ்தீரணத்தில் சிறுபோகம் செய்வது என்ற இலக்கை அடைவதற்கு நீர் முகாமைத்துவ நடைமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும். இதனால் சிறுபோக பயிரின் பயிர்ச்செறிவை (Cropping Intensity) 40 - 60 வீதமாக அதிகரிக்கலாம். அல்லது அதே அளவில் பராமரித்து, நிலத்தடி நீரின் மீழ் ஊறல் மூலம் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தி, நெல் அல்லாத பயிர்ச்செய்கைக்கான நீர் பம்பும் செலவைக் குறைக்கலாம். அத்துடன் மொத்தக் கன அளவில் 35 இலிருந்து 40 வீதம் அளவிலான நீரை விவசாயம் அல்லாத தேவைகளுக்கும் பயன்படுத்தக்கூடிய வகையில் சிறுபோக வேளாண்மையைச் செய்வதற்கு ஏற்ற வகையில் நீர் முகாமைத்துவ நடைமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

நீர் முகாமைத்துவத்தில், நீர்ப்பாசன மற்றும் திணைக்களங்கள் ஒரு சாரார் ஆகவும், விவசாயிகள் மற்றொரு சாரார் ஆகவும் உள்ளனர். இந்த இரு சாராரும் தங்கள் பொறுப்பை உணர்ந்து கருத்தொருமித்து இயங்குவதாலேயே திட்ட நடைமுறை சுலபமாகும்.

## நீர் முகாமைத்துவத்தில் திணைக்களங்களின் பங்கு

நீர் முகாமைத்துவத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதில், நீர்ப்பாசனம், விவசாயம், கமத்தொழிற்சேவைகள் ஆகிய திணைக்களங்களும், அத்துடன் வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் அரசாங்க அதிபர் போன்றோர் அடங்கிய பல்வேறு தரப்பினரும் ஈடுபட்டுள்ளனர். நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பங்கினை முதலில் ஆராய்வோம்.

1. குளத்தில் உட்புகும், வழங்கும் மற்றும் இழக்கப்படும் நீரின் அளவைச் சரியாக மதிப்பிடுதல். தற்போது அநேகமான நீர்ப்பாசனத் திட்டங்களில் உட்புகும் நீரை அளக்க வழிமுறை கிடையாது. குளத்தின் நீர்பிடிக்கும் பிரதேசத்தின் மேற்பகுதியில், நீர் கொண்டுவரும் கால்வாயில், தினமும் நீரின் அளவை மதிப்பிடுதல் வேண்டும். அதேபோல் துரிசில் இருந்து வெளியேறும் நீரின் அளவு துரிசின் மூலமாகவும், பிரதான வாய்க்காலில் அமைந்துள்ள அளக்கும் கருவி (Parshall Flume) மூலமாகவும் அளந்து கணக்கிடப்படுதல் வேண்டும். அத்துடன் 'ஆவியாதல் தட்டு' மூலம் ஆவியாகும் நீரின் அளவு கணிக்கப்படுதல் வேண்டும்.

2. வாய்க்கால்களைப் பராமரித்தல்:

அ) எல்லாப் பிரதான வாய்க்கால்களிலும் பிரிவிடும் வாய்க்கால்களிலும் நீரின் போக்கை நுணுக்கமாகக் கட்டுப்படுத்தக்கூடிய நீர்ப் பாய்ச்சல் அளவு மதிப்பிடப்பட வேண்டும். அத்துடன் தேவையான இடங்களில் நீரின் மட்டத்தைக் கட்டுப்படுத்துவதுடன் கதவுகளுடன் கூடிய நீர் மட்டத்தை ஒழுங்குபடுத்தும் சாதனங்கள்

அமைக்கப்பட வேண்டும். அடிக்கடி வாய்க்கால்கள் துப்பரவு செய்யப்பட்டு அவற்றின் நீர்வலுக் குணங்கள் மாறாமல் பேணப்பட வேண்டும். பழுதடையும் மேற்படி சாதனங்கள் உடனுக்குடன் திருத்தப்பட்டு திருப்தியாக இயங்கச் செய்யப்பட வேண்டும்.

ஆ) பிரதான மற்றும் கிளை வாய்க்கால்களில் நீரோட்டத்தை அளவிட தேவையான இடங்களில் கணக்கிடும் வசதிகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். இதன் மூலம் குறிப்பிடப்பட்ட புள்ளியில் பாயும் நீரின் அளவு அறிந்து கொள்ளப்படல் அவசியமாகும்.

இ) அளவிற்கு அதிகமாக நீர், வாய்க்கால்களில் இருந்து மண்ணால் உறிஞ்சப்படும் இடங்களில், கொங்கிறீற் வாய்க்கால்களை அமைப்பதன் மூலம் நீர் இழப்பைக் குறைத்தல் வேண்டும்.

ஈ) எல்லா நெற்காணிகளுக்கும் நீர் பாய்ச்சும் குழாய்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். விவசாயிகள் வாய்க்காலின் குறுக்கே மண் அணை போடவோ, அன்றி வாய்க்கால்களைத் தம் இஷ்டம் போல் சேதப்படுத்தி நீரைப் பெற்றுக்கொள்ளவோ அனுமதித்தல் ஆகாது.

3. விவசாயிகளுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்குதல். நீர் முகாமைத்துவத்தில் விவசாயிகளின் பங்கு முக்கியமானது. அதற்கு அவர்களுக்குத் தேவையான பயிற்சியை வழங்க வேண்டும். அடிக்கடி கலந்துரையாடல்கள் நடாத்தி நீர் முகாமைத்துவத்தின் தேவையை அவர்களது மனதில் பதிய வைத்தல் வேண்டும். சில வாய்க்கால்களை மாதிரிகளாகத் தெரிந்து நீர் முகாமைத்துவத்தை அமுல்படுத்தி விவசாயிகளிற்கு நம்பிக்கையை ஊட்ட வேண்டும்.

4. நீர்த்தேவையை சரியாக மதிப்பிடுதலும் வழங்கலும். ஒவ்வொரு வாய்க்கால்களிலும் தினமும் நீர் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருப்பின், காணியின் அளவு பற்றிய விவரம் முதல் நாள் மாலையிலேயே வெளிக்கள உத்தியோகத்தரால் சேகரிக்கப்பட்டு, தேவையான நீர் கணித்தறியப்பட்டு, அதன்படி அன்று காலையிலேயே தேவையான நீர் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இந்த அடிப்படையில் பிரிவிடும் வாய்க்கால்களிலும், பிரதான வாய்க்கால்களிலும் நீர்த்தேவை பல்வேறு புள்ளிகளில் கணித்தறியப்பட்டு, அதன்படி குளத்திலிருந்து வழங்கப்பட வேண்டிய நீரின் அளவு கணிக்கப்பட்டு, தேவையான நீர் மட்டுமே திறந்துவிடப்பட வேண்டும். நீர்த்தேவை, நீர் வழங்கல் பற்றிய பதிவேடுகள் பேணப்பட்டு, தவறுகள் சரிசெய்யப்பட்டு, முறை சீராக்கப்பட்ட பின், நீர் விநியோகம் சிரமமின்றி தன்பாட்டிலேயே நடைபெற ஏதுவாகும்.

**மலைநாடு முழுவதும் இடம்பெறும் வேறுபட்ட நீர்ப்பீடங்களின் வெளியேற்றமானது, அடியில் உள்ள பாறைப் படுக்கைகளின் மேற்பரப்பு இடவிளக்கவியலை ஊடறுக்கின்றன. படிகப்பாறை மற்றும் பளிங்குப்பட்டறைப் பாறை ஆகியவற்றில் உள்ள நீரூற்றுக்கள், பிளவுகளாலான உலர் வலயத்தை விட ஈரவலயத்தில் உயர்வான விளைச்சலைக் கொடுக்கின்றன. முறையான சிறந்த நீர்ச்சுழற்சி இதற்கு ஒரு முக்கியக் காரணமாகும்.**

5. இயலுமானவரை சுழற்சி முறையிலேயே நீர்ப்பாசனம் செய்யப்பட வேண்டும். இதன்படி பிரதான வாய்க்கால்களில் எப்போதும் நீர் பாய்ந்து கொண்டிருக்க, பிரிவிடும் மற்றும் கிளை வாய்க்கால்களில் சுழற்சி முறையில் நீர் விநியோகம் செய்யப்படும்.

6. பெற்றுக்கொண்ட நீர், வழங்கப்பட்ட நீர் பற்றிய ஆய்வு செய்யப்பட வேண்டும். மாதம் ஒரு முறையாவது பெற்றுக்கொண்ட நீர், வழங்கப்பட்ட நீர் பற்றிய ஆய்வை மேற்கொண்டு, நீர் விரயமாக்கப்படும் பகுதிகள் கண்டறியப்பட்டு, சீர்செய்யப்பட்டு, பாவிக்கப்படும் நீரின் அளவு விரும்பத்தக்க அளவிற்குள் கொண்டுவரப்பட வேண்டும். அந்தந்தப் போகத்தின் முடிவில் பாவிக்கப்பட்ட நீரின் அளவு கண்டறியப்பட்டு, சகல விவரங்களும் மற்றைய ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு, எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய செயற்பாடுகள் தீர்மானிக்கப்பட வேண்டும்.

7. கமத்தொழிற்திணைக்களம் விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல், உரம், உழவு இயந்திர வசதி, களை நாசினி முதலியவற்றைத் தேவையான சமயத்தில் வழங்குவதுடன் அவ்வப்போது பயிர் பற்றிய தேவையான ஆலோசனைகளையும் வழங்குதல் வேண்டும்.

8. அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் விவசாயம் செய்தல், நீரைக் களவாகப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சேதம் விளைவித்தல் முதலான குற்றங்களுக்கு அரசாங்க அதிபர் தேவையான சட்ட நடவடிக்கை எடுத்து, நீர்ப்பாசனக் குற்றங்களைக் குறைத்து ஒழுங்கான நீர் விநியோகத்தை உறுதிசெய்ய வேண்டும்.

## நீர் முகாமைத்துவத்தில் விவசாயிகளின் பங்கு

இரணைமடு போன்ற திட்டங்களில் காலபோக விவசாயத்தில் ஆவணி, புரட்டாதி மாத மழையைப் பயன்படுத்தி புழுதியில் நெல் விதைக்கப்படுகின்றது. கட்டுக்கரைக்குளத்தின் கீழ் களி மண்ணாக இருப்பதால் புழுதியில் விதைக்கப்படுவதில்லை. பல இடங்களில் புழுதியில் செய்கை பண்ணக்கூடியதாக இருந்தும் செய்கை பண்ணப்படுவதில்லை. சேற்றில் விதைக்கும் போது கூட, பல இடங்களில் கார்த்திகை, மார்கழி மாதங்கள் வரை தாமதம் செய்யப்படுகின்றது.

இதனால் பங்குனி, சித்திரை வரை நீர் விநியோகம் செய்யப்பட வேண்டியிருக்கின்றது. அறுவடை முடிந்ததும் உழவைச் செய்து மண்ணில் உள்ள நுண்துளைக் குழாய்களை ஊடறுப்பதன் மூலம் நீர் ஆவியாதல் தடுக்கப்படுவதில்லை. நிலத்தை விதைப்புக்குத் தயார்ப்படுத்தவும், பயிரின் வளர்ச்சிக்கும் மழை நீர் பெற்றுக் கொள்ளப்படுவதில்லை. வயல்களில் வரம்புகள் சீர் செய்யப்பட்டு தேவையான நீர் தேக்கி வைக்கப்படுவதில்லை. கழிவு வாய்க்கால் பராமரிக்கப்படுவதில்லை. மேலதிக நீர் அகற்றப்படுவதில்லை.

நீர்ப்பாசனத் திட்டங்களில் விவசாயிகளின் மேற்கூறிய தவறுகளினால் நீர் விரயமாக்கப்பட்டு நீர்ப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. இது சம்பந்தமாக விவசாயிகள் கைக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. அறுவடை முடிந்ததும் நிலத்தை உழுது நிலத்தில் உள்ள நுண்துளைகளுடாக நீர் இழத்தல் தடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மழையின் பின்னாலும் உழுவதால் இதனை மேம்படுத்த முடியும்.

2. வயல், மேடு - பள்ளங்கள் இன்றி மட்டுப்படுத்தப்பட்டு, வரம்புகள் உயர்த்தப்பட்டு, நீர்தேக்கி வைக்க வழி செய்யப்பட வேண்டும்.

3. சேற்று விதைப்பிற்கு 7 முதல் 10 அங்குலம் வரை நீர் விரயமாகின்றது. இதைத் தடுப்பதற்கு புழுதியில் விதைக்கப்பட வேண்டும். இதற்கு, ஐப்பசி மாதத்திற்குப் பிறகு பெய்யும் மழை வீழ்ச்சியானது, குளத்திலிருந்து நீரைப் பெறாமலேயே, பயிரின் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்கும்.

4. களைகளை இல்லாமல் செய்வதற்கு நீரை உபயோகிக்காது களை நாசினிகளை உபயோகிக்க வேண்டும்.

5. இயன்றளவு இயற்கை உரங்களைப் பாவிக்க வேண்டும். செயற்கை உரங்களால் உண்டாகும் உப்புத்தன்மையைக் கழுவ மேலதிக நீர் தேவைப்படும்.

6. நிலத்தைத் தயார்ப்படுத்தும் பொழுது விதை நெல், உரமாக்கி போன்றவற்றை முதலில் பெற்றுக்கொண்டு நன்கு திட்டமிட்டே தொடங்க வேண்டும். இதனால் வேறு காரணங்களால் நீர் விரயமாவது தடுக்கப்படும்.

7. பயிரின் வேருக்கு காற்றும் ஒரு தேவையாக இருப்பதால், நீரை எப்போதும் தேக்கி வைத்திருப்பதால் நீர் விரயமாவதுடன் விளைச்சல் குறையவும் இடமுண்டு.

8. தங்களால் பராமரிக்கப்படும் வாய்க்கால்களை நீர்ப்போக்கிற்குத் தடைகளின்றி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இதனால் தேவையான நீரைப் பெற்றுக்கொள்வதுடன் வாய்க்காலினால் உறிஞ்சி இழக்கப்படும் நீரையும் தடுக்கலாம்.

9. தமது வாய்க்காலின் நிர்வாகத்தை தாமே பொறுப்பேற்று அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக நீர் விநியோகத்தை நடாத்துதல். சிறிது சிறிதாக சிறிய திட்டங்களில் முழுமையாகவும், பெரிய திட்டங்களில் பிரிவிடும் வாய்க்கால் அளவிலும் இயக்குதல், பராமரித்தல், நிர்வகித்தல், திருத்த வேலைகள் முதலியவற்றைப் பொறுப்பேற்றல்.

மேற்கூறிய நடைமுறைகளை விவசாயிகளும், அலுவலர்களும் கைக்கொண்டு ஒற்றுமையுடன் செயற்பட்டால் நீர் முகாமைத்துவம் வடமாகாணத்தில் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு கிடைக்கின்ற நீர் வளத்திற்கு அதிகபட்சப் பலன் கிடைக்கும் என்பது நிச்சயமாகும்.

# மலையகத் தமிழர் பண்பாட்டுத் தேசியம்: கோட்பாடும் நடைமுறையும் ஒரு பரிசீலனை

## பகுதி - 1


● பொன் பிரபாகரன்




பொன்.பிரபாகரன், யாழ். பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவப் பட்டம் பெற்றவர். பட்டப்பின் டிப்ளோமாவை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும், ஊடகவியலில் டிப்ளோமாப் பட்டத்தை கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். மேலும், கொழும்பு வணிகப் பள்ளியில் செயற்றிட்ட முகாமைத்துவப் பட்டத்தைப் பெற்றுள்ளார். அரசியல், பொருளாதாரம், பண்பாடு போன்ற தளங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். ‘காமன் கூத்து’(மலையக தமிழரின் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வு), ‘உப்பு ரொட்டி’ (கவிதைத் தொகுப்பு), ‘மலையகத் தமிழரின் சமூகவியலும் அரசியலும்’ என்பன இவரது நூல்களாகும்.

## அறிமுகம்

இலங்கை மலையகத் தமிழர்கள் என்பவர்கள் 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரையான சுமார் 125 ஆண்டுகளுக்கும் மேலான காலகட்டத்தில், தென்னிந்தியக் கிராமங்களில் இருந்து பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு, தென் மாகாணம், மத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணம் மற்றும் மேல் மாகாணம் ஆகிய பகுதிகளில் குடியேற்றப்பட்ட தொழிலாளர்களின் ஆறு முதல் எட்டு தலைமுறைகளைச் சேர்ந்தவர்களாவர்.

18 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியர் ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இலட்சக்கணக்கான இந்திய, சீன, ஆபிரிக்கத் தொழிலாளர்கள் குடியேற்றப்பட்டனர். இவ்வாறு சுமார் 40 நாடுகளில் குடியேற்றப்பட்ட மக்களில், இந்தியத் தொழிலாளர்கள், குறிப்பாகத் தென்னிந்தியத் தமிழர்கள், அரைவாசிக்கும் மேற்பட்டோராகக் காணப்பட்டனர்.

இலங்கை, பர்மா, மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா, மடகஸ்கார், தென்னாபிரிக்கா, பிஜி தீவுகள், பிரிட்டிஸ் கயானா போன்ற குடியேற்ற நாடுகளில் குடியேற்றப்பட்ட பல மில்லியன் கணக்கான தொழிலாளர்களில் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் உள்ளவர்கள் மட்டுமே தமது நீண்ட நெடிய வரலாறு, பண்பாடு, பாரம்பரியங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

## இலங்கை மலையகத் தமிழர்கள்

சுமார் 200 ஆண்டுகள் நீடித்த வரலாற்றில், பண்பாடு, பாரம்பரியம் மற்றும் மொழியுடன் தொடர்புடைய ஒரு பண்பாட்டுத் தேசியமாக மலையகத் தமிழர்கள் நிலைத்திருக்கின்றனர். உற்பத்தி உறவுகள், நிலவுரிமை மற்றும் வீட்டுரிமை போன்றவை இவர்களின் கட்டுப்பாட்டில் இல்லாதபோதும், நெருக்கமான கலாசாரப் பிணைப்புடைய மொழி, மதம், கலை - இலக்கியப் பண்பாடு ஆகியவை இச்சமூகத்தைப் பிணைக்கின்றன. மேலும், கூத்துகள், ஆடல் - பாடல்கள், கோயில்கள், வழிபாட்டு முறைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், தொழில்சார் வாழ்வும் வழிபாடும், மொழிக் கோட்பாடுகள், நம்பிக்கைகள், தொன்மங்கள், பழக்கவழக்கங்கள், உணவு, விருந்தோம்பல், ஆடை, ஆபரணங்கள், மணமுறைகள், புனிதம், தீட்டு, துடக்கு போன்ற வாழ்வியல் அம்சங்களும், இன்பம், துன்பம், வாழ்வுக்கான போராட்டம் போன்ற உணர்ச்சிபூர்வமான சவால்களும், குல - கோத்திர மரபுகள், காதல், வீரம், மணமுறிவு, மறுமணம், மண உறவுகள் போன்ற சமூகக் கட்டமைப்புகளும், ஏவல், பில்லி - சூனியம் போன்ற சடங்கியல் நம்பிக்கைகளும், இசைக்கோலங்கள், தாளக்கட்டுக்கள், உடல் மொழியியல் போன்ற கலை வெளிப்பாடுகளும், அமைப்பாக்கச் சிந்தனைகள், புரட்சிகர அணி திரள்வுகள், காட்சிகளைக் கட்டமைத்தல், ஓவியம், சிற்பம், செதுக்கல் கலைகள் போன்ற புதிய உருவாக்கச் செயற்பாடுகளும் சார்ந்து, இந்தச் சமூகம் ஓர் இறுக்கமான பண்பாட்டுத் தேசியமாக உருப்பெற்றுள்ளது.

## பண்பாட்டுத் தேசியம் பற்றிய கோட்பாடுகள்

### லெனின்

மார்க்சிய - லெனினிசக் கோட்பாடுகளின் அடிப்படையில், தேசம், தேசியம், தேசிய இனப் பிரச்சினை, தேசிய விடுதலை இயக்கம், தேசிய இனம், தேசிய இனக்குழுக்கள், சுயநிர்ணய உரிமை மற்றும் காலனித்துவ நாடுகளின் விடுதலை தொடர்பான பல கருத்தாடல்கள் கடந்த 150 ஆண்டுகளுக்கும் மேலாக விவாதிக்கப்பட்டு வருகின்றன. கார்ல் மார்க்ஸ், ஃபிரடரிக் ஏங்கல்ஸ், வி.ஐ. லெனின், ஜோசப் ஸ்டாலின், ரோசா லக்சம்பேர்க், அந்தோனியோ கிராம்சி, அமில்கார் கப்ரால் ஆகிய சிந்தனையாளர்கள் காலத்திற்குக் காலம் பல்வேறுபட்ட கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் முன்வைத்துள்ளனர். 18 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் தோன்றிய கைத்தொழில் புரட்சியும், அதன் விளைவாக ஏற்பட்ட பண்ட உற்பத்திப் பெருக்கம், சந்தை உருவாக்கம், காலனி ஆதிக்கம் ஆகியவற்றால் உருவான முதலாளித்துவ அரசுகளும் தேசம், தேசிய இனம், தேசிய இனக்குழு சார்ந்த பல்வேறு கோட்பாட்டு மற்றும் நடைமுறைப் பிரச்சினைகளைக் கையாள வேண்டியிருந்தது.

இதன் விளைவாக, இன்றைய உலகில் சுதந்திர அரசுகள், இணைப் பேரரசுகள், கூட்டாட்சி அரசுகள் எனப் பல்வேறுபட்ட ஆட்சி மாதிரிகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இன்றைய உலகில் நிலவுகின்ற சமஷ்டி அரசுகள் தொடர்பான கொள்கைகளை ஆராய்ந்த ரொனால்ட் எல். வாட்ஸ் என்பவர், உலகில் 24 வகையான சமஷ்டி மாதிரிகள் காணப்படுவதாக மதிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மலையகத் தமிழர்கள் அரசியல், வரலாறு, பண்பாடு, மொழி, கலாசாரம், உற்பத்தி உறவுமுறை, உளவியல், பூகோளப் பிராந்தியம் சார்ந்த ஒரு பிரதான தேசிய இனக்குழுவாகக் காணப்படுகின்றனர். இம்மக்கள் தமக்கான

குறைந்தபட்ச மற்றும் உயர்ந்தபட்ச அரசியல் அதிகாரம், கலாசாரத் தன்னாட்சி, பொருளாதாரச் சுதந்திரம் ஆகியவற்றைக் கொண்டிருப்பதற்கான கோட்பாட்டு மற்றும் வரலாற்று ரீதியான நியாயப்பாடுகளைக் கொண்டுள்ளனர். இந்தக் கோரிக்கைகளுக்கான நியாயப்பாடுகள் எத்தகைய கோட்பாட்டுத் தளத்தில் தோற்றம் பெறுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள, தேசம், தேச உருவாக்கம் தொடர்பான வரலாற்று மற்றும் கோட்பாட்டு வகைப்பட்ட புரிதல் அவசியமாகிறது.

அதன் அடிப்படையில், மலையகத் தமிழர்களின் பண்பாட்டுத் தேசியம் தொடர்பான கருத்தியல் கட்டமைப்பிற்கு, சித்தாந்தத் தேடல்கள், கற்பிதங்கள் மற்றும் அதற்கான சான்றாதாரங்கள் ஆகியவை தேவைப்படுகின்றன. இவ்வடிப்படையில் நோக்குகையில், சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் நிறுவனரும், உலகில் முதலாவது பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசைத் தோற்றுவித்தவருமான லெனின் அவர்களின் சிந்தனைகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஒட்டோ பாயர் அவர்கள், "தேசம் என்பது கலாசார அடிப்படையைக் கொண்ட சமுதாயமே" எனக் கருதினார் (லெனின், 'நூல் திரட்டு', தொகுதி 41, பக். 24).

இந்தக் கருத்துக்கு மாற்றாக, லெனின் அவர்கள், "தேசம் என்பது வரலாற்றுத் தன்மையானது" என்று வலியுறுத்தினார் (பக். 26).

மேலும், "தேசத்தின் சிறப்பியல்புகள் பிரதேசம், மொழி என்பனவாகும்" என்கிறார் பாயர். "தேசத்தின் மிக முக்கிய சிறப்பியல்பு மொழியாகும்" என்கிறார் கவுட்ஸ்கி (பக். 27). "மொழியானது இலக்கியமாக மாற்றமடைந்ததைத் தொடர்ந்து ஒரு குணவியல்பு ரீதியான மாற்றம் ஏற்பட்டது. வார்த்தையின் முழுப் பொருளில் நிலை கொண்டதாக மொழி மாறியது." என்கிறார் லெனின் (லெனின், 'தொகுப்பு நூல்கள்', தொகுதி 19, பக். 499 - தொகுதி 41, பக். 314).

தேசமானது உறுதி பெறும் வளர்ச்சிக் கட்டத்தில், "ஒரு திட்டவட்டமான பிரதேசத்தில் குடியேற்றம் என்பது அவசியம்" என்று கவுட்ஸ்கி குறிப்பிடுகிறார். மேலும், தேசத்தின் பிரதான அம்சங்களாக அவர் "மொழியும், பிரதேசமும்" இருப்பதாக வலியுறுத்துகிறார்.

"ஒரு தேசம் என்பது சரித்திரபூர்வமாக நிறுவப்பட்ட நிலையான மக்கள் சமுதாயமாகும். ஒரு பொதுவான மொழி, பிரதேசம், பொருளாதார வாழ்க்கை என்பன ஒரு பொதுவான கலாசாரத்தின் பிரதிபலிப்பாகும். மனோதத்துவ ரீதியான ஒழுங்கமைப்பின் மீது அது அமைந்துள்ளது." என்கிறார் லெனின் (பக். 31). மேலும் அவர் மூன்று விடயங்களைச் சுட்டிக்காட்டுகிறார்.

முதலாவது, "தேசம் என்பது ஒரு சரித்திரபூர்வமான சமுதாயம்." இரண்டாவது, "தேசத்தின் சிறப்பியல்புகள் அனைத்தும் சமதையானதல்ல" (பக். 32). மூன்று, "தேசிய மனோதத்துவத்தின் இடம்" (பக். 33).

"ஒரு தேசம் என்பது நிலையான சரித்திரபூர்வமான மக்கள் சமுதாயத்தை உள்ளடக்கியதாகும். சமுதாயத்தின் மொழி, பிரதேசம், கலாசாரம், உணர்வு, மனோதத்துவம் ஆகியவற்றின் இணைப்பு சமுதாய, பொருளாதார வாழ்க்கையின் மீது அடித்தளம் கொண்ட ஒரு சமுதாய வளர்ச்சி வடிவமாகும்" (பக். 36).

"மனித குலத்தின் முன்னேற்றம் என்பது மிக நீண்ட காலமாக தேசத்தின் வாழ்வுடனும் வளர்ச்சியுடனும் பிணைக்கப்பட்டுள்ளது. இது, பொருள்வகை உற்பத்தியின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஒரு சமுதாய வடிவத்துடனும் பிணைக்கப்பட்டுள்ளது."

ஆஸ்திரிய சோசலிச ஜனநாயகவாதிகளான ஒட்டோ பாயர், அவரது நண்பர் கார்ள் ரென்னர் ஆகியோரும், ருசிய யூதர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய பூந்த் அமைப்பும் இணைந்து, பிராந்திய அடிப்படையிலன்றி கலாசாரத்தின் அடிப்படையில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் என வாதிட்டனர். இந்தக் கோரிக்கையின்படி, ஒவ்வொரு சமூகத்தையும் கலாசாரத்தின் அடிப்படையில் இனங்கண்டு, அவற்றிற்கான தனித்தனிப் பாடசாலைகளையும் நிர்வாக அலகுகளையும் அமைக்க வேண்டும் என்ற கருத்து இரண்டாவது அகிலத்தில் முன்வைக்கப்பட்டது. இக்கருத்து தொழிலாளர் வர்க்கத்தைப் பிளவுபடுத்துவது, எனவே அது பிற்போக்கானது என லெனின் தலைமையிலான சமூக ஜனநாயகவாதிகள் வாதிட்டனர். அதற்குப் பதிலாக, பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட தன்னாட்சி முறையே வரலாற்று ரீதியானது எனவும் அவர்கள் வலியுறுத்தினர். இந்தக் கருத்தையே அப்போது மார்க்சியவாதியாக இருந்த கார்ல் கவுட்ஸ்கியும் வலுவாக ஆதரித்தார்.

ஆகவே, ஒரு தேசம் என்ற அடிப்படையில் மலையகத் தமிழர்கள் ஒரு தனித்துவமான அரசியல் சமூகம் என்பதை, லெனின், கார்ல் கவுட்ஸ்கி உள்ளிட்ட மார்க்சியக் கோட்பாட்டாளர்களின் விளக்கங்கள் மூலம், கோட்பாட்டு ரீதியாக நிறுவ முடியும். 200 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த உற்பத்தி உறவுமுறை, மொழி, கலாசாரம், பூகோளத் தொடர்புடைய

வாழ்வாதாரப் பிராந்தியம், சமூக உளவியல், மற்றும் மக்கள் திரட்சி என்ற அடிப்படையில், மலையகத் தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனமாவார்கள்.

**கூகி வா தியோங்கா**

*"ஆபிரிக்க சிந்தனை மரபில், ஒவ்வொரு மொழிக்கும் அதற்கான சமூக - பண்பாட்டு அடிப்படை உள்ளது. அவைதான் மனநிலை உருவாக்கத்தைத் தீர்மானிக்கின்றன."*

*"மக்கள் பண்பாடு ஒரு மக்கள் கூட்டத்தின் உலகப் பார்வையை விளக்குவதிலும் விவரிப்பதிலும் பெரும்பங்கு வகிக்கும். அதன் மூலம் மக்களது கண்ணோட்டம் அமுல்படுத்தப்படுகிறது."*

**அந்தோனியோ கிராம்சி**

இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் மார்க்சிய - லெனினிச அறிஞருமான அந்தோனியோ கிராம்சியின் பண்பாடு தொடர்பான சிந்தனைகள், கோட்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

*"பல்லாயிரக்கணக்கான ஆண்டுகால உழைப்பும் சிந்தனையும் நம்மிடம் கொண்டுவந்து சேர்த்த சிந்தனைக் களஞ்சித்தில் என்றும் அழியாத மதிப்புடைய அம்சங்களும் உள்ளன. அவை ஒருபோதும் அழியா, அவற்றை அழியவிடவும் கூடாது. அவற்றின் மதிப்புப் பற்றிய உணர்வு இல்லாமல் போனது தான் பூர்ஷ்வா ஆட்சி ஏற்படுத்திய சீரழிவின் ஒரு முக்கிய அறிகுறியாகும். பூர்ஷ்வாக்களுக்கு அனைத்துமே வர்த்தகப் பொருளும் போர்க் கருவியும் தான். சமுதாயத்தில் அதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கம் வென்றெடுத்த பிறகு, அழிக்கப்பட்ட ஆன்மிகச் செல்வங்களைத் தானும் மனித குலமும் திரும்பப் பெறுவதற்கான போராட்டக் கடமையை மேற்கொள்ள வேண்டும்" (MO. 20) (பக். 278, 279).*

மேலும், தேசிய மக்கள் பண்பாட்டை உருவாக்குவதில் மொழியின் பாத்திரம் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"தேசிய மக்கள் பண்பாட்டை உருவாக்குவதில் மொழி முக்கியமான பாத்திரம் வகிக்கிறது; வாழ்வு, வர்த்தகம் மற்றும் படைப்பாக்கச் செயல்கள் தொடர்பான மொழி பொதுமக்களின் தேசிய விருப்பத்தை (National Popular Will) பிரதிபலிக்கும் வகையில் இருக்க வேண்டும்."*

மலையகத் தமிழர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க செம்மொழியாகிய தமிழைத் தமது அடிநாதமாகக் கொண்டுள்ளனர். இந்த மொழி இம்மக்களின் அனைத்துச் செயற்பாட்டுத் திசைகளுக்கும் (இயங்கு திசைகள்) மூலாதாரமாகத் திகழ்கின்றது. எனவே, ஒரு மொழி வழிப்பட்ட பண்பாடும் மொழிசார் வரலாறும் மலையகத் தமிழர்களை இறுக்கமாகப் பிணைத்து வைக்கும் மிக முக்கியமான பண்பாட்டுக் கூறாக அமைந்துள்ளது.

*"நாட்டார் வழக்காற்றை விமர்சன ரீதியாகப் புரிந்துகொண்டு புதிய பண்பாட்டை உருவாக்குதல் வேண்டும்."*

*"பொது மொழியில் இலக்கணத்தைக் கற்பித்தல் வேண்டும்." (SPW. 235/ 238) (பக். 282)*

*"நாட்டார் வழக்காறு பாமர மக்களின் பண்பாட்டு நிகழ்வுகளின் பிரதிபலிப்பு ஆகும்."*

*"புதிய பண்பாடு, கலை என்பவற்றைப் படைப்பதற்கு தேசிய மக்கள் விருப்பத்தை உருவாக்கும் பொருட்டு கட்சி, கல்வி நிறுவனங்களையும் பத்திரிகைகளையும் நடத்த வேண்டும். நாட்டார் வழக்காற்றை (Folklore) விமர்சன ரீதியாகப் புரிந்துகொண்டு புதிய பண்பாட்டை உருவாக்குவதற்கு நாட்டார் வழக்காற்றிலிருந்து தொடங்க வேண்டும். ஜனரஞ்சக இலக்கியங்களைப் புறக்கணிக்காமல் அவற்றைப் படிக்கும் வாகசர்கள் மத்தியில் புதிய பண்பாட்டுக்கான வித்துகளை விதைக்க வேண்டும்." (பக். 281)*

*"உலகம் பற்றியும் வாழ்க்கை பற்றியும் வரலாற்றில் பல்வேறு சமயங்களில் நிலவிவந்த பலவிதமான கண்ணோட்டங்களின் எச்சங்களை நாட்டார் வழக்காற்றில் காணலாம்."*

*"தத்துவம், விஞ்ஞானம் ஆகியவற்றின் ஒரு சில அம்சங்கள் அவற்றின் சூழலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு நாட்டார் வழக்காற்றுக்குள் புகுந்து விடுகின்றன."*

*"நாட்டார் வழக்காறு என்பது பாமர மக்களின் பண்பாட்டு வாழ்வு நிலைமைகளின் பிரதிபலிப்பாகும்."*

*"பாமர மக்களிடையே நிலவும் மதம், சடங்குகள் - சம்பிரதாயங்கள் என்ற வடிவத்திலேயே உள்ளது."*

*"நாட்டார் வழக்காறு பாமர மக்களுக்கு அறநெறிகளை வகுத்துக் கொடுத்து, அவற்றை மத நம்பிக்கையின் மூலம் உறுதிப்படுத்துகின்றது. இத்தகைய அறநெறிகள் தான் பாமர மக்களைக் கட்டுப்படுத்தி அவர்களை உணர்வு பூர்வமாகவும் விமர்சன ரீதியாகவும் தங்கள் வாழ்க்கை நிலைமைகள் பற்றிச் சிந்திக்கவிடாமல் தடுக்கின்றன."*

*"பாட்டாளி வர்க்கம் - அதாவது பாட்டாளி*

வர்க்கக்கட்சி அறிவாளிகள் - நாட்டார் வழக்காற்றிலுள்ள அம்சங்களை, வெகுஜனங்களின் உலகக் கண்ணோட்டத்தைப் பரிச்சயம் கொள்ள வேண்டும்."

"இங்கு வாய்மொழி இலக்கியமும் கிராமியக் கலை இலக்கியமுமே இருந்தன. இவற்றிலிருந்து மக்கள் இலக்கியம் வளர வேண்டும்." (SCW: 102 - 343, 356 - 358, 374 376)

"ஒரே ஒரு முற்போக்கான திட்டம் மட்டுமே உள்ளது என்பதல்ல. மிக முற்போக்கான திட்டங்களிலும் கூட சில பிற்போக்கான அம்சங்கள் இருக்கும்." (Rajathurai, S. V., & Geetha, V. (1991). Antonio Gramsci: Life and Thoughts.)

போன்ற மொழி, பண்பாடு, நாட்டார் வழக்காறு, மதம் தொடர்பான அந்தோனியோ கிராம்சியின் விளக்கங்கள் மலையகத் தமிழர்களின் பண்பாட்டுத் தேசியம் பற்றிய கருத்துருவாக்கத்திற்கு மேலும் வலுச் சேர்க்கின்றன. இத்தாலிய மரபில் இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் நிலவிய அதே பண்பாட்டுச் சூழ்நிலைகள் மலையகத் தமிழர்கள் தொடர்பிலும் நிலவுவதை அறிய முடியும்.

**அமில்கார் கப்ரால்**

ஆபிரிக்கச் சிந்தனை மரபைச் சேர்ந்தவரும், கினியோ பிஸோ மற்றும் கேப் வேர்ட் ஆகிய தீவுகளின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்த ஆபிரிக்கக் கட்சியின் பொதுச் செயலாளருமான அமில்கார் கப்ரால் அவர்களின் தேசிய விடுதலை மற்றும் பண்பாட்டின் பாத்திரம் குறித்த சிந்தனைகள், மலையகத் தமிழரின் பண்பாட்டுத் தேசியத்தின் கட்டமைப்பை வடிவமைப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கக்கூடும்.

"ஒரு நாட்டு மக்களின் மீது அந்நியன் தனது ஆதிக்கத்தைத் திணிப்பது மிகவும் சுலபமானது என்று வரலாறு நமக்குக் கற்பிக்கின்றது. இங்கு ஆதிக்கத்தின் பொருளாதார அம்சங்கள் எவையாக இருந்தபோதிலும், சம்பந்தப்பட்ட நாட்டு மக்களின் பண்பாட்டு வாழ்க்கையை நிரந்தரமாகவும் திட்டமிட்ட முறையிலும் ஒடுக்குவதன் மூலம் தான் இந்த ஆதிக்கத்தைப் பேணிப் பாதுகாக்க முடியும் என்று வரலாறு நமக்குக் கற்பிக்கின்றது. ஆதிக்கத்திற்குட்பட்ட மக்களின் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைக் கொன்றொழிப்பதன் மூலம் மட்டும்தான் அந்நிய ஆதிக்கம் நிலைநிறுத்தப்பட முடியும்." (பக். 42, 43)

"ஒரு நாட்டு மக்களை ஆதிக்கத்திற்கு உட்படுத்துவதற்காக ஆயுதங்களை எடுப்பது என்பது எல்லாவற்றுக்கும் மேலாக அம்மக்களின் வாழ்க்கையை அழிப்பதற்கோ அல்லது குறைந்தபட்சம் வலிமையிழக்கச் செய்வதற்கோ, முடமாக்குவதற்கோ ஆயுதங்களை எடுப்பது போலாகும்." (பக். 43)

"இது (ஆயுதம் மூலம் ஒடுக்குதல்), பிரச்சினைக்குரிய மக்களின் பண்பாட்டை வன்முறையின் மூலம் மறுக்கும் முயற்சியே தவிர வேறல்ல. போர்த்துக்கல் உள்ளிட்ட பல்வேறு காலனி ஆதிக்க அரசுகளாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தக் கோட்பாடு அடைந்த சரியான தோல்வி, அதன் மனிதாபிமானமற்ற தன்மையின் மிகவும் தெளிவான நிரூபணமாக இருக்கிறது." (பக். 44)

"கருத்தியல் தளத்திலோ அல்லது இலட்சிய ரீதியான தளத்திலோ அடிமைப்படுத்தப்பட்ட அல்லது அடிமைப்படுத்தப்படப் போகின்ற சமூகத்தின் பொருளாதார மற்றும் வரலாற்று யதார்த்தத்தின் தீவிரமான வெளிப்பாடு தான், அந்நிய ஆதிக்கத்திற்கெதிரான போராட்டத்தின் ஓர் அடிப்படைக் கூறு என்ற விதத்தில் பண்பாட்டின் மதிப்பு அடங்கியுள்ளது." (பக். 45)

"மனிதனுக்கும் அவனது சூழலுக்கும் இடையிலும், ஒரு சமூகத்திலுள்ள மனிதர்கள் அல்லது மனிதக் குழுக்களுக்கு இடையிலும், பல்வேறு சமூகங்களுக்கு இடையிலும் நிலவும் உறவுகளின் பரிணாம வளர்ச்சியின் மீது பண்பாடு நேர்மறையான அல்லது எதிர்மறையான செல்வாக்கைச் செலுத்துவதால், பண்பாடானது ஒரே சமயத்தில் மக்களின் வரலாற்றின் விளைபொருளாகவும், வரலாற்றைத் தீர்மானிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. அந்நிய ஆதிக்கத்திற்கான பல்வேறு முயற்சிகளும், அதே போன்று சில தேசிய விடுதலை இயக்கங்களும் தோல்வியடைந்ததற்கு, இந்த உண்மையைப் புறக்கணித்ததுதான் காரணமாகும்." (பக். 45)

"உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி நிலைக்கும் இவ்வுற்பத்தி சக்திகளின் சமூக பண்பாட்டு அமைப்பிற்கும் இடையிலான ஆற்றல் வாய்ந்த சமநிலைத் தன்மையை முடிவின்றித் தேடுவதன் விளைவை வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் பிரதிநிதித்துவப்படுத்தும் உற்பத்தி முறையானது, ஒரு சமூகம் அதன் ஒவ்வொரு பிரிவு உற்பத்தி முறையின் முன்பு அடைந்துள்ள வளர்ச்சியைக் காட்டுகின்றது. அத்துடன், உற்பத்தி முறை, சம்மந்தப்பட்ட சமூகத்தை உருவாக்குகின்ற பல்வேறு அடிப்படைக் கூறுகள் அல்லது குழுக்களுக்கிடையில் நிலவுகின்ற புறவயமாகவோ அல்லது அகவயமாகவோ வெளிப்படுகின்ற பொருளாதார உறவுகளின் வகையைக் காட்டுவதுடன், அதன் மீது தாக்கமும் செலுத்துகின்றது." (பக். 46)

"பண்பாடு வெளிப்பாட்டின் கருத்தியல் ரீதியான அல்லது இலட்சிய ரீதியான பண்புகள் எவையாக இருந்தபோதிலும், பண்பாடு மக்களின் வரலாற்றில்

இன்றியமையாத ஓர் அடிப்படைக் கூறாகும். ஒரு செடியில் பூ பூப்பதைப் போன்று வரலாற்றில் பண்பாடு உருவாகிறது. அத்துடன், பண்பாடே வரலாறாகவும் இருக்கிறது.

எனவே உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி நிலையும் உற்பத்தி முறையும் தன் பண்பாட்டின் பொருளாதார அடித்தளமாக இருக்கின்றன. எந்தச் சூழலில் பண்பாடு வளர்ச்சியடைகின்றதோ, அந்தச் சூழலின் பொருளாதாரம் எனும் வளம் நிறைந்த மண்ணில் தான் பண்பாடு தனது வேர்களைப் பாய்ச்சுகிறது. புற வரலாற்றின் செல்வாக்கிற்குட்பட்டு வழக்கத்தின் உள்ளார்ந்த இயல்பைப் பண்பாடு பிரதிபலிக்கின்றது." (பக். 46)

"விடுதலைப் போராட்டங்களின் வரலாற்றை ஆராயும் போது பொதுவாக விடுதலைப் போராட்டங்களுக்கு முன்பே பண்பாட்டு வெளிப்பாடுகளின் எழுச்சிகள் நடைபெறுகின்றன என்பதையும், ஒடுக்குபவரின் பண்பாட்டை மறுக்கும் செயற்பாடாகவும் அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் பண்பாட்டு ஆளுமையை உறுதிப்படுத்துவதற்கான வெற்றிகரமான அல்லது தோல்வியடையக்கூடிய முயற்சியாகவும் முற்போக்கான விதத்தில் இவ்வெழுச்சிகள் உறுதிப்படுத்தப்படுகின்றன என்பதையும் அறியலாம்." (பக். 47)

"மக்கள் அந்நிய ஆதிக்கத்தில் அடிமைப்படுத்தப்பட்ட சூழ்நிலையும் இந்த ஆதிக்கத்தின் பொருளாதார, அரசியல் மற்றும் சமூகக் காரணிகளின் செல்வாக்கும் எப்படிப்பட்டவையாக இருந்தபோதிலும், விடுதலை இயக்கத்தின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் காரணமாக அமைகின்ற சமூக உணர்வின் வித்து, பொதுவாகவே பண்பாட்டுக் காரணியில் இருப்பதை நாம் காண முடியும்." (பக். 47)

"தேசிய உற்பத்தி சக்திகள் முழுமையாக விடுவிக்கப்படும்போது, தேச விடுதலை உறுதி செய்யப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, விடுதலை பெற்ற மக்கள் தங்களின் வளர்ச்சிக்கு மிகவும் பொருத்தமான உற்பத்தி முறையை சுதந்திரமாகத் தீர்மானிக்கும் திறனைப் பெறுகிறார்கள். இந்தச் சுதந்திரம், அச்சமூகத்திற்கு முன்னேற்றத்தை அடைவதற்கான அனைத்து ஆற்றல்களையும் மீட்டுத் தருவதோடு, அதன் பண்பாட்டு வளர்ச்சிப் போக்கிற்கு புதிய எதிர்கால வாய்ப்புகளைத் தவிர்க்க முடியாத வகையில் வழங்குகிறது." (பக். 48)

"ஒடுக்குபவரின் பண்பாடும் பிற பண்பாடுகளும் வழங்கிய நேர்மையான பங்களிப்புகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடாமல், தங்களுடைய சொந்தப் பண்பாட்டின் மேல் நோக்கிய பாதைக்குத் திரும்பாவிட்டால், அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்த பின்பும் ஒரு நாட்டு மக்களால் பண்பாட்டு ரீதியாக விடுதலையடைய முடியாது." (பக். 48)

"மக்களின் பண்பாட்டின் பிரதிநிதியாகவும் பாதுகாவலனாகவும் விளங்கும் விடுதலை இயக்கம், தான் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகத்தின் பொருளாதார நிலைமைகள் எப்படிப்பட்டவையாக இருந்தபோதும், பண்பாட்டை உருவாக்குவதும் பேணிப் பாதுகாப்பதும் சமூகம் தான் என்ற உண்மையைக் கண்டிப்பாக நினைவிற் கொள்ள வேண்டும்." (பக். 49)

"பண்பாடு மக்கட் பண்பைப் பெற்றிருந்த போதிலும், அது சமச்சீரானதல்ல. சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் அது சமச்சீராக வளர்ச்சியடைவதும் இல்லை" (பக். 49).

"ஒரே சமூக - பொருளாதாரப் பிரிவிற்குட்பட்ட தனிநபர்களின் விடுதலை இயக்கத்தைப் பொறுத்தவரையில் வெவ்வேறு விதமாக நடந்துகொள்வதற்கு பண்பாட்டு வளர்ச்சி நிலையிலுள்ள வேறுபாடுகள் தான் காரணம் என்றும் கூட நாம் ஏற்றுக் கொள்ளலாம். இந்தக் கட்டத்தில் தான் ஒவ்வொரு தனிநபருக்கும் முழுமையான முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக பண்பாடு மாறுகிறது." (பக். 49)

"தன்வயமாக்கப்பட்ட அல்லது அந்நியமாக்கப்பட்ட குழுவின் சமூகச் சலுகைகளை அதிகப்படுத்துவதன் மூலம் பெரும்பாலான காலனியப்படுத்தப்பட்ட அறிவு ஜீவிகளுக்கேயுரிய இந்தச் சூழ்நிலையானது உறுதியானதாக ஆக்கப்படுகிறது." (பக். 51)

"விடுதலை இயக்கமானது சலுகை பெற்ற வர்க்கங்கள் போராட்டத்திற்கு வழங்கக்கூடிய நேர்மையான பங்களிப்புகளைக் குறைத்து மதிப்பிடாமல் அரசியல் தளத்தில் வெகுஜனங்களிடம் செயற்படுவதைப் போலவே பண்பாட்டுத் தளத்திலும் தன்னுடைய செயற்பாடுகளை வெகுஜனப் பண்பாட்டின் அடித்தளத்தின் மீதே மேற்கொள்ள வேண்டும்." (பக். 53)

"மனிதனது பிரக்ஞை குறை வளர்ச்சி அடைந்த நிலையில் தான் இருந்தது. முதிர்ச்சியற்றதாகவும் முன்னோக்கும் தன்மை இல்லாததாகவும் தான் இருந்தது. இது பில்லி சூனியம், மாந்திரீகம், மதம் போன்ற வடிவங்களில் வெளிப்பட்டது. மாந்திரீகமும் மதமும் பிரக்ஞையின் முதற் படிநிலைகள் ஆகும்."

"கனவுகள், மூடநம்பிக்கைகள், மதம் போன்றன ஒரு நாள் இல்லாமல் போய்விடும் என்று நினைப்பது யதார்த்தமற்றதாகும். இவை அனைத்தும் மானிட இயற்கையின் பகுதியாகும்."

"மனித இயற்கை, கனவுகளுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் மத மதிப்பீடுகளுக்குமான ஒரு வெளியை, அறவியல்பு ஒழுக்கங்கள் என்பதற்கான ஒரு வெளியை நம்மிடம் கோருகிறது. ஒரு குறிப்பிட்ட வகையிலான அறம் சார்ந்த வரையறை உருவாகவில்லையாயின் மனித குலத்தின் அடுத்தகட்ட வளர்ச்சி என்பது சாத்தியமற்றதாகிவிடும்."

"சோசலிசத்திற்கு ஏற்பட்ட நெருக்கடி என்பதும் இவ்வகையில் ஏற்பட்ட அறவியல் சார்ந்த நெருக்கடி தான். அறவியல் குறித்த, மதம் குறித்த கேள்விகளை எதிர்கொள்ளாத நெருக்கடிதான் அதனது தோல்விக்கும் அழிவுக்கும் மிகப்பிரதான காரணமாகும்."

**தேசிய விடுதலைப் போராட்டம்:**

"சுயநிர்ணய உரிமை — அதாவது பிரிந்து செல்வது, சுதந்திரமான அரசுகளை உருவாக்குவது ஆகியவற்றை நிபந்தனையின்றி அங்கீகரிப்பது — தேசங்கள், இனக்குழுக்கள், மொழிக் குழுக்கள் மற்றும் மனித இனக் கோஷ்டிகளின் முற்போக்குச் சமூக வளர்ச்சி நலன்களுடனும் சோசலிச நலன்களுடனும் இணைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது."

"ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் நலன்கள் மக்களின் நலன்களின் பொதுக் கருத்துருவில் தெளிவாக வேறுபடுத்தப்பட வேண்டும்."

**அயர்லாந்தின் போராட்டமும், தேசியமும், சோசலிசமும்:**

"சுயநிர்ணயத்தை மறுப்பதன் மூலமும் சிறிய தேசிய இனங்களின் தேசிய இயக்கங்களை அலட்சியப்படுத்துவதன் மூலமும் நாம் எத்தகைய புதை சேற்றில் சிக்கிக் கொள்கிறோம் என்பதை உணராத பல தோழர்கள் இருக்கிறார்கள்."

"காலனிகளிலும் ஐரோப்பாவிலும் உள்ள சிறிய தேசங்களின் கிளர்ச்சிக் கலகங்கள் இல்லாமல், தனக்கே உரித்தான தற்சார்புகள் அனைத்தும் கொண்ட குட்டிப் பூர்ஷ்வா வர்க்கத்தின் ஒரு பகுதியினரின் புரட்சிகரச் செயற்பாடுகள் இல்லாமல், நிலவுடைமையாளர்கள், திருச்சபை, முடியரசு, தேசிய இன ஒடுக்குமுறைகள் முதலானவற்றுக்கு எதிராக அரசியல் உணர்வு பெறாத பாட்டாளி மக்களும் அரைப் பாட்டாளி மக்களும்



Image Source : www.importmirror.com

நடத்தும் ஓர் இயக்கம் இல்லாமல், சோசலிசப் புரட்சியைச் செய்து முடிக்க முடியும் என நினைப்பது சோசலிசப் புரட்சியை மறுதலிப்பது தான்."

## வரலாறும் பண்பாடும்

மலையகத் தமிழர்கள், தமிழக மக்களின் வழிமரபினர் என்ற வகையில், மனித குல நாகரிகத்தின் தொட்டிலிலிருந்து தோன்றியவர்கள் எனலாம். எத்தியோப்பாவில் கண்டறியப்பட்ட ஆதி மனிதனின் 'டி.என்.ஏ' தமிழக விவசாயியுடன் இணங்கிப் போதல், ஆதிச்சநல்லூர், சிவகளை, கீழடி, சிந்து சமவெளி அகழ்வாராய்ச்சிகள், உலகளாவிய மொழியியல், பண்பாட்டு மானிடவியல் ஆய்வுகள், கடலியல் ஆய்வாளரான ஒரீகா பாலுவின் கண்டுபிடிப்புகள், தொல்லியலாளர்களான கீழடி S. இராமகிருஷ்ணன், R. பாலகிருஷ்ணன் ஆகியோரின் ஆய்வுகள், பக்தவத்சல பாரதியின் பண்பாட்டு மானிடவியல் ஆய்வுகள், கிரேக்க கூர்பிக் கடவுளுக்கும் காமன் கூத்துக்கும் இடையிலான தொடர்புகள், பின்லாந்தின் கலேவலா காவியமும் கம்பராமாயணத்துக்குமான தொடர்புகள், கீழைத்தேய நாடுகளின் இராமாயண ஒப்பீட்டாய்வு, மகாபாரதத்தின் கீழைத்தேயப் பரவல், இந்தோனேசிய மகாபாரதக் கதைகள், பூம்புகார் துறைமுகத் தளத்தின் 15,000 ஆண்டுகாலத் தொன்மை, மதுரை மாநகரத்தின் 700 ஆண்டுக்கு முற்பட்ட கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், கல்வெட்டுச் சான்றுகள், மாமல்லபுரச் சிற்பங்கள், சங்க நூல்கள், தொல்காப்பியம், திரிகடுகம், நன்னூல் காட்டும் வாழ்க்கை நெறிகள், இலக்கண இலக்கியச் சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தமிழர்கள் உலகின் ஆதிக்குடிகள் என நிறுவப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தமிழகத்தைப் பூர்வகுடித் தாயகமாகக் கொண்ட இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் நீண்ட, நெடிய வரலாற்றுக்கும், பாரம்பரியங்களுக்கும் உரித்துடையவர்களாவர்.

## இலங்கை மலைக்காடுகளும் உற்பத்தி உறவுகளும்

மாத்தறை - உடுகம குன்றுகளில் கோப்பி (Coffee) பயிரிட்டதன் மூலமும், பின்னர் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் தேயிலை, தென்னை, மற்றும் இறப்பர் (Rubber) தோட்டங்களை உருவாக்கியதன் மூலமும் தென் மாகாணத்தில் முதன்முதலில் தோட்டப் பொருளாதாரத்தை ஸ்தாபித்தவர்கள் மலையகத் தொழிலாளர்களே. இவர்கள், 100 மீட்டர் முதல் 300 மீட்டர் வரையிலான இடைப்பட்ட பகுதிகளிலும், 300 மீட்டருக்கும் மேலான மலைப்பகுதிகளிலும் தேயிலை, தென்னை, இறப்பர் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கு ஏதுவாக, அடர்ந்த ஈரவலய மலைக்காடுகளையும், பனி படர்ந்த மலைச் சிகரங்கள் மற்றும் வறள்வலய பற்றைக் காடுகளையும் அழித்து நிலத்தைப் பண்படுத்தினர். இவர்கள், தமது எட்டு தலைமுறைகளின் உழைப்பையும் தியாகத்தையும் ஈந்து, இந்த நாட்டின் பொருளாதாரத்தையும், உற்பத்தியையும், ஏற்றுமதி வருமானத்தையும், அந்நிய செலாவணியையும் உருவாக்கி நிலைநிறுத்திக் கொடுப்பவர்களாக இன்று வரை திகழ்கின்றனர்.

தேயிலை, இறப்பர், தென்னை ஆகியவற்றின் உற்பத்தி, பதப்படுத்தல், பண்படுத்தல், பொதியிடல், விநியோகம், நுகர்வுத் தொழிற்பாடுகளின் மூலவிதையாகவும் இயங்கு சக்தியாகவும் தோட்டத் தொழிலாளர்களே காணப்படுகின்றனர்.

## மொழி

இலங்கை மலையகத் தமிழர்கள் செம்மொழிச் சிறப்புடைய தமிழ் மொழியைத் தமது தாய்மொழியாகக் கொண்டிருப்பதன் மூலம், ஆழமான வரலாற்றுரீதியான கலாசார அம்சங்களைப் பெற்றுள்ளனர். தாய்மொழி வழிச் சிந்தனை, உணர்திறன், எழுத்து, கலைப்படைப்புகள், இசை, ஓவியம், சிற்பம், ஓசை, ஒலிநயம், குறில், நெடில், உயிர்மெய், பதவியல், எழுத்தியல், எதுகை, மோனை, இலக்கண மரபுகள், பழமொழிகள், மரபுத்தொடர்கள், சங்க இலக்கியப் பனுவல்கள், பெயரடைகள், உரிச்சொற்கள் ஆகியவற்றைக் கொண்ட வளமான இலக்கணக் கட்டமைவுகள் மலையகத் தமிழர்களுக்கு உரித்தானவையாகத் திகழ்கின்றன.

மலையகத் தமிழர்கள், செவ்வியல் மொழியான தமிழையும், பெருந்தோட்ட உற்பத்தி உறவுகளுடன் தொடர்புடைய தனித்துவமான தொழில்சார் மொழியையும், வாழ்வையும், பண்பாட்டையும் உரிமையாகக் கொண்டுள்ளனர். இவர்களின் தொழில்சார் வாழ்வனுபவமே, பல்லாயிரக்கணக்கான தொழிற் பெயர்கள், இடப்பெயர்கள், சினைப் பெயர்கள், ஆகுபெயர்கள், குணப் பெயர்கள், காலப் பெயர்கள், மற்றும் பொருட் பெயர்கள் போன்ற புதிய சொற்களஞ்சியங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது.

### காதல், திருமண உறவுகள்

மலையகத் தமிழரிடையே பண்டையத் தமிழரிடையே காணப்பட்ட குடும்ப அமைப்பும் ஒருதார மணமுறையும் இன்றளவும் நிலவும் சிறப்புக்கூறுகளாகும். சகோதர, சகோதரிகள், அத்துடன் ஒன்றுவிட்ட, இரண்டுவிட்ட, மூன்றுவிட்ட சகோதர, சகோதரிகளிடையே திருமண உறவுகள் பேணப்படுவதில்லை. மேலும், பெற்றோர், பிள்ளைகளிடையே திருமண உறவு பேணப்படுவதில்லை. காதல் மணங்களும் கலப்பு மணங்களும் தற்போது அதிகரித்து வந்த போதிலும், தற்போதும் ஒருதார முறை பின்பற்றப்பட்டு, குழுவுக்குள், சாதிக்குள் இறுக்கமான குடும்ப அமைப்பை மலையகத் தமிழர்கள் பேணி வருகின்றனர்.

மலையகத் தமிழரிடையே ஒருதலைக் காதல், பொருந்தாக் காதல், தற்கொலைகள் என்பன காணப்படுதல், அவர்களது காதல் உறவு சங்ககால



**முனியாண்டி வழிபாடு - மலையகம்**

**இலங்கை மலையகத் தமிழர்கள் செம்மொழிச் சிறப்புடைய தமிழ் மொழியைத் தமது தாய்மொழியாகக் கொண்டிருப்பதன் மூலம், ஆழமான வரலாற்றுரீதியான கலாசார அம்சங்களைப் பெற்றுள்ளனர். தாய்மொழி வழிச் சிந்தனை, உணர்திறன், எழுத்து, கலைப்படைப்புகள், இசை, ஓவியம், சிற்பம், ஓசை, ஒலிநயம், குறில், நெடில், உயிர்மெய், பதவியல், எழுத்தியல், எதுகை, மோனை, இலக்கண மரபுகள், பழமொழிகள், மரபுத்தொடர்கள், சங்க இலக்கியப் பனுவல்கள், பெயரடைகள், உரிச்சொற்கள் ஆகியவற்றைக் கொண்ட வளமான இலக்கணக் கட்டமைவுகள் மலையகத் தமிழர்களுக்கு உரித்தானவையாகத் திகழ்கின்றன.**

வாழ்க்கை நெறியுடன் தொடர்புடையது என்பதைக் காட்டுகிறது. மலையகமானது சங்க இலக்கியம் குறிப்பிடும் குறிஞ்சி (மலையும் மலை சார்ந்த இடமும்), முல்லை (காடும் காடு சார்ந்த இடமும்) நிலப்பகுதிகளை ஒத்திருப்பதால், அந்நிலங்களுக்குரிய திணைப் பண்புகள், அதன் நீண்ட நெடிய நீட்சியாக மலையகத் தமிழர்களின் வாழ்விலும் காதல் உறவுகளிலும் நிலவுவதைக் காணலாம்.

### தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்

மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் பெருந்திரளாகச் செறிந்துள்ள தோட்டங்களில், தமது பிரதான தெய்வமாக மாரியம்மனை வழிபடுகின்றனர். மேலும், தோட்டங்களில் முருகன், பிள்ளையார், காளி, மருதைவீரன், மாடசாமி, பிடாரியம்மன் ஆகிய தெய்வங்களுக்கும் தனித்தனியான வழிபாட்டு முறைகளைக் காணலாம். இச்சிறு தெய்வ வழிபாடுகளுடன் தொடர்புடைய நேர்த்திக் கடன்கள், படையல், பலி கொடுத்தல், வேள்விச் சடங்கு, காவல் கொடுத்தல் போன்றவையும், திருவிழாக்கள், கும்பாபிஷேகங்கள் முதலியவையும் மலையகத் தமிழர்களின் தெய்வ நம்பிக்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் வெளிப்படுத்துகின்றன.

### வாழ்வும் வழிபாடும்

மலையகத் தமிழர்களிடையே, கருத்தரித்தல் முதல் வளைகாப்பு, பிள்ளை பிறப்பு, புண்ணியதானம், காது குத்து, பூப்பெய்தல் சடங்கு, தண்ணீர் ஊற்றல், வீட்டுக்கழைத்தல், மாமன்சீர், மாமன்விருந்து, அத்தைமார், ஆராத்தியெடுத்தல் ஆகியனவும், பெண்பார்த்தல், மணமகள்/ மணமகன் வீட்டார் வருகை, சம்மந்தம் பேசல், பொருத்தம் பார்த்தல், சம்மந்தம் கலத்தல், சம்மந்தி விருந்து, வேட்டி கட்டல், கொடியேற்றல், தோரணம் கட்டல், பந்தல் போடல், தாலி செய்தல்/ வாங்குதல், அழைத்தல், பணம் பாக்கு வைத்தல், நலுங்கு வைத்தல், முளைப்பாரி போடல், பெண்/ மாப்பிள்ளை அழைத்தல், கெட்டி மேளம், விளக்கேற்றல், அரசாணி கம்பம் நடுதல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல், பிள்ளை வரம் வழங்குதல், மடிப்பிச்சையிடல், மிஞ்சி போடல், பெண்/ மாப்பிள்ளை தோழன்/ தோழி பங்கேற்பு, நெற்றிச்சூடி கட்டல், தாலி கட்டல், மாப்பிள்ளை வாத்தியங்கள் முழங்குதல் போன்ற பண்டைய தமிழகம் முதல் இன்று வரையான தமிழர் வாழ்வியல் கூறுகளும் உறவுமுறைகளும் திருமணச் சடங்கு உட்பட அனைத்து நிகழ்வுகளிலும் காணப்படுகின்றன.

### பூப்பெய்தல் சடங்கு

மலையகத் தமிழ்க் குடும்பங்களில் இடம்பெறும் பூப்பெய்தல் சடங்குகளில் பண்டையத் தமிழர்களின் வாழ்வியல் கூறுகள் நிரம்பியுள்ளன. இச்சடங்குகளில் நீர் வார்த்தல், களி கிண்டுதல், வண்ணான் சடங்கு, அடை சுற்றுதல், ஆலாத்தி எடுத்தல், ஓணான் கொடி சுற்றுதல், மாற்று கட்டுதல், கண்ணாடி பார்த்தல், குங்குமப் பூ வைத்தல், வீட்டுக்கழைத்தல், புண்ணியதானம் செய்தல் ஆகியன முக்கிய இடம்பெறுகின்றன. அத்துடன், மாமன் சோறு மற்றும் ஆட்டுக் கிடாய் விருந்து அளிப்பது போன்றவையும் இச்சடங்கின் ஒரு பகுதியாக இடம்பெறுகின்றன.

### திருமணச் சடங்குகள்

மலையகத் தமிழரின் பெரியோர்களால் நிச்சயிக்கப்படும் திருமணச் சடங்குகளில், நிச்சயத் தாம்பூலம் பரிமாற்றல், பத்திரிகை வைத்தல்,

பொன்னுருக்கல், தாலி செய்தல், மணமகள் - மணமகன் வருகை, மூர்த்தக்கால் ஊன்றல், ஓமம் வளர்த்தல், கன்னிகாதானம், மாங்கல்யம் கட்டல், தனி வழி போதல் ஆகிய சடங்குகள் இடம்பெறுகின்றன.

### மரணச் சடங்குகள்

மலையகத் தமிழரின் ஈமச் சடங்குகளில், உற்றார் வருதல், பாலூற்றல், மாரடித்து அழுதல், கேதம் சொல்லுதல், தேங்காய் உடைத்தல், கோடி போடல், கட்டை மொய் பிடித்தல், சீரெடுத்தல், நீர்மாலை எடுத்தல், அரப்பு வைத்தல், நெய்ப்பந்தம் பிடித்தல், சீதேவி வாங்கல், வாய்க்கரிசி போடல், தாலி அறுத்தல், கொள்ளிக்குடம் எடுத்தல், பங்காளி உரையாடல், விடை கொடுத்தல் போன்ற சடங்குகள் இடம்பெறுகின்றன. அத்துடன், துக்க நிவாரணச் சடங்குகளாக சலிப்புச் சோறாக்கல், மீண்டும் பாலூற்றல், எட்டாம் நாள் காரியம், கருமாதி, அமாவாசை, திதி, திவசம் பிடித்தல் ஆகியனவும் இடம்பெறுகின்றன.

### ஆடைகள்

மலையகத் தமிழர்களின் ஆடைகள் பாரம்பரிய ஆடைகளாகவோ அல்லது அதற்கு ஒத்திசைவானதாகவோ காணப்படுகின்றன; இதில் ஆண்கள் வேட்டி, சட்டை, சால்வை என்பவற்றையும், பெண்கள் முழு நீளப் புடைவையையும் அணிகின்றனர், மேலும் கட்டிளமைப் பருவப் பெண்கள் பாவாடை - தாவணி அணிகின்றனர்; இந்த ஆடைகள் குடும்பம், சமூக, கலாசார நிகழ்வுகளில் சிறப்பாக அணியப்படுகின்றன. ஆடைகளின் நிறங்களாக, காளியின் உடை நிறமான சிவப்பு, மாரியின் உடை நிறமான பச்சை, மரங்கள் நிறமெனப்படும் மஞ்சள், ஊதா, நீல நிற உடைகள் விரும்பி அணியப்படுகின்றன.

### அணிகலன்கள்

மலையகத் தமிழர்களின் அணிகலன்களாக தாலிகள், மணிகள், தோடுகள், மாட்டல்கள், மூக்குத்திகள், நெற்றிச்சூடிகள், சிமிக்கிகள், கம்மல்கள், தொங்கட்டான்கள், சரிகை மினுக்கிகள் என்பன காணப்படுகின்றன.

### ஒப்பனைகள்

மலையகப் பெண்களின் பாரம்பரிய ஒப்பனைப் பொருட்களாக மஞ்சள், பயற்றம் மாவு, உழுந்து மாவு, கற்றாளை, கனகாம்பரம், மல்லிகைப்பூ, மருதாணி என்பன காணப்படுகின்றன.

### உணவு

மலையகத் தமிழர்களின் உணவாக, நெல்லரிச் சோறு, கோதுமை மா, கடலை, பயறு, பருப்பு என்பன பிரதானமாகவும் வாசனைப் பொருட்களாக பூண்டு, வெங்காயம், இஞ்சி, மஞ்சள், கொள்ளு, எள்ளு, ஏலம், கராம்பு, சோம்பு, மிளகு, வெந்தயம், சீரகம், கடுகு, மல்லி, கறிவேப்பிலை, ரம்பை, கறுவா என்பனவும் காணப்படுகின்றன.

மலையகத் தமிழரின் சமையலில் தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், கடலை எண்ணெய், இலுப்பெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் ஆகிய எண்ணெய் வகைகளும்; அரிசிக் கொழுக்கட்டை, பயற்றங்கொழுக்கட்டை, உளுந்த வடை, பருப்பு வடை, மா வடை, அதிரசம், கடலைச் சுண்டல், அரிசிப் பலகாரம், குழிப்பணியாரம், அவல், பொங்கல், பாற்சோறு, புளியோதரை, தயிர் சாதம், நெய் சாதம், மோதகம், கஞ்சி, பாயாசம், அப்பளம், சக்கரைப் பொங்கல், சீனிப் பொங்கல், இடியப்பம், இட்டலி, தோசை, பிட்டு, உப்புமா, அராட்டி, மணிப்பிட்டு, உளுந்தங்களி, சோளம் போன்ற திண்பண்டங்களும் காணப்படுகின்றன. தமிழரின் முக்கனிகளான மா, பலா, வாழை என்பனவும், பப்பாளி, கொய்யா என்பனவும் இவர்களது உணவில் இடம்பெறுகின்றன. மேலும், வடை, ரசம், பாயாசம், அப்பளம், மோர், தயிர், நெய் என்பன சிறப்பான விருந்துபசார உணவுகளாகக் காணப்படுகின்றன.

### படையல்

மலையகத் தமிழர்களின் படையல் விருந்தில், கடவுளர் மற்றும் இறந்தவர்களுக்கு, தலை வாழையிலையின் மத்தியில் சோறு, பருப்புக்கறி, நெய்யுடன் சுற்றிவர பல்வேறு மரக்கறிகள், வடை, பாயாசம், அப்பளம், சர்க்கரை என்பன படைக்கப்படுகின்றன; நாட்டுப்புறச் சிறு தெய்வங்களுக்கு இறைச்சி, ஆட்டுக்கறி, நாட்டுச் சேவல் கறி, பெட்டைக் கோழிக் கறி, முட்டை என்பனவும் படைக்கப்படுகின்றன. மேலும், மாரியம்மன் திருவிழாவின் இறுதி நாளில் கருவாட்டுக் குழம்பும் கட்டுச் சோறும் சமைக்கப்படுவதோடு, எட்டாம் நாளன்று கோழி, ஆடு என்பன பலியிடப்பட்டுப் படைக்கப்படுகின்றன.

மலையகத் தமிழரின் தெய்வங்களான மாடன், சுடலை மாடன், கருப்பு, சங்கிலிக் கருப்பு, முனி, சடாமுனி, மருதை வீரன், மருதையன், காளி ஆகிய கோவில்களில் ஆடு வெட்டும், சேவல்/ கோழி வெட்டும், வேள்வி என்பனவும் மாமிசப் படையலும் நடைபெறுகின்றன; மந்திர, சூனியச் சடங்குகளின்

போதும் பலி கொடுத்தல் மற்றும் மாமிசப் படையல்கள் இடம்பெறுகின்றன.

### பேயோட்டல்

மலையகத்தில் ஆண்கள், பெண்கள், இளம்பெண்கள், சிறுவர்கள் என யார் நோய்வாய்ப்பட்டாலும், குறிப்பாக அந்நோய் தீர்க்க முடியாததாகக் காணப்படும் போது, பாரம்பரியப் பேயோட்டும் சடங்கு நிகழ்த்தப்படுகிறது. பூசாரிமார் வருகை தந்து இரவு நேரத்தில் இச்சடங்கை நிகழ்த்துவர். இதில் குலதெய்வம் உட்படப் பல தெய்வங்களை அழைத்துப் பேயோட்டும் சடங்கு நிகழ்த்தப்படுகிறது. இச்சடங்கின் போது மாடன், மாரி, காளி, பத்திரகாளி, உத்திரகாளி, முனி, சடாமுனி, கருப்புசாமி, மாகாளி, மாகாமுனி, வைரவர் எனப் பல்வேறு நாட்டுப்புறத் தெய்வங்கள் அழைக்கப்பட்டுப் பேயோட்டும் சடங்கு நிகழ்த்தப்படும்.

இச்சடங்கில் உடுக்கடிப் பாடல்கள், பேயோட்டும் பாடல்கள் பாடப்படும் போது சாட்டை கொண்டு பேய் பிடித்தவரை அடித்தல், பேயைக் கட்டுதல், வெட்டுதல், ஓட்டுதல், ஒதுக்குதல் போன்ற செயல்கள் மூலம் பேய்ப் பிணி தீர்க்கப்படுகிறது.

*"அந்தி முனி சந்தி முனி ஆகாசமான முனி*

*சக்தி முனி கருப்பா சந்தியில் வாருமப்பா*

*ரோத முனி கரப்பா இப்பையே நீ இறங்கி வாருமப்பா*

*எல்ல முனி கருப்பா இப்பையே நீ வாருமப்பா*

*அய்யா முனியாண்டி அண்ணாதுரை வாருமப்பா*

*உனக்கு காவலிட்டேன் உத்தமனார் சந்நிதியில் ஊர காக்க வேணு உடனடியா வாருமப்பா*

*ஏய் முனிக்கருப்பா நீ வர வேணும் இந்நேரம்*

*ஏய் ஐந்து பஞ்ச பூதமும் அடக்க நீ வர வேணும்*

*ஏய் ஐந்து பஞ்ச பூதத்திலும் அமைந்த பொருளாருத்து*

*உண்மைய நான் உரைக்க முனியய்யா வரவேணும்"*

போன்ற வகையான பாடல்கள் பூசாரியால் பாடப்படுகின்றன.

### சூனியச் சடங்குகள்

ரெஜி டேப்ரே எனும் ஊடகவியலாளர், அல்ஜீரிய விடுதலைப் போராட்டத்தின் போது ஸ்பானிய காலனி ஆதிக்கத்திற்கு எதிராக சூனியச் சடங்குகள் பயன்படுத்தப்பட்டதை எடுத்துக்காட்டுகிறார். எதிரிகளின் மனதைக் கட்டுப்படுத்தவும், அச்சுறுத்தவும், உளவியல் ரீதியாகச் சீர்குலைக்கவும், எதிரிப் பெண்களை வசப்படுத்தவும் பாரம்பரியச் சூனியச் சடங்குகள் உலக மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்கிறார்.

இலங்கை மலையகத் தமிழர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களிடையே, எதிரிகளைப் பழி தீர்க்கவும், காலனித்துவ/ பின்காலனித்துவ அதிகாரத்தை வசப்படுத்தவும், பெண்கள்/ ஆண்களைக் கவரவும், காதலர்களை வசப்படுத்தவும், கல்வி/ முன்னேற்றத்தைத் தடுக்கவும் இச்சூனியச் சடங்குகள் இரகசியமாகப் பயன்படுத்தப்படுகின்றன. பூசாரிகளால் நிகழ்த்தப்படும் இச்சடங்குகள், எதிரிகளை அச்சுறுத்தி, அடிபணிய வைத்து, உளவியல் சிக்கல்களை ஏற்படுத்தி, வசப்படுத்தும்/ கீழ்நிலைப்படுத்தும் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளன. தோட்டப் பகுதிகளில் சுமார் 5000க்கும் மேற்பட்ட பூசாரிகளும் அவர்களின் உதவியாளர்களும் காணப்படுகின்றனர்; இவர்கள் தற்போது தமது சடங்குகளுக்கான கட்டணமாக குறைந்தபட்சம் 500 ரூபாய் முதல் இலட்சக்கணக்கான ரூபாய்கள் வரை அறவிடுகின்றனர்.

### நம்பிக்கைகள்

மலையகத் தமிழரிடையே தவளை கத்தினால் மழை வரும், காகம் கரைந்தால் விருந்தினர் வருவார்கள், நாய் ஊளையிட்டால் மரணம் நிகழும், பூனை கத்தினால் மரணம் நிகழும், கன்னி வாக்கும் காளை வாக்கும் பலிக்கும், கருநாக்குச் சொல் பலிக்கும், பூனை குறுக்கிட்டால் காரியம் கெடும், விதவை, வண்ணான், பரியாரியைக் கண்டால் பயணம் பலிக்காது, கர்ப்பிணி தேர் பார்க்கக் கூடாது, கிரகணம் பீடித்தால் உணவு நஞ்சுறும் போன்ற எண்ணற்ற நம்பிக்கைகள் நிலவி வருகின்றன.

### பண்ட பாத்திரங்களும் கருவிகளும்

மலையகத் தமிழரின் பண்ட பாத்திரங்களாக சட்டி, பானை, குவளை, கிண்ணம், தட்டு, செம்புக்குடம், சருவம், இட்டலிப் பானை, குண்டான், அரிசட்டி, வடிசட்டி, கரண்டி, ஆழக்கரண்டி, இடியப்பக் கட்டை, இடியப்பத் தட்டு, தார்க்குச்சி, உரல், உலக்கை, அம்மிக்கல், ஆட்டுக்கல், திருகைக் கல், இடியப்பக் கல், பிட்டுப் பானை, ரொட்டித் தகரம், உணவுக் கிண்ணம், உணவுத் தட்டு, குவளைக் கல் போன்ற மண், வெண்கல, செம்பு, ஈயப் பாத்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## மலையகத்தின் கூத்துக் கலைகள்

### பொன்னர் - சங்கர்

# பகுதி - 2

மலையகத் தமிழர்களிடையே மட்டுமே நிகழ்த்தப்படும் 'பொன்னர் - சங்கர்' கூத்தின் மையக் கருவாக, குண்ணுடையான், தாமரை நாச்சி ஆகியோரின் மரணமும், அவரது குழந்தைகளான பொன்னர், சங்கர், தங்காள் ஆகியோரின் சோகமும் துயரமும் அமைந்துள்ளன. இக்கூத்து, நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட 30க்கும் மேற்பட்ட தோட்டங்களிலும், குறிப்பாக நோர்வூட், போற்றி, சீனக்கொல்லை, வீரட் தோட்டங்கள், மஸ்கெலிய, காட்மோர், அரசித் தோட்டம், புளூம்பில்ட், அடம்ஸ்பிக் தோட்டங்கள் ஆகிய இடங்களிலும் நிகழ்த்தப்படுகின்றது.

"பொன்னி வள நாட்டுல தான்
குமரசங்கா சங்கா
தாய் தகப்பன் தானிழந்தோம்
குமரசங்கா"

என வரும் பாடல் மூலம் தமிழகத்தின் பொன்னி வள நாட்டில் நடந்த பெருங்காப்பியமொன்றாக இக்கதை காணப்படுவதைச் சுட்டிக்காட்டலாம். இதில் வரும் பாடல் பகுதியொன்றில்,

"நாக மலை, தோக மலை,
நாலு பக்கம் வீர மலை"
என மதுரை மாநகரைச் சூழவுள்ள மலைகளின் வர்ணனையும்,
"தெற்கத்தித்தான் கிளிகள் எல்லாம்
தென்னம்பழம் தின்னக் கிளி
வடக்கத்தித்தான் கிளிகள் எல்லாம்
வாழைப்பழம் தின்னக் கிளி"

எனத் தங்காள் புலம்புவதும் சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இங்கு தென்னம்பழம் என்பது தென்னங்காயின் பழுத்த தேங்காயைக் குறிக்கிறது.

### லவகுசா

இராமாயணக் கதையைச் சார்ந்த லவகுசா புராணக் கூத்து, இராமன் - சீதை ஆகியோரின் குழந்தைகளான லவன், குசன் ஆகியோர் காட்டில் வளரும் சூழல் பற்றியது. அவர்கள் ஒருநாள் தந்தையின் குதிரையைப் பிடித்துக் கட்டி வைக்கின்றனர். அதனை மீட்க வரும் சிறிய தந்தையர்களான இலட்சுமணன், பரதன், சத்துருக்கன் ஆகியோரைக் கொன்றும் விடுகின்றனர். பின், தந்தையாகிய இராமனையும் கொல்ல முற்படும் வேளையில், சீதையும் முனிவரும் தலையிட்டு அதனைத் தடுப்பதாக அமையும் இக்கூத்து, மலையகத் தோட்டப் பகுதிகளில் சிறப்பாக நிகழ்த்தப்படுகிறது.

### காமன் கூத்து

காமன் கூத்து மலையகத் தமிழர்களின் தேசியக் கூத்தாக எழுச்சி பெற்றுள்ளதுடன், அவர்கள் வாழும் தோட்டப் பகுதிகளில் பரவலாக நிகழ்த்தப்படுகின்றது. 600க்கும் மேற்பட்ட தோட்டங்களில் நிகழ்த்தப்படுகின்ற இக்கூத்து, ஒரு பன்முகப் பரிமாணம் கொண்ட சமூகக் கலையாக, மக்கட் கலையாக, மற்றும் சமுதாய அரங்காகவே காணப்படுகிறது. இது சடங்கு அரங்கு, ஊர்வல அரங்கு, மேடை நாடகம், தெருக்கூத்து போன்ற பல்வேறு வடிவங்களைக் கொண்ட ஒரு சமுதாய அரங்காக இருக்கிறது. மலையகப் பாட்டாளிகளின் பன்முகக் கூறுகளையும், ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் அனைவரும் கூட்டாகப் பங்கேற்பதையும் உள்ளடக்கியிருக்கும் இக்கூத்து, மலையகச் சமூக வாழ்வியலைக் கட்டமைப்பதில் பிரதான பங்கு வகிக்கிறது.

மலையக இளைய தலைமுறையினரிடையே காமன் கூத்து மிகுந்த ஈர்ப்பைப் பெற்றுள்ளது. இதற்குச் சான்றாக, 2024 ஆம் ஆண்டு பொகவந்தலாவ, பெத்தராசி தோட்டத்தில், ஊடகத்துறை மாணவர் ஒருவரான சதாசிவம் சஞ்ஜீவகுமார் என்பவரால் நாற்பத்திரண்டு ஆண்டுகளின் பின்னர் இக்கூத்து மீண்டும் நிகழ்த்தப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். மேலும், சுண்டுலாகந்தையில் கூட முப்பத்தைந்து ஆண்டுகளின் பின்னர் காமன்கூத்து நிகழ்த்தப்பட்டிருப்பது, இளையோர் மத்தியில் இக்கலையின் மறுமலர்ச்சியைக் காட்டுகிறது.

காலி என்கலவத்தை, மத்துகம இங்கிரிய, தெரனியாகலை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, நுவரெலியா, மாத்தளை மாவட்டத் தோட்டங்களில் இக்கூத்து சிறப்பான பண்பாட்டு விழாவாகக் காணப்படுகிறது.

### அருச்சுனன் தபசு

மலையகத் தமிழர் பண்பாட்டில் உள்ள கூத்துக் கலைகளின் மணிமகுடமாக அருச்சுனன் தபசு சிறப்பிடம் பெறுகிறது. மகாபாரதக் கதையை அடிப்படையாகக் கொண்ட இக்கூத்து, சூதாட்டத்தில் நாடு நகரங்களை இழந்த தருமன், தன் சகோதரர்களான நகுலன், சகாதேவன், வீமன், அருச்சுனன் ஆகியோருடன் 12 ஆண்டுகள் காடேகுவதுடன் தொடங்குகிறது.

பின்னர், அருச்சுனன் தவமிருந்து பாசுபத ஆயுதத்தைப் பெற்று, தமது நாடு நகரங்களை மீட்கும் நிகழ்வு இக்கூத்தின் முக்கியக் கருவாகும். இக்கூத்தில் வனம் கடத்தல் காட்சிகள், சண்டை, காதல் போன்ற பல்வேறு அம்சங்கள் சித்திரிக்கப்படுகின்றன. குறிப்பாக, தபசு மரமேறல் ஒரு சிறப்பான காட்சியாக அமைகிறது.

*"எந்தப் பக்கம் பார்த்தாலும்*
*மூங்கில் வனச் சோலை"*
*தருமர் தம்பி அருச்சுனனும் பாசுபதம் போறேன்.*
*பச்சி பறக்க வேணும்*
*ஹரி ஹரி ஹரிகர இராமா"*

மலையகத் தமிழர் பண்பாட்டில் இராம நாம கீர்த்தனை (டயகம தோட்டம்), பவளக்கொடி, காத்தவராயன் கூத்து, குறவஞ்சிக் கூத்து என்பனவும் நிகழ்த்தப்படுகின்றன.

### மலையகத் தேசிய அரங்கு

மலையகத் தமிழரின் பாரம்பரிய அரங்குகளை விடுத்து, அவர்களின் வாழ்வியலைச் சித்திரிக்கும் அரங்க வடிவங்களும் காணப்படுகின்றன. இதில் கோ. நடேசய்யரின் தோட்டத் தொழிலாளரின் அந்தரப் பிழைப்பு நாடகம் முதல், மாத்தளை கார்த்திகேசுவின் கள்ளத்தோணி, காலன் கூத்து, சகதிப் புழுக்கள், செ. லீலாவதியின் திக்க காட்ட (கசந்த தேயிலை), லயத்துக் கோழிகள், ரதி - கூத்து, கிருஸ்டிநேசகுமாரின் விம்பம், பொன் பிரபாகரனின் நெருப்பு, வெல்வதற்கோர் பெண்ணுலகம், சின்னக் கவுண்டர், தி. சிவநேசனின் எலிப்பொறியில் பூனை, நிசாமின் மேட்டுநிலக் கண்ணீர், யட்டியாந்தோட்டை கருணாகரன், காளிதாஸ் ஆகியோரின் நாடகங்கள், மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவிகளான கலைமாமணி ராதிகா, கலைமாமணி பிரசாந்தி ஆகியோரின் நாடகங்கள், லிந்துலை சுகுமார், சு. பிரேம்குமார், கொட்டகலை செந்தூரன், ஹப்புத்தளை புனிதவதி, ஜீவராஜா ஆகியோரின் நாடகங்கள் வரையான அரங்க முயற்சிகள் மலையகத் தேசிய நாடக இயக்கத்தின் சிறப்பான குறிகாட்டிகளாகும்.

### மலையகத் தமிழர் நாட்டுப்புற நடனங்கள்

மலையகத் தமிழரிடையே பயிலப்பட்டு வரும் நாட்டுப்புற நடனங்களாக கும்மியாட்டம், கோலாட்டம், மாரடிப்பு, கரகாட்டம், காவடியாட்டம், இலாவணியாட்டம், பேயாட்டம், தீப்பந்த ஆட்டம், சுருளி வித்தை ஆகியனவும்; ஓரடி, ஈரடி, மூன்றடி, நான்கடி, எட்டடி, வட்டம், அரைவட்டம், முக்கோணம், எண்கோணம் போன்ற வடிவங்களைக் கொண்ட ஆடல் வகைகளும் காணப்படுகின்றன. மேலும், குரங்காட்டம், மானாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் நடனம், சாமியாட்டம், மருதை வீரன் ஆட்டம், வீரபத்திரன் ஆட்டம், காளி நடனம், தேர் வசந்தன் நடனம், காட்டேறி ஆட்டம், ஆணிப்பலகை மேல் ஆடல், அறுதபடி கம்பத்தில் ஆடல், தீவட்ட ஆட்டம், சுருளி ஆட்டம், வேலாட்டம், பரதன் ஆட்டம், அருச்சுனன் ஆட்டம், தேவியாட்டம் எனப் பல்வேறுபட்ட ஆடற்கூறுகளும் மலையகத் தமிழரின் சிறப்பான நடனங்களாக உள்ளன.

### அரங்கப் பாடல்கள்

இலங்கை மலையகத் தமிழர்களின் அரங்கச் செயற்பாடுகளில் அவர்களின் சமூக வியாபகத் தன்மை, வாழ்வியல் துன்பங்கள், அவலங்கள், சவால்கள், போராட்டங்கள், ஏக்கங்கள் என்பனவும் வெளிப்படுகின்றன. இவை மலையகத் தமிழரின் பண்பாட்டுத் தேசியத்தின் தனித்தன்மையையும், தேசியத் தன்னாட்சிக்கான தேவையையும் முன்னிறுத்துகின்றன.

இவ்வரங்கப் படைப்புகளுக்கு தமிழர் வரலாறு, பண்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடைய அரங்கியல் கூறுகளும், நவீன சமூகத்தின் சமூக அசைவுகளும் உந்துசக்தியாக இருக்கின்றன. இருப்பினும், இவை கடந்த 200 ஆண்டுகளாக முறையாக ஆவணப்படுத்தப்படவில்லை; குறிப்பிட்ட சில அரங்கப் பிரதிகள் மட்டுமே தொகுக்கப்பட்டுள்ள நிலையில், பல்லாயிரக்கணக்கான அரங்க முயற்சிகள் ஆவணப்படுத்தப்படாமல் போயிருக்கின்றன.

*"மண்ணின் நிறத்தவரோ - அவர்*
*மானின் நிறத்தவரோ - அவர்*
*பொன்னின் நிறத்தவரோ - அவர்*
*பூமி நிறத்தவரோ - அவர்"*
*(பொன். பிரபாகரன் - வெல்வதற்கே பெண்ணுலகம்)*

*"தலை உடைபட்டு*
*அறுபட்டு, நெரிபட்டுப் போனது - அங்கு தேசிங்கு கைவாள் தீப்பொறி*
*கக்கியே பறக்கையிலே.....*
*சிப்பாய் முகமது சிங்கம்*
*எங்கும் செந்தீ வருகையிலே"*

*(பொன். பிரபாகரன், 2023, அமரர் வேலு. தங்கவேல் மாஸ்டர், வாழ்வும் பணியும், தேசிங்கு ராஜன் கதைப் பாடல், பக்.23)*

*“மலையகத் தோழா*
*மானம் இங்கே*
*போவதைப் பாராய்*
*மாண்புள்ள எம்மை*
*மறந்திட்டாரே*
*மாறுதன்றோ”*

(பொன். பிரபாகரன், 20-23, அமரர் வேலு. தங்கவேல் மாஸ்டர், வாழ்வும் பணியும், பக். 27)

*“தினக்கு தினக்கு தினக்கு தின்னா...*
*அரசி மூட்டையில ஓட்டை*
*அய்யா போடும் சட்டையிலும் ஓட்டை*
*அலுமாரி லாச்சியிலும் ஓட்டை*
*அம்மா அட்டாளி மூலையிலும் ஓட்டை”*

(தியாகராஜா சிவநேசன், எலிப் பொறியில் பூனை, பக். 3)

*“மட்டக் கொழுந்துக் காரி*
*மடமடத்த சேலைக்காரி.. ஒன்*
*மடத்தனத்த விடுப்புட்டு*
*குடித்தனத்தப் பாருங்கடி”*

(மா. ரூபவதன், வாழப் பிறந்தோர்க்கு)

*“இந்தக் கூடைகள்...*
*இந்தக் கூடைகள்...*
*எப்போதும் எம் வரலாற்றையும்*
*எம் பண்பாட்டையும்*
*மட்டுமே பேசுகின்றன”*

(பொன். பிரபாகரன், வெல்வதற்கே பெண்ணுலகம்)

போன்ற அரங்கப் பாடல்கள் மலையகத் தமிழரின் அரங்கியல் பண்பாட்டில் தேசிய தன்மையைப் பிரதிபலிக்கின்றன.

#### நாட்டுப்புறப் பாடல்கள்

மலையகத் தமிழரின் நாட்டுப்புறப் பாடல்களாக கல்யாணப் பாடல், வளைகாப்புப் பாடல், தாலாட்டுப் பாடல், வாழ்த்துப் பாடல், குலவைப் பாடல், ஒப்பாரிப் பாடல், தெம்மாங்குப் பாடல், கொலைச் சிந்து, மாரியம்மன் தாலாட்டு, திருக்கல்யாணம், கூத்துப் பாடல், உடுக்கடிப் பாடல், தொழிற் பாடல், விளையாட்டுப் பாடல், காதல் பாடல், மாரடிப்புப் பாடல், பபூன் பாடல், குறவன் குறத்திப் பாடல்கள் எனப் பலவகைப் பாடல்கள் பயிலப்படுகின்றன.

மலையக நாடகங்களில், பாரம்பரிய மற்றும் சமூக நாடகங்களுக்கு இடையே, மக்களை கிளுகிளுப்பூட்டுவதற்காகவும், மகிழ்ச்சி ஊட்டுவதற்காகவும், சிந்திக்கத் தூண்டுவதற்காகவும் பபூன் பாடல்கள் பாடப்படுகின்றன. இதைப் பாடும் கதாபாத்திரங்கள் கோமாளிகள் என்று அழைக்கப்படுகின்றனர்; இவர்களைப் பபூன் என்றும் கூறும் மரபு காணப்படுகிறது. இந்தக் கோமாளிகள் (பபூன்கள்), நாடகத்தின் இடையே வெளிவந்து, பாடல்களைப் பாடி, நாட்டுப்புறக் கதைகளையும் கூறி மக்களை மகிழ்விக்கிறார்கள்.

“ஹாய் பள பள பள பள பள பள பள பள பள பபூன் வந்தேனே சொக்க பபூன் வந்தேனே வந்தனம் சொல்லித் தந்தேனே தக்கடா தக்கா தக்கடா தக்கா”

“கொட்டாம்பட்டி ரோட்டிலே குட்டி போற சோக்கிலே

நான் குட்டியைத் தான் பார்ப்பனா இந்த ரொட்டிய தான் தின்பனா

கும்குன்னா கும்கு தான்”

“பந்தலிலே பாவக்கா பந்தலிலே பாவக்கா போகையில பாத்துக்கலாம் போகையில பாத்துக்கலாம்”

“ஐயா கப்பலேறிக் கூட்டி வந்த கங்காணியாரே தலைமைக் கங்காணியாரே

உங்க கப்பலும் தான் கவிழ்ந்து போச்சே கங்காணியாரே

உங்க கப்பலும் தான் கவிழ்ந்து போச்சே”

இந்தப் பபூன்கள் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் அவர்களின் பல பாடல்களை நாடகங்களின் இடையே பாடிக்காட்டுவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக பெரிய எலிப்படைத் தோட்டம் பணியக் கணக்கிலே வாழ்ந்த, கோமாளி என்று அழைக்கப்படும் சின்னதம்பி என்பவர்,

*“சிட்டான் சிட்டான் குருவி சினுக்குத்தான்*
*அந்த சின்னப் புள்ள காதுல ஒரு குணுக்குத் தான்*
*சின்ன ஆறாம் மீனை ஆத்துல*
*அகிலங்கன்டா சேத்துல*
*சின்னச் சட்டியில் போட்டாலும்*
*ஒரு சிலுக்குத் தாளம் போடுது*
*பெரிய சட்டியில் போட்டாலும்*
*ஒரு குணுக்குத் தாளம் போடுது”*

என்று பாடி வருவது என்றும் மறக்க முடியாத நிகழ்வாக மனதில் பதிந்து இருப்பதை இங்கு பதிவு செய்யலாம். மேலும்,

*"கல்யாணமாம் கல்யாணமாம்*
*கன்னியவற்கு கல்யாணமாம்*
*கல்யாணமாம் கல்யாணமாம்*
*காளையிற்கே கல்யாணமாம்*
*எனக் கல்யாணப் பாடல்களும்,*
*"கண்ணுறங்கு கண்ணுறங்கு*
*கண்மணியே கண்ணுறங்கு*
*மாமன் அடிச்சானோ*
*மாலையிடும் கையாலே"*

என்றவாறான தாலாட்டுப் பாடல்களும்,

*"பொலி பொலி தாயே*
*பொலி பொலி தம்பிரானே"*

என்றவாறான கொழுந்தெடுக்கும் பெண்கள் பாடல்களும்,

"தண்டுகலா தோட்டத்திலே
தண்டு முண்டு கணக்குத்தான்
துண்டு துண்டா வெட்டிப்புட்டாங்க"

எனக் கொலைச் சிந்துப் பாடல்களும்,

*"தோட்டம் துறந்தல்லவோ - மாமா*
*தொண்ணூறு இலட்சம் பூவெடுத்தன்"*

எனப் பொன்னர் - சங்கர் கூத்துப் பாடல்களும்,

*"தோட்டம் துறந்தல்லவோ - மாரி*
*தொண்ணூறு இலட்சம் பூவெடுத்தன்"*

என மாரியம்மன் தாலாட்டுப் பாடல்களும்,

*"கண்ணா கண்ணாம் பூச்சியோ*
*காட்டுத் தலைச்சியோ*
*எத்தனை முட்டை இட்டாய்"*
*எனக் கண்ணாம்பூச்சி விளையாட்டுப் பாடலும்,*
*"சங்கிலி புங்கிலி கதவத் திற*
*நாமாட்டேன் வேங்கைப் புலி*
*பசுமாட்டக் கண்டிங்களா?"*
*என விளையாட்டுப் பாடல்களும்,*
*"ஓடற நரியில ஒரு நரி குள்ள நரி"*

எனும் உச்சரிப்பை வலியுறுத்தும் பாடல்களும்,

*"ஊசி மணி, பாசி மணி*
*ஊசி வாங்கலையோ*
*அம்மாமாரே ஊசி வாங்கலையோ"*

என்ற குறத்திப் பாடல்களும்,

*"வனமாய் வனம் கடந்து அடுத்த வனம் தானடைந்தேன்"*

என வனம் கடத்தல் பாடல்களும்,

*"வண்ணான் வந்தேனே*
*வண்ணான் வந்தேனே"*

என வண்ணார் பாடல்களும்,

*"என்னப் பெத்த ராசாவே*
*என்னவுட்டு போயிட்டியே"*

என ஒப்பாரிப் பாடல்களும்,

*"தத்தக்கா புத்தக்கா*
*தைலம் சோறு"*

என கிச்சி மூட்டும் பாடல்களும்,

*"அந்தி முனி சந்தி முனி*
*ஆவாசம் காத்த முனி"*

என்ற உடுக்கடி பூசாரிப் பாடல்களும்,

*"தேங்காய் உடைக்க தண்ணீர் சிதறவே*
*தெப்பக்குளம் ரெண்டும் தத்தளிக்க*
*சின்னக் குளத்திலே பாம்பு புடிச்சு சிங்கார*
*தோப்புல வேட்டையாட சின்னத்துரை வீட்டுக்கு வந்தாராம்"*

எனக் கும்மிப் பாடல்களும்,

*"தீப ராம தீம ராக்கு பெட்டி*
*ஐஸ்கிறீம் கொத்தமல்லி*
*ஐந்தாம் நம்பர் சோடா*
*குடிச்சி பாத்துட்டுப் போடா"*

போன்ற வாய்மொழிப் பாடல்களும் மலையக இலக்கியத்தின் கூறுகளாகக் காணப்படுகின்றன.

இலங்கை மலையகத் தமிழர் பண்பாட்டில் வீதிப் பாடல்கள் மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. மலையகத் தமிழரின் வாழ்வியலின் ஆரம்பக் கட்டங்களில், தொழிற்சங்க இயக்கம், பத்திரிகை இயக்கம், நவீன நாடக இயக்கம் ஆகியவற்றின் ஆரம்பக் கர்த்தாக்களான தேசபக்தன் கோ. நடேசய்யர், மீனாட்சியம்மாள், எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை, கா.சி ரெங்கநாதன், சிறி மகாலிங்கம் போன்றவர்கள் இந்த வீதிப் பாடல்களைத் தொகுத்திருக்கிறார்கள் என்று அறிய முடிகிறது. கோவிந்தசாமி, பெரியசாமி, ஜில் ஆகியோரும் இந்த மலையகப் பகுதிகளில் வீதிப் பாடல்களைப் பாடிய மிக முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர். இப்

பாடல்களில், கொலைச் சிந்துப் பாடல்கள் சிறு பிரசுரங்களாக எழுதப்பட்டு, வீதி வீதியாக விற்பனை செய்யப்பட்டதோடு, அந்தப் பாடல்களைத் தோட்டம் தோட்டமாகச் சென்று பாடிக்காட்டிய ஒரு காலமும் மலையகத்தில் இருந்தது. 60களுக்கு முற்பட்ட காலத்தில்,

*"1959 ஆம் ஆண்டிலேயே ஆனதொரு*
*பத்தாம் மாதம் அவனிதனில் நடந்ததொரு*
*கொலை 23 ஆம் தேதி*
*நடந்த கொலை செய்தி பார்ப்போம்*
*லட்சுமித் தோட்டம்*
*சிறந்த தொழிலாளர்களாம்*
*சேர்ந்தாராம் சங்கம்*
*லட்சுமித் தோட்டத்திலே பட்சமுடன் சங்கம் வந்து*
*பலமான கூட்டம் போட்டு பறக்குது பார்*
*கதர் கொடி ஜொலிக்குது பார்"*

என்ற பாடல் கொலைச் சிந்தாகப் பாடப்பட்டு இருக்கின்றது.

*"அடிமை நாட்டுக்குள்ளே*
*ஆண்டகாலம் போதுங்க*
*மேல்நாட்டுக்காரன் வாழுங்க*
*அமெரிக்காவின் சூதுங்க*
*சட்டம் கடுமை கொடுமை*
*அடிமை என்ற மடமை நமக்கு ஏதுங்க"*

என்ற பாடலும் சிந்திக்கத் தூண்டுவதாக இடம்பெற்றிருக்கின்றது.

*"கண்காணிச்சதும் போதுமடி*
*நம்ம கங்காணி போட்டது போதுமடி*
*சில சங்கங்களைச் செய்த போதுமடி*
*இங்கு தந்த தந்திட தந்திட்டா போதுமடி"*

என்று பாடுகின்றனர்.

ஏ.எம்.எம்.ஏ இராமையா என்பவர் தன்னுடைய தெருப்பாடல்களில்,

*"சீக்கிரமாய் பத்தாம் நம்பர் சோடி தீரணும்*
*சீமை மேலே பறந்து கொண்டு சேர்த்துக் கட்டணும்*
*பெரிய சணல் கயிற்றை அதுக்கு மேல இறுக்கிக் கட்டணும்*
*கைக் குழந்தை ஒன்றைத் தூக்கி இடுப்பில் வைக்கணும்*
*மாட்டுப் பாலை கொஞ்சம் போத்தலிலே ஊற்றிக் கொள்ளணும்"*

என்று பாடுகிறார்.

மலையகத்தின் ஆரம்பகால நாடகங்களில், தோட்டத் தொழிலாளர்கள் தாமாகவே இயற்றிப் பாடிய பல்வேறுபட்ட நாடகப் பாடல்கள் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். அவை மலையகத் தமிழர்களின் சிறப்பான வாழ்வியலைச் சித்திரிக்கின்ற நாடகப் பாடல்களாகக் காணப்படுகின்றன. மலையக பஜனைப் பாடல்கள் மார்கழி மாதம் தொடங்கப்பட்டு, தைப்பொங்கல் தினம் வரை ஒரு மாத காலத்திற்கு தோட்டம் தோட்டமாகவும், கிராமம் கிராமமாகவும், நகர்ப்புறங்களிலும் வருடந்தோறும் பாடப்படுகின்றன. இந்த பஜனைப் பாடல்களில் இராமனையும் இராமாயணக் கதைகளையும் முன்னிறுத்தி இயற்றப்பட்ட பல பாடல்கள் பாடப்படுகின்றன.

*"தேடித் தேடி அலைய நானே ராமா*
*வாடி வாடி வருந்தினோமே*
*அண்டம் எல்லாம் ஓர் அடியாய்*
*மண்டலமும் இரு அடியாய்*
*அளந்து மேல் நின்றவனை ராமா*
*அரிபாதம் காண்பதுவோ ராமா"*

என்றும்,

*"இன்னும் எத்தனை தூரமோ பண்டாரிபுரம்*
*இன்னும் எத்தனை தூரமோ*
*அது ஏன் பண்டாரிபுரம் செல்லேன் பண்டாரி நாதா*
*பண்டாரி நாதா உன்னைப் பார்ப்பது காலமோ"*

என்றும் பாடல்கள் பாடப்படுகின்றன.

மலையக மக்களிடையே பல்வேறு வகையான கோலாட்டங்கள் ஆடப்படுகின்றன.

*"மானை விரட்டலையோ ராமா*
*மனவருத்தம் கொள்ளலையோ சீதையை*
*இராவணன் சிறையும் எடுக்கலையோ*
*தந்த காருண்ய வனத்தில் கொண்டு போய் விடலையோ"*

கும்மிப் பாடல்கள் மற்றும் கும்மியடித்தல் என்ற குழுச் செயற்பாடு அல்லது விளையாட்டு தோட்டப் பகுதிகளில் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர், சிறுமிகளால் நிகழ்த்தப்படுவதைக் காணலாம். குறிப்பாக திருவிழாக் காலங்களில் கும்மிப் பாடல்கள் பாடப்பட்டு, கோலாட்டம் ஆடப்படுகிறது. எடுத்துக்காட்டாக,

*"தன்னன்ன வேணும் தன்னன்ன தினம் தன்னானே*

*தன்னன்ன நவீனம் தன்னன்ன வேணும்*
*தன்னன்ன வேணும் தன்னானே*
*மங்கையர் எல்லோரும் வாருங்கடி*
*நல்ல மாணிக்க கங்கை நீராடுங்கடி*
*சிங்கார நகையை பூட்டுங்கடி நல்ல*
*சிறந்த குங்குமம் தீட்டுங்கடி*
*மூங்கில் மனையிலே பச்சரிசி நல்ல*
*முப்பது தேங்காய் வச்சி படைக்கின்ற அம்மனுக்கு*
*தினம் வந்தேந்து கும்மியடிங்கடி*
*ஆத்துல மழையிலே தெரு பூட்டி அல்ல*
*அங்கொரு பானையை நட்டு வச்சி*
*வாராரு நம்ம பரமசிவன்*
*வளைந்து கும்மியடிங்கடி"*

என்ற வகையான கும்மிப் பாடல் சிறப்பாகப் பாடப்படுவதைக் காணலாம்.

இதே போல இந்தத் தோட்டப்பகுதிகளில் பாடப்படுகின்ற தொழிற் சிந்துகள் எனப்படுகின்ற வேலைத்தலப் பாடல்கள், தொழிற்சாலைகளில் பல்வேறு வகையில் தொழிலாளர்களாலும் பாடப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

*"திண்ணைய திண்ணையைக் கூட்டுங்கடி அந்த*
*தெருவுல திண்ணையக் கூட்டுங்கடி*
*நம்ம ஐயா கங்காணி சாய்ந்திருக்க*
*நல்லா திண்ணையைக் கூட்டுங்கடி"*
*"பாப்பாத்தி போலிருப்பாள் வெள்ளைக்காரி*
*அதைப் பார்த்துப்புட்டு ஓடிருவாள் புள்ளக்காரி"*
*"மேல் மதுரை கீழ் மதுரை தென்மதுரை*
*நம்ம துரை போற வாகனத்தினால் நொண்டிக்குதிரை*
*அட கோப்பி நல்லாக் குடிச்சிட்டாராம்*
*நல்ல குதிரை மேல ஏறிட்டாராம்*
*வம்பக்காடு சுற்றி எல்லோராரா நம்ம சின்னத்துரை"*
*"கிளிக் கூட்டு மேலேறி சின்னத்துரை*
*கிண்ணாரங்கள் பல வாசிப்பாராம் அடி*
*சின்னக் கிணத்துல சிங்காரத் தோப்புல*
*வேட்டையாடி வம்புக்காடு சுத்தி எல்லோராரா*
*நம்ம சின்னத்துரை"*
*"வெள்ளிக் குஞ்சரம் வீசுங்கடி*
*பெண்கள் வெள்ளிக் குஞ்சரம் வீசுங்கடி"*
*"கங்காணி காட்டுங்க கண்டாக்கையா*
*ரோட்டு மேல பொடியன் பலம் எடுக்க*
*பொல்லாப்பு நேர்ந்தது - ஐயா*
*பழமிருக்கு சாக்குலதான் பாத்துக்கடி*
*பத்திரமா வாசு மகன் கோப்பையிலே*
*பலம் எடுக்க நேரமாச்சு"*
*"கண்டித்துரை தோட்டத்திலே*
*கருத்த குட்டி மொழி பெரட்டி*
*கிட்ட கிட்ட நிறப்புடிச்சு சிட்டா*
*பறக்கிறாரே கட்டதுரை பட்டியலில்*
*கட்டக் குட்டி இரண்டு பேரு கிட்ட*
*கிட்ட நிறப்பிடிச்சு சிட்டா பறக்கிறாரே"*

எனப் பாடல்கள் பல பாடப்படுவதைக் காணலாம்.

இதே போல சிறுவர் விளையாட்டுகளில் நையாண்டிப் பாடல்கள் என்றொரு வகைப் பாடல்கள் பாடப்படுகின்றன.

*"தாத்தா தாத்தா கொஞ்சம் பொடி குடு*
*அந்தத் தட்டுவாணி பெத்த புள்ள"*

இலக்கியத்திலே காதல் பாடல்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

*"மாமன் மகளே மருதப்பில்லா சோலையே*
*ஏலங்கிராம்பே உன்னை என்ன சொல்லிக் கூப்பிடுவேன்*
*அஞ்சு மணி ஆச்சு ஐயா வர நேரமாச்சி*
*கொஞ்சி விளையாடாதீங்க குழுக்காரன்*
*கங்காணி கல்லுருக கல்லுருக*
*கண்டார் மனமுருக நானும் சடங்காகி*
*ஏறிட்டு முகம் பார்க்கலையே*
*மறக்குதில்ல மறந்ததினால் ஆறுதல்ல*
*மருதசரவிலக்கு நான் மறக்கிறது*
*எந்த விதம்"*

தொழிலில் படுகின்ற, துன்ப துயரங்களையும் பதிவு செய்திருக்கிறார்கள்.

*"கூடையில கொழுந்தும் இல்ல*
*கொழுந்தெடுக்க சிந்தை இல்ல*
*கங்காணி சொன்ன சொல்லு*
*கண்ணீரைக் கொட்டுதடி*
*பாலு மடிப்பிலே*
*பாலகனும் தொட்டியிலே*
*பாலகனும் பெத்தெடுத்த*
*பாண்டியரும் முள்ளு குத்த*
*வேலைக்கு பிந்தினேனே*

*விரட்டிடுவான் கங்காணி*
*தூங்கடா என் மகனே*
*துயரக் கதை பாடிடுவேன்"*

சமூக நிலையைச் சித்திரிக்கும் நாட்டுப்புறப் பாடல்கள், மலையகத் தமிழரின் தேசியத்தில் மிகச் சிறப்பான இடம்பெறுகின்றன.

*"தோணி வருகிறது என்று துறைமுகமே காத்திருந்தேன்*
*தோணி கவுந்துருச்சு துறைமுகமே ஆசை இல்லை*
*கப்பல் வரகுதுன்னு கடற்கரையை காத்திருந்தேன்*
*கப்பல் கவுந்தருச்சு கடற்கரையே ஆசை இல்லை"*

குலவைப்பாடல்கள், மாரியம்மன் திருவிழாவையொட்டி அல்லது தலைமையொற்றி தோட்டப்பகுதிகளில் பாடப்பட்டிருக்கின்றன.

*"வெள்ளிக்கொட புடிச்சு நம்ம*
*முத்துமாரிக்கு விரலால பொட்டுமிட்டு*
*வெள்ளாள பெண்களோட நம்ம*
*முத்துமாரிக்கு விளையாண்டு*
*வாராங்களாம் போடுங்கோ மாதர்களே*
*நம்ம முத்துமாரிக்கு பொன்னால*
*திருக்கொலவ"*

மலையகத் தமிழர்களின் திருமணப் பாடல்களில், மணமகள் கட்சியினர் பாடுவதாகச் சில பாடல்கள் அமைகின்றன.

*"நீக்கிணறு வெட்டி நிழல் பார்க்கும் போது*
*என் அண்ணார் அழகை கண்டு பின்னால்*
*சரணம் என்றாள் பால் கிணறு வெட்டி*
*பால் கிணறு வெட்டி பால் விலை*
*பல் விளக்கப் போகும்போது*
*என் அண்ணார் அழகைக் கண்டு பின்னால்*
*சரணம் என்றாள்"*
*"கல்யாணம் என்றைக்கோ கல்யாணம்*
*என்று சொல்லி கடேலேறி பார்க்க*
*வைத்தோம் வெள்ளிக்கிழமையிலே*
*வெளியே இரண்டு நாளிலே புதன்கிழமை*
*நாளிலேயே பொன்னான தேதியிலே*
*கல்யாணம் கல்யாணம் என்றைக்கோ கல்யாணம்"*

மரண வீடுகளில் பாடப்படுகின்ற ஒப்பாரிப் பாடல்களில், கணவனுக்கு ஒப்பாரி பாடுகிறார்கள் (இரா. சிவலிங்கம், பக். *186*).

*"சுத்தி மருள் இருக்கும் - நம்ப வாசல்*
*சுடலைக்கல் பாவியிருக்கும் - நான்*
*சுத்தி மருள் ஒதுக்கி*
*சுடலைக் கல் மேல் நிக்க*
*சூதான ஏமன் வந்து - உங்களை*
*சுண்டு விரலுக்கே*
*சூச்ச கயிர் போட்டு*
*கரு வீலங் காட்டிலே - நான்*
*கை வீசிப் போனால்*
*கரடி வழி மறிக்கும்*
*கரட்டானும் முன்னே வரும்"*

தந்தைக்கு ஒப்பாரி பாடுகையில்,

*"வெள்ளரிக்கா பச்ச நிறம்*
*என்ன பெத்த அப்பா*
*வீமர் கை பூ மாலை*
*வெயிலடிச்சு மங்காமே*
*நீ பெத்த மக்க*
*விசனம் வச்சி மங்குறோமே!"*

என்றும் (மேலது, பக். *188*), தாயிற்கு ஒப்பாரி பாடுகையில்,

*"கூடையிலே பூவெடுத்து - என்*
*மாதாவே அம்மா*
*கோயிலுக்குப் போகையிலே*
*கோயிலிலே உள்ள குருக்களே பண்டாரம் - நீங்க பெத்த*
*குயிலாலே எங்கையம்மன்*
*குயிலத்தான் தேடுவனோ - அம்மா நான்*
*கோயில் குரு பூசை செய்வேனா"*

என்றும் பாடுகின்றார்கள் (மேலது, பக். *189*).

கோடாங்கிப் பாடலிலே பேயோடு உரையாடும் போது,

*"அடிக்க வேணாம் உதைக்க வேணாம்*
*உண்மையாய் திறந்து சொல்வேன்*
*அந்த முறுக்கு பக்கோடா என்ன*
*பின் தொடர்ந்து வந்தான்"*

என்று பாடுவதையும் காணலாம். இத்தகைய நாட்டுப்புறப் பாடல்கள் மலையக மக்களின் பண்பாட்டுத் தேசியத்தின் தனித்துவமான அடையாளமாகக் காணப்படுகின்றன எனலாம்.

### எழுத்து முயற்சிகள்

இலங்கை மலையகத் தமிழர்களின் வரலாறு மற்றும் பண்பாடு தொடர்பான எழுத்து முயற்சிகள், கோப்பிக்கால ஆவணங்கள், வெளியீடுகளில் இருந்து தொடங்குகின்றன. இந்த முயற்சிகள், காலப்போக்கில் பல ஆக்க இலக்கிய வெளியீடுகளாகவும் பத்திரிகைகளாகவும் வளர்ந்துள்ளன. பத்திரிகைகள் மலையகத் தமிழரின் தேசிய அடையாளத்தை வலியுறுத்தி, அவர்களின் அன்றாட வாழ்க்கை, இலக்கிய முயற்சிகள், அரசியல், சமூகச் செயற்பாடுகள் ஆகியவற்றுக்குக் களமமைத்தன. இந்தப் படைப்புகள், மலையகச் சமூகத்தின் அவலங்கள், துயரங்கள், இன்ப - துன்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வியல் கூறுகளை எடுத்துக்காட்டுவதாக அமைந்தன. இன்றைய சூழலில், இளம் படைப்பாளிகள் பலரும் மலையக வாழ்வியலைப் பல்வேறு எழுத்து வடிவங்களில் துணிச்சலுடன் பதிவு செய்து வருகின்றனர்.

### பாரம்பரியக் கலை மற்றும் நாடக முயற்சிகள்

கூத்து வாத்தியார்கள், பஜனை மாஸ்டர்கள், பூசாரிகள், உடுக்கடிப்பாளர்கள், கரகாட்டக்காரர்கள் போன்ற நூற்றுக்கணக்கான கலைஞர்கள் இன்றும் மலையகத் தமிழரின் பண்பாட்டு அடையாளக் கூறுகளாக உள்ளனர். முதுபெரும் கலை ஆளுமைகள் கூத்துகளையும், நாட்டுப்புறப் பாடல்களையும், சமூக நாடகங்களையும் பயிற்றுவித்து, அரங்கேற்றி, வானொலிகளிலும் ஒளிபரப்புச் செய்ததன் மூலம் மலையகத்தின் தேசிய பண்பாட்டுச் சின்னமாகத் திகழ்ந்தனர். மலையக நாடக முயற்சிகளும் பல பிரதேசங்களில் சிறப்பான இடத்தைப் பெற்றதோடு, சமூகத்தின் முரண்பாடுகள் மற்றும் கலாசாரச் செயற்பாடுகளை வெளிப்படுத்தின. இந்த நாடக முயற்சிகள் தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. இளம் மாணவர்கள் பலர் நாட்டின் பல்கலைக்கழகங்களிலும் கலைக் கல்லூரிகளிலும் இசை, நடனம், நாடகம், சித்திரம் போன்றவற்றைப் பயின்று சிறப்பான ஆளுமைகளாக வெளிவருகின்றனர். மலையகத் தமிழரின் பண்பாட்டுத் தேசியம் என்பது அவர்களின் பாரம்பரியக் கலை மற்றும் நாடகச் செயற்பாடுகளில் ஆழமாக வேர் விட்டிருப்பதை இது காட்டுகிறது.

### விழாக்கள்

மலையகத் தமிழர்களின் பிரதான விழாக்களாக தைப்பூசம், தை பிறப்பு, தைப் பொங்கல் விழா, மாரியம்மன் திருவிழா, ஆடி பதினெட்டு, பங்குனி உத்தரம், தீபாவளி என்பன காணப்படுகின்றன.

### தேர்த் திருவிழாக்கள்

மலையகத் தமிழர்கள் வருடந்தோறும் தாம் வாழும் தோட்டங்களிலும் நகரங்களிலும் பிரம்மாண்டமான தேர்த் திருவிழாக்களை நிகழ்த்துகின்றனர். இத்திருவிழாக்களில், மாரியம்மன் திருவிழா, காளியம்மன் திருவிழா, பங்குனி உத்தரம், மாசி மகம், தைப்பொங்கல் தேர், மருதை வீரன் திருவிழா, வைரவர் திருவிழா, மாடசாமி கோயில் திருவிழாக்கள் என்பன சிறப்பானவையாகும். இவை பல்லாயிரக்கணக்கான தோட்டப் பகுதிகளிலும், நூற்றுக்கணக்கான நகர்ப்புறப் பகுதிகளிலும் சிறப்பாக நிகழ்த்தப்படுகின்றன.

### குறிப்பெடுத்தல்

மலையகத் தோட்டப் பகுதிகளில் நிகழ்த்தப்படும் மாரியம்மன் திருவிழாக்களில், கரகம் தூக்குபவர்கள், ஊர்ப் பெரியவர்களால் மறைத்து வைக்கப்படும் ஒரு பொருளையோ, கருத்தையோ, எண்ணக்கருவையோ சாமியாடிக் கூறல் அல்லது எடுத்தல் வேண்டும்; குறிப்பாக அம்மனின் தாலி, வேல், தேசிக்காய், கருகமணி, உடுக்கு, நட்சத்திரங்கள், கோள்கள், குலதெய்வங்கள் என்பவற்றின் பெயர்கள் எழுதிவைக்கப்படுகின்றன அல்லது கூட்டாகக் குறிக்கப்படுகின்றன. இது இலங்கையின் மலையகத் தமிழரிடையே நிலவி வரும் மிக முக்கியமானதொரு பண்பாட்டு அடையாளக் கூறு ஆகும்.

### கரகம் பாலித்தல்

இலங்கை மலையகத் தோட்டங்களில் மாரியம்மன் வழிபாடு ஒரு பெருந்தெய்வ வழிபாடாகக் காணப்படுகிறது. இம்மாரியம்மன் திருவிழா மூன்று நாள், ஐந்து நாள், ஏழு நாள், ஒன்பது நாள், பதினொரு நாள் என்ற அடிப்படையில் நிகழ்த்தப்படுகிறது. அதற்காக ஒரு வெள்ளிக்கிழமை நள்ளிரவில், ஆற்றங்கரையில் உள்ள கெங்கையம்மன் ஆலயமொன்றில், செம்பு, தேங்காய், மாலை, பூக்கள், பட்டுச் சால்வைகள், சந்தனம், குங்குமம் என்பனவற்றைச் சேர்த்து கட்டப்படுகின்ற கரகம், மேடையில் வைக்கப்பட்டு பூஜை வழிபாடுகள் நடத்தப்பட்டு, குறிப்பெடுப்போர் (சாமியாடிகள்) தலையில் வைக்கப்படுகிறது. இச்சடங்கு மலையகத் தமிழரிடையே சிறப்பானதொரு பண்பாட்டுச் சடங்காகும்.

### விரதங்கள்

தைப்பூசம், பங்குனி உத்தரம், மாசி மகம், சதுர்த்தி, சித்திராப் பௌர்ணமி, ஆடிப் பூரம், அமாவாசை

விரதம், பௌர்ணமி விரதம், ஆடி வெள்ளி, ஆடிச் செவ்வாய், கந்தசஷ்டி, பிரதோசம் உள்ளிட்ட தினங்களை விரதங்களாக அனுஷ்டிக்கும் வழக்கம் மலையகத் தமிழ் மக்களிடையே காணப்படுகின்றது.

### மலையகத் தமிழர்களின் பண்பாட்டுத் தேசியமும் பண்பாட்டு அரசியல் தன்னாட்சியும்

மலையகத் தமிழர்கள், தமது தேசத்தின் மக்களான தோட்டத் தொழிலாளர்கள், உதிரிப் பாட்டாளிகள், மத்தியத் தர வர்க்கத்தினர், மேல் மத்தியத் தர வர்க்கத்தினர், ஆண்கள், பெண்கள், மாணவர்கள், கலை - பண்பாட்டு ஆளுமைகள், இசைக் கலைஞர்கள், பாட்டுக்காரர்கள், வாத்தியக்காரர்கள், வண்ணான், வண்ணாத்தி, கோவில் பூசாரிகள், மேள வாத்தியக்காரர்கள், தப்பிசைக் கலைஞர்கள் ஆகியோரால் வடிவமைக்கப்பட்ட தமிழ்மொழி சார்புடைய சிந்தனை, வரலாறு, பண்பாடு, மொழிவழித் தேசிய அடையாளம், பெருந்தோட்ட உற்பத்திச் சக்திகள், உறவுகள், பொருண்மிய ஓர்மைத் தன்மை, கூட்டு உளவியல், சமூக இயங்கியல் ஆகியவற்றின் அடிப்படையிலும்; மதம், சமூகச் சடங்குகள், கலை - இலக்கியக் கோலங்கள், கடவுள்கள், நம்பிக்கைகள், தொன்மங்கள் மற்றும் மரபுரிமைகளின் அடிப்படையிலும் ஒரு பண்பாட்டுத் தேசியத்தின் மக்களாவார்கள். இப்பண்பாட்டு தேசியக் கூறுகளே, ஓர் அந்நிய நாட்டில் தனித்துவமான அரசியல் சமூகமாக, பண்பாட்டுக் குழுமமாக, கூட்டு வாழ்க்கைப் பெறுமானமுடைய மக்களினமாக இவர்களை அடையாளப்படுத்தியுள்ளது; எனவே, மலையகத் தமிழர்கள ஒரு பண்பாட்டுத் தேசத்தின் மக்களாக வரையறுத்து அங்கீகரிக்க வேண்டும்.

### உசாத்துணை மூலங்கள்


1. வி.ஐ. லெனின் தொகுப்பு நூல்கள் - 7, 11
2. எஸ்.வி. இராஜதுரை, வ. கீதா, 1991, அந்தோனியா கிராம்சி: வாழ்வும் சிந்தனையும்
3. கூ.கி.வா தியாங்கோ, 2000, சிலுவையில் தொங்கும் சாத்தான்
4. அமில்கார் கப்ரால், 2001, வேர்களை நோக்கி
5. என். சண்முகலிங்கன், 2000, சமூக மாற்றத்தில் பண்பாடு
6. கூ.கி.வா தியாங்கோ, 2004, அடையாள மீட்பு
7. யமுனா இராஜேந்திரன், 2000, மலைகளை தவிரவும் எமக்கு நண்பர்கள் இல்லை
8. கா. அப்பாத்துரை, 2001, தென்னாட்டுப் போர்க்களங்கள்
9. ஆ.இரா. வெங்கடாசலபதி, 1990, அந்த காலத்தில் காப்பி இல்லை
10. சிந்துவெளி ஆய்வறிக்கை
11. சிவகளை ஆய்வறிக்கை, தமிழ் நாடு தொல்லியல் துறை
12. ஆதிச்சநல்லூர் ஆய்வறிக்கை, தமிழ் நாடு தொல்லியல் துறை
13. S. இராமகிருஸ்ணன் தொல்லியல் ஆய்வுகள்
14. R. பாலகிருஸ்ணன், நேர்காணல், தமிழ்நாடு தொல்லியல் துறை
15. பக்தவத்சலபாரதி, 2014, பண்பாட்டு மானிடவியல்
16. பக்தவத்சலபாரதி, 2015, தமிழர் மானிடவியல்
17. பக்தவத்சலபாரதி, 2017, மானிடவியல் கோட்பாடுகள்
18. கி. நவநாயகமூர்த்தி, 1996, பண்டைத் தமிழ்ப் பண்பாட்டுக் கோலங்கள்
19. கார்த்திகேசு சிவத்தம்பி, 1993, இலங்கை மலையகத் தமிழர் பண்பாடும் கருத்து நிலையும்
20. கார்த்திகேசு சிவத்தம்பி, 2004, பண்டைத் தமிழர் சமூகத்தில் நாடகம்
21. எஸ். ஏ. டாங்கே, 2017, பண்டைக்கால இந்தியா
22. Christine Wilson, 2010, Bitter Berry
23. R. சடகோபன், 2010, கசந்த கோப்பி
24. ராஜ் கௌதமன், 2018, பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும்
25. சிலம்பு செல்வராசு, 2009, பண்டைத் தமிழர் திருமண வாழ்க்கை
26. சோ. பழனி, 2019, தமிழர் நாடக ஆற்றுகை கூறுகளின் வரலாறு (பக். 212-223)
27. தொ. பரமசிவன், 2023, அறியப்படாத தமிழகம்
28. தொ. பரமசிவன், 2020, தெய்வங்களும் சமூக மரபுகளும்
29. பா. ராகவன், 2014, உணவின் வரலாறு
30. முகில், 2024, உணவு சரித்திரம்
31. டாக்டர் ஜி. ஜான், சாமுவேல், 2008, திராவிட மொழிகளின் ஒப்பாய்வு
32. அ.அ. மணவாளன், 2005. இராமகாதையும் இராமாயணங்களும்
33. இரா. வெங்கடேசன், 2018, சொல், பண்பாட்டு அடையாளம்
34. கே.ஏ. குணசேகரன், 2002, நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும்
35. ஆர். ருக்மணி, 1998, தமிழ் நாட்டில் பஞ்சாயத்து அமைப்புகள்
36. A.L. பசாம், 2005, வியத்தகு இந்தியா

37. எஸ்.வி. இராஜதுரை, 2000, அயர்லாந்தின் போராட்டம்: தேசியமும் சோசலிசமும்
38. இ.எம்.எஸ்., 2009, இந்திய வரலாறு
39. சிராக், 1984, எங்கெங்கும் எழில்
40. திருநாவுக்கரசு, 1995, குருகுலமகள்
41. திருநாவுக்கரசு, 1996, கபிலவஸ்து
42. சு. முரளிதரன், 2002, வரவும் வாழ்வும் மலையக நாட்டாரியல் சிந்தனைகள்
43. சு. முரளிதரன், 2001, மலையக இலக்கியத் தளங்கள்
44. மு. சிவலிங்கம், 1992, மலையக தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள்
45. வ. வாமதேவன், 2014, மலையகச் சமூகம்... அபிவிருத்தியை நோக்கி
46. வ. வாமதேவன், 2023, மலையகத் தோட்ட தொழிலாளர் நிலவுரிமை
47. K. M. D. Silva, 1981, A History of Sri Lanka (pp. 239-260)
48. S. Nadesan, A History of Malaiyaga Tamil People in Sri Lanka
49. C. V. வேலுப்பிள்ளை, 2023, மாமன் மகளே - மலைநாட்டு மக்கள் பாடல்கள்
50. A. T. லோரன்ஸ், 2006, மலையக சமகால அரசியல் தீர்வு
51. மாத்தளை ரோகிணி, மலையகத் தியாகிகள்
52. V. T. தர்மலிங்கம், 2013, மலையகம் எழுகிறது
53. அந்தனி ஜீவா, 2002, கண்டி மாவட்ட தமிழர்களின் வரலாற்று பதிவுகள்
54. சாரல் நாடன், 1988, தேசபக்தன் கோ. நடேசய்யர்
55. பொ. முத்துலிங்கம், 1996, எழுதாத வரலாறு
56. சாரல் நாடன், 1988, பத்திரிகையாளர் நடேசய்யர்
57. வரதன் கிருஸ்ணா, 2021, வெந்து தணியாத பூமி
58. க. சண்முகலிங்கம், 2011, இலங்கையின் இனவரையியலும் மானிடவியலும்
59. M. I. சந்தனம், பெரிய கங்காணிமார் வரலாறு
60. M. Sivalingam, 1992, Sweat (Novel)
61. A. P. Kanapathipillai, 2023, Glimpse of Tea Buds (pg. 287)
62. கோ. நடேசய்யர், இலங்கை தோட்ட இந்திய தொழிலாளர் அந்தரப் பிழைப்பு
63. என். சரவணன், 2019, கள்ளத்தோணி
64. பொன். பிரபாகரன், 2015, காமன் கூத்து
65. விடிவு, 1995
66. மலையகத் தமிழர் பண்பாடும் கூத்து மரபுகளும், 2009 - பொன். பிரபாகரன்
67. அருச்சுனன் தபசு பாடல்கள், 2009 - பொன். பிரபாகரன்
68. இலங்கை மலையகத் தமிழர் வரலாறு: அறிமுகக் குறிப்புக்கள், 2009 - பொன். பிரபாகரன்
69. புதிய பண்பாட்டு அமைப்பு, 2023, செங்கீற்று - மலையக சமூக நாடக விழா சிறப்பிதழ்
70. செவ்வொளி, 2016 (பக். 12-35)
71. செவ்வொளி, 2018 (பக். 65-72)
72. முழங்கி, 2017 (பக். 95-99)
73. சென். மேரிஸ் மத்திய கல்லூரி, 2019, பறைபுரவிகள் (பக். 37-51)
74. சென். மேரிஸ் மத்திய கல்லூரி நூற்றாண்டு மலர்
75. பொன். பிரபாகரன், 2024, உப்பு ரொட்டி
76. பொன். பிரபாகரன், 2024, மலையகத் தமிழர் அரசியலும் சமூகவியலும்
77. சு. தவச்செல்வன், 2023, ஆடுபாலம்
78. மாலதி பாலேந்திரன், 2006
79. பிரமிளா பிரதீபன், 2010
80. பிரமிளா செல்வராஜ், 2007, பீலிக்கரை
81. வண. யோசுவா, 2023, பூச்சாண்டி
82. பொன். பிரபாகரன், 2023, தங்கவேல் மாஸ்டர் வாழ்வும் பணியும்
83. தியாகராஜா சிவனேசன், எலிப்பொறியில் பூனை (சிறுவர் நாடக பிரதி)
84. மலையகத் தமிழர் மரபுரிமைகள் பாதுகாப்பு அமைப்பு, அட்டன் பிரகடனம், 2018
85. பேரா. கரு.அழ. குணசேகரன், 2009, நாட்டுப்புற நடனங்களும் பாடல்களும்
86. கா. அப்பாத்துரை, 2001, தென்னாட்டுப் போர்க்களங்கள்
87. பேரா. நா. வானமாமலை, 2006, தமிழர் நாட்டுப்பாடல்கள்
88. மா. ரூபவதன், வாழப் பிறந்தோர்க்கு (நாடகப் பிரதி)
89. மு. சிவலிங்கம், 2007, மலையகத் தமிழர் நாட்டுப்புற பாடல்கள் (ஓர் ஆய்வு)
90. வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் (தமிழில், பி. இராமநாதன்), 2009, தமிழரின் தோற்றமும் பரவலும்

# நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் மேம்பாடும் முகாமைத்துவமும்: யாழ்ப்பாணக் குடாநாடு, வன்னிப் பெருநிலப்பரப்பு, கிழக்குப் பிராந்தியம் - பகுதி 2

சுப்ரமணியம் சிவகுமார்

இலங்கையின் வறண்ட மண்டலமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீர்வளங்களை நிலைத்தன்மையுடன் பயன்படுத்துவதற்கான கொள்கைகள் உருவாக்குவது மிகவும் அவசியமாக உள்ளது. இது மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த உதவுகின்றது. மேலும், நிலையான நீர்வள மேலாண்மை சுற்றுச்சூழலுக்கு உதவியாகவும், பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவாகவும் அமையும். இதன் மூலம், வறண்ட மண்டலங்களில் உள்ள நீர்வளங்கள் பாதுகாக்கப்படும். ”வறண்ட மண்டல நீர்வளங்களின் இருப்பும் பேண்தகு பயன்பாடும்: வடக்கு – கிழக்குப் பிரதேசங்கள், இலங்கை எனும் இந்தக் கட்டுரைத் தொடர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து ஆற்றுப்படுகைகளின் நீர்வளங்களின் நிலையை ஆராய்ந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன், அவற்றின் திறம்பட்ட பயன்பாட்டை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதைக்கூறும்.



கலாநிதி. சுப்ரமணியம் சிவகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளங்கலைப் (BSc Eng.) பட்டமும், இந்தியத் தொழில்நுட்பக்கழகம் ரூர்க்கியில் (IIT Roorkee) நீர்வள மேம்பாட்டுத்துறையில் முதுகலைப் (MSc) பட்டமும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (PhD) பட்டமும் பெற்றவர். பின்னர் நோர்வேயின் உயிரியல்  அறிவியல் பல்கலைக்கழகத்திலும் (NMBU, s), வடகிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்திலும் (Bod) பிந்தைய முனைவர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும், நீர்ப்பாசனப் பொறியாளராகவும் 28 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார்.
யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பல்கலைக்கழகங்களில் மூத்த விரிவுரையாளராகச் செயற்பட்டார். விவசாய அமைச்சகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும், வடமாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் பணியாற்றினார்.
பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் விருந்தினர் விரிவுரைகளையும், முக்கிய உரைகளையும் (Keynote Speeches) நிகழ்த்தியுள்ள இவர், குறியீட்டு அறிவியல் இதழ்களில் 45க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு, இதுவரை 7 நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், 18 சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார்.

### 4.5.4 யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு பாதுகாப்பான நீரை வழங்குவதற்கான நீண்டகால நிலையான வழிகள்

யாழ்ப்பாணத்திற்கு பாதுகாப்பான நீரை வழங்குவதற்கான நீண்டகால நிலையான ஒரே தீர்வு, யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வெளியே, ஆனால் வடக்கு மாகாணத்திற்குள் இருக்கும் ஆறுகள், ஏரிகள், அணைகள், நீர்த்தேக்கங்கள், குளங்கள் போன்ற நிலப்பரப்பு நீர் மூலங்களில் இருந்து நீரைக் கொண்டு வருவதே என்பது கீழே உள்ள அட்டவணை 4.1 மூலம் எந்தச் சந்தேகத்திற்கும் இடமின்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தெற்குப் பகுதியில் இருந்து (ஆனால் வட மாகாணத்தின் எல்லைக்குள்), ஆறுகள், அணைகள், நீர்த்தேக்கங்கள், குளங்கள் போன்ற மேற்பரப்பு நீர் மூலங்களிலிருந்து நீரைப் பெறுவதே சந்தேகத்திற்கு இடமின்றி ஒரே தீர்வாக இருக்க முடியும் என்பதை இவை அனைத்தும் நிரூபிக்கின்றன.

இரணைமடு (*Iranamadu*) ஏரியில் இருந்து மூல நீர் (*Raw Water*) பெற வேண்டிய, ஆசிய வளர்ச்சி வங்கி (*ADB*) நிதியுதவியுடன் கூடிய திட்டம் சிரமங்களைச் சந்தித்துள்ளது என்பது நமக்குத் தெரியும். இந்தத் திட்டத்தைக் காப்பாற்றும் முயற்சியாக, இரணைமடுப் பாசன விவசாயிகள், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்கான பாதுகாப்பான நீர் விநியோகம் குறித்த தங்கள் அசல் எழுத்துப்பூர்வ உறுதிமொழியை (*Written Commitment*) மதிக்க மறுத்து, தந்திரமான, சுயநல அரசியல் தலையீட்டின் மூலம் இரணைமடுக் குளத்தில் புனரமைப்புப் பணிகளைச் செய்துள்ளார்கள். தற்போது மிதமிஞ்சிய நீர் வருடா வருடம் கடலுக்குச் செல்கிறது.

#### 4.5.4.1 'யாழ்ப்பாணம் - கிளிநொச்சி' பாதுகாப்பான நீர் வழங்குவதற்கான திட்டத்தின் தற்போதைய நிலை

பரந்தனில் இருந்து யாழ்ப்பாணம் வரை குழாய் வலையமைப்பு (*Pipe Network*) மற்றும் 13 நீர் விநியோகக் கோபுரங்கள் (*Water Distribution Towers*) கட்டமைக்கப்பட்டு வெளிப்படையாகச் சோதிக்கப்பட்டுள்ளன. இரணைமடுவில் இருந்து பரந்தன் வரையிலான குழாய்ப்பணி, அங்கு நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தின் (*Water Treatment Plant*) தளம் என்பன இன்னும் நிறைவடையவில்லை. நீர்ச் சுத்திகரிப்பு நிலையமும் இன்னும் கட்டமைக்கப்படவில்லை.

| River Basin No | River Basin | Utilization % of Warter Rresource | Catchment Area of the River Basin (sq.mls) | Major Medium Irrigation Scheme | Minimun Operation Depth (ft.) | Maximum Acreage Recomended for Maha (ac.) | Maximum Acreage recomended for Yala (ac.) | Cropping Intecity | Maximum Possible Other Demand monthly (ac.ft.) | River Basin No |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 70 | Churiyan Aru | 10.00% | 29.28 | nil | | | | | | 70 |
| 71 | Chavar | 7.16% | 11.96 | nil | | | | | | 71 |
| 72 | Paladi | 26.90% | 23.92 | Neethukai Kulam | Available data not sufficient | | | | | 72 |
| 73 | Mannal Aru (Munadal Aru) | 65.70% | 28.16 | Thannimurippu Scheme | 9.00 | 2,364.00 | 945.60 | 1.40 | 214.00 | 73 |
| 74 | Kodalikallu Aru | 67.40% | 28.94 | Kannukerny Kulam | 5.00 | 1,284.00 | 513.60 | 1.40 | 39.00 | 74 |
| | | | | Madavallasingam Kulam | 5.00 | 398.00 | 159.20 | 1.40 | 399.00 | |
| 75 | Per Aru | 86.00% | 145.83 | Muthuiyankaddu kulam | 10.00 | 6,112.00 | 2,444.80 | 1.40 | 125.00 | 75 |
| 76 | Kalmaduru Aru (Pali Aru) | 12.50% | 32.79 | Maruthamadu Tank | 5.00 | 370.00 | 148.00 | 1.40 | 337.00 | 76 |
| 77 | Maruthapillay Aru | 12.50% | 15.82 | Idaikkaddu Kulam | 3.00 | 167 + 75 | | | | 77 |
| 78 | Theravil Aru | 58.00% | 35.11 | Udayarkattu Kulam | 8.00 | 1,280.00 | 512.00 | 1.40 | 264.00 | 78 |
| 79 | Piramenthal Aru | 57.20% | 32.02 | Pirapanthal aru Kulam | 4.00 | 602.00 | 602.00 | 2.00 | 101.00 | 79 |
| | | | | Visuvamadu Kulam | 5.00 | 808.00 | 323.20 | 1.40 | 138.00 | |
| 80 | Nethali Aru | 63.53% | 32.02 | Kalmadu tank | 5.00 | 3,450.00 | 690.00 | 1.20 | nil | 80 |
| 81 | Kanakarayan Aru | 95.15% | 349.54 | Iranamadu | 8.50 | 21,985.00 | 8,794.00 | 1.40 | 550.00 | 81 |
| | | | | Kanagarayan kulam | 5.00 | 314.00 | 125.60 | 1.40 | 6.00 | |
| | | | | Chemamadu | 4.00 | 600.00 | 240.00 | 1.40 | 181.00 | |
| | | | | Malikai Tank | 5.00 | 220.00 | 88.00 | 1.40 | 64.00 | |
| | | | | Kanagambikai Kulam | 4.00 | 260.00 | 104.00 | 1.40 | 125.00 | |
| 82 | Kalawalappu Aru | 39.70% | 21.99 | Puthumurippu Tank | 4.50 | 985.00 | 374.30 | 1.38 | Nil | 82 |
| 83 | Akkarayan Aru | 91.04% | 74.85 | Akkarayan kulam | 10.00 | 3,175.00 | 1,270.00 | 1.40 | 139.00 | 83 |
| | | | | Kudamuriddy Tank | 2.00 | 650.00 | 260.00 | 1.40 | 304.00 | |
| | | | | Maruthan Kulam | 6.00 | 450.00 | 180.00 | 1.40 | 72.00 | |
| 84 | Mandekal Aru | 35.82% | 115.74 | Vanneri Kulam | 3.00 | 343.00 | 137.00 | 1.40 | 3.00 | 84 |
| | | | | Anaivilunthan Kulam | Available data not sufficient | | | | | |
| | | | | Ambalaperumal Kulam | 4.50 | 623.00 | 249.20 | 1.40 | 222.00 | |
| | | | | Koddai kaddiya Kulam | 4.00 | 405.00 | 162.00 | 1.40 | 57.00 | |
| | | | | Iyankan Kulam | 3.50 | 952.00 | 380.80 | 1.40 | 115.00 | |
| | | | | Paliya Murukandi Kulam | 4.00 | 356.00 | 142.40 | 1.40 | 53.00 | |
| 85 | Pallavarayan Kadu Aru | 89.85% | 62.11 | Kariyalai Nagapaduvan | 3.00 | 1,505.00 | 135.45 | 1.09 | nil | 85 |
| | | | | Therankandal | 4.00 | 300.00 | 120.00 | 1.40 | 11.00 | |
| | | | | Thenniankulam | 3.00 | 850.00 | 340.00 | 1.40 | 169.00 | |
| 86 | Pali Aru | 90.00% | 176.00 | Vavuni Kulam | 10.00 | 6,897.00 | 2,758.80 | 1.40 | 262.00 | 86 |
| | | | | Kollavilan Kulam | 4.00 | 262.00 | 26.20 | 1.10 | nil | |
| | | | | Kalvillan Kulam | 5.00 | 400.00 | 140.00 | 1.35 | nil | |
| | | | | Mallavi Kulam | 3.00 | 250.00 | 17.50 | 1.07 | nil | |
| 88 | Paranki Aru (Menankaddy) | 39.00% | 324.85 | Panankamam Kulam | 2.00 | 300.00 | 0.00 | 1.00 | nil | 88 |
| | | | | Kalmadu Kulam | 4.00 | 400.00 | 160.00 | 1.40 | 110.00 | |
| | | | | Mamaduwa Tank | 5.50 | 659.00 | 263.60 | 1.40 | 289.00 | |
| | | | | Eropothana Tank | 4.00 | 238.00 | 95.20 | 1.40 | 59.00 | |
| | | | | Kombuvaithakulam | 3.00 | 47.50 | 1.19 | 1.17 | nil | |
| | | | | Nampankulam | 3.00 | 256.00 | 58.88 | 1.23 | nil | |
| | | | | Aliyamaruthamadu (Madukkulam) | 3.00 | 233.00 | 81.55 | 1.35 | nil | |
| | | | | Turampimaddai Aru anicut | Available data not sufficient | | | | | |
| | | | | Kurai tank | | | | | | |
| | | | | Mahakachchikodiya Tank | 3.50 | 257.00 | 102.80 | 1.40 | 91.00 | |
| | Per Aru sub-basin | | | Madukkanda | 4.50 | 400.00 | 160.00 | 1.40 | 10.00 | |
| | | | | Vavuniya | 6.00 | 435.00 | 174.00 | 1.40 | 146.00 | |
| | | | | Maharambikkulam | 5.00 | 215.00 | 86.00 | 1.40 | 64.00 | |
| | | | | Moonayamadu | 2.50 | 215.00 | 86.00 | 1.40 | 38.00 | |
| 89 | Nay Aru | 14.36% | 218.75 | Velan Kulam | 2.50 | 224.00 | 44.80 | 1.20 | nil | 89 |
| | | | | Welimaruthamadu | 3.00 | 750.00 | 300.00 | 1.40 | 163.00 | |
| | | | | Pampimadu | 5.00 | 270.00 | 108.00 | 1.40 | 64.00 | |
| | | | | Periathampanai kulam | | | | | | |
| | | | | Thadchanamaruthamadu | | | | | | |
| | | | | Periya pandivirichan Tank | | | | | | |
| | | | | Mullikulam | | | | | | |
| | | | | Periyamadhu | | | | | | |
| 91 | Kal Aru | | 10.67 | Kallaru Tank | | | | | | 91 |
| | | | | Chittattu Pudavaikaddiyakulam | | | | | | |


| River Basin No | River Basin | Utilization % of Warter Rresource | Catchment Area of the River Basin (sq.mls) | Major Medium Irrigation Scheme | Minimun Operation Depth (ft.) | Maximum Acreage Recomended for Maha (ac.) | Maximum Acreage recomended for Yala (ac.) | Cropping Intecity | Maximum Possible Other Demand monthly (ac.ft.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 70 | Churiyan Aru | 10.00% | 29.28 | nil | | | | | |
| 71 | Chavar | 7.16% | 11.96 | nil | | | | | |
| 72 | Paladi | 26.90% | 23.92 | Neethukai Kulam | Available data not sufficient | | | | |
| 73 | Mannal Aru (Munadal Aru) | 65.70% | 28.16 | Thannimurippu Scheme | 9.00 | 2,364.00 | 945.60 | 1.40 | 214.00 |
| 74 | Kodalikallu Aru | 67.40% | 28.94 | Kannukerny Kulam | 5.00 | 1,284.00 | 513.60 | 1.40 | 39.00 |
| | | | | Madavallasingam Kulam | 5.00 | 398.00 | 159.20 | 1.40 | 399.00 |
| 75 | Per Aru | 86.00% | 145.83 | Muthuiyankaddu kulam | 10.00 | 6,112.00 | 2,444.80 | 1.40 | 125.00 |
| 76 | Kalmaduru Aru (Pali Aru) | 12.50% | 32.79 | Maruthamadu Tank | 5.00 | 370.00 | 148.00 | 1.40 | 337.00 |
| 77 | Maruthapillay Aru | 12.50% | 15.82 | Idaikkaddu Kulam | 3.00 | 167 + 75 | | | |
| 78 | Theravil Aru | 58.00% | 35.11 | Udayarkattu Kulam | 8.00 | 1,280.00 | 512.00 | 1.40 | 264.00 |
| 79 | Piramenthal Aru | 57.20% | 32.02 | Pirapanthal aru Kulam | 4.00 | 602.00 | 602.00 | 2.00 | 101.00 |
| | | | | Visuvamadu Kulam | 5.00 | 808.00 | 323.20 | 1.40 | 138.00 |
| 80 | Nethali Aru | 63.53% | 32.02 | Kalmadu tank | 5.00 | 3,450.00 | 690.00 | 1.20 | nil |
| 81 | Kanakarayan Aru | 95.15% | 349.54 | Iranamadu | 8.50 | 21,985.00 | 8,794.00 | 1.40 | 550.00 |
| | | | | Kanagarayan kulam | 5.00 | 314.00 | 125.60 | 1.40 | 6.00 |
| | | | | Chemamadu | 4.00 | 600.00 | 240.00 | 1.40 | 181.00 |
| | | | | Malikai Tank | 5.00 | 220.00 | 88.00 | 1.40 | 64.00 |
| | | | | Kanagambikai Kulam | 4.00 | 260.00 | 104.00 | 1.40 | 125.00 |
| 82 | Kalawalappu Aru | 39.70% | 21.99 | Puthumurippu Tank | 4.50 | 985.00 | 374.30 | 1.38 | Nil |
| 83 | Akkarayan Aru | 91.04% | 74.85 | Akkarayan kulam | 10.00 | 3,175.00 | 1,270.00 | 1.40 | 139.00 |
| | | | | Kudamuriddy Tank | 2.00 | 650.00 | 260.00 | 1.40 | 304.00 |
| | | | | Maruthan Kulam | 6.00 | 450.00 | 180.00 | 1.40 | 72.00 |
| 84 | Mandekal Aru | 35.82% | 115.74 | Vanneri Kulam | 3.00 | 343.00 | 137.00 | 1.40 | 3.00 |
| | | | | Anaivilunthan Kulam | Available data not sufficient | | | | |
| | | | | Ambalaperumal Kulam | 4.50 | 623.00 | 249.20 | 1.40 | 222.00 |
| | | | | Koddai kaddiya Kulam | 4.00 | 405.00 | 162.00 | 1.40 | 57.00 |
| | | | | Iyankan Kulam | 3.50 | 952.00 | 380.80 | 1.40 | 115.00 |
| | | | | Paliya Murukandi Kulam | 4.00 | 356.00 | 142.40 | 1.40 | 53.00 |
| 85 | Pallavarayan Kadu Aru | 89.85% | 62.11 | Kariyalai Nagapaduvan | 3.00 | 1,505.00 | 135.45 | 1.09 | nil |
| | | | | Therankandal | 4.00 | 300.00 | 120.00 | 1.40 | 11.00 |
| | | | | Thenniankulam | 3.00 | 850.00 | 340.00 | 1.40 | 169.00 |
| 86 | Pali Aru | 90.00% | 176.00 | Vavuni Kulam | 10.00 | 6,897.00 | 2,758.80 | 1.40 | 262.00 |
| | | | | Kollavilan Kulam | 4.00 | 262.00 | 26.20 | 1.10 | nil |
| | | | | Kalvillan Kulam | 5.00 | 400.00 | 140.00 | 1.35 | nil |
| | | | | Mallavi Kulam | 3.00 | 250.00 | 17.50 | 1.07 | nil |
| 88 | Paranki Aru (Menankaddy) | 39.00% | 324.85 | Panankamam Kulam | 2.00 | 300.00 | 0.00 | 1.00 | nil |
| | | | | Kalmadu Kulam | 4.00 | 400.00 | 160.00 | 1.40 | 110.00 |
| | | | | Mamaduwa Tank | 5.50 | 659.00 | 263.60 | 1.40 | 289.00 |
| | | | | Eropothana Tank | 4.00 | 238.00 | 95.20 | 1.40 | 59.00 |
| | | | | Kombuvaithakulam | 3.00 | 47.50 | 1.19 | 1.17 | nil |
| | | | | Nampankulam | 3.00 | 256.00 | 58.88 | 1.23 | nil |
| | | | | Aliyamaruthamadu (Madukkulam) | 3.00 | 233.00 | 81.55 | 1.35 | nil |
| | | | | Turampimaddai Aru anicut | Available data not sufficient | | | | |
| | | | | Kurai tank | | | | | |
| | | | | Mahakachchikodiya Tank | 3.50 | 257.00 | 102.80 | 1.40 | 91.00 |
| | Per Aru sub-basin | | | Madukkanda | 4.50 | 400.00 | 160.00 | 1.40 | 10.00 |
| | | | | Vavuniya | 6.00 | 435.00 | 174.00 | 1.40 | 146.00 |
| | | | | Maharambikkulam | 5.00 | 215.00 | 86.00 | 1.40 | 64.00 |
| | | | | Moonayamadu | 2.50 | 215.00 | 86.00 | 1.40 | 38.00 |
| 89 | Nay Aru | 14.36% | 218.75 | Velan Kulam | 2.50 | 224.00 | 44.80 | 1.20 | nil |
| | | | | Welimaruthamadu | 3.00 | 750.00 | 300.00 | 1.40 | 163.00 |
| | | | | Pampimadu | 5.00 | 270.00 | 108.00 | 1.40 | 64.00 |
| | | | | Periathampanai kulam | | | | | |
| | | | | Thadchanamaruthamadu | | | | | |
| | | | | Periya pandivirichan Tank | | | | | |
| | | | | Mullikulam | | | | | |
| | | | | Periyamadhu | | | | | |
| 91 | Kal Aru | | 10.67 | Kallaru Tank | | | | | |
| | | | | Chittattu Pudavaikaddiyakulam | | | | | |


*Source: "Northern River Basins Yield Study for Operational Policy of Irrigation Schemes & Water Resources and Agriculture Development Strategy for North – 2020 – 2035, ISBN 9789550585397, 2020.*

ஆனால் தற்போது தற்காலிகமாக தாளையடியில் அமைந்துள்ள கடல்நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து, மிகவும் கூடிய செலவில் குடாநாட்டிற்கான நீர் விநியோக நடவடிக்கைகள் சிறிது சிறிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இரணைமடுவில் இருந்தும், புதிதாக அமைக்கப்பட உள்ள பாலி ஆற்று நீர்த்தேக்கத்திலிருந்தும் நீர் விநியோகம் செய்வதற்கான ஒழுங்குகள் மிகவும் ஆரம்ப கட்டத்தில் உள்ளன.

மேலே கூறப்பட்ட அனைத்திலிருந்தும், யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு பாதுகாப்பான நீர் வழங்குவதற்கான நீண்டகால நிலையான வழிகள் (Policy Option) பின்வருமாறு அமையும் என்பதை நாம் அறிய முடியும்:

வடக்கு மாகாணத்தின் எல்லைக்குள் உள்ள எந்த இடத்தில் இருந்தும் நிலப்பரப்பு நீர், பரந்தன் நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு (WTP) குழாய் மூலம் கொண்டு செல்லப்பட வேண்டும். அங்கு அது சுத்திகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட மொத்த நீர் (Treated Bulk Water) ஏற்கனவே கட்டப்பட்ட குழாய் வலையமைப்பு வழியாக 13 நீர்க் கோபுரங்களுக்கும் வழங்கப்படும்.

நிலப்பரப்பு நீர் மூலங்களில் இருந்து வரும் மூல நீரை (Raw Water) சுத்திகரிக்க, பரந்தன் நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட வேண்டும். ஏனெனில் ஆரம்பத் திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) நிதி ஒதுக்கீடுகளில், பரந்தன் நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தையும் உள்ளடக்கியது. தீர்வு காண வேண்டிய ஒரே விடயம், நிலப்பரப்பு நீர் வளத்திற்கான சிறந்த மூலத்தை (Optimum Source) கண்டறிவதாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர் வளத்திற்கான கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டால், மூல நீரின் சிறந்த இடத்தைக் கண்டறிவதும், தேவையான நீரை பரந்தன் நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வழங்குவதற்கான எளிய குழாய்ப்பணியை வடிவமைப்பதும், பொதுப்பணி மற்றும் நீரியல் பொறியியல் (Civil and Hydraulic Engineer ing) சார்ந்த சாதாரண விடயங்களாகும். இந்தக் கொள்கைக் கட்டமைப்பை (Policy Framework) ஏற்பது எவ்வளவு முக்கியம் என்பதை வலியுறுத்தி அது நிர்ணயிக்கப்பட்டால் மற்ற அனைத்து விடயங்களும் அதைத் தொடர்ந்து விரைவாக நடக்கும்.

பெரும்பாலான மேற்பரப்பு நீர் வளங்களைப் போலவே, நிலத்தடி நீர் வளங்களின் பயன்பாட்டிற்கும் கவனமான மதிப்பீடும், நீரை எடுப்பதற்கான (Abstraction) கடுமையான கட்டுப்பாடுகளும் தேவைப்படுகின்றன. தீவிர நகர்ப்புற, தொழிற்றுறை, சுற்றுலா மற்றும் பிற வளர்ச்சிகள் இந்த வளத்தின் அதிகப்படியான எடுத்தல் மற்றும் பயன்பாட்டிற்குப் பங்களித்துள்ளன. இப்போது வரை, குழாய்க் கிணறுகள் தோண்டுவதைக் கட்டுப்படுத்துவதற்கும், நிலத்தடி நீரின் தரம் குறைவதில் அவற்றின் தாக்கத்தை கண்காணித்து மதிப்பீடு செய்வதற்கும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை (நீர்வள வாரியச் சட்டம், இல. 29/1964 இன் பிரிவு 12 (1) இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் குறித்து, பாசனம் மற்றும் நீர்வள மேலாண்மை அமைச்சர் பிரிவு 16 (1) மற்றும் 16 (2) கீழ் வழங்கிய உத்தரவுகள், வர்த்தமானி அறிவிப்பு இல. 2010/23 - வியாழக்கிழமை, மார்ச் 16, 2017 மூலம், சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை).

கட்டுப்பாடற்ற முறையில் 'வேளாண் கிணறுகள்' (Agrowells) தோண்டுவது, சில பகுதிகளில் அதிகப்படியான நீர் எடுப்பதற்கும் (Abstraction) மேல்நிலை நீரின் அதிகபட்ச பயன்பாட்டிற்கும் வழிவகுத்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் விடயத்தில், இது பரவலான பகுதிகளில் நிலத்தடி நீரின் உப்புத்தன்மை மிகப்பெரிய அளவில் அதிகரிப்பதற்கு நேரடியாக வழிவகுத்துள்ளது.

முன்மொழியப்பட்ட பிராந்திய நீர் வழங்கல் முகமைக்கு (Regional Water Supply Agency - RWSA) குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு எதிரான கடுமையான கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கும், அங்கீகரிக்கப்பட்ட விவசாயிகள் மட்டுமே நிலையான அளவு நீரை எடுப்பதற்கான அனுமதிகளை வழங்குவதற்கும் அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

சிறப்பாக ஆய்வு செய்யப்பட்ட, யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுண்ணாம்புக்கல் நீர்நிலக் குடுவையில் (Limestone Aquifer) சேமிக்கப்பட்டுள்ள நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் உத்தியியல் கோட்பாடு இல்லாமல், கீழ்க்காணும் ஐந்து திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன:



1. யாழ்ப்பாணம் லகூன் திட்டம்

2. வழுக்கை ஆறு வடிகால் திட்டம் மற்றும் அராலி அணை

3. உப்பாறு லகூன் திட்டம், வெள்ளப் பாதுகாப்பு அணைகள் மற்றும் அராலி அணை

4. வடமராட்சி லகூன் திட்டம், வெள்ளப் பாதுகாப்பு அணைகள் மற்றும் தொண்டமானாறு அணை

5. உப்புநீர் தடுப்பு அணைத் திட்டங்கள்

உண்மை என்னவென்றால், யாழ்ப்பாணக் குடாநாட்டின் காரஸ்டிக் நீர்நிலைக் குடுவைகளில் (Karstic Aquifers) உள்ள நிலத்தடி நீரைப் பாதுகாத்தல் அல்லது மீள் நிரப்புதல் (Recharge) செய்வது இயற்பியல் ரீதியாக முடியாத ஒன்றாகும். ஏனெனில் இது ஒரு காரஸ்டிக் நீர்நிலைக் குடுவை (கரிம நீராதார அடுக்கு) ஆகும். மேலும் நிலத்தடி நீரின் மட்டம் கடல் மட்டத்தை விட (Mean Sea Level) உயர்ந்திருப்பதால், மேலோட்ட நீரானது கடலுக்கே கசிந்து போகும். ஆயினும், மேற்குறிப்பிட்ட ஐந்து திட்டங்களாலும், சுமார் 20,000 ஹெக்டேர் (ஏக்கர்) விவசாய நிலத்தை மட்டுமே மீட்டெடுக்க முடியும். இந்த மீட்டெடுப்பு (மறுசீரமைப்பு) வெற்றி பெற்றால், யாழ்ப்பாணக் குடாநாட்டின் நில உற்பத்தித்திறன் (Land Productivity) கணிசமாக அதிகரிக்கும். இதன் மூலம் கீழ்வரும் விசேட விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்க முடியும்.

1. உப்புத் தாங்கும் தாவரங்கள் மற்றும் உவர்நிலத் தாவரங்களைப் (Halophytes) பயிரிடுதல்.

2. நிலைத்தன்மை வாய்ந்த உவர்நில உற்பத்தி முறைகளை (Bio Saline Production Systems) வளர்த்தல்.

3. வித்து வங்கியை (Germplasm) வளர்த்தல்.

நில உற்பத்தித் திறனை (Land Productivity) மேம்படுத்தும் மேற்படி திட்டங்களானவை, யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குப் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்காக அல்லாமல், மறைந்த மாபெரும் பொறியாளர் திரு. எஸ். ஆறுமுகம் (S. Arumugam) அவர்களின் கனவுப்படி, நில உற்பத்தித் திறனை (Land Productivity) அதிகரிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்தன. அவரது நோக்கம் சரியாகப் புரிந்துகொள்ளப்படாமல், குடாநாட்டுக்கான பாதுகாப்பான குடிநீர் விநியோகத் திட்டத்துடன், இந்த நில உற்பத்தித் திறனை (Land Productivity) மேம்படுத்தும் திட்டங்களை இணைக்கும் சில முன்மொழிவுகள், மிகவும் பாரதூரமான புரிதல் குறைபாட்டைக் கொண்டனவாக அமைந்தன.

### 4.5.4.2 யாழ்ப்பாணக் குடாநாட்டின் கராஸ்டிக் நிலத்தடி நீர் நிலைப்பாட்டின் நீர்ச் சமநிலை

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிலத்தடி நீர் மாதிரியமைப்பின் கூற்றுப்படி, யாழ்ப்பாணக் குடாநாட்டில் பருவமழைக் காலங்களில் பெய்யும் மழைநீர், கடற்கழிகள், ஏரிகள் மற்றும் குளங்களை நிரப்புகிறது. மீதமுள்ள நீர், நிலப்பரப்பு ஓட்டம், நிலத்தடி நீர்நிலையின் விரிசல்கள், குகைகள் மற்றும் கரைசல் கால்வாய்கள் வழியாகக் கடலுக்குச் செல்வதோடு, நீராவியாதல் மூலமும் இழப்பு ஏற்படுகிறது.

ஆனால், வறண்ட காலங்களில், குடாநாடு முழுவதும் உள்ள பல்வேறு பாரம்பரியக் கிணறுகள், கடற்கழிகள், ஏரிகள் மற்றும் குளங்களில் சேகரிக்கப்பட்டுள்ள நீர், கடல் நீருக்கும் நன்னீர் மேடைக்கும் (Groundwater Mound) இடையே உள்ள மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த நீர்ச் சமநிலையைப் பராமரிக்க உதவுகிறது.

இந்த ஏரிகள், குளங்கள் மற்றும் அகழிகள் (பொதுவாக ஆழம் குறைந்தவை) பருவமழைக்குப் பிந்தைய மாதங்களில் வேளாண்மைப் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக அதிக அளவில் பயன்படுத்தப்படுவதாலும், அதிக அளவு நீராவியாதல் இழப்பு (மாதத்திற்கு சுமார் 120 - 150 மி.மீ) ஏற்படுவதாலும் விரைவாக வற்றிவிடுகின்றன. ஆசிய அபிவிருத்தி வங்கி அறிக்கையின்படி, பருவமழைக்குப் பிந்தைய மாதங்களில் கடற்கழிகள், குளங்கள் மற்றும் ஏரிகளில் இருந்து கணிசமான அளவு நீர் ஆவியாகி விடுகிறது. இதன் விளைவாக, (விவசாயிகள் பயன்படுத்தும் எண்ணற்ற கிணறுகளில் இருந்து நீர் எடுக்கப்படுவதோடு) நிலத்தடி நீர்நிலையின் நன்னீர் மட்டம் விரைவாகக் குறைகிறது.

மேலும், ஒரு சுவாரஷ்யமான கருத்து என்னவென்றால், மழைக்காலம் முடிந்த உடனேயே நிலத்தடி நீர் மட்டம் கடுமையாக வீழ்ச்சியடைகிறது. இதற்குக் காரணம், கடல் நோக்கிய நிலத்தடி நீரின் வெளியேற்றம் அதிகரிப்பதே ஆகும். எப்போதுமே பெப்ரவரி - மார்ச் மாதங்களில் நிலத்தடி நீர் மட்டம் அதிகபட்சமாக இருக்கும். இருப்பினும், இந்த ஓட்டத்தின் அளவு, நீரியல் சரிவு (Hydraulic Gradient) மற்றும் நிலத்தடி நீர்நிலை அடுக்குகளின் ஓட்டக் கால்வாய்களின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்து இடத்துக்கு இடம் மாறுபடும்.

ஆயுத மௌனிப்புக்குப் பிந்தைய பொருளாதார மறுவளர்ச்சி இந்த நீர்ப் பிரச்சினைகளால் கடுமையாக வரையறுக்கப்பட்டுள்ளது. இப்பகுதி மக்களுக்கு விவசாயத்திலிருந்து விலகி, பிற பொருளாதார வாய்ப்புகளைத் தேடுவதற்கு எந்த மாற்று வழிகளும் வழங்கப்படவில்லை. விவசாயம் அல்லாத தொழில்களை நோக்கிய எந்தவொரு நகர்வும், நகர்ப்புற மையங்களில் போதுமான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் கிடைப்பதன் மூலமே வரையறுக்கப்படுகிறது.

#### 4.5.4.3 புதிய கோட்பாடுகள்/ கொள்கைகளின் அறிமுகம்

யாழ்ப்பாணத்தின் நீர் நெருக்கடி குறித்து விரிவான விவாதங்கள் தேவை. இந்த நீர்ப் பிரச்சினையை ஒரு சமூக, அரசியல் மற்றும் பண்பாட்டுப் பிரச்சினை என்ற கோணத்தில் பார்க்கலாம். எனவே, நீர்ப் பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்த விவாதங்கள் அனைத்துத் தரப்பு சமூகத் தலைவர்களையும் சம பிரதிநிதித்துவத்துடன் உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்பட வேண்டும். பிரச்சினைகளை துண்டுதுண்டாகத் தீர்ப்பதன் திட்டமிடாத விளைவுகளே இவை; இதைச் சுற்றுச்சூழல் அறிவியலாளர்கள் 'சிறிய முடிவுகளின் கொடுங்கோண்மை' (Tyranny of Small Decisions) எனக் குறிப்பிடுகின்றனர்.

இலங்கையோடு, குறிப்பாக யாழ்ப்பாணத்தோடு ஒப்பிடுகையில், உலகின் பல பகுதிகள் கடுமையான நீர் நெருக்கடியை எதிர்கொள்கின்றன. வரலாற்று ரீதியாக, நீர்ப் பிரச்சினைகள் பெரும்பாலும் பொறியாளர்கள் மற்றும் பிற நிபுணர்களால் தீர்க்கப்படுகின்றன. இது குறுகிய காலத்தில் நன்றாக வேலை செய்யும். ஆனால், நன்மை தரக்கூடிய மற்றும் நன்கு வடிவமைக்கப்பட்ட தீர்வுகளின் கருத்தாக்கம் மற்றும் நிறைவேற்றத்தில், நீர்ப் பயன்பாட்டின் இறுதிப் பயனாளிகளான மக்களின் பங்களிப்பு இல்லாதது, பெரும்பாலும் திட்டமிடாத, பாதகமான விளைவுகளுக்கு வழிவகுக்கிறது.

குடிநீர், விவசாயம் மற்றும் கழிவு நீர் அகற்றுதல் ஆகிய அனைத்திற்கும் ஒரே நிலத்தடி நீர் மூலமே பயன்படுத்தப்படுவதால், இது ஒரு நெருக்கடியாக மாறியுள்ளது. சமீப காலங்களில் விவசாயத்தின் தீவிரமயமாக்கல், பெற்றோலியக் கழிவுகள் மற்றும் நகரமயமாக்கல் போன்றவை நிலத்தடி நீரை மாசுபடுத்தியுள்ளன. இது மக்களை அவர்களின் ஆரோக்கியப் பிரச்சினைகள் குறித்துக் கவலைப்பட வைக்கிறது. யாழ்ப்பாணம் விவசாயத்தைக் கைவிட்டு, அனைத்து உணவுத் தேவைகளையும் பெரு நிலப்பகுதியிலிருந்து (Main Land) இறக்குமதி செய்தால், குடிநீர் நெருக்கடி இருக்காது. அல்லது பெரு நிலப்பகுதியிலிருந்து நீரை இறக்குமதி செய்யலாம். இது பெரும்பாலும் பொருளாதாரத்தைப் பொறுத்தது. ஆனால், நீண்டகாலமாக பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்து வரும் விவசாயத்தை யாழ்ப்பாணம் கைவிட முடியாது. இதனால் தான் நீரானது பொருளாதாரத்தின் உயிர்நாடியாகவும் மாறியுள்ளது.

போர்க் காலத்தில் மற்ற அனைத்துத் தொழில்களும் சீர்குலைக்கப்பட்டதும், போருக்குப் பின்னர் ஆழ்குழாய்க் கிணறுகள் அறிமுகப்படுத்தப்பட்டதும், மின்சாரம் கிடைக்கத் தொடங்கியதும் மக்களுக்கு முன்னிலையில் இருந்த ஒரே வழியான விவசாயத்தைத் தீவிரப்படுத்த வழிவகுத்ததாகத் தெரிகிறது. இது பின்வரும் விளைவுகளை விரைவாக ஏற்படுத்தியுள்ளது:

1. நிலத்தடி நீரை அதிகமாக இறைப்பதால் உப்பு நீர் ஊடுருவல் (Saltwater Intrusion).
2. உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளால் மாசுபடுதல்.

குறைந்த நீர்ப் பயன்பாட்டுத் தொழில்கள் நிறுவப்படவில்லை மற்றும் நீர்ப் பயன்பாட்டுத் திறன் கொண்ட நுண்பாசன முறைகள் (Micro Irrigation Systems) அறிமுகப்படுத்தப்படவில்லை. இன்று வரை இந்த நிலைமை தொடர்கிறது. இது உண்மையில் ஒரு பொருளாதார நெருக்கடி, அல்லது குறைந்தபட்சம் 'பொருளாதாரத்திற்கான நீர் நெருக்கடி' ஆகும். இது ஓர் ஆளுமை நெருக்கடி (Governance Crisis). நீர் நெருக்கடி என்பது, வளம் மற்றும் தேவை மேலாண்மைப் பிரச்சினை என்று நினைப்பது எளிது.

வளத்தை மதிப்பிடுவதில், நீரியல் (Hydrology) மையமானது. ஆனால் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு நீரியல் அறிவியலில் மட்டும் இல்லை. தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, வளம் மட்டும் இருந்தால்

போதாது; அதைச் சேமிக்க, விநியோகிக்க மற்றும் பயன்பாட்டிற்குப் பின் அகற்ற உட்கட்டமைப்பும் தேவை. இது ஒரு தொழில்நுட்பப் பிரச்சினை, ஆனால் புதிய உட்கட்டமைப்பு போன்ற தொழில்நுட்பம் மட்டும் இதைத் தீர்க்க முடியாது. இது ஒரு நிதி சார்ந்த பிரச்சினை, ஆனால் பணம் மட்டும் இதைத் தீர்க்க முடியாது. இது ஒரு மேலாண்மைப் பிரச்சினை, ஆனால் இது எளிய மேலாண்மைத் தீர்வுகளை விட அதிகமானது. நீர்ப் பிரச்சினை என்பது ஒரு சமூக, அரசியல் மற்றும் பண்பாட்டுப் பிரச்சினை ஆகும்.

நீர்ப்பிரச்சினையின் தன்மை தொடர்பாக குடிநீர் X சுகாதாரம் X உணவு, யார் எவ்வளவு செலுத்த வேண்டும், யார் பயனடைகிறார்கள், யார் இழக்கிறார்கள் (பணக்காரர் X ஏழை, மேல்நிலை X கீழ்நிலை, நகர்ப்புறம் X கிராமப்புறம்), குறுகியகால இலாபம் X நீண்டகால விளைவுகள் ஆகிய பல அம்சங்களை மையமாகக் கொண்டு முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறு நன்கு வடிவமைக்கப்பட்ட ஒரு திட்டம்கூட, ஊழல், சுயநலக் குழுக்களின் செல்வாக்கு, முதலீடுகள் அதிகாரம் மற்றும் செல்வாக்கு மிக்க பகுதிகளுக்குச் செல்லுதல், ஏழை மக்கள் வாழும் இடங்களுக்குச் செல்லாமை போன்ற காரணங்களால் தோல்வியில் முடிகிறது.

நீர் நெருக்கடி என்பது உண்மையில் ஓர் ஆளுமை நெருக்கடி (Governance Crisis) தான்.

யாழ்ப்பாணம் எதிர்கொள்ளும் நீர்ப் பிரச்சினைகள் பல முகமூடிகள் கொண்ட, சிக்கல் மிகுந்தவை. எனவே, நீங்கள் ஒரு பிரச்சினையைத் தீர்க்கும் போது, அந்தத் தீர்வில் விடுபட்ட பிரச்சினைகளில் இருந்து புதிய பிரச்சினைகள் தூண்டப்படுகின்றன.

யாழ்ப்பாண நகரம் குடிநீர் நெருக்கடி, சுகாதாரத்திற்கான நீர் நெருக்கடி மற்றும் விவசாயப் பயன்பாட்டிற்கான நீர் நெருக்கடியைப் பின்வரும் காரணங்களால் எதிர்கொள்கிறது:

1. அதிகரித்த நீர் இறைப்புக் காரணமாக நன்னீர் வளங்கள் குறைதல்.
2. கட்டுப்பாடற்ற நீர் மிகைப்பிரித்தெடுப்புக் காரணமாக உப்புநீர் ஊடுருவல்.
3. அதிகரித்த உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு காரணமாக மாசுபடுதல்.
4. பெற்றோலியப் பொருட்களால் மாசுபடுதல்.
5. சரியற்ற கழிவுநீர் மேலாண்மை.

ஆயுத மௌனிப்புக்குப் பிந்தைய பொருளாதார மறுவளர்ச்சி இந்த நீர்ப் பிரச்சினைகளால் கடுமையாக வரையறுக்கப்பட்டுள்ளது. இப்பகுதி மக்களுக்கு விவசாயத்திலிருந்து விலகி, பிற பொருளாதார வாய்ப்புகளைத் தேடுவதற்கு எந்த மாற்று வழிகளும் வழங்கப்படவில்லை. விவசாயம் அல்லாத தொழில்களை நோக்கிய எந்தவொரு நகர்வும், நகர்ப்புற மையங்களில் போதுமான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் கிடைப்பதன் மூலமே வரையறுக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு கூடுதல் முன்னுரிமை அளிக்கப்படுவதால் மக்கள் அங்கு குடியேறும்போது, கழிவுநீர் அகற்றுதலுக்கும் நீர் தேவைப்படுகிறது. இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பலதரப்பட்டதாகவும், நீண்டகால நோக்குடனும், தாராள மனப்பான்மையுடன் சிந்திக்கப்படுவதாகவும் இருக்க வேண்டும். அவை, உட்கட்டமைப்பு போன்ற 'கடினமான பாதைத்' தீர்வுகளையும், விலை நிர்ணயம், பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் நீர்ப் பாதுகாப்பு போன்ற 'மென்மையான பாதைத்' தீர்வுகளையும் கொண்ட ஒரு கலவையாக இருக்க வேண்டும்.

நீர் வழங்கல் எனும் தலைப்பு இன்று பல மன்றங்களில் அதிகம் பேசப்படுகிறது. யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பான நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான பல்வேறு சாத்தியக்கூறுகளை நிபுணர்கள் விவாதித்த போதும், பின்வரும் வழிமுறைகளுக்கு ஏறக்குறைய அனைவரும் போதுமான முக்கியத்துவம் அளிக்கவில்லை:

1. நிலத்தடி நீர் மூலத்திலிருந்து நீர் பெறுதல்.
2. கடற்கழி நீரை உப்புநீக்கிப் (Lagoon Desalination) பயன்படுத்துதல்.
3. தலைகீழ் சவ்வூடுபரவல் (Reverse Osmosis) - அதிக ஆற்றலைப் பயன்படுத்தி கடல் நீரைக் குடிநீராக மாற்றுதல்.

எனவே, குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான நீர் மூலத்தைப் பெறுவதற்கு, முதன்மை நிலப்பகுதியிலிருந்து வரும் மேற்பரப்பு நீரை முக்கிய மூலமாக வைத்து, அனைத்து முக்கிய நீர் வழங்கல் திட்டங்களையும் பின்வரும் வழிகாட்டுதல்களுடன் கண்டிப்பாகச் செயற்படுத்தப் பரிந்துரைக்கப்படுகிறது:

1. சுமார் 60% நீர்த் தேவை - தற்போதைய மேற்பரப்புப் பாசனத் திட்டங்களிலிருந்து. (இதில் 50% தற்போதைய திட்டங்களிலிருந்தும், 10% புதிய அல்லது திசைதிருப்பும்

திட்டங்களிலிருந்தும்).

2. சுமார் 10% நீர்த் தேவை - கடல் நீர் தலைகீழ் சவ்வூடுபரவல் (RO) மூலம் (முக்கியமாக வறட்சிக் காலங்களில்).

3. சுமார் 15% - நிலத்தடி நீரிலிருந்து.

4. சுமார் 15% நீர்த் தேவை - யாழ்ப்பாணத்திற்கான நதி, தொண்டமானாறு கலப்புத் திட்டம் (Thondaman Kalappu Project), திருத்தப்பட்ட யாழ்ப்பாண நதி, யாழ்ப்பாணக் கால்வாய்த் திட்டம் போன்ற எந்தவொரு கடற்கழித் திட்டத்திலிருந்தும்.

மேற்கூறியவற்றுடன் கீழே குறிப்பிடப்படும் மிலேனியம் அரசாங்கத்தின் கருதுகோளுக்கு அமைவாக,

எந்தவொரு மேற்பரப்பு நீர் மூலத்திலும், 35 - 40% நீர்ப்பாசனம் அல்லாத நோக்கங்களுக்காக வைத்திருக்க வேண்டும் என்பது ஆயிரமாண்டு சவால்கள் (Millennium Challenges) குறித்த அரசாங்கக் கொள்கையாகும். எனவே, எந்தவொரு நீர் வழங்கல் திட்டத்திற்கான நீரையும் உறுதியான மேற்பரப்பு நீர்த்தேக்கங்களிலிருந்து பெறுவது நல்லது. ஆனால், நடுத்தர/ சிறிய பாசனத் திட்டங்களிலிருந்து நீர் வழங்கல் திட்டத்திற்கு நீர் பெறுவது, தடையற்ற நீர் வழங்கலின் உறுதியைத் தராது. எனவே, மேலே உள்ள பத்தியில் பட்டியலிடப்பட்டுள்ள பல்துறை அணுகுமுறை (Multifaceted Approach) செயற்படுத்தப்பட வேண்டும்.

### 4.5.5. நீர் வழங்கல் திட்டத்திற்கான நிலத்தடி நீர்

யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்குள் தொண்டமானாறு, உப்பாறு மற்றும் வழுக்கையாறு ஆகிய மூன்று கடற்கழிகள் உள்ளன. இவற்றின் நீர்ப்பரப்பு பகுதிகள் முறையே 78, 26 மற்றும் 14 சதுர கிலோமீட்டர்கள் ஆகும். இந்த மூன்று ஆழமற்ற கடற்கழிகள், 1,036 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட தீபகற்பத்தின் நிலப்பரப்பில் சுமார் 11.8% பகுதியைக் கொண்டிருக்கின்றன.

இந்தியப் பெருங்கடலை அண்டிய தொண்டமானாறு, அராலி ஆகிய இடங்களில் இவற்றின் கடல் நுழைவாயில்கள் உள்ளன. 160 கி.மீ. நீளமான கடற்கரையால் இத்தீபகற்பம் சூழப்பட்டுள்ளது.

எனவே, இப்பகுதி நிலத்தடி நீருக்குள் உப்பு நீர் ஊடுருவலுக்கு (Saltwater Intrusion) ஆளாகக்கூடியதாக உள்ளது. கடற்கழிகளின் நுழைவாயில்களில் (Lagoon Mouths) உள்ள தற்போதைய அணைகளை நீண்டகாலமாகப் புறக்கணித்ததாலும், முறையற்ற மேலாண்மையாலும், யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் முக்கிய நீர்வளமான நிலத்தடி நீர் முற்றிலும் மாசடைந்துள்ளது; உப்பு நீர் ஊடுருவல் நடந்துள்ளது.

இவற்றோடு, நிலக்கழிவு (குப்பை), மலக்குழிக் கசிவு (Soakage Pit Leakage), உரங்கள் மற்றும் வேளாண் இரசாயனங்களின் அதிகரித்த பயன்பாடு ஆகியவையும் நிலத்தடி நீரின் தரத்தைப் பாதிக்கின்றன. இதன் விளைவாக, மக்கள் தங்கள் கிணறுகளில் தரமான நீரைப் பெறுவதில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். உப்பு நீர் ஊடுருவல் காரணமாக, நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களும், நூற்றுக்கணக்கான கிணறுகளும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

### 4.5.6 நீர் வழங்கல் திட்டத்திற்கான திட்டக் கருத்துகள்

யாழ்ப்பாணம் மற்றும் வடபகுதியின் குடிநீர்த் தேவைகளுக்கான நீர் மூலம் குறித்து பல்வேறு மன்றங்களில் பின்வரும் கருத்துகள் விவாதிக்கப்படுகின்றன:

1. யாழ்ப்பாணத் தீபகற்ப கடற்கழித் திட்டங்கள்.

2. கடல் நீர் தலைகீழ் சவ்வூடுபரவல் (RO) ஆலை.

3. முதன்மை நிலப்பகுதியிலிருந்து மேற்பரப்பு நீர்.

#### 4.5.6.1. யாழ்ப்பாணத் தீபகற்ப கடற்கழித் திட்டங்கள் (Lagoon Desalination)

யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் மூன்று கடற்கழிகளையும் நன்னீராக மாற்றும் எந்தத் திட்ட முன்மொழிவும், பின்வரும் கடுமையான சமூக, சுற்றாடல் மற்றும் சூழலியல் பிரச்சினைகளை ஏற்படுத்தும்:

1. உப்புக் கடற்கழி நீரைச் சார்ந்த 5,000க்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் தங்கள் இறால் சாகுபடி மற்றும் உப்புநீர் மீன்பிடித் தொழிலை இழந்து, தங்கள் வாழ்வாதாரத்தை இழப்பார்கள்.

2. நீர்வாழ் இனப்பெருக்கக் கூடுகள் (Aquatic Breeding Grounds) சீர்குலைக்கப்படும்.

3. வலசை வந்து செல்லும் பறவைகளின் தங்குமிடங்கள் பாதிக்கப்படும்.

4. இறால்களின் நீர்வாழ் இனப்பெருக்கக் கூடுகளாகவும், சுனாமியைத் தடுப்பதற்கான தங்குமிடமாகவும் செயற்படும் சதுப்புநிலக் காடுகளின் (Mangroves) இருப்பு அபாயத்திற்கு உள்ளாகும்.

எனவே, சமூக - சூழலியல் மற்றும் சுற்றாடல்

சமநிலையைச் சீர்குலைக்காமல், கடற்கழி நீரை உப்புநீக்கிப் பயன்படுத்தும் பரிந்துரையைச் செயற்படுத்த முடியாது. ஆனால், சாத்தியமான ஒரே வழி, பல்வேறு உப்புத்தன்மை அளவுகளுடன் கடற்கழிகளைப் பிரித்து, சமூக - சூழலியல் மற்றும் சுற்றாடல் நல்லிணக்கத்தைப் பராமரிப்பதாகும். ஆனால் இது நில உற்பத்தித்திறனை மேம்படுத்த மட்டுமே உதவும்; நகரமயமாகும் பகுதியின் உள்நாட்டு நீர் வழங்கலுக்கு உதவாது.

கடற்கழிகளை நன்னீர் ஏரியாக மாற்றி, விளிம்பில் உள்ள நிலங்களை மீட்டு (Reclaiming) சாகுபடிக்காகப் பயன்படுத்தும் யோசனை, 1889 ஆம் ஆண்டில் வட மாகாணத்தின் அன்றைய அரசு அதிகாரி (Government Agent) Mr. Twyneham என்பவரால் தொடங்கப்பட்டது. ஆனால், 1884 ஆம் ஆண்டில் தீபகற்பத்தில் ஏற்பட்ட ஒரு பேரழிவு வெள்ளம், இத்திட்டத்தை கைவிட வழிவகுத்தது. 1913 ஆம் ஆண்டில் அன்றைய வட மாகாண அரசு அதிகாரி Mr. Fesling என்பவரால் இத்திட்டம் மீண்டும் புதுப்பிக்கப்பட இருந்தது. ஆனால் அடுத்த ஆண்டில், எந்தக் காரணமும் கூறப்படாமல், அரசு அதிகாரியால் திட்டம் கைவிடப்பட்டது.

1916 ஆம் ஆண்டில், Mr. Horseburg வட மாகாண அரசு அதிகாரியாக இருந்த போது, இந்த யோசனை மீண்டும் மேலெழுந்தது. ஆனால் இம்முறையும், இது பிராந்தியத்தின் உப்புத் தொழில் வருவாயைப் பாதிக்கும் என்ற காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டது.

1942 ஆம் ஆண்டில், ஒரு நீர்ப்பாசனப் பொறியாளரான Webb என்பவர், 'யாழ்ப்பாணத் தீபகற்ப கடற்கழித் திட்டம்' என்ற ஒரு விரிவான அறிக்கையைத் தயாரித்ததன் மூலம் இத்திட்டத்தை முன்னெடுக்க முடிந்தது. கடற்கழிகளில் நுழையும் மேற்பரப்பு ஓட்டத்தைப் பயன்படுத்துவதற்கான தொடர்புடைய தரவுகள் மற்றும் பொறியியல் தீர்வுகளின் விரிவான பகுப்பாய்வின் அடிப்படையில் அவரது அறிக்கை அமைந்தது.

சராசரி மழைக்காலத்தில், 148 MCM (மில்லியன் கன மீட்டர்) அல்லது 120,000 ஏக்கர் அடி நீர் கடற்கழிகள் வழியாகக் கடலுக்குள் செல்வதாக அவர் மதிப்பிட்டார். கடற்கழிகள் வழியாக வடிகின்ற அதிகப்படியான ஓட்டத்தைப் பயன்படுத்த, வடக்கு மற்றும் தெற்குக் கடற்கழிகளின் நுழைவாயில்களுக்கு மேலே, முறையே 99 மீட்டர் (325 அடி) மற்றும் 122 மீட்டர் (400 அடி) அணைகளை 'Webb' (1945) முன்மொழிந்தார். இந்த அணைகள், கடல் மட்டத்திலிருந்து 0.91 மீட்டர் (3 அடி) உயரத்தில் வடிவமைக்கப்பட்ட நிலையில், சராசரி ஓட்டத்தில் 65% மட்டுமே சேமிக்க முடியும். இத்திட்டத்தின் முக்கிய பின்னடைவு என்னவென்றால், கடல் மட்டத்திலிருந்து 0.91 மீ. (3 அடி) உயரத்தில், சுமார் 220 சதுர கி.மீ. (85 சதுர மைல்) நிலப்பரப்பு நீரில் மூழ்கும். மேலும் மே மாதத்திற்கு முன்பே, ஆவியாதல் காரணமாக கணிசமான அளவு சேமிக்கப்பட்ட நீர் இழக்கப்படும். ஆயினும், நிலப்பகுதிக்குள் உப்பு நீர் நுழைவதைத் தடுக்கும் ஒரு நீரியல் தடையை (Hydraulic Barrier) உருவாக்கும்.

வடக்குக் கடற்கழி (தொண்டமானாறு) முழுவதுமான அணை 1953 ஆம் ஆண்டில் செய்யப்பட்டது. அதே நேரத்தில் தெற்குக் கடற்கழியின் அணை இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு பூர்த்தி செய்யப்பட்டது. தற்போது இரு அணைகளும் முறையற்ற செயற்பாட்டு நிலையிலும், பராமரிப்பிலும் உள்ளன.

#### 4.5.6.2 யாழ்ப்பாணத்திற்கான நதி (River for Jaffna/ Arumugam Plan)

கடந்த 40 ஆண்டுகளில், பல திட்டங்கள் அவ்வப்போது முன்னேற்றம் கண்டு (அல்லது கவனத்தை ஈர்த்து) உள்ளன. மோதலுக்கு முந்தைய காலம் மற்றும் மோதலுக்குப் பிந்தைய காலம் ஆகிய இரண்டிலுமே இந்தத் திட்டங்களைப் பற்றிப் பேசுவது ஒரு 'Fashion' ஆக உள்ளது. தற்போது பேசப்படும் திட்டங்கள் பின்வருமாறு:

1. யாழ்ப்பாணத்திற்கான நதி (River for Jaffna).
2. யாழ்ப்பாணத்திற்கான நதித் திட்டத்திற்கான முன்மொழியப்பட்ட திருத்தங்கள் (Modified River for Jaffna).
3. தொண்டமானாறு நீர்த்தேக்கம் (கலப்புத் திட்டம்).
4. யாழ்ப்பாணக் கால்வாய் - கருத்துரு.

இத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு முன், மிகவும் விரிவான ஆய்வுகள் தேவை. அவை: விரிவான நிலத்தோற்ற மற்றும் நிலப் பயன்பாட்டு ஆய்வுகள், புவியியல் ஆய்வுகள், நீர்வளங்களின் விரிவான மதிப்பீடு, வானிலை நிலையங்களை நிறுவுதல், நீரியல் அளவீட்டு வலையமைப்பை (Hydrometric Network) உருவாக்குதல் மற்றும் நீர்த் தர மாதிரி எடுப்பு நிலையங்களை நிறுவுதல் ஆகியனவாகும். இந்தத் தொழில்நுட்ப ஆய்வுகளோடு, சமூக மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளும் (Social and Environmental Impact Assessments) மேற்கொள்ளப்பட வேண்டும்.

(தொடரும்)

01.11.2025

# ‘யாழ்ப்பாண மருத்துவ வரலாறு’ -
## நூல் வெளியீட்டு நிகழ்வு - யாழ். பொது நூலகம்

எழுநா வெளியீடாகிய, பா. துவாரகன் அவர்களின் ‘யாழ்ப்பாண மருத்துவ வரலாறு’ என்னும் நூலின் வெளியீட்டு நிகழ்வு கடந்த 01.11.2025 (சனிக்கிழமை) அன்று யாழ் பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது.



மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பித்த இந்நிகழ்வில் உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர், திருமதி எழிலினி சித்தாந்தன் அவர்களால் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து வரவேற்புரையினை போதனா மருத்துவமனை அபிவிருத்தி உத்தியோகத்தர், திரு எஸ். சுதாகரன் வழங்க, தலைமையுரையினை யாழ் போதனா மருத்துவமனை பணிப்பாளர் சபை உறுப்பினர், திரு இ. பேரின்பநாயகம் வழங்கியிருந்தார்.

நிகழ்வின் தொடர்ச்சியாக நூல் அறிமுக உரையினை மருத்துவ கலாநிதியும் யாழ் போதனா மருத்துவமனை பணிப்பாளருமாகிய திரு த. சத்தியமூர்த்தி அவர்கள் வழங்க, சிறப்புரையினை அரசியல் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான திரு ம. நிலாந்தன் அவர்கள் வழங்கி இருந்தார். தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்றது. நூலை மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை இலக்கியச் சோலை இ.து. குலசிங்கம் அவர்கள் பெற்றுக்கொண்டார். சிறப்புப் பிரதி களை ஊடகவியலாளர் த. பிரபாகரன், அலை ஆசிரியர் ஜேசுதாஸ், போதனா மருத்துவமனை கணக்காளர் காண்டீபன், கலைமுகம் ஆசிரியர் எமில் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.



அதனைத் தொடர்ந்து நூல் மதிப்பீட்டுரையினை கோப்பாய் கல்வியற்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வுநிலை) முருகேசு கௌரிகாந்தன் அவர்கள் வழங்கியிருந்தார். மதிப்பீட்டுரையினைத் தொடர்ந்து ஏற்புரையினை நூலாசிரியர் பா. துவாரகன் அவர்கள் வழங்கியிருந்தார். நிகழ்வில் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், நலன் விரும்பிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

09.11.2025

# ‘காட்டிக்கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்’ -
## நூல் அறிமுக நிகழ்வு - திருகோணமலை தளம் கட்டமைப்பு.









எழுநாவின் வெளியீடாகிய, ‘காட்டிக்கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்’ என்ற நூலின் அறிமுக நிகழ்வு தளம் கட்டமைப்பின் ஏற்பாட்டில் 09.11.2025 அன்று மாலை 5.00 மணிக்கு திருகோணமலையில் அமைந்துள்ள தளம் கட்டமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

நூல் பற்றிய விமர்சன உரையினை செல்வி.பிரத்திக்கா பத்மநாதன் மற்றும் செல்வி.அன்ரனி ஸ்டீபன் கௌசிகா ஆகியோர் வழங்கியிருந்தனர். நிகழ்வில், தளம் அமைப்பின் நலன் விரும்பிகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# ‘யாழ்ப்பாணத்தில் சாதி அமைப்பும் சமூக உறவுகளும்’ - நூல் வெளியீட்டு நிகழ்வு - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

21.11.2025

எழுநாவின் வெளியீடாகிய, திரு. கந்தையா சண்முகலிங்கம் அவர்களின் ‘யாழ்ப்பாணத்தில் சாதி அமைப்பும் சமூக உறவுகளும்’ என்னும் நூலின் வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல் துறையின் ஏற்பாட்டில், நவம்பர் 21 (2025) வெள்ளிக்கிழமை அன்று, மாலை 3 மணிக்கு கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

சமூகவியல் துறைத்தலைவர் கலாநிதி ச. சிறிகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்திருந்தார். வரவேற்புரையினை செல்வி எம்.எச். எவ். ஹசீபா (மாணவி, சமூகவியல் துறை) அவர்கள் வழங்க, நூல் வெளியீட்டுரையினை இ. இராஜேஸ்கண்ணன் (சிரேஷ்ட விரிவுரையாளர், சமூகவியல்துறை) அவர்கள் வழங்கியிருந்தார். அதனைத் தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்றது. கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் நூலை வெளியிட்டு வைக்க, நூலின் முதற்பிரதியை மொழியியல் மற்றும் ஆங்கில மொழித் துறையின் தலைவர் கலாநிதி எம். திருவரங்கன் அவர்கள் பெற்றுக்கொண்டார். நூலுக்கான மதிப்பீட்டுரைகளை சட்டத்தரணியும் அரசியல் மற்றும் சமூக ஆய்வாளருமான திரு. சி.அ. யோதிலிங்கம் அவர்களும், திரு. ந. மயூரரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், கலாசார மத்திய நிலையம், பருத்தித்துறை) அவர்களும் வழங்கினர்.

மதிப்பீட்டுரையின் போது ”அட்டைப்படம் யாழ்ப்பாண சாதியக் கட்டமைப்பை மிகவும் தத்ரூபமாக வெளிக்காட்டியுள்ளது எனவும், ”சாதியம் தொடர்பான பிற்கால ஆய்வுகளை இனிவருகின்ற ஆய்வாளர்கள் நடாத்த வேண்டும் எனவும் திரு. யோதிலிங்கம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். நூலில் உள்ள விடயப்பரப்பை ஏனையோர் வாசிக்கத் தூண்டும் வகையில் திரு. மயூரரூபன் அவர்களின் மதிப்பீட்டுரை அமைந்திருந்தது.

இந்நிகழ்வில் விரிவுரையாளர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், நலன் விரும்பிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

**புகைப்படங்கள் : குணபாலன் இளங்கீரன்**











# ‘சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு’ -

## நூல் அறிமுக நிகழ்வு - நாவலப்பிட்டி, கதிரேசன் மத்திய கல்லூரி

28.11.2025

எழுநாவின் வெளியீடாகிய, சட்டத்தரணியும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான இரா. சடகோபன் அவர்களின் ‘சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு’ நூலின் அறிமுக நிகழ்வு நிகர் சமூக – கலை – இலக்கிய அரங்கின் ஏற்பாட்டில் நாவலப்பிட்டி, கதிரேசன் மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில், அமரர் எஸ். தர்மசீலன் அமர்வில் கடந்த 23.11.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 9.00 மணிக்கு இடம்பெற்றது.

கதிரேசன் மத்திய கல்லூரி அதிபர் திரு. எஸ். ரகு அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை கலைக்கழக குழுவின் அங்கத்தவரும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் நாயகமுமாகிய கவிஞர் சு. முரளிதரன் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார். வரவேற்புரையினை பஸ்பாகே கோரளை பிரதேச செயலக உத்தியோகத்தர் திரு. எஸ். சிவக்குமார் வழங்க, நூல் அறிமுக உரையினை சென். மேரிஸ் கல்லூரி ஆசிரியர் திருமதி. ஜெ.கே. சசிகாந்தன் வழங்கியிருந்தார். ஆய்வுரையினை ஆய்வாளரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமாகிய திரு. ஏ.சி.ஆர். ஜோன் வழங்க, ஏற்புரையினை நூலாசிரியர் இரா. சடகோபன் வழங்கியிருந்தார். நன்றியுரையினை புகைப்படக்கலைஞரும் ஊடகவியலாளருமான திரு. எஸ். ஹேமானந் வழங்கியிருந்தார். இந்நிகழ்வினை நிகர் சமூக – கலை – இலக்கிய அரங்கின் அமைப்பாளரான அருணாசலம் லெட்சுமணன் ஒருங்கமைக்க, நிகழ்ச்சித் தொகுப்பினை ஆசிரியர் திரு. வி.எம். ரமேஸ் வழங்கியிருந்தார்.

”கால அடிப்படையில், தேயிலைக்காலத்தில் சட்டம், இனவாதம், தோட்ட நிர்வாகம், தொழிற்சங்கங்கள் போன்றவற்றின் சதிகளில் இருந்தும் சூழ்ச்சிகளில் இருந்தும் மக்கள் எவ்வாறு மீண்டெழுந்துள்ளனர் என்பது பற்றி அனைவருக்கும் புரியக்கூடிய மொழிநடையில், பல புதிய விடயங்களை நூலாசிரியர் எழுதியுள்ளார் என ஆய்வுரையின் போது திரு. ஜோன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தினர், வாசகர்கள், பொதுமக்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு நூலாசிரியரால் சிறப்புப்பிரதிகளும் வழங்கப்பட்டன.













# கிருசாந்தி இன்னும் ஏன் வாசலிலே நிற்கிறார்?



கருத்துரை: சுவர்ணலதா




இப்புத்தகத்திற்கு ஏன் வாசலிலே கிருசாந்தி எனப் பெயர் வந்தது? கிருசாந்தி உயிருடன் இல்லை, ஆனால் அவரது ஆத்மா, அவரது குரல் இன்றும் நீதி கேட்டு வாசலிலே நிற்கிறது. இப்புத்தக அறிமுகத்திற்குச் செல்ல முன்னர், இப்புத்தகம் தோன்றியமைக்கு ஒரு காரணம் உண்டு. அதனைச் சற்று எட்டிப் பார்த்துவிட்டு வர எண்ணுகிறேன். நம் அனைவருக்கும் தெரியும் 'கிருசாந்தி குமாரசுவாமி'யின் பாலியல் பலாத்காரப் படுகொலை தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்திய அதிர்வலைகள் கொஞ்சநஞ்சமல்ல, இன்றுவரை அவ் அதிர்வலைகள் தொடர்கிறது. அது கிருசாந்தியின் ஆத்மாவாக எங்களின் நீதி கேட்கும் பொறிமுறைக்கு எம்மை வழி நடத்துகிறது என்பதில் எனக்குத் துளியளவும் ஐயமில்லை.

கிருசாந்தி ஒன்றும் சாதாரண குடிமகளாக இராணுவத்தினரின் கைகளில் சிக்கிச் சின்னாபின்னமாகவில்லை. தனது நண்பி இராணுவத்தினரின் வாகனத்தால் வேண்டுமென்றே மோதிக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, தங்களது வழமையான இராணுவத் தடுப்புக் காவலைத் தாண்டும் போது இராணுவத்தினருடன் முரண்பட்டுச் சண்டையிடுகிறார். அதன்பின் வீடு செல்கிறார். இவ்வாறு கோபமாகப் பேசியது தான் அவருடைய இந்நிலைக்குக் காரணமாகிறது. அன்று தன்னுடைய நண்பியின் இறப்புக்கு நீதி கேட்டுத் தான் கிருசாந்தி இத்தனை கொடுமைகளை அனுபவித்து இறந்திருக்கிறார் என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

அதன் பின்னர் கிருசாந்தியின் அம்மா, தம்பி, அயலவர் என மூவர் தொடர்ச்சியாகக் கொல்லப்படுகிறார்கள். இதன் பிற்பாடு கிருசாந்தி தான் புதைக்கப்பட்ட இடத்தை நாம் தேடி வர வேண்டும் என வழிகாட்டிக் கொண்டே இருந்தார். அந்த வழிகாட்டுதல் காரணமாக, அவருடைய தம்பியின் சைக்கிளின் உதிரிப்பாகத்தை ஒருவர் ஒரு கடையில் அடையாளம் காண்கிறார். அது ஓர் ஆர்மிக்காரரால் விற்கப்பட்டது என அறிகிறார். அதன் பிற்பாடு இவ்விசாரணை பல கோணங்களில் சென்று, கிருசாந்தி புதைக்கப்பட்ட இடம் கண்டுபிடிக்கப்பட்டு, உடல் தோண்டியெடுக்கப்பட்டு, பலத்த பாதுகாப்பின் மத்தியில் கொழும்பில் மிக மிக அவசரமாக 20, 30 நிமிடங்களில் இறுதிக் கிரியைகள் செய்து முடிக்கப்படுகின்றன. கிருசாந்தி புதைக்கப்பட்ட இடத்தில் அவர் தன்னைத் தோண்டியெடுப்பதற்கான வேலைகளை மட்டும் செய்யவில்லை, தன்னோடு சேர்த்து அங்கே 600 இற்கும் மேற்பட்ட உறவுகள் புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையை வெளிக்கொணர்ந்தார்.

கிருசாந்தி கொலையில் குற்றம் சாட்டப்பட்ட சோமரத்ன ராஜபக்ச இதனை நீதிமன்றத்தில் தெரிவித்தார். அன்று தொடக்கம் அவ்விடம் தோண்டப்பட்டது. 19 என்புக்கூடுகள் வரை கண்டுபிடிக்கப்பட்டது. பின்பு நிறுத்தப்பட்டது. தற்போது ஒரு கட்டட வேலைக்காக மீண்டும் தோண்டும் போது, 200 இற்கும் மேற்பட்ட எம்முடைய உறவுகளின் என்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் கிருசாந்தி பேசுபொருளாக்கப்பட்டிருக்கிறார். கிருசாந்தியினுடைய பெயரை நாம் தினம் தினம் உச்சரித்துக் கொண்டிருக்கிறோம். செம்மணியிலே தொடர்ச்சியாக கிருசாந்தி எமக்காக நீதி கேட்டுப் போராடுகிறார். கிருசாந்தியினுடைய மரணம், அவரது கொலை, எங்களுக்குச் சாட்சியாக மாறி இருக்கிறது. எத்தனையோ பேர் புதைக்கப்பட்டாலும் புதையுண்ட இடத்திலிருந்து விருட்சமாக எழுந்து நின்று நீதியைக் கேட்டவர் கிருசாந்தி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். 'வாசலிலே கிருசாந்தி' எழுநாவினால் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தின் முன்னுரையை நிலாந்தன் அவர்கள் எழுதியிருக்கிறார். புத்தகத்தின் உள்ளே ஈழத்தைச் சேர்ந்த பல்வேறு கவிஞர்களின் 50 இற்கும் மேற்பட்ட கவிதைகள் உள்ளன.

இப்புத்தகம் வெறுமனே எம்மைத் துன்பப்படுத்தவோ, கிருசாந்தியின் நினைவுகளை மீட்டிக் கொள்வதற்காகவோ, கிருசாந்தியின் சொந்தங்களைக் கவலைப்படுத்தவோ அல்ல, மாறாக, கிருசாந்தி போன்று புதைக்கப்பட்ட அனைவருக்குமான நீதிக் கோரிக்கைகள் இன்னும் சாகவில்லை என்பதைச் சுட்டிக்காட்டத்தான் எம் கைகளில் இருக்கிறது.

இப்புத்தகத்தினை அச்சிட்டு இதனை மீண்டும் பேசுபொருளாக்கி, அனைவரது மனதிலும் அவ் எழுச்சியை அப்படியே குடிகொள்ள வைத்து, நீதி கேட்கின்ற போராட்டத்திற்கு நாம் உறுதுணையாய் நிற்க வேண்டும் என்ற உறுதிமொழியை எடுப்பதற்கு துணையாய் நின்ற வெளியீட்டுதாரர்களுக்கும், இப்புத்தகத்தில் நிகழ்ந்த சம்பவங்களை எழுச்சியுடன் ஆழமாக விவரித்த கவிஞர்களுக்கும் எம் நன்றிகள்.

இப்புத்தகம் அனைவரது கைகளிலும் இருக்க வேண்டும். இப்புத்தகம் எம் அறிவுக்கண்ணைத் திறக்க மட்டுமல்ல, அரசியல் ஞானத்தைத் திறக்கவும் உருவாக்கப்பட்டது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். கிருசாந்தி இன்னும் ஏன் வாசலிலே நிற்கிறார்? என்பதை நாம் உணர வேண்டும். மறைந்தாலும் நீதிக்காகப் போராடும் அந்த இதய தெய்வத்தை நாம் நினைவுகொள்ள வேண்டும்.

எம் படைப்புகள் மூலமாக கலை, பண்பாட்டுத் தளங்களில் இயங்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு இருக்கின்றது என்பதை இப்புத்தகம் எமக்கு உணர்த்தி இருக்கிறது. இவ்வெழுத்துகள் மிகவும் ஆழமானவை. நீங்கள் அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும். கிருசாந்திக்கு நிகழ்ந்தவை இனியும் நிகழாமல் இருக்கவும், நிகழ்ந்தவற்றிற்கு நீதி கேட்கவும் இது ஏதோ ஒரு வகையில் எமக்கு அடித்தளமாக அமைகிறது.

எம் போராட்டம் தொடர்ந்து செல்ல வேண்டும். நீதி கேட்கும் பொறிமுறையில் நாம் வெல்ல வேண்டும். இறந்த ஆத்மாக்களுக்கு நாம் செய்ய வேண்டிய மாபெரும் கடமையாக நான் இதனைப் பார்க்கிறேன்.


எழுநா வெளியீடு
யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன்
ஆக்குவித்த
இரசவர்க்கம்
முனைவர் பால. சிவகடாட்சம்
மலையகம்:
சமூக - பொருளாதார - அரசியல் பரிமாணங்கள்
பேராசிரியர் எம். சின்னத்தம்பி
தொகுப்பாசிரியர்கள்
இரா. ரமேஷ்
பெ. சரவணக்குமார்
இலங்கையின் பிராமி மற்றும் சிங்களக் கல்வெட்டுகளில் தமிழர்
கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம்
காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்
மரியநாயகம் நியூட்டன்
இலங்கையின் வேளாண்முறைமையில் நவீன நுட்பங்கள்
கந்தையா பகீரதன்
சமஷ்டி அரசியல் முறைமைகள்: ஓர் அறிமுகம்
தொகுப்பும் தமிழாக்கமும் :
கந்தையா சண்முகலிங்கம்
யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு
1621 - 1948
இ. மயூரநாதன்
முன்பதிவுகளுக்கு
+94 777 97 5029


எழுநா
வடக்கு - கிழக்குப்
பிராந்திய அபிவிருத்தியும்
உயிர்ப்பல்வகைமையும்
சி.ஜேம்சன் அரசகேசரி


எழுநா
யாழ்ப்பாணத்தில்
சாதி அமைப்பும்
சமூக உறவுகளும்
தொகுப்பும் தமிழாக்கமும்:
கந்தையா சண்முகலிங்கம்


எழுநா
உத்தியாக்கள்
கிழக்கிலங்கை கடலோர வேடர்களின்
பண்பாட்டு அசைவுகள்
கமலநாதன் பத்திநாதன்


எழுநா
மாறுபாடில்லா
உண்டி
சித்தமருத்துவர்
தியாகராஜா சுதர்மன்


எழுநா
சூழ்ச்சிகளையும்
சதிகளையும்
கடந்த வரலாறு
இரா.சடகோபன்


எழுநா
பதார்த்த
சூடாமணி
பால. சிவகடாட்சம்


எழுநா
வடக்குப் பிராந்தியக்
காலநிலையியல்
நாகமுத்து பிரதீபராஜா


எழுநா
வாசலிலே கிருசாந்தி
செம்மணி தொடர்பான கவிதைகள்
தொகுப்பு:
எழுநா கலை பண்பாட்டு நடுவம்


எழுநா
மன்னார் தீவில்
கனிம மணல் அகழ்வு
சமூக, அரசியல், பொருளாதார, சுற்றுச்சூழல் பாதிப்புகள்
வை. ஜெயமுருகன்


இரு நூற்றாண்டு
மலையகம்
வலியும் வாழ்வும்


யாழ்ப்பாணக் குடாநாட்டின்
நூலகப் பாரம்பரியம்
ஒரு வரலாற்றுத் தேடல்
என். செல்வராஜா


தமிழ்ப் பண்பாடு
ஊற்றுகளும் ஓட்டங்களும்
ந. இரவீந்திரன்


யாழ்ப்பாண
மருத்துவ வரலாறு
பாலசுப்பிரமணியம் துவாரகன்


பாக்கியநாதன் அகிலன்
மரபுரிமைகளைப்
பறைதல்


இலங்கையின் கறவை மாடு
வளர்ப்புப் பொருளாதாரம்
கால்நடை வைத்தியர்
சி. கிருபானந்தகுமாரன்


இருத்தலின் மீது
கவியும்
இன்மைகள்
இளங்கோ


பசுமை
எனும்
பேரபாயம்
தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ


வடக்கு – கிழக்கு
மாகாணங்களின் வளங்களும்
உள்ளூர்ப் பொருளாதார
அபிவிருத்தியும்
அமரசிங்கம் கேதீஸ்வரன்

SpotOn Money



SEND MONEY to SRI LANKA

FIRST TRANSFER FEE FREE*

Immediate Payment to Any Account

*Partnership* with

CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount* on Purchases

0207 341 7300
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

## XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

### OUR GROUP OF COMPANIES

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

### CSR INITIATIVE

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**

#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**

#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

---

## Nimal Vinayagamoothy, CPA, CGA

Chartered Professional Accountant

nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

மானுடம் நிறுவனம்
maanudam foundation

# நூல்சார் செயற்பாடுகள்







தமிழ் அச்சுப் பண்பாட்டிலும் பதிப்பு வரலாற்றிலும் ஈழத்து அறிஞர் பணிகள் முன்னோடியானவை. வரலாற்றுக் கனதி மிக்கவை. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலியோரின் சீர்பதித்த நற்பதிப்புகளும் நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சிப் பதிப்புகளும் தமிழை அச்சு யுகத்திற்குத் தயார்படுத்தியும் தகுதிப்படுத்தியும் வைத்தவை. தமிழ்ச் சமூகத்தின் ஆய்வு அறிவுச் சூழலையும் படைப்பாக்கச் சூழலையும் மேன்மையுறச் செய்தவை. பாடாய்க் கிடந்த ஏடுகளை, எழுதா எழுத்தான அச்சு வாகனம் ஏற்றிப் பவனிவரச் செய்து, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தை நல்கியவை. ஈழத்தில் தமிழ், தமிழர் குறித்த எந்தவொரு ஆய்வும் ஈழத்துப் பதிப்புலகின் அறிகையின்றிப் பூர்த்தியாகாது. ஆய்வுப் பரப்பில் ஈழத்துப் பதிப்புலகானது. வரலாறு மற்றும் சமூக பண்பாட்டுப் பின்புலத்தில், இதுவரை அதிகம் கவனிப்புறவில்லை. இதனால், ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகின் திசைவழிகளை அடையாளம் காணவும் அதன்வழி வரலாற்றைக் கட்டமைக்கவும் 'ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும்' எனும் பொருண்மையில் 'ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டை எமது துறை ஒழுங்குசெய்தது. மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஆதார கருதி உரையையும் சமர்ப்பிக்கப்பெற்ற 27 ஆய்வுக் கட்டுரைகளையும் கொண்டு உருவானதே இந்நூல். தமிழியலுக்கு எம் தமிழ்த்துறையின் நன்கொடையாக அமையும் இந்நூல் அச்சுப் பண்பாடு, பதிப்பு வரலாறு ஆகியவற்றில் ஈழத்தின் சென்ற காலத்துப் பழுதிலாத் திறம் மீது ஒளி பாய்ச்சுகின்றது.

அனுசரணை:
மானுடம் நிறுவனம்
www.maanudam.org




# யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

RE/MAX
ELITE

021 224 2855 | 0777 44 1113

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

**BUY-SELL-RENT HOME AND LANDS**

WWW.REMAXELITE.LK


We work with 35 financial institutions
Business & Personal Insurance
Free Financial Education for everyone
We work with 35 financial institutions
Long Term Care | Elder's Insurance
Children's Insurance
Best Services
1. RESP/PRSP
2. Life Insurance
3. Auto Insurance
4. Estate Planning
5. Home Insurance
6. Disability Insurance
7. Mortgage Insurance
8. Travel/Visa Insurance
9. Non-Medical Insurance
10. Critical illness Insurance
11. Dental & Drug Insurance
12. Guaranteed Investments
416-731-2829


SS CAKES
Say "I Do"
to Sweet Perfection!
Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.
+94 76 347 0055
We do delivery around the world

# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



Re/Max Community Realty Inc
ரமணன் சந்திரசேகரமூர்த்தி Bsc, MBA
வாக்குறுதிகள் அல்ல.
வாங்குவதற்கும் விற்பதற்குமான தீர்வு.
அலைபேசி: 416-290-6000

# XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

**OUR GROUP OF COMPANIES**

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

**CSR INITIATIVE**

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

# WE PROVIDE THE CHEAPEST MINIVAN & CAR SERVICE ALL OF THE GTA & ONTARIO



றொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.
அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619


Netwyn.Place
Unleash Your Potential
www.netwyn.place
10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4
+1 416-906-1414
Coworking Space • Private Office
Event Space • Boardroom
BOOK YOUR TOUR TODAY